# மாஸ்டர் கீ

# டு

# ஹோமியோபதிக்
# மெட்டீரியா மெடிகா

## (முதல் பாகம்)

—(o)—


மூல ஆசிரியர்

**டாக்டர் K. C. பஞ்சா.**

தமிழ் ஆக்கம்

**டாக்டர் V. S. சுப்ரமண்யம்,**

டைரெக்டர், தி ஹோமியோபதி ஹௌஸ்,

மதராஸ்-28.


—(o)—


(உரிமை பெற்றது.)


—(o)—


*Published by*

THE HOMOEOPATHY HOUSE

**MADRAS-28.**

—(o)—

**1956.**

First Edition January 1956.

LL
N56.1

TAMIL TRANSLATION
COPY RIGHTED
BY
THE PUBLISHERS.

LIBRARY
103891

Printed by V. Kuppusami Chetty at Sri Rama & Co.,
(Bharathamata Press), 39, Anderson St., Madras-1.

# முகவுரை.

உலகில் சிறந்த வைத்திய முறைகளில் ஹோமியோபதியும் ஒன்றென்று தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தும் அவசியம் இப்பொழுது இல்லை.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலம் படித்து அரசாங்கத்தில் உயர் பதவிகளிலிருந்த ஒரு சிலரால் பொழுது போக்காகக் கையாளப்பட்டு வந்த இவ் வைத்திய முறை இன்று தமிழ் நாட்டில் ஆங்கிலம் அறியாத மக்களாலும் விரும்பிக் கற்கப்படுகிறது ஹோமியோபதியைத் தமிழில் தபால் மூலமாகவும் நேர்முக மாகவும் போதிப்பதற்கென முன் வந்துள்ள **ஹோமியோபதி ஹௌஸ்** போன்ற ஸ்தாபனங்கள் இதற்கு முக்கிய காரணம்.

ஹோமியோபதி பற்றி அருமையான நூல்கள் பல ஆங்கிலத்தில் இருக்கின்றன. தமிழ் மட்டும் அறிந்தவர்களின் அறிவை வளர்க்க அம் மொழியில் பல நூல்கள் வெளிவர வேண்டியது அவசியம். இதைக் கருத்தில் கொண்டு எவ்விதமான நூலை வெளியிட்டால் ஹோமியோபதி ஔஷதங்களைப் பற்றிய பூரணமான அறிவு ஏற்படும் என்று சிந்தனைசெய்து கொண்டிருந்த சமயத்தில் டாக்டர் K. C. பஞ்சா, B.A., M.D. அவர்களால் எழுதப்பட்ட **மாஸ்டர் கீ டு ஹோமியோபதிக் மெட்டீரியாமெடிகா** என்னும் ஆங்கில நூல் என் பார்வைக்கு வந்தது. டாக்டர் பஞ்சா கல்கத்தா ஹானிமேனியன் மெமோரியல் காலேஜில் மெட்டீரியா மெடிகாப் பகுதிக்குப் பேராசிரியராய்ப் பதவி வகித்தவர் மேல் நாட்டு ஹோமியோபதி அறிஞர்களாலும் பாராட்டப் பட்டவர். சிறந்த அறிவாளி. தத்துவஞானியுங் கூட.

அப்புத்தகத்தில் ஒவ்வொரு ஔஷதத்தையும் ஆசிரியர் விவரித்துள்ள முறை முற்றிலும் புதுமையாகவும் கவர்ச்சிகரமாகவும் இருந்தது. ஒரு தடவை ஊன்றிப் படித்து விட்டால் நம் அறிவுக் கண்களை அகலத் திறந்து ஔஷதங்களின் சிறப் பியல்புகளைத் தெள்ளென மனதில் பதியவைக்கும் படியாகவும் இருந்தது.

இத்தகைய நூலைத் தமிழில் வெளியிட்டால் ஹோமியோபதிக்கும் தமிழ் நாட்டு ஹோமியோபதியர்களுக்கும் உண்மையான ஊழியம் செய்தது போலாகுமென்று முடிவு செய்து அவ்வாறு வெளியிட அதன் ஆசிரியர் டாக்டர் பஞ்சா அவர்களை அணுகினேம். சிறிதுகூடத் தயக்கமோ, தாமதமோ செய்யாமல் அவர் அனுமதி அளித்தார். அவருக்கு எமது உள்ளம் நிறைந்த நன்றிகள் உரியதாகும்.

பிற மொழியிலுள்ள, அதுவும் வைத்தியக்கலைச் சொற்கள் மிகுந்த, ஒரு நூலைத் தமிழாக்கம் செய்வது மிகவும் சிரம சாத்தியமான காரியம் என்பது நம் அனுபவம். மற்றவர்களுக்கும் இவ் வனுபவம் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே என்னால் இயன்ற வரையில் பாடுபட்டு ஆங்கிலச் சொற்களுக்குப் பேச்சு வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களையே தேர்ந்தெடுத்து மொழி பெயர்த்திருக்கிறேன். என்னையும் மீறிக் குற்றங்கள் சேர்ந்திருக்கலாம். அறிஞர்கள் ஆராய்ந்து குற்றங்களை அறிவித்தால் அடுத்த பதிப்பிலாவது திருத்தம்செய்ய வசதியாகும்.

இங்ஙனம்:

ஆசிரியர்.

# பொருள் அடக்கம்


| ஔஷதங்களின் பெயர்கள் | பக்கம் |
|---|---|
| அக்டியா ரஸிமோஸா | 27– 34 |
| அகேரிகஸ் மஸ்கேரியஸ் | 45– 53 |
| அகோனைட்டம் நாபில்லஸ் | 16– 27 |
| அந்த்ராஸினம் | 91– 93 |
| அப்ரொடேனம் | 9– 12 |
| அபிஸ் மெல்லிபிகா | 109–118 |
| அம்மோனியம் கார்பானிகம் | 74– 83 |
| அர்ஜண்டம் நைட்ரிகம் | 118–130 |
| அல்லியம் ஸீபா | 54– 59 |
| அலுமினா | 64– 73 |
| அனகார்டியம் | 83– 90 |
| அஸ்குலஸ் ஹிப்பகாஸ்டானம் | 34– 40 |
| அஸடிக் ஆஸிட் | 12– 16 |
| ஆண்ட்டிமனியம் க்ரூடம் | 93–101 |
| ஆண்ட்டிமனியம் டார்ட்டாரிகம் | 101–109 |
| ஆர்னிகா மொண்டானா | 130–141 |
| ஆர்ஸனிகம் ஆல்பம் | 141–155 |
| ஆரம் ட்ரிபில்லம் | 155–160 |
| ஆரம் மெட்டாலிகம் | 160–169 |
| ஆலோ ஸகோட்ரினா | 59– 64 |
| இக்னேஷியா | 517–525 |
| இபிகாக்குனா | 535–545 |

| | |
|---|---|
| எதுஸா ஸைனபியம் | 40– 45 |
| ஐயோடியம் | 525–534 |
| ஐரிஸ் வர்ஸிகலர் | 545–550 |
| க்ரீஸோட்டம் | 593–601 |
| க்ளமேடிஸ் எரெக்டா | 360–364 |
| கந்தாரிஸ் | 279–289 |
| கல்கேரியா கார்பானிகா | 243–260 |
| கல்கேரியா ப்ளுவாரிகா | 260–263 |
| கல்கேரியா பாஸ்பாரிகா | 263–270 |
| கன்னபிஸ் ஸடீவா | 275–279 |
| காக்குலஸ் | 366–372 |
| காக்டஸ் க்ராண்டிப்ளோரஸ் | 237–248 |
| காப்ஸிகம் | 289–297 |
| காபியா க்ரூடா | 372–374 |
| காம்போரா | 270–275 |
| கார்போ அனிமாலிஸ் | 297–303 |
| கார்போ வெஜிடபிலிஸ் | 303–311 |
| கால்மியா | 587–593 |
| காலி அயோடேட்டம் | 573–582 |
| காலி கார்பானிகம் | 560–573 |
| காலி பைக்ரமிகம் | 550–560 |
| காலி பாஸ்பாரிகம் | 582–587 |
| காலோபில்லம் | 312–315 |
| காலோஸிந்த் | 381–386 |
| காஸ்டிகம் | 315–325 |
| கிராபைடிஸ் | 468–478 |





| | |
|---|---|
| குப்ரம் மெட்டாலிகம் | 393–399 |
| கோபால்டம் | 364–366 |
| கோல்சிகம் | 375–381 |
| கோனியம் மெகுலேடம் | 386–392 |
| சாமோமில்லா | 326–333 |
| சின்னினம் ஸல்ப்யுரிகம் | 346–349 |
| செலிடோனியம் மேஜஸ் | 333–338 |
| சைனு அபிஷியனேலிஸ் | 338–346 |
| டயஸ்கோரியா வில்லோஸா | 405–408 |
| டல்கமாரா | 414–421 |
| டிரோஸிரா ரோடண்டிபோலியா | 409–414 |
| டிஜிடாலிஸ் | 400–405 |
| ப்ரோமியம் | 215–222 |
| ப்ளுவாரிகம் ஆஸிடம் | 445–454 |
| பாப்டீஷியா டிங்டோரியா | 174–181 |
| பாரிடா கார்ப் | 181–187 |
| பாஸில்லினம் | 169–174 |
| பிரயோனியா ஆல்பா | 223–236 |
| பெர்பெரீஸ் வல்கெரீஸ் | 203–208 |
| பெர்ரம் பாஸ்பாரிகம் | 440–445 |
| பெர்ரம் மெட்டாலிகம் | 432–440 |
| பெல்லடொன்னு | 188–198 |
| பென்ஸாயிக் ஆஸிட் | 198–203 |
| போரக்ஸ் | 209–215 |
| யூப்ரேஷியா | 427–431 |
| யூபடோரியம் பர்போலியேட்டம் | 422–427 |

| | | | |
|---|---|---|---|
| லாக் கானினம் | .... | .... | 601–609 |
| லாக் வாக்ஸினம் டிப்ளோரேட்டம் | | .... | 609–615 |
| லாச்சஸிஸ் | .... | .... | 615–634 |
| லேடம் பாலஸ்டிரி | .... | .... | 634–642 |
| ஜெல்ஸிமியம் | .... | .... | 455–463 |
| ஸிகுடா விரோஸா | .... | .... | 349–353 |
| ஸீனா | .... | .... | 354–359 |
| ஹமாமலிஸ் வர்ஜினிகா | .... | .... | 473–478 |
| ஹயஸ்யாமஸ் நைகர் | .... | .... | 504–511 |
| ஹிப்பார் ஸல்பர் | .... | .... | 485–497 |
| ஹைட்ராஸ்டிஸ் | .... | ... | 497–504 |
| ஹைடரிகும் | .... | .... | 512–516 |
| ஹெல்லபோரஸ் நைகர் | .... | .... | 479–485 |


# மாஸ்டர் கீ டு ஹோமியோபதிக் மெட்டீரியா மெடிகா

## அப்ரோடேனம்
## ABROTANUM

**முன்னுரை:**—சிறுவர்களின் உடல் மெலிவுக்கு மிகச் சிறந்த ஔஷதங்களில் இது ஒன்று. உடல் இளைப்பதும் கூடு விட்டுக் கூடு தாவுவது போல உருவத்தையும் இடத்தையும் அடிக்கடி மாற்றிக் கொள்ளும் தன்மையுள்ள வியாதியும் இதன் முக்கிய குறிகள்.

### பொதுக் குறிகள்

**தகுதி:**—முதுகெலும்பில் திடீரென்று தோன்றும் வேக்காட்டுக்கும் நாட்பட்ட வேக்காட்டுக்கும் கூட ஏற்றது. வாத சரீரங்கள். பிறந்த குழந்தைகளின், விசேஷமாக சிறு ஆண் குழந்தைகளின் கோளாறுகள்.

**மனம்:**—முன்கோபம், முரட்டுத் தனம், இரக்கம் அற்று கொடிய காரியங்களைச் செய்ய விருப்பம் ஆகிய குணங்கள் உள்ள சிறுவர்கள்.

**உடல்:**—பல மிழந்து, நோய் வாய்ப்பட்ட உணர்ச்சி; கோப தாபங்களால் உடலில் நடுக்கம். உடல் முழுவதும் முடமாய், இரணமாய் இருக்கும் உணர்ச்சி, சுரணைக் குறைவு, எலும்பு மூட்டுகளில் பலவீனம், பாரிச வாயு வந்துவிட்டது போல் நடக்க முடியாமை, அதிக வேதனை தரும் முதுகு வலி, இரவில் தோன்றுதல் அல்லது கடுமையாகுதல்.

உபாதி கூடுதல் :—குளிர் காற்று, மூடுபனி, குளிர் காற்றும், குளிருள்ள மழைக் காலமும் ஒத்துக் கொள்ளாமை. இரவு.

உபாதி குறைதல் :—அசைவு, இளகிய மலம் கழிந்த பிறகு (நேட்ரம் ஸல்ப், ஸிங்கம்).

## விசேஷக் குறிகளின் விளக்கம்

உடல் இளைப்பு :—குழந்தைகளின் உடல் மெலிவில் இளைப்பு அதிகமாய் இருக்கும். சில சமயங்களில் இளைப்பு கால்களில் மட்டும் இருக்கும் அல்லது முதல் முதலாகக் கால்களிலேயே இளைப்பு தெரியும். இளைப்பு கால்களில் ஆரம்பித்து படிப்படியாக மேற்பாகத்துக்குப் பரவும். (லைகபோடியம், நேட்ரம் மூர், ஸோரினம் ஆகியவைகளுக்கு எதிரிடை) சருமம் கொளகொளவென்றும் மடிப்பு மடிப்பாகத் தொய்ந்தும் இருக்கும். வயதானவர்களைப் போல முகத்தில் சுருக்கம் காணப்படும்.

வியாதியின் உருவ, இடமாற்றத் தன்மை :—வாத ரோகத்தில் வியாதி எலும்பு மூட்டுகளிலிருந்து மறைந்து இருதயத்தைத் தாக்குதல் (லேடம், ஆரம், கால்மியா), அல்லது முதுகெலும்பைப் பீடித்தல். தாளம்மை மறைந்து விரைகள் அல்லது ஸ்தனங்கள் வீங்குதல்; இவ்வித சமயங்களில் கார்போ விஜியையோ, பல்ஸடில்லாவையோ உபயோகிப்பது வழக்கமாயினும் இவ்விரண்டினாலும் பயன் ஏற்படாத போது அப்ரொடேனம் குணம் செய்திருக்கிறது.

உள்ளே அமுக்கப்பட்ட வியாதியினால் உண்டாக்கப் படும் கெடுதலான விளைவுகள் :—"வயிற்றுப் போக்கைத் தடை செய்த பிறகு வாதரோகம் தோன்றலாம்". வயிற்றுப் போக்கைத் திடீரென்று தடை செய்தால் 1. மூலம். 2. மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல். 3. அதிகமான



மனக் கவலை, உள்ளச் சோர்வு, உடல் நடுக்கம் ஆகியவை தோன்றுகின்றன. முகத்தில் தோன்றிய சிறங்குகளைத் தடை செய்த பிறகு உடல் ஊதா நிறமாக மாறும்.

மாறி மாறித் தோன்றுதல் :—வயிற்றுப் போக்கும் மலச் சிக்கலும் மாறி மாறித் தோன்றுதல். மலச் சிக்கல் உள்ள போது வாதரோகம் தலைகாட்டும். வயிற்றுப் போக்கு உள்ள போது வியாதியஸ்தர் சௌகரியமாய் இருப்பதாக நினைப்பார். வாதரோகத்தில் மூட்டு வீக்கமும் வலியும் குறைந்து வரவர, மூலம் தோன்றி போகப் போக மிகக் கடுமையாகும்.

## மற்ற குறிகள்

உப்பிய அடி வயிறு—நெற்றியிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்களில் வீக்கம்—தலையை நிமிர்த்தி வைத்துக் கொள்ள முடியாது—முகம் சில்லென்று குளிர்ந்திருக்கும்; சுற்றிலும் கருப்பு வளையமிட்டு ஒளி இழந்த கண்கள்—அதிகப் பசி—பசியே இல்லாமை—அடிவயிற்றில் பல இடங்களில் கல் போல் கடினமான உருண்டைகள்—வயிற்றில் குத்தும், குடையும், எரிச்சல் தரும் வலிகள்: இத்துடன் அதிக நாற்றம் வீசும் தண்ணீர் வாந்தி எடுக்கப் படலாம். பிறந்த குழந்தைக்குத் தொப்பூழ்க் குழியிலிருந்து இரத்தமும் ஊனீரும் கசிதல். சிறுவர்களுக்கு மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல்—உணவு சீரணமாகாமல் அப்படியே மலத்துடன் கழிக்கப் படுதல்—உடல் சில்லிப்புடன் அதிகப் பலவீனத்தை ஏற்படுத்தும் அதிகச் சூடு இல்லாத சுரம். உடல் மெலிவில் வயிறு தொங்குவதுபோல் அல்லது தண்ணீரில் மிதந்து வரும் உணர்ச்சி (புபோ ராணா). உடம்பு முழுவதும் புண்ணாய் மூடமாய் விட்ட உணர்ச்சி, அளவு கடந்த பசி; நன்றா

கச் சாப்பிட்டு வந்தாலும் உடல் இளைக்கும். (ஐயோடியம், நேட்ரம் மூர், லானிகுலா, ட்யுபர்குலினம்) க்ஷய சம்பந்தமுள்ள அடிவயிற்று உள்தசை வேக்காடு.

சுவாசகோச உறை வேக்காடு:—வியாதியினால் தாக்கப்பட்ட பகுதியில் வியாதி குணமான பிறகும் ஏதோ அழுத்திக் கொண்டிருப்பது போல் உணர்ச்சியும் அதனால் மூச்சுவிடச் சிரமமும் தோன்றுதல் (அகோனைட், பிரயோனியாவுக்குப் பிறகு). விலை மதிக்க முடியாத இக்குறியின் உண்மையை அறியும் வாய்ப்பு ஒன்று எனக்குக் கிடைத்தது. ஆதலால் இதை ஓர் இரத்தினம் என்றே சொல்வேன்.

கீல்வாயு:—மூட்டுகள் விரைத்து வீங்கிக் குத்து வலிகளுடன் இருத்தல்; மணிக்கட்டு, குதிகால் ஆகிய எலும்பு மூட்டுகளில் வலியும் வேக்காடும்.

ஒப்பிடுதல்:—உப்பிய அடிவயிறுடன் உடல் மெலிவு (கல்கேரியா கார்ப்) ஒட்டிய அடிவயிறுடன் (கல்கேரியா பாஸ்.)

---

## அஸடிக் ஆஸிட்
## ACETIC ACID

முன்னுரை:—ஆழ்ந்து வேலை செய்யும், உடல் வாகை ஒழுங்கு படுத்தும் ஔஷதம். உடல் இளைப்பு, இரத்த சோகை, நீர்ச்சுரப்பு உள்ள வீக்கம், இரத்தப்பெருக்கு ஆகியவை இதன் மிக விசேஷமான குறிகள்.

### பொதுக் குறிகள்

தகுதி:—உடல் வெளுத்து வியாதித் தோற்றம் அளிக்கும் மனிதர்கள். முகம் வெளுத்து மெழுகு தடவியது போல் இருக்கும் (பெர்ரம் பாஸ்). கை கால்கள் கூட மெழுகைத் தடவியது போல அல்லது மிகவும் வெளுத்து இருக்கும். வருஷக் கணக்காக இருந்துவரும் உடல் பலவீனம், பெற்றோர் மூலம் தோன்றும் சுவாசகோச க்ஷயம். அடி வயிறும் கை கால்களும் வீங்கி இருந்தால் விசேஷமாகப் பயன்படும். குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும், உடல் தளர்ந்து, வெளுத்து மெலிந்துள்ளவர்களுக்கும் ஏற்றது.



மனம்:—குழப்பம், அடிக்கடி மனவேதனை, சமீபத்தில் நடந்த விஷயங்களைக் கூட மறந்து விடுதல். சண்டை போடும், குற்றம் கண்டுபிடித்துச் சொல்லும் குணம்.

உடல்:—அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும். அதிக உடல் இளைப்பு. இரத்த சோகை, பலவீனமும் இரத்த சோகையும் உள்ளவர்களுக்கு அடிக்கடி ஏற்படும் மயக்கம். அதிக தாகம். அசுத்த இரத்தக் குழாய்களில் வீக்கம். உருளைக் கிழங்கைத் தவிர மற்ற காய்கறிகள் ஒத்துக் கொள்வதில்லை. ரொட்டியும் வெண்ணெயும் சிறிது கூட ஒத்துக் கொள்ளா.

உபாதி கூடுதல்:—குளிர் ஒத்துக் கொள்ளாது.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

அளவு கடந்த உடல் இளைப்பு:—சுவாச கோச க்ஷயம், நீரிழிவு, குழந்தைகளின் நாட்பட்ட வயிற்றுப் போக்கு ஆகியவைகளில் முகம் குழி விழுந்து ஒட்டி இருக்கும்.

அதிக பலவீனம்:—சுவாச கோச க்ஷயத்தில்; நீரிழிவில்; பலவீனத்தை ஏற்படுத்து மளவுக்கு இந்திரியம் வெளியேறுதல்; மலம் கழிக்கும் போது இந்திரியம் தானாகவே வெளியாகும்; பிறப்பு உறுப்புகள் தளர்ந்து பாதங்களில் வீக்கம். கை கால்களில் பலவீனமும் வீக்கமும். அடிபட்டதன் விளைவாய் அமித பலவீனம் (ஸல்ப்யூரிக்

ஆஸிட்) குளோரபாரம் போன்ற மயக்க மருந்துகளை உபயோகித்ததினால் ஏற்படும் அதிக பலவீனம்.

கடுமையான இரத்த சோகையும் நீர்ச் சுரப்பு வீக்கங்களும் முகத்தில் மெழுகு தடவியது போன்ற தோற்றமுமுள்ள இரத்த சோகை. கை கால்களும் வீங்கி மெழுகு தடவியது போல் இருக்கும். கால்களிலும் அடி வயிற்றிலும் வீக்கம் உள்ளபோது விசேஷமாய்ப் பயன் தரும்.

ஏராளமான வியர்வை :—இரவில் ஆடைகளைச் சொட்டச் சொட்ட நனைக்கு மளவு வியர்வையுடன் அதிகச் சூடு இல்லாத சுரங்கள். வியர்வை ஏராளமாகவும் குளிர்ச்சி யாகவும் இருக்கும்.

தீராத் தாகம் :—நீர்ச் சுரப்பு வீக்கம், நாட்பட்ட வயிற்றுப் போக்கு, நீரிழிவு முதலிய வியாதிகளில் எத்தனை தண்ணீர் குடித்தாலும் அடங்காத தாகமும் தாபமும், குளிர்ந்த பானங்களைக் குடித்தால் வேதனை ஏற்படும் (வயிற்றில் பளுவாய்த் தோன்றும்). குமட்டலும் அடிக்கடி வாந்தி செய்தலும். சுரம் உள்ள போது மட்டும் தாகம் இருப்பதில்லை.

இரத்தப் பெருக்கு :—சளிச் சவ்வுகள் பலவற்றிலிருந்தும் மூக்கு, வயிறு, சுவாச கோசங்கள், குடல்கள், புண்கள் ஆகியவைகளிலிருந்தும் இரத்தப் பெருக்கு. மூலங்களிலிருந்து ஏராளமான இரத்தப் பெருக்கு. மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு, அதுவும் கீழே விழுந்து அல்லது மூக்கில் அடிபட்டு ஏற்படும் இரத்தப் பெருக்கில் விசேஷமாக உபயோகப்படும் (ஆர்னிகா). கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு, குழந்தை பிறந்த பிறகு அதிக தாகத்துடன் ஏற்படும் இரத்தப் பெருக்கு. ஏராளமான போக்குள்ள மாதவிடாய். மலச் சிக்கலுடன் இரத்தப் பெருக்கெடுத்தல்.



ஏராளமான மூத்திரம் :—தண்ணீர் போன்ற ஏராளமான மூத்திரம், அதிக தாகம், பலவீனம், உடல் வெளுப்பு, உடல் இளைப்பு ஆகியவைகளுடன் நீரிழிவு. மூத்திரத்தில் சர்க்கரைப் பொருள் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். மூத்திரத்தில் பாஸ்பேட்டுகள் (Phosphates) கலந்திருக்கும்.

ஏராளமான வயிற்றுப் போக்கு :—களைப்பை உண்டாக்கும், ஏராளமாகவும் உள்ள வயிற்றுப் போக்கு. அதிக தாகத்துடன் வயிற்றுப் போக்கு; நிறையத் தண்ணீர் குடித்தாலும் போக்கு அதிகமாவதில்லை. கால்களிலும் பாதங்களிலும் வீக்கத்துடன் வயிற்றுப் போக்கு (சுவாச கோச க்ஷயம் உள்ளவர்களுக்கு).

## மற்ற குறிகள்

சுரம் :—ஒரு கன்னம் வெளுத்து மற்றொரு கன்னம் சிவப்பாய் இருக்கும், இடது கன்னம் அதிகமாய்ச் சிவந்திருக்கும். இடது கன்னத்தில் திட்டாகச் சிவந்திருக்கும். ஏராளமான, குளிர்ச்சியான வியர்வை. நாற்றத்தை உண்டு பண்ணும் பெருவாரிச் சுரங்கள்; தாகம் இருப்பதில்லை.

வயிறு :—புற்று, வயிற்றினுள் புண்; வயிற்றில் இடைவிடாமல் பிடுங்குவது போலவும் புண் இருப்பது போலவும் வலி; வயிற்றிலும் அடிவயிற்றிலும் எரிச்சல்; அடிவயிறைக் கீழேவைத்துப் படுத்தால் குறையும். வயிற்றில் பல இடங்களில் கல்போல் கடினமாகும்.

முதுகு வலி :—அடி வயிறைக் கீழே வைத்துப் படுத்தால் தான் குறையும்.

டிப்தீரியா :—தீராத தாகம் உள்ளபோது.

மார்பு :—நாட்பட்ட மார்ச் சளி, மார்பில் கள கள

என்ற சப்தம். வியாதியில் அடிபட்டு உடல் வெளுத்து உள்ளவர்களிடம் காணப்படும் நாட்பட்ட இருமல், வறண்டும் குலைப்பது போலவும் இருக்கும்,—மார்பில் கள கள என்ற சப்தத்துடன் சீறுவது போல் மூச்சு விடுதல். மூச்சு விடும்போது ஒவ்வொரு தடவையும் இழுப்பது போன்ற இருமலும் கொல் கொல் என்ற சப்தமும்.

**தலை வலி** :—புகையிலை, அபினி, காப்பி அல்லது சாராயம் ஆகியவைகளை அளவு மீறி உபயோகித்தால்.

**கொட்டு, கடி** :—தேள், பூரான், சிலந்தி, தேனீ முதலிய விஷப் பிராணிகளின் கொட்டுகளுக்கும் கடிகளுக்கும் அவைகளால் உண்டாகும் கோளாறுகளுக்கும்.

**ஒப்பிடுதல்** :—நீர்ச் சுரப்பு வீக்கமுள்ள நிலைமைகளில்:—அபிஸ் மெல்லிபிகாவில் உடல் வெளுப்பு இருந்தாலும் அஸடிக் ஆஸிட்டைப் போல் ஏராளமான மூத்திரம் இருப்பதில்லை. அபிஸ், ஆர்ஸனிக் ஆகிய இவ்விரண்டுடனும் ஒப்பிடும்போது அஸடிக் ஆஸிட்டில் சீரணைக் கோளாறுகள் மேலோங்கி இருப்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

---

# அகோனைட்டம் நாபில்லஸ்

## ACONITUM NAPELLUS

**முன்னுரை** :—அகோனைட் தோற்றுவிக்கும் வியாதிக் குறிகளை டாக்டர் ஹானிமன் 1805-ம் ஆண்டில் வெளியிட்டார். வியாதிகளைக் குணம் செய்வதில் அதற்குள்ள சக்தியை அறிவித்ததற்காக உலகம் முழுவதும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

**"ஹோமியோபதி வைத்தியர்கள் உபயோகிப்பதைப் பார்த்து அகோனைட்டின் மேன்மைக் குணத்தில் கடுகளவு கண்டு கொண்டனர் அல்லோபதி வைத்தியர்கள். ஆயினும்**



**இவ் விஷயத்தை ஹோமியோபதியர்களிட மிருந்து கற்றுக் கொள்ள நேரிட்டதே என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு தான் அவர்களுடைய வைத்திய முறைப் பத்திரிகைகளில் அகோனைட்டைப் பற்றி எழுதியுள்ளனர்** என்று டாக்டர் ஹூகெஸ் (Hughes) கூறுகிறார்.

குறுகிய காலமே வேலை செய்யும் ஔஷதம். அவ்வப்போது தோன்றி மறையும் வியாதிகளில் இவ்வௌஷதம் தேவைப்படாது என்று சொல்லக் கூடியது எதுவுமே இல்லை. இவ்வௌஷதத்தின் "மிக விசேஷம்" என்று கருதப்படும் குறிகளே இதற்குக் காரணம். அக் குறிகளின் விவரம் பின் வருமாறு:—**வியாதிகள் தீடீரென்று தோன்றும். கடுமையாய் இருக்கும், கவலை, நிலை கொள்ளாமல் இருத்தல், பயம் முதலிய குறிகளும் காணப்படும். பயத்தினால் அல்லது அளவு மீறிய வறட்சியுடன் குளிர். அல்லது சூட்டினால் வியாதி ஏற்பட்டிருக்கும், சருமம் காய்ந்து சூடாய் இருக்கும்.**

### பொதுக் குறிகள்

**தகுதி** :—அவ்வப் போது தோன்றி மறையும் வியாதிகளின் ஆரம்பத்தில் அனேகமாகத் தேவைப் படுகிறது: வியாதியினால் உடல் அணுக்களிலே மாறுதல் உண்டான பிறகு பயன் படாது. சில சமயங்களில் மிக நாட்பட்ட வியாதிகளையும் தீர்த்து வைத்திருக்கிறது. இளமையும் நல்ல ஆரோக்கியமும் பலமும் உள்ளவர்களுக்கு மிக ஏற்றது. உடல் உழைப்பு இல்லாமல் சுக வாழ்வு நடத்தும், அளவுக் கதிகமான இரத்தம் உள்ள இளம் பெண்கள். டைபாய்டு (Typhoid) போன்ற இரத்தத்தில் விஷம் ஏறியுள்ள வியாதிகளுக்கு ஏற்றதல்ல.

**மனம்** :—**கவலை, நிலை கொள்ளாமை, பயம், முன்கோபம். நிலை கொள்ளாமையுடன் கவலையும் சேர்ந்திருப்பது அகோனைட்டுக்கே உரிய குறி. கவலையுடன் நிலைகொள்ளாமை**

என்று சொல்ல வேண்டும். தன் வியாதியைப் பற்றிய கவலை; வியாதி நிச்சயமாய்க் குணமாகாது என்று முடிவு செய்து நம்பிக்கை இழந்து விடுவார். சுரத்திலும் மற்ற வியாதிகளிலும் நிலை கொள்ளாமல் நெருப்பிலிட்ட புழுப் போல் துடிப்பார். நிலை கொள்ளாத துடிப்புடன் தூக்கம் வராமை. புழுக்களால் ஆசன வாயில் அரிப்பு, நிலை கொள்ளாது. இரவில் கூடுதலாகும். முன் கோபம், சிறிய விஷயங்களாலும் ஏற்படும். மன வேதனையினால் ஏற்படும் கோளாறுகள்.

கவலையும் முன் கோபமும் மும்முரமாகும் போது பயமாக மாறுகின்றன. அகோனைட்டின் மிக விசேஷமான குறிகளில் பயமும் ஒன்று. பயம், பயத்தினால் தோன்றும் கோளாறுகள். பிசாசுகளைப் பற்றிப் பயம். இருட்டில் பயம். கூட்டத்தைக் கண்டால் பயம். தெருவின் குறுக்கே போகப் பயம். கருவுற்ற பெண்களுக்குக் காரணம் கற்பிக்க முடியாத பயம், தாம் இறந்து விடுவோமென்ற பயம். வியாதியஸ்தர் பயப்படுகிறார் என்று அவர் முகத்திலே எழுதி ஒட்டி இருப்பது போல் தெரியும். ஆனால் பயம் அனேகமாக சாவு பற்றியதாய்த் தான் இருக்கும். தான் சாகப்போகும் நாளையும் நேரத்தையும் வியாதியஸ்தர் குறிப்பிடுவார். பயந்து கொண்டதினால் அல்லது கோபத்தினால் கரு சிதைந்து விடும் போல் தோன்றுதல். பயத்தினால் உடனேயோ அல்லது பல காலம் கழித்தோ ஏற்படும் கோளாறுகள். (ஓபியம்—பல காலம் கழித்து ஏற்படும் கோளாறுகளில்). காலரா என்னும் விஷபேதி சுற்று வட்டாரங்களில் மும்முரமாய் இருக்கும் போது பீதியினால் ஏற்படும் வயிற்றுப் போக்கை நிறுத்த உபயோகமுள்ளது.

**உடல்:**—திடீரென்று தெம்பு மிகவும் குறைந்து போகும். தாகம், சிவந்த முகம் இவைகளுடன் அடிக்கடி



வலி (சில்லிப்புடன், ஆர்ஸனிகம், பெல்லடொன்னா, ஸேபியா, பல்ஸடில்லா) தாங்கமுடியாத வலிகள், குறிப்பாக இரவு நேரத்தில். படுத்திருக்கும் போது முகம் சிவந்திருக்கும். எழுந்து உட்கார்ந்த வுடன் முகம் வெளுத்து தலைச் சுற்றல் அல்லது மயக்கம் உண்டாகும். தண்ணீரைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் வாய்க்குக் கசப்பாகவே இருக்கும். மூத்திரம் அளவு குறைந்து, சிவந்து, சூடாக, வலியுடன், வெளிப்படும். வண்டல் இருக்காது. பொதுவாக உடம்பு முழுவதும் குறிப்பாக வியாதியுள்ள பாகங்களில் ஒவ்வொரு அசைவினாலும் இலேசாகத் தொட்டாலும் கூட வேதனை தரும் உணர்ச்சி. தசைகளில் இழுப்பும் துடிப்பும், நினைவு இழத்தல் ஆகிய குறிகள் இருந்தால் அகோனைட் பயன் படாது.

**உபாதி கூடுதல்:**—அகோனைட் வியாதிகள் தோன்றும் காரணங்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவையாய் இருக்கின்றன. அதாவது வறண்ட, குளிர் காற்று அல்லது வறண்ட குளிருள்ள காலம், கடுமையான வெப்பம், குறிப்பாக சூரிய வெப்பம் ஆகியவை காரணங்கள்.

வறண்ட, குளிர் காற்றுத் தாக்கியதால் சுரம், கண், காது பற்றிய கோளாறுகள், மார்ச்சளி, சுவாச கோச வேக்காடு, சுவாச கோச உறை வேக்காடு கழுத்தில் பிடிப்பு, பல்வலி, பக்ஷவாதம், இன்னும் இவை போன்ற பல திடீர் வியாதிகளும் ஏற்படலாம். வெய்யில் மயக்கம், குறிப்பாக உச்சிக் கால வெய்யிலில் தலையை மூடாமல் நின்று கொண்டிருந்ததினால் ஏற்படும் மயக்கம்.

**உபாதி கூடுதல்:**—மாலை; இரவில், நள்ளிரவில்:

**உபாதி கூடுதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே தூசி, துரும்பு புகுந்து கொள்ளுதல், அடி படுதல் அல்லது ஆபரேஷன் செய்தல் ஆகிய காரணங்களால் வேக்

காட்டுடன் தோன்றும் கண் வியாதிகள். கண்ணின் தசைப் படுதாவில் அடிபட்டதால் ஏற்படும் வேக்காட்டில் ஆர்னிகாவை விட உபயோகமுள்ளது. குழந்தைகளுக்குப் பிறந்தவுடன், அனேகமாக அதிர்ச்சியினால், மூத்திரம் பிரியாமை, இரத்த வாந்தி ஆகிய கோளாறுகள் ஏற்படுதல். சிரமப்பட்டுப் பாடியதால் ஏற்படும் குரல் வளை வேக்காடு. மார்பில் அடிபட்ட காரணமாக சுவாச கோச உறையில் வேக்காடு.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

திடீரென்று தோன்றுதல்: கடுமையாய் இருத்தல் :—அவ்வப்போது தோன்றி மறையும் திடீர் வியாதிகள் இவ்விதமே ஆரம்பமாகும். விஷ பேதி; சில வகைச் சுரங்கள் (அனேகமாகக் குளிர் காற்றில் அடிபட்டதால்) அகோனைட்டின் வியாதிக் காரணங்களால் அவ்வப்போது தோன்றும் (கண்கள், காது முதலியவைகளில்) வேக்காடு. திடீரென்று பார்வை மறைந்து குருடாய்ப் போன சமயங்களில் கூட இவ்வௌஷதத்தினால் குணம் ஆகியிருக்கிறது.

பொதுவான, வறண்ட சூடு : கடுமையான தாகம் :—சுரங்களில் விசேஷமாய்க் காணப் படுகிறது. சுரத்தில் முதலில் நல்ல குளிரும் அதைத் தொடர்ந்து சருமத்தில் வறட்சியும் சூடும் வருதல். சுரத்தையும் வேக்காட்டையும் விருத்தி செய்யும் குணம் அகோனைட்டுக்கு இருக்கிறது; அதனால் விடாமல் அடிக்கும் (வேக்காடு உள்ள) சுரங்களில் மட்டும் உபயோக முள்ளது. கவலை நிச்சயமாய்க் காணப்படும். குளிர்ந்த தண்ணீரை ஏராளமாய்க் குடிக்கத் தாகம்.

சூடு : வறட்சி : எரிச்சல் :—வேக்காடு உள்ள வியாதிகளில் தவறாமல் காணப்படுகின்றன. வறண்ட, குளிர்



காற்று தாக்கிய பிறகு, சூடு, வறட்சி, எரிச்சல் ஆகியவைகளுடன் கண் வேக்காடு. சீழ்க் கட்டிகளின் ஆரம்பத்தில் அவை மிகவும் சிவந்து வீங்கிப் பள பள வென்று இருப்பதும் அவ்விடங்களில் நெருப்பினால் சுடுவது போல் எரிச்சலும் (ஆர்ஸனிகம்). வறட்சியுடனும் எரிச்சலுடனும் தொண்டை வேக்காடு. அகோனைட் கொடுக்க இக்குறிகள் இருப்பது மட்டும் போதாது. அதன் வியாதிக் காரணங்களும் மனக் குறிகளும் சேர்ந்து இருக்க வேண்டும்.

எரிச்சல் : மத மதப்பு : சில்லிப்பு : குத்து வலி :—அகோனைட் வியாதிகளில் இந் நான்கு குறிகளும் ஒன்று சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்க மற்றொரு விசேஷம், அகோனைட் வியாதிகள் எல்லாவற்றிலும் எரிச்சல் தவறாமல் இருக்கும். சுரத்தில் வறட்சியும் எரிச்சலு முள்ள சூடு. மூளையினுள்ளே கொதிக்கும் தண்ணீர் இருப்பது போல் தலையில் எரிச்சல், முதுகெலும்பில் எரிச்சல். எரிச்சலுடன் அளவு குறைந்து மூத்திரம் வெளிப்படும். எரிச்சலுடன் தாகம், மத மதப்பு, குத்து வலி அல்லது எலும்பு ஊர்வது போன்ற உணர்ச்சி இவைகளுடன் வலி, காதுகளில் குத்து வலியும் இரைச்சலும். இருதயத்தில் குத்து வலியுடன் மயக்கம். தொண்டையில் எரிச்சலும் மத மதப்பும், விழுங்கும் போது உணர்ச்சி சிறிதும் இல்லாமல் போவதும். வியாதியுற்ற இடங்களில் மத மதப்பாகவும் வீங்கியும் இருப்பது போல் உணர்ச்சியும் எரிச்சலும், குத்துவது போலவும் எறும்பு ஊர்வது போலவும் இருக்கும். வலி மறைந்த பிறகு புண் இருப்பது போல் அல்லது மத மதப்புடன் இருக்கும். குளிர் தாக்கியதால் சில்லிப்பு மத மதப்பு, குத்து வலி ஆகியவைகளுடன் தோன்றும் பக்ஷவாதம், நரம்பு பற்றிய வலிகள், குறிப்பாக இடது பக்கத்தில்.

நிலை கொள்ளாமை, குத்து வலி, மத மதப்பு ஆகியவைகளுடன் இருத்தல். இருமிய பிறகு மார்பில் குத்து வலி. மூக்கில் மதமதப்பு: மூக்கிலிருந்து இரத்தப் பெருக்குடன் பனிக் கட்டிபோல் சில்லென்று இருக்கும். குளிர் உடலினுள்ளே அலை அலையாகப் பாய்ந்து செல்லும் உணர்ச்சி (சுரத்தில்).

அளவுக் கதிகமான புலன் உணர்ச்சி,—வெளிச்சம், சப்தம், வலி ஆகியவைகளில். இவை யாவும் அகோனைட்டுக் குள்ள நரப்பு வேதனையினால் தோன்றுகின்றன. சிறிதளவு சப்தம், பாட்டுப் பாடுவதைக் கூட அவரால் சகிக்க முடியாது. பாட்டு வருத்தத்தை உண்டு பண்ணுகிறது. ஒவ்வொரு நரம்பினுள்ளேயும் பாய்ந்து செல்கிறது. பொறுக்க முடியாத வலியினால் நம்பிக்கை இழத்தல் (ஆர்ஸனிகம், சாமோமில்லா, காபியா). வலியினால் கதறுவார். அகோனைட் வலி உள்ள போது வியாதியஸ்தர் நிலை கொள்ளாமல் இருப்பார். வலியை அவரால் தாங்க முடியாது. லேசாகத் தோட்டாலும் பொறுக்க முடியாது. போர்த்திக் கொள்ளவும் முடியாது. வாசனை அறியும் சக்தி அதிகரித்தல். குறிப்பாக சிறிதளவு நாற்றம் இருந்தாலும் அதை அறியும் சக்தி ஏற்படுதல்; லேசாகத் தொட்டாலும் பொறுக்க முடியாது இவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இரத்தப் பெருக்கு:—அகோனைட்டின் இரத்தப் பெருக்கில் இரத்தம் ஏராளமாகவும் நல்ல சிவப்பு நிறமாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. சுவாச கோசங்களிலிருந்து நல்ல சிவப்பு நிறமுள்ள இரத்தம் பெருக்கெடுத்தல். லேசாகக் காறினாலும் சிறிது இருமினாலும் இரத்தம் வெளிப்படுதல்; சுரம், மூக்கிலிருந்து நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தப் பெருக்கு. ஆசன வாயில் சூடு, கொடூ



ரமான குத்தும் வலி இவைகளுடன் நல்ல சிவப்பு நிறமுள்ள இரத்தப் பெருக்கு வெளிப்படும் மூலம். தொண்டையில் அடைப்பு, குமட்டல், இவைகளுடன் திடீரென்று வயிற்றில் கடுமையான வலியும் இரத்த வாந்தி செய்யப் படுவதும்.

## மற்ற குறிகள்

கீழே குறிப்பிடப் பட்டுள்ள குறிகள் ஒரு வியாதியில் காணப் படுகின்றன என்பதை மட்டும் ஆதாரமாய்க் கொண்டு அகோனைட்டைக் கொடுப்பதில் பயன் இல்லை. அகோனைட்டின் வியாதிக் காரணங்களும் மனக் குறிகளும் ஏறக் குறைய இருக்க வேண்டும்.

மூடாத இடங்களில் வியர்வை (மூடிய இடங்களில்—பெல்லடொன்னா). வியாதியுள்ள அல்லது மூடியுள்ள இடங்களிலும் வியர்வை இருக்கலாம். அல்லது உடல் முழுவதும் ஆடையை நனைக்குமளவு ஏராளமான வியர்வை உண்டாகலாம்.—பலமாகக் கதறிக் கொண்டு பிறப்பு உறுப்புகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுதல். தண்ணீரைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் கசப்பாய் இருத்தல். மூக்கின் அடிப்பாகத்தில் வலி, சிவந்திருக்கும் முகம் படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தவுடன் பிணம் போல் வெளுத்து விடும் அல்லது வியாதியஸ்தருக்கு தலை சுற்றும். நாக்கு வெள்ளையாய் இருத்தல் (ஆண்டிம் க்ரூடம்) இருமும் போது ஒவ்வொரு தடவையும் குழந்தை அதன் தொண்டையைப் பிடித்துக் கொள்ளும்.—மூச்சு விடத் திணறல். சிறு கொப்புளங்கள் உள்ள சரும வியாதிகள்.

பல்வலி:—வலியினால் வெறி பிடித்தது போல் உள்ள போதும், காபியா கொடுத்துக் குணம் ஏற்படாத போதும்.

கல்லீரல் வேக்காடு:—திடீரென்று தோன்றும் போது; முதுகிலும் இடுப்பிலும் அடிபட்டது போல் வலி.

வயிற்றுப் போக்கு:—தண்ணீர் போன்ற மலம்; நறுக்கிய கீரை போல் பச்சை நிறமாய் பள பள வென்றும் இருத்தல்; மலம் கழிக்கும் போதும் அதற்கு முன்பும் குத்தும் வலிகள்.

வயிற்றுக் கடுப்பு:—கொஞ்சமாகவும், அடிக்கடியும், இரத்தம், சீதகம் கலந்தும் உள்ள மலம். மலம் கழிக்கும் போது கடு கடுப்பும் குத்து வலியும், அனேகமாக வெறும் இரத்தம் மட்டும் வெளியாகும்; இரத்தமும் சிறிது சீதகமும்.

விஷபேதி:—திடீரென்று மிகக் கடுமையாய்த் தோன்றும்; அடிவயிற்றில் குத்து வலிகள். மிகவும் பழுத்துப் போன சுரைக் காயை நன்றாக அரைத்துக் கலக்கினால் எப்படியிருக்குமோ அதைப் போல் மலம். எவ்விதமான எச்சரிக்கைக் குறிகளோ, அதிகமான வயிற்றுப் போக்கோ இல்லாமல் மிக வேகமாக க்ஷீணம் தோன்றுதல்.

மூத்திரக் கோளாறுகள்:—வலியுடன், கஷ்டத்துடன், சொட்டுச் சொட்டாக மூத்திரம் பிரிதல். மூத்திரக்காய்களின் அருகே குத்து வலிகளுடன் மூத்திரம் அடக்கப் படுதல் அல்லது அளவு குறைதல். மூத்திரப் பையின் கழுத்தில் எரிச்சலும் கடுப்பும்.

இருமல்:—தொண்டையினுள்ளே இலேசாகத் தொடுவது போன்ற உணர்ச்சியுடன் வறண்ட சிறு இருமல். கோழை இல்லாமல் கற கறத்த சப்தத்துடனும் வலியுடனுமுள்ள இருமல். குழந்தைகளுக்குச் சுரத்துடன் ஏற்படும் தொண்டை வேக்காடு. நாய் குரைப்பது



போலவும் எதிரொலியுடனும் கூடிய சிறு சிறு இருமல் அல்லது இழுப்புடன் இருமல், வெளி மூச்சு விடும்போது சப்தம் பலமாய்க் கேட்கும். உள் மூச்சு வாங்கும் போது சப்தம் இருக்காது. இருமும் போது தொண்டையைப் பிடித்துக் கொள்ளுதல். வெளி மூச்சு விடும்போது இருமல் கூடுதலாகும் (உள் மூச்சு வாங்கும் போது—காஸ்டிகம், ஸ்பாஞ்சியா). குரல் வளை வேக்காடு, தொண்டை பற்றிய கோளாறுகளில் அகோனைட் மிகச் சிறந்தது.

சுவாச கோச உறை வேக்காடு:—இது முக்கியமான ஔஷதம். குளிர், சுரம் விடாமல் அடித்தல். மார்பில் குத்தும் வலி உண்டாகி சுவாசிக்கச் சிரமம் ஏற்படுதல், வறண்ட இருமல் ஆகியவை காணப்படும். மல்லாந்து படுத்தால் குத்து வலியும் இருமலும் கொஞ்சம் மட்டுப்படும். விலாப் பக்கங்களைக் கீழே வைத்துப் படுத்தால் இவை கூடுதலாகும். இவ் வியாதிக்கு அகோனைட், பிரயோனியா, ஸல்பர் ஆகிய இம் மூன்றும் முக்கியமானவை.

சுவாச கோச வேக்காடு:—சுவாச கோச உறை வேக்காட்டில் இருப்பதைப் போன்ற குறிகள், ஆரம்ப நிலைமை. இடது பக்கம் படுத்தால் உபாதி கூடுதலாகும் (பாஸ்பரஸ்) அல்லது இரு பக்கங்களிலும் படுக்க முடியாமல் மல்லாந்தே படுக்க முடியும்.

காசம்:—இழுப்பு ஆரம்பமானவுடன் அகோனைட்டை 1-xல் கொடுத்தால் மிக விரைவில் அதன் கடுமை குறைந்து விடும்; அச்சமயத்தில் பயமும் கவலையும் இருந்தால் அகோனைட்டினால் குணம் உண்டாகுமென்று நிச்சயமாய் நம்பலாம். ஆனால் இதனால் நிரந்திர குணம் ஏற்படுவதில்லை. வியாதியஸ்தர் முதுகைச் சிறிது கூட வளைக்காமல் நிமிர்ந்து உட்காருவார், மூச்சு விடவே முடியாது.

**வயிற்று வலி** :—எப்படி உட்கார்ந்தாலும் வலி குறைவதில்லை. முன் பக்கமாக உடலை வளைத்தால் குறையும்.

**முகத்தில் பக்ஷ வாதம்** :—சில்லிப்பு, மத மதப்பு, குத்து வலி ஆகியவைகளுடன், குத்து வலி இல்லாவிட்டால் அகோனைட் ஏற்றதல்ல.

**உறவு** :—அகோனைட்டின் பெரும் பாலான குறிகளை ஸல்பருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அகோனைட் முற்றினால் ஸல்பர் என்று சொல்லப் படுகிறது. அதாவது ஒரு வியாதியின் ஆரம்ப நிலைமையில் அகோனைட் கொடுத்து ஓரளவு குணம் கிடைத்த பிறகு அதை முழுவதும் குணம் செய்ய ஸல்பர் தேவைப் படும். குறிகளைக் கவனிக்கும்போது வியாதிக்கு ஏற்றது அகோனைட் என்றாலும் அதனால் குணம் ஏற்படாவிட்டால் அவ் வியாதியை ஸல்பர் குணம் செய்யும். சுரம், தூக்கம் வராமை, வலி ஆகியவைகளில் காபியாவுக்கும் கண்களில் அடி பட்டால் ஆர்னிகாவுக்கும் ஸல்பருக்கு எல்லா வியாதிகளிலும் முன்பும் பிறகும் வியாதியை முழுவதும் நீக்க வல்லது அகோனைட். குழந்தைகளின் தொண்டை வேக்காட்டில் அகோனைட்டுக்குப் பிறகு ஹீபார் ஸல்பர் பயன் படும்.

**ஒப்பிடுதல்** :—அகோனைட்டின் தொண்டை வேக்காடு மாலையில் தோன்றும். ஹீபார் ஸல்பரின் தொண்டை வேக்காடு விடியற் காலையில் தோன்றும். வறண்ட, குளிர் காற்றினால் உண்டாகும் கோளாறுகள் (பிரயோனியா, ஹீபார் ஸல்பர்). போர்வையை எடுத்து விட்டால் உபாதி குறைதல் (பல்ஸடில்லா, லைகபோடியம், ஸீகேல், காம்போரா).

**ஒரு குறிப்பு** :—வயிற்றுக் கடுப்பில் குறிகளை அனுசரித்து மெர்கூறியஸ் கொடுத்தாலும் அதனால் குணம் ஏற்படா விட்டால் இடையிடையே அகோனைட்டையும் சில வேளைகள் கொடுத்து வந்தால் வியாதி குணமாகும்.



**ஒரு எச்சரிக்கை** :—அளவு மீறி அடிக்கடி கொடுத்தால் அகோனைட் கெடுதலை உண்டாக்கும். அகோனைட்டின் கெடுதலான விளைவுகளை மாற்ற காபியாவும் நக்ஸ் வாமிகாவும் உதவும். மிதமிஞ்சி அகோனைட் கொடுக்கப் பட்டால் ஸல்பர் தேவையாகும்.

---

## அக்டியா ரஸிமோஸா
## ACTAEA RACEMOSA

"அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களின் கீழ்ப் பகுதியிலும் கானடாவிலும் இருந்த பழங் குடிமக்கள் வாத ரோகம், மாத விடாய்க் கோளாறுகள் ஆகிய வியாதிகளிலும் பிரசவ காலத்தில் குழந்தை வெளியே வரத் தாமதம் நேரும் போதும் இவ்வௌஷதத்தையே பெரும்பாலும் உபயோகித்தனர். விஷப்பாம்புகள் கடித்தால் அவ்விஷத்தை முறிக்கவும் உபயோகிக்கப் பட்டது. இதனால் எவ்வளவு தூரம் குணம் ஏற்பட்டது என்ற விவரம் கிடைக்கவில்லை யென்றாலும் நாமே அவ் விஷயத்தில் எளிதாகத் தீர்மானிக்கலாம்" என்று ஸ்ரீ மில்ஸ்பா எழுதி யுள்ளார். மிகக் கடுமையான குத்து வலி, மத மதப்பு, கை கால்களில் சுருட்டி இழுக்கும் வலி ஆகியவை இவ்வௌஷதத்தின் விசேஷக் குறிகள். இவ்வௌஷதத்தின் மற்ற பொதுவான குறிகளை விலக்கி விட்டு விசேஷக் குறிகளை மட்டும் கவனித்தாலே மேலே குறிப்பிட்ட எல்லா வியாதிகளிலும் இது சிறப்பாய் வேலை செய்யும் என்பது தெரியும்.

### பொதுக் குறிகள்.

**தகுதி** :—பெண்களுக்கே பெரிதும் பயன் படும் ஔஷதங்களில் ஒன்று. மெலிந்த உடலும், எளிதிலே உணர்ச்சி வசப்படும் தன்மையும், பயந்த சுபாவமும் சங்கா குணமும் உள்ள பெண்கள். உடலிலே எப்பொ

ழுதும் குளிர் உள்ள பெண்கள், கருப்பை, சினைப்பை பற்றிய கோளாறுகளுடன் அல்லது அக்கோளாறுகளால் தோன்றும் வியாதிகளுள்ள பெண்கள். மாத விடாய் முடியும் காலத்தை அடைந்த பெண்கள். வாத ரோக முள்ள உடல். பல் முளைக்கும் குழந்தைகள்.

குறிப்பு:—இவ் வௌஷதத்தை ஆறு பெண்களுக்கும் 40 ஆண்களுக்கும் கொடுத்து ஔஷதப் பரிக்ஷை நடத்திய போது ஒவ்வொரு பெண்ணுக்கும் குமட்டல், வாந்தி, வயிற்றில் அதிக வேதனை ஆகிய குறிகள் ஏற்பட்டன. ஆனால் ஆண்களில் ஒருவருக்குக்கூட வயிற்றுக்கோளாறு ஏற்படவில்லை. இதிலிருந்து கருப்பையிலும் சினைப் பைகளிலும் இவ்வௌஷதம் உண்டாக்கும் கோளாறுகளின் எதிரொலியாகவே குமட்டல், வாந்தி, வயிற்றில் வேதனை ஆகியவை தோன்றுகின்றன என்பது தெளிவாகிறது.

**மனம்:**—அதிக மனச் சோர்வு. முன் கோபம் உண்டாகும். அடிக்கடி குணம் மாறும். அதிக பயம். சாவைப் பற்றிய பயம். தற் கொலை செய்து கொள்ள எண்ணம். ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாத பேச்சு. அவளுடைய மனக் குறிகள் யாவும் ஒன்றோடொன்று சம்பந்த மில்லாமல் இருக்கும்.

உடல்:—தசைகளில் அளவு கடந்த வலி: உடல் முழுவதுமே பொதுவான வலி; புண் இருப்பது போல் உணர்ச்சி. (ஆர்னிகா, பாப்டீஷியா). வலிகள் திடீரென்று வருதல் (பெல்லடொன்னா). பல இடங்களில் கிழிப்பது போல் கடுமையான வலி. அங்குமிங்கும் மின் விசை தாக்குவது போல் வலிகள். உடல் முழுவதும், குறிப்பாகக் கைகளில் மத மதப்பு. பலவீனம், நடுக்கம், இவைகளுடன் தசைகளில் சுருட்டிச்சுருட்டி இழுத்தல், கை கால் தசைகளில் சுருட்டி இழுத்தல்; ஆடு தசைகளில். முன் கை



களிலும் பாதங்களிலும் குளிர்ச்சி யான வியர்வை. தூக்கம் வராமை. ஆனால் சும்மா இருக்க முடியாது. அடிக்கடி இடம் மாற வேண்டும். கை கால்கள் தாமாகவே திடீர் திடீரென்று முறுக்கிக் கொள்ளும். மேல் வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி (ஹைட்ராஸ்டிஸ், ஸேபியா, ஸல்பர்). வாயில் கெட்ட ருசி, மூச்சுக் காற்று நாற்றம் வீசுதல், நாக்கின் மேல் அழுக்குப் படிதல், உமிழ் நீர் குழ குழப்பாகவும் ஒட்டும் குணமுள்ள தாகவும் இருத்தல். பற்களில் சுனத்த கோழை ஒட்டிக் கொண்டிருத்தல்.

உபாதி கூடுதல்:—குளிரும் மழைக் காலமும் ஒத்துக் கொள்ளாது. (டல்கமாரா). குளிர் காற்று உடலினுள்ளே சிலீர் என்று பாய்வது போல் தோன்றும். இரவு, அசைவு, மாத விடாய்க் காலம்.

குறிப்பு:—அசைவினால் கூடுதலாகிறது என்று மட்டும் பல ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக் கின்றனர். ஆனால் "அசைவினால் கூடுதலானாலும் விடாமல் அசைந்து கொண்டே இருந்தால் குறைகிறது" என்பதே உண்மையான விஷயம். இது ரஸ் டாக்ஸ் தேவைப் படும் வாதரோகவலிகளைப் போல் இருக்கிறதல்லவா?

உபாதி கூடுதல்:—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—தலைவலி திறந்த இடங்களில் குறைந்து கத கதப்புள்ள அறைகளிலே கூடுதலாகும். தலையைத் தவிர மற்ற இடங்களில் குளிர் தாக்கினால் தாங்க முடியாது.

உபாதி குறைவு:—(உடலை) போர்த்திக் கொண்டிருந்தால். உடலில் குளிரும் உணர்ச்சிஇருப்பதால்போர்த்திக் கொள்ள விரும்புவார். இடை விடாத அசைவினால்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்.

ஏக்கம்:—அதிக மனச் சோர்வு. தான் இறந்து விடு

வோம், தனக்குப் பைத்தியம் பிடித்து விடும் என்று நினைத்தல். தன்னைச் சுற்றிலும் இருள் கவிந்து கொண்டு வருகிறது என்ற பிரமையும் மனக் குழப்பமும். சங்கா குணம் உள்ளவர்களுக்கும் ஏக்கம் பிடித்தவர்களுக்கும் இக்குறிகள் தோன்றும்.

பயம்:—பர பரப்பு, முன் கோபம் ஏற்படுதல், உணர்ச்சி வசப்படும் போது தசைகளில் இழுத்தல். இரவில் படுத்தவுடன் படுக்கை மீது படும் உடல் பகுதி முழுவதும் இழுக்க ஆரம்பித்துத் தூக்கத்தைத் தடை செய்யும். இதனால் வியாதியஸ்தர் நிலை கொள்ளாமலும் பயந்து கொண்டும் இருப்பார். எப்படிப் படுத்தாலும் சௌகரியமாக இருப்பதில்லை. எலிகள் முதலிய பிராணிகளைப் பார்ப்பதாகச் சொல்வார். தான் இறந்து விடுவோமென்ற பயம். மன உறுதி குறைதல். உடல் தசைகளைத் தன் விருப்பப்படி கட்டுப் படுத்த முடியாமை; கை கால்களை நீட்டவோ மடக்கவோ முடியாமல் விரைப்பு. கை கால்களில் உள்ள வேதனையினால் நிலை கொள்ளாமை, கால்களில் நடுக்கம், நடக்க முடியாது. உடலில் நடுக்கம். பிரசவ ஆரம்பத்தில் உடல் நடுக்கம். அச் சமயத்தில் பயம் காரணமாக வலிப்பு உண்டாகுதல். பிரசவித்த பிறகு ஏற்படும் புத்தித் தடுமாற்றத்தில் தனக்குப் பைத்தியம் பிடித்து வருவதாக நினைப்பார்.

நடுவில் தோன்றும் வியாதிக் குறிகள்:—கருப்பை, சினைப் பைகள் பற்றிய கோளாறுகளுடன் சேர்ந்தோ அல்லது அக் கோளாறுகளின் காரணமாகவோ தோன்றும் வியாதிக் குறிகள். பயம், நரம்பு வலி, சங்கா குணம் அல்லது காக்கை வலிப்பினால் ஏற்படும் வலிப்புகள். (மாத விடாய்க் காலத்தில் கூடுதலாகும்) இருதய வியாதி முதலியவை இக் காரணத்தால் உண்டாகும். இருதயத்



துடிப்பு திடீரென்று நின்று விடும்; சிறிது அசைந்தாலும் பட படப்பு உண்டாகும் (டிஜிடாலிஸ்). உச்சந் தலையின் நடுவில் சூடான உணர்ச்சி. கருப்பை, சினைப்பை வியாதிகளின் விளைவாக உடலின் பல்வேறு இடங்களில் மின் விசைத் தாக்குதல் போலவும் கிழிப்பது போலவும் வலிகள்.

கடுமையான வலி:—கண் விழிகளில் கடுமையான குத்து வலிகள், தலையையோ கண்களையோ அசைத்தால் கூடுதலாகும், கீழே படுத்தால் குறையும். தனக்குப் பைத்தியம் பிடித்து விடும் என்ற பயத்தை ஏற்படுத்தும் தலை வலி. தலையின் மேற் பாகம் வெடித்துச் சிதறி விடும் போல் தோன்றும் தலைவலி. அல்லது தலை வலியுடன் விழிகளில் அதிக வலியும் அவ் வலி கழுத்தின் வழியாக முதுகெலும்புக்குத் தாவுவதும். குழந்தை பிறந்த பிறகு கடுமையான, பொறுக்க முடியாத வலி, அரையிடுக்கில் கூடுதலாக இருக்கும். மாத விடாயில் அதிகமான அளவுள்ள போக்கு. கனமான உணர்ச்சியுடன் முதுகில் கடுமையான வலி, இடுப்பு வழியாகத் தொடைகளுக்குப் பரவுதல். வாதரோகத்துடன் உறவு கொண்டு அதிக வலியுடனுள்ள மாதவிடாய். வலி தாங்க முடியாமல் வியாதியஸ்தர் கதறுவார், அழுவார். குடல்களிலும், கீழ் முதுகிலும் கை கால்களிலும் திருகும் வலி.

புண்ணுள்ள உணர்ச்சி:—உடம்பு முழுவதும் அடிபட்டுப் புண் இருப்பது போல் பொதுவான வலி; தொட்டால் கூடுதலாகும். அடிவயிற்றுத் தசைகளில் புண்பட்ட வலி, தலைமுழுவதும் அடிபட்டுப் புண்ணாய் இருக்கும் உணர்ச்சி. உச்சந்தலை வெடித்துச் சிதறி விடுமோ என்ற தோற்றத்துடன் அவ்விடத்தில் அடிபட்ட வலி. கருப்பை, சினைப்பைகளைச் சுற்றிலும் இவ்

வித வலி. மாதவிடாய்ப்போக்கு உள்ளபோது தசை களில் வலி, நரம்பு செல்லும் இடங்களிலும் எலும்பு மூட்டுகளிலும் வலி. நாட்டியம், நடனம், விளையாட்டு. உடல் வேலை ஆகியவைகளில் அதிகம் ஈடுபட்ட காரணத்தினால் தசைகளில் அளவு மீறிய வலி.

மாறுபடும், மாறிவரும் தன்மை:—உடல் கோளாறும் மனக் கோளாறும் மாறி மாறி வருதல். நரம்பு வலி மறைந்தவுடன் பைத்தியம் தோன்றும், குணமும் மாறுபடும். மனக்குறிகள் மறைந்தவுடன் வாத ரோகமும் தோன்றும். மனக்குறிகள் அதிகரித்தால் அல்லது அடிவயிற்றில் அடிபட்ட வலியுடன் வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் வாதரோகம் குறையும். மலச்சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல். கருப்பைப் பக்கங்களில் வலி, ஒரு நாள் இடது பக்கமும் மறுநாள் வலது பக்கமுமாக மாறி மாறி வரும்.

இடது பக்கமே அதிகம் தாக்கப்படுதல்:—முகத்தசைத் துடிப்பில் அனேகமாக இடது பக்கத்தசைகளே தாக்கப் படும். கழுத்துப் பிடிப்பில் இடது பக்கமே அதிகப் பிடிப்பு. இடது மார்பில் கடுமையான குத்துவலிகள். இடதுகை மத மதப்பாய் இருக்கும்; இடது விலாவுடன் சேர்த்துக் கட்டப்பட்டது போல் தோன்றும். மார்பின் இடது பக்கத்தில் முலையின் கீழ் வலி அல்லது வலி இடது பக்கமே கூடுதலாக இருக்கும். இடது கை இடைவிடாமல் தாறுமாறாக ஆடிக்கொண்டிருக்கும்; கைகளிலும் கால்களிலும் வலி. முதலில் இடது காதிலும் பிறகு இரு காதுகளிலும் பாடும் ஓசை. இடது தோள்பட்டை யெலும்பின் கீழ்க்கோணத்தில் வலி (செலிடோனியம்.)

## மற்ற குறிகள்

குதிகாலில் பிடிப்பு—பிரசவ சமயத்தில் கருப்பை



யின் வாய் சுருங்கி விடுதல். இடுப்பின் இருபக்கங்களிலும் வலி மாறி மாறித் தோன்றுதல். தலை பின் பக்கம் வளைக்கப்படும். நேரிடையாகவோ அல்லது நடுவில் தோன்றும் வியாதிக் குறியாகவோ ஆரம்பிக்கும் காது இரைச்சல். காதுகேளாமலும் கடுமையாகவும் இருக்கும்.

மாத விடாய்:—ஒழுங்கில்லாமல், களைப்பை உண்டாக்கும், வலியுடனுள்ள போக்கு. போக்கு உள்ள போது மனக்குறிகள் கூடுதலாகும். போக்கூடன் வலி கூடுதலாகும் (போக்கினால் வலி குறைவுபட்டால்—லாச்சஸிஸ்.) போக்கின் அளவு அதிகமாக ஆக அதற்கேற்றபடி வலி முதலிய உபாதிகளும் கூடுதலாகும்.

வெள்ளை ஒழுக்கு:—கருப்பையில் கனத்துடன்.

கருப்பம்:—பிரசவ வலியைப் போன்ற பொய் வலிகள். அடிவயிற்றின் மேலாகவும் குறுக்கிலும் பாயும் வலிகள்; குமட்டல். மூன்றாவது மாதத்தில் கரு குலைந்து விடுவதுபோன்ற அறிகுறிகள் அல்லது வழக்கமாக மூன்றாவது மாதத்தில் கருக் குலைதல். (ஸபீனா) குறிகள் ஒத்திருந்தால் கரு உற்றபோது ஒன்பதாவது மாதத்திலிருந்து ஆரம்பித்து இடைவிடாமல் இவ் வெளஷதத்தைக் கொடுத்து வந்தால் பிரசவ வலியையும் நேரத்தையும் குறைக்கும் (காலோபில்லம், பல்ஸடில்லா).

கருப்பையிலிருந்து இரத்தப்பெருக்கு:—கருப்பையின் பலக் குறைவினால் தோன்றும்.

கருப்பையின் இடப் பெயர்ச்சி:—அடி வயிற்றில் கனமும் கருப்பை வெளியே வந்துவிடுமோ என்ற உணர்ச்சியும். தசைகள், தசை நார்கள் ஆகியவைகளில் தளர்ச்சியும் மற்ற பொதுக்குறிகளும் ஒத்திருப்பது அவசியம்.

வாத ரோகம் :—முதுகிலும் கழுத்திலும் உள்ள தசைகளில்; அவை குறுகியும் விரைத்தும் இருப்பது போன்ற உணர்ச்சி. பின் கழுத்துத் தசைகள் சுருங்கி விடுவதால் தலை பின் பக்கமாய் வளைக்கப்படும். முதுகின் கீழ்ப் புறத்தில் கடுமையான வலி.

மூளை முள்ளந்தண்டு வேக்காடு :—தலையும் கழுத்தும் பின்பக்கமாய் வளைந்திருக்கும்.

---

## அஸ்குலஸ் ஹிப்பகாஸ்டானம்
## (AESCULUS HIPPOCASTANUM)

**முன்னுரை** :—இது வாதா இனத்தைச் சேர்ந்த ஒரு வகை மரத்தின் கொட்டையிலிருந்து தயாரிக்கப்படுகிறது, இக்கொட்டையைச் சட்டைப்பையில் வைத்திருந்தால் மூலம் வராமல் தடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது, என்ன வென்று வெளிப்படையாய் விளக்கிச் சொல்ல முடியாத நுட்பமான ஏதோ ஒரு சக்திதான் இதற்குக் காரணம் என்று ஊகிக்கலாமல்லவா? ஹானிமன் கண்டு பிடித்த அணு அளவு ஔஷதத்தில் அடங்கிய வீரியத்திலும் இத்தகைய நுட்பமான சக்தியே இருக்கிறது. குப்ரம் மெட், இக்னேஷியா ஆகியவைகளைப்பற்றி எழுதும் போது இவ்விஷயம் மேலும் தெளிவாகும்.

முதுகு, மலப்பை, கல்லீரல் ஆகிய உறுப்புகளுக்கும் இவ்வௌஷதத்துக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. மூலத்துக்கு மிகச் சிறந்த ஔஷதம்.

### பொதுக் குறிகள்

**தகுதி** :—அடிக்கடி மூலம் தோன்றுதல் நீர்க் கோர்வை, தொண்டைக் கோளாறுகள், கல்லீரல் கோளாறுகள் ஆகியவை உள்ளவர்கள். அசுத்த இரத்தக் குழாய்களின் வீக்கம். இடுப்புப் பாகத்தில் அதிகமான இழுக்கும் வலியுடன் பெண்களின் வியாதிகள்.



**மனம்** :—சோர்வு, ஏக்கம், அளவு கடந்த முன்கோபம் (சாமோமில்லா), ஆனால் வியாதியஸ்தரின் விருப்பம்போல் காரியங்களைச் செய்துவிட்டால் முன்கோபம் ஏற்படாது. அஸ்குலஸ் வியாதியஸ்தரின் மனச்சோர்வு மிகவும் அதிகமாகி மனக்குழப்பத்தில் முடியலாமென்று டாக்டர் கெண்ட் குறிப்பிட்டிருக்கிறார். தலைச் சுற்றலுடன் மூளை குழம்பிவிட்ட உணர்ச்சி

**உடல்** :—கைகள், கால்கள், முதுகு ஆகியவைகளில் பக்ஷ வாதம் தாக்கியதுபோல் பலவீனமான அல்லது கனமாய் இருக்கும் உணர்ச்சி, பலவீனமும் அலுப்பும் மயக்கம் வருவது போலவும் இருத்தல். இடுப்பிலும் சப்பைகளிலும் அடிபட்ட வலி. முகம் வெளுத்துப் பார்ப்பவர்களுக்குப் பரிதாபத்தை உண்டாக்கும் தோற்றம் அளிக்கும். அடிக்கடி உடலை நீட்டிச் சோம்பல் முறித்துக் கொட்டாவி விடுதல். கைகளும் கால்களும் வீங்குதல்; குளித்தவுடன் சிவப்பு நிறமடைதல். கனத்த உணர்ச்சி. மற்ற பல உறுப்புகளிலும் அவைகளில் ஏராளமான இரத்தம் சேர்ந்துவிட்டது போல் கனத்த உணர்ச்சி. சளிச்சவ்வுகள் காய்ந்து வீங்கி எரிச்சலும் பச்சைப்புண்ணாய் இருக்கும் உணர்ச்சியும் இருக்கும். பெரிய, கல்போல் கடினமான, காய்ந்த மலம் வெளிப்படும் மலச்சிக்கல்.

**உபாதி கூடுதல்** :—காலைவேளை, கண்விழித்த உடன். நடந்தால் எல்லாக் குறிகளும் மிகவும் கூடுதலாகும். குளிர் காற்றும் குளிர் காலமும் ஒத்துக்கொள்வதில்லை.

**உபாதி கூடுதல்** :—(ஒவ்வொரு குறிக்கும் தனித்

தனியே) மூலம் நின்றாலும் நடந்தாலும் கூடுதலாகும். ஒரு இடத்தில் உட்கார்ந்துவிட்டுப் பிறகு எழுந்திருக்கும் போது மனக்குழப்பமும் தலைச்சுற்றலும் கூடுதலாகும். காற்றை உள்ளே இழுக்கும்போது மூக்கிலும் தொண்டையிலும் உபாதி கூடுதல். குளிர்காலத்தில் மூலம் கூடுதலாகும். கடினமான மலத்தைக் கஷ்டப்பட்டு கழித்த பிறகு முதுகுவலி தோன்றும் அல்லது கூடுதலாகும். மலம் கழித்த பிறகு மலப்பை வெளியே வருதல்.

உபாதி குறைதல்:—குளிர்காற்றிலும் திறந்த இடங்களிலும் வியாதியஸ்தருக்குப் பல சமயங்களில் சௌகரியமாய் இருக்கும் (ஆனால் வலிகள் சூட்டினால்தான் குறையும்).

## விசேஷக் குறிகளின் விளக்கம்

கனத்த அல்லது வீங்கிய உணர்ச்சி:—மூளை, தொண்டை, கல்லீரல், அடிவயிறு, ஆசன வாய் முதலிய இடங்களில் கனமான அல்லது வீங்கிய உணர்ச்சி. தலை வலியில் கடுமையான வலியுடன் தலை வீங்கிவிட்டது போல் தோன்றும். நெற்றியில் மந்தமான வலியுடன் தலையில் கனம்; வலது கண்ணின் மேல் பக்கத்திலும் வலி. மூக்கின் அடிப்பாகத்தில் கனம் (கல்லீரல் கோளாறுகளில்). வலது விலாப் பக்கத்தில் கனத்துடன் மூலம். ஆசனவாய் காய்ந்து மலப்பையில் ஏராளமான சிறுதுரும்புகள் குத்துவது போல் வேதனை (மூலத்தில்). மலம் கழிந்தவுடனே மலப்பையில் கனமும் ஆசனவாயில் கடுமையான வலியும் தோன்றி பல மணிநேரம் விடாமல் இருக்கும். (ஆலோ, இக்னேஷியா, மூரியாடிக் ஆஸிட், ஸல்பர்). கல்லீரலுக்கு அருகில் கனமும் தொட்டால் வலியும். அடிவயிற்றினுள்ளே ஏராளமாய் இரத்தம் சேர்ந்திருக்கும் உணர்ச்சியும் அதனால் அங்கு உள்ளூரத்



துடிப்பும், அசுத்த இரத்தக் குழாய்களின் வீக்கம். கைகளிலும் பாதங்களிலும் கல்போல் கடினமான, விரலால் அமுக்கினால் குழிவிழாத வீக்கம்.

அசுத்த இரத்தக் குழாய்களின் வீக்கம்:—அசுத்த இரத்தக் குழாய்களுக்கு உபயோகமாகும் ஔஷதம். (ஹமாமலிஸ், பல்ஸடில்லா). அசுத்த இரத்தக் குழாய்களில் இரத்தம் தேங்குதல். அவை ஊதா அல்லது நீல நிறமாய் இருக்கும். அக்குழாய்களைச் சுற்றியும் புண் இருந்தால் அதைச் சுற்றியும் சருமத்தின் நிறம் நன்றாக மங்கி இருக்கும், கால்களின் அசுத்த இரத்தக் குழாய் வீக்கத்தில் வீக்கத்தைச் சுற்றி ஊதா நிறம் தென்பட்டால் அஸ்குலஸ் அதைக் குணம்செய்ய வல்லமை உள்ளது. தொண்டையில் உள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் மிகவும் வீங்கி வெடித்து விடுமோ என்று தோன்றும்.

தூங்கி வழிதல்:—இவ் ஔஷதம் தேவைப்படும் வியாதிகளில் வேக்காடு இருந்தால் அவ்வேக்காடு மளமள வென்று விருத்தி ஆகாமல் மிக மெதுவாகவே அதிகமாவது ஒரு விசேஷக்குறி. உடலின் எல்லா வேலைகளுமே மெதுவாக நடக்கும், இருதயம் மெதுவாகத் துடிக்கும். சீரணம் மெதுவாக ஆகும். குடல்கள் சரிவர வேலை செய்வதில்லை, அதனால் மலச்சிக்கல் தோன்றும். எளிதில் முன்கோபம் தோன்றி அக்கோபம் மெதுவாகக் குறையும் என்பதையும் இவைகளோடு சேர்த்துக் கொள்ளலாம்.

நடுவில் தோன்றும் வியாதிக் குறிகள்:—மலப்பை, ஆசனவாய் பற்றிய கோளாறுகளுடன் தோன்றும் குறிகள். மூலவியாதியின் காரணமாக தலைவலி, கழுத்திலும் பின் தலையிலும் வலி, முதுகுவலி, இருதயத்தின் வேலை பற்றிய கோளாறுகள் ஆகியவை தோன்றும்.

இடுப்பு, முதுகு, கழுத்து, தலை, மார்பு, இருதயம், அடிவயிறு ஆகிய எல்லா பாகங்களும் மலப்பையுடனும் அங்குள்ள இரத்தக் குழாய்களுடனும் நெருங்கிய உறவுள்ளவை போல் காணப்படும், குரல்வளை வேக்காடு, கல்லீரல் கோளாறுகளுடன் ஏற்படும் இருமல்.

முதுகுவலி :—மந்தமான முதுகுவலி இடைவிடாமல் இருக்கும், குறிப்பாக இடுப்பிலும் சப்பைகளிலும் ; நடந்தாலும் குனிந்தாலும் மிகவும் கூடுதலாகும். (இக்குறி மூலம், வெள்ளை ஒழுங்கு, கருப்பையின் இடமாற்றம் ஆகியவைகளில் காணப்படலாம்). கருப்ப காலத்திலும் கருப்பை இடம்மாறிய போதும் வெள்ளை ஒழுக்கு உள்ள போதும் முதுகு விட்டுப் போகுதல். இடுப்பிலும் சப்பைகளிலும் அடிபட்டவலி, மூலத்துடன் அல்லது நாட்பட்ட வயிற்றுப்போக்குடன் இவ்விதமான முதுகு வலி.

பறக்கும் வலிகள் :—உடல் முழுவதும் சுரீர் என்று குத்துவது போலவும் கிழிப்பது போலவும் வலி (பல்ஸடில்லா, காலீகார்ப்) சூட்டினால் குறையும். பொட்டுக்களின் வழியே அடிக்கடி பாய்ந்து செல்லும் வலிகள்.

எரிச்சல், வறட்சி, பச்சைப்புண் :—வாய், தொண்டை மலப்பை ஆகியவைகளிலுள்ள சளிச் சவ்வுகள் வீங்கி எரிச்சலும் காய்ந்தும் பச்சைப்புண் உள்ளது போலவும் உள்ள உணர்ச்சியும் ஏற்படும். நீர்க்கோர்வையில் போக்கு தண்ணீர்போல் நீர்த்தும் எரிச்சலுடனும் வெளியாகும், குளிர்ந்த காற்றை சுவாசித்தால் மூக்கினுள் பச்சைப்புண் இருப்பதுபோல் வேதனை. சிறுசிறு முளைகளுள்ள தொண்டை வேக்காட்டில் கடுமையான எரிச்சல், வறட்சி, புண்ணுள்ள உணர்ச்சி, விரைப்பு ஆகியவை காணப்படும்; இத்துடன் கல்லீரலில் அதிக இரத்தம் சேர்ந்திருக்கலாம். மலப்பை புண்



ணாய், வீங்கியும் எரிச்சலுடனும் அரிப்புடனும் இருக்கும் (ஸல்பர்). முதுகின் மேலும் கீழும் ஏறி இறங்கும் குளிருடன் ஆசனவாயில் எரிச்சல்.

## மற்ற குறிகள்.

தண்ணீரில் கழுவியவுடன் முகம் மிகப் பெரியதாய் வீங்கும்—அடிவயிற்றில் துடிப்பு—கால்களில் அதிக பலவீனம். அதனால் நடக்க மிகவும் சிரமம். குதி கால்களைக் கீழே வைத்து நடக்க முடியாமல் வலி—மேல் வயிற்றில் துடிப்புடன் கருப்பையில் புண்ணுள்ள வலி. யோனியின் மேற்பாகத்தில் உள்ளூர துடிப்பு இடைவிடாமல் இருக்கும்.—கண்கள் சூடாகவும் கனமாகவும் தோன்றும்; விழிகளில் புண்ணுள்ளது போல் வலி; கண்களிலுள்ள இரத்தக் குழாய்கள் பருத்து கண்ணீர் பெருகுதல்.

மூலங்கள் :—பல வருஷங்களாய் இருந்து வரும் மூலங்கள் (இரத்தப் பெருக்கு மிக அபூர்வமாய் இருக்கும்). மலப்பையை அடைத்து விடுவதுபோல் தோன்றும் பல பெரிய மூல முளைகள்; இரத்தப் பெருக்கு சிறிதளவு இருக்கலாம், கொஞ்சங் கூட இல்லாமலும் இருக்கலாம்; அதிக வேதனையும் மலச் சிக்கலும். இரத்தப் பெருக்கு எடுத்த பிறகு வேதனை குறையும். மலம் கழித்து ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் ஆனவுடன் ஆசனவாயில் கடுமையான வலி உண்டாகி, வெகு நேரம் விடாமல் இருக்கும். மாதவிடாய் முடியும் காலத்தில் மூலம் தோன்றுதல் அல்லது மிகக் கடுமையாகுதல்.

வாதரோகம் :—முன்கை, வலது தோள் பட்டை, வலது மார்பு ஆகிய இடங்களில் தோன்றுதல். வாதரோகக் கோளாறுகளுடன் அசுத்த இரத்தக் குழாய்களில் வீக்கமும் இருக்கும்.

குறிப்புகள்:—காலின்ஸோனியாவினால் ஓரளவு குணம் ஏற்பட்ட கேசுகளை அஸ்குலஸ் முழுவதும் குணம் செய்கிறது. நக்ஸ் வாமிகா அல்லது ஸல்பர் கொடுத்துச் சிறிதளவு குணமே தோன்றி இருந்தால் இது தேவைப்படும்.

## எதுஸா ஸைனபியம்
## (AETHUSA CYNAPIUM)

முன்னுரை:—இவ்வௌஷதத்தைத் தயாரிக்க உதவும் செடி பார்ஸ்லி (Parsely) என்று வழங்கப் படும் மற்றொரு வகைச் செடியைப் போல் பல விதங்களில் தோன்றுகிறது. கூர்மையான அறிவுள்ளவர்களாலேயே உண்மையான பார்ஸ்லிச் செடி எது, போலிப் பார்ஸ்லிச் செடி எது என்று கண்டு பிடிக்க முடியும். ஆகவே இப்போலிப் பார்ஸ்லிச் செடிக்கு "மூடர்களின் பார்ஸ்லி" என்று பொருள் வரும் படியாக ஆங்கிலத்தில் பெயரிட்டிருக்கின்றனர். காக்கை உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்ததும் என்ற பழமொழியைப் போல் இவ்வௌஷதம் அதன் பெயருக்கு ஏற்றபடி புத்திக் கூர்மை இல்லாத மூடர்களுக்கு உபயோகமாகும் என்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. ஔஷதப் பரீக்ஷையில் "விஷயங்களைப் புரிந்து கொள்ளும் சக்தி போய்விடுதல்", "யோசனை செய்யச் சக்தியில்லாமை" ஆகியவைகளுடன் நிற்காமல் மூடத்தனமும் காணப்பட்டன.

### பொதுக் குறிகள்.

தகுதி:—குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலம். கிழப் பருவத்தில் விஷ பேதியை ஒத்த கோளாறுகள் தோன்றுதல். குழந்தைகளுக்குத் தோன்றும் கடுமையான வயிற்றுப் போக்கு. கோடைக் காலத்தில் சிறு குழந்தைகளுக்கு அளவு கடந்த உடல் சோர்வுடன் திடீரென்றும் கடுமையாகவும் உண்டாகும் கோளாறுகள்.



பேசவும் முடியாமல் போகும். பால் ஒத்துக் கொள்ளாத குழந்தைகள், அழும்போதெல்லாம் தாய்ப் பால் உண்ணும் அல்லது அடிக்கடி உணவு ஊட்டப் படும் குழந்தைகள்.

மனம்:—யோசிக்கவோ, புத்தியை ஒரே இடத்தில் செலுத்தவோ முடியாமை. மூடர்களாயுள்ள குழந்தைகள்; யோசனை செய்ய முடியாது; மனக்குழப்பம். சில கேசுகளில் மூடத்தனத்துடன் மித மீறிய கோப குணம் இருக்கும். முன் கோபம், குறிப்பாக பிற்பகலிலும் திறந்த இடங்களிலும். வியாதி அதிகரிக்க அதிகரிக்க வியாதியஸ்தருக்கு அழுகைக் குணம் அதிகமாகும். அளவு மீறிய மன வேதனையுடன் நிலை கொள்ளாமல் இருத்தல்.

முதல் குறியைப் பற்றி டாக்டர் க்ளார்க் கூறுவது: "இக்குறியை ஆதாரமாய்க் கொண்டு பரீக்ஷைக்குத் தயார் செய்து வந்த கல்லூரி இடை வகுப்பு மாணவன் ஒருவனுக்கு இவ்வௌஷதத்தைக் கொடுத்தேன். பூரண வெற்றி ஏற்பட்டது".

உடல்:—அதிகமான பொதுவான பலவீனம், அனேகமாய்த் திடீரென்று தோன்றும், குறிப்பாகக் குழந்தைகளுக்கே. வாந்தி எடுத்தல், மலம் வெளிப்படுதல், வலிப்பு தோன்றுதல் ஆகியவைகளுக்குப் பிறகு தூக்கக் கலக்கத்துடன் பலவீனமும் களைப்பும். குழந்தைகளால் நிற்க முடியாது; தலையை நிமிர்த்தி வைத்துக் கொள்ள முடியாது. குழந்தையால் நிற்க முடியாது; அதன் உடல் கனத்தைத் தாங்கும் சக்தி கால்களில் இல்லை என்னும் இக்குறிகள் குறிப்பிடத் தக்க வியாதி எதுவும் இல்லாத போதும் காணப் படுகின்றன வென்று டாக்டர் குரன்ஸே கூறுகிறார். நடக்கும் போது தொடைகளில் தோல்

உறிந்து புண்ணுகும். கோளாறுகள் வியாதியஸ்தரை வாய் திறந்து பேச முடியாமல் செய்து விடும். சிறிதளவு உடல் வேலை செய்தாலும் வியர்வை தோன்றும். குடல்களின் சக்தி முழுவதும் அழிந்து விட்ட உணர்ச்சியுடன் பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல். கொஞ்சங் கூட தாகம் இருப்பதில்லை (அபிஸ், பல்ஸடில்லா). நடுத் தூக்கத்தில் உடலைக் கடுமையாகத் தூக்கிப் போடுதல். வியாதியஸ்தர் கை கால்களை நீட்டி விட்டு நினைவு இல்லாமல் படுத்திருப்பார், இந் நிலைமையைக் குழந்தைகளிடம் நாம் பார்க்கலாம். அதிகக் கவலையும் வலியும் இருப்பதை வியாதியஸ்தரின் முகம் சுருங்கி இருப்பதிலிருந்து அறிந்துகொள்ளலாம். உடலின் மேல்புறம் சில்லென்று தளிர்ந்து கச கச வென்ற வியர்வையுடன் இருக்கும் (வாந்தி எடுத்த பிறகு காணப்படுவதைப்போல்). உடம்பின் பல இடங்களில் கறுப்பாகவும் நீலமாகவும் திட்டுகள் அல்லது கரு இரத்தம் குழம்பியது போல் இருத்தல். உடல் முழுவதும் கரு நீல நிறமாய் மாறியிருக்கலாம். உடல் பலம் மிகவும் குறைந்து விட்டது என்பதையே இக்குறி காட்டுகிறது.

உபாதி கூடுதல் :—விடியற்காலை 3 மணியிலிருந்து 4 மணி வரை. மாலை நேரங்களில். (காலையில் தூங்கியெழுந்த வுடன்). உணவு உட்கொண்டு சிறிது நேரம் கழித்து. கோடைக்காலம்.

உபாதி கூடுதல் :(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) சூட்டினுல் சரும வியாதிகளில் அதிக அரிப்பு. வாந்தி செய்தபிறகு பலவீனமும் சோர்வும் கூடுதலாகும். குழந்தை மிகவும் களைத்து உடனே தூங்க ஆரம்பித்தல். மலம் கழித்த பிறகு வலிப்பு, களைப்பு, தூக்கக் கலக்கம் ஆகியவை கூடுதலாகும்.



உபாதி குறைவு :—திறந்த இடங்களில் (மனக் குறிகள் நீங்கலாக மற்றவை). வீட்டிற்குள் நுழைந்தவுடன் தலையும் முகமும் வீங்கியது போன்ற உணர்ச்சி. அபான வாயு வெளிப்பட்டால் தலைக் குறிகள் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமை :—வியாதிகள் திடீரென்று கடுமையான வேகத்துடனும் தோன்றுவது இவ்வௌஷதத்தின் குறிப்பிடத்தக்க குறிகளில் ஒன்று. அளவு கடந்த சோர்வுடனும் வாய் திறந்து பேச முடியாமலும் திடீரென்றும் கடுமையான வேகத்துடனும் வியாதிகள் ஆரம்பமாகும். குழந்தை திடீரென்றும் கடுமையாகவும் பாலை வாந்தி செய்தல். விழுங்கிய மறு கணமே மிகுந்த வேகத்துடன் பால் வாந்தி செய்யப்படும். குழந்தைகள், கருவுற்ற பெண்கள், பெரியவர்கள் எல்லோருக்கும் இவ்வகை வாந்தி உண்டாகலாம். கடுமையான வலிகள், கடுமையான வலிப்புகள், கடுமையான புத்தித் தடுமாற்றம், கடுமையான இருதயத் துடிப்பு. நடுத் தூக்கத்தில் கடுமையாக தூக்கிப் போடப் படுதல். மலம் கழிக்கும் போதும் கழித்த பிறகும் கடுமையான கடு கடுப்பு. புத்தித்தடுமாற்றத்தில் (பெரியவர்களுக்கு) நாய்களையும் பூனைகளையும் காண்பதாகச் சொல்வார், படுக்கையை விட்டுக் குதித்து ஓடவும் ஜன்னல் வழியே குதிக்கவும் முயற்சிப்பார். இருமினுல் தலையில் கடுமையான வலி.

பால் ஒத்துக் கொள்ளாமை :—குடித்த மறு கணமே பால் திடீரென்றும் கடுமையான வேகத்துடனும் வாந்தி செய்யப் படும்; விழுங்கிக் கொண்டு இருக்கும் போதே பால் எதிர் கழிக்கப் படலாம் அல்லது தயிராகவும் பல சமயங்களில் குழந்தைகளின் தொண்டையை அடைக்

கும் அளவு பெரிய தயிர்க் கட்டிகளாகவும் வாந்தியாகும். வெளிவரும் பொருள் திரிந்த பால் அல்லது பால்போல் வெளுத்த நுரை, சில சமயம் எண்ணெய் போலவும் பச்சை நிறமாயும் இருக்கும்.

வலிப்புகள் :—காக்கை வலிப்பு போன்ற வலிப்புகளில் கட்டை விரல்கள் மடங்கியும் முகம் சிவந்தும் இருத்தல்; கண்கள் கீழ்ப்பக்கமாய்ச் செருகப்படும்; உற்றுப் பார்ப்பது போல் தோன்றும்; கருமணிகளில் அசைவு இருக்காது. வாயில் நுரை; வாய் திறக்க முடியாது; நாடி சிறியதாயும் கடினமாயும் வேகமாகவும் துடிக்கும். கை கால்களில் சில்லிப்புடன் வலிப்புகள்.

கிழிக்கும் வலிகள் :—பெண்களின் பிறப்பு உறுப்புகளில் கிழிக்கும் வலிகள். சூடு, சிவ சிவப்பு, கிழிக்கும் வலிகள் ஆகியவைகளுடன் ஸ்தனங்களில் வீக்கம். அக்குளில் உள்ள சுரப்பிகளின் வீக்கத்தில், கிழிப்பது போன்ற வலிகள் இருந்தால்.

சுரப்பிகளில் வீக்கம் :—ஸ்தனங்களில் வீக்கம் (மேலே குறிக்கப் பட்டது). கழுத்தைச் சுற்றிலும் உள்ள சுரப்பிகள் வீங்கி பவழ மாலை அணிந்திருப்பது போல் தோன்றுதல். க்ஷய சம்பந்த முள்ள கண் வேக்காடு. இமைகளில் பல நாட்களாய் இருந்து வரும் வேக்காடு. இரவில் இமைகள் ஒட்டிக் கொள்ளுதல்.

### மற்ற குறிகள்

முகம் வெளுத்து, உப்பி, திட்டுத் திட்டாகச் சிவந்திருக்கும். மேலு தட்டில் முத்துப் போன்ற வெண்மை நிற முள்ள ஓர் இடமும் அவ்விடத்துக்கு எல்லை கட்டியது போல் மூக்கின் இருபக்கங்களிலிருந்து கடைவாய்கள் வரை காணப் படும் கோடுகளும். பிணக்களை: உதடுகளில் நீலம் கலந்த வெண்மை. சாப்பிட்டு ஒரு மணி



ஆனவுடன் உணவு வாந்தி எடுத்தல் (க்ரீஸோட்). வயிற்றிலிருந்து தொண்டை வரை கிழிக்கும் வலிகள். அடி வயிறு பருத்துக் கடினமாகித் தொட்டால் வலியெடுத்தல். வாந்தி செய்தவுடன் பசி—வயிறு தலை கீழாய்த் திரும்பி விட்ட உணர்ச்சி.

சரும வியாதிகள் :—மூட்டுகளைச் சுற்றிலும், குறிப்பாக முழங்கால், முழங்கை, குதிகால் ஆகிய மூட்டுகளில். மூக்கின் நுனியில் கடி போன்ற வியாதி. சூட்டினால் அரிப்பு உண்டாகும்.

வெளிச்சத்தில் கண் கூச்சம் :—நாட்பட்ட வகை.

சுரம் :—அதிகச் சூடு இருந்தாலும் தாகம் கொஞ்சங் கூட இருக்காது. வியர்வை ஏற்பட்டுக் கொண்டு இருக்கும் போது போர்வையை நீக்க முடியாது.

---

## அகேரிகஸ் மஸ்கேரியஸ்
## (AGARICUS MUSCARIUS)

முன்னுரை :—விஷமுள்ள காளான் வகையில் இது ஒன்று. இழுத்தல், நடுங்குதல், சிவசிவப்பு அரிப்பு, குத்தும் உணர்ச்சி, சில்லிப்பு, விரைப்பு, கடைசியாக கடுமையான குத்து வலிகள் ஆகியவை இவ்வௌஷதத்தின் விசேஷக் குறிகள். அக்குறிகளை அடிப்படையாய்க் கொண்டே ஔஷதத்தின் பெரும்பாலான குறிகள் தோன்றுகின்றன. நினைவில் வைக்க வேண்டிய மிக முக்கியமான மற்ற விஷயங்களாவன. முதுகில் வலியும் விரைப்பும் (முதுகெலும்பில் வேதனை). நரம்புக் கோளாறுகள். பக்ஷவாதக் கோளாறுகள். கடுமையான இழுக்கும் வலிகள். புணர்ச்சிக்குப் பிறகு உபாதிகள் கூடுதலாகுதல். திறந்த இடங்களில் நடந்தால் வியாதிகள் கூடுதலாகும். வெய்யில் தாக்கியதால் தலை சுற்றல், பார்வைக் கோளாறு.

## பொதுக் குறிகள்.

தகுதி :—அடர்த்தியான மயிர் வளர்ச்சி இல்லாதவர்கள்; சருமமும் தசைகளும் தளர்ந்திருக்கும். உடம்பில் சில்லிப்பு, குளிர் ஒத்துக் கொள்ளாமை. உடல் மெலிந்து வெளுத்து எப்பொழுதும் குளிர்ந்த உணர்ச்சியுடன் சுவாச கோச க்ஷயத்தில் முடியுமோ என்று நினைக்கும்படியான உடலுள்ளவர்கள். க்ஷயம் தோன்றக் கூடிய உடல் வாகு. மெலிந்த உடலும் பயந்த சுபாவமும் நிலை கொள்ளாமல் இருப்பதும் உள்ள பெண்கள் அல்லது பயந்த சுபாவமுள்ள ஆண்களுக்கு உடல் முழுவதும் குத்தும், ஊரும் உணர்ச்சிகள் (முதுகெலும்பு வேதனை). அளவிலும் வேகத்திலும் குறைந்து போன இரத்த ஓட்டமுள்ள கிழவர்கள். குடிகாரர்கள். குறிப்பாக அவர்களுக்கு உண்டாகும் தலை வலி.

மனம் :—மன ஏக்கமும் பிடிவாத குணமும் உள்ள குழந்தைகள். எவ்விதமான வேலை செய்யவும் பிரியம் இருப்பதில்லை, குறிப்பாக படிப்பது போன்ற மன வேலைகளில் சிறிதளவும் ஆவல் கிடையாது. வாய் ஓயாமல் பேசிக் கொண்டே இருத்தல். பேசுவார், பாடுவார், ஆனால் கேட்ட கேள்விக்குப் பதில் மட்டும் சொல்ல மாட்டார்.

உடல் :—தலைச் சுற்றல் (குறிப்பிடத் தக்கதாகவும் இடைவிடாமலும்). அடிக்கடி பின்பக்கமாகக் கீழே விழுதல். காலையில், திறந்த வெளியில் அல்லது நல்ல சூரிய வெளிச்சத்தில் தலைச் சுற்றல். வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசுதல். பூண்டு போல் நாறும் அபான வாயு ஏராளமாய் வெளியாகும். பகல் நேரத்தில் உணவு உட்கொண்டவுடன் தூக்கக் கலக்கமாய் இருத்தல். மிக எளிதிலே உடம்பில் குளிர் அல்லது வியர்வை தோன்றுதல். வலிகள் அல்லது வலிப்புகள் ஏற்படுவதற்கு முன் கொட்டாவி விடுதல். இரவில் வியர்வை. உட்கார்ந்திருக்கும் போது தசைகளில் வலியுடன் இழுத்தல். உடல் முழுவதும் புண்ணாய் இருக்கும் உணர்ச்சி. எவ்வளவு மெதுவாக அழுத்தினாலும் நீண்ட நேரத்துக்கு வலி இருத்தல். கை கால்களில் அதிக பலவீனமும் கனமும்.



உபாதி கூடுதல் :—குளிர்ந்த காற்று கொஞ்சங்கூட ஒத்துக் கொள்வதில்லை. எல்லாக் குறிகளும், குறிப்பாக தலைவலி, குளிர்காலத்திலே கூடுதலாகும். திறந்த இடங்களில் நடக்கும்போது பல குறிகள் கூடுதலாகும். வெய்யிலும் ஒத்துக்கொள்ளாது. எல்லாக் குறிகளும், குறிப்பாக முள்ளந்தண்டு பற்றிய குறிகள், புணர்ச்சி செய்த பிறகு கூடுதலாகும். புணர்ச்சி செய்த பிறகு பயந்த சுபாவமுள்ள இளம் பெண்களுக்கு ஏற்படும் (மயக்கம் போன்ற) கோளாறுகள்; பசி குறைதல்; பல நாட்களுக்கு உடல் அலுப்பு; ஆண்களுக்கு இரவில் வியர்வை. மற்ற பொதுக் குறிகள் எல்லாம் மாதவிடாய் உள்ளபோது கூடுதலாகும். அதற்கு முன்னே அல்லது பிறகோ ஆவதில்லை. ஊக்கம்தரும் பானங்களை உட்கொண்டால் (முதுகு வலியில் உள்ளதுபோல்) உபாதி கூடுதலாகும். அழுத்துவதைத் தாங்கமுடியாது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—திறந்த சன்னல் வழியாக வெளியே பார்த்தால் பற்களிலும் கை கால்களிலும் வலி தோன்றும். அளவு மீறிய புணர்ச்சியினால் காலையில் களைத்துத் தூக்கக் கலக்கமாய் இருத்தல். இந்திரியம் வெளியே வரும் சமயத்தில் மூத்திரத் துவாரத்தில் அல்லது சுக்கிலச் சுரப்பிகளில் எரிச்சல், மாதவிடாய்க் காலத்தில் தலைவலி, பல்வலி, முதலியவை.

**உபாதி குறைதல்**:—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே:—தூங்கும்போது தசைகளில் இழுப்பு இருப்ப தில்லை.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**இழுத்தல்**: நடுங்குதல்.—தசைகளில், குறிப்பாகக் கண்கள், கண் இமைகள், முகம் ஆகியவைகளிலுள்ள தசைகளில் இழுப்பும் நடுக்கமும்; கண்விழிகள் ஊச லாடும்; பார்வையை ஒரு இடத்தில் வைக்க முடியாது. கால்களில் நடுக்கமும் இழுப்பும். தாடைகள் ஒன்றோ டொன்று அடித்துக்கொள்ளும். தெளிவு இல்லாத, நடுக்கமுள்ள பேச்சு.

**சிவ சிவப்பு· அரிப்பு: எரிச்சல்**: இன்னும் லேசாகக் குத்தும், ஊரும் உணர்ச்சிகள்:—காதுகள், கண்களின் ஓரங்கள், முகம், சருமம் ஆகிய இடங்களில் (பனியினால் ஏற்படுவதைப் போல) சிவசிவப்பும் எரிச்சலும் அரிப் பும். இவைகளின் ஓரங்கள் சிவந்து, எரிச்சலுடனும் அரிப்புடனும் ஒட்டிக்கொள்ளும். உடம்பு முழுவதும் அரிப்பும் எரிச்சலும் உண்டாகி மிகுந்த கஷ்டத்தைத் தரும். இக்குறிகளுள்ள பனியினால் ஏற்படும் சருமக் கோளாறுகளுக்கு மிகவும் உபயோகமுள்ளது. கால் கட்டைவிரலெலும்பு மூட்டிலுள்ள சுரப்பி வீங்கி வேக்காடு தோன்றினால் அதற்கு இவ்வௌஷதம் ஓர் சஞ்சீவி என்றே சொல்லப்படுகிறது. (முன் கூறிய எல்லாக் குறிகளும் இவ்வியாதியில் காணப்படுகின்றன), உடம்பு முழுவதும் அரிப்பு. சொறிந்தால் வேறு இடத் துக்குத் தாவும், நாட்பட்ட மேக வெட்டையில் மூத்தி ரத் துவாரத்தில் அரிப்புடனும் லேசான குத்து வலி யுடனும் வெளிப்படும் மெல்லிய போக்கு. பெண்ணின் பிறப்பு உறுப்புகளில் அரிப்பும் வேதனையும், அதனால்



இன்னொருவரைத் தழுவி அணைந்துகொள்ள ஆவல் ஏற்படுவதும். பிறப்பு உறுப்புகளின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் அதிக அரிப்புடன் வெள்ளை ஒழுக்கு. முதுகெலும்பைப் பற்றிய கோளாறுகளில் அவ்விடத்தில் எரிச்சலும் குத்துவலிகளும் தொட்டால் வலிகள் அதிகமாவதும் காணப்படும் (தெரிடியன்). முதுகின் மேற்பாகங்களில் வலி இன்னும் அதிகமாகும். ஆசனவாயில் புழு இருப்பதுபோல் லேசான குத்து வலியும் அரிப்பும். மூலக்காம்புகளில் அரிப்பு, எரிச்சல், சிவசிவப்பு· மூக்கு சிவந்திருத்தல். அல்லது பழய குடிகாரர்களுக்கு மூக்கின் நுனி சிவந்திருத்தல் (லேடம், லாச்சஸிஸ்).

**மந்த குணம்**:—குழந்தைகள் தாமதமாக நடக்கவும் பேசவும் ஆரம்பித்தல். மூளை சரிவர வளரவில்லைபோல் தோன்றுதல். அறிவு கொஞ்சங்கொஞ்சமாக வளரு தல். விஷயங்களைச் சீக்கிரம் புரிந்துகொள்ள முடி யாது. குழந்தைகளுக்கு ஞாபக சக்தி இல்லாமை, தவறுகள் செய்தல், படிப்பு தாமதமாகவே வரும். மந்த குணம் அதிகமாகி மூடத்தனத்தில் முடியும். மூடத்தனமான பேச்சு, சிரிப்பு. காதுகூட மந்தமாகும்.

**பாரிசவாத நிலைமைகள்**:—ஒழுங்கு இல்லாமலும், கோணல் மாணலாகவும், எந்த இடத்தில் வைக்கிறோர் என்ற நிச்சயம் இல்லாமலும் தேவைக்கு அதிகமாகவும் கைகால்களை அசைத்தல். அதிக தூரம்போய் விடுவார். தடுமாறுவார் அல்லது காலை அதிக உயரம் தூக்குவார், கையில் உள்ள பொருள்களை நழுவவிடுவார் ஆகியவை. ஒழுங்காக நடக்கமுடியாமல் இடறி விழுவார். ஏதாயி னும் ஒரு பொருளை எடுக்கவேண்டுமென்று கையைக் கொண்டுபோனால் அது கையில் அகப்படாது. தன்

கைகால்கள் தனக்குச் சொந்தமில்லை என்று நினைப்பார். கருப்பம் ஏற்பட்ட உடனேயே கால்களில் பக்ஷவாதம் வந்துவிட்டது போன்ற பலவீனம்.

பார்வை பற்றிய கோளாறுகளும் பொய்த்தோற்றங்களும் இதனுடன் சேர்க்கப்படலாம். கண்களின் முன்னே புகை இருப்பதுபோல் மங்கலாய்த் தெரிதல், கண் தசைகளில் பலவீனம். அச்சு எழுத்துக்கள் அசைவதுபோல் தோன்றி அதனால் படிக்கக் கஷ்டமேற்படும். எல்லாப் பொருள்களும் இரண்டிரண்டாகத் தோன்றுதல். கண்களின் முன்னே தூசிகள் தென்படுதல்.

**சில்லிப்பு:**—குளிர்ச்சியான ஊசிகளால் தொடுவது அல்லது குத்துவது போன்ற வலி. வியாதியஸ்தர் உடம்பு சில்லென்றும் நீலமாகவும் இருக்கும். தலையில் குளிரும் உணர்ச்சி. சப்பைகளில் சில்லிப்பு. சருமவியாதி எதுவுமே இல்லாமல் அரிப்பு, அதனால் தோல் உறிந்து. பிறகு அவ்விடங்களில் பனிக்கட்டி இருப்பதுபோல் சில்லிப்பு தோன்றும். மூத்திரம் வெளியாகும்போதே குளிர்ந்து இருக்கும். மாணி (ஆண்களின் புணர்ச்சிக் கருவி) சில்லென்று சுருங்கி இருக்கும். விரைகளில் இழுக்கும் உணர்ச்சி.

**விரைப்பு:**—கீல் வாதத்தில் விரல்கள் விரைத்து இருத்தல். முதுகெலும்பு முழுவதும் விரைத்து குனிய ஆரம்பித்தால் ஒடிந்து விடுமென்று தோன்றுதல், முகத் தசைகளில் விறைப்பான உணர்ச்சி.

**வலிப்பு:**—வாயில் நுரை, உடம்பு வில் போல் முதுகுப்புறத்தில் வளைக்கப்படுதல், முகத்திலும் கண்களிலும் உள்ள தசைகளிலும் துடிப்பு முதலிய குறிகளுடன் காக்கைவலிப்பை ஒத்த வலிப்பு.

**எதிர்கோணத் தாக்குதல்:**—குறிகள் ஒரேசமயத்தில்



இருபக்கங்களிலும் தோன்றுமென்றாலும் ஒரு பக்கத்தில் உடம்பின் மேற்பகுதியிலும் மறுபக்கத்தில் கீழ்ப்பகுதியிலும் காணப்படும். உதாரணமாக வலது கையில் வலி இருந்தால் இடது காலிலும் வலி இருக்கும். இதேபோல வலி இடது கையில் தோன்றினால் வலது காலிலும் வலி இருக்கும்,

**வியாதியின் உருவ மாற்றம், இடமாற்றம்:**—பெண்களுக்கு ஸ்தனங்களில் உள்ள பால் கட்டு பலவந்தமாக உள்ளே அமுக்கப்பட்டால் மூளை, அடிவயிறு, முதுகெலும்பு ஆகியவைகளைப்பற்றிய கோளாறுகள் தோன்றும்.

**விரோதக் குறிகள் சேர்ந்திருத்தல்:**—குதூகலமாய் இருத்தல் அல்லது மந்தமாய் இருத்தல். அடக்கமும் பணிவும் உள்ளவர் பிடிவாத குணமுள்ளவராய் மாறுதல். அசந்தர்ப்பமான சமயத்தில் பாடுவார், சீட்டி அடிப்பார். அதன்பிறகு மிக அலட்சியமாகவும்கேட்ட கேள்விக்குப்பதில் சொல்லாமலும் இருப்பார். குளிரும் ஒத்துக்கொள்ளாது; வெய்யிலும் ஒத்துக்கொள்ளாது. வாய் ஓயாமல் சளசள என்று பேசுவதும் பேசுவதற்கு வெறுப்பும் காணப்படும். சில சமயங்களில் மூடத்தனமாகவும் கேவலமாகவும் நடந்துகொள்வார். மற்ற சமயங்களில், முக்கியமாக இரவுகளில் மிகத் தெளிவாக, இருப்பார். தயக்கம் இல்லாமல் கவிபாடுவார். தலையில் கொப்புளங்கள் எதுவும் இல்லாமல் அரிப்பு; கொப்புளங்கள் உள்ளபோதும் அரிக்கும். காது மந்தமாகும், மிகச் சிறிய ஓசையையும் கேட்க முடியும். காலையில் மூடத்தனமாகவும் சோர்ந்தும் இருத்தல். மாலையில் குதூகலமாகவும் கவிபாடும் சக்தியுடனும் ஜோஸியம் சொல்வதில் பிரியமுள்ளவராகவும் மாறுதல். அபான

வாயு சூடாய் இருத்தல். இந்திரியம் வெளியே வரும் போது சூடாய் இருத்தல்; மூத்திரம் குளிர்ச்சியாய் இருக்கும்.

## மற்ற குறிகள்

அளவு கடந்த பசி—மெல்லாமலேயே உணவை மடக்கு மடக்கென்று விழுங்குதல். தலையை உருட்டுதல் (சுரத்திலும் மூளைக் கோளாறுகளிலும்). வியர்வை எண்ணெய்போல் ஆனால் நாற்றம் இல்லாமல் இருக்கும். கல்லீரலிலும் மண்ணீரலிலும் (ஸீயநேதஸ்) குத்தும் வலிகள். இடது பக்கத்தில் கீழே உள்ள விலாவெலும்புகளில் குத்து வலி. ஓடுகிறவர்களுக்கு ஏற்படும் குத்து வலிகளைக் குணம் செய்திருக்கிறது.—காபி, டீ குடிப்பவர்களுக்கும் புகையிலையால் தயாரிக்கப்பட்ட சுருட்டு முதலியவைகளை உபயோகிப்பவர்களுக்கும் ஏற்படும் இருதயப்படபடப்பு, மலம் கழித்தபிறகும் மலப்பை வெடித்துவிடும் உணர்ச்சி (மெர்கூறியஸ், ஸல்பர்). உடம்பை எப்படி அசைத்தாலும் திருப்பினாலும் முதுகில் வலி தோன்றும்—வயிற்றிலும் அடிவயிற்றிலும் வாயு சேர்ந்து உப்பிசம்.

**வலியுள்ள மாதவிடாய்:**—கடுமையான, இழுக்கும் குணமுள்ள வலிகள், விட்டுவிட்டு வருதல், அத்துடன் பிறப்பு உறுப்புகளின் வெளிப்புறத்தில் அரிப்பு,

**வெள்ளை ஒழுக்கு:**—ஏராளமாய் இருக்கும். அதிகக் காரத்தினால் பிறப்பு உறுப்புகளைச் சுற்றித் தோல் உறிந்து அதிக அரிப்பு உண்டாகும், இதனால் வியாதியஸ்தரால் நடக்கவே முடியாது.

**மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு:**— வயதானவர்களுக்கு ஏற்படும்.

**மண்டைக் கரப்பான்:**—பொறுக்குகளுடன் இருக்கும்.



சில சமயங்களில் உடலின் மற்ற இடங்களுக்கும் பரவும்,

மார்பு:—இரவில் வியர்வையுடன் மார்பில் நீர்க்கோர்வை தோன்றிய நிலைமைகள்; நீண்ட நேரம் இருமி சீழ்போன்ற கோழை வெளியாகும், சளி சிறு சிறு உருண்டைகளாக இருமலே இல்லாமல் அல்லது இடைவிடாமல் ஏற்படும் இருமலுக்குப் பிறகு வெளிப்படுதல். எப்பொழுதாவது அபூர்வமாகவே இருமல் தோன்றும்; மிகக்கடுமையாக இருக்கும்; முடிவில் இடைவிடாமல் தும்மல் உண்டாகும், அனேகமாக மார்பின் கீழ்ப்பகுதியிலேயே வலி இருக்கும். வலியினால் வியாதியஸ்தர் அடிக்கடி ஆழ்ந்து சுவாசிப்பார். மார்பில் குத்துவது போல் இருக்கும், சுவாசிக்கும்போது சிரமமும் அமுக்கும் உணர்ச்சியும். சுவாச கோசங்களில் வேக்காடும் க்ஷயமும்.

**காக்கை வலிப்பு:**—சரும வியாதிகளை அமுக்கியதால் தோன்றும் (ஸோரினம், ஸல்பர்),

**ஒப்பிடுதல்:**—வெராட்ரம் ஆல்பத்தில் தலையில் பனிக்கட்டி வைத்திருப்பதுபோல் குளிர்ந்த உணர்ச்சி. அகேரிகஸில் பனிக்கட்டி போல் குளிர்ந்த ஊசிகள்; ஆர்ஸனிகம் ஆல்பத்தில் சூடான ஊசிகள். அகேரிகஸில் நடக்கவும் பேரவும் தாமதம், நேட்ரம் மூரில் நடக்கத் தாமதம். கல்கேரியா கார்பில் நடக்கத் தாமதம். (குறிப்பு—கல்கேரியா கார்பில் எலும்பின் தடைப்பட்ட வளர்ச்சியும் அகேரிகஸில் மூளை வளர்ச்சிமெதுவாக நடைபெறுவதும்காரணம்) குளிர் காற்று கொஞ்சங்கூட ஒத்துக்கொள்ளாமை (கல்கேரியா கார்ப், ஹீப்பார் ஸல்பர், காலீ கார்ப், ஸோரினம்)

---

# அல்லியம் ஸிபா

## (ALLIUM CEPA)

முன்னுரை:—நீர்க்கோர்வைக்கு மிகச்சிறந்த ஔஷதம்—கண்கள், மூக்கு, தொண்டை ஆகிய இடங்களையே பெரும்பாலும் தாக்கும் நீர்க்கோர்வை. டயஸ்கோரிடஸ் என்னும் கிரேக்க நாட்டு வைத்தியரும் அவருக்குப்பின் வந்த அரேபியா நாட்டு வைத்தியர்களும் விஷத்தால் விஷத்தை நீக்கலாம் என்ற ஹோமியோபதி வைத்தியத் தத்துவத்தை ஓரளவு அறிந்திருந்தனர். ஏனென்றால் இவ்வௌஷதம் தோற்றுவிக்கும் வியாதிக்குறிகள் எவை என்பதை அறிந்து ஒத்த குறிகளுள்ள வியாதிக்கு இவ்வௌஷதத்தை உபயோகித்து வந்தனர்'' என்று டாக்டர் ஹெரிங் கூறுகிறார்.

### பொதுக் குறிகள்

**தகுதி:**—சளிச் சவ்வுகளில் அவ்வப்போது தோன்றி மறையும் நீர்க்கோர்வை. வெளியாகும் நீர் ஏராளமாகவும் காரமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நீர்க்கோர்வையுடன் உள்ள வியாதிகள் (நெட்டில் ராஷ் (Nettle rash) என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும், சருமத்தில் அரிப்பும் வில்லை வில்லைகளாகத் தடிப்பதும் உள்ள சரும வியாதி, சின்னம்மை, ஸ்கார்லேடினா (Scarlatina) எனப்படும் சிவந்த தடிப்புகளுள்ள ஒரு வகை அம்மை, இன்புளுயன்ஸா (Influenza) எனப்படும் சுரம்),

**மனம்:**—நீர்க்கோர்வையுடன் அதிக ஏக்கம், பல சமயங்களில் அதிகக் கவலை, அறிவு மழுங்குதல், வலிகள் தாங்கமுடியாமல் அதிகமாய் விடுமென்று பயப்படுதல், (தொண்டை வலியைக் கவனிக்கவும்),

**உடல்:**—பலவீனமும் சோர்வும், கீழேபடுத்துவிட



வேண்டும். உடல் முழுவதும் வலி. வாசனை பிடிக்காது. மிகவும் நாற்றமுள்ள அபானவாயு. கொட்டாவி விடுவதும் தூக்கக் கலக்கமும், வெளிச்சத்தைக் காண வெறுப்பு, பசி இல்லாமை. பச்சை வெங்காயத்தில் அதிக விருப்பம்.

**உபாதி கூடுதல்:**—சூட்டினாலும், சூடாக உள்ள இடங்களில் இருக்கும்போதும் எல்லாக்கோளாறுகளும் கூடுதலாகும். ஈரத்தில் நடமாடியதால் ஏற்படும் கோளாறுகள்.

**உபாதி கூடுதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—ஈரவாடையும் குளிர்காற்றும் குளிர்காலமும் நீர்க்கோர்வையையும் பல்வலியையும் தோற்றுவிக்கும். குளிர்காற்றில் இருமல் கூடுதலாகும். சூடுள்ள அறைகளில் கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் வரும் நீர் ஏராளமாகும், நீர்க்கோர்வையுடன் தோன்றும் எல்லாக் குறிகளும் வலிகளும் ஒன்றுபோல மாலையில் கூடுதலாகும். ஆப்பரேஷன் செய்தபிறகு ஏற்படும் லேசான குத்து வலிகள். அழுகிப்போன மீனைச் சாப்பிட்டதால் தோன்றும் கோளாறுகள்.

**உபாதி குறைதல்:**—குளிர்ச்சியான, திறந்த இடங்களில்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்.

**தோலுறிதல்: புண்ணுள்ள உணர்ச்சி:**—மூக்கிலிருந்து வெளிவரும் நீர் காரமாய், மேலுதடுகளையும் மூக்கின் உட்புறங்களையும் வேக வைத்துத் தோலுறியச்செய்யும். மூக்கு, குரல் வளை, தொண்டை ஆகியவைகளில் புண்ணுள்ள உணர்ச்சி, மார்பு வரை கூடப் பரவி இருக்கும். சுருக்கமாக எல்லா சளிச் சவ்வுகளிலும் புண்ணுள்ள உணர்ச்சி இருக்குமென்று சொல்லலாம். இவ்வுணர்ச்

சியினால் கிழிக்கும் வலிகள் தோன்றுகின்றன. இருமும் போது ஒவ்வொரு தடவையும் குரல் வளையில் கிழிக்கும் வலி. கடுமையான நீர்க் கோர்வையுமுள்ள குரல் வளை வேக்காட்டில், முரட்டு இருமலினால் தொண்டை கிழிந்து போய் விடுமென்று தோன்றுதல். இதனால் இருமும் போது வியாதியஸ்தர் தன் தொண்டையைக் கைகளால் இறுகப்பிடித்துக் கொள்வார். குரல் வளையில் வலியுடன் லேசான குத்தும் உணர்ச்சி. இது போன்ற குரல் வளை வலியுடன் உள்ளகக்குவாய் இருமல்: இருமல் வரும் போல் தோன்றியவுடன் குரல் வளை வலி வந்து விடுமே என்ற பயத்தினால் குழந்தை நடுங்கும்.

இவ்வௌஷதத்தில் கண்களிலிருந்து வரும் நீர் காரம் இல்லாமல் இருக்கும் (கன்னங்களில் தோல் உறியச் செய்யாது). யூபரேஷியாவில் இதற்கு நேர் விரோதமாய் இருக்கிறது. அதன் கண்ணீர் தோலுறியச் செய்யும் காரகுணமுள்ளதாகவும் மூக்கிலிருந்து வரும் நீர் காரம் இல்லாமலும் இருக்கிறது.

சருமத்தில், குறிப்பாக உள்ளங்காலில், மிகச் சுலபமாகத் தோல் உறிந்து புண்ணாகுதல் என்பதையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

குறிகளை அனுசரித்துக் கொடுக்கும் போது அல்லியம் ஸிபா மூக்கிலுள்ள நீர்க் கோர்வையை மிக விரைவில் நிறுத்தி விடுகிறதாயினும் பல சமயங்களில் வியாதியை மார்பில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவதாகத் தெரிகிறது என்றும் பர்ஸ்பரஸ் இக்கோளாறை நீக்குகிறது என்றும் பாரிங்டன் (Farrington) சொல்லுகிறார்.

எரிச்சல்:—மூக்கிலிருந்து எரிச்சலுடன் நீர் வெளியாகும், கண்களில் அரிப்பு, கடிக்கும் உணர்ச்சி, எரிச்சல், மூக்கு, தொண்டை, வாய், கண் இமைகள், மூத்தி



ரப்பை, சருமம் ஆகிய இடங்களைப் பற்றிய வியாதிகளில் எரிச்சல் இருந்தால் இவ்வௌஷதம் தேவைப் படலாம்.

ஏராளமான கழிவுகள்:—மூக்கிலிருந்து வெளியாகும் நீர் தண்ணீர் போலவும் ஏராளமாகவும் இருக்கும். சிறிதளவு உடல் வேலை செய்தாலும் வியர்வை தோன்றுதல்; ஏராளமாய் இருத்தல். ஏராளமான மூத்திரம்.

தும்மல்:—அல்லியம் ஸிபாவின் மிக விசேஷக் குறி. நீர்க் கோர்வையுடன் அடிக்கடி, கடுமையான தும்மல், குறிப்பாக சூடு உள்ள அறைகளில். அதிகத் தும்மல்; சுவாசகோசங்களில் அதிகக் காற்றுப் புகுந்து பெரியதாகும். கால் கட்டை விரல்களை மட்டும் கீழே ஊன்றிக் கொண்டு பிறகு ஆசை தீரத் தும்முவார்.

இடது பக்கமே உபாதிகள் அதிகம்:—முகத்தின் இடது பக்கத்தில் பக்ஷ வாதம். இதே போல் இடது கை, இடது கால் ஆகியவைகளிலும் பக்ஷ வாதம், மூத்திரம் ஏராளமாய் வெளியேறும். எரிச்சல் இடது கண்ணில் அதிகம். அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதலுடனும் கழிக்கும் போது எரிச்சலுடனும் அடி வயிற்றின் இடது கீழ்ப் பகுதியில் கடுமையான வலி. குறிகள் இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் போகும். கடுமையான மார்ச்சளி வியாதி முதலில் இடது பக்கத்தில் தோன்றி வலது பக்கம் செல்லும்.

மெதுவான குத்து வலிகள்:—முகம், தலை, மார்பு, கழுத்து ஆகிய இடங்களில் மெல்லிய ஊசியினால் மெதுவாகக் குத்துவது போன்ற உணர்ச்சி.

## மற்ற குறிகள்.

வயிற்று வலி:—பல விதமான வயிற்று வலிகள். வெள்ளரிக்காய் போன்ற கறிகாய்கள், பழங்கள், மீன்,

மாமிசம் ஆகியவைகளை வேகவைக்காமல் பச்சையாய்த் தின்றதால் ஏற்படும் வயிற்று வலி.

**மூக்கில் கெட்ட சதை வளர்ச்சி:**—(டுக்ரியம், ஸாங்வினேரியா, ஸோரினம்).

**நரம்புகளில் வேக்காடு:**—அடி பட்டதன் விளைவாக நீண்ட காலமாய் இருந்து வரும் நரம்பு வேக்காடு. கால் அல்லது கையை வெட்டி எடுத்த பிறகு மீதி இருக்கும் பகுதியில் நரம்பு சம்பந்தமான வலி; எரிச்சலும் கொட்டும் வலிகளும்.

**நகச் சுற்றி:**—விரல் நகங்களைச் சுற்றி வலியுள்ள வீக்கம்; சிவந்த கோடுகள் கைகளிலும் பரவி இருத்தல்; அதிகமான வலி; குழந்தை பெற்று அறையிலுள்ள பெண்களுக்கு ஏற்படும்.

**கிழவயதில் புறையோடுதல்**

**வாய் திறக்க முடியாமையும், மெல்லும் போது வாய் கோணுவதும்:**—காயங்கள் ஏற்பட்ட பிறகு தோன்றினால்.

**அசுத்த இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படும் கால் வீக்கம்.**

**தலை வலி:**—மாத விடாய் தோன்றினால் மறைந்து, நின்றால் மீண்டும் தோன்றும் (லாச்சஸிஸ்). நீர்க் கோர்வையுடன் தலை வலி.

**அசுத்த இரத்தக் குழாய்களின் வேக்காடு:**—குழந்தை பெற்ற பிறகு, சாமணத்தினால் குழந்தையை எடுத்த பிறகு.

**ஒழுக்கு மூத்திரம்:**—அல்லது கிழவர்களுக்கு விட்டு விட்டு மூத்திரம் வெளியாகுதல்.

**உறவு:**—பின் கொடுக்கக் கூடியவை:—**பாஸ்பரஸ், பல்ஸடில்லா, ஸர்ஸபரில்லா, தூஜா.** நட்பு உள்ளவை:—(கெட்ட சதை வளர்ச்சியில்) **கல்கேரியா கார்ப், ஸைலீஷியா** இவைகளுக்கு முன். பகை:—**அல்லியம் ஸடீவா, ஆலோ ஸகோட்ரினு.**



# ஆலோ ஸகோட்ரினு

## (ALOE SOCOTRINA)

**முன்னுரை:**—அல்லோபதி வைத்தியர்கள் இதைப் பேதி மருந்தாக உபயோகிக் கின்றனர். கடைகளில் விற்கப்படும் பேதி மருந்துகள் பலவற்றிலும் இது சேர்க்கப் பட்டிருக்கிறது. இப் பேதி மருந்துகளும் அதில் அடங்கியுள்ள மற்றப் பொருள்களும் குடலில் வேலை செய்யும் காரணம் ஹோமியோபதியர்களாகிய நமக்கு நன்றாகத் தெரியும். பக்குவப் படுத்தப் படாத ஔஷதங்களிலுள்ள முரட்டுத்தனமான கெடுதலை உண்டுபண்ணக்கூடிய சக்திகளை அல்லோபதியர்கள் உபயோகிக்கின்றனர். ஹோமியோபதியர்கள் ஔஷதங்களை வீரியப்படுத்திக் கெடுதல் நேராமல், சீக்கிரமாய் முழு குணம் ஏற்படக்கூடிய வகையில், உபயோகிக்கின்றனர்.

வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு, மூலம் ஆகிய வியாதிகளில் இவ்வௌஷதம் அடிக்கடி தேவைப்படும். கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு, கருப்பை இடம் மாறுதல் ஆகியவைகளிலும் மிக உபயோக முள்ளது.

இவ்வௌஷதத்தின் விசேஷக் குறிகள் பலவும் மலம், மலப்பை, ஆசனவாய் ஆகிய இம் மூன்றுக் குள்ளேயே அடங்கி விட்டன.

### பொதுக் குறிகள்.

**தகுதி:**—மந்த குணமும் ஏக்கமும் உள்ளவர்கள். சுறு சுறுப்பு துளிக் கூட இல்லாமல் களைப்புத் தட்டியுள்ளவர்கள். வயதானவர்கள். உட்கார்ந்த படியே வேலை

செய்கிறவர்கள். உடல் தளர்ச்சியும் மந்த குணமும் உள்ள பெண்கள்.

மனம் :—வேலை செய்ய வெறுப்பு. படிக்கவோ, சிந்திக்கவோ கொஞ்சங் கூட விருப்பம் இல்லாமை. அவை களைப்பை உண்டாக்கும். வியாதியஸ்தருக்குத் தன் மீதே அதிருப்தியும் ஏற்படும். வலி உள்ள போதும் குறிப்பாக மலச் சிக்கல் உள்ளபோது தன் வியாதியின் மேல் கோபமும் அதிருப்தியும் உண்டாகும். சாவு நெருங்கி விட்டதை அறிந்தவர் போல் இருப்பார். வாழ்க்கையே ஒரு சுமையாகத் தோன்றும்.

உடல் :—பொதுவாக நல்ல பசி. மாமிசத்தில் வெறுப்பு: சாரமுள்ள பொருள்களில் (பழங்களில்) விருப்பம். அதிக பலவீனம். சூடாகவும் அதிக இரத்தம் இருப்பது போலவும் உணர்ச்சி; உள்ளங் கால்களில் எரிச்சல் கண்டு செருப்போ, பூட்சோ போட்டுக் கொண்டிருந்தால் அதைக் கழற்றி விடுவார். உடலிலுள்ள எல்லாத் துவாரங்களிலும் அதிகச் சூடு உள்ள உணர்ச்சி.

உபாதி கூடுதல் :—சூட்டினால். பல குறிகள் மாலை வேளைகளில் தோன்றுகின்றன. ஈர வாடையுள்ள கோடைக் காலம்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—வயிற்றுப் போக்கு: உணவு உட் கொண்டாலும், தண்ணீர் முதலிய பானங்களைக் குடித்தாலும் மறு நிமிஷமே கூடுதலாகும். விடியற் காலையில் படுக்கையை விட்டு ஓடச் செய்யும் (ஸல்பர்): நடந்தாலும் நின்று கொண்டிருந்தாலும்.

உபாதி குறைதல் :—குளிர்ந்த, திறந்த இடங்களில்; குளிர்ச்சியான பருவ காலத்தில்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனி



யே) :—மூலங்கள் குளிர்ந்த ஒற்றிடங்களால், வயிற்று வலி அபான வாயு வெளியே போனால்; ஆனால் எவ்வளவு அபான வாயு வெளியே போனாலும் வயிற்று உப்பிசம் மட்டும் குறையாது.

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

கனத்த உணர்ச்சி :—அதிக இரத்தம் சேருதல், தக்கை (சக்கை, முளை என்றும் சொல்வது உண்டு) இருக்கும் உணர்ச்சி, இரத்தம் கொட்டுதல், வீங்கி இருத்தல் ஆகியவைகளுடன்.

அசுத்த இரத்தக் குழாய்களில் அதிக இரத்தம் சேர்ந்து அதனால் கனமும் விரைப்பும் தோன்றுதல். அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கி சுருட்டிக் கொண்டிருக்கும். அவ்விடங்கள் புடைத்து விடும். கல்லீரல் பகுதியில் கனத்த உணர்ச்சி. அடிவயிறு, மலப்பை, குடல் ஆகியவைகளில் கனமும் அமுக்கும் உணர்ச்சியும்; மூலங்களில். அடி வயிற்றில் கனம், உப்பிசம், பலமான இரைச்சல் முதலிய குறிகளுள்ள வியாதிகள். அபான வாயு சிரமம் இல்லாமல் வெளிப்படும். உடனே மலம் கழிக்க வேண்டுமென்ற அவசரத் தூண்டுதல்; மலப் பையில் கனம், குழாயைத் திறந்து விட்டால் தண்ணீர் வருவதைப் போல பலமான இரைச்சலுடன் மலம் வெளிப் படும். கருப்பையில் அதிக இரத்தம் சேருதல்; அதனால் கருப்பை கனமாய்த் தோன்றும். கருப்பையில் அதிகக் கனத்த உணர்ச்சியுடனும் யோனிக்கு மேலுள்ள இடத்தில் உட்புறத்தில் தக்கை இருக்கும் உணர்ச்சியுடனும் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்பட்டால் அக்கோளாறுக்கு மிகவும் சிறந்த ஒளஷதம். அடி வயிற்றின் கீழ்ப் பகுதியில் பலமான அமுக்கும் உணர்ச்சியுள்ள மலச்சிக்கல், குறிப்பாக அடி

வயிற்றினுள் தக்கையுள்ள உணர்ச்சியும் இருந்தால். சருமத்தில் வறட்சியும் சூடும் எரிச்சலும் ஆனால் சுரம் இருப்பதில்லை; உள்ளூரச் சூடு. தூங்கி எழுந்தவுடன் மூக்கிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தல்.

**தளர்ச்சி** :—மலப்பை தளர்ந்து ஆசன வாய் வழியாக வெளியே வருதல்; மூலங்கள் தளர்ந்து திராக்ஷைப் பழக் குலை போல் வெளியே பிதுங்கி சூடான உணர்ச்சி, வலி, தொடமுடியாது முதலிய குறிகளுடன் இருக்கும். குளிர்ந்த தண்ணீர் பட்டால் உபாதிகள் குறையும். கனத்த உணர்ச்சியுடன் கருப்பை தளர்ச்சி யடைந்து வெளியே நழுவி வருதல்; பலமான இழுக்கும் உணர்ச்சியும் உடம்பின் மேல் புறத்தில் சூடும் யோனிக்கு மேற் புறத்திலே தக்கை இருக்கும் உணர்ச்சியும் காணப் படும்.

**ஆசன வாய்த் தசைகளின் பலவீனம்** :—ஆசன வாய்த் தசைகளின் பலமும் வேலைத் திறனும் குறைந்து விட்டது போல் தோன்றுதல். அபான வாயு வெளியாகும் போதும் மூத்திரம் கழிக்கும் போதும் மலம் வெளியாகுமோ என்று தோன்றும் அளவு பலவீனம், அங்கு உள்ள தசைகளில் உண்டாகும். அபான வாயுவை வெளி யேற்றும் போது இளகிய மலமும் அதனுடன் சேர்ந்து வெளியேறும். இச்சை இல்லாமல் மூத்திரம் வெளிப்படும். உணவு உட் கொண்டவுடனும், தண்ணீர் போன்ற திரவப் பொருள்களைக் குடித்த பிறகும் மறுகணமே மிக அவசரமாக மலம் கழிக்கத் தூண்டுதல் உண்டாகும் (க்ரோடன் டிக்லியம்). விடியற் காலையில் படுக்கையில் இருக்கும் போதே மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்படும் (ஸோரினம், ரூமெக்ஸ், ஸல்பர்).

**உணர்ச்சி அழிவு** :—ஆசன வாயில் உணர்ச்சியே இருப்பதில்லை; கட்டியான மலம் வியாதியஸ்தருக்குத் தெரியாமலே வெளியாகும்.



**உருண்டைகள் உள்ள கழிவுகள்** :—மலம் தண்ணீர் போலவும் உருண்டைகளுடனும் இருக்கும்; உருண்டைகள் கல் போல் கடினமாக இருக்கும். தொண்டை அல்லது மலப்பையிலிருந்து பாகு போன்ற சளிக்கட்டு உருண்டைகளாக வெளிப்படும்.

**வியாதிகள் மாறி மாறித் தோன்றி மறைதல்** :—மன ஊக்கம் மிக அதிக மாவதும் மிகக் குறைவதுமாக மாறி மாறித் தோன்றும். தலை வலியும் கீழ் முதுகு வலியும் மாறி மாறி ஏற்படும். குடல், கருப்பை பற்றிய கோளாறுகளும் நெற்றியின் குறுக்கே தலை வலியும் மாறி மாறித் தோன்றும். (போடோபில்லம்) தலை வலி சூட்டினால் கூடுதலாகி, குளிர்ச்சியினால் குறையும்.

## மற்ற குறிகள்

ஆசன வாயில் அறிப்பும் எரிச்சலும் தோன்றி தூக்கம் வராமல் செய்யும்.—தொப்பூழிலிருந்து மலப்பை வரை வலி.—ஆசன வாய் பலவீனமாய் இருத்தல்; சீழ்ப் போன்ற கசிவு.—மலம் கழித்த பிறகு அளவு மீறிய பலவீனமும் சோர்வும்; ஏராளமான வியர்வை; மலம் கழிப்பதற்கு முன் இரைச்சல்.—சிறிது மலம் வெளியானாலும் அபான வாயு அதிக மாகவே இருக்கும். (அகேரிகஸ்). அபான வாயு அதிக நாற்றமுள்ள தாகவும் மலப் பையில் எரிச்சலை உண்டு பண்ணு வதாகவும் இருக்கும். அடி வயிறு முழுவதும் தொட்டால் அதிக வலியுடன் இருக்கும். ஒவ்வொரு வருஷமும் குளிர் காலம் நெருங்கி வரும் போது உடம்பில் சொறி, சிறங்குகள் தோன்ற ஆரம்பிக்கும். மலம் மஞ்சளாக அல்லது இரத்தம் கலந்து அல்லது பாகு போன்ற சளிக்கட்டுடன் வெளிப் படும். ஆசன வாயைச் சுற்றி காய்ந்து போன உணர்ச்சியும் எரிச்சலும் தோல் உரிந்தும் காணப்படும். அடி

வயிற்றில் கவ்வும் வலிகளுடன் அவசரமாக மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்படும். ஆனால் அபான வாயு மட்டும் வெளியேறும். வலிகள் உடம்பை முன் பக்கமாக இரண்டாய் வளைத்தால் குறையும்.—மலம், அபான வாயு, மூத்திரம் ஆகிய எல்லாம் சூடாக இருக்கும். உறக்கப் படித்தாலும் தாடைகளை அசைத்தாலும் காதுகளில் உடைவது போன்ற ஓசை. கல்லீரலில் வலி, நின்றால் கூடுதலாவதால் முன் பக்கமாய்க் குனிந்து கொள்வார். கால்கள் சூடாகவும் கைகள் சில்லென்றும் இருத்தல்.

ஒப்பிடுதல் :—ஆலோவில் வயிற்றுப் போக்கு நடந்தாலும் நின்று கொண்டிருந்தாலும் கூடுதலாகிறது. தூஜாவில் வயிற்றுப்போக்கு நடந்தால் கூடுதலாகிறது. ஸல்பரில் நின்று கொண்டிருந்தால் அதிக மாகிறது. நக்ஸ் வாமிகாவைப் போலவே எப்பொழுதும் உட்கார்ந்த படியே வேலை செய்கிறவர்களுக்குத் தோன்றும் கோளாறுக்கு ஆலோ ஏற்றதாகிறது, தலை, அடி வயிறு பற்றிய கோளாறுகள் மாறி மாறித் தோன்றும் தன்மையில் போடோபில்லத்தைப் போல் இருக்கிறது. பல குறிகளில் ஸல்பரை ஒத்திருந்தாலும் ஸல்பரைப் போல் ஆழ்ந்து வேலை செய்யும் ஆற்றல் ஆலோவுக்குக் கிடையாது. ஆனால் அடி வயிற்றில் அதிக இரத்தம் சேரும் நிலைமை நீடித்ததாக உள்ள சமயங்களில் ஸல்பருக்குள்ள சக்தி ஆலோவுக்கும் உண்டு.

---

# அலுமினா

## (ALUMINA)

முன்னுரை :—நாட்பட்ட வியாதிகளில் தேவைப் படும் முக்கியமான ஔஷதங்களில் இதுவும் ஒன்று.



அலுமினாவைப் பற்றி ஒரு சில வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் 1. மனக் குழப்பம், 2. ஏதோ ஆபத்து நேரப் போகிறதென்ற அச்சம், 3. மந்த குணம், பக்ஷவாதம் ஏற்பட்டது போன்ற பலவீனம், தலைச் சுற்றல். 4. அதிகக் களைப்பும் உடல் நடுக்கத்தை உண்டாக்கும் சோர்வும். 5. சருமம், சளிச் சவ்வு ஆகியவை காய்ந்திருத்தல் அல்லது சளிச் சவ்விலிருந்து மட்டும் ஏராளமான சளிப் பொருள் உற்பத்தியாகுதல். 6. எரிச்சல். 7. சீரணம் ஆகாத பொருள்களைத் தின்ன ஆவல். 8 வயதான, கட்டு உடைந்த, பல மில்லாத உடல் உள்ளவர்கள். 9. சிறிது காலத்துக்கு வியாதி குணமாவது போல் தோன்றி திரும்பவும் பழய நிலைக்கே திரும்புதல். ஆகியவைகளைக் குறிப்பிட்டால் போதும்.

## பொதுக் குறிகள்

தகுதி:—ஸோரா விஷம் உள்ளவர்கள், வயதான, கட்டு உடைந்த, பலம் இல்லாத உடல் உள்ளவர்கள். க்ஷய சம்பந்தமுள்ள சிரங்குக்கட்டிகளும் நீர்க்கோர்வையுள்ள வியாதிகளும் உள்ளவர்கள். மெலிந்து, காய்ந்து, தேய்ந்துபோன உடலுள்ளவர்கள், சுறு சுறுப்பு இல்லாமல், தளர்ந்த உடலும் உள்ள பெண்கள். மன ஏக்கம் உள்ளவர்கள். உடம்பின் இயற்கைச் சூடு குறைந்து எப்பொழுதும் குளிரும் உணர்ச்சி உள்ளவர்கள் (கல்கேரியா கார்ப், ஸைலீஷியா), நாட்பட்ட வியாதியுள்ளவர்கள், குறிப்பாக வியாதி சிறிது குணமாவதுபோல் தோன்றி மீண்டும் பழய நிலைமைக்கே திரும்பும் குணம் இருந்தால். குழந்தைகளின் உணவு என்று பெயர் இடப்பட்டுள்ள செயற்கை உணவுகளை உண்டு வளரும் குழந்தைகள்.

மனம்:—அறிவுக் குழப்பம், ஞாபக மறதி, எழுதும்

போதும் பேசும் போதும் தவறுகள் செய்தல்; மனதில் நினைக்காத வார்த்தைகள் வாயில் வருதல். பைத்தியம் பிடித்து விடுமோ வென்று நினைத்துப் பயப்படுதல். குணம் அடிக்கடி மாறுதல். மனதில் இடைவிடாமல் வருத்தம் தரக்கூடிய எண்ணங்கள் குவிந்துகொண்டு இருத்தல். தன்னை அறியாமலேயே கண்ணீர் விடுதல். பொழுது மிக மெதுவாகப் போகிறது என்று தோன்றுதல்; ஒரு மணி நேரம் ஒரு நாள் கழிவதுபோல் இருக்கும். கத்திகளைக் கண்டால் தற்கொலை செய்து கொள்ளவேண்டு மென்ற ஆவல் தோன்றுதல். மனக் குறிகள் அனேகமாகக் காலையில் தூங்கி எழுந்தவுடன் தோன்றும், விழித்துக்கொண்டவுடன் மனக்குழப்பமும் தான் எங்கே இருக்கிறோம் என்று ஆச்சரியத்துடன் பார்ப்பதும். இக்குறி குழந்தைகளிடம் அனேகமாகக் காணப்படும். (அஸ்குலஸ், லைகபோடியம்)

உடல்:—உடல் முழுவதும் நடுக்கலை உண்டாக்கும் மிகுந்த பலவீனம். மிக அதிகமான களைப்பினால் உட்கார அல்லது கீழே படுத்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்தல். காலையில் மயக்க உணர்ச்சியுடனும் குமட்டலுடனும் கீழே தள்ளும் தலைச்சுற்றல். சிறிது நடந்தாலும், குறிப்பாகப் பேசிய பிறகும் அதிகக் களைப்பு. வாய் காய்ந்திருப்பதுபோலத் தோன்றினாலும் உமிழ்நீர் அதிகமாகவே உற்பத்தியாகும். உடம்பு முழுவதும் பொறுக்க முடியாத அறிப்பு, படுக்கையின் சூடுபட்டால் அறிப்பு மேலும் அதிகமாகித் தோல் உறிந்து இரத்தம் கசியும் அளவுக்குச் சொறிந்து விடுவார். உடலின் ஒரு சில பாகங்கள் மட்டும் பெரியதாகி விட்டதுபோல் தோன்றுதல். பல இடங்களில் நாடி போன்ற துடிப்புகள். வலிகள் மேல்பக்கம் தாவும்.



இடது பக்கம் இருந்தால் மேற்புறத்திலும் வலதுபக்கம் இருந்தால் கீழ்ப்புறத்திலும் உபாதிகள் காணப்படும். (லைகபோடியத்துக்கு நேர் எதிர்), தோல் உறிதல். வாயில் அழுகிய நாற்றம். வியர்வை உண்டாவதில்லை. எப்பொழுதாவது அபூர்வமாகத் தோன்றும்; கொஞ்சமாக இருக்கும். வெட்டும்போது நகங்கள் இரண்டாகப் பிளந்துகொள்ளும். மாமிசத்தில் வெறுப்பு. சாக்கட்டி, கரிக்கட்டை, கிராம்பு, காப்பிப் பொடி, தேயிலைத்தாள், புளி, பச்சை அரிசி முதலிய சீரணமாகாத, வழக்கத்தில் இல்லாத பொருள்களைத் தின்ன விரும்புதல் (ஸிகுடா, ஸோரினம்)

உபாதி கூடுதல்:—சூட்டினால். உருளைக்கிழங்குகளைத் தின்றால். ஒன்றுவிட்டு ஒரு நாள். அமாவாசை அல்லது பௌர்ணமி நாட்களில். மாத விடாய்க்குப் பின்: உடலும் மனமும் சோர்ந்து விடுதல், பேசவும் முடியாது (கார்போ அனி. மாலிஸ், காக்குலஸ்).

உபாதி கூடுதல்:—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே).—தலைச் சுற்றல் பேசினால் அதிகமாகும். அறிப்பு படுக்கையின் சூட்டினால் கூடுதலாகும். உப்பு, மிளகாய், ஒயின் போன்ற எரிச்சலை உண்டாக்கும் பொருள்களை உட்கொண்டால் உடனே இருமல் ஏற்படும். அமாவாசை, பௌர்ணமி நாட்களில் தவறாமல் தோன்றும் சருமவியாதி. அடிவயிற்றின் இடது பக்கம் அடிக்கடி தாக்கப்படும்.

உபாதி குறைதல்:—மாலையில் திறந்த இடங்களில் சௌகரியமாகத் தோன்றுதல் (உடம்பில் இருக்க வேண்டிய சூடு இல்லாமல் இருந்தபோதிலும்).

### விசேஷக் குறிகளின் விளக்கம்

மந்த குணம்: பாரிசவாதப் பலவீனம்:—இவ்விருகுறிகளும் அனேகமாக ஒன்றுதான். ஏனென்றால் வியாதி

முற்ற முற்ற இரண்டும் ஒன்றோடொன்று கலந்துவிடுகின்றன.

மந்த குணம்:—பரபரப்பு இருந்தாலும் வேலை மெதுவாகத் தான் நடைபெறும். குடல்கள் மந்தமாய் வேலை செய்தல்- அதனால் இளகிய மலத்தையும் மிக சிரமப்பட்டே கழிக்க முடியும். மூத்திரம் மெதுவாக வெளியாகும். உணர்ச்சிகளும் தாமதமாகவே மூளைக்கு எட்டும், உதாரணமாகக் கால்களில் ஊசி குத்தினால் அவ்விஷயம் உடனே மூளைக்குச் செல்வதில்லை. ஒன்று அல்லது சில விநாடிகள் கழித்தே செல்லும், அடி எடுத்துவைக்கும் போது உள்ளங்காலில் மதமதப்பு என்பதையும் இதனுடன் சேர்த்துக்கொள்ளலாம். அறிவிலும் மந்த குணம் காணப்படும். எந்த விஷயத்தையும் உடனே கிரகித்துக்கொள்ளும் திறமை இருப்பதில்லை. நேரம் மிக மெதுவாகச் செல்வது போல் இருக்கும். ஒரு மணி நேரம் அரை நாள் போல் தோன்றும் (கன்னபிஸ் இண்டிகா].

பாரிச வாதப் பலவீனம்:—மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்படுவதில்லை. கழிக்கச் சக்தியும் இல்லை (குடலின் தள்ளும் சக்தி குறைவதினால்), இதனால் மலம் நிறையச் சேர்ந்துவிடுகிறது. மலப்பை வேலை செய்யாமல் இருத்தல், இளகிய மலத்தையும் கஷ்டப்பட்டுக் கழிக்க நேருதல் (அனகார்டியம், பிளாட்டினு, ஸைலீஷியா, வெராட்ரம் ஆல்பம்), மிகவும் பலமாக முக்கவேண்டும். அதனால் அருகில் உள்ள மரம், கொம்பு ஆகியவைகளை இறுகப் பிடித்துக் கொள்வார். மூத்திரம் கழிக்கவேண்டுமானால் மலங்கழிப்பதைப் போல முக்கவேண்டும். மூத்திரம் தாமதமாய் வெளிப்படும், மெதுவாகவே வெளிப்படும்; சில சமயங்களில் சொட்டுச் சொட்டுகளாய் வெளியாகும். சில சமயங்களில்மூத்திரம்



வெளியேறாமல் அடக்கப்பட்டுப் பிறகு வியாதியஸ்தரின் இச்சை இல்லாமல் சொட்டிக்கொண்டே இருக்கும். விழுங்கும்போது சிரமம்; இது தொண்டையைப்பற்றிய பாரிசவாதம், இதனால் விழுங்கும்போது தொண்டையை அடைத்து விட்டதுபோல் உணர்ச்சி உண்டாகும். குரல் வளைத் தசைகள் பாரிசவாதத்தினால் தாக்கப்பட்டு குரல் கம்முதல் அல்லது குரலே இருக்காது, கைகளில் பாரிசவாதம் இருப்பதுபோல் கனத்த உணர்ச்சி, கண் இமைகளை மேலே தூக்க முடியாமல் கண்கள் மூடியபடி இருக்கும், சுவாச கோசங்களில் பலம் இல்லாத உணர்ச்சி. அதே போல் மார்பிலும். முழங்கால்களில் நடுக்கம், கால்களில் விசேஷமாகச் சப்பைகளில் அதிகக் கனமும் பலவீனமும். கடுமையான வியாதிகளில் அடிபட்டபிறகு தோன்றுவதைப்போல் மெதுவான, தள்ளாடும் நடை, பகலிலும் கண்களைத் திறந்துகொண்டிருக்கும் சமயத்திலும்தான் நடக்க முடியும். இருட்டிலும் கண்களை மூடிக்கொண்டிருந்தாலும் தட்டுத்தடுமாறி நடத்தல். அடிக்கடி கிறுகிறுப்பு, கண் தசைகள் சிலவற்றில் பாரிசவாதப் பலவீனம். அதனால் பார்வை மங்கி அடிக்கடி மாறும். குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் கண் தசைப் பலவீனத்தினால் ஓரைக்கண் என்று அழைக்கப்படும் கோணல் பார்வை தோன்றுதல்.

வறட்சி:—சளிச் சவ்வுகளில் வறட்சியுடன் வேதனை. சளிச் சவ்வுகளில் வறட்சியுடன் நீர்க்கோர்வை, மூக்கில் அதிக வறட்சியுடன் உள்ள நீர்க்கோர்வை. வறண்ட இருமல் இடைவிடாமல் ஏற்படும். மூச்சு விடச் சிரமமும் தும்மலும் உண்டாகும். மூக்கு காய்ந்து அடைப்புடன் இருக்கும், அனேகமாக மூக்கின் ஒரு பக்கம்

பொதுவாக இடதுபக்கம் மட்டும் காணப்படும். தூங்கி எழுந்தவுடன் தொண்டை காய்ந்து குரல் கம்மி இருக்கும், தொண்டை உலர்ந்து பளபளவென்று மின்னும் மூக்கினுள் காய்ந்த பொருக்குகள் ஏற்பட்டு நிறையக் குச்சிகள் இருப்பதுபோல் தோன்றும். தொண்டை காய்ந்து புண் உள்ளதுபோல் தோன்றும்; உணவுப் பாதை குறுகிவிட்டது போலவும் தொண்டையினுள் துரும்பு இருப்பது போலவும் உணர்ச்சி உண்டாகி விழுங்குவதற்குக் கஷ்டம் உண்டாகும், வாய் காய்ந்திருக்கும், குறிப்பாகத் தூங்கியெழுந்தவுடன், வாய் காய்ந்திருப்பதுபோல் தோன்றினாலும் உமிழ்நீர் ஏராளமாய் உற்பத்தியாகும். உதடுகள் காய்ந்து வெடித்து தோல் செதில்களாக உறியும். கண் இமைகளில் விரைத்த உணர்ச்சி, அதிக வறட்சியினால் வெடித்து விடுதல். இமைகள் தடித்துக் காய்ந்து எரிச்சலுடனும் சிறு சிறு முளைகளுடனும் இருக்கும்: படித்தால் கண்களில் வறட்சி ஏற்படும் (க்ரோக்கஸ், அர்ஜண்டம் நைட்ரிகம், ஸீனா, நேட்ரம் மூர்).

சருமமும் காய்ந்தே இருக்கும். வெடிப்புகளுடன் சருமத்தில் நீடித்துள்ள வறட்சி, கைகளின் உட்பக்கமுள்ள கனத்த தோலில் அதிக வறட்சியும் குளிர் காலத்தில் அவை சில்லென்று குளிர்ந்து நிறம் மாறுவதும். வறட்சியுடன் அறிப்பு (சரும வியாதிகளுடன் சேர்ந்தோ, சேராமலோ) வெடிப்பு, தடித்தல், இரத்தம் கொட்டுதல், புண்ணாகுதல், கடைசியாக கல்போல் கடினமாக மாறவும் செய்யும். சருமத்தில் அறிப்பு, இரத்தம் வரும் வரை சொறிவார். பிறகு மிகவும் வலி உண்டாகும். தொண்டை, வயிறு, மலப்பை, மூத்திரப்பை ஆகிய உள் உறுப்புகளில் ஏற்படும் வறட்சி



யினாலும் பக்ஷவாதப் பலவீனத்தினாலும் அவ்வுறுப்புகளில் இறுகக்கட்டி விடுவது போன்ற உணர்ச்சி தோன்றுகிறது.

முடிவாக, முட்டையை உடைத்து சருமத்தில் தடவிக் காய்ந்துபோனால் எப்படி வற வற என்று இழுக்குமோ அதுபோன்ற உணர்ச்சி முகத்தில் உண்டாகும், சிலந்திக்கூட்டிலுள்ள நூல் ஒட்டிக் கொண்டது போலவும் இருக்கும்.

**ஏராளமான நீர் உற்பத்தி:**—ஏராளமான நீர் உற்பத்தி அல்லது வறட்சியுடன் உள்ள சளிச் சவ்வு பற்றிய கோளாறுகள். வெள்ளை ஒழுக்கில் போக்கு காரமாகவும் தொடை வழியாய்க் கீழ்க்கால் வரை ஒழுகிப்போகும் அளவுக்கு ஏராளமாகவும் இருக்கும் (ஸிபிலினம்) பகல் காலத்தில் அதிகமாகவும் குளிர்ந்த தண்ணீரில் குளித்தால் குறைவாகவும் இருக்கும்.

**எரிச்சல் :**—கண்களில் வேக்காடும் எரிச்சலும். வலியுள்ள இடத்தில் அறிப்பும் எரிச்சலும். முதுகில் எரிச்சலுடன் வலி, குறிப்பாக முதுகெலும்பின் அடிப்பாகம் வழியாகச் சூடான இரும்பைச் செருகும் உணர்ச்சி. பெண்களின் பிறப்பு உறுப்புகளுக்கு அருகிலே உள்ளேயும் வெளியிலும் எரிச்சலும் அறிப்பும். பகலில் கண்ணீர்ப் பெருக்கும் இரவில் இமைகள் ஒட்டிக் கொள்வதும் இவைகளுடன் கண்களில் எரிச்சல். மூலங்களில் அறிப்பு, எரிச்சல், ஈரக் கசிவு, மூத்திரம் எரிச்சலுடன் வெளிப்படும். பட்ட இடங்களைப் புண் செய்யும்.

## மற்ற குறிகள்.

தொண்டையில் புண்கள், பஞ்சு போல் மிருதுவாக பழுப்பு மஞ்சள் நிறமும் அதிக நாற்றமும் உள்ள சீழுடன் இருக்கும். சிரமப் பட்டு மலம் கழிக்கும்

போது இந்திரிய நீர் வெளிப்படும். மூக்குத் துவாரங்களை வலது இடது என்று பிரிக்கும் தோல் வீங்கிச் சிவந்து தொட்டால் வலி தரும். மூது கெலும்பைப் பற்றிய வியாதிகளால் தோன்றும் பல விதக் கோளாறுகளை இவ்வௌஷதம் குணம் செய்திருக்கிறது.—தலையில் அறிப்பு, ஏராளமான தோல் உறிதல். உற்றுப் பார்க்கும் குணம். மூடுபனி இருப்பது போல் பார்வைக் கோளாறு. பார்க்கும் பொருள்கள் யாவும் மஞ்சளாய் இருத்தல். காதுகளில் உடையும் ஓசையும் இரைச்சலும். இவை விசேஷமாக வாயை மெல்லும் போது தோன்றுமாயினும் விழுங்கும் போதும் ஏற்படலாம். மூகத்தில் குஷ்ட சம்பந்த மூள்ள சிறங்குகள். ஈறுகளில் புண். பற்களின் வேர்களிலே புண். தொண்டையில் துரும்பு சிக்கிய உணர்ச்சி. மூத்திரத்தில் கெட்டியான, வெண்மையான அழுக்குப் படிதல். நகங்களை வெட்டினால் அவை இரண்டாகப் பிளந்து போகுதல். வலிப்புகளுடன் அழுகையும் சிரிப்பும் மாறி மாறி வரும். உட்கார்ந்திருக்கும் போது அடிக்கடி சோம்பல் முறித்தல். இரவில் பயங்கரக் கனவுகள்.

**மூக்கில் நாட்பட்ட நீர்க் கோர்வை:**—மூக்கில் பொறுக்குகளும் புண் உள்ள உணர்ச்சியும்; கெட்டியான, மஞ்சள் நிறமுள்ள சளி; மூக்கைச் சிந்தினால் இரத்தம் வருதல். வெள்ளை ஒழுக்கும் மூக்கு, தொண்டை ஆகியவைகளில் நீர்க் கோர்வையும் மாறி மாறி வருதல்.

**மயிர் உதிருதல்:**—உடல் முழுவதும் உள்ள மயிர் உதிருதல். புருவ மயிர் உதிருதல்.

**மலச் சிக்கல்:**—கடினமான, முடிப்புகள் உள்ள, கோழை கலந்த மலம்.

**வர்ண வேலை செய்வோரின் வயிற்று வலி:**—வெள்ளைப் பாஷாணத்தைக் கையாள்வதால்.



**நாட்பட்ட மேக வெட்டை:**—அவ்வப்போது வியாதியின் கடுமையைக் குறைப்பதற்கு மட்டும் சிகிச்சை செய்து தோன்றுவதும் மறைவதுமாய் இருக்கும் நிலைமை. இவ்விதமான பிடிவாத குணமுள்ள கேசுகளை அலுமினா குணம் செய்கிறது.

**இருமல்:**—காலையில் தூங்கி எழுந்தவுடன் சீக்கிரத்தில் தோன்றும். ஒவ்வொரு நாளும் காலையில் நீண்ட நேரம் வறண்ட இருமல். அடிக்கடி தும்மல்களுடன் வறண்ட, அலைக் கழிக்கும் இருமல்.

**கருப்பை நழுவுதல்:**—கருப்பையின் கழுத்தில் புண் உள்ள போது.

**உறவு:**—பிரயோனியா, லாச்சஸிஸ், ஸல்பர் ஆகியவைகளுக்குப் பின் நன்றாக வேலை செய்கிறது. பிரயோனியா முற்றினால் அலுமினா அதாவது வியாதி ஆரம்ப நிலையில் உள்ள போது பிரயோனியாவும் முற்றிய நிலைமையில் அலுமினாவும் கொடுக்கப் படலாம்.

**ஒப்பிடுதல்:**—உடலின் சில பாகங்கள் மிகவும் பெரியதாகிவிட்ட உணர்ச்சி அர்ஜண்டம் நைட்ரிகத்திலும் இருக்கிறது. ஏராளமான, பளிங்கு போல் ஊடுருவிப் பார்க்கக் கூடிய வெள்ளை ஒழுக்கு பெர்ரம் அயோட்டில் இருக்கிறது. கண் இமை வேக்காடு, ஆண்ட்டிமனியம் க்ரூடம், கிராபைடிஸ் ஆகியவைகளில் உண்டு. உடம்பின் இயற்கைச் சூடு குறைவாய் இருத்தல் பல்ஸடில்லாவில் உண்டு. மலப் பையில் பலம் இல்லாமை ரூடாவில் இருக்கிறது.

**குறிப்பு:**—அலுமினா தாமதமாகவே வேலை செய்ய ஆரம்பிக்கும். ஆகையால் அவசரப்பட்டு வேறு ஔஷதத்தைக் கொடுத்து விடக் கூடாது.

---

## அம்மோனியம் கார்பானிகம்

## (AMMONIUM CARBONICUM)

முன்னுரை:—இது ஒரு வகை உப்பு. உப்பு என்றவுடன் காரம் இருக்கும் என்று எண்ணுவதில் தவறு இல்லையல்லவா? இவ்வௌஷதம் தேவைப்படும் கோளாறுகளில் கழிவுகள் கார குணம் உள்ளவைகளாக இருக்கின்றன. வெள்ளை ஒழுக்குக் கழிவு அம்மோனியாவைப் போலவே கார வாசனை வீசும்.

அசுத்த இரத்தக் குழாய் பற்றிய வியாதிகள், சத்தும் அளவும் குறைந்த உணவைச் சாப்பிட்டு வந்தால் தோன்றும் இரத்தப் பெருக்கு, மற்ற வகை இரத்தப் பெருக்கு, சுரப்பிகள் பற்றிய வியாதிகளில் இவ்வௌஷதம் மிகவும் உபயோக முள்ளது. ஆழ்ந்து வேலை செய்யும், ஸோரா விஷத்தை நீக்கும் குண முள்ள ஔஷதம்.

### பொதுக் குறிகள்.

தகுதி:—பருத்த உடலும் அதிகச் சதைப்பிடிப்பும் எப்பொழுதும் உட்கார்ந்த வண்ணமே இருக்கும் குணமும் உள்ள பெண்கள்; எப்பொழுதும் உடல் சோர்ந்து தளர்ந்து இருத்தல்; அம்மோனியா உப்பு உள்ள பாட்டிலை அடிக்கடி முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் தான் சோர்வை நீக்க முடியும். சுரப்பிகளில் வீக்க முள்ள குழந்தைகள். பலவீனமான இருதயமும் பெருமூச்சும் மூச்சுத் திணறும் உணர்ச்சியும் உள்ள உடல் கொழுத்த மனிதர்கள். டைபாய்டு, டிப்தீரியா, அக்கிப் படுவன், ஸ்கார்லேடினு, மூளை, முள்ளந் தண்டு வேக்காடு முதலிய வியாதிகளில் தகுந்த ஔஷதம் கொடுத்தாலும் உடம்பில் பிடிப்பது இல்லை. இவ்வித நிலைமையில் உடம்பில் சில்லிப்பு, சருமம் நீல நிறமாகுதல், சோர்வு, உடல் சூடு குறைதல், மயக்கம், மந்த குணம் முதலிய குறிகள் தோன்றும். அச்சமயங்களில் அம்மோனியம் கார்ப் கொடுக்கப் பட்டால் கோளாறை விலக்கிக் குறிகளுக்கு ஏற்ற ஔஷதம் கொடுக்க வியாதி குணமாகும்.

மனம்:—வருத்தம். அழும் குணம். காரணமில்லாத பயம். ஒருவருக்கும் கீழ்ப்படிய மாட்டார். அடக்க முடியாது. ஞாபக மறதி. எவ்விஷயத்திலும் கவனம் செலுத்தாமை. பேசும் போதும் எழுதும் போதும் கணக்குப் போடும் போதும் தவறுகள் செய்தல்.

உடல்:—மாலையில் உடலில் அதிகப் பரபரப்பு. கைகளையும் கால்களையும் அடிக்கடி நீட்டிச் சோம்பல் முறிக்கப் பிரியம். உடல் பயிற்சி என்றால் பிடிக்காது. சத்தில்லாத, போதிய அளவும் இல்லாத உணவை உட்கொண்டு வருவதால் ஏற்படும் இரத்தப் பெருக்கு. அதிகக் களைப்பும் அக்களைப்பு மெதுவாக நீங்குவதும், அதிகமாகப் பேசியதாலும் பிறர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அதிகக் களைப்பு உண்டாகுதல். மார்பில் படபடப்பு, குறிப்பாக வேலை செய்தவுடன். பல கோளாறுகளுடன் தூக்கக் கலக்கம் தோன்றும். உடல் வெளுத்துப் பலவீனமாய் இருக்கும். இடைவிடாமல் தும்மிக் கொண்டே இருக்கத் தூண்டுதல். பலவீனமான இருதயத்தினால் ஏற்படும் மூச்சுத் திணறலும் இரத்தத் தேக்கமும். மூச்சுக் காற்றின் நாற்றம் வியாதியஸ்தருக்கும் தெரியும். உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள மாட்டார். மூச்சு விட மிகவும் சிரமம். பகலில் தூக்கக் கலக்கமாய் இருத்தல். எல்லா உறுப்புகளும் கனமாய் இருக்கும் உணர்ச்சி. அடிக்கடி இரத்தப் பெருக்கு ஏற்படும் உடல் வாகு; இரத்தம் கறுப்பு நிறமாகவும் தண்ணீர் போல் நீர்த்தும் உறையாமலும் இருக்கும். ஆனால்

மாத விடாயில் இரத்தம் கறுப்பாகவும் பல சமயங்களில் கட்டிகளுடனும் இருக்கலாம். (இரத்தப் போக்குக்கு முன் வயிற்றில் கவ்வும் வலிகள்).

**உபாதி கூடுதல்** :—குளிர்காற்று கொஞ்சம் கூட ஒத்துக் கொள்வதில்லை. வானம் மப்பும் மந்தாரமுமாக உள்ள நாட்கள். ஈரமும் புயல் காற்றும் உள்ள காலங்களில் வியாதியஸ்தர் சந்தோஷமாய் இருக்க மாட்டார். திறந்த இடங்களில் நடக்க வெறுப்பு. விடியற் காலை 3 மணிக்கு அல்லது மூன்றிலிருந்து நான்கு மணி வரை. தண்ணீரில் அதிக வெறுப்பு; தண்ணீரைத் தொட முடியாது.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :—மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு **முகத்தைக் கழுவும் போதும் (ஆர்னிகா, மெக்னீஷியா கார்ப்)**, சாப்பிட்டவுடனும். குளிப்பது என்றால் பிடிக்காத குழந்தைகள் **(ஆண்ட்டிமனியம் க்ருடம், ஸல்பர்)**. குளிப்பதால் இரத்தப் பெருக்கு, கைகளில் நீல நிறம், அசுத்த இரத்தக் குழாய்களில் வீக்கம் ஆகியவை திரும்பவும் தோன்றுதல். மாத விடாய் தோன்றும் சமயத்தில் **விஷபேதியை ஒத்த குறிகள் (போவிஸ்டா, வெராட்ரம் ஆல்பம்)**. மாதவிடாய் ஏற்படும் ஒவ்வொரு தடவையும் உடல் சோர்வு தோன்றுதல். வயதானவர்களுக்கு விடியற் காலை மூன்று மணிக்கு ஆரம்பிக்கும் நாட்பட்ட மார்ச் சளி. இருதயக் கோளாறுகளினாலும் காச வியாதியினாலும் ஏற்படும் மூச்சுத் திணறல், தலைவலி, முதலிய கோளாறுகள் ஈரவாடையுள்ள, குளிர்ந்த காலங்களில் கூடுதலாகும். பல கோளாறுகள் தண்ணீரில் குளிப்பதால் கூடுதலாகின்றன.

**உபாதி குறைதல்** :—வறண்ட பருவம்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :—தலை வலி, வயிற்றில் வலி ஆகியவைகளில் அழுத்தினால் குறையும். அடி வயிற்றைக் கீழே வைத்துப் படுத்தால் குறையும் (அஸடிக் ஆஸிட், நைட்ரிக் ஆஸிட்).



## விசேஷக் குறிகளின் விளக்கம்

**இரத்தப் பெருக்கு** :—உபாதி கூடுதல் என்னும் தலைப்பின் கீழும் கவனிக்கவும். **மூலங்களிலிருந்து இரத்தப் பெருக்கு மாத விடாய்க் காலத்தில் அதிகமாகும்.** மாதவிடாய் ஏற்படும் ஒவ்வொரு தடவையும் ஆசன வாய் வழியாய் இரத்தப் பெருக்கு தோன்றுதல். மலம் கழிக்கும் போதும் கழித்த பிறகும் இரத்தம் வெளிப்படும். மாத விடாய் வழக்கத்துக்கு முன்னதாகத் தோன்றும். போக்கு ஏராளமாகவும் கறுப்பாகவும் பல சமயங்களில் கட்டிகளுடனும் இருக்கும். அக் காலத்தில் பல் வலி, வயிற்று வலி, வருத்தம், களைப்பு, (குறிப்பாகத் தொடைகளில்,) கொட்டாவி விடுதல், சில்லிப்பு ஆகியவை காணப் படும். இருமலுடன் இரத்தம் தோய்ந்த கோழை வரும். நாட்பட்ட மூக்குச் சளி, இரத்தம் கலந்த சளி வெளியாகும். சத்தில்லாத, குறைந்த அளவு உள்ள உணவைச் சாப்பிட்டு வருகிறவர்களுக்கு வாயில் ஈறுகள் பற்களை விட்டு விலகி தளர்ந்து புண்ணாகி இரத்தப் பெருக்கெடுக்கும். வெண்மையான மணல் கலந்தது போலுள்ள மூத்திரம் இரத்தம் கலந்து வெளிவரும். மூத்திரத் துவாரத்திலிருந்து இரத்தம் வெளிவரும். இருமிய பிறகு இரத்தம் மட்டும் தனியாக வெளிப்படும்.

**காரத் தன்மை : பச்சைப் புண்ணாயிருப்பது :—எல்லாக் கழிவுகளும் காரமாய், சூட்டுடன், ஒட்டிக் கொள்ளும் குணமுள்ளதாய் இருக்கும். காதுகளிலிருந்து காரமான நீர் அல்லது சீழ் வருவதும் காது கேளாமையும். கறுப்பா**

கவும் காரமாகவும் உள்ள இரத்தப் பெருக்குடன் மாதவிடாய், தொடைகளைப் புண்ணாக்கும். ஏராளமான, காரமுள்ள வெள்ளை ஒழுக்கு, யோனியின் வெளிப்பக்கங்களில் புண்ணை உண்டாக்கும். நீர்க்கோர்வையில் மூக்கு புண்ணாகி மேலுதட்டிலும் புண் உண்டாகும். தொண்டையிலும் காற்றுக் குழாயிலும் கூட புண்ணை ஏற்படுத்தும், அடிவயிறு முழுவதும் தொட்டால் வலி இருக்கும் (எப்பொழுதும் அப்படியே இருக்காது), மாதவிடாய்க் காலத்தில் அடிபட்டது போல் வலி. உமிழ்நீரும் காரமாய் மாறி உதடுகளைப் புண்படுத்தும். வாயின் மூலைகளும் உதடுகளும் காய்ந்து வெடிப்பு உண்டாகி எரிச்சலும் இரத்தப் பெருக்கும் ஏற்படும். சருமத்தில் (கால்கள், ஆசனவாய், பிறப்பு உறுப்புகள் ஆகியவைகளுக்கு இடையில்) தோல் உறிதல்.

**உடல் சோர்வு:**—பல வியாதிகளில் உடல் சூடு குறைந்து அதிகச் சோர்வு தோன்றும். சுறு சுறுப்பாக முதலில் இருந்தாலும் மிக விரைவில் சோர்வு உண்டாகி விடும், டிப்தீரியாவில் தொண்டையில் அழுகிய புண், சுவாசகோசக் கோளாறுகள் ஆகியவைகளுடன் அதிகச் சோர்வு. மாதவிடாய்க் காலங்களில் அதிகமான சோர்வு,

**மூச்சுத் திணறல்: மூக்கு அடைப்பு:**—படபடப்புடன் மூச்சுத் திணறல், சிறிதுவேலை செய்தாலும் இரண்டொரு மாடிப்படி ஏறினாலும் சூடான அறையில் உள்ள போதும் திணறலும் படபடப்பும் மிக அதிகமாகும். இருதய சம்பந்தமுள்ள மூச்சுத் திணறல், காச சம்பந்தமுள்ள மூச்சுத் திணறல், மூக்கில் அடைப்பு, அனேகமாக இரவில், வாயினால் மூச்சு விட நேரும்; நாட்பட்ட நீர்க் கோர்வையில் இரவுகளில் மூக்கடைப்பு. குழந்தைகளுக்கு ஏற்



படும் தும்மல்கள் ஹீப்பார் ஸல்பர், நக்ஸ் வாமிகா, ஸாம்புகஸ், ஸ்டிக்டா) டிப்தீரியா அல்லது ஸ்கார்லேடினாவில் மூக்கடைப்பு; மூச்சுவிட முடியாததினால் குழந்தையினால் தூங்கவே முடியாது.

**எலும்புகளில் வலி:**—உடைந்து விடுமோ என்று தோன்றும் அளவுக்கு எலும்புகளில் வலி, இரவில் படுக்கையில் படுத்தவுடனும் அல்லது சீதோஷ்ண நிலைமையில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலாலும் அல்லது வாயில் உள்ள சூட்டின் அளவு மாறும்போதும் கடுமையான பல்வலி உண்டாகுதல், தாடைகளில் வலி அல்லது பற்களின் வேர்களிலே வலி, பருவ மாறுதல்களினால் எலும்புகளில் வலி தோன்றுதல்.

**அழுகும் குணம், கடுமைக் குணம்:**—தொண்டைப் புண் அழுகுதல்; கழுத்தில் உள்ள சுரப்பிகள் வீங்கி அதிக இரத்தம் சுரந்து காணப்படும்; தொண்டைச் சுரப்பிகளில் உண்டாகும் புண் அழுகும் குணம் கொண்டதாய் இருக்கும்; அத்துடன் அதிகக் களைப்பும் உண்டாகும். தொண்டையில் க்றகறத்த உணர்ச்சியுடனும் எரிச்சலுடனும் வலி. தொண்டைச் சுரப்பிகள் வீங்கி நீலநிறமாகி அதிக நாற்றமுள்ள சளியுடன் இருக்கும், கடுமையான ஸ்கார்லேடினா; தொண்டை புண்ணாகி கருஞ்சிவப்பு நிறமாகும்; தாடையிலும் கழுத்திலுமுள்ள சுரப்பிகளில் வீக்கத்துடன் வியாதியஸ்தர் தூக்கக் கலக்கமாகவும் குறட்டை விடுவதுபோல் சுவாசித்துக் கொண்டும் இருப்பார்.

**சுரப்பிகளில் வீக்கம்:**—தொண்டைச் சுரப்பிகளும். கழுத்திலுள்ள சுரப்பிகளும் வீங்கித் தொட்டால் உருண்டைகளாய்த் தென்படுதல், தாடையிலும் மற்ற எல்லாச் சுரப்பிகளிலுமே கல்போல் கடினமான வீக்கம்

அக்குள் சுரப்பிகளில் வீங்கி வலி இருக்கும். சில சமயங்களில் கண்டமாலையைக் குணம் செய்திருக்கிறது.

**வலப் பக்கமே அதிகம் தாக்கப் படுதல்:**—உடம்பின் வலது பக்கமே இடது பக்கத்தை விட அதிகமாய்த் தாக்கப் படுவதாகத் தெரிகிறது. வலது பாதத்தில் மதமதப்பு (ஸேபியா). வலது தாடைச் சுரப்பியில் கடினமான வீக்கம், வலது கை கனமாகவும் பலமே இல்லாதது போலவும் தோன்றுதல். குடல் பிதுக்கம் மட்டும் விதி விலக்காக இடது பக்கத்தில் ஏற்படும்.

## மற்ற குறிகள்.

பற்களை ஒன்றோடொன்று அழுத்தினால் தலை, கண்கள், காதுகள் ஆகிய இடங்களில் அதிர்ச்சி ஏற்படும், மெல்லும்போது தாடையில் உடையும் சப்தம், மார்பில் பலவீனம். இருதயம் பலம் குறைந்து அதனால் மூச்சுவிடச் சிரமமும் படபடப்பும் உண்டாகித் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளுதல், எலும்பு மூட்டில் நழுவிவிட்டது போல் அல்லது சுளுக்கு ஏற்பட்டு விட்டது போல் (மணிக்கட்டு, கால்கட்டை விரல்) வலி, மூளை தளர்ந்து விட்ட உணர்ச்சி, தலை திரும்பும் பக்கத்தில் மூளை நகருவதாகத் தோன்றுதல், குழந்தைகளால் மூக்கைச் சிந்தமுடியாது, மூக்கு நுனியில் சிரங்கு. நின்று கொண்டிருந்தால் குதிகாலில் வலி. தூங்கியவுடனே பயங்கரமான கனவுகள். ஆரம்ப நிலைமையில் உள்ள சுவாச கோச க்ஷயம். இருமியவுடன் வாயில் இரத்தத்தின் சுவையும் நல்ல சிவந்த இரத்தம் துப்புவதும்; மார்பில் எரிச்சலும் இருக்கும், சுவாச கோச க்ஷயத்தின் முற்றிய நிலைமையில் வியாதியஸ்தரின் அவஸ்தைகளைக் குறைக்கும். (கெண்ட்). காச சம்பந்த முள்ள சிற்றிருமல்,



**நாட் பட்ட மார்ச் சளி:**—வயதானவர்களிடம் காணப்படும்; சுவாச கோசங்களில் ஏராளமான சளி சேர்ந்திருக்கும்; சிறிய காற்றுக் குழாய்கள் விரிந்திருக்கும். தொண்டையில் நிறையச் சளி இருப்பது போல் பலமான இழுப்பு ஓசைகள் இருந்தாலும் அச்சளியை வெளியேற்ற வேண்டிய அவசியம் வியாதிஸ்தருக்கு உண்டாவதில்லை. அதிக பலவீனம் இடைவிடாமல் இருமினாலும் கோழை வெளியாவதில்லை அல்லது மிகுந்த கஷ்டத்துடன் சிறிதளவே வெளியாகும். குளிர் காலத்தில் விடியற்காலை 3 மணியிலிருந்து 4 மணிவரை உபாதி கூடுதலாய் இருக்கும். குளிர் காலத்தில் தோன்றும் நீர்க் கோர்வை, கோழை குழகுழப்பாகவும் இரத்தத் துளிகள் கலந்தும் இருக்கும், (லாரோஸிராஸஸ்).

**கண்வலி, பார்வை மங்குதல்:**—அளவுமீறி கண்களை உபயோகித்தால், உதாரணமாகத் தையல் வேலை, வெள்ளை நிறமுள்ள பொருள்களைப் பார்க்கும்போது மஞ்சளான புள்ளிகள் தோன்றுதல்.

**அக்கி:**—வயதானவர்களுக்கு, மூளைக் குறிகளும் தெளிவாக விருத்தியாகும்போது, அழுகும் குணம். உடல் முழுவதும் புண் உள்ள வலி,

**இரத்தத்தில் விஷப் பொருள் கலத்தல்:**—சுவாச கோசங்களில் சளியுள்ள குறிகளுடன் தூக்கக் கலக்கம் அல்லது மந்த குணம், உதடுகள் நீலமாக மாறும்.

**மூளை, முள்ளந் தண்டு வேக்காடு:**—ஆரம்ப நிலைமையில் வியாதியஸ்தர் வியாதியின் கொடூரமான தாக்குதலால் கீழே படுத்து விட்டவுடன். மயக்கம், உடல் சில்லிடுதல், நீல நிறமடைதல்.

**சுளுக்குகள்:**—பாதிக்கப்பட்ட மூட்டுகளில் சூடும் வலியும், ஆர்னிகாவுக்குப் பின் உபயோக மாகிறது.

**சுவாச கோசங்களின் தளர்ச்சி:**—இருமும்போது அல்லது மூச்சுவிடும் போது களகளவென்று தளர்ந்த இழுப்பு; சிறிதளவு கோழையே இருக்கும், காற்றுக் குழாய்கள் தளர்ந்து விடுதல்; உடல் சில்லென்று குளிர்ந்தும் நீல நிறமாகவும் மாறும், (ா ர்போ விஜியைப் பெரும்பாலும் ஒத்துள்ளது, ஆண்ட்டிமனியம் டார்ட்டில் இழுப்பு பலமாய்க் கேட்கும்,) இவ்வியாதிக்கு அம்மோனியம் கார்ப் மிகவும் உபயோகமுள்ளது என்று பெயர் வாங்கி யிருக்கிறது.

**சருமம்:**—கேழ்வரகுபோல சிறுசிறு சிரங்குகளுள்ள நாட்பட்ட சரும வியாதி. சிரங்கு உள்ள இடம் எவ்வளவு சிவப்பாய் இருந்தாலும் சிற்சில சமயங்களில் அதற்கு பெல்லடொன்னா தேவைப் படாமல் அம்மோனியம் கார்ப் உபயோகப் படுமென்று குரன்ஸே கூறுகிறார். உடலில் நல்ல வலிமை இல்லாததால் சரும வியாதி சரிவர வெளியே வருவதில்லை. கால்கைகளின் மடக்குகளிலும் (முழங்கால், முழங்கை) தொடையிடுக்குகள், ஆசனவாய், பிறப்பு உறுப்புகள் ஆகிய இடங்களிலும் கரப்பான் படை, ஸ்கார்லேடினா வியாதியில் இருப்பதைப் போன்ற தடிப்புகள் உடலின் மேற்பாகம் முழுவதும் இருக்கும். சருமம் அடிக்கடி தோல் உறியும். அடிக்கடி தோல் உறிந்து புண்ணாகும் குணமுள்ள சரும வியாதிகள், பொறுக்குகள் ஆடையில் ஒட்டிக் கொள்ளும்.

**உறவு:**—லாச்சஸிஸ் போலவே இருந்தாலும் அதற்குப் பகையாகும்.

**குறிப்பு:**—ரஸ் டாக்ஸின் விஷத்தை இது முறிக்கிறது. விஷப் பிராணிகளின் கொட்டுகள், கடிகளினால் ஏற்படும் கோளாறுகளை நீக்குகிறது. பாம்புக்கடிகளுக்கு மிகவும்



உபயோகமாகுமென்பது கீழ் உள்ள குறிகளிலிருந்து தெளிவாய் விளங்கும். தண்ணீர்போல் லேசான, கறுப்பு நிறமுள்ள இரத்தம் கசிதல், உடம்பு சில்லிடுதல், மயக்கம், உடல் நீல நிறமாகுதல், சோர்வு முதலியவை. கடுமையான, ஆபத்தை உண்டாகும் குறிகள் உள்ள வியாதிகளில் அதாவது இரத்தக் கட்டிகள், இராஜ பிளவைகள், அக்கி போன்ற சரும வியாதிகளில் வியாதி வெளியே தோன்றியவுடன் வியாதியஸ்தருக்குச் சிறிது அனுகூலம் ஏற்படுவது இயற்கை. அவ்விதம் அனுகூலம் எதுவும் ஏற்படாமல் உடனே மரணத்தை உண்டாக்கக் கூடிய அறிகுறிகள் தோன்றினால் உடனே **அம்மோனியம் கார்பை** உபயோகிக்க வேண்டும். இதனால் வியாதியின் கடுமை குறைந்து உடலில் வலிமை உண்டாகிப் பிறகு குறிகளுக்கேற்றபடி கொடுக்கப்படும் மற்ற ஔஷதங்களால் குணம் உண்டாகும்.

# அனகார்டியம்

## (ANACARDIUM)

**முன்னுரை:**—சருமம் பற்றிய வரை இவ் வௌஷதம் அனேகமாக **ரஸ் டாக்ஸை** ஒத்து இருக்கிறது. அதாவது சருமத்தில் அதிக அறிப்பு, எரிச்சல், சுட்ட கொப்புளம் போன்ற சிரங்குகள் முதலிய குறிகள் இரண்டு ஔஷதங்களிலும் காணப் படுகின்றன. **ஞாபக சக்தி குறைதல்** என்னும் மிக விசேஷமான குறியை நம் மெட்டீரியா மெடிகாவில் உள்ள வேறு எந்த ஔஷதமும் ஔஷதப் பரிக்ஷை செய்யப் பட்டபோது உண்டாக்கவில்லை. ஞாபக சக்தியைக் குறைத்ததுடன் நிற்காமல் எல்லா விதமான உணர்ச்சிகளையும் உடல் வலிமையையும் கடைசியாக மலப்

பையின் வலிமையையும் கூடக் குறைத்திருக்கிறது இவ் வெளஷதம். இதன் குறிகளில் மிக முக்கியமான மூன்றை மட்டும் சொல்ல வேண்டுமென்ருல் அவை 1. ஞாபக சக்தி குறைதல் 2. தக்கை உணர்ச்சி. 3. சாபம் இடும், ஆணை வைக்கும் சுபாவம் ஆகியவைகளாகத் தான் இருக்கும்.

## பொதுக் குறிகள்.

தகுதி:—வயதானவர்கள். மேகக் கிரந்தி வியாதி உள்ளவர்களுக்கு மன ஏக்கத்துடன் ஞாபக சக்தி குறைதல். இந்த நிலைமையில் இவ்வெளஷதத்தை உபயோகித்தால் மனக் குறிகள் மட்டும் மறையும். ஆனுல் மேகக் கிரந்தி அப்படியே இருக்கும். இதிலிருந்து இவ் வெளஷதம் மேகக் கிரந்தியை நீக்கும் குண முள்ள தல்ல என்பது விளங்கும்.

ஒரு குறிப்பு:—மேகக் கிரந்தியைத் தவிர மற்ற வியாதிகளில் மனக் குறிகளை அனுசரித்துக் கொடுக்கப் பட்டால் அனகார்டியம் மனக் குறிகளுடன் முழு வியாதியையும் குணம் செய்து விடுகிறது. ஞாபக மறதியை நீக்கும் போது அத்துடன் மற்ற குறிகளையும் சேர்த்து நீக்கி விடுகிறது என்று குரன்ஸே கூறுகிருர்.

மனம்:—(1)ஞாபக சக்தி குறைதல்; மறந்து போகும் குணம். எந்த விஷயத்தையும் மிக விரைவில் மறந்து விடுவார். தன் மறதிக் குணத்தைப் பற்றி மிகவும் கவலைப்படுவார். அதைப் பற்றிய நினைவினுல் பசியே ஏற்படுவதில்லை. திடீரென்று ஞாபகம் அழிதல்: எல்லாம் கனவு போல் தோன்றும். பெயர்களை மிக விரைவில் மறந்து விடுவார். வயதானவர்களுக்கு ஏற்படும் ஞாபகக் குறைவு. மூளைச் சோர்வு. (2) பயங்கள்:—சாவு வருகிறது என்ற எண்ணமும் பயமும். (3) பொய்த் தோற்றம்:—தான் நினைப்பதே சரி என்று தீர்மானித்தல்:



அதாவது தான் இரண்டாக இருப்பது போல் தோற்றம். எதுவும் உண்மையில்லை; எல்லாம் வெறும் கனவு தான் என்ற அபிப்பிராயம்; தன் பக்கத்தில் வேற்று மனிதர் யாரோ இருப்பதாகத் தோற்றம். தனக்கு இரண்டு விதமான எண்ணங்கள் இருப்பதாகவும் ஒரு எண்ணம் செய்ய உத்தரவிடும் காரியத்தை மற்ருெரு எண்ணம் செய்யாமல் தடுப்பதாகவும் நினைத்தல். நடந்து போகும் போது தன்னை யாரோ பின் தொடர்ந்து வருவதாகத் தோற்றம்: அதனுல் தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் சந்தேகித்தல். தன் காதினுள்ளே யாரோ மெதுவாகத் திட்டுவது போல் நினைத்தல். பிடிக்காத வாசனை வீசுவது போல் பொய் உணர்ச்சி. தொலைவில் இருப்பவர்களும் இறந்து போனவர்களும் பேசுவதைக் கேட்பதாகக் கூறுவார். அருகில் உள்ள பொருள்கள் தொலைவில் இருப்பதாகச் சொல்வார், (5) தகுதி யற்ற நடத்தை: கடுமையாக இருக்க வேண்டிய சமயங்களில் இடி இடியென்று உரக்கச் சிரித்துக் கொண்டிருப்பார். சிரிக்கக் கூடிய சமயங்களில் கடுமையாக இருப்பார். (6) விவேக நல்லுணர்ச்சி குறைதல்:—கடவுள் நம்பிக்கை இல்லாமை, ஈவு, இரக்கம் இல்லாமை, குரூர குணம், வஞ்சனை எண்ணம், எப்பொழுதும் தீய காரியங்களைச் செய்யவே முயற்சித்தல் ஆகியவை. (7) சாபம் இடவும் ஆணையிடவும் செய்தல்:—அல்ப விஷயங்கள் கூட கோபத்தை உண்டாக்கும். உடனே சாபமிடவும் ஆணையிடவும் ஆரம்பிப்பார். இவ்விதமான மனக்குறிகள் வியாதியின் காரணமாகத் தோன்றியிருந்தால்தான் இவ் வெளஷதம் குணம் செய்யும். கெட்ட நடத்தையினுல் ஏற்பட்டிருந்தால் குணம் செய்யாது. (8) நம்பிக்கை யில்லாமை:—தன்மீதும் நம்பிக்கை இருக்காது; பிறரையும் நம்ப

மாட்டார். (9) மன ஏக்கமும் வருத்தமும். (10) அலட்சியம்.

குறிப்பு :—மலை யேறும் கோஷ்டியில் பிரசித்தி பெற்ற F. S. ஸ்மித் என்பவர், எவரெஸ்டு சிகரத்தில் ஏறும் போது அவருக்கு ஒரு விநோதமான அனுபவம் ஏற்பட்டது. அனகார்டியம் வியாதியஸ்தருக்கு ஏற்படக் கூடிய அனுபவமாகவே இருந்தாலும் இருக்கலாம். அவர் எழுதுகிறார்; தன்னந் தனியாக நான் மலை ஏறிக்கொண்டிருந்த நேரம் முழுவதும் யாரோ ஒருவர் என்னைப் பின் தொடர்ந்து வருவதாக ஓர் உணர்ச்சி எனக்கு இருந்தது. இந்த உணர்ச்சி மிகவும் அதிகமாய் இருந்ததால் தனியாய் இருக்கிறோமென்ற உணர்ச்சி சிறிதும் இல்லை. என்னைப் பின் தொடர்ந்து வருபவருடன் என்னைக் கயிற்றினால் இறுகப் பிணைத்திருப்பது போலவும் நான் சறுக்கி விழுந்தால் "அவர்" என்னைத் தாங்கிக் கொள்வார் என்று கூடத் தோன்றியது. அடிக்கடி நான் லேசாகப் பின்பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனது ஞாபகம் இருக்கிறது. ஒரு சமயம் உயரமான ஓர் இடத்தை அடைந்தவுடன் திரும்பிப் பார்ப்பதை விட்டு விட்டுத் தின்பண்டம் உட்கொள்ள ஆரம்பித்தேன். தின்பண்டத்தை மிகக் கவனமாக இரண்டு பங்குகளாய்ப் பிரித்து ஒரு பங்கைக் கையில் எடுத்துக்கொண்டு சுற்றிலும் திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் இல்லாதது கண்டு அதிர்ச்சி உண்டாயிற்று என்றே சொல்லலாம். இந்த உணர்ச்சி எனக்குப் பலமாகவும் உபயோகமாகவும் இருந்ததாகவே தோன்றியது. தங்கி இருந்த இடத்தின் அருகில் வரும் வரை இந்த உணர்ச்சி இருந்தது. பிறகு திடீரென்று நான் தனியாய் இருக்கும் உணர்ச்சி தோன்றி விட்டது."

உடல் :—பல இடங்களில் தக்கையினால் அழுத்துவதைப் போன்ற வலிகள், ஒரு இடத்தில் தக்கை இருப்



பதைப் போல் அல்லது அதைச் சுற்றிக் கட்டியிருப்பது போல் உணர்ச்சி, தசைகளில் இழுக்கும் வலிகள். மூட்டுகள் சுருங்குதல், முகம் வெளுத்து கண்கள் குழி விழுந்து சுற்றிலும் கறுப்பு வளையமிட்டுக் காணப்படுதல், உள்ளங் கைகளில் பாலுண்ணி என்று அழைக்கப்படும் கெட்டசதை வளர்ச்சி. கோளாறுகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் போகும் (லைகபோடியம்)

உபாதி கூடுதல் :—குளிர் ஒத்துக் கொள்ளாது. விர் விர் என்று காற்று வீசுவதும் ஒத்துக் கொள்ளாது. அடிக்கடி சில்லிப்பு உண்டாகும் உடல்வாகு. காலையிலும் பிறகு மாலையிலிருந்து நள்ளிரவு வரையிலும் கூடுதலாகும்.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—சரும வியாதிகளில் சொறிந்தால் அறிப்பு கூடுதலாகும் (இருந்தாலும் வியாதியஸ்தர் எப்பொழுதும் சொறிந்து கொண்டே இருப்பார்) கழுத்துப் பிடிப்பு நடக்க ஆரம்பித்தவுடன் கூடுதலாகும். தலைவலி, மூளையை உபயோகித்து வேலை செய்தால் அதிகமாகும்.

உபாதி குறைதல் :—சாப்பிட்டவுடன் பொதுவாக எல்லாக் குறிகளும் மறைகின்றன. ஆனால் இரண்டு மணி கழித்து மீண்டும் தோன்றும். நாட்பட்ட அசீரணத்தின் குறிகள் சாப்பிட்டால் குறையும். வயிற்றில் சீரண சம்பந்தமாய் ஏற்படும் வலிகள் சாப்பிட்டவுடன் நின்று இரண்டு அல்லது மூன்று மணி கழிந்த பிறகு மீண்டும் தோன்றும். இருமலும் தலை வலியும் சாப்பிட்டால் குறையும். பெண்களுக்குக் கரு உள்ளபோது காலையில் ஏற்படும் குமட்டல், வாந்தி முதலிய கோளாறுகள் சாப்பிட்டவுடனே நீங்கிப் பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் தோன்றும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**தக்கை உணர்ச்சி:**—கண்கள், தலை, முதுகெலும்பு, மலப்பை, மூத்திரப் பை முதலிய பல இடங்களில் தக்கை அழுத்திக் கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி.

கண்களில் தக்கையினால் அழுத்தும் உணர்ச்சி. காதுகளினுள் தக்கையைச் செலுத்தி அழுத்துவதுபோன்றவலி. குடலினுள்ளே ஒரு தக்கை அடைத்துக் கொண்டிருப்பது போல் உணர்ச்சியும் வலியும். மார்பின் வலது பக்கத்தில் தக்கை வைத்து அமுக்குவதுபோல்லேசான வலி, தொடைகளிலும் இதே போன்ற உணர்ச்சி. வேற்றுப் பொருள் இருப்பது போன்ற உணர்ச்சி எந்தப் பாகத்தில் காணப்பட்டாலும் உபயோகமாகும். உண்ட உணவில் ஒரு சிறு பகுதி உணவுப்பாதையில் சிக்கிவிட்ட உணர்ச்சி, அதனால் அதை நீக்க இடைவிடாமல் விழுங்கிக் கொண்டே இருத்தல்.

**கட்டிப் போட்ட உணர்ச்சி:**—உடலின் ஏதோ ஒரு பாகத்தில் அதைச் சுற்றி கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி. கால்களைச் சுற்றித் துணியினால் கட்டியிருப்பது போல் விரைத்திருக்கும் உணர்ச்சி. முழங் கால்களை இறுகக் கட்டிவிட்ட உணர்ச்சி; முழங் கால்களில் பக்ஷவாதம் வந்து விட்டது போல் தோன்றுதல்; அதனால் நடப்பது மிகக் கஷ்டமாய் இருக்கும். தலையைச் சுற்றி இறுகக் கட்டிய உணர்ச்சி.

**பலவீனம்; பக்ஷ வாதப் பலவீனம்:**—சிறிதளவு நடந்தாலும் அதிகக் களைப்பை உண்டாக்கும். கால்களில், குறிப்பாக முழங் கால்களில் அதிகச் சோர்வு, நடுக்கம், அதிகப் பலவீனம் ஆகியவை தோன்றிப் பக்ஷ வாதமும் உண்டாகலாம். அடிக்கடி மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்படும்; ஆனால் மலம் வெளியாகாது. மலப் பைக்குப்



பலமே இல்லாதது போலவும் ஆசன வாயினுள் தக்கை அடைத்துக் கொண்டிருப்பது போலவும் தோன்றும். இக்குறி மலப் பையில் ஏராளமாய் மலம் சேர்ந்து விட்டதால் ஏற்பட்டிருக்கும் என்று நினைக்க வேண்டாம். அனகார்டியத்தின் மலச் சிக்கல் பக்ஷ வாதத்தினால் ஏற்படுகிறது. நக்ஸ் வாமிகாவில் காணப்படுவது போல் குடலின் தள்ளும் சக்தியில் கோளாறு இதில் தென்படுவதில்லை. மலம் கழித்த பிறகும் மூத்திரம் கழித்த பிறகும் கூட சுக்கிலத் தண்ணீர் ஒழுகுதல். இறுகிய மலத்தைக் கழித்தவுடன் இந்திரியம் வெளியாகும். கடைசியாக புலன் உணர்ச்சிகள் குறைந்து விடும். பார்வை மங்கலாகும். நாக்கின் ருசி யறியும் சக்தி மறையும், தொட்டால் சருமத்தில் உணர்ச்சி இருக்காது. காது கேளாது. இவைகளுடன் சீரண சக்தி குறைந்து வயிற்றில் உப்பிசம் தோன்றும்.

**விட்டு விட்டு வரும் குறிகள்:**—வியாதி ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு மறைந்திருந்து பிறகு மீண்டும் தோன்றி இரண்டு நாட்களுக்கு நீடிக்கும். பல நாட்களுக்குச் சேர்ந்தாற் போல் இரவு நேரங்களில் தூக்கம் வருவதில்லை. அனேகமாக முறை வைத்துத் தோன்றி மறையும் கோளாறுகள்.

### மற்ற குறிகள்.

உள்ளங் கைகளில் ஒட்டிக் கொள்ளும் வியர்வை. சிற்றின்பக் கனவுகள் இல்லாமலேயே அடிக்கடி இந்திரியம் நழுவும். ஏராளமான உமிழ் நீர் உற்பத்தியாகிச் சில சமயத்தில் வாந்தியை உண்டாக்கும். வாயினுள் வலியுள்ள சிறு கொப்புளங்கள்; அழுகிய நாற்றம் வீசும். வருங்காலத்தைப்பற்றியும், நெருப்பு, திருடர்கள், வியா

திகள், சாவு, அபாயங்கள் ஆகியவை பற்றியும் கனவுகள். உண்ணும் போதும் குடிக்கும் போதும் புறையேறுதல். வயதானவர்களின் புத்திக் குழப்பம்.

சருமம் :—குண்டுசித் தலையிலிருந்து மொச்சைக் கொட்டை வரையில் பலவித அளவுகளிலுள்ள கொப்புளங்கள்; அனேகமாக நல்ல சிவப்பாய் இருக்கும். சில சமயங்களில் எரிச்சலும். படர் தாமரை. அதிக அரிப்பும் சிறிய கொப்புளங்களும் உள்ள கரப்பான் படைகள் (முகத்திலும் கழுத்திலும்). அக்கிச் சிறங்குகள் கறுப்பாகவும் விஷத் தன்மை உள்ளதாகவும் இருக்கும்.

கக்குவாய் இருமல் :—இருமியவுடன் மூச்சுத் திணறலும் தூக்கக் கலக்கமும்.

உறவு :—லைகபோடியம். பல்ஸடில்லா, ப்ளாட்டினு, ஆகியவைகளுக்குப் பிறகு அனகார்டியம் நன்ருக வேலைசெய்யும். அனகார்டியத்துக்குப் பிறகு ப்ளாட்டினு நன்குவேலை செய்யும்.

ஒப்பிடுதல் :—சாப்பிட்டவுடன் தலைவலி முழுவதும் நீங்கும் குறியில் ஸோரினத்துடன். உறுப்பைச் சுற்றிக் கட்டி இருக்கும் உணர்ச்சியில் காக்டஸ், கார்பாலிக் ஆஸிட், ஸல்பர் ஆகியவைகளுடன். சாபம் இடவும் ஆணையிடவும் அடக்க முடியாத ஆவலில் லாக் கானினம், நைட்ரிக் ஆஸிட் ஆகியவைகளுடன். சாப்பிட்ட பிறகு குறிகள் மறைவதில் காலீ பாஸ், ஸோரினம் ஆகியவைகளுடன்.

குறிப்பு :—தசை நார்களில் ஏற்படும் காயங்களுக்கு மிகச் சிறந்த ஒளஷதமென்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.

---

# அந்த்ராஸினம்

## (ANTHRACINUM)

முன்னுரை :—இரத்தக் கட்டிகள், இராஜ பிளவை, அக்கி, அழுகுதல், விஷம் கலந்த வேக்காடு, விஷம் கலந்த சுரம், சீழ்ப் புண்கள், சுரப்பிகளில் வீக்கம், ஆகியவைகளிலும் கடைசியாகப் பெரியம்மையிலும் கூட மிகுந்த உபயோகமுள்ள இந்த ஒளஷதம் வியர்திப் பொருளிலிருந்து தயாரிக்கப் படுகிறது,

### பொதுவான குறிகள்.

தகுதி :—இராஜ பிளவை, விஷத்தன்மை வாய்ந்த இரத்தக் கட்டிகள், குழிப் புண்கள், விஷம் கலந்து ஏற்படும் வேக்காடு ஆகிய வியாதிகளில் மிகவும் உபயோகமுள்ளது. சதைஅழுகி பொறுக்க முடியாத எரிச்சலுடன் இருக்கும். (1) இரத்தக் கட்டிகள் இடைவிடாமல் தோன்றிக் கொண்டே இருத்தல் (2) பொறுக்கமுடியாத எரிச்சல், குறிகளுக்குத் தக்கபடி ஆர்ஸனிகம் ஆல்பத்தைக் கொடுத்ததினுல் குணம் ஏற்படாத சமயங்களில் விசேஷமாக உபயோகப்படும். (3) அழுகும் குணமுள்ள புண்கள்; (4) சதை அழுகுதல், (5) குமட்டலை உண்டாக்கும் நாற்றம்; (6) அதிகக் களைப்புடன் விஷப் பொருள்கள் உடலில் பரவி ஏற்படும் சுரம் (7) விஷச்சுர முள்ள வியாதியஸ்தர்கள் படுத்திருக்கும் அறையிலோ அல்லது பிணப் பரிசோதனை செய்யும் இடங்களிலோ உள்ள கெட்ட காற்றைச் சுவாசித்ததினுல் ஏற்படும் கோளாறுகள்; (8) சீழ் முதலிய விஷப் பொருள்கள் உடலினுள் பரவியதால் ஏற்படும் கோளாறுகள் (9) நாற்றமுள்ள சுவாசக் காற்றை உள்ளிழுத்ததினுல் ஏற்படும் கோளாறுகள் (பைரோஜன்) ஆகிய இவ்வொன்பதும் அந்த்ராஸினம் உபயோகமாகும் என்பதை அறிவிக்கும்.

### மற்ற குறிகள்.

**இரத்தப் பெருக்கு** :—எந்த இடத்திலிருந்து பெருக்கெடுத்தாலும் (மூக்கு, வாய், ஆசனவாய், அல்லது பிறப்பு உறுப்புகள்) இரத்தம் கறுப்பாகவும் கெட்டியாகவும் தார் போலவும் மிக விரைவில் கெட்டுவிடும் குணம் உள்ளதாகவும் (க்ரொடேலஸ்) இருந்தால், உறையாத இரத்தம் வெளிப்படும் இரத்தப் பெருக்கு.

**உடம்பில் விஷப் பொருள் பரவி ஏற்படும் சுரம்** :—உடல் வலிமை மிக விரைவில் குறைந்து விடுதல்; இருதயத் துடிப்பின் எண்ணிக்கை அதிகமாகும்; ஆனால் பலம் குறைந்து விடும். நாடி தளர்ந்து புத்தித் தடுமாற்றமும் மயக்கமும் (பைரோஜனியம்).

**இராஜ பிளவை** :—பொறுக்க முடியாத எரிச்சலும் வலியும், மிகுந்த நாற்றம் வீசும், மெல்லிய சீழ் வெளிப்படும்.

**பிணப் பரிசோதனையில் வெட்டுக் காயம்** :—(இவ்வித சமயங்களில் உடனே ஆர்ஸனிகம் ஆல்பத்தை உட்கொள்ள வேண்டும். காயம் அழுக ஆரம்பித்தால் அந்த்ராஸினம் தேவைப்படும். இத்துடன் அதிகச் சோர்வுடன் விஷச் சுரம் உண்டாகும்.

**விஷப் பிராணிகளின் கடி அல்லது கொட்டு** :—கடிப்பட்ட அல்லது கொட்டப் பட்ட இடம் வீங்கி நிறம் மாறி, சிவந்த நிறமுள்ள கோடுகள் அந்த இடத்திலிருந்து ஆரம்பித்துப் போனால் (லாச்சஸிஸ், பைரோஜனியம்).

**மண்ணீரல்** :—ஆடு மாடுகள், குதிரைகள் முதலிய பிராணிகளுக்குப் பெருவாரியாகத் தோன்றும் மண்ணீரல் பற்றிய வியாதிகளும் சுரமும்.

**இரத்தக் கட்டிகள்** :—அடிக்கடி இடைவிடாமல் கட்டி



கள் ஏற்பட்டுக் கொண்டே இருத்தல், ஆர்னிகா, ஸல்பர்).

**அக்கி** :—அழுகும் குணம் கொடுமையும் உள்ள வகை

**சுரப்பிகள்** :—சுரப்பிகளில் வலியுடன் வீக்கம், அக்குள் சுரப்பிகளில் வீக்கம். தாடைச் சுரப்பிகளில் வேக்காட்டுடன் அழுக ஆரம்பித்தல்.

**புரை யோடுதல்** :—புண்களைச் சுற்றிக் கல்போல் கடினமாகுதல். நீர்க்கொண்டு வீங்கியும் இருக்கலாம்.

**நகச் சுற்றி**:—பொறுக்க முடியாத எரிச்சலும் வலியும் சதை அழுகுவதும் உள்ள மிக மோசமான நகச் சுற்றிகளையும் குணம் செய்திருக்கிறது.

**உறவு** :—ஆர்ஸனிகம்ஆல்பத்தை ஒத்துள்ளது. அதைப் பின் தொடர்ந்து வியாதியை முழுவதும் குணம் செய்கிறது. குறிகளைக் கவனிக்கும்போது ஆர்ஸனிகம்ஆல்பமே ஏற்றது என்று தோன்றினாலும் அதனால் எரிச்சலும் வலியும் நீங்காவிட்டால் அந்த்ராஸினம் உபயோகமாகும். இவ்விதக் கேசு ஒன்றில் சதை அழுகுவது ஏராளமாய் இருந்தது அந்த்ராஸினம் முதலில் 30 வீரியத்தில் இரண்டு வேளைகளும் பிறகு 200 வீரியத்தில் ஒருவேளையும் கொடுக்க ஒரே வாரத்தில் பூரண குணம் உண்டாகியது. அதற்கு முன் ஆர்ஸனிகம் ஆல்பம் இரண்டு வேளைகள் கொடுத்தும் குறிப்பிடத் தக்க பயன் ஏற்படவில்லை. புரையோடுவதற்கு அந்த்ராஸினம் கொடுத்த பிறகு ஸைலீஷியா நன்றாக வேலை செய்யும்.

---

## ஆண்ட்டிமனியம் க்ரூடம்
## (ANTIMONIUM CRUDUM)

**முன்னுரை** :—இவ் வௌஷதத்தில் ஸல்பர் கலந்திருப்பதால் ஸோரா விஷத்தை அடக்க உதவுகிறது. சரும வியாதிகளைத் தடை செய்தல், சீழ்ப்புண்கள் ஆகியவை

களால் தோன்றும் நாட் பட்ட கோளாறுகளில் ஸல்பரைப் போலவே இதுவும் உபயோகப் படுகிறது.

ஹோமியோபதி மெட்டிரியா மெடிக்காவில் உள்ள மிகமுக்கியமான ஔஷதங்களில் **ஆண்ட்டிமனியம் க்ரூடமும்** ஒன்று. பல விதமான கோளாறுகளில் மனக் குறிகளை மாத்திரம் ஆதாரமாய்க் கொண்டு அவைகளுக்கு ஏற்ற ஔஷதம் இதுவே என்று தவறு இல்லாமல் தேர்ந்தெடுக்கலாம்.

விசேஷமான குறிகள் பின்வருமாறு:—(1) அதிகக் கோப குணம். முன்கோபம் (2). நாக்கின்மேல் கனமான பால்போல் வெள்ளையான அழுக்கு (3) குளிர்ந்ததண்ணீரில் குளித்தாலும் சூட்டினாலும் கோளாறுகள் கூடுதலாகுதல் (4) சருமத்தில் இயற்கைக்கு மாறான கெட்ட சதை வளர்ந்து அவை தடித்துக் கல்போல் கடினமாகி தாறுமாறாகவும் வளருதல் (பாலுண்ணி, கால் ஆணி, நகம் கோணல் மாணலாக வளர்ந்து கொம்புபோல் தோன்றுதல்) 5. வாந்தி, நாக்கில் கனமான பால்போல் வெண்மையான அழுக்கு முதலிய விசேஷக் குறிகளுடன் காணப்படும் சீரணக் கோளாறுகள்.

## பொதுவான குறிகள்.

**தகுதி** :—குழந்தைகளுக்கும் அதிகச் சதைப் பிடிப்புடன் வளரும் சிறுவர்களுக்கும் வயதானவர்களுக்கும் மிகவும் ஏற்றது. உடல் இளைக்கும் குணத்துக்கும் (குழந்தைகளின் உடல்மெலிவு) ஏற்றதே. வயிற்றுப் போக்கும் மலச் சிக்கலும் ஒன்று மாற்றி ஒன்று தோன்றுதல், அல்லது விடியற்காலையில் வயிற்றுப் போக்குடன் மலச் சிக்கல் அல்லது விடியற் காலையில் ஏற்படும் வயிற்றுப் போக்கு திடீரென்று நின்று மலச்சிக்கல் தோன்றுதல் ஆகிய கோளாறுகளுள்ள கிழவர்கள். அடிக்கடி மண்டைச்சளி ஏற்படுதல், மிக எளிதில் சீரணக் கோளாறுகள் தோன்றும் குணமுள்ள கிழவர்கள்.



**மனம்** :—அதிக முன் கோபம் உள்ள குழந்தைகள், பிறர் தொடுவது அல்லது பார்ப்பதுகூடப் பிடிக்காது. பெரியவர்கள் வருத்தமாகவும் பிறருடன் பேசவிரும்பாமலும் இருப்பார்கள். நில வொளியிலும் மங்கலான வெளிச்சத்திலும் உணர்ச்சி வசப்படும் இளைஞர்கள். உயிர் மீது வெறுப்பு (மிகக் கெடுதலான ஒரு குறி). அழுகையுடன் மிகுந்த வருத்தம். தற்கொலை செய்து கொள்ள அதுவும் தண்ணீரில் மூழ்கிச் சாக விருப்பம்; பிறருடன் சேர்ந்து இருக்கப் பயம்.

தன்னைத் தொடுவதோ, பார்ப்பதோ குழந்தைக்குப் பிடிக்காது என்னும் குறியை டாக்டர் நாஷ் ஒருஇரத்தினத்தைப் போல் மதித்தார். ஏனென்றால் இக் குறியை மட்டும் முக்கியமாக மதித்து அசீரணத்தினால் ஏற்பட்ட விடாமல் அடிக்கும் சுரமுள்ள பல வியாதிகளை அவர் வெற்றிகரமாகக் குணம் செய்திருக்கிறார். அதே போல் ஒரு டிப்தரியா வியாதியை பாரிங்டனும் பிழைக்காது என்று கைவிடப் பட்ட ஒரு கபவாத சுரத்தை நானும் குணம் செய்திருக்கிறோம். ஆயினும் இந்த ஔஷதமே உபயோகமாகுமென்பதற்கு மற்ற சிலகுறிகளும் இருக்க வேண்டியது அவசியம். உதாரணங்களாக, நாக்கில் கனத்த, வெண்மையான அழுக்கு. மூக்குத்துவாரங்களும், வாயின் ஓரங்களும் காய்ந்து, வெடித்துப் புண்ணாகி இருத்தல்.

**உடல்** :—சருமம், நகங்கள், சளிச்சவ்வுகள் ஆகியவை பொதுவாக வியாதிக்கு உள்ளாகி இருக்கும். உருக்குலைவு, கெட்ட சதை வளர்ச்சி என்னும் தலைப்பைப் பார்க்கவும். உடலின் பல இடங்களில் தசைகள் லேசாக இழுக்கப்படுதல். உடல் முழுவதும் நீர்ச் சுரந்து

வீங்குதல், அல்ப காரணத்தாலும் சீரணக் கோளாறு தோன்றும். வாயில் அதிக உப்புக் கரிப்புள்ள உமிழ்நீர். உணவில் வெறுப்புடன் பசி இல்லாமை. புளிப்புப் பொருள்களிலும் ஊறுகாய்களிலும் விருப்பம். ஏப்பம் உண்ணும் உணவின் சுவை யுள்ளதாய் இருக்கும். தாகம் இருக்காது. சீரணிக்க முடியாத உணவுப் பொருள்களைத் தின்ன அளவு கடந்த ஆவல், அதிகக் களைப்பு (இடைவிடாமல் அடிக்கும் சுரத்துடன்). பொதுவான பலவீனம், விசேஷமாக இரவிலும், நடக்கும்போதும். சில சமயங்களில் அதிகக் களைப்பு. பலவீனமும் மயக்கமும் திடீரென்று தோன்றுதல்.

**உபாதி கூடுதல் :—குளிர்ந்த தண்ணீரில் குளித்ததினுல். குளிர்ந்த தண்ணீரில் குளிக்க வெறுப்பு; குளிர்ந்த தண்ணீரில்** குளிப்பாட்டினுல் அல்லது துடைத்தால் குழந்தை கதறி அழும். குளிர்ந்த தண்ணீரில் குளித்தால் கடுமையான தலைவலி (ஆறுகளில் குளித்தால்) மாதவிடாய்த் தடைப்படுதல். தண்ணீரில் நீந்தியதால் அல்லது விழுந்ததினுல் நீர்க்கோர்வை உண்டாகும் (ரஸ்டாக்ஸ்). குளிர்ந்த ஒற்றிடங்கள், குளிர்ந்த ஈரக்கசிவு உள்ள பருவகாலம், ஒயின், புளிப்புள்ள பொருள்கள் (புளி மட்டும் ஒத்துக்கொள்ளாமல் இருப்பதில்லை); கோடைக்காலம், சூரிய வெப்பம், திறந்த அடுப்பு ஆகியவைகளால் வியாதி கூடுதலாகும். சூரிய வெப்பத்தைத் தாங்கமுடியாது. கோடைக் காலத்தில் களைப்பு உண்டாகும். அதிகச் சூடு. சூட்டினுல் உபாதிகள் பொதுவாகக் கூடுதலானுலும் குளிர் ஒத்துக்கொள்ளாது. அடிக்கடி தோன்றும் வியாதிகள்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) வயிற்றுப்போக்கு, சீரணக் கோளாறுகள், கீல்வாதம், தலைவலி, உடம்புவலி முதலியவை புளிப்பான ஒயினைக் குடித்தால் கூடுதலாகும். வழக்கத்தைவிட அதிகமாய்ச் சாப்பிட்டால் சீரணக் கோளாறுகள் அதிகமாகும். உடம்பில் அதிகச் சூடுதாக்கினுல் தொண்டை கட்டிப் பேசமுடியாமல் போகும். அதிகச் சூடு ஏற்பட்டாலும், எரியும் அடுப்பின் அருகே நின்றுலும், குளிர்ந்த தண்ணீரில் குளித்தாலும் கக்குவாய் இருமல் கடுமையாகும். நிலவொளியில் மனக் கோளாறுகள் மும்முரமாகும். சொத்தைப் பற்களில் வலி இரவில் படுத்துக் கொண்டவுடன் தோன்றும், சாப்பிட்டாலும் குளிர்ந்த தண்ணீர் பட்டாலும் அதிகமாகும்.



**உபாதி குறைதல் :—**சூடான ஒற்றிடங்களாலும் சூடுதண்ணீரில் குளித்தாலும் உபாதிகள் குறையும் (ஆனுல் சுற்றுப் புறங்களில் உள்ள சூட்டினுல் தாக்கப்படுதல், அதாவது கானல் சூடு, அதிக உடல் சூடு, சூடான அறைகள் ஆகியவை ஒத்துக் கொள்ளாது),

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**உருக் குலைவும் கெட்ட சதை வளர்ச்சிகளும் :—**இவ்வௌஷதத்தின் மிக முக்கியமான இக்குறி சருமத்திலும் சளிச் சவ்வு, நகங்கள் ஆகியவைகளிலும் காணப்படுகிறது. அவைகளில் வறட்சியும், கல்போல் கடினமாக மாறுவதும், தடித்தலும், வெடிப்பும், பொறுக்குகளும்புண்களும் உண்டாகும், கீழ்க்காணும் குறிகளை நீங்கள் இப்பொழுது தெளிவாய் அறிந்து கொள்ளலாம். சருமம் காய்ந்திருக்கும். உதடுகள் காய்ந்திருக்கும், உள்ளங்கால் களில் ஆணிகள் விழுந்து புண்ணுகும், வலியினுல் மிகவும் கஷ்டப்பட்டு நடப்பார், நகங்களில் வெடிப்பு; கோணல் மாணலாகவே வளருதல். நகங்களின் அடியில் கொம்பு போல் வளருதல், விரல் நசுங்கிய பிறகு நகம் பல பிளவுகளுடனும் கொம்புகளுடனும் வளருதல், இவைகளால் அதிக வலி. கால் கட்டைவிரல் நகத்தின் அடிப்புறத்

இல் கடினமான, கெட்ட சதை வளருதல். ஆசனவாயில் எரிச்சலுடனும் வலியுடனும் குத்தும் உணர்ச்சியுடனும் உள்ள கெட்ட சதை வளர்ச்சி, புண்ணுகவும் இருக்கும். பாலுண்ணி, குறிப்பாகக் கைகளில். மூக்குத் துவாரங்கள் புண்ணும், வெடித்துப் பொறுக்குகளுடன் இருக்கும். உதடுகளிலும் இவ்விதமே இருக்கும். விழிகளின் ஓரங்களில் சிவந்து பொறுக்குகள் உண்டாகும். வாயின் மூலைகள் வெடித்திருக்கும். வலியும் இருக்கும். பல நாட்களுக்கு ஒரு முறை ஏற்படும். பொறுக்குகள் கனமாகவும் கடினமாகவும் தேன் போன்ற நிறமாகவும் இருக்கும். இமைகளில் நாட்பட்ட வேக்காடு, (அறிப்பும் இரவுகளில் ஒட்டிக் கொள்வதும்). கன்னங்களிலும் மூகவாய்க் கட்டையிலும் மஞ்சள் நிறமுள்ள பொறுக்குகள் ஏற்படும் சரும வியாதிகள். தொட்டால் புண்ணும் இருக்கும். வியாதி பிடித்த மயிர், தலையில் அறிப்புடன் மயிர் கொட்டுதல். கல்லீரல் முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியில் மட்டும் வேக்காடு தோன்றிக் கல் போல் கடினமாகுதல், (கல்லீரலிலும் அதன் அருகிலும் கடுமையான வலிகள்) கடைசியாக ஆணின் மானி, விரை ஆகிய பிறப்பு உறுப்புகள் சிறுத்துப் போகும் என்பதையும் சேர்க்கலாம்.

குமட்டல்: வாந்தி :—ஆண்டிமனியம் க்ரூடம் தேவைப்படும் வாந்தியில் தாகம் இருக்காது. எதனுலும் நிறுத்த முடியாத, கடுமையான வாந்தி. (லொபேலியா, ஆண்ட்டிமனியம் டார்ட்) கசப்பான, பித்தம் கலந்த, அல்லது குழ குழப்பான சளி உள்ள வாந்தி; சாப்பிட்டாலும் தண்ணீர் குடித்தாலும் மறுபடி தோன்றும். குமட்டல் நின்ற பிறகும் வாந்தி வந்து கொண்டு இருக்கும். தாய்ப்பால் குடித்தவுடன் குழந்தை தயிர்க்கட்டிகளாய்



வாந்தி செய்யும்; பிறகு பால் குடிக்க மறுத்துக் கோபமாய் இருக்கும். குமட்டல் ஏற்படாமலேயே வாந்தி ஏற்படுதல் (செலிடோனியம்)அல்லது வாந்தி செய்தபிறகு சௌகரியம் ஏற்படாமல் இருத்தல். கடுமையான வாந்தியும் வயிற்றுப் போக்கும் (ஆர்ஸனிகம் ஆல்பம், வெராட்ரம் ஆல்பம்) குமட்டலும் வாந்தியும் அல்லது குமட்டலே இல்லாத வாந்தியும் அதிக நேரம் இடைவிடாமல் இருக்கும்.

அடி வயிற்றில் கனம் :—அல்ப காரணங்களாலும் அசீரணம் தோன்றும். எப்பொழுதும் வயிறு நிறைந்து இருப்பது போல், அல்லது அளவுமீறி சாப்பிட்டுவிட்டது போல் உணர்ச்சி. ஒன்றுமே சாப்பிடாத சமயங்களிலும் இவ்வித உணர்ச்சி உண்டாகக் கூடும். அடிவயிறு பார்வைக்குத் தட்டையாக இருந்தாலும் உப்பி இருப்பது போல் உணர்ச்சி, சாப்பிட்டவுடன் உப்பிசம்.

கீல் வாயு உள்ள உடல்: வியாதியின் உருவ, இடமாற்றத் தன்மை :—விரல் எலும்பு மூட்டுகளில் கீல்வாயு, விரல் மடக்குகளில் உள்ள வீக்கத்தில் வலி மறைந்தவுடன் வயிறும் குடல்களும் உப்பி வலிக்க ஆரம்பிக்கும். இதே போல் கால்களில் கீல்வாயுவினுல் ஏற்பட்ட வலி மறைந்தவுடன் வயிற்றுக் கோளாறுகள் தோன்றும். நாட்பட்ட கீல்வாயு வியாதியஸ்தர்களுக்குத் தோன்றும், அதிகத் தொந்திரவைத் தரும் மூலம்.

கட்டிகள் உள்ள கழிவுகள் :—தண்ணீர் போன்ற வெள்ளை ஒழுக்கில் பல கட்டிகள் கலந்திருக்கும்; காரமாகவும் சில சமயங்களில் தொண்டையில் எரிச்சலை உண்டாக்குவதாகவும் இருக்கும். தண்ணீர் போன்ற அல்லது குழகுழவென்று இளகிய மலத்தில் சிறிய கடினமான உருண்டைகள் அல்லது சீரணமாகாத உணவுப்

பொருள் அல்லது பெரிய உருண்டைகள் அல்லது தயி ராக மாறிய பெரிய பெரிய பால்கட்டிகள் காணப்படும். ஆசனத் தட்டுகளிலும் கால்களிலும் சிவப்பு வளையம் உள்ள கட்டிகள்.

**வியர்த்தல் :**—களைப்பை உண்டாக்கும் ஏராளமான வியர்வை; இரவு நேரங்களில் வியர்வை. சிறிது வேலை செய்தாலும் ஏராளமான வியர்வை உண்டாகும். சிறி தளவு சூடு இருந்தாலும் சொல்ல முடியாத அளவு அதிக வியர்வை உண்டாகி அதனால் நீர்க் கோர்வை தோன்றுதல்.

**பக்கம் மாறித் தோன்றுதல் :**—வியாதிக் குறிகள் மறு படி தோன்றும் போது எதிர்ப்பக்கத்தில் தோன்றும் அல்லது ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குப் போ கும். இடது பக்கமே கூடுதலாக இருக்கும். இடது பக்கத்தில் கீழ்ப்பகுதியும் வலது பக்கத்தில் மேல் பகுதி யும் தாக்கப்படுவது மிக விசேஷம்.

## மற்ற குறிகள்

இடை விடாமல் அபான வாயு வெளிப் படுதல்; வருஷக் கணக்கில் மேலும் கீழும் போய்க் கொண்டே இருக்கும்; ஏப்பமும் சாப்பிட்ட உணவின் சுவை இருப் பதும், காற்றை உள்ளிழுக்கும் போது மூக்கில் குளிர்ந்த உணர்ச்சி. அசீரணத்தினால் வயிற்றில் இழுத்துப்பிடிக் கும் வலி, (சைனா, நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா) இடை விடாமல் ஏப்பம். வயிற்றுக் கோளாறினால் தலைவலி, தலை வலிக்குப்பின் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு,—வய தானவர் களுக்கு ஏற்படும் இடைவிடாத தூக்கக் கலக்கம்.

**மூலங்கள் :**—சளியுள்ள மூலங்கள், சீழ்ப் போன்ற, ஆடைகளில் மஞ்சள் கறையை உண்டாக்கும் போக்கு கசிந்து கொண்டிருக்கும்.



LL N156-1

**இருமல் :**—விடியற்காலையில் அடிக்கடி இருமல் ஏற் படுதல், முதல் தடவை மிகவும் சிரமப்படும், போகப் போக இலகுவாக ஆகும்.

**உறவு :**—பல்ஸடில்லா, மெர்க்யூரியஸ், ஸல்பர் ஆகிய வைகளுக்குப் பிறகு நன்றாக வேலைசெய்யும்.

**ஒப்பிடுதல் :**—பல்ஸடில்லாவில் குதிகாலில் வேக்காடும் வலியும்; லேடம் பாலில் குதிகால்களிலும் உள்ளங்கால் களிலும் நடக்கும்போது வலி; லைகபோடியத்தில் உள்ளங் கால் வீங்கி நடக்கும்போது வலி; லேடம், நேட்ரம் கார்ப் இவ்விரண்டிலும் குதிகால்களில் கொப்புளங்கள் இருக்கும். மெதாரினத்தில் குதிகால் களிலும் உள்ளங் கால்களின் ஓரங்களிலும் நடந்தால் வலி. வலியுள்ள கால் ஆணிகள். அல்ப வேலைசெய்தாலும் வியர்வை (கல்கேரியா கார்ப். ஹிப்பார் ஸல்பர், லாச்சஸிஸ், மெர்க்யூரியஸ்) ஹிப்பாரில் சிறிது நடந்தாலும் வியர்வை. மெர்க்யூரியஸில் [illegible] போது ஒவ்வொரு தடவையும் வியர்வை உண்டாகும். அத் துடன் சாப்பிட்டால் கூட வியர்க்கும்.

TAMILNADU ARCHIVES LIBRARY No. 103891

---

# ஆண்ட்டிமனியம் டார்ட்டாரிகம்

## (ANTIMONIUM TARTARICUM)

**முன்னுரை :**—இவ் வௌஷதத்தின் முக்கிய [illegible] சுவாச அவயவங்களைப் பற்றியதாக இருக்கின்றன. கோழை இருப்பது போல் பலமான இழுப்பு ஓசை, ஆனால் கோழை வெளியெ வருவது இல்லை என்னும் மிக முக்கியமான குறியைக் கொண்டே இவ்வௌஷதம் சிகிச்சைக்குத் தேர்ந் தெடுக்கப் படுகிறது. மந்தகுணம்; பலவீனம்; வியர்வை உடல் தளர்ந்து விட்ட நிலைமை; குமட்டல்; வாந்தி; தாகம் இல்லாமை; தலைச்சுற்றல்; மூச்சுத்திணறல்; உடலில் நடுக் கம்; நீர்ச் சுரப்புடன் வீக்கம்; கடுமையான முதுகுவலி;

குளிருதல்: கடைசியாக அதிக முன்கோபம் ஆகியவை மற்ற முக்கியமான, ஔஷதத்தைச் சந்தேகம் இல்லாமல் நிர்ணயிக்க உதவும் குறிகளாகும்.

## பொதுவான குறிகள்

**தகுதி:**—சிறு வயதும்; கிழப்பருவம். சுவாசக் குழாய்பற்றிய நாட்பட்ட வியாதிகள் உள்ள கிழவர்கள், பருத்த உடலும் சோம்பல் குணமும் உள்ளவர்கள், மானியில் நுனிக் கொண்டையில் கெட்ட சதை வளரும் மேக வெட்டைச்சூடு உள்ளவர்கள். அதுவும் மானி யின் நுனிக் கொண்டையின் பின்பக்கம் கெட்டசதை தோன்றுவது குறிப்பிடத்தக்கது.

**மனம்:**—குழந்தைகளாய் இருந்தால்: வியாதி (உதாரணம் இருமல்) தோன்றும் போதும் அதற்கு முன்னதாகவும் பிறர் மனதில் இரக்கம் உண்டாகும்படி முனகுவதும் கதறுவதும். எப்பொழுதும் தூக்கிக் கொண்டே இருக்கும்படிச் சொல்லும். யாராவது அதைத் தொட்டுவிட்டால் உடனே அழ ஆரம்பித்துவிடும். பிறர் தொடுவதோ பார்ப்பதோ பிடிக்காது. நாடி பார்க்கக் கூட இடம் கொடுக்காது (ஆண்ட்டிமனியம் க்ரூடம்), தூங்கியெழுந்தவுடன் குழந்தை அசடாய் இருப்பது போல் தோன்றும் ஆனால் அதிக முன் கோபமும், பிறர் சாதாரணமாக அதன்பக்கம் திரும்பினாலும் குய்யோ முறையோ என்று அழுவதும் இருக்கும்,

**உடல்:**—பல வியாதிகளில் அதிகமாகக் கொட்டாவி விடுவதும் சோம்பல் முறிப்பதும் காணப் படுகிறது. (மாறி மாறி இருமலும் கொட்டாவியும்) வந்து எல்லா வியாதிகளிலும் மந்த குணமோ அல்லது தூங்காமல் இருக்க முடியாத நிலைமையோ காணப்படும் (அபிஸ், நக்ஸ் மாஸ்சாடா, ஒபியம்), கண்களை மூடியவுடன் நினைவு தவறுதல் (கன்னபிஸ் இண்டிகா), சருமம் வியர்வையுடன் இருக்கும். தலைச்சுற்றல் பல சமயங்களிலும் தோன்றுகிறதாயினும் மந்த குணத்துடன் மாறி மாறி ஏற்படும். பல சமயங்களில் வியாதியஸ்தர் நிலை கொள்ளாமல் துள்ளுவார். தன் கைகளை எப்பொழுதும் தூக்கித் தூக்கிப் போடுவார். சில சமயங்களில் கடுமையான மயக்கம் இருக்கும். பல வியாதிகளில் தாகம் இருக்காது அல்லது ஒவ்வொரு தடவையும் கொஞ்சங் கொஞ்சமாக அடிக்கடி குடிப்பார். அதிக பலவீனம், அதிக மயக்கத்துடன் குளிர்ந்த பிசுபிசுப்பான வியர்வை, தலை சூடாய் இருக்கும்; வியர்வையினால் நனைந்திருக்கும்; நாக்கின்மேல் வெள்ளையான, கனமான. பசை தடவியதுபோல் அழுக்கும். ஓரங்களும் சுவை மொட்டுகளும் சிவந்து இருக்கும், ஆப்பிள் பழங்களிலும் (ஆலோ) புளிப்பான பொருள்களிலும் விருப்பம். ஆனால் அவை ஒத்துக் கொள்ளாது. பாலைத் தவிர மற்ற எல்லாம்உணவுப் பொருள்களிலும் வெறுப்பு. கைகள் அசைந்த வண்ணமே இருக்கும். நீர்ச்சுரப்பு. கால்களில் நீர்ச்சுரப்பு. நாடி வேகமாகவும் பலம் இல்லாமலும் துடித்தல். மூச்சு நின்று விடுமளவுக்குத் திணறல். முனகலுடன் மூச்சுவிடுதல். முனகலுடன் இழுப்பு ஓசை, முகவாய்க் கட்டையும் கீழ்த்தாடையும் இடை விடாமல் நடுங்கிக் கொண்டிருத்தல்.



**உபாதி கூடுதல்:**—பல குறிகள் சூடானவுடன், சூடான அறைகளில், அதிகமாக உடம்பைப் போர்த்திக் கொண்டதால் கூடுதலாகும், ஈரக்கசிவுள்ள, குளிர்ச்சியான காலங்களில் அதிகமாகும். குளிர்ந்த இடங்களில் வசிப்பதால் ஏற்படும் கோளாறுகள், (ஆர்ஸனிகம் ஆல்பம், தெரிபிந்தினு). சுடுதண்ணீரைக் குடித்தால் இருமல் அதிகரிக்கும். கோபம் ஏற்பட்டால் குழந்தை இரும ஆரம்

பிக்கும். விடியற்காலை 4 மணிக்கு இருமல் மும்முரமாகும். கக்குவாய் இருமலில், இருமல் வருவதற்குமுன் குழந்தை வேதனையுடன் அழும்.

உபாதி குறைதல் :—குளிர்ந்த தண்ணீரினால் கொப்பளிப்பதால் பல்வலி குறையும்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்.

இழுப்பு ஓசை :—சுவாசக் குழாய்களில் ஏராளமாய்க் கோழை சேர்ந்து பலமான இழுப்பு ஓசை; ஆனால் கோழையை வெளியேற்ற முடியாது. ஏராளமான கோழை வெளியே வரும் போல் தோன்றும். ஆனால் சிறிதளவே வெளிப்படும் அல்லது கொஞ்சம் கூட வருவதில்லை. (மார்ச்சளி, சுவாச கோச வேக்காடு, இருமல், காசம், கக்குவாய் இருமல் முதலிய வியாதிகளில் இக்குறி காணப்படும்) குடிப்பழக்கத்தில் ஊறிப் போனவர்களுக்கு மார்பில் ஏற்படும் இழுப்பு ஓசை.

குமட்டல் : வாந்தி :—இபிகாக்கில் இருப்பதைப் போலவே கடுமையான குமட்டல் இருந்தாலும் இடைவிடாமல் இருப்பதில்லை; வாந்தி எடுத்த பிறகு குமட்டல் குறையும். வாந்தி செய்த பிறகு மயக்கம், அதாவது மயக்கம் ஏற்படும் வரை வாந்தி செய்து கொண்டே இருப்பார். வாந்தி எடுத்த பிறகு மந்த குணமும் களைப்பும். எதைச் சாப்பிட்டாலும் வாந்தி செய்தல்; ஒரு ஸ்பூன் தண்ணீர் குடித்தாலும் அது வாந்தி செய்யப்படும். கவலையை உண்டாக்கும் இடை விடாத குமட்டலுடன் வாந்தி எடுக்க கடுமையான தூண்டுதலும் நெற்றியில் வியர்வையும் தோன்றும், வாந்தியுடன் உடல் நடுக்கமும் மயக்கமும் சேர்ந்து கொள்ளும்.

வலிகள் :—வாத சம்பந்த முள்ள வலிகளில் (சுரம்) வியர்வையும் வியர்வையினால் சௌகரியம் ஏற்படாமை



யும். இடுப்புப் பாகங்களில் கடுமையான வலிகள். அடி வயிற்றில் கடுமையான வெட்டும் வலிகள். வாத சம்பந்த முள்ள பல் வலியில் எலும்பு மூட்டுகளிலும் வாத சம்பந்த முள்ள வலிகள், விட்டு விட்டுத்தோன்றுதல்.

புண் உண்டாகுதல் :—சளிச் சவ்வுகளில் புண் உண்டாகுதல். மூக்கு, தொண்டை, வயிறு ஆகியவைகளில் இரத்தப் பெருக்கை உண்டாக்கும் புண்கள். (வயிற்றிலிருந்து இரத்தம் வந்தால் வாந்தி உண்டாகும்). கை விரல்களிலும் கால் விரல்களிலும் நுனியில் சிறிய புண்கள் உண்டாகி அப்புண்களின் ஓரங்கள் கறுப்பாக மாறிப் பரவும் (குஷ்டம்).

வியாதி உள்ளே அமுக்கப் படுதல் :—சுவாச கோசங்களில் வேக்காடு, பெரியம்மை இன்னும் அது போன்ற வியாதிகளில் வயிற்றுப் போக்கு; குறிப்பாக சருமக் கோளாறு உள் அமுக்கப் பட்டிருந்தால். பெரியம்மையில் சருமக் கோளாறு சரிவர வெளியே தோன்றாவிட்டால் அல்லது உள்ளே அமுங்கி விட்டால் ஆண்ட்டிமனியம் டார்டாரிகம் அதை ஒழுங்கு படுத்தும். பெரியம்மையில் சருமக் கோளாறு சரியானபடி தோன்றா விட்டால் முதுகு வலி, தலை வலி, மார்பில் நசுக்குவது போல் கனம் ஆகிய குறிகளும் பல சமயங்களில் வயிற்றுப் போக்கும் சில சமயங்களில் வலிப்புகளும் உண்டாகும். மேக வெட்டை அமுக்கப்பட்டபோது பல்ஸடில்லாவுடன் இது போட்டி போட்டு அதற்குப் பிறகு நன்றாக வேலை செய்கிறது. மேக வெட்டையை அமுக்கியதால் விரைகளில் வலி தோன்றும்.

உடல் நடுக்கம் :—வேலை செய்த பிறகும் நடந்த பிறகும் ஒவ்வொரு தடவையும் தவறாமல் தலையிலும் கைகளிலும் நடுக்கம் ஏற்பட்டு அதிக நேரம் விடாமல்

இருக்கும். உள்ளூர நடுக்கம். தலையிலும் கைகளிலும் நாட்பட்ட நடுக்கலுள்ள பக்ஷ வாதம்.

## மற்ற குறிகள்.

தசைகளில் துடிப்பு—வலிப்பு—கைகளும் கால்களும் மிகவும் கனமாய் இருப்பது போலத் தோன்றுதல்-கை கால்களில் கனத்த உணர்ச்சி தோன்றிய பிறகு துஷ்ட சம்பந்த முள்ள சருமக் கோளாறுகள் ஏற்படுதல்—அடிக்கடி மயக்கமும் உள்ளூர நடுக்கமும்-சுவாச கோசங்களைப் பற்றிய வியாதிகளில் தலையைப் பின் பக்கம் சாய்த்துப் படுத்திருத்தல். முது கெலும்பின் கீழ் நுனியில் கனமாய் இருக்கும் உணர்ச்சி. முகத்தில் சீழ்க் கொப்புளங்கள்.—மூட்டுகளில் நீர்ச் சுரப்பு.—உடம்பு முழுவதும் தொட்டால் கடுமையாக வலித்தல்—முகம் வெளுத்து வற்றி, கண்கள் மங்கிவிடுதல்.

**சுவாச உறுப்புகள் :**—இவை பற்றிய வியாதிகளில் மார்பில் ஏராளமாய்க் கோழை இருக்கும். பலமான இழுப்பு ஓசையும் ஆனால் கொஞ்சம் கூட கோழையை வெளியேற்ற முடியாமல் இருப்பதும் இவ்வௌஷதத்தின் முக்கிய குறியாகும். இழுப்பு ஓசை என்னும் தலைப்பின் கீழ் கவனிக்கவும். மூக்குத் துவாரங்கள் விரிந்து சுருங்குதல். (லைகபோடியம்) மூக்குத் துவாரங்கள் அதிகமாக விரிந்தபடியே இருப்பதும் உண்டு. சுவாச கோச வேக்காட்டில் மூக்குத் துவாரங்கள் சளியினால் அடைக்கப் பட்டுவிட்ட நிலைமையில் இவ்விதம் தோன்றும். மூக்குத் துவாரங்கள் கறுத்து அதன் பக்கத் தோல்கள் துடித்துக் கொண்டிருத்தல். முகம் வெளுத்து நீல நிறமாகவும் இருக்கும். சுவாச கோச வேக்காட்டின் சில வகைகளில் களைப்பு மிகவும் அதிகமாகி வியாதியஸ்தரின் தலை அடிக்கடி தலையணையை விட்டு நழுவிக் கீழே விழும்.



மஞ்சட் காமாலையுடன் வலது சுவாச கோச வேக்காடு. சுவாச கோச வேக்காடு மறைந்த பிறகு சுவாச கோசத் தசை அதன் பழய நிலைமைக்குத் திரும்பாமல் கல் போல் கடினமாகவே இருப்பதினால் மூச்சுத் திணறல், வியாதியஸ்தர் உடல் வெளுத்துப் பலவீனமாகவும் தூக்கக் கலக்கமாகவும் இருப்பதை இவ்வௌஷதம் குணம் செய்யும். இவ்வித சமயங்களில் ஸல்பர் வியாதியை நீக்கப் போதுமானதாக இல்லாவிட்டாலும் இது உபயோகமாகும்.

**மூச்சு நின்று விடுதல் :**—தண்ணீரில் முழுகியதால்; தொண்டை அல்லது குரல் வளையில் வேற்றுப் பொருள்கள் அடைத்துவிடுவதால் (ஸைலீஷியா); சுவாசக் குழாய்களை சளி அடைப்பதால் சுவாச கோசங்களில் பக்ஷவாதம் ஏற்படும் நிலைமை இவை போன்ற காரணங்களால் மூச்சு விட முடியாமல் மந்த குணமும் மயக்க நிலைமையும் தோன்றும் போது.

**பிறந்த குழந்தைக்கு மூச்சு நின்று விடுதல் :**—குழந்தை பிறந்த வுடனே அது முகம் வெளுத்து, மூச்சு இல்லாமல் திணறுதல்; தொண்டையில் கோழையினால் இழுப்பு ஓசை.

**பெரியம்மை :**—ஔஷதப் பரீக்ஷையில் இவ்வௌஷதத்தினால் ஏற்படுத்தப் பட்ட சருமக்கோளாறு பல வகைகளில் பெரியம்மையில் காணப்படும் சருமக் கோளாறை ஒத்திருந்தது. பெரியம்மைக்கு இது மிகச் சிறந்தது. இவ்வியாதியின் ஆரம்பத்தில் சருமக் கோளாறு தோன்று வதற்கு முன்பும், இடை விடாத வறண்ட இருமல் உள்ள போதும் மிக உபயோக மாகுமென்று பாரிங்டன் சொல்கிறார்.

**விஷ பேதி :**—பெரியம்மை பெருவாரியாக ஏற்படும் காலங்களில் தோன்றும் விஷ பேதிக்கு ஆரம்ப நிலைமை

யில் மிகவும் உபயோக முள்ளது. இவ்வித விஷ பேதி அனேகமாகப் பெரியம்மையின் விஷச் சக்தியால் தான் தோன்றுவதால் இது ஏற்றதாகிறது.

**விஷ பேதி போன்ற வயிற்றுப் போக்கு** :—இவ்வியாதிக்கு இது ஓர் சஞ்சீவி என்பது டாக்டர் நாஷ் அவர்களின் அபிப்பிராயம். குமட்டல், வாந்தி, தண்ணீர் போன்ற போக்கு, களைப்பு, குளிர்ந்த வியர்வை, மயக்கம், மந்த குணம் ஆகியவை முக்கிய குறிகளாகும்.

**அம்மை குத்திக் கொண்டதால் தோன்றும் கோளாறுகள்** :—தூஜாவினுல் குணம் காணுமல் ஸைலீஷியாவும் ஏற்றதல்ல வென்று தோன்றும் சமயங்களில்.

**உறவு** :—லைகபோடியத்தைப் போல் இருக்கிறது. இபிகாக்கை விட ஆண்ட்டிமனியம் டார்ட்டாரிகத்தில் அதிக மந்த குணம் இருக்கிறது. வாந்தி செய்த பிறகு குமட்டல் குறைகிறது. இபிகாக் தேவைப்படும் நிலைமைக்கு அடுத்துள்ள நிலைமையில் ஆண்ட்டிம் டார்ட் தேவைப்படும். சுவாசகோசங்கள் வேலை செய்யமுடியாதுபோல் தோன்றும் போது வியாதியஸ்தர் தூங்குவது போல் கலக்கமாக இருப்பார்; இருமல் குறையும் அல்லது நின்று விடும்; இந்த நிலைமையில் இபிகாக்குக்குப் பதிலாக ஆண்ட்டிம் டார்ட் உபயோக மாகுமென்று டாக்டர் அல்லென் சொல்லுகிறுர். குழந்தைகளுக்கு ஆண்ட்டிம் டார்ட் தேவைப்படும் குறிகளாகிய மார்பில் ஏராளமான சளிசேர்ந்து இழுப்பு ஓசையும் இருமலும் சிறிதளவு கோழைகூட வெளிவராமல் இருப்பதும் காணப் பட்டபோது ஆண்ட்டிம் டார்ட் கொடுத்தும் குணம் காணுவிட்டால் ஹிப்பார் ஸல்பர் உபயோகமாகும். வயிற்றுப்போக்கில் வெராட்ரம் ஆல்பத்தை ஒத்திருக்கிறது. இரண்டிலும் வயிற்றுவலி, வாந்தி, சில்லிப்பு, புளிப்புள்ள பொருள்களில் விருப்பம் ஆகிய குறிகள் இருக்கின்றன. "வயிற்றுப் போக்கில் ஆண்ட்டிம் டார்ட் அடிக்கடி உபயோ



கப் படாவிட்டாலும் அதைக் கவனமாகப் பார்ப்பது நன்மை தரும். வயிற்றுவலி, உணவு பற்றிய விருப்பம், குமட்டல் ஆகிய குறிகளில் இரண்டும் ஒன்றுபோல இருப்பதால் ஆண்ட்டிம் டார்ட் கொடுக்கப் படவேண்டிய பல சமயங்களில் வெராட்ரம் ஆல்பம் கொடுக்கப் பட்டிருப்பதாக பெல் என்பவர் கூறுகிறுர்.

---

## அபிஸ் மெல்லிபிகா

## (APIS MELLIFICA)

**முன்னுரை** :—நமது மெட்டீரியா மெடிகாவில் சேர்க்கப்பட்டுள்ள விலை மதிப்பிட முடியாத ஒரு ஔஷதம் அபிஸ். ஏற்ற ஔஷதம் அபிஸ் தான் என்று நிர்ணயம் செய்வதற்கு வேண்டிய, குறிப்பிடத்தக்க பல பொதுக் குறிகளின் சேர்க்கை அபிஸ்ஸில் காணப்படுகிறது. இச் சேர்க்கை பலவகைப் பட்ட வியாதிகளிலும் நிலைமையிலும் ஏற்படக் கூடியது.

### பொதுவான குறிகள்.

**தகுதி** :—சுரப்பிகளில் வீங்கும் உடல்வாகு. நீர்ச்சுரப்புள்ள வீக்கமும் கொட்டும் வலியும் உள்ள வியாதிகள். நிறம் வெளுப்பாக மாறி, அழுகும் குணம் உள்ள வேக்காட்டு நிலைமைகள். பெண்கள், குறிப்பாகக் கணவனை இழந்த கைம் பெண்கள் (பெண்களின் பிறப்பு உறுப்புகளில் அபிஸ் விசேஷமாகப் பயன்படும்). சினைப்பைகளில் கொட்டும் வலிகளுடன் புணர்ச்சியில் ஆசை அதிமாகும். இக்குறி சில சமயங்களில் கைம் பெண்களுக்கு உண்டாகும்; இதைப் பல சமயங்களில் அபிஸ் குணம் செய்யும் என்று பாரிங்டன் எழுதுகிறுர். பயந்த சுபாவமுள்ள இளம் பெண்கள், அசட்டுத் தனமாக நடந்து

கொள்ளுதல்; • தவறுதலாகக் கையில் இருக்கும் பொருளைக் கீழே நழுவ விடுதலும் சில சமயங்களில் இவ்வாறு நழுவ விட்டதைப்பற்றி அசட்டுத் தனமாய்ச் சிரித்தலும்• பெண்களுக்கு பயமும் சங்கா குணமும் தோன்றும் நிலைமைகள்.

**மனம் :—** நினைவு இல்லாமை, அலட்சியமாய் இருத்தல், ஞாபக சக்தி குறைதல்; விஷயங்களை மெதுவாகவே புரிந்து கொள்ளும் சக்தி. முக்குவதும் முனகுவதும், அதிகமான அழுகை; அழாமல் இருக்க முடியாது. பரபரப்பும், நிலைகொள்ளாமல் இருப்பதும் அடிக்கடி தன் தொழிலை மாற்றிக்கொண்டே இருப்பதும். பிறப்பு உறுப்புகளில் வேதனை. மிகவும் பொருமை. (தேனீக்களின் இராணி ஈ இயற்கையிலேயே மிகவும்பொருமைக் குணம் உள்ளதாகும்). வருத்தம், பயம், கோபம், வேதனை, பொருமை, கெட்ட செய்திகளைக் கேட்டதால் ஏற்படும் மன அதிர்ச்சி ஆகியவைகளால் தோன்றும் கோளாறுகள்.

**உடல் :—** எரிச்சலுள்ள கொட்டும் வலிகள், உடல் முழுவதும் பொதுவாக அல்லது சில இடங்களில் மட்டும் நீர்ச் சுரப்புள்ள வீக்கம். தாகமே இருக்காது. அதிக மந்த குணம். புண் இருப்பது போல் வலி; தொட்டாலும் அமுக்கினாலும் அதிக வலி. இறுகக் கட்டி யிருப்பது போன்ற உணர்ச்சி. உடம்பு முழுவதும் அடிபட்டது போல் சோர்வுடன் இருக்கும். மூத்திரம் அளவு குறைந்திருக்கும். சருமத்தில் ஒருசமயம் வியர்க்கும், மறுசமயம் காய்ந்திருக்கும். இப்படி மாறி மாறி ஏற்படும். தூக்கத்திலும் தூக்கம் போன்ற மயக்கத்திலும் திடீரென்று கீச்சுக்குரலில் பலமாகக் கதறுதல். மயக்கம்தான் வந்துவிட்டதோ என்று நினைக்கும்படியான அளவு அதிகக் களைப்பு, பக்ஷவாத சம்பந்த



முள்ள பலவீனம். உபாதிகள் வலதுபக்கத்தில் அதிகமாய்க் காணப்படும்.

**உபாதி கூடுதல் :—** சூட்டினால் • அதிகம். சூடு ஒத்துக் கொள்ளாது, குறிப்பாக சூடான அறைகளில் இருக்கவே முடியாது, குளிர் கூட (முறைச் சுரம்) சூடான அறைகளில் உள்ளபோதும் வெளிச் சூட்டினாலும் மோசமாகும். அபிஸ் வியாதியஸ்தருக்கு நெருப்பின் அருகில் நின்று சமைப்பது நரக வேதனைதான். இதை நான் பெண்களிடம் கண்டிருக்கிறேன். சுடு தண்ணீரில் குளித்தால், படுக்கையின் சூட்டினால் உபாதிகள் அதிகமாகும். பல குறிகள் கீழே படுத்துக் கொள்வதினால் அதிகரிக்கும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— (ஒரு நூலினால்) தொட்டாலும் அல்லது அமுக்கினாலும் அதிகரிக்கும் (ஆனால் தலைவலி அமுக்கினால் குறையும்), தலைச்சுற்றல், தலைவலி, அக்கி, குளிர், சுரம் ஆகியவை மாலை நேரங்களில் மும்முரமாகும்.

**உபாதி குறைதல் :—** குளிர்ந்த தண்ணீர், குளிர்ந்த காற்று, குளிர்ந்த தண்ணீரில் குளித்தல் ஆகியவைகளால், பல குறிகள் நேராய் நிமிர்ந்து உட்கார்ந்தால் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**நீர்ச் சுரப்புள்ள வீக்கம் :—** இது உடல் முழுவதுமோ அல்லது சில இடங்களில் மட்டுமோ இருக்கலாம். உடல் முழுவதும் உள்ள போது சருமம் வெளுத்து மெழுகு தடவியதுபோல் பளபளப்புடன் சருமத்தின் அடியிலே இருப்பதைக் காட்டும் கண்ணாடி போல் மாறும். நீர்ச் சுரப்பு உடலின் மேற்பாகத்திலும் அதிகமாய் இருக்கும். இவ்வீக்கம் டிப்தீரியா, அக்கி போன்ற வியாதிகளுடன்

சேர்ந்தோ அல்லது சேராமல் தனியாகவோ தோன்றக் கூடும். அபிஸ் நீர்ச் சுரப்பு வீக்கம். அனேகமாகத் தொண்டையிலும் முகத்திலும் காணப்படுமென்றாலும் கண் இமைகளைச் சுற்றிலும் காணப்படுவது மிகக் குறிப்பிடத் தக்கது. கருப்பையில் நீர்ச் சுரப்பு வீக்கம். வலது சினைப்பையில் நீர்ச் சுரப்பு உண்டாகிப் பருத்தல். விரைப் பையிலும் மாணிக் கொண்டையை மூடியுள்ள தோலிலும் நீர்ச் சுரப்பு. உள்நாக்கு நீண்டு நீர்ச் சுரப்புடன் இருத்தல். கால்களிவ் நீர்ச் சுரப்பு. கீழ் இமைகளில் நீர்ச் சுரப்புடன் பை போன்ற வீக்கம். நீர்ச் சுரப்பு வீக்கமுள்ள அக்கி.

**எரிச்சல்; கொட்டும் வலிகள் :—** அபிஸ் தேவைப் படும் நீர்ச் சுரப்பு வீக்கங்களில் எரிச்சலும் கொட்டும் வலிகளும் இருக்கும். அல்லது வலியே இருக்காது. கண்கள், இமைகள், காதுகள், முகம், உதடுகள், நாக்கு, தொண்டை, ஆசனவாய், விரைகள் ஆகியவை சிவந்து வீங்கி கொட்டும் வலிகளுடனும் எரிச்சலுடனும் இருத்தல். தொண்டையிலும் உள் நாக்கிலும் நீர்ச் சுரப்பு வீக்கம் உள்ள வியாதிகளில் அபிஸ் தேவைப் படும். சில சமயங்களில் வலியே இருக்காது. இப்படி வலியே இல்லாத நிலைமை வியாதி ஆபத்தானது என்பதையே குறிப்பதாகும். பெண்களின் ஸ்தனங்களில் எரிச்சலுடனும் கொட்டு வலிகளுடனும் உள்ள புற்று வியாதி. எரிச்சல், கொட்டும் வலிகள், விண் விண் என்று தெரித்தல், தொட்டால் அதிக வலி உண்டாகுதல் முதலிய குறிகள் உள்ள நகச் சுற்றி. கொட்டும் வலிகளுடனும் அதிகமான வேக்காட்டுடனும் உள்ள பறங்கிப் புண். எரிச்சலும் கொட்டும் வலிகளும் உள்ள இராஜ பிளவை. மூலங்களில் கொட்டும் வலிகள். கொட்டும் வலிகளுடனுள்ள எல்லா வகை வீக்கங்களிலும் இரத்தக் கட்டிகளிலும்.



**திடீரென்று, கீச்சுக் குரலில் கதறுதல் :—** தலையினுள் நீர்ச் சுரப்பு, மூளை வேக்காடு இன்னும் இவை போன்ற பல வியாதிகளிலும் நிலைமைகளிலும் திடீரென்று தோன்றும் கொட்டும் வலிகளே இதற்குக் காரணம்.

**தாகம் இல்லாமை :—** இதுவும் அபிஸ்ஸின் முக்கியமான ஒரு குறியே. நீர்ச் சுரப்பு வீக்கங்களிலும், அக்கியிலும் இன்னும் பல வியாதிகளிலும் நிலைமைகளிலும் காணப்படலாம். ஆனால் மாலை 3 மணிக்குத் தோன்றும் விட்டு விட்டு வரும் குளிரில் (மாலை மூன்றிலிருந்து நான்கு மணி வரையும் தோன்றலாம்) தாகம் இருக்கும்.

**புண் உள்ள உணர்ச்சி:—தொட்டாலும் அமுக்கினாலும் தாங்க முடியாமை :—** அடிபட்டது போலவும் புண் இருப்பது போலவும் உணர்ச்சி (ஆர்னிகாவை விடக்கடுமையாய் இருக்கும்). புண் இருப்பது போன்ற உணர்ச்சி அடிபட்டது போலவும் இருக்கலாம்; உடம்பின் மேலே எது பட்டாலும் வலி ஏற்படுவதாகவும் இருக்கலாம். உடம்பைத் தொடுவதோ அமுக்குவதோ முடியாது; அவ்வளவு வேதனை உண்டாகும். சினைப்பை அல்லது கருப்பை உள்ள இடங்களில் சிறிது தொட்டாலும் அமுக்கினாலும் தாங்கமுடியாத வலி, மார்பில் அடிபட்டது போல் வலி, ஒவ்வொரு மயிர்க்காலிலும் வலி (சைனா), அடிவயிற்றைத் தொட்டால் அதிகவலி, தும்மினாலும் அங்கே அமுக்கினாலும் வலி, இறுகக் கட்டியிருப்பதில் வெறுப்பு என்பதையும் இவ்வகையில் சேர்த்துக் கொள்ளலாம் (லாச்சஸிஸ்).

**குறைவான அளவு மூத்திரம் :—** முக்கியமான பொதுக் குறிகளில் இதுவும் ஒன்று. எந்த வியாதியிலும் அபிஸ் கொடுத்த பிறகு ஏராளமாய் மூத்திரம் வெளியாகும்.

இதைக் கொண்டு இதன் அனுகூலமாய் வேலைசெய்யும் சக்தியை அறியலாம். மூத்திரம் அளவு குறைந்து நிறம் கறுக்கும்; குறைவான மூத்திரம் சொட்டுச் சொட்டாக வெளியேறும். தாகமே இருக்காது. மூத்திரம் கொஞ்சம் கூட வெளியாகாமல் அடக்கப் படலாம். தாய்ப்பால் குடிக்கும் சிறு குழந்தைகளுக்கு மூத்திரம் அடக்கப் படுதல், அபிஸ்ஸில் சில சமயங்களில் மூத்திரம் ஏராளமாகவும் வெளியாகலாம் (ஆனால் தண்ணீர் அதிகமாகக் குடிக்க மாட்டார்).

**விரைப்பு** :—இது இறுகக் கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி. இன்னும் தெளிவாய்ச் சொல்ல வேண்டுமானால் நீட்டப்பட்டு இறுகக்கட்டிய உணர்ச்சி என்று எழுதலாம். இதுவும் அதிக உபயோகமுள்ள ஒரு பொதுக் குறியே. இந்த இறுகிய உணர்ச்சி பல வியாதிகளில் காணப்படுகிறது. அடிவயிறை இறுகக் கட்டியிருக்கும் உணர்ச்சி. இந்த இறுகிய உணர்ச்சியினால் வியாதியஸ்தரால் இரும முடியாது; இருமினால் ஏதாவது வெடித்துப் போய்விடும் என்று தோன்றும். அடி வயிற்றில் இறுகியிருக்கும் உணர்ச்சியினால் மலச்சிக்கலில் மலத்தை வெளியேற்ற அதிகமாய் முக்கினால் இறுகியுள்ள பாகம் வெடித்துவிடும் என்று தோன்றும்.

கடுமையான மூச்சுத் திணறல் :— ஒவ்வொரு தடவையும் மூச்சு விடும்போது அதுவே தன் கடைசி மூச்சு என்று நினைத்தல். காச வியாதியில் இக்குறி காணப்படும். மூச்சுத் திணறல், குறிப்பாக காற்றை உள்ளிழுக்கும் போது.

**வியாதி அமுக்கப் பட்டதால் தோன்றும் கோளாறுகள்** :— ஸ்கார்லேடினா வியாதியின் சருமக் கோளாறுகள் அமுக்கப் பட்டதால் உண்டாகும் மயக்கம். மூளை வேக்காட்-



டில் சருமக் கோளாறு சரிவரத் தோன்றாமை அல்லது அமுக்கப்படுதல், மூளையில் திடீரென்று நீர்க் கொள்ளுதல் ஆகிய நிலைமைகளில் பல சமயங்களிலும் அபிஸ் தேவைப் படுகிறது. சருமக் கோளாறுடன் கூடிய வியாதிகளில் அல்லது சருமக் கோளாறு அமுக்கப் பட்ட பிறகு ஏற்படும் வயிற்றுப் போக்கு. குளிரினால் காலில் வியர்வை ஏற்படுவது தடைப்படும்.

**வலது பக்கமே வியாதிகள் அதிகம்**: —அபிஸ் வியாதிகள் அனேகமாக உடலின் வலது பக்கத்தையே தாக்குகின்றன. வேக்காடு, கல்போல் கடினமாகுதல், வீக்கம், சினைப்பைகளில் நீர்ச்சுரப்பு ஆகியவை பெரும்பாலும் வலது பக்கமே காணப்படும். முகத்தின் வலது பக்கத்தில் பாரிசவாயு ஏற்பட்டு வலது கண்ணை மூடி விடுதல். குறிகள் வலது பக்கத்தி லிருந்து இடது பக்கம் போகும் (முகத்தில் தோன்றும் அக்கியைப் போல்). உடம்பின் ஒருபாதி இழுப்புகளுடனும் மறுபாதி பக்ஷவாதத்துடன் முடக்கப் பட்டும் இருத்தல் என்னும் இக்குறியும் அபிஸ்ஸில் இருக்கிறது. கடுமையான மன அதிர்ச்சிக்குப் பிறகு உடலின் வலது பக்கம் முழுவதும் பக்ஷவாதத்தால் தாக்கப்படும்.

## மற்ற குறிகள்

நடுங்குதல், துள்ளுதல், இழுத்தல்—கீழ்த் தாடையில் பிடிப்பு மிக விரைவில், கொஞ்சம் கூட அசைக்க முடியாமல், போகும். மார்புக் கோளாறுகளில் இறுகக் கட்டிய உணர்ச்சி. . கழுத்திலும் முதுகிலும் பிடிப்பு. கழுத்துச் சுரப்பிகளில் வீக்கம்—கவலையும் கஷ்டப் படுவதும் ஆகாயத்தில் பறந்து செல்வதும் இவைகளைத் தவிர வேறு விதமான கனவுகள் ஏற்படுவது இல்லை.

கண்களை மூடினால் தலை சுற்றுதல். மூத்திரம் அளவு குறைந்து ஏராளமான வெள்ளைச் சத்துடன் வெளிப் படும், மூத்திரம் வெளியாகும் உணர்ச்சி இருப்பதில்லை. மூத்திரம் சொட்டுச் சொட்டாக வலியுடன் வெளியேறு தல். மூளை சம்பந்தமான கோளாறுகளின் ஆரம்பத்தில் நிலை கொள்ளாமையும் பதட்டமும்.

**வயிற்றுப் போக்கு** :—பச்சையாக, மஞ்சளாக, குழ குழப்புச் சளியுடன் அல்லது மஞ்சள் தண்ணீர் போன்ற மலம், காலையில் அதிகமாய் இருக்கும். தாகம் இருக் காது. ஒவ்வொரு தடவையும்நடக்கும்போது ஆசனவாய் அகலமாய்த் திறந்திருப்பது போல் வியாதியஸ்தரின் விருப்பம் இல்லாமல் மலம் வெளிப்படுதல். (பாஸ்பரஸ்)

**வயிற்றுக் கடுப்பு** :—நாட்பட்ட வியாதி; வலி எதுவும் இருப்பதில்லை.

**சுரம்** :—சருமம் மாறி மாறி வியர்த்துக் கொண்டும் காய்ந்து வறட்சியாகவும் இருத்தல்.

**முறைச் சுரம்** :—உபாதி கூடுதல், தாகம் இல்லாமை ஆகிய தலைப்புகளைப் பார்க்கவும். வியர்வை ஏற்படும் மூன்ருவது நிலைமை அனேகமாய் இருக்காது, அல்லது மிகவும் கொஞ்சமாய் இருக்கும்.

**பெண்களின் ஸ்தனங்களைப் பற்றிய கோளாறுகள்** :—ஸ்தனங்களில் அக்கி போன்ற வேக்காடு. வீங்கிக் கல் போல் கடினமாகிச் சீழ்ப் பிடித்து விடும் போல் தோன்றும்.

**சினைப்பைக் கோளாறுகள்** :—வலது பக்கமே வியாதிகள் அதிகம் என்னும் தலைப்பைப் பார்க்கவும். தேனீக்கள் கொட்டினால் ஏற்படும் வலிகளைப் போல் வலிகளுடன் சினைப்பைக் கட்டிகள்.



**பக்ஷ வாதம்** :—டிப்தீரியா அல்லது மற்ற கடுமை யான வியாதிகளுக்குப் பிறகு ஏற்பட்டால்.

**சுவாச கோச உறை வேக்காடு** :—சுவாச கோச உறை யினுள்ளே நீர் உண்டாகும் போது அந்நீரை உறிஞ்ச (இச்சமயத்தில் ஸல்பர், அபிஸ் ஆகிய இரண்டும் முக்கிய மானவை). மூச்சுத் திணறலும் மயக்கம் வருவது போல் இருத்தலும்.

**டைபாய்டு சுரம்** :—முனகுவதுடன் உள்ள புத்தித் தடுமாற்றமும் மயக்கமும்; நாக்கு நடுங்கிக் கொண்டு வெளியே நீட்டும் போது பற்களின் மேல் சிக்கிக் கொள் ளும்; நாக்கு காய்ந்து வெடித்து சிறு சிறு கொப்புளங் களுடன், குறிப்பாக நாக்கின் ஓரங்களில் மட்டும், இருக் கும்; அடிவயிற்றில் அதிக உப்பிசமும் எரிச்சலும் வலி யும்; சருமம் சில இடங்களில் எரிச்சலுடன் சூடாகவும் மற்ற சில இடங்களில் இயற்கையாய் இருப்பதை விடச் சில்லென்றும் இருக்கும். சருமம் அனேகமாகக் காய்ந் திருக்கும். வியர்வை இருந்தால் மிக அபூர்வமாகவே இருக்கும். அதிகக் களைப்பு, வியாதியஸ்தர் படுக்கையை விட்டுக் கீழே நழுவுவார்.

**கருச் சிதைவு** :—இரண்டு, அல்லது மூன்று மாதங் களுக்குள் ஏற்படக் கூடிய கருச் சிதைவைத் தடுக்கும். அடி வயிற்றில் கனம், நிலை கொள்ளாமல் துடித்தல், கொட்டாவி விடுதல் முதலிய குறிகளுடன் கருச்சிதைவு ஏற்படும் நிலைமை. கரு உள்ள போது முதல் மூன்று மாதங்களில் மிக எச்சரிக்கையுடன் உபயோகிக்க வேண் டும். குறைந்த வீரியங்களில் உபயோகித்தால் கருச் சிதைவை ஏற்படுத்தக் கூடும்.

**உறவு** :—அபிஸ், ரஸ் டாக்ஸ் இரண்டும் ஒன்றுக்

கொன்று பகை. ஆகையால் இவைகளை ஒன்றன்பின் ஒன்ருகக் கொடுப்பது கூடாது. நேட்ரம் மூர், ஆர்ஸனிகம் ஆல்பம் ஆகியவைகளுக்குப் பிறகு அபிசும், அபிசுக்குப் பிறகு பல்ஸடில்லாவும் நன்ருக வேலை செய்யும்.

ஒப்பிடுதல்: நெருப்புச் சுட்ட கோளாறுகள், அக்கி, மூத்திரக் கோளாறுகள் ஆகியவைகளில் கந்தாரிஸைப் போல் இருக்கிறது. அபிசில் உள்ளது போல ஐயோடியத்தில் முழங்காலில் நீர்ச் சுரப்புள்ள வீக்கமும் உடம்பு முழுவதுமே நீர்ச் சுரப்புள்ள வீக்கமும் இருக்கின்றன. சூட்டிலும் சூடான அறைகளில் இருக்கும் போதும் கோளாறுகள் அதிகமாகும் குறி இரண்டிலும் இருக்கிறது. லாச்சஸிஸைப் போல் தொண்டையில் எதுவும் படமுடியாத குறி இதிலும் இருக்கிறது. தூங்கி யெழுந்தவுடன் இருமல் (அபிஸ், லாச்சஸிஸ்) சூட்டினுல் குளிர்ந்த உணர்ச்சி அதிகமாகும் (அபிஸ், இபிகாக்) சூட்டினுல் சௌகரியம் ஏற்படும் (ஆர்ஸனிகம் ஆல்பம், இக்னேஷியா) புண் இருப்பதுபோல் மார்பில் வலி (அபிஸ், ஆர்ஸனிகம் ஆல்பம், க்ரீஸோட். லைகபோடியம், பாஸ்பரஸ்)

குறிப்பு:—அபிஸ் முற்றினுல் நேட்ரம் மூர். அபிஸ் மெதுவாகவே வேலை செய்யுமாதலால் அடிக்கடி அதை மாற்றுவது கூடாது.

---

# அர்ஜண்டம் நைட்ரிகம்.

## (ARGENTUM NITRICUM)

முன்னுரை:—இவ் வௌஷதம் கலந்துள்ள திரவத்தை சருமத்தின் மேலே தடவினுல் அது ஒரு விதமான கறுப்பு நிறத்தை உண்டாக்குகிறது. இவ்வௌஷதத்தின் ஔஷதப்பரிக்ஷையில் சருமம் சற்றுக் கறுப்பாக அல்லது நல்ல கறுப்பாக மாறியது என்பது வேடிக்கையாய் இருக்கிறதல்லவா?



ஆனுல் இக்குறி உண்மையானது தான் என்பதை உறுதிப்படுத்தும் ஓர் சந்தர்ப்பம் சமீப காலத்தில் எனக்கு ஏற்பட்டது. மேகவெட்டை, மேகக்கிரந்தி விஷங்களையும் சுரப்பிகள் வீங்கும் குணத்தையும் முறிக்க வல்லமை உள்ளது.

## பொதுக் குறிகள்.

தகுதி:—கறுத்து இளைத்துக் கிழவர்கள் போல் தோன்றும் உடலுள்ளவர்களைப் பார்த்தவுடன் இவ்வௌஷதத்தை நினைத்துக்கொள். ஒட்டி உலர்ந்து மெலிந்துள்ள பெண்கள் (ஸீகேல்). வியாதியினுல் உடல் கறுத்து இளைத்து விடுதல். குழந்தை உடல் சுருங்கிக் கிழவன் போல் தோன்றுதல். மனம் அல்லது உடலைப் பற்றிய வியாதிகளால் ஏற்படும் பலவீனமான நிலைமை. வழக்கத்துக்கு மாருன அல்லது பல நாட்களுக்கு நீடித்துள்ள மன வேலையினுல் ஏற்படும் திடீர் வியாதிகள் அல்லது நாட்பட்ட வியாதிகள்.

மனம்:—1. மந்த குணம்; மூளையை உபயோகித்துச் செய்ய வேண்டிய வேலைகள் மெதுவாக நடத்தல்: யோசனை செய்வது மிகக் கஷ்டமாய் இருக்கும், ஞாபக சக்தி கோளாருகும். சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான வார்த்தை ஞாபகத்துக்கு வருவதில்லை. நேரம் மிகவும் மெதுவாகப் போவது போல் தோன்றும் (கன்னபிஸ் இண்டிகா). 2. பயம்; பொதுக் கூட்டங்களில் பேசவோ, சங்கீதக் கச்சேரியில் பாடவோ புறப்படுவதற்குத் தயாரானவுடன் மனதில் ஒரு விதப் பயமும் அச்சமும் உண்டாகி வயிற்றுப் போக்கு தோன்றும். உயர்ந்த கட்டிடங்களையும் தெருவின் மூலைகளில் நீட்டிக் கொண்டிருக்கும் கட்டிடங்களையும் கண்டு பயப்படுதல். 3. மூன் யோசனை இல்லாமை; எப்பொழுதும் அவசரம் ஆனுல்

செய்த காரியமோ ஒன்று கூட இருக்காது. மிக வேகமாக நடக்கத் தூண்டுதல். (லிலியம் டிக்ரினம்). ஒரு பாலத்தின் மீது நடந்து போகும் போது கீழே குதித்து விட வேண்டுமென்று அடக்க முடியாத ஆவல் உண்டாகுதல்; சன்னல்களின் வழியே குதித்து விட ஆவல்.

4. தவறான உணர்ச்சி; உடலில் முழுவதுமோ அல்லது ஏதோ ஒரு பாகமோ (குறிப்பாக முகம், தலை, கைகள், கால்கள்) விரிந்து கொண்டிருப்பது போல் உணர்ச்சி. இடங்கள் (உதாரணம், தலை) பெரியதாக ஆகிவிட்டது போல் தோன்றுதல். மார்பு, இடுப்பு முதலிய இடங்களில் இரும்புப் பட்டையினால் இறுகக் கட்டியிருக்கும் உணர்ச்சி.

உடல் :—இளைப்பு. பொதுவான பலவீனத்துடன் உடலில் நடுக்கம். அனேகமாகக் கால்களிலேயே பலவீனம் காணப்படும். சருமத்தின் உணர்ச்சி அறியும் சக்தி அழியும். அதிகமாகும் (அதாவது தொடும்போது உணர்ச்சி அதிகமாகலாம் ஆனால் மேலே படும் பொருள் எது என்று அறியும் சக்தி குறையும்). கால்களிலும் அடி வயிற்றிலும் நீர்ச்சுரப்புள்ள வீக்கம். உடல் உறுப்புகளைத் தன் விருப்பப்படி அசைக்க முடியாது. வலது பக்கமாகப் படுத்தால் படபடப்பு மோசமாகும். கால்களின் ஆடு தசைகளில் விரைப்பு. வலிகள் கொஞ்சங் கொஞ்சமாக அதிகமாகும். அதே போலக் குறையும். சீரண சம்பந்தமான பல கோளாறுகளில் கடுமையான ஏப்பம் உண்டாகும். பலமான ஓசையுடன் ஏப்பம் விடுதல். அதிக வாயுவினால் உப்பிசம். உடல் சில்லிப்பு.

உபாதி கூடுதல் :—சர்க்கரை தின்ன ஆவல், ஆனால் அது ஒத்துக் கொள்வதில்லை. மன உழைப்பு, கவலை. மன



உணர்ச்சிகள் இவைகளாலும் கோளாறுகள் அதிகமாகும். சூடு உள்ள அறைகள், சூடு தரும் உடை, சூட்டை உண்டாக்கும் படுக்கை, எரியும் அடுப்பு, பொதுவாக எவ்வகையான சூட்டினாலும் வியாதி அதிகமாகும். சூடான அறைகளில் மூச்சு விட முடியாது. திணறல் உண்டாகும். உடம்பைப் போர்த்தாவிட்டால் குளிருகிறது; போர்த்திக் கொண்டால் மூச்சு விட முடியாது போல் தோன்றுகிறது. பல குறிகள் இரவில் கூடுதலாகும்.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—கீழ் முதுகுவலி நின்றாலும் அல்லது நடந்தாலும் குறைவாகி உட்கார்ந்து விட்டு எழுந்திருக்கும் போது அதிகரிக்கும். வலது பக்கமாய்ப் படுத்தால் படபடப்பும் வயிற்றில் வலியும் உண்டாகிறது. தையல் வேலை செய்வதால் உண்டாகும் கண்வலி. சூடு உள்ள அறையில் அதிகமாகவும் திறந்த இடங்களில் குறைவாகவும் இருக்கும். (நேட்ரம் மூர், ரூடா) கண் பற்றிய எல்லாக் கோளாறுகளும் சூடு உள்ள அறைகளிலும் நெருப்பின் அருகில் உட்கார்ந்திருந்தாலும் அதிகமாகும். அடிவயிறு சம்பந்தமுள்ள கோளாறுகள் அதிகரிக்கும்போது கண்களைப் பற்றிய கோளாறுகளும் அதிகரிக்கும். எல்லாக் குறிகளும் மாதவிடாய்க் காலத்திலும் அதற்கு முன்பும் கூடுதலாகும். இடைக் காலத்தில் தான் கோளாறு எதுவும் இல்லாமல் அவளால் சௌகரியமாய் இருக்க முடிகிறது.

உபாதி குறைதல் :—குளிர் காற்று, குளிர்ந்த தண்ணீர் குடித்தல், குளிர்ந்த தண்ணீரில் குளித்தல், ஆகியவைகளால். சுத்தமான காற்றில் இருக்க ஆவல் (அமில் நைட்ரேட், பல்ஸடில்லா, ஸல்பர்).

உபாதி குறைதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) தலையை இறுக அமுக்கினாலும் துணியினால்

இறுகக் கட்டினாலும் தலைவலி குறையும் (பல்ஸடில்லா, அபிஸ்). மண்டைக் குத்து என்று அழைக்கப்படும் ஒரு பக்கத் தலைவலியிலும் இதேபோல் வலி குறையும் (பல சமயங்களில் தலை வீங்கி விட்டது போன்ற உணர்ச்சி.)

விதி விலக்கு :—வயிற்று வலிகள் சூடான பானங்களால் குறைந்து குளிர்ந்த பானங்களால் கூடுதலாகும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

உடல் இளைப்பு :—உடல் என்னும் தலைப்பின் கீழ் பார்க்கவும். ஒவ்வொரு வருஷமும் இளைப்பு அதிகமாய்க் கொண்டு வருதல்; கால்களிலே அதிக இளைப்பு இருக்கும். முக வெலும்புகளின் மேலே உள்ள சருமத்தில் விரைப்பு. பிறப்பு உறுப்புகள் சிறுத்தல். பக்ஷவாதப் பலவீனத்துடன் கால்களில் இளைப்பு. அர்ஜண்டம் நைட்ரிகம் இரத்த அணுக்களை அழித்து இரத்த சோகையை ஏற்படுத்துகிறது.

உடல் அசைவிலும் உணர்ச்சியிலும் கோளாறு :—விரைப்பு. கால்களில் அதிகப் பலவீனம்; நடுக்கத்துடனும் இருக்கலாம்; கள் குடித்ததுபோல் தலைசுற்றுதல்; தள்ளாடி நடத்தல்; கண்களை மூடியவுடன் நடக்கத் தடுமாற்றம் உண்டாகும், (அலுமினா). இருட்டிலும் இதே போல. மேகக் கிரந்தி வியாதியுள்ளவர்களுக்கும் அவ் வியாதி உள்ள குடும்பங்களிலே பிறந்தவர்களுக்கும் இவ்விதமான ஓர் வியாதி ஏற்படுவதுண்டு. அதற்கு அர்ஜண்டம் நைட்ரிகம் மிகவும் உபயோகமானது. வியாதியின் ஆரம்ப நிலையில் உண்டாகும் பயங்கரமான வலிகளுக்கும் இவ் வௌஷதம் சிறந்ததே. நிற்கும் போதும் நடக்கும்போதும் தள்ளாடுவார். தன்னைப் பிறர்கவனிக்கவில்லை என்று அவர் நினைக்கும் போது தள்ளாடுவது இன்னும் அதிகமாகும். கால் ஆடு தசைகளில் பலவீனம்.



தளர்ச்சியுடன் விரைப்பும் இருக்கும். கண் தசைகளில் பலவீனம் ஏற்பட்டு விட்டால் இழந்த பலத்தை மீண்டும் கொண்டுவர உதவும். கண் தசைகளில் பக்ஷவாதம் ஏற்படும் நிலைமை. பேச்சுத் தடுமாற்றம், சந்தர்ப்பத்துக்குச் சரியான வார்த்தை வராமை, ஆகியவைகளையும் இவ்வகையில் சேர்க்கலாம். நாட்பட்ட தொண்டைக் கம்மல், சில சமயங்களில் குரலே இருக்காது. குரல்வளையில் ஏதோ அடைத்திருப்பதுபோல் தோன்றும். ஆண் தன்மைக் குறைவில் புணர்ச்சி செய்ய ஆரம்பித்த உடனே மானியின் விறைப்பு அடங்கி விடுதல் (அக்னஸ் காஸ்டஸ் கலேடியம், செலனியம்).

கடைசியில் உணர்ச்சிக்குறைவு. உணர்ச்சியே இல்லாமல் அதிக உணர்ச்சி இருத்தல். உடல் என்னும் தலைப்பைப் பார்க்கவும். கைகளில் மதமதப்பு. இரவும் பகலும் மூத்திரம் வியாதியஸ்தருக்குத் தெரியாமலேயே வெளியாகும். (காஸ்டிகம்). மூத்திரம் கழிக்கத் தூண்டுதல், ஆனால் அவ்வளவு தாராளமாகவும் சுலபமாகவும் வெளியாவதில்லை. ஒரே தாரையாக மூத்திரம் வெளிப்படுவதில்லை.

நடுக்கம் :—பொதுவான பலவீனத்துடன் உடலில் நடுக்கம். மயக்கம் வருவது போலவும் நடுங்கிக் கொண்டும் இருத்தல், சில நாட்களுக்கு ஒரு முறையாக முறை வைத்து உடல் நடுக்கம் உண்டாகும். கைகளில் நடுக்கம்.

புண் : புண் இருப்பதுபோல் வலிகள் :—உறுத்தும் வலிகள் : அனேகமாக எல்லா இடங்களிலும் புண் இருக்கும், சருமத்திலும் குறிப்பாக சளிச் சவ்வுகளிலும் இருக்கும். கண் இமைகளின் ஓரங்களில் நாட்பட்ட புண். அவை தடித்து வீங்கிப் புண்ணாய் இருக்கும். சிறு குழந்

தைகளுக்கு விழிகளிலே புண். மூக்குத்துவாரங்களில் புண். மூக்கின் நடுவிலுள்ள குருத்தெலும்பில் புண்கள். அழுகிய புண்கள். பாதரஸமுள்ள ஔஷதங்களை உட்கொண்டதினாலும் மேகக்கிரந்தி, சுரட்பிகளின் வீக்கம் முதலிய வியாதிகளினாலும் தொண்டையில் புண் தோன்றுதல். வயிற்றில் புண், வலி பல இடங்களிலும் பரவும். புண் உண்டாகி விட்டதோ என்று சந்தேகிக்கும் நிலைமையிலுள்ள நாட்பட்ட வயிற்றுக் கடுப்பு. மானிக் கொண்டையை மூடிய தோலில் பறங்கிப் புண் போன்ற புண். மூத்திரப் பையில் இரணம். கருப்பை, யோனி ஆகிய உள் பக்கமுள்ள பிறப்பு உறுப்புகளிலும் வெளியிலுள்ள உறுப்புகளிலும் கூட புண். கருப்பையின் வாயிலும் கழுத்திலும் புண் உண்டாகி நழுவுதல். வெள்ளை ஒழுக்கு ஏராளமாகவும் மஞ்சளாகவும் புண்ணுள்ள இடங்களிலிருந்து அடிக்கடி இரத்தப் பெருக்கு எடுத்துக் கொண்டும் இருக்கும். வயிற்றில் புண் இருப்பது போல் பிடுங்கும் வலிகள். மார்பின் இடது பக்கத்தில் விலா வெலும்புகளுக்கு உட்புறத்திலே புண் உள்ள வலி. மூத்திரக் குழாயின் நடுவிலே துரும்பு இருப்பது போன்ற உணர்ச்சியுடன் புண் உள்ள வலி. (இக்குறி மேக வெட்டையில் உண்டாகும்). பல இடங்களில், குறிப்பாகச் சளிச் சவ்வுகளில் துரும்பு இருந்து உறுத்துவதுபோல் வலி. தொண்டையில் முள் சிக்கிய உணர்ச்சி, விழுங்கும் போது அதிகமாகும். (டோலிகோஸ், ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட், ஸைலீஷியா); நடக்கும் போதும் சவாரி செய்யும் போதும் கருப்பையிலும் அதன் அருகிலும் முள் இருக்கும் உணர்ச்சி.

சளிச் சவ்வுகளில் சிவந்த புளைகள், இரத்தக் குழாய்களின் வீக்கம், ஊதா நிறமாய் மாறி இருத்தல்



ஆகிய குறிகளும் பொறுக்குகள் உண்டாவதும் காணப்படும். உதாரணமாக 1. கண் இமை வேக்காட்டில் இமைகளில் அடை அடையாகப் பொறுக்குகள் காணப்படும். 2. விழிகளின் ஓரங்களில் இரத்தம் இருப்பது போல் சிவப்பாய் இருக்கும். 3. விழிகளின் உட் கோணத்திலே உள்ள சதை வீங்கிச் சிவந்து மாமிசம் போல் தோன்றும். 4. சிறு சிறு கொப்புளங்களுடன் இமை வேக்காடு.

**இரத்தப் பெருக்கு :**—சளிச் சவ்வுகளிலிருந்தும் அவைகளில் உண்டாகும் புண்களிலிருந்தும் இரத்தப்பெருக்கு உண்டாவது மிகவும் குறிப்பிடத் தக்கது, மூக்கு, ஈறுகள், வயிறு (இரத்தம் வாந்தி செய்யப்படுதல்), மூத்திரக் குழாய், கருப்பை, யோனி முதலிய பல இடங்களிலிருந்தும் இரத்தப் பெருக்கு, மிகவும் நாட்பட்ட, தீராது என்று கைவிடப்பட்ட வயிற்றுப் புண்ணையும் இரத்த வாந்தி இருந்த சமயங்களில் பூரண குணம் செய்து ஆற்றியிருக்கிறது. (கெண்ட்). புணர்ச்சி செய்யும் போது வலி உண்டாகிப் பிறகு யோனியிலிருந்து இரத்தப் பெருக்கு (நைட்ரிக் ஆஸிட்).

**ஏராளமான, சீழ்ப் போன்ற கழிவுகள் :**— சீழ் உள்ள கண் வேக்காடு அல்லது பிறந்த குழந்தைகளின் கண் வேக்காடு: சீழ் கெட்டியாகவும் மஞ்சளாகவும் காரம் இல்லாமலும் ஏராளமாகவும் இருக்கும். (சூடு உள்ள அறையிலும் நெருப்பின் அருகிலும் இருக்கும் போது அதிகமாகித் திறந்த இடங்களில் குறையும். (கழிவுகளின் அளவு) ஏராளமாய் இருப்பது குறிப்பிடத் தக்கது. பல்ஸடில்லா, மெர்கூறியஸ் ஸொலுபுலிஸ் ஆகியவைகளால் குணம் ஏற்படாத போது மிகவும் ஏற்றது. கண்களைத் திறந்தவுடனே குபு குபுவென்று ஏராளமாய்ச் சீழ்

வெளியான போது மெர்கூறியஸ் ஸொலுபுலிஸ் தனக்கு அதிக வெற்றி அளித்ததாக நாஷ் கூறுகிருர். இவ் வெளஷதத்தை வீரியப் படுத்தாத உருவத்தில் உபயோகித்துக் குணம் காணுத போது 200, 1000 வீரியத்தில் உள்ள ஔஷதத்தைத் தண்ணீரில் கலந்து கண்களின் மேல் ஊற்றி வர குண மேற்பட்டிருக்கிறது.

**அதிக ஓசையுடன் அபான வாயுவும் ஏப்பமும்:**—வயிற்றில் அதிக உப்பிசம். மலம் கழிக்கும் போது அதிக ஓசையுடன் அபானவாயு வெளிப்படும், (ஆலோ), அடி வயிற்றில் அதிக உப்பிசம், வலியும் இருக்கலாம். வெடிப்பது போல் பலமான ஓசையுடன் ஏப்பம் விடுதல். ஏப்பம் விடுவது முதலில் சிரமமாய் இருக்கும், ஆனல் முடிவில் காற்று மிக வேகமாகவும் அதிக ஓசையுடனும் வெளியேறும். ஏப்பம் விடுவதிஞலோ அல்லது அபான வாயு வெளிப் படுவதிஞலோ சிறிதளவு அனுகூலமும் ஏற்படுவதில்லை. ஆனல் சில சமயங்களில் அதிக அனுகூலம் ஏற்படுவதும் உண்டு. வயிற்றில் அதிகக் காற்றிஞல் உப்பிசமும் வலியும்.

**நீர்ச் சுரப்பு:**—பல இடங்களில், கண் இமைகளில், கால்களில், அடி வயிற்றில்.

**பாலுண்ணி போன்ற வளர்ச்சிகள்:**—பாலுண்ணிகளும் அதைப் போன்ற வளர்ச்சிகளும். தொண்டை, பிறப்பு உறுப்புகள், ஆசனவாய் முதலிய இடங்களில் தோன்றலாம். ஆகவே மேக வெட்டை விஷத்தைப் போக்க உதவும் ஔஷதங்களில் அர்ஜண்டம் நைட்ரிகமும் ஒன்று.

**இடது பக்கமே வியாதிகள் அதிகம்:**—பல குறிகள் இடது பக்கத்திலேயே தோன்றுகின்றன. வயிற்றின் இடது பக்கத்தில் கொட்டுவது போலவும் புண் இருப்பது போலவும் வலி, தொட்டாலும் ஆழ்ந்து மூச்சு விட்டா



லும் அதிகமாகும். இடதுதோள் பட்டையிலும் கையிலும் வலி. இடது கை கனமாய்த் தோன்றும். மணிக்கட்டில் (இடது கை) வாத சம்பந்த முள்ள வலி.

## மற்ற குறிகள்

இரத்தக் குழாய்கள் பருத்து இருப்பதும் உடல் முழுவதும் துடிப்பதும். அசுத்த இரத்தக் குழாய்கள் தளர்ந்து வீங்கிச் சுருட்டிக் கொள்ளுதல்—விழிகள் பஞ்சு அடைந்ததுபோல் மங்கி இருக்கும். கண் கூச்சம் சூடு உள்ள அறையில் அதிகமாகவும் திறந்த இடங்களில் குறைவாகவும் இருக்கும். உண்ட உணவு இடைவிடாமல் வாந்தி செய்யப்படுதல். படுக்கை விரிப்புகளில் வாந்தி செய்யப்பட்ட பொருள்பட்டால் கறுப்புக்கறையை உண்டு பண்ணும். உணவு உட்கொண்ட ஒவ்வொரு தடவையும் குமட்டுதல்—அடிக்கடி வாந்தி ஏற்படுவது போல் தொந்திரவுடன் குமட்டல். வலிப்புகளுக்கு முன் வியாதியஸ்தர் நிலை கொள்ளாமல் இருப்பார். இரவில் பயங்கரமான கனவுகள்—பாம்புகளைப் பற்றிய கனவு. ஆசன வாயில் அரிப்பு—அரிப்பிஞல் அவ்விடத்தை அதிகமாய்த் தேய்த்துச் சொறிந்து புண்ணும் உண்டாகும். தண்ணீர் போன்ற திரவப் பொருள்களைக் குடித்தால் அவை அப்படியே உடலினுள் பாய்ந்து செல்வது போல் தோன்றும். நடனம் அல்லது நாட்டியம் ஆடுவதால் உண்டாகும் தலைவலி.—அதிக மன வேலையிஞல் தோன்றும் தலைவலி.—நாக்கின் நுனி சிவந்து வலியுடன் இருக்கும். நாக்கின் முளைகள் பெரிதாகக் காணப்படும். நாக்கின் நடுவில் கீழ்ப்பாகம் வரை சிவந்த கோடு. மூக்கிலிருந்து கஞ்சி போன்ற சளி. (என்னுடைய அபிப்பிராயத்தில் இக்குறி ஓர் இரத்தினமே). புணர்ச்சி செய்யும் போது வலி. மூத்திரக்குழாயில் காயம்

இருப்பதுபோல் வலி அல்லது மூத்திரக் குழாயின் நுனி யில் வலி. புகையிலை உபயோகித்தால் சிறு பையன் களுக்கு உண்டாகும் கோளாறுகள் (ஆர்ஸனிகம் ஆல்பம்.)

குரல்வளை வேக்காடு :—பாடகர்கள், பிரசங்கிகள் இன்னும் இவர்களைப்போல் குரலை அதிகம் உபயோகிப் பவர்களுக்கு ஏற்படும் நாட்பட்ட குரல்வளைக் கோளாறு கள். குரலை உயர்த்தும் போது இருமல் உண்டாகும்.

வயிற்றுப் போக்கு :—அதிக ஓசையுள்ள அபான வாயு என்னும் தலைப்பைப் பார்க்கவும். பச்சை நிறமுள்ள நறுக்கிய கீரைபோல் செதில்களாகவும் உள்ள சளி மலத் துடன் வெளிப்படும். வெளியே வந்து சிறிது நேரம் ஆனவுடன் மலத்தின் நிறம் பச்சையாய் மாறும்.

காக்கை வலிப்பு :—வலிப்பு வருவதற்குச் சில நாட் கள் அல்லது சில மணி நேரங்களுக்கு முன்பாக கண் ணின் கருமணிகள் விரிவடைந்து விடும். வலிப்பு வந்து போனவுடன் வியாதியஸ்தர் நிலை கொள்ளாமல் இருப் பதுடன் கைகளில் நடுக்கமும் இருக்கும்; வலிப்பு மாத விடாய்க் காலத்தில் தோன்றும்.

சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் விஷ பேதியை ஒத்த வயிற்றுப் போக்கு :—உடல் ஒட்டிப் போய் எலும்பும் தோ லுமாய் உள்ள குழந்தைகள்; மலம் பச்சையாகவும் குழ குழப்பாகவும் இருப்பதுடன் ஓசையுடனும் வயிற் றில் உப்பிசத்துடனும், இரவில் அதிகமாகவும் வெளிப் படும்.

மேக வெட்டை :—கன்னபிஸ் ஸடீவா கொடுத்த பிறகு பிறப்பு உறுப்பிலிருந்து வெளியாகும் போக்கு சீழ்ப் போல் மாறி மூத்திரக் குழாயில் வலி, வீக்கம் ஆகியவை களுடன் எரிச்சலும், மூத்திரக் குழாய் முறுக்கிக் கொண்டு துவாரம் அடைபட்டு சில சொட்டு மூத்திரம்



உள்ளேயே தங்கிக் கிடக்கும் உணர்ச்சியும் உள்ள போது அர்ஜண்டம் நைட்ரிகம் உபயோகப் படும். தடைப்படா மல் ஒரே தடவையில் மூத்திரம் வெளியாகாது. மேக வெட்டை அதிகமாய் விட்டதால் மூத்திரக் குழாயில் வேக்காட்டுடன் கடுமையான எரிச்சலும் வலிகளும் தோன்றுதல். இரத்தமும் சீழும் வெளிப் படும். மானி வலியுடன் விரைத்தல். மூத்திரக் குழாயில் அடைப்பு.

கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு :—மாதவிடாய் முடியும் காலத்தில் அதிக மனக் கோளாறுகளுடன் காணப்படும் இரத்தப் பெருக்கு (லாச்சஸிஸ்). இளவய தில் கணவனை இழந்து மறு மணம் செய்து கொள்ளா மல் இருக்கும் பெண்களுக்கும் குழந்தை பெறுமல் மலடி யாய் இருக்கும் பெண்களுக்கும் ஏற்படும் இரத்தப் பெருக்கு.

உறவு :—அதிக வாயுவுடன் உள்ள நாட்பட்ட அசி ரண வியாதிகளில் அர்ஜண்டம் நைட்ரிகத்துக்குப் பின் லைகபோடியம் நன்ருக வேலை செய்யும்.

ஒப்பிடுதல் :—தலை மிகவும் பெரியதாகிவிட்ட உணர்ச்சி (அக்டியா ரஸிமோஸா, ஜெல்ஸிமியம், க்ளோனுயின், நக்ஸ் வாமிகா) நாக்கின் நடுவில் கீழ்புறம் வரை சிவந்த கோடு (வெராட்ரம் விரைட்,—பழுப்பான கோடு—பாப்டீஷியா). தொண்டையில் முள் சிக்கிய உணர்ச்சி (ஹிப்பார், நைட்ரிக் ஆஸிட்). தண்ணீர் குடித்தவுடன் வயிற்றுப் போக்கு கூடுதலாகுதல் (ஆர்ஸனிகம் ஆல்பம், க்ரோடன் டிக்லியம்) கருப்பையின் வாய் அல்லது கழுத்தில் புண்ணுடன் நழுவு தல் (ஹைட்ராஸ்டிஸ், க்ரீஸோட், மெர்கூறியஸ் ஸொலு புலிஸ், ஸேபியா) படபடப்பு, வலப்பக்கம் படுத்தால் (பாடி யாகா, ப்ளாட்டினு, கால்மியா, லிலியம் டிக்ரினம், ஸ்பாஞ் சியா) லிலியம் டிக்ரினத்தில் இருதயத்தின் வேலை பற்றிய

கோளாறுகளுடன் படபடப்பு வலது பக்கம் படுத்தால் தோன்றும். வலப்பக்கம் திரும்பும் போது இடது பக்கத்தில், ... கம்.

## ஆர்னிகா மொண்டானு
## (ARNICA MONTANA)

முன்னுரை :—அலட்சிய மனுேபாவம், மந்த குணம், களைப்பு, வலி, இரத்தப் பெருக்கு, தளர்ச்சி, அழுகுதல் முதலிய பல குறிகள் உள்ளது ஆர்னிகா. இவ் வெளஷதத்தினுல் ஏற்படுத்தப் படுத்த செயற்கை வியாதிகள் அனைத்தையும் அனேகமாகக் கீழ்க்காணும் மிக விசேஷம் என்று மதிக்கப்படும் குறிகளில் அடக்கி விடலாம். அவையாவன. 1. அலட்சியம், பொறுப்பு இல்லாமை, 2. மந்த குணம், மயக்கம். 3. அதிக பலவீனம், மிக வேகமாகப் பலம் குறைதல். 4. புண் உள்ள வலி, அதிக வலி. 5. இரத்தப் பெருக்கு. 6. தளர்ச்சி (உதாரணம் :—மலமும் மூத்திரமும் வியாதியஸ்தர் அறியாமலேயே வெளிப் படுதல்). 7. போக்கு, கழிவு ஆகியவை அழுகியும் அதிக நாற்றமாகவும் இருத்தல்.

கடைசியாக ஆனுல் முக்கியமான குறி, ஆர்னிகாவில் உடலில் பல இடங்களில் கறுப்பாகவும் நீலமாகவும் திட்டு திட்டாகக் காணப்படும். ஆகவே கறுப்பு இரத்தம் குழம்பிக் காணப் படுவதற்கு இது தகுந்த ஔஷதம் ஆகும்.

### பொதுவான குறிகள்

தகுதி :—பயந்த சுபாவமுள்ள பெண்கள். அதிக இரத்தம் இருப்பது போல் தோற்றம் அளிக்கும் சிவந்த முகமும் களையான தோற்றமும் உள்ளவர்கள். இவைகளுடன் தலையினுள் அதிக இரத்தம் சேருவதும் காணப்படும். உடல் பலவீனமும், இரத்தக் குறைவும்



தளர்ந்த தசையும் உள்ளவர் களிடத்தில் அவ்வளவு நன்ருக வேலை செய்வதில்லை. இக்காரணத்திஞல் தான் இதைத் தின்னும் சாக பக்ஷிணிகளான பிராணிகளுக்குக் கெடுதல் ஏற்படுவதில்லை என்று முடிவு செய்ய வேண்டி இருக்கிறது என்று லின்னியஸ் குறிப்பிடுகிருர். வலியைத் தாங்க முடியாத பயந்த குண முள்ள வர்கள்: உடம்பு முழுதுவம் அதிக உணர்ச்சி யுள்ளதாய் இருக்கும் (சாமோமில்லா, காபியா, இக்னேஷியா) அடிபட்ட காயங்களால் உடலில் அதிகரித்த உணர்ச்சி உள்ளவர்கள் ; பயந்த குணம், வலியைப் பொறுக்க முடியாது. அடிபட்டுப் பல நாட்கள் கழிந்த பிறகும் அதன் விளைவுகள் உடம்பிலே இருந்துவரும் உணர்ச்சியும் சிறிதளவு அடிபட்டாலும் பல நாட்களுக்கு உடல் வேதனையும் உள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றது. ரயிலில் அல்லது கப்பலில் பயணம் செய்ய ஆரம்பித்த உடனேயே குமட்டலும், வாந்தி முதலிய கோளாறுகளும் உண்டாகும் உடல்வாகு உள்ளவர்கள்.

மனம் :—1. அலட்சியம் :—எந்த விஷயத்திலும் ஈடுபடுவதில்லை. தனியே இருக்க விரும்புதல், தன்னுடன் பிறர் பேசுவதை விரும்ப மாட்டார், தன் உடம்புக்கு ஒரு கெடுதலும் இல்லையென்று சொல்வார். (டைபாய்டு சுரத்தில் இருப்பது போல்). கேள்விகளுக்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லாமை. 2. பயந்த குணம்: அல்ப காரணங்களும் பயத்தை உண்டாக்கும். பிறர் தன்னைத் தொட்டாலும் அருகிலே வந்தாலும் பயம்; அருகில் வருவோர் தன்னைத் துன்புறுத்தவே வருகின்றனர் என்று பயப்படுதல். (கீல்வாயு போன்ற வலியுள்ள வியாதிகளில் இருப்பது போல்). பிறர் தன்னைத் துன்புறுத்துவார்களோ என்ற பயம், மனம், உடல் ஆகிய இருவிதமாக

வும் இருக்கும். (என் அனுபவத்தில் மனதைப் பற்றிய பயமே அதிகம் என்று தெரிகிறது). 3. நினைவு இழத்தல் (அடிபட்டவுடன் மயக்கம் ஏற்படுவது போல்). அறிவு மங்கிய நிலைமை; கேட்ட கேள்விக்குச் சரியான விடை அளிப்பார். ஆனால் மறுகணமே நினைவு இழந்து புத்தித் தடுமாற்றம் உண்டாகும். (பாதிப் பேச்சில் தூங்கிவிடுவது, பாப்டீஷியா.) விடை சொல்லிக் கொண்டிருக்கும் போது அதை முழுவதும் முடிக்காமல் பாதியிலேயே கடுமையான மயக்கம் தோன்றும். புத்தித் தடுமாற்றத்துடனும் மயக்கத்துடனும் மந்த குணம். (டைபாய்டு நிலைமைகள்).

**உடல் :**—அதிர்ச்சி, மனதில் அல்லது உடலில். புண்ணாகவும் அடிபட்டது போலவும் உணர்ச்சி. உடல் முழுவதும் புண்ணாய் இருப்பது போலவும் அடிபட்டது போலவும் வலி, தொட்டால் அதிகமாகும். வியாதியஸ்தரின் இச்சை இல்லாமல் மலமும் மூத்திரமும் தாமாகவே வெளியேறும். நாக்கில் அழுகிய சுவை. வாயில் அழுகிய நாற்றம். முகம் மட்டும் சூடாகவும் மற்ற எல்லா இடங்களும் சில்லென்று குளிர்ந்தும் இருக்கும். உடலின் மேற்பகுதி சூடாகவும் கீழ்ப் பகுதி குளிர்ச்சியாகவும் இருத்தல். பொறுக்க முடியாத நாற்றமுள்ள மலம். கெட்ட வாசனையும் அழுகிய நாற்றமுமுள்ள ஏப்பம் அடிக்கடி ஏற்படும். மூச்சுக் காற்றும் நாற்றம் வீசும். புளிப்பான அல்லது கெட்ட நாற்றம் அடிக்கும் வியர்வை. உடலில் நீலம் அல்லது கறுப்பு நிறமுள்ள திட்டுகள். மிக மெதுவான அடிபட்டாலும் அந்த இடம் உடனே கறுப்பாகவும் நீலமாகவும் நிறம் மாறுதல். உணவில் வெறுப்பு, குறிப்பாக மாமிசத்திலும் மாமிசம் வேக வைத்த தண்ணீரிலும். அடி வயிறு பானை போல் உப்புதல். உடல் பலம் மிகவும் குறைந்து விடுதல். அடிக்கடி



இரத்தப் பெருக்கு உண்டாகும் உடல் வாகு. கீழே வைத்துப் படுத்த உடல் பகுதி சில்லென்று ஆகுதல். உள் உறுப்புகளில் நீர்ச் சுரப்புடன் வீக்கம். கண்களில் இரத்தம் குழம்பி யிருக்கும்.

**உபாதி கூடுதல் :**—அடிபட்ட பிறகு, ஈரக்கசிவு உள்ள குளிர்ந்த பருவம்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- அசைவினாலும் உடல் வேலையினாலும். இலேசாகத் தொட்டாலும் இடதுபக்கமாய்ப் படுத்தாலும். புணர்ச்சியில் அளவு மீறி ஈடுபட்டதாலும் (பெண்களுக்கு யோனியில் வேக்காடும் ஆண்களுக்கு ஆண் தன்மைக் குறைவும் தோன்றுதல். ஆண்களுக்குக் கெட்ட பழக்கங்களால் ஏற்படும் ஆண் தன்மைக் குறைவு).

**உபாதி குறைதல் :**—கீழே படுத்தால்; தலையைக் கீழாக வைத்துப் படுத்தால்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**அடிபடுதல் :**—அடிபட்டதால் தோன்றும் கோளாறுகளைப் போக்குவதில் ஓர் அரசன் என்றே மதிப்பிடலாம். அடிபட்டதினால் உடனேயோ பிறகோ உண்டாகும் கோளாறுகள் இதனால் குணம் செய்யப் படுகின்றன. அடிபட்ட இடங்களில் கறுப்பாக இரத்தம் குழம்பும் போதும், தலை, முதுகு ஆகிய இடங்களில் அடிபடும் போதும் ஆர்னிகா மிகச் சிறந்தது. கூர்மை இல்லாத ஆயுதங்களால் ஏற்படும் அடிகள். எலும்பு முறிந்த இடங்களில் வீக்கமும் ஏராளமாய்ச் சீழ்ப் பிடித்தலும்; அடிபட்ட காரணமாக சருமத்தி லிருந்தோ அல்லது உள் உறுப்புகளிலிருந்தோ உண்டாகும் இரத்தப் பெருக்கு. கனமான பொருள்களைத் தூக்கியதால் அல்லது சக்திக்கு மீறி வேலை செய்ததினால் தசைகளில் நரம்பு பிசகி சுளுக்

கும் வலியும் தோன்றுதல். அளவு மீறி வேலை செய்ததினுல் அல்லது அடிபட்டதால், குழந்தை பெற்ற பிறகும் ஆயுதங்களின் உதவியினுல் நடைபெற்ற பிரசவத்திலும் மூத்திரம் அடக்கப் படுதல்; அடிபட்ட பிறகு கண்களில் இரத்தம் குழம்பி உண்டாகும் வேக்காடு; அடிபட்டதாலும் கடுமையான இருமலினுலும் (லேடம், நக்ஸ் வாமிகா) இமை களிலிருந்தும் கண்களின் உட்புறத்திலிருந்தும் இரத்தப் பெருக்கு உண்டாகுதல். ஆர்னிகாவை இச்சமயத்தில் கொடுத்தால் கசிந்துள்ள இரத்தத்தை உறிஞ்சிக் குணம் அளிக்கிறது. அடிபட்டதால் காதுசெவிடாகுதல், மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு; கண்களால் உன்னிப்பாகக் கவனித்து வேலை செய்ததினுல் கண்களில் அடிபட்டது போல் புண் இருப்பது போலவும் வலி. சினிமாப் படங்களைப் பார்த்து வந்தவுடன் மிகவும் களைத்துப் போகுதல். அளவுக்கு மீறிய புணர்ச்சியும் கெட்ட பழக்கங்களும் ஒரு விதமான அடிபடுதல் என்று எண்ண வேண்டும். உபாதி கூடுதல் என்னும் தலைப்பின் கீழும் கவனிக்கவும்.

வியாதியோ அல்லது கோளாருே எதுவாக இருந்தாலும் அது எப்போதோ ஒரு காலத்தில் (பல வருஷங்களுக்கு முன்) அடிபட்டதின் விளைவு என்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டால் அதற்கு ஆர்னிகா தான் முழுவதும் ஏற்றது அல்லது முதல் முதலாகக் கவனிக்கப்பட வேண்டிய ஔஷதமாகும். தசைக் கட்டிகளும் குறிப்பாக பெண்களின் ஸ்தனங்களில் காணப்படும் கட்டிகளும் நாட்பட்ட அசீரணமும் கூட அடிபட்ட காரணமாக உண்டாகி இருந்தால் இவ் ஔஷதத்தினுல் குணம் ஆகும்.

அடிபடுதல் மனதைப் பற்றியதாகவும் இருக்கலாம்.



உதாரணமாக அதிக வருத்தம், எதிர்பாராமல் திடீரென்று ஏற்படும் பண நஷ்டம் ஆகியவைகளால் உணர்ச்சிகள் தாக்கப்பட்டு ஏற்படும் கோளாறுகள்.

**திடீரென்று தோன்றுதல்:**—ஆர்னிகாவின் வலிகள் திடீர் என்று தோன்றுவது குறிப்பிடத்தக்கது என்று க்ளார்க் சொல்லுகிருர். ஒரு குழந்தைக்கு இரு சுவாச கோசங்களிலும் அதன் உறையிலும் சேர்ந்தாற் போல் வேக்காடு உண்டாகிக் கடுமையான குத்து வலி கண்டு மூச்சு விடவே முடியாது போல் தோன்றியது. இச்சமயத்தில் ஆர்னிகாவைக் கொடுத்தவுடன் வியாதி திடீரென்று மேலும் அதிகமாகியது. ஆனுல் அடுத்த நிமிஷமே கடுமை குறைந்து குழந்தை வழக்கம் போல் மூச்சு விட்டுக் கொண்டு தூங்க ஆரம்பித்தது. இக்கேசைக் குறிப்பிட்டவர் பி. பி. வெல்ஸ் என்பவராகும். முன்னொரு சமயம் என் கை நுனி விரலிலே ஒரு கம்பி பாய்ந்து உள்ளே சென்று துடிக்கும் படியான வலி உண்டாயிற்று. உடனே ஆர்னிகா I-x-ஐ மேலே தடவினேன். மறு நிமிஷமே வலி அடங்கி விட்டது. இருதயத்தை நசுக்குவது போல் அல்லது அவ்விடத்தில் அடிபட்டது போல் திடீரென்று தோன்றும் கடுமையான வலி என்பதையும் சேர்க்கலாம். பாம்புகளின் கடிகளும் ஆர்னிகாவுக்கு அடங்கலாம். பாம்புகளின் கடிகளிலும் விஷப் பிராணிகளின் கடி கொட்டுகளிலும் விஷம் மிக வேகமாக வேலை செய்வதே இதற்கு முக்கிய காரணமாகும்.

முன் எச்சரிக்கை எதுவும் இல்லாமல் திடீரென்று குளிர், உடல் சோர்வு, மயக்கம், மூத்திரம் அடக்கப்படுதல் அல்லது வியாதியஸ்தரின் விருப்பம் இல்லாமல் வெளிப்படுதல், மலம் தானுகவே வெளியேறுதல், மூத்திரத்

துடன் இரத்தம் கலந்திருத்தல் முதலிய குறிகளுடன் திடீரென்று பயங்கரமாகத் தோன்றும் விஷத்தன்மை வாய்ந்த மலேரியாச் சுரங்களை இது குணம் செய்யுமென்று நான் நினைக்கிறேன். இது போன்ற சமயத்தில் ஆர்னிகாவை 30 அல்லது 200 வீரியத்தில் அடிக்கடி 5 முதல் 10 நிமிஷங்களுக்கு ஒரு முறையாக) குணம் ஏற்படும் வரை கொடுத்து வரவேண்டும். அவ்வியாதிக்கு ஆர்னிகா ஏற்றதாக இருந்தால் சுமார் ஒரு மணி நேரத்துக்குள் குணம் தோன்றும்.

புண்ணுள்ள உணர்ச்சி:—உடம்பு முழுவதும் அடிபட்ட இடங்களில் இவ்வுணர்ச்சி காணப்படலாம். அடிபட்ட காரணம் எதுவும் இல்லாமல் தோன்றும் வியாதிகளிலும் காணப்படலாம். மார்பில் அடிபட்டது போலவும் நசுக்குவது போலவும் வலி. நாட்பட்ட மார்ச்சளியில் மார்பில் அடிபட்டதுபோல் லேசான வலி அல்லது வேலை செய்தாலும் நடந்தாலும் அதிக வலி உண்டாகுதல், விலா எலும்புகளில் அடிபட்டது போல் வலி, முதுகில் அடிபட்டது போல் வலி, கடுமையான வேலை செய்த பிறகு விலா எலும்புகளின் நடுவிலுள்ள தசைகளில் வலி, விலா எலும்புகளிலும் வலி. கருப்பைப் பாகங்களில் அடிபட்டுப் புண்ணாகவுள்ள உணர்ச்சியினால் நேராய் நிமிர்ந்து நடக்க முடியாது. பிரசவம் ஆன பிறகு பிறப்பு உறுப்புகளில் புண் இருப்பது போலவும் அடிபட்டது போலவும் வலி. அதிக வலியும் தொட்டால் வலி மிக அதிகமாவதும் உள்ள முகப்பரு அல்லது ஒரே சமயத்தில் பல இரத்தக் கட்டிகள் சேர்ந்தாற்போல் தோன்றுதல். மணிக் கட்டுகளிலும் கைகளில் உள்ள எலும்பு மூட்டுகளிலும் சுளுக்கு ஏற்பட்டிருப்பது போல் உணர்ச்சி. முதுகு, மார்பு, இடுப்பு, கைகள் முதலிய எலும்பு மூட்டுகளில் எலும்பு இடம்



நழுவி விட்டது போல் தோன்றுதல். படுக்கை மெத்தென்று இல்லாமல் கல் போல் இருப்பதாகத் தோன்றுதல். படுக்கைமேல் வைக்கப் பட்டுள்ள உடல் பாகம் எங்கும் அடிபட்டுப் புண்ணாய் இருப்பது போன்ற உணர்ச்சி உண்டாகி அதனால் நிலைகொள்ளாமல் அடிக்கடி திரும்பித் திரும்பிப் படுத்துக் கொள்ளுதல். விரைகளில் அடிபட்டது போல் வலி. வாத ரோகத்தில் எலும்பு மூட்டுகள் வீங்கி அடிபட்டதுபோல் வலி. கையையோ காலையோ தாயார் பிடித்துக் கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் குழந்தை பலமாகக் கதறினால் அதற்கு உடலில் அடிபட்டது போன்ற உணர்ச்சி இருப்பதே காரணமாய் இருக்கலாம். இச் சமயத்தில் ஆர்னிகா சமய சஞ்சீவி போல் குணம் அளிக்கும். கக்குவாய் இருமலில் இருமல் ஏற்படுவதற்கு முன்னும் நின்ற பிறகும் ஒவ்வொரு தடவையும் குழந்தை கதறியழுதல். இருமலினால் உண்டாகும் புண் உள்ள வலியினால் குழந்தை பயமடைவதே இதற்குக் காரணம்.

உடல் சோர்வு :— உடல் வலிமை மிகவும் குறைதல். கொஞ்சங் கொஞ்சமாக பலவீனம் அதிகமாகி வருதல். பலவீனத்தினால் படுத்துக் கொள்ள நேருதல்.

தளர்ச்சி :—குடலும் மூத்திரப்பையும் தளர்ச்சியடைந்து வியாதியஸ்தர் அறியாமலேயே மலமும் மூத்திரமும் வெளியாகும். டைபாய்டு சுரத்திலும் மற்றும் பல வியாதிகளில் ஆபத்தான சமயங்களிலும் வியாதியஸ்தர் நினைவு தவறி மலமும் மூத்திரமும் அவர் விருப்பம் இல்லாமல் வெளிப்படும். இருமும்போது மூத்திரம் ஒழுகுதல். (காஸ்டிகம், பல்ஸடில்லா). இரவில் படுத்திருக்கும் போதும் பகலில் ஓடிக் கொண்டிருக்கும் போதும் இச்சையின்றி மூத்திரம் வெளிப்படுதல்.

இரத்தப் பெருக்கு :—அடிக்கடி இரத்தப் பெருக்கு ஏற்படும் தன்மை இவ் வௌஷதத்தின் குறிப்பிடத்தக்க குறிகளில் ஒன்றாகும். உள் உறுப்புகளிலிருந்தும் வெளி உறுப்புகளிலிருந்தும் உண்டாகும் இரத்தப்பெருக்கு. இரத்தப் பெருக்குகளில் ஆர்னிகா உபயோகமாவதற்கு அவை அடிபட்டதினால்தான் தோன்றி யிருக்கவேண்டும் என்னும் அவசியம் இல்லை. இரத்தக் குழாய்களின் தளர்ச்சியால் ஏற்படும் இரத்தப் பெருக்குக்கும் ஆர்னிகா தகுந்ததே. மூக்கிலிருந்தும் அடிக்கடி பெருக்கெடுத்து வருதல் (அகோனைட், பெல்லடொன்னா, பிரயோனியா), மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு என்பதே ஆர்னிகாவின் விசேஷக் குறிகளில் ஒன்றாகும்.

மூக்கிலிருந்து மிகக் கடுமையான பயங்கரமான இரத்தப் பெருக்கு ஏற்பட்டு அல்லோபதி வைத்திய நிபுணர்களைத் திணற அடித்து விட்ட ஒரு கேசில் நான் ஆர்னிகா 200-ல் ஒரே ஒரு வேளை கொடுத்து வியாதியஸ்தருக்கு (அவர் ஒரு பஸ் டிரைவர்) சுமார் ஒரு நிமிஷத்துக்குள் குணம் செய்தேன். வியாதியஸ்தரின் குறிகளை அனுசரித்து இபிகாக் முதலில் கொடுக்கப்பட்டது. அதனால் குணம் காணாததால் அவர் செய்யும் தொழிலிலிருந்து ஏற்ற ஔஷதம் ஆர்னிகா என்று அறிந்து கொண்டேன்.

உடலின் பல துவாரங்களிலிருந்தும் இரத்தப் பெருக்கு ஏற்படக்கூடும். மூத்திரக் குழாய் வழியாக இரத்தம் வருதல். இரத்தம் கலந்த மூத்திரம். மாதவிடாய்களுக்கு இடையில் உள்ள நாட்களில் குமட்டலுடன் கருப்பையிலிருந்து இரத்தம் வெளியாகும். காதுகளிலிருந்து இரத்தம் வருதல். இருமியவுடன் இரத்தப்பெருக்கு. சளியுடன் இரத்தம் கலந்திருத்தல் அல்லது குண்டூசித் தலையளவு உள்ள சிறிய இரத்தப்



பொட்டுகள் காணப்படும். உமிழ் நீருடன் இரத்தம் கலந்திருக்கும். வாந்தியுடன் இரத்தம் காணப்படுதல். ஆசன வாயில் கடுப்புடன் சளி, இரத்தம், சீழ் ஆகியவை கலந்த மலம். (மெர்கூறியஸ்) இரத்தம் குழம்பிய கண்களும் இரத்தம் சுரந்த முகமும்.

அழுகும் தன்மை :—நாற்றம்; அழுகும் தன்மை, விஷப் பொருள் உண்டாகுதல் ஆகியவை மிகவும் குறிப்பிடத் தக்கவை. உடல் என்னும் தலைப்பின் கீழ் பார்க்கவும். கறுப்பான இரத்தம்; அதிக நாற்றம் உள்ள மலம்.

கரு இரத்தம் குழம்புதல்:—சருமத்தில் திட்டுத் திட்டாகக் கறுப்பாகவும் நீல மாகவும் நிறம் மாறுதல். உடல் என்னும் தலைப்பையும் கவனிக்கவும்.

ஒழுங்கு:—சரும வியாதிகள் ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு உடலில் தோன்றும்.

### மற்ற குறிகள்.

மூக்கு வீங்குதல், நுனி சில்லென்று இருக்கும். கீழ்த் தாடையில் பாரிச வாதம். குடலில் சிறு புழுக்கள். ஸ்தனங்களில் தசைக் கட்டி. ஸ்தனங்களில் தோல் உறிந்து சீழ்ப் புண்கள் உண்டாகுதல். சிரமத்துடன், திணறலுடன் சிறு சிறு மூச்சுகளாய் சுவாசித்தல். சுரப்பிகளில் வலியுள்ள வீக்கம். பொருள்களை இறுக்கிப் பிடித்துக் கொள்ள முடியாத படி கைகளில் பலவீனம் தோன்றுதல். முழங்கால் மூட்டுகளின் பலவீனத்தினால் நடக்கும் போது மூட்டு சரிவர வேலை செய்யாமை.—எலும்பு முறிந்து வெளியே வருவதும் அதனால் நிறையச் சீழ் உண்டாகுதலும் (காலண்டுலா).

அபோப்ளக்ஸி (Apoplexy) எனப்படும் மூளை வியாதி :—மயக்கம், மலமும் மூத்திரமும் தாமாகவே வெளியேறுதல் முதலிய குறிகளுடன் திடீரென்று தோன்றும்மூளை

வியாதியில் இரத்தப் பெருக்கைக் கட்டுப் படுத்தி மூளையினுள் இரத்தக் குழாய் வெடித்ததினால் பெருகிய இரத்தத்தை உறிஞ்சும்படி ஆர்னிகா வேலை செய்கிறது. வேறு ஔஷதங்களைக் கொடுக்க வேண்டிய குறிகள் காணப்படும் வரையில் ஆர்னிகாவை அடிக்கடி நாள் கணக்கிலும் வாரக்கணக்கிலும் கூடக் கொடுத்து வரலாம்" என்று அல்லென் எழுதுகிறார். அபோப்ளெக்ஸியினால் இடது பக்கத்தில் பாரிச வாதம் தோன்றினால்.

**பாரிச வாதம்**:—இடது பக்கப் பாரிச வாதம். நாடி பலமாகவும் அதிக நேரம் நிற்பதாகவும் இருக்கும். குறட்டையும் பெரு மூச்சும் முனகுவதும்.

**பிரசவமான பிறகு ஏற்படும் வலிகள்**:—நஞ்சுப்பை வெளிப்பட்ட பிறகு பிரசவத்தினால் பிறப்பு உறுப்புகளில் ஏற்படும் புண் பட்ட வலிகளுக்கும் பொதுவாக உடம்பு முழுவதும் உள்ள தசைகளில் தோன்றும் வலிகளுக்கும் ஏற்றது.

**பிரசவமான பிறகு இரத்தப் பெருக்கு**:—பிரசவித்த பிறகு ஏற்படும் இரத்தப் பெருக்கையும் மற்ற சிக்கல்களையும் தடுக்கிறது. பிரசவித்த பிறகு மூத்திரம் அடக்கப் படுதல் (கந்தாரிஸில் எதிரிடை).

**ஒப்பிடுதல்**:—ஒன்றன் பின்னொன்றாக சிறு இரத்தக் கட்டிகள் உண்டாவது (ஸல்பர்). அடிபட்டது போல் வலி (பாப்டீஷியா, சைனா, பைடோலக்கா, பைரோஜனியம், ரஸ் டாக்ஸ், ரூடா, ஸ்டாபிஸாக்ரியா) டைபாய்டு சுரத்தில் பாப்டீஷியா ஏறக்குறைய ஆர்னிகாவைப் போல்இருக்கிறது. பாப்டீஷியா வியாதியஸ்தர் தன் உடம்பில் வியாதி இருப்பதை அறிவார். ஆர்னிகா வியாதியஸ்தர் தன் உடம்பில் ஒரு வியாதியும் இல்லை என்று நம்பி தனக்கு வியாதி இருக்



கிறதென்று நினைப்பதையும் வெறுப்பார். முதுகெலும்பில் அடிபட்டால் ஹைபரிகத்துடன் ஒப்பிடலாம். இச் சமயத்தில் ஆர்னிகாவை விட அதுவே சிறந்தது ஆர்னிகாவுக்குப் பிறகு நன்றாக வேலை செய்யக் கூடியது மாகும்.

**குறிப்புகள்**:—சருமத்தில் காயம் ஏற்பட்டிருந்தால் ஆர்னிகாவை அந்த இடத்தின் மேலே தடவுவது கூடாது. இச்சமயங்களில் காலண்டுலாவையே மேலுக்கு உபயோகிக்கவேண்டும். நாய்க்கடிகளுக்கும் வெறிபிடித்த அல்லது கோபம் கொண்ட பிராணிகளின் கடிகளுக்கும் ஆர்னிகாவைக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் கெடுதலாகவேலை செய்யும்.

---

## ஆர்ஸனிகம் ஆல்பம்

## (ARSENICUM ALBUM)

**முன்னுரை**:—பிறரைக் கொல்லவும் தற்கொலை செய்து கொள்ளவும் அடிக்கடி இவ் வௌஷதம் உபயோகிக்கப் பட்டிருக்கிறது. சருமத்தை அழகாகவும் நல்ல சிவப்பாகவும் தலை மயிரைப் பளபளப்பாகவும் ஆக்க இதற்குச் சக்தி இருக்கிறது. பர்ஸியாவிலும் (Persia) இன்னும் சில நாடுகளிலும் உள்ள பெண்கள் இச் சக்தியை உபயோகித்துத் தங்களை அழகு செய்து கொண்டிருக்கின்றனர். ஆண்களும், குறிப்பாக மலை யேறுகிறவர்கள், தங்கள் உடல் சக்தியை அதிகரித்துக் கொள்ள இவ் வௌஷதத்தைப் பச்சையாகச் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். கை கால் தசைகளையும் சுவாச கோசங்களையும் பலப் படுத்தும் சக்தி இதற்கு இருப்பதே காரணம். ‘‘குதிரைகளுக்கு ஆர்ஸனிக்கைக் கொடுத்து ‘‘வைத்தியம்’’ செய்யும் நாகரீக வழக்கம் மிகவும் கெடுதலானது. அதன் வியாதி நீக்கும் சக்தியை துஷ்பிரயோகம் செய்வ

தாகும்" என்று டாக்டர் க்ளார்க் சொல்கிறார். ஆனால் ஹோமியோபதியர்கள் மட்டும் அவர்களுடைய வழக்கப்படி இவ்வௌஷதத்தை வீரியப் படுத்தி வியாதிகளைப் போக்க உபயோகிக்கின்றனர். உதாரணமாக முகம் வெளுத்துப் பயங்கரமான தோற்றம் அளித்தல், அளவு கடந்த பலவீனம், மிகவும் சிரமத்துடன் மூச்சு விடுதல் முதலியவை. இவ்வௌஷதத்தின் மிக முக்கிய குறிகளாவன:— **கவலை: நிலைகொள்ளாமை; உடல் சோர்வு; எரிச்சல்; அழுகிய பிணத்தின் நாற்றம்; நள்ளிரவுக்குப் பிறகு உபாதிகள் அதிகமாகுதல்.**

## பொதுக் குறிகள்

**தகுதி:**—வயதான. உருக் குலைந்த உடலுள்ளவர்கள்; உடல் வெளுத்து வியாதியுள்ள தோற்றமும் குளிர்ந்த உணர்ச்சியும் இருக்கும். மேகக் கிரந்தி அல்லது மலேரியாவினால் பாழ் படுத்தப்பட்ட உடலுள்ளவர்கள். "வெளிப் பூச்சுக்களிம்பைத் தடவிக் காய்ந்து போன குழிப் புண் அல்லது வெளியிலே மாவுகளை வைத்து அமுக்கி நின்று போன நாட்பட்ட காதுச் சீழ் உள்ளவர்களுக்குப் பல சமயங்களில் இது தேவைப்படுகிறது";(கெண்ட்). சுவாச கோசங்களில் நாட்பட்ட வியாதிகள் தோன்றுவதற்கு முன்னதாகக் காணப்படும் உடல் குறிகள். உடம்பில் குளிர் இருப்பதினால் நெருப்பின் அருகிலேயே இருக்க ஆவல் உள்ளவர்கள். "நீண்ட காலமாகக் குடிப் பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கு வழக்கமான போதைப் பொருள் கிடைக்காமல் சாராயம் சாப்பிட்டதினால் ஏற்படும் கடுமையான வியாதிகள் (பாரிங்டன்).

**மனம்:**—1. கவலையும் இறந்து விடுவோமென்ற பயமும். ஆர்ஸனிகத்தின் சாவு பயம் வியாதியின் கார



ணமாக மனதில் சோர்வு உண்டாகி ஏற்படுகிறது. (அகோனைட்டின் சாவு பயம் வியாதியின் கொடுமையைக் கண்டு தான் இறந்து விடுவோம் என்று நினைப்பதால் ஏற்படுகிறது); தன் வியாதி தீர்க்க முடியாதது என்றும் அதனால் ஔஷதம் உட்கொள்வதில் பயன் இல்லையென்றும் ஆகவே தான் இறப்பது நிச்சயமே என்றும் நினைப்பார். தனியாக இருக்கும் போதும் படுக்கப் போகும் போதும் சாவை நினைத்து நடுங்குதல். இரவில் அடிக்கடி மனக் கவலை உண்டாகிப் படுக்கையை விட்டு எழுந்து விடுவார்; நள்ளிரவுக்குப் பின் இன்னும் அதிகமாகும். 2. மனதில் நிம்மதி இல்லாமை. கவலையுடன் கூடிய நிலை கொள்ளாமை. இவ்விதமான நிலை கொள்ளாத நிலைமை ஒரு வியாதியின் கடைசிக் காலத்தில் அத்துடன் அதிக உடல் சோர்வும் சேர்ந்து இருந்தால் தோன்றும். மனதில் நிம்மதி இல்லாததால் வியாதியஸ்தர் சேர்ந்தாற்போல் ஒரு இடத்தில் இருக்கப் பிடிக்காமல் அங்கு மிங்கும் மாறிப் படுக்க விரும்புவார். 3. வருத்தம், கதறுதல், தன் வியாதியைப் பற்றிப் புகார் சொல்லுதல், தன் உயிர் இனி நிற்காது என்று ஒப்பாரி வைத்தல். 4. மிகவும் அலட்சியமாய் இருத்தல். 5. உயிரின்மேல் வெறுப்பு, தற்கொலை செய்து கொள்ள எண்ணம். 6. முன் கோபமும் மிக எளிதில் உணர்ச்சி வசப்படுவதும். மனச் சோர்வும் முன் கோபமும் கலந்திருக்கும் (லிலியந்தால்).

**உடல்:**—எரிச்சலுடன் கூடிய வலிகள் சூட்டினால் தணியும். குளிர்ந்த தண்ணீர் குடிக்க வேண்டுமென்று அளவு கடந்த தாகம். அடிக்கடி குடிப்பார்; ஆனால் ஒவ்வொரு தடவையும் சிறிதளவுதான். உணவில் வெறுப்பு. உணவைப் பார்த்தாலும் அதன் வாசனையை முகர்ந்தாலும் சகிக்க முடியாது. (கோல்சிகம், ஸேபியா). உடல் மெலிவு. மிக

வேகமாக உடல் இளைப்பதும் அத்துடன் குளிர்ந்த வியர்வை, அதிகப் பலவீனமும் இருத்தல் (ட்யுபர்குலினம், வெராட்ரம் ஆல்பம்). அளவு கடந்த பலவீனத்தினால் உடல் சோர்வும் தோன்றும். உடல் வலிமை மிக வேகமாய்க் குறைதல். உள் உறுப்புகளிலும் வெளி உறுப்புகளிலும் நீர்ச்சுரப்புடன் வீக்கம். சளிச் சவ்வுகளில் வேக்காடு. அழுகும் குணம். பிண நாற்றம் அடித்தல், மூச்சுத் திணறல், முகம் வெளுத்துக் குழி விழுந்து பிணம் போல் தோற்றம் அளிக்கும். முகம் சிவந்து உப்பியும் இருக்கலாம். வாயில் நாற்றம். வாய் அதிகமாகக் காய்ந்திருக்கும் அல்லது ஏராளமான உமிழ் நீருடன் இருக்கும்; சில சமயங்களில் இரத்தம் கலந்தும் இருக்கும். உணவு, வாய்க்குப் புளிப்பாகவோ, மண் போலவோ அல்லது உப்புக் கரித்துக்கொண்டோ இருப்பதாகத் தோன்றும். குளிர்ந்த தண்ணீர், புளிப்புச் சுவையுள்ள பொருள்கள், பிராந்தி, காப்பி, பால் ஆகியவைகளில் விருப்பம். அடி வயிறு பருத்தும் கல் போல் கடினமாகவும் இருக்கும். குளிர்ச்சியான, பிசு பிசு வென்று ஒட்டும் குணம் உள்ள வியர்வை. அடிக்கடி மலம் கழிக்கத் தூண்டுதல், ஆனால் மலம் வெளியாகாது, இக் குறியுடனுள்ள மலச் சிக்கல். சருமம்: காய்ந்து, கறடு முறடாய், பொறுக்குகளுடன் வியாதி பிடித்த தோற்றத்துடன், தோல் போல் காய்ந்து, உமி போன்ற காய்ந்த செதில்களுடன் இருக்கும். சருமம் மஞ்சள் நிறமடைதல். தலை மயிர் இளவயதிலேயே நிரைத்தல். மயிர் கொட்டுதல்.

**உபாதி கூடுதல்:**—நள்ளிரவுக்குப் பிறகு. (இரவு 1 மணியிலிருந்து 2 மணி வரை). அகோனைட்டில் உபாதி கூடுதல் அனேகமாக நள்ளிரவுக்கு முன்னதாக ஏற்படும். வியாதியஸ்தருக்கு உடம்பில் எப்பொழுதும் குளிர் உணர்ச்சி இருக்கும்; குளிரும் ஈரக்கசிவும் உள்ள காலங்கள் ஒத்துக் கொள்ளாது.



**உபாதி கூடுதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—நரம்பு சம்பந்தமான வலி வலியுள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தால் கூடுதலாகும். தலைவலி தலையைத் தாழ்வாக வைத்துப் படுத்தால் அதிகமாகும். குளிர்ந்த உணவும் பானங்களும் வயிற்று வேதனையை அதிகமாக்கும். உணவு உட்கொண்ட வுடனும் பானங்கள் குடித்த வுடனும் வயிற்றுப்போக்கு மோசமாகும். நீர்ச்சுரப்புள்ள வீக்கமும் மூலங்களும் குடிப் பழக்கத்துக்கு நீண்ட நாட்களாய் அடிமையானவர்களுக்கு அதிகமாகும்.

பக்குவம் செய்யப்பட்ட பழய மாமிசத்தில் உள்ள விஷம், கெட்டுப்போன வெண்ணெயையும் அழுகிய மாமிசங்களையும் உட்கொள்ளுதல், அதன் நாற்றத்தைச் சுவாசித்தல், காயங்களின் மூலம் அழுகிய மாமிசத்தில் உள்ள விஷம் உடம்பினுள் புகுதல், ஆகியவைகளுக்கு இது மிகச் சிறந்த ஒளஷதம். காயங்களைக் கிழித்ததினாலும் இராஜபிளவை போன்ற சிரங்குக் கட்டிகளினாலும் விஷமுள்ள பிராணிகள் கொட்டியதாலும் தோன்றும் கோளாறுகளுக்கு ஏற்றது. புகையிலையை மெல்லுதல், சாராயம் குடித்தல், கடலில் குளித்தல், கொயினாவை அளவு மீறி உபயோகித்தல் முதலிய காரணங்களால் தோன்றும்கோளாறுகள், அக்கி, டைபாய்டு சுரம், முதலிய பல வியாதிகளில் தகுந்த சிகிச்சை செய்யப் படாததினால் இரத்தத்தில் விஷப் பொருள் கலந்து ஏற்படும் கோளாறுகள். குளிரச் செய்த பழங்களைச் சாப்பிடுதல், பனிக்கட்டி சாப்பிடுதல், அல்லது பனிக்கட்டிபோட்ட தண்ணீரைக் குடித்தல், புளித்த காடி, சாராயம் முதலியவைகளை உட்கொண்டதாலும் உண்டாகும் சீரணக் கோளாறுகள், அழுகிப்போன பிராணிகளின்

உடலிலிருந்தோ அல்லது செடி கொடி மரங்களிலிருந்தோ உண்டாகும் விஷப் பொருள்கள் உடம்பினுள் புகுந்து வாந்தியும் வயிற்றுப்போக்கும் ஏற்படுதல்.

**உபாதி குறைதல்:**—சூட்டினால் பொதுவாக எல்லாக் குறிகளும் குறையும் (ஸீகேலில் எதிராக இருக்கிறது.). வியாதியஸ்தர் நெருப்பின் அருகில் இருக்க விரும்புவார். சூட்டைக் கண்டால் ஆனந்தமடைவார். நக்ஸ் வாமிகா, ஸோரினம், ஹீப்பார் ஸல்பர், ஸைலீஷியா). உடலில் சூடு உண்டாகும்படிப் போர்த்திக்கொண்டிருப்பதையே விரும்புவார்.

**உபாதி குறைதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—தலை வலி, வயிற்றுப்போக்கு முதலியவைகளில் தலையை உயரமாய் வைத்துப் படுத்தால் சௌகரியமாய் இருக்கும். இரண்டு தலையணைகளைச் சேர்த்து வைத்து அதன் மீது தலையை வைத்துப் படுப்பார்). பல்வலி சூடான ஒற்றிடம், வாயில் சுடுதண்ணீரை வைத்திருத்தல் ஆகியவைகளால் குறையும். நரம்புவலிகள் சூட்டினால் தணியும். நீர்க்கோர்வையும் சூட்டினால் குறையும். இதற்கு ஒரே ஒரு விலக்கு தலைவலி. தலைவலி மட்டும் சூட்டினால் குறையாமல் குளிர்ந்த தண்ணீரை ஒற்றிடம் கொடுத்தால் குறைகிறது

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**எரிச்சல்:**—கடுமையான எரிச்சலுள்ள வலிகள்; வியாதியினால் தாக்கப்பட்டுள்ள பாகங்களில் நெருப்பு இருப்பதுபோல் எரிச்சல்; சூட்டினாலும் சூடான பானங்களைக் குடித்தாலும், சூடான ஒற்றிடங்களாலும் எரிச்சல் தணியும் (தொண்டை, வயிறு ஆகிய இடங்களில் எரிச்சல்). இவ்வித எரிச்சல் சளிச் சவ்வுகள், மூலங்கள், மெல்லிய சதைகளில் அழுகுதல், புற்று, குழிப்புண், இராஜபிளவை, சுரப்பி



களின் வேக்காடு முதலியவைகளில் காணப்படும். எரிச்சலுடன் உள்ள வலிகள் உடலின் உள் உறுப்புகளிலும் இருக்கலாம்; வெளி உறுப்புகளிலும் இருக்கலாம். எரிச்சலுடன் குத்துவது அல்லது கிழிப்பதுபோன்ற வலிகள் குறிப்பிடத் தக்கவை.

**தாகம்:**—உடல் என்னும் தலைப்பைப் பார்க்கவும். குளிர்ந்த தண்ணீரைக் குடிக்க விருப்பத்தை உண்டு பண்ணும் எரிச்சலுள்ள தாகம் ஆனால் குடித்த மறுகணமே தண்ணீர் வாந்தியாகிவிடும்; வயிற்றுக்கு அது ஒத்துக் கொள்வதில்லைபோல் தோன்றும். விட்டு விட்டுச் சுரம் ஏற்படும் வியாதிகளில் குளிர் உள்ள நிலைமையில் தாகம் ஒருவேளை காணப்பட்டால் சூடான தண்ணீரையே விரும்புவார்! சூடு உண்டானவுடன் அடிக்கடி ஒவ்வொரு தடவையும் கொஞ்சம் கொஞ்சமாக குடிப்பார்; வியர்வை தோன்றும் நிலைமையில் ஏராளமான தண்ணீரை மிகவும் அடிக்கடி குடிக்கப் பிரியப்படுவார். வியாதி மிகவும் நாட்பட்டு விட்டால் தாகம் இருக்காது.

**உடல் சோர்வு:**—நிலைகொள்ளாமலும் அதிகமான உடல் சோர்வுடனும் இருந்தல்:—(இடைவிடாமல் நகர அல்லது நகர்த்தப்பட விருப்பம் என்பது நிலைகொள்ளாமையைக் குறிக்கிறது). சிறிதளவு வேலை செய்தாலும் அளவு கடந்த உடல் சோர்வு தோன்றும். அசையாமல் படுத்துக் கொண்டிருக்கும் போது களைப்புத் தெரிவதில்லை; ஆனால் சிறிது நகர ஆரம்பித்தவுடன், தான் அவ்வளவு பலவீனமாய் இருப்பது வியாதியஸ்தருக்கே வியப்பைத் தரும். டைபாய்டு சுரத்திலும் அது போன்ற மற்ற விஷ வியாதிகளிலும் கடைசி நிலைமைகளில் நிலைகொள்ளாமைக்குப் பதிலாக களைப்பு தோன்றும். வியாதியஸ்தரின் வியாதிக்கு ஏற்றவாறு இல்லாமல் உடல்

சோர்வு அளவு மீறியதாய் இருக்கும். மலை யேறுதல் போன்ற வேலைகளால் களைப்பு, மூச்சுத் திணறல், தூக்கம் வராமை முதலிய கோளாறுகள் ஏற்படும்.

**அழுகுதல்**:—மலம், மூத்திரம், மாத விடாய்ப் போக்கு, வெள்ளை ஒழுக்கு, கோழை முதலிய கழிவுகள், கருப்பையிலிருந்து வெளியாகும் போக்கு, காதுகளிலிருந்து வெளிப்படும் போக்கு, குழிப்புண், மெல்லிய தசைகளில் அழுகுதல் முதலியவை அதிக நாற்றம் உள்ளதாய் அதாவது பிண நாற்ற முள்ளதாய் இருக்கும். வயிற்று உப்பிசத்தில் ஏப்பம், அபானவாயு ஆகியவை அழுகிய நாற்றம் வீசும்.

**முறை வைத்து வருதல்**:—ஒவ்வொரு நாளும்; மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை; பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை; ஆறு வாரங்களுக்கு அல்லது வருஷத்துக் ஒரு முறை, இவ்விதம் கணக்கு வைத்திருப்பது போல் தோன்றும், (கார்போ வெஜி, லாச்சஸிஸ், ஸல்பர், தூஜா). தலைவலி, சுரம், இருமல் முதலியவை முறை வைத்துத் தோன்றுதல். முறை வைத்து வரும் காசம், வியாதி முற்ற முற்ற அது தோன்றும் காலத்தின் அளவும் அதிகமாகும். ஆர்ஸனிகத்தில் வியாதி முறை வைத்துத் தோன்றுதல் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

**கார குணமுள்ள கழிவுகள்**:—எல்லா விதக் கழிவுகளும் போக்குகளும் கார குணமுள்ளவைகளாய் இருக்கும் அதாவது அவை பட்ட இடங்களைப் புண்ணாக்கும் அல்லது அரித்து விடும். இப்படிப் புண்ணாகிய இடம் சிவந்து எரிச்சல் எடுக்கும். யோனி (வெள்ளை ஒழுக்கு). மூக்கு, குழிப்புண்கள், ஆகியவைகளிலிருந்து வெளிப்படும் நீர் அந்தந்த இடங்களில் புண்ணை உண்டாக்கும். நீர்க்கோர்



வையில் மூக்கு அடைபட்டு மெல்லிய தண்ணீர் போன்ற போக்கு ஒழுக ஆரம்பித்து மேலுதட்டில் சிவ சிவப்பையும் தோல் உறிவதையும் உண்டாக்குகிறது. குடலிலும் ஆசன வாயிலும் புண்ணையும் எரிச்சலையும் தோன்றச் செய்யும் மலம். காரமான கண்ணீர், கன்னங்களில் தோல் உறியச் செய்யும். வெள்ளை ஒழுக்கு காரமாகவும் கெட்டியாகவும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும்.

**வேதனை**:—வயிற்றில் கடுமையான வேதனை; எதைச் சாப்பிட்டாலும் வாந்தி செய்தல்; ஒரு டீ ஸ்பூன் அளவு தண்ணீர் குடித்தாலும் வேதனை அதிகமாகும். சிறிதளவு சூடான தண்ணீர் குடித்தால் அது ஒரு நிமிஷத்துக்கு சௌகரியமாகத் தோன்றும்; ஆனால் சீக்கிரத்திலேயே வாந்தி யெடுக்கப்படும். சூடான தண்ணீர் குடித்தாலே இவ்விதம் நேரும்போது குளிர்ந்த தண்ணீர் குடித்த மறுகணமே வாந்தி செய்யப் படுவதில் வியப்படைய இடம் இல்லையல்லவா! இதனால் வியாதியஸ்தர் தண்ணீர் குடிக்க முயற்சிக்க மாட்டார். சிறிதளவு உணவு உண்டாலும் தண்ணீர் குடித்தாலும் வயிற்றில் வேதனை தோன்றும் அல்லது வாந்தி உண்டாகும் அல்லது வயிற்றுப் போக்கு வெளியாகும் அல்லது வாந்தி, வயிற்றுப் போக்கு இரண்டும் சேர்ந்து தோன்றலாம். நீர்க் கோர்வையில் மூக்கினுள்ளே அதிக வேதனையும் குடைச்சலும் தோன்றி இடை விடாத தும்மலை உண்டாக்கும். எவ்வளவு தும்மினாலும் வேதனை குறையாது. ஆர்ஸனிக் தும்மல் என்றால் அது "ஒரு விளையாட்டு" அல்ல. அல்லியம் ஸிபாவில் உள்ளது போன்ற ஆசைதீரும் தும்மலும் அல்ல. கரப்பான் படையில் வியாதியஸ்தர் எவ்வளவு அரிப்பு இருந்தாலும் சொறிந்து

கொண்டு சுக மடைவதை விரும்ப மாட்டார். ஏனென்றால் அவ்வாறு சொறிந்தால் அரிப்பும் வேதனையும் அதிகமாகவே ஆகும்; இது தவிர சொறிந்த பிறகு இரத்தமும் வெளிப்படும். ஆர்ஸனிக் வியாதியஸ்தர் முன் கோபமும் ஆத்திரமும் உள்ளவராய் இருப்பார். மனம் என்னும் தலைப்பைப் பார்க்கவும். பல் முளைக்கும் பருவத்திலுள்ள குழந்தைகள், உடல் வெளுத்துப் பலவீனமாகவும் கோபமாகவும் இருப்பதுடன் எப்பொழுதும் தன்னைத் தூக்கிக் கொண்டே இருப்பதை விரும்பும்.

**அதிகமான புலன் உணர்ச்சி:**—எல்லா உறுப்புகளிலும் உணர்ச்சி அதிகரிக்கும். எவ்விதமான ஓசையையும் ஒருவரோடொருவர் பேசுவதையும் நல்ல வெளிச்சத்தையும் அவரால் சகிக்க முடியாது. வாசனையும் (உணவின் வாசனை பிடிக்காது) தொடுவதும் (வயிற்றை) பிடிக்காது. எல்லாம் ஒழுங்காய் இருக்க வேண்டுமென்பதில் அதிக ஆர்வம், அதனால் ஏதாவது தாறுமாறாக இருந்தால் அதை அவரால் பொறுக்க முடியாது. சுவரில் மாட்டியுள்ள படம் நேராய் மாட்டப் படாமல் கோணலாக மாட்டப் பட்டிருந்தால் கோணலாக மாட்டப் பட்டிருக்கிறதே என்று ஓயாமல் புலம்பிக் கொண்டே இருப்பார்.

**இரத்தப் பெருக்கு:**—அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக்கு உண்டாகும். மூக்கு, சுவாச கோசங்கள், தொண்டை, குடல்கள், மூத்திரப்பை, கருப்பை, மூத்திரக் காய்கள், இன்னும் எல்லா சளிச் சவ்வுகளிலிருந்தும் இரத்தப் பெருக்கு. ஈறுகள் வியாதியுற்று இலேசாகத் தொட்டாலும் இரத்தம் வெளிப் படும். குழிப் புண்களிலிருந்து இரத்தம் வெளிப் படுதல். சொறிந்தவுடன் கரப்பான் படைகளிலிருந்து இரத்தம் வெளியாகுதல். வெளியாகும் இரத்தம் நல்ல சிவப்பாகவோ அல்லது கறுப்பாகவோ இருக்கும். கறுப்பாய் இருக்கும் போது இரத்தத்துடன் கல்லீரல் தசையைப் போன்ற சிறு சிறு கட்டிகள் காணப்படும்.



**புண்ணாகுதல்:**—குழிப் புண் உண்டாவது ஆர்ஸனிகத்தின் மிக முக்கிய குறிகளில் ஒன்று. தொண்டை வேக்காட்டில் தொண்டையில் குழிப் புண் உண்டாகும். நீர்க் கோர்வையில் மூக்கினுள் குழிப் புண் தோன்றும். விழிகளில் குழிப் புண்கள். நாக்கின் பின் பகுதியின் ஓரங்களில் குழிப் புண்கள். அழுகிய நிலையிலுள்ள பறங்கிப் புண்கள் (மெர்கூறியஸ் கரோ). வெளுத்த நீல நிறமும், எரிச்சலும் இலேசாகத் தொட்டாலும் இரத்தப் பெருக்கும் இருக்கும்.

**வறட்சி:**—சருமம் காய்ந்து, கறடு முறடாய்த் தோல் போல் இருக்கும். உதடுகள் காய்ந்து உலர்ந்து வெடித்திருக்கும். இமைகளில், குறிப்பாக இமைகளின் ஓரங்களில், அதிக வறட்சி. மண்டைத் தோல் காய்ந்து பொறுக்குகளுடன் இருக்கும். குழிப் புண்கள் கூடக் காய்ந்து சீழ், ஊனீர் முதலிய கசிவுகள் எதுவும் இல்லாமல் இருக்கும். கசிவு இல்லாமல் அழுகும் குழிப் புண்கள்.

**மாறி மாறித் தோன்றுதல்:**—தலைக் குறிகளும் மற்ற உடல் குறிகளும் மாறி மாறித் தோன்றும். உடலினுள்ளேயும், வெளியில் சருமத்திலுமாக மாறி மாறி உண்டாகும் வியாதிகள். ஒப்பிடுதல் என்னும் தலைப்பைக் கவனிக்கவும்.

**உப்பியிருத்தல்:** நீர்ச் சுரப்பு உள்ள வீக்கம்—இமைகள் பைகள் போல் சுரப்புடன் வீங்கியிருத்தல். முகத்தில் குறிப்பாகக் கண்களைச் சுற்றிலும் உப்பியிருத்தல், கால்

களில் நீர்ச் சுரப்பு உள்ள வீக்கம். உடல் முழுவதும் முக்கியமாகத் தலையிலும் முகத்திலும் நீர்ச் சுரப்புடன் உப்பியிருத்தல் அல்லது வீங்கி இருத்தல். இதனுடன் அடிவயிறு பருத்துச் சுரப்பிகள் கல்போல் கடினமாகவும் இருக்கும். உப்பிய நிலைமையில் சருமம் வெளுத்துப் பளபளப்பாகவும் மங்கியும் இருக்கும் (அக்டியா ரஸிமோஸா) வேகமாக மூச்சு விடுவார், கீழே படுக்க முயற்சித்தவுடன் அதிகமாகும். மார்பினுள் ஏற்படும் நீர்ச் சுரப்புக்கு மிகவும் ஏற்றது.

**சுருக்கம் :**—முகம் வெளுத்துக் கவலையினால் வாடி, சுருக்கங்களுடன் இருக்கும். வயதுக்கு மேற்பட்ட கிழட்டுத் தனமும் சருமச் சுருக்கங்களும். உதடுகளும் வாயும் சுருங்கிவிடும். தொண்டையில் கெட்ட சதை வளரும் வியாதியில் அத்தசை காய்ந்தும் சுருக்கங்களுடனும் இருக்கும்.

**மூச்சுத் திணறல் :**—மிகக் கஷ்டத்துடன், திணறிக் கொண்டு மூச்சு விடுதல். இருதய வியாதிகளுடன் தோன்றும் மூச்சுத் திணறலுக்கும் உபயோகமாகும். காச நோயில் படுக்கையை விட்டு எழுந்து உட்காருதல்; இரவில் குறிப்பாக நள்ளிரவுக்குப் பிறகு படுக்கையிலிருந்து குபீர் என்று எழுந்திருத்தல். மூச்சு விட முடியாமல் போகும் என்ற பயத்தினால் படுக்கமாட்டார். கவலையுடனும் திணறிக்கொண்டும் வேகமாக மூச்சு விடுதல்; முக்கியமாக உயரமான இடங்களுக்குப் போகும் போதும் இரவில் படுத்த உடனும்.

**வலது பக்கமே வியாதிகள் அதிகம் :**—ஆர்ஸனிகம் தேவைப் படும் வியாதிகளில் பெரும்பாலானவை வலது பக்கமே தோன்றுகின்றன. நரம்பு சம்பந்தமான வலிகள் வலது பக்கத்திலேயே அனேகமாகத் தோன்றுகின்றன. வலது சுவாச கோசத்தின் மேல் பாகத்தில் கடுமையான வலி ஒரே ஒரு இடத்தில் மட்டும் காணப்படும் அல்லது அங்கு மிங்கும் பாயும்.



**நீர் எடுக்கும் கருவி :**—ஆர்ஸனிகம் ஒரு நீர் எடுக்கும் கருவியைப் போலவே வேலை செய்கிறது. உதாரணமாக சுவாசகோச உறை வேக்காட்டில் நீர்ச் சுரப்பு உண்டானால் அதை உடனே உறிஞ்சி விடுகிறது. இவ்விதம் ப்ளூராத் தசைகளில் ஏற்படும் நீர்ச் சுரப்பைப் போக்க அபிஸ், ஸல்பர் ஆகியவைகளும் முக்கிய ஔஷதங் களாகும்.

**திடீரென்று தோன்றுதல்; கடுமையாய் இருத்தல் :**—விஷத்தன்மை வாய்ந்த வேக்காடு திடீரென்று தோன்றுதல். திடீரென்றும் கடுமையாகவும் தோன்றும் அக்கி போன்ற சரும வேக்காடு. காயம் பட்ட இடங்கள் மிக வேகமாக அழுகுதல். கடுமையான வலிப்புகளும் இழுப்புகளும் வாய்ப் பூட்டும். இரவில் கடுமையான வலிகள் ஏற்பட்டு ஆத்திரத்தையும் அழுகையையும் தோற்றுவித்தல். இருதயத்தில் கடுமையான, தாங்க முடியாத துடிப்புகள், குறிப்பாகக் கீழே படுத்தால் அதுவும் இரவு நேரங்களில் மிக அதிகமாகும். அல்ப காரணங்களாலும் திடீரென்று அளவு மீறிய பலவீனம் தோன்றும்.

### மற்ற குறிகள்

முதுகெலும்பில் விரைப்பு, கீழ்ப் பாகத்தில் ஆரம்பித்து பின் கழுத்துவரை போவதுடன் உடலைப் பின்புறமாக வளையச் செய்யும். பல்லின் மேலுள்ள ஈறுப் பாகத்தில் சிறு சிறு கொப்பளங்கள் இருக்கும் அல்லது அவ்விடத்தில் கறுப்பு நிறமுள்ள, தண்ணீர் போன்ற திரவம் இருப்பது போல் தோன்றும். கடுமையான, நெருப்புச் சுட்டபிறகு உண்டாகும் வயிற்று வலி. கீழ்த் தாடையில் பாரிசவாதம்.

நாக்கு சாக்கட்டியைப் போல், வெண்மையான பெயிண்டைப் பூசியது போல் காணப்படும். வேகமாகப் பேசுதல் அல்லது தயங்கித் தயங்கிப் பேசுதல். மாணியின் கொண்டை வீங்கி வெடிப்புகளுடன் நீல நிறமாய் இருக்கும். மார்பு வலி; இருதயப் பகுதியில் தாங்க முடியாத வேதனை; உடனே உட்கார வேண்டி வருதல்; சிறிது அசைந்தாலும் மூச்சு விட முடியாமல் போகும்.—மலேரியா சம்பந்தமுள்ள நரம்பு வலி அடிக்கடி வரும். அனேகமாக முக்த்தில் தோன்றும். மற்ற ஔஷதங்களால் குணம் ஆகாதது. தசைகளில் கொஞ்சங் கொஞ்சமாக இளைப்பு அதிகமாய்க் கொண்டு வருதல்.— விட்டு விட்டுத் தோன்றும் முறைச் சுரங்களில் அனேகமாக ஒரு நிலைமை (பெரும்பாலும் குளிர் உள்ள நிலைமை) இருக்காது. உதடுகள், ஈறு, பற்கள் ஆகியவைகளில் கறுப்பு நிறமுள்ள அழுக்குச் சேருதல் (டைபாய்டு சுரம்)—வாயில் குழிப் புண்கள் (உடல் வலிமை மிகவும் குறைந்திருப்பதைக் காட்டும் குறி). விடாமல் அடிக்கும் சுரம்.

குறிப்பு:—உடலினுள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் மேகக்கிரந்தி வியாதியை ஆர்ஸனிகம் தட்டி எழுப்பிவிடக் கூடியது. டைபாய்டிலும் மற்ற வியாதிகளிலும் குறிகள் சாவில்முடியக் கூடியவைகளாகத் தோன்றினால் அச்சமயங்களில் ஆர்ஸனிகத்தை அவசரப்பட்டு உபயோகிக்கக் கூடாது. இப்படி உபயோகித்தால் நாம் நேரக் கூடாது என்று நினைக்கும் காரியம் (மரணம்) மிகச் சீக்கிரத்திலே நேர்ந்துவிடும். இவ்வித நிலைமையில் மற்றொரு ஆபத்தான ஔஷதம் அபிஸ். என்னுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டு இதைத் தைரியமாக வெளியிடுகிறேன். ஆகவே சாவை நெருங்கிக் கொண்டிருக்கும் வியாதிகளில் ஆர்ஸனிகம் ஆல்பம், அபிஸ், இவ்விரண்டையும் பற்றி எச்சரிக்கையாய் இருக்கவும். அபிஸ்ஸைப் பற்றிய இவ்வுண்மையை இதுவரை எந்த ஆசிரியரும் வெளியிடவில்லை.



உறவு:—ஆர்ஸனிகத்துக்குப் பிறகு நன்றாக வேலை செய்யக் கூடியவை: **அல்லியம் ஸடீவம், கார்போ வெஜி, பாஸ்பரஸ், பைரோஜனியம், தூஜா.**

ஒப்பிடுதல்:—பிரயோனியா வியாதியஸ்தர் நிறையக் குடிப்பார், ஆனால் எப்போதாவது ஒருசமயம். **ஆர்ஸனிகம்** வியாதியஸ்தர் கொஞ்சம் கொஞ்சமாக ஆனால் அடிக்கடி குடிப்பார். **ஆர்ஸனிகத்தில்** ஒரே சமயத்தில் அதிக அளவு உணவு உண்பார். பிரயோனியாவில் சளிச் சவ்வுகள் காய்ந்துபோகும். **ஆர்ஸனிகத்தில்** சளிச் சவ்வுடன் சருமமும் சேர்ந்து காய்ந்திருக்கும். பிரயோனியா, **ஆர்ஸனிகம்** இரண்டிலும் வியாதியஸ்தர் வேகமாகப் பேசுவார். ஆர்ஸனிகத்தில் வியாதியஸ்தர் ஒரு படுக்கையை விட்டு மற்றொரு படுக்கைக்கும் படுக்கையிலிருந்து நாற்காலிக்கும் நாற்காலியிலிருந்து திரும்பவும் படுக்கைக்குமாக மாறிக் கொண்டே இருப்பார். மெக்னீஷியா கார்பில் படுத்திருக்கும் போது வலி தாங்க முடியாத அளவுக்கு அதிகமாவதால் படுக்கையை விட்டு எழுந்திருந்து நடக்க ஆரம்பிப்பார். (ரஸ் டாக்ஸ்). போடோபில்லத்தில் தலைவலியும் வயிற்றுப் போக்கும் மாறிமாறித் தோன்றி மறையும். **ஆர்னிகாவில்** மனக்குறிகளுடன் கருப்பைக் குறிகள் மாறித் தோன்றும். **ஸ்டாபிஸாக்ரியாவில்** சருமக் கோளாறுகளுடன் எலும்பு மூட்டுகளில் வலி மாறி ஏற்படும்.

---

## ஆரம் ட்ரிபில்லம்

## (ARUM TRIPHYLLUM)

**முன்னுரை:**—இச் செடியின் கிழங்கைச் சிறிது கடித்தவுடன் வாயிலும் உதடுகளிலும் மிகக்கடுமையான வேதனை உண்டாகிறது. ஒருதடவை இவ் விஷக்கிழங்கைக் கடித்து அதன் கொடிய சக்தியை அறிந்தவர்கள் தம் ஆயுட்காலம்

முழுவதும் அதைமறக்கவே மாட்டார்கள் ஆகவே இதற்கு ஞாபக வேர் என்று பொருள் வரும்படி இங்கிலீஷில் பெயரிட்டிருக்கின்றனர்.

## பொதுக் குறிகள்.

தகுதி:—தொண்டையில் கெட்ட சதை வளரும் வியாதி, ஸ்கார்லேடினா, சூடு ஏறி இறங்கும் குணமுள்ள சுரம், டைபாய்டு, சருமக் கோளாறுடன் கூடிய சுரங்கள், முதலிய திடீரென்று தோன்றும் வியாதிகளில் விஷத் தன்மை வாய்ந்த வகை. இச் சமயங்களில் இவ் வௌஷதத்திற்கே உரிய உடல் வேதனை (அதே சமயத்தில் அனேகமாக மன வேதனையும் இருக்கும்) காணப்பட்டால். உடல் என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

மனம்:—நிலை கொள்ளாமலும் ஆத்திரமாகவும் இருப்பார். பயந்த சுபாவம். ஆரம் டிரிபில்லம் கொடுக்கப்பட வேண்டிய குழந்தை நிலை கொள்ளாமல் துடிக்கும்; ஆத்திரம் கொள்ளும். தூங்காது. கடுமையான மயக்கம் இருக்கும்.

உடல்:—உதடுகள், வாயின் உட்புறம், மூக்கு, காதுகளின் பின் புறம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்திருப்பதைப் போல் சிவந்திருத்தல். இச் சிவ சிவப்புடன் அறிப்பு அல்லது ஒரு வித லேசான குத்து வலி இருக்கலாம். புண்ணும் இரத்தக் கசிவும் இருந்த போதிலும் வியாதியஸ்தர் (அனேகமாகக் குழந்தையாய் இருக்கலாம்) அவ்விடங்களை விடாமல் தோண்டிக் கொண்டே இருப்பார். எவ்வளவு வலி உண்டானாலும், வலியினால் கதறினாலும் அதை இலட்சியம் செய்யாமல் சதையைப் பிய்த்துக் கொண்டே இருத்தல் (தொண்டையில் கெட்ட சதை வளரும் வியாதி, ஸ்கார்லேடினா, டை



பாய்டு, சூடு ஏறி இறங்கும் சுரங்கள் முதலியவைகளில்). வாயின் மூலைகள் புண்ணாகி வெடிப்புகளுடன் இருக்கும். கீழ்த்தாடையிலுள்ள சுரப்பிகளில் வீக்கம். மூத்திரம் அளவு குறையும் அல்லது முழுவதுமே அடக்கப் பட்டு விடலாம்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

வேதனை:—ஆரம் ட்ரிபில்லம் தோற்றுவிக்கும் வியாதிக் குறிகளை ஒரே வார்த்தையில் குறிப்பிட வேண்டுமானால் அவ்வார்த்தை வேதனை என்பதாய்த்தான் இருக்கும் (கந்தாரிஸ்). வேதனை மனதிலும் இருக்கும்; உடலிலும் இருக்கும். உடலைப் பற்றிய வேதனையின் முக்கிய அடையாளம் புண்ணான இடங்களை வலியையும் பொருட் படுத்தாமல் பிய்த்துக் கொண்டும் தோண்டிக் கொண்டும் இருப்பதாகும். ஆரம் ட்ரிபில்லத்தின் வேதனையில் கீழ் உள்ள விஷயங்களையும் சேர்க்க வேண்டும். 1. புண்ணுடன் இரத்தம் கசியும் இடங்கள். 2. அறிப்பும் லேசான குத்து வலியும். 3. புண்ணும், இரத்தக் கசிவும் உள்ள வெடிப்புகள்; 4. எரிச்சல்: 5. காரமான, சருமத்தை உரியச் செய்யும் போக்கும் கழிவும்; 6. தொண்டைக்கம்மல். (குரலை அதிகம் உபயோகித்ததால் குரல் வளையில் ஏற்படும் வேதனையும் வேக்காடும்).

உடல் என்னும் தலைப்பின் கீழ் எழுதப் பட்டுள்ள குறிகளைத் தவிர அடியிற் காணும் குறிகளை மேலே உள்ள ஆறுவகைப்பட்ட வேதனைக் குறிகளுடன் சேர்க்கலாம்.

புண்ணுள்ள இடம் தலையிலும் தோன்றலாம். அச் சமயத்தில் குழந்தை தலையைப் பிறாண்டும், தோண்டும். மார்பினுள்ளே புண் உள்ள உணர்ச்சி. சுவாசகோசங்களில் புண்ணுள்ள உணர்ச்சி. முதுகெலும்

பின் கீழ்க் கடைசி எலும்புள்ள இடத்தில் புண்ணாகவும் சுரக் கசிவுடனும் இருக்கும். வாயின் மேற் கூரையில் புண் உள்ள உணர்ச்சி. வாய் முழுவதுமே வேக்காட்டுடன் புண்ணாகவும் வலியும் இருக்கும். தொண்டையில் புண், தோல் உறிந்து விட்டது போல் தோன்றும். தொண்டையைக் கனைத்துக் கொண்டால் அல்லது இருமினால் வலி உண்டாகும்; ஆனால் தொண்டையை இறுகப் பிடித்துக் கொள்வார், நன்றாகச் சொறிந்து விட விரும்புவார். ஆசனவாய் வழியாக மெல்லிய மலம் வெளியாகி அவ்விடங்களில் எரிச்சலையும் புண்ணையும் ஏற்படுத்தும். நாக்கு புண்ணாகிச் சிவந்து சுவை மொக்குகள் பெரியதாகும்; சுவை மொக்குகளே இல்லாமல் ஓரே வழுவழுப்பாகவும் மாறலாம்.

இரத்தப் பெருக்கு உண்டாகும் வரை இடைவிடாமல் மூக்கினுள் குடைந்து கொண்டே இருத்தல். இரத்தம் வரும் வரை உதடுகளைப் பிய்த்துக் கொண்டே இருத்தல். வாயின் மூலைகள் புண்ணாகி, வெடித்து இரத்தம் கசியும். (வலியினால் குழந்தை வாயைத் திறக்காது; வாயிலும் தொண்டையிலும் உள்ள புண்ணினால் உணவு உட்கொள்ளவோ, தண்ணீர் குடிக்கவோ மறுக்கும்). விரல்களிலிருந்து இரத்தம் வரும் வரை நகங்களைக் கடித்தல்.

காதுகள், உதடுகள், நாக்கு, வாயின் மேல் கூரை, தொண்டை, ஆசனவாய், சுவாச கோசங்கள் ஆகிய பல இடங்களில் எரிச்சல்.

அனேகமாக எல்லா விதக் கழிவுகளும் போக்குகளும் கார குணம் உள்ளவையாகவும், சம்பந்தப் பட்ட இடங்களில் தோலுறியச் செய்யும் குண முள்ளவையாகவும் இருக்கும். நீர்க் கோர்வையில் வெளியாகும் நீர் காரமாக இருக்கும்; ஏராளமாய் இருக்கும்; மூக்குத் துவா



ரங்களில் புண் உண்டாகும். மேலுதட்டிலும் புண் உண்டாக்கும் (ஆர்ஸனிகம் ஆல்பம், அல்லியம் ஸிபா) ஏராளமான, கார குணமுள்ள உமிழ் நீர்.

**மாறும் குறிகள்:**—அனேகமாக எல்லா வியாதிகளிலும் மூத்திரத்தின் அளவு மிகவும் குறையும் அல்லது அடக்கப்பட்டு விடும் (சில சமயங்களில் ஒரு நாள் முழுவதும் மூத்திரம் வெளியாகாது). ஆனால் மங்கிய நிறத்துடன் ஏராளமான அளவு மூத்திரம் அடிக்கடியும் வெளிப்படுவதும் காணப்படலாம். மூத்திரம் அடக்கப் பட்டபோது (இரத்தத்தில் விஷப் பொருள்கள் கலந்து நீடித்த மயக்கம் ஏற்படும் போல் தோன்றும் நிலைமையில்) மற்ற குறிகளும் இவ் வௌஷதம் உபயோக மாகுமென்று காட்டினால் கொடுத்த மறு கணமே மூத்திரம் வெளியாகும்.

என்னால் சிகிச்சை செய்யப்பட்ட ஒரு கேசின் விவரம்; சுரம், கீழ்த்தாடைச் சுரப்பிகளில் வீக்கம், உதடுகளில் இடை விடாமல் தோண்டிக் கொண்டே இருத்தல், இரண்டு நாட்களாக மூத்திரம் வெளியாகவில்லை முதலிய குறிகள் காணப்பட்டன. இவ்வௌஷதத்தைத் 30 வீரியத்தில் ஓரே வேளை கொடுத்தேன், சில வினாடிகளில் மூத்திரம் வெளியாகியது—அளவும் அதிகமாகவே இருந்தது.

**இடது பக்கமே வியாதிகள் அதிகம்:**—இவ் வௌஷதம் பெரும்பாலும் இடது பக்கத்தையே தாக்குகிறது. தலையின் இடது பக்கம், இடது மூக்குத் துவாரம், முகத்தின் இடது பக்கம், இடது மார்பு, இடது சுவாச கோசங்கள் ஆகியவைகளையே தாக்குகிறது. இடது மார்பில் புண் உள்ள உணர்ச்சி. இடது மூக்குத்துவாரம் அடைபடுதல் (நீர்க் கோர்வையில்).

## மற்ற குறிகள்.

தலையணையில் தலையை அழுத்தி வைத்துக் குடைதல் (மூளை பற்றிய கோளாறுகளில்). ஸ்கார்லேடினாவில் இரண்டு அல்லது மூன்று முறைகள் பெரிய பெரிய செதில் களாகத் தோல் உறிதல்—தொண்டைக் கம்மலில் குரலின் சப்தம் எப்படி இருக்குமென்று நிச்சயம் சொல்ல முடியாது; கட்டுப் படுத்த முடியாது; அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும், (பேச அல்லது பாட ஆரம்பித்தால் குரல் எழும்பாது). தொண்டையில் ஏராளமான சளிக்கட்டு—வறட்சியுள்ள நீர்க் கோர்வையில் மூக்கு அடைபட்டு வாயைத் திறந்து கொண்டு மூச்சு விடுதல். குழ குழப்பான மலம். சருமக் கோளாறுகள் குணமடைந்த பிறகு அவ் விடங்களில் சிவந்த நிறம் காணப்படும்—வாயிலிருந்து அழுகிய நாற்றம்.

**உறவு :—ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட், காஸ்டிகம்** ஆகியவைகளுக்குப் பிறகு உபயோகமாகும்.

**குறிப்புகள் :—**குறைந்த வீரியங்களிலும் அடிக்கடியும் கொடுப்பது கூடாது. நான் 30, 200 இந்த இரண்டு வீரியங்களிலும் உபயோகித்து வெற்றி அடைந்திருக்கிறேன்.

---

# ஆரம் மெட்டாலிகம்
## (AURUM METALLICUM)

**முன்னுரை :—**ஒருவிதச் சக்தியும் இல்லாதவை என்று முன்னாளில் மதிக்கப்பட்ட பொருள்களில் பொன்னும் (தங்கம்) ஒன்று. வியாதியை நீக்குவதில் இதற்குள்ள சக்தியை வீரியப் படுத்திய முறையில் 1818-ம் ஆண்டில் **ஹானிமன்** கண்டறிந்து வெளியிட்டார். கட்டி கட்டிகளாக விழுங்கினால் ஒருவிதமான கெடுதலையும் உண்டாக்கு



வதில்லை இத்தங்கம், ஆனால் மிகவும் சிறிய பொடியாக மாற்றப்படும்போது அதைத் தொட்டாலும் கெடுதல் நேருகிறது. தங்க இலைகளைத் தயாரிக்கும் வேலையிலும் அவைகளைக் கையாளும் வேலையிலும் ஈடு பட்டிருந்த பெண்களுக்குக் கெட்டியான. **வெண்மையான, நாற்றமில்லாத வெள்ளை ஒழுக்கு** தோன்றியது. ஆகையால் அவ்விதமான வெள்ளை ஒழுக்கைத் தங்கம் குணம் செய்யும். ஔஷதப் பரீக்ஷையில் தங்கம் அளவு கடந்த ஏக்கத்தையும் அதன் விளைவாகத் தற்கொலைசெய்து கொள்ள வேண்டுமென்ற தீர்மானமான விருப்பத்தையும் உண்டாக்கியிருக்கிறது. பிறநாடுகளைக்கைப்பற்றி அடிமைப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துக்கு விலை உயர்ந்த இந்த உலோகமே பலசமயங்களிலும் வித்தாக அமைந் திருக்கிறது. இதேபோல தங்கத்தின் அழிக்கும் சக்தி உடல் அணுக்களையும் எலும்புகளையும் கூடத் தாக்குகிறது. மனிதர்கள் தங்கத்தைச் சேர்க்க இருதய பூர்வமாகப் பாடு படுகின்றனர். விடாப் பிடியாக மூச்சைப் பிடித்துக் கொண்டும் தங்கத்தைத் தேட ஓடுகின்றனர். ஆனால் தங்கமோ மனிதர்களின் **இருதயங்களைத் தாக்கிக் கடுமையான படபடப்பை உண்டாக்குகிறது. அல்லது இருதயக் கோளாறுகளுடன் சம்பந்தப் பட்ட மூச்சுத் திணறலை உண்டாக்குகிறது.**

## பொதுவான குறிகள்

'**தகுதி :—**கறுத்த மயிரும் கறுப்பான கண்களும் இரத்தம் போல் சிவந்த நிறமும் உள்ளவர்கள். அதிக மயிர் வளர்ச்சி இல்லாமல் சுரப்பிகளில் க்ஷய சம்பந்தமான வீக்கங்கள் உள்ளவர்கள். உற்சாகம் **குறைந்து உடல் இளைத்து வரும் ஆண் பிள்ளைகள்.** பக்குவம் அடையும் காலத்திலுள்ள பெண்கள், கிழ வயது. நீண்ட காலக் குடியர்கள். உயிருடன் **இருப்பதைப் பெரிய சுமையாகக் கருதும்** பருத்த உடலுள்ள கிழவர்கள். எலும்புக்

கோளாறுகளுடன் கூடிய மேகக் கிரந்தியினுலும் பாத ரச சம்பந்த முள்ள ஔஷதங்களை உட் கொண்டதினு லும் தோன்றும் வியாதிகள். பாதரசம், மேகக் கிரந்தி இவ் விரண்டிலு முள்ள விஷப் பொருள்கள் ஒன்று கலந்து அதன் விளைவாக உண்டாகும் கோளாறுகள். மேகக் கிரந்தியினுலும் பாத ரஸத்தை அளவு மீறி உப யோகித்ததினுலும் பாழ் படுத்தப் பட்ட உடலை உடை யவர்கள்.

மனம்:—1. மன ஏக்கம். அளவு கடந்த மன ஏக்கம் நம்பிக்கை அழிந்து மனம் தளர்ந்து விடுதல்; வாழ்க் கையில் வெறுப்பு; உயிருடன் இருப்பது எப்பொழுதும் பாரமாய்த் தோன்றுதல்; தற்கொலை செய்து கொள்ளும் விஷயமாகப் பேசுவார்; எப்பொழுதும் தற்கொலையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பார். (நாஜா) தற் கொலை செய்து கொள்ளவும் சாகவும் விரும்புவார். சாவைப் பற்றிய எண்ணமே மகிழ்வை ஊட்டும். 2. ஞாபக சக்திக் குறைவு. மனதினுல் வேலைசெய்தால்அதிகக் களைப்பு உண்டாகும். ஞாபகசக்தி குறையும். அறிவும் குறையும். 3. தன்னைத்தானே இகழ்ந்து கொள்ளுதல்; தன் னைத்தானே இகழ்வதும் குறை கூறுவதும். எதையோ தான் கவனிக்காமல் விட்டு விட்டதாக எண்ணுவார். அதாவது தன் சினேகிதர்களைப் புறக்கணித்து விட்ட தாகவும் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யா மல் விட்டு விட்டதாகவும் அதனுல் தன்னைத்தானே கடிந்து கொள்வது சரி என்றும் நினைத்தல். 4. பயந்து நடுங்குதல். ஏதோ கெடுதல் நேரப் போகிற தென்ற எண்ணத்தினுல் உடல் முழுவதும் பயத்துடன் நடுக்கம். சும்மா இருக்க முடியாது; பரபரப்பு; மனதினுலும் உட லினுலும் காரியங்களை நடத்த ஆவல். தன் மன வேகத்



துக்கு ஏற்றபடி விரைவாகக் காரியங்களைச் செய்ய முடி யாமை. (அர்ஜண்டம் நைட்ரிகம்) 5. முன்கோபம். அளவு கடந்த ஆத்திரம்; சிறிது எதிர்த்துப் பேசினுலும் கோபம் மூண்டுவிடும். 6. ஓயாமல் பேசும் குணம். பதிலை எதிர்பார்த்து நிற்காமல் இடை விடாமலும் வேக மாகவும் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருத்தல்.

உடல்:—முகம் சிவந்து சூடாகும். முகத்தில் மட் டும் சூடு (கைகளும் கால்களும் குளிர்ந்து இருக்கும்). முகம் உப்பி வியர்வை இருப்பது போல் பளபள என்று மின்னும். கண்களின் அடியில் உப்பி இருக்கும். முகத் தில் அதிக இரத்தம் சேர்ந்து நீலம் கலந்த சிவப்பு நிறம் உண்டாகும். உடலின் எந்தப் பாகத்திலும் இரத்தம் மிக வேகமாகப் பரவும். அசுத்த இரத்தக் குழாய்களில் அதிக இரத்தம் சேரும். இரத்த விசை அதிகரித்தல். மயிர் கொட்டுதல். வழுக்கைத் தலை (மேகக் கிரந்தி). வலிகளைத் தாங்க முடியாது. வலிகள் குடைவது போல வும் எரிச்சலுடன் குத்துவது போலவும் இருக்கும். மூச் சுக் காற்று நாற்றம் வீசுதல். குறிப்பாகப் பக்குவ காலத் திலுள்ள பெண்களிடம். இரவில் மூச்சு விடத் திண றல். விடியற் காலையில் வியர்வை தோன்றுதல். அனே கமாக பிறப்பு உறுப்புகளைச் சுற்றிலும். தூக்கத்திலும் உறத்த ஓசையுடன் தேம்பித் தேம்பி அழுதல். பயங் கரமான கனவுகள். நகங்கள் நீல நிறமாக மாறும். மூத்திரம் மோரைப் போல் கெட்டியான சளி போன்ற வண்டலுடன் வெளிப்படும். அடிக்கடி மலச் சிக்கல் உண்டாகும். மலம் பெரியதாகவும் கடினமாகவும் முடிச் சுகளுடனும் இருக்கும்.

உபாதி கூடுதல்:—குளிர் ஒத்துக் கொள்ளாது. குளிர்

காற்று; இரவு; மாலையிலிருந்து காலை வரை (இக்குறி அனேகமாக மேகக் கிரந்தியில் தான் காணப்படும்). பல கோளாறுகள் குளிர் காலத்தில் தோன்றும்,

தங்கம் உணர்ச்சிகளுக்கு உதவும் ஓர் ஔஷதம் ஆதலால் பயம், கோபம், மன வேதனை, நிறைவேறாத காதல் அல்லது வெறுப்பை வெளியே காட்டிக்கொள்ள முடியாமை (ஸ்டாபிஸாக்ரியா) முதலிய காரணங்களால் தோன்றும் கோளாறுகளில் உபயோகப்படும்.

**உபாதி குறைதல்:**—சூடு உள்ள காற்றில்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**அதிக இரத்தம் சேருதல்:**—அதிக இரத்தம் சேருதல் அல்லது இரத்தக் குழாய்களில் அளவு மீறி இரத்தம் இருத்தல் என்பது இவ் ஔஷதத்தின் மிகப் பெரிய குறிகளில் ஒன்று. தலையில் மிக வேகமாக இரத்தம் சேருதல், மூளையை உபயோகித்து வேலை செய்தால் மேலும் அதிகமாகும். தலையில் கனமான உணர்ச்சியும் அத்துடன் காதுகளில் இரைச்சலும் (காதுகளில் அதிக இரத்தம் சேருதல்) இதனால் முகம் உப்பிப் பள பள வென்றாகும். கண் விழிகள் பிதுங்கி வெளியே வந்து விடுமோ என்று எண்ணும்படி அவ் விடங்களில் அழுத்தும் உணர்ச்சி, கண்கள் வெளியே பிதுங்கியது போலவும் இருக்கும். (கண்டமாலை என்னும் வியாதியில்); கண்களிலுள்ள இரத்தக் குழாய்களில் அதிக இரத்தம் சேர்ந்திருக்கும். பார்க்கும் பொருள்கள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டாக இருப்பது போல் தோன்றும். பார்க்கும் பொருள்களின் மேற் பாதி கண்ணுக்குப் புலப்படாது. (மூளையினுள் அதிக இரத்தம் சேருவதினால் இவ் விரு குறிகளும் தோன்றுகின்றன.) மார்பில் குறிப்பாக நடு மார்பிலுள்ள எலும்பில் அதிகப் பளுவாக இருத்தல்:



நடக்க முயற்சி செய்யும் போது மார்பை உடைத்துக் கொண்டு இரத்தம் கொட்டி விடுமோ என்று தோன்றும். மார்பில் அதிக இரத்தம் சேருவதால் இருதயம் பட பட வென்று அடித்துக் கொள்வதும் மனக் கவலையும் உண்டாகும். மூக்கின் நுனியில் சிவந்து மூண்டு இருப்பது போல் தோன்றும். இருதய வியாதியை ஒட்டி எரிச்சலுடனும் வெட்டும் வலியுடனும் கல்லீரலில் அதிக இரத்தம் சேருதல். நாட்பட்ட கல்லீரல் வேக்காடு, மானி அடிக்கடி, குறிப்பாக இரவு நேரங்களில் விரைத்தல் (இதனால் இந்திரியம் தானாகவே வெளிப்படும்). புணர்ச்சியில் ஆசை மிகவும் அதிகமாகும். விரைகளில் வேக்காடு. விரைகளில் நாட்பட்ட வேக்காடு. கருப்பை பருத்துக் கீழே நழுவுதல். கருப்பையின் கனத்தினால் நழுவல் ஏற்படும். (இதிலிருந்து நழுவல் ஏற்பட்ட காரணம் கருப்பையில் நாட்பட்டு அதிக இரத்தம் இருந்து வருவதே என்பதும் தசைகளின் பலவீனம் அல்ல என்பதும் விளங்கும்). உணவு உட் கொண்டவுடன் மந்த குணம் (மூளையினுள் அதிக இரத்தம் சேருதல்). இவை யாவும் சுத்த இரத்தக் குழாய்களில் அதிக இரத்தம் சேருவதால் ஏற்படுகின்றன. அசுத்த இரத்தக் குழாய்களிலும் அதிக இரத்தம் சேர்ந்து, பருத்து வேக்காடு தோன்றும். அவை தடித்துப் பருத்து விடும். சுரப்பிகள் என்னும் தலைப்பின் கீழ்ப் பார்க்கவும். அவைகளும் இவ்விதமே தாக்கப் படுகின்றன.

**குழிப்புண்கள்: எலும்பு அழுகுதல்:**—சருமத்தில் சாதாரண குழிப் புண்களும் புற்று வியாதி சம்பந்தமுள்ள குழிப் புண்களும், மூக்குத் துவாரங்களுக்கு நடுவில் இருக்கும் குருத் தெலும்பில் துவாரம் உண்டாகி அங்குள்ள மெதுவான சதைகளில் புண் உண்டாகுதல்.

மூக்குத் துவாரங்களில் புண்ணும் கெட்டியான பொறுக்குகளும் இருக்கும். புண்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு மூக்குத் துவாரங்களை அடைத்து விடும்; வலி உண்டாகும். மேக வெட்டைக்குப் பிறகு விரைப் பையில் புண்கள். தொண்டைச் சுரப்பிகளில் வீக்கமும் புண்களும். எலும்புகளையும் தாக்கும் புண்கள், நாற்றமுள்ள சீழுடனும் எரிச்சலுள்ள குத்து வலிகளுடனும் எலும்பு அழுகுதல். தலையெலும்புகளிலும் காது எலும்புகளிலும் விசேஷமாக அழுகுவது காணப்படும். காது எலும்பு அழுகினால் காதிலிருந்து சீழ்வரும். இலகுவில் குணம் ஆகாது. மூக்கெலும்பு அழுகினால் நாற்றமுள்ள சளி வெளிப்படும். வாயின் மேற் கூரை எலும்பும் அழுகலாம். இவை யாவும் மேகக் கிரந்தியினால் அல்லது அவ் வியாதிக்குப் பாத ரசத்தை அளவு மீறி உபயோகித்ததினால் ஏற்படுகின்றன. வாயின் மேற் கூரை எலும்பு அழுகும்போது புண்கள் நீல நிறமாய் இருக்கும்.

**கல் போல் கடினமாகும் குணம்:**—விரைகள் கல் போல் கடினமாகும். கருப்பை கீழே நழுவியும் கல் போல் கடினமாகவும் இருக்கும். அடிக்கடி கருச் சிதைவு ஏற்பட்டதால் உண்டாகும் கருப்பைப் புண், கருப்பை கல் போல் கடினமாகுதல் ஆகியவைகளுக்கு ஆரம் தகுந்தது என்று கெண்ட் சொல்லுகிறார். எலும்பு மூட்டுகளைச் சுற்றிலும் உள்ள குருத்தெலும்புகள் கல் போல் கடினமாகுதல்.

**நாற்றமுள்ள கழிவுகள்:**—மூக்கு, காதுகள் ஆகியவைகளிலிருந்து எலும்பு அழுகியதால் வெளியாகும் சீழ் முதலிய கழிவுகள் மிகுந்த நாற்றம் அடிக்கும். அழுகிய வெண்ணெய்யைப் போல் வாயில் நாற்றம் வீசுதல்.



நாற்றமுள்ள வாசனை பற்றி உடல் என்னும் தலைப்பின் கீழேயும் பார்க்கவும். நாக்கில் அழுகிய அல்லது கசப்பான சுவை.

**எலும்புகளைத் தாக்கும் குணம்:**—எலும்பு அழுகுதல் என்னும் தலைப்பைக் கவனிக்கவும். தலையெலும்புகளில் மேகக் கிரந்தியினால் முண்டுகள் தோன்றுதல்; எலும்புகளில் உடைந்து விட்டது போன்ற உணர்ச்சியுடன் வலி, கீழே படுத்தாலும் தொட்டாலும் வலி அதிகமாகும். தலை, கைகள், கால்கள் ஆகிய இடங்களில் எலும்பு முண்டுகள். தலை, மூக்கு, வாயின் மேற் கூரை ஆகிய இடங்களிலுள்ள எலும்புகளில் வலி. எலும்புகளில் குடையும் வலிகள், இரவு நேரங்களில் கூடுதலாகும்.

**சுரப்பிகளைத் தாக்கும் குணம்:**—காதுப் பக்கமுள்ள சுரப்பிகள், அரையிடுக்கிலுள்ள சுரப்பிகள், ஸ்தனங்களிலுள்ள சுரப்பிகள், விரைகள், சினைப்பை ஆகியவை தாக்கப் படுகின்றன. ஸ்தனங்களில் முண்டு முண்டாகக் கட்டிகள். இச் சுரப்பிகளில் தசைக் கட்டிகள் தோன்றுதல். கீழ்த் தாடையிலுள்ள சுரப்பிகளில் வலியுள்ள வீக்கம். தொண்டைச் சுரப்பிகள் வீங்கிக் குழிப் புண்களுடன் இருக்கும். மேகக் கிரந்தியினால் அல்லது பாத ரசத்தை மிதம் மிஞ்சி உபயோகித்ததினால் அரையிடுக்குகளிலுள்ள சுரப்பிகள் வீங்கிச் சீழ்க் கொள்ளும். கழுத்திலும் அக்குள்களிலும் உள்ள சுரப்பிகள் வீங்குதல். சினைப்பைகளில் வீக்கம்; நீர்ச் சுரப்புள்ள வீக்கம்; மேகக் கிரந்தி. விரைப் பையினுள் நீர்ச் சுரப்பு.

**இருதயத்தைத் தாக்கும் குணம்:**—நடக்கும் போது இருதயம் ஆடுவது போல் உணர்ச்சி. சிறிது நேரம் இருதயம் வேலை செய்யாமல் நின்று விட்ட உணர்ச்சியும் மறு கணமே விண் என்று பலமாய்த் துடிப்பதும். கடு

மையான பட படப்பு (கடுமையான குறிகள் என்னும் தலைப்பைப் பார்க்கவும்). நாட்பட்ட வாத ரோகத்தில் வீக்கம் மூட்டுக்கு மூட்டு தாவிக் கொண்டிருந்து முடிவில் இருதயத்தைத் தாக்கி மார்பு வலியை உண்டாக்கும். (பென்ஸாயிக் ஆஸிட், கோல்சிகம்). இருதயம், கல்லீரல் இவை பற்றிய வியாதிகளில் கை கால்களில் நீர்ச் சுரப்புடன் வீக்கம். இருதயத் தசைகளில் தளர்ச்சி எதுவும் இல்லாமல் தசைக் கொழுப்பு மட்டும் இருப்பதும் இருதயத் துடிப்பு பலமாக இருப்பதும். இருதயத்தின் உறுப்பு சம்பந்தமான கோளாறுகள். இருதயம் கொழுத்து இருத்தல் (ஆர்னிகா) ஆனால் தசை நார்கள் கெடுவதில்லை. (தசை நார்கள் கெடுவது இருந்தால் ஆர்ஸனிகம், பாஸ்பரஸ்). அளவு மிஞ்சிய மூச்சுத் திணறலுடன் வாத ரோக சம்பந்தமுள்ள இதய உட்புறத் தோல் வேக்காடு; உதடுகள் நீலமாகும்.

கடுமையான குறிகள் :—குறிகள் மிகக் கடுமையாக இருக்கும். பக்குவம் அடையும் தறுவாயிலுள்ள பெண்களுக்கு மார்பில் கடுமையான படபடப்பு. மிகக்கடுமையான மனக்குழப்பத்தை ஏற்படுத்தும் குணமுள்ள மேகக் கிரந்தியினால் ஏற்படும் தலைவலி. தலையின்மேல் காற்றை ஊதும் உணர்ச்சியுடன் கடுமையான தலைவலி. வலியின் கடுமையினால் செய்வது என்ன என்று தெரியாமல் உயரமான இடங்களிலிருந்து கீழே குதித்துவிட விரும்புவார். இரவில் படுத்திருக்கும் போது தலைவலி வந்துவிட்டால் எழுந்திருந்து நடக்க ஆரம்பிப்பார். சிறிதளவு எதிர்த்துப் பேசினாலும் கெட்ட கோபம் வந்து விடும். மிகவும் கடுமையான சங்கா குண முள்ள பெண்கள்; தன்னைத்தானே அடித்துக் கொள்வர். "பிரசவ சமயத்தில் வலிகள் ஒழுங்காக இல்லாதபோது அமைதியாகப் படுத்திருப்பதற்குப் பதிலாக எதைச் சாக்கிட்டாவது எழுந்திருந்து தன் உடலில் தானே விசையாகவும் அடித்துக் கொள்வார் என்று குரன்ஸே குறிப்பிட்டிருக்கிறார்.



விரோதமான குறிகள் :—கழிவுகள் நாற்றமாய் இருக்கும்; மூச்சுக் காற்று நாற்றம் வீசும்: நாக்கின் சுவையும் நாற்றமாய் இருக்கும் ஆனால் வெள்ளை ஒழுக்கில் நாற்றம் இருக்காது. அளவு மீறிய பசி இருக்கும், ஆனால் உடல் இளைத்து வரும் ஆண் பிள்ளைகளுக்கு சாதாரண உணவைக் கண்டால் பசி இருக்காது. விரைகள் பருக்கும், ஆனால் உடல் இளைத்து வரும் ஆண் பிள்ளைகளுக்கு விரை மிகவும் சிறியதாய் இருக்கும். ஒரு சமயம் கோபமாகவும் மறு சமயம் சந்தோஷமாகவும் இருத்தல். மலச்சிக்கல்; அல்லது இரவில் வயிற்றுப் போக்கு. சங்கா குணமுள்ள வலிப்புகளில் ஒரு சமயம் சிரிப்பார்; மறு சமயம் கதறி அழுவார். பொதுவாக சூடு ஒத்துக் கொள்ளுமென்றாலும் குளிர்ந்த காற்றை விரும்புவார்.

வலது பக்கமே வியாதிகள் அதிகம் :—விரைகளில் (அனேகமாக வலது விரை) வீக்கம்; கல்போல் கடினமாகுதல்; நரம்பு சம்பந்தமான வலிகளும் இருத்தல். அரை யிடுக்கில் உண்டாகும் குடல் பிதுக்கம் (அனேகமாக வலது பக்கம்).

## பாஸில்லினம்
## (BACILLINUM).

முன்னுரை :—க்ஷய வியாதி யுள்ளவர்களின் சுவாச கோசங்களில் பாஸில்லஸ் (Bacillus) என்று அழைக்கப் படும் க்ஷயக்கிருமிகள் இருப்பது பூதக்கண்ணாடியின் மூலம்

பார்த்தால் தெரியும். இவ்விதம் கிருமிகள் உள்ள சுவாச கோசத்தை எடுத்து இவ்வௌஷதம் தயார் செய்யப் படுகிறது; ஆகவே இதற்கு பாஸில்லினம் என்ற பெயர்வந்தது. டாக்டர் ஹீத், டாக்டர் புர்னெட் ஆகிய இருவரும் இவ்வௌஷதத்தை முதன் முதலில் தயாரித்து அதன் உபயோகங்களை விளக்கி ஹோமியோபதி வைத்திய முறையிலே ஒரு ஔஷதமாகப் புகுத்தினர்.

ட்யுபர்குலினம், பாஸில்லினம் இவ்விரு ஔஷதங்களையும் ட்யுபர்குலினம்—பாஸில்லினம் என்று கூட்டுத் தலைப்பிட்டு ஒன்றாக எழுதியிருக்கிறார் அல்லென். பாஸில்லினம் தனியாக ஔஷதப் பரீக்ஷை செய்யப் பட்டிருப்பதால் இரண்டையும் ஒரே தலைப்பின்கீழ் எழுதவேண்டிய அவசியம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை.

இவ்விரு வியாதிப் பொருள்களும் வெவ்வேறான குணங்கள் கொண்டவை என்றும் எந்த சமயத்திலும் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை உபயோகிப்பதுசாத்தியமில்லையென்றும் நான் நம்புகிறேன். இரண்டும் ஒன்று போலவே வேலை செய்கின்றன வென்றும் குறிப்பிடும் படியான வித்தியாசம் எதுவும் இல்லை யென்றும் க்ளார்க் கூறுகிறார். தன்னுடைய கூற்றுக்கு ஆதாரமாக மற்ற சிலரின் அனுபவங்களைக் காட்டுகிறார்.

எப்படி இருந்தாலும் ட்யுபர்குலீனம் ஏராளமான தடவைகளில் பரீக்ஷைக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. அதனால் குறிப்பிட்ட ஒரு கேசில் பாஸில்லினம் உபயோகிக்கப் படவேண்டிய குறிகள் மிகத் தெளிவாக இருந்தால் அதைக் கொடுப்பேன். இல்லாவிட்டால் ட்யுபர்குலினத்தையே தேர்ந்தெடுப்பேன்.

குறிப்புகள்:—பாஸில்லினம் உபயோகிக்கப் பட்டு வெற்றிகரமாய்க் குணம் செய்யப்பட்ட வியாதிகளின் விவரம்:—அடிஸனின் வியாதி; தலை வழுக்கை; சுவாச



கோச க்ஷயம்; கோளாறுன உடல் வளர்ச்சி; தலையினுள் நீர்ச் சுரந்து பெரியதாக வீங்குதல்; மூடத்தனம்; பைத்தியம்; எலும்பு மூட்டு வியாதிகள்; ஒட்டுப் பூச்சிகளால் சருமத்திலும் மயிர்க்கால்களிலும் உண்டாகும் வேதனை; செதில் செதிலாகத் தோல் உறியும் சரும வியாதிகள்; சுவாசகோச உறை வேக்காடு; சுவாசகோச வேக்காடு; கடி; வீக்கமுள்ள சுரப்பிகள்; பல் ஒழுங்காக முளைக்காமை; க்ஷயம். க்ஷயம் ஏற்படுமோ என்று தோன்றும் சமயங்களிலேயே பெரும்பாலும் இவ் வௌஷதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக 30 அல்லது 200 வீரியத்தில் அடிக்கடி கொடுக்காமல் வாரமொரு முறை அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறையாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனல் 200 க்குக் குறைவான வீரியத்தில் நான் உபயோகிப்பது கிடையாது.

க்ஷயமோ அல்லது க்ஷயம் உள்ள குடும்ப வரலாறோ இல்லாத சமயங்களில் சில பொதுவான குறிகளை அடிப்படையாக வைத்து நாட்பட்ட பல வியாதிகளை இவ்வௌஷதத்தினுல் குணம் செய்திருக்கின்றனர்.

க்ஷயத்தின் குறிகள் வெளிப்படையாகத் தோன்றுவதற்கு முன்னதாகவே அவ் வியாதி தோன்றுமோ என்று நினைக்கும் படியான உடல் வாகு அல்லது அறிகுறிகள் உள்ள போதே கொடுக்கப்பட வேண்டும். சுரப்பிகள், எலும்பு மூட்டுகள், சருமம், எலும்புகள் ஆகியவைகளில் ஏற்படும் க்ஷயத்தில் ஆரம்ப நிலைமையில் இது வேலை செய்வதாக வில்லியம் போரிக் சொல்கிறார். நாட்பட்ட நிலைமையில் ஸோரினம் இதைப் போல்வேலை செய்யும் என்று மேலும் அவர் கூறுகிறார். திடீரென்று தோன்றும் க்ஷயத்தில் இது அவ்வளவு நன்றாக வேலை செய்யவில்லையென்றும் நாட்பட்ட வியாதிகளில் தான் நன்றாய் வேலைசெய்கிறதென்றும் க்ளார்க் குறிப்பிடுகிறார்.

குடும்பத்திலோ அல்லது தனக்கேயோ சுவாசகோச சம்பந்தமான வியாதிகள் இருந்தால் பாஸில்லினத்தை இடையிடையே கொடுத்து வந்தால் வியக்கத்தக்க நன்மைகள் உண்டாவதாக க்ளார்க் சொல்கிறார்.

இவ் வௌஷதம் ஒரு விதமான தலை வலிக்கு மிகவும் ஏற்றது. அத் தலை வலியில் 3 அல்லது 4 மணி நேரத்திற்கு ஒரு முறையாக அடிக்கடி இவ் வௌஷதத்தைக் கொடுக்க நேரிட்டால் அப்பொழுது இரண்டு அவுன்ஸ் தண்ணீரில் நான்கு மாத்திரைகளைப் போட்டுக் கரைத்து வேளைக்கு அரை அவுன்ஸ் வீதம் 4 வேளைகளில் உபயோகிக்கலாம். திடீர் என்று தோன்றும் மற்ற வியாதிகளிலும் இதைப் போலவே உபயோகிக்க வேண்டும்.

கடியும் செதில் செதிலாகத் தோல் உறியும் சரும வியாதிகளும் க்ஷயம் தோன்றும் உடல் வாகு இருப்பதின் அறிகுறிகளே என்று டாக்டர் பர்னெட் நிரூபித்திருக்கிறார். இவ் வௌஷதம் அவ் வியாதிகளைக் குணம் செய்கிறது. பைத்தியம் அதனுடன் வேறு வியாதிகள் இல்லா விட்டாலும் கூடப் பல சமயங்களில் க்ஷயம் தோன்றும் உடல் வாகைக் குறிப்பிடுகிறது. பைத்தியத்துடன் தோல் உறியும் சரும வியாதியும் சேர்ந்து இருந்தால் பாஸில்லினம் வியாதியை மிக விரைவில் போக்குகிறது.

பூச்சி கொல்லும் மருந்துகளை உபயோகித்தும் பயன் இல்லாத சமயங்களில் பாஸில்லினம் உடலில் ஒட்டியிருந்த பூச்சிகளை அழித்துக் குணம் செய்திருப்பதாக க்ளார்க் எழுதுகிறார்.



## பொதுவான குறிகள்

தகுதி :—க்ஷயம் தோன்றக் கூடிய உடல் வாகு; ஆனால் மேலே குறிப்பிட்டபடி எல்லாக் கேசுகளிலும் இத் தகைய உடல் வாகு இருக்க வேண்டிய அவசியமில்லை. சளியும் சீழும் கலந்த கோழை வெளிப்படும் நாட்பட்ட வியாதிகளும் நீர்க் கோர்வையுடன் மூச்சுத் திணறலும் உள்ள கிழவர்களுக்கு மிகவும் ஏற்றது.

மனம்:—ஆத்திர மடைதல்; உற்சாகம் இல்லாமை; பைத்தியம் பிடிக்கு மளவுக்கு ஏக்கம். எப்பொழுதும் முன் கோபம், வியாதியுடன் இருத்தல், முனகுதல், புகார் சொல்லிக் கொண்டிருத்தல், மிக எளிதிலே பயப்படும் சுபாவம்.

உடல்:—கடி, குறிப்பாகத் தலையில். கண் இமைகளில் கறப்பான் படை போன்ற சரும வியாதி. பற்கள் சரிவர வளராமை; பற்கள் தேய்ந்து குழிகளுடன் இருக்கும். தொண்டையில் குறு குறுக்கும் உணர்ச்சி. அதனால் இருமல் தோன்றும். நாற்றம் வீசும் அபான வாயுவுடன் பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல். மூச்சுத் திணறல். நீர்க் கோர்வையுடன் மூச்சு விடத் திணறல். சிறிய காற்றுக் குழாய்களிலிருந்து சளியும் சீழும் கலந்த போக்கு ஏராளமாய் வெளியாகி சுவாசகோசங்களை அடைத்து விடுதல். உடம்பின் பல பகுதிகளிலும் சுரப்பிகள் கல் போல் கடினமாகி கைகளுக்குத் தட்டுப்படும். நாட்பட்ட வயிற்றுப் போக்கு. சிறிய ஆனால் அடிக்கடி ஏற்படும் இருமல். கழுத்திலுள்ள சுரப்பிகள் வீங்கித் தொட்டால் வலிக்கும். மிக விரைவில் நீர்க் கோர்வை உண்டாகும் உடல் வாகு.

உபாதி கூடுதல்:—இரவு; விடியற்காலை. குளிர்காற்று.

## மற்ற குறிகள்.

கடுமையான தலைவலி, உள்ளூர வலி, அசைத்தால் அதிகமாகும் (சுரத்துடன் இருக்கலாம்). சிறிதளவு இருமலும் இலகுவாகக் கோழை வெளிப்படுவதும். தலையைச் சுற்றி ஓர் இரும்பு வளையத்தைப் போட்டிருப்பது போல் தலையில் கடுமையான வலி. பார்வைக்கு ஒரு கோளாறும் இல்லாத பற்களின் அடிப்பாகத்தில் வலி. வியர்வை, உடல் இளைப்பு, அடி வயிற்றில் வலிகளும் வேதனையும் ஆகியவைகளுடன் சுரம். அடி வயிற்றிலுள்ள சுரப்பிகள் வீங்கி பானை போல் காணப்படும். குடல்களிலிருந்து ஏராளமான இரத்தப் பெருக்கு, இருமல்,—இருதயப் பாக மார்பில் கடுமையான வலியும் அதனால் மூச்சுவிடத் தடையும். முழங் கால்களில் க்ஷய சம்பந்தமுள்ள வேக்காடு. அதிக பலவீனம், பிறர் தலையிடுவுதை விரும்பமாட்டார்.

**உறவு:**—பின்னால் வேலை செய்பவை: **கல்கேரியா பாஸ், காலீ கார்ப்.**

---

# பாப்டீஷியா டிங்டோரியா
## (BAPTISIA TINCTORIA)

**முன்னுரை**—டைபாய்டு சுரத்தில் ஆரம்பம் முதல் முடிவுவரை உள்ள ஒவ்வொரு நிலைமையிலும் உபயோகப்படும் தலை சிறந்த ஔஷதங்களில் **பாப்டீஷியாவும்** ஒன்று. பெருவாரியாய்த் தோன்றும் இன்புளுயன்ஸா சுரத்துக்கும் விஷத்தன்மை வாய்ந்த மலேரியா சுரத்துக்கும் கூட இது விலை மதிக்க முடியாத ஔஷதமாகும். டிப்தீரியா, சுவாச கோச வேக்காடு போன்ற வேறு சில வியாதிகளில் டை-



பாய்டில் காணப்படுவது போன்ற கெடுதலான குறிகள் தோன்றினால் அதற்கும் **பாப்டீஷியா** தகுந்ததே.

## பொதுவான குறிகள்.

**தகுதி:**—மந்த குணம் உள்ளவர்கள். ஸ்கார்லேடினா, டைபாய்டு, முதலிய விஷக் கிருமிகளால் தோன்றும் வியாதிகள்; அழுகும் நிலைமைகள். விஷம் கலந்த தண்ணீரைக் குடித்தாலும் விஷமுள்ள காற்றைச் சுவாசித்ததாலும் உடம்பில் விஷக் கிருமிகள் நுழைந்து அல்லது இரத்தத்தில் விஷப் பொருள்கள் கலந்து அக்காரணமாகத் தோன்றும் எல்லா வியாதிகளும். இவ் வௌஷதம் தேவைப்படும் கேசுகளில் வியாதியின் விஷம் வாரக் கணக்கில் உடலில் மறைந்து இருக்காது. சில நாட்களே மறைந்திருக்கும். பிறகு திடீரென்றும் கடுமையாகவும் வெளியே வரும். இதனால் வியாதியஸ்தரின் அறிவும் வலிமையும் மிகவும் ஒடுக்கப்படும் (அதாவது வியாதியின் தொடக்கத்திலிருந்தே வியாதியஸ்தர் உள்ளமும் உடலும் ஒருங்கே சோர்ந்துவிடுவார். இதிலிருந்தே அவரைத் தாக்கியுள்ள விஷம் மிகக் கடுமையானது என்று அறியலாம்). வியாதியின் முன்னேற்றமும் மிக வேகமாய்த்தான் இருக்கும்.

**மனம்:—1. நிலை கொள்ளாமை.** இது மனம், உடல் ஆக இரு விதங்களிலும் காணப்படும். அங்கு மிங்கும் போக வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். ஆனால் அசைவதற்கு உடலில் போதிய சக்தி இல்லை. **2. மனக் குழப்பம், மந்த குணம், மனம் குழம்பி இருத்தலும்.** கள் குடித்தது போல் குழப்பம். தன் மனதைக் கட்டுப்படுத்த முடியாது. எண்ண அலைகளில் சுழன்ற வண்ணமே இருப்பார். தலையோ அல்லது உடலின் ஏதோ ஒரு உறுப்போ உடலை விட்டுப் பிரிந்து தூள் தூளாகச் சித-

றிக் கிடப்பது போலவும் அவைகளை ஒன்று சேர்ப்பதற்காக வென்று கூறிப் பாடு படுவதும், தூங்க முடியாது. தன் கை கால்கள் சிதறிப்போய் விட்டதாகச் சொல்வார். 3. மயக்கம், மந்த குணம். களையிழந்த முகத்துடன் மயக்கம், ஆழ்ந்த தூக்கம், கேள்விக்கு முழு பதிலும் கொடுக்கும் படியான அளவுக்கு விழிப்பை ஏற்படுத்த முடியாது, பாதி பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்து விடுவார். 4. ஏமாற்றத் தோற்றம். தனக்கு இரண்டு உடல் இருப்பதாக நினைத்தல். தான் மூன்று பேர்களாக இருப்பதாகவும் அதனால் எல்லோரையும் போர்த்தி வைத்துக் கொள்ள முடியவில்லை யென்றும் சொல்வார். தன் உடலின் மேற்பாகமோ அல்லது கீழ்ப் பாகமோ மிகவும் பெரிதாகி விட்ட உணர்ச்சி.

உடல்:—உடல் முழுவதும் அடிபட்டுப் புண்ணாக இருக்கும் உணர்ச்சி. படுத்திருக்கும் படுக்கை கட்டாந்தரை போல் தோன்றுதல். வெளிச்சத்தைத் தாங்க முடியாது. முகம் கருஞ் சிவப்பு நிறமடைந்து களையே இல்லாத தோற்றம் ஏற்படும். பிசுக் கென்று ஒட்டும் உமிழ் நீர். தாகம் சிறிதளவு இருக்கும் அல்லது கொஞ்சங்கூட இருக்காது. கெட்டியான உணவை விழுங்க முடியாது. பற்கள் அல்லது உதடுகளில் கறுப்பான அழுக்குப் படிதல். நாக்கு மஞ்சள் நிறமடைந்து நடுவில் பழுப்பாகவும் ஓரங்களில் சிவந்து பள பள வென்றும் இருக்கும். உடலிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருள்களும் மூச்சுக் காற்று, அபான வாயு முதலிய காற்றுக்களும் அதிக நாற்றம் வீசும். மலத்தின் நாற்றம் மிகக் கடுமையாய் இருக்கும். சளிச் சவ்வுகளில் புண்கள். வாயினுள் அழுகிய புண்கள். வயிற்றில் ஒன்றுமே இல்லாதது போன்ற உணர்ச்சி. நெற்றியிலும்



முகத்திலும் ஆபத்தை அறிவிக்கும் வியர்வை. அடிவயிறு உப்பி யிருத்தல்; நாக்கில் நடுக்கம்; கை கால்களும் நடுங்குதல். மலமும் மூத்திரமும் வியாதியஸ்தரின் விருப்பம் அல்லது அறிவு இல்லாமலே வெளிப்படுதல். இமைகளில் பாரிச வாதம் ஓரளவு காணப்படும். படுக்கையை விட்டுக் கீழே நழுவுதல். காற்றுப் பசி (சுத்தமான காற்றை ஆவலுடன் விரும்புவார்). உடல் முழுவதும் இன்னதென்று சொல்ல முடியாத வேதனை.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**சோர்வு:**—அதிக பலவீனம், குறிப்பாகக் கால்களில், அதனால் கீழே படுத்துக் கொள்ள விரும்புவார். இந்த இரு குறிகளும் டைபாய்டு சுரத்திலும் அதைப் போல் விஷக் கிருமிகளால் தோன்றும் மற்ற சில வியாதிகளிலும் ஆரம்பத்தில் அனேகமாகக் காணப்படும். மிக வேகமாகச் சோர்வு அதிகரிக்கும். வியாதி அதிகக் கடுமையாக இல்லாவிட்டாலும் சோர்வு மித மிஞ்சியே உண்டாகும்.

**புண்ணுள்ள, அடிபட்ட உணர்ச்சி:**—உடல் முழுவதும் புண்ணாய் இருக்கும் உணர்ச்சி. (தசைகளில் வலியும் புண் பட்ட உணர்ச்சியும்). அடிபட்ட உணர்ச்சி. களைப்பு. வியாதியஸ்தர் எந்தப் பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தாலும் அந்தப் பக்கத்தில் அடிபட்டது போலவும் புண் உள்ளது போலவும் உணர்ச்சி. (பைரோஜனியம்); படுக்கை உறுத்துதல். நாக்கு சிவந்து தோல் உறிந்து வலியுடனும் புண்ணாகவும் இருக்கும். மூளையில் புண் இருப்பது போல் உணர்ச்சி. அடிவயிற்றுத் தசைகளில் புண் பட்ட உணர்ச்சி. குடல்களில் வலியும் புண்பட்ட உணர்ச்சியும். கண் விழிகளில் புண்ணுள்ள உணர்ச்சி; அதனால் விழிகளை அசைக்கும் போது வலி. நாற்றமுள்ள, களைப்பை யுண்டாக்கும்

குணங் கொண்ட, ஆசன வாயில் புண்ணை ஏற்படுத்தும் வயிற்றுப் போக்கு.

நிறம் கறுத்தல் :—முகம் கருஞ் சிவப்பு நிறமடைந்து களை இழந்த தோற்றம் தரும். தொண்டை கருஞ் சிவப்பாய் இருக்கும்; கறுப்பு நிறமுள்ள அழுகிய குழிப் புண்கள். தொண்டைச் சுரப்பிகள். வாயின் மேற் கூரை, காதுப் பக்க முள்ள சுரப்பிகள் ஆகியவை வீங்கிக் கருஞ் சிவப்பாய் இருக்கும். சிவந்த நிறம் எவ்வளவுக் கெவ்வளவு கறுப்பாய் இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அக்கேசுக்கு பாப்டீஷியா தகுந்தது என்பதை உறுதிப் படுத்தும். கறுப்பு நிறமுள்ள அழுகிய குழிப் புண். சருமமும் கறுத்து விடும். உடம்பு முழுவதும் கை கால்களிலும் திட்டு திட்டாக கறுப்புக் கலந்த நீல நிறம் காணப்படும். இக்கேசுகள் யாவும் இரத்தத்தில் விஷம் கலப்பதால் ஏற்படுகின்றன. ஆதலால் சருமத்திலும் சளிச் சவ்வுகளிலும் இவ்விதம் கறுத்த நிறத்தை உண்டாக்குகின்றன.

அழுகுதல் :—எல்லாக்கழிவுகளும் மூச்சுக் காற்று முதலிய காற்றுகளும் நாற்றம் வீசுதல்; மலம், மூத்திரம், வியர்வை, மூச்சுக் காற்று, தொண்டையிலிருந்தும் மூக்கிலிருந்தும் வெளிப்படும் சளி, ஆகிய யாவும் அழுகிய நாற்றம் அடிக்கும். நாற்றம் மூக்கை விட்டு இலகுவில் போகாது. மலம் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாகவும், தண்ணீர் போலவும், உருண்டைகள் கலந்தும் சகிக்க முடியாத நாற்றத்துடனும் வெளியாகும். பிரசவமான பிறகு அதிகக் களைப்புடன் அழுகிய நாற்ற முள்ள போக்கு யோனியிலிருந்து ஒழுகுதல்.

இரத்தப் பெருக்கெடுத்தல்: புண்ணாகுதல் :—புண் ஏற்படுவது பாப்டீஷியாவின் முக்கிய குறிகளில் ஒன்று. புண்



களுடன் சில சமயங்களில் இரத்தப் பெருக்கும் காணப்படும் ஆனால் எப்பொழுதும் அழுகிய நாற்றம் இருக்கும். சளிச் சவ்வுகளில் குறிப்பாக வாயில் அழுகும் குணமுள்ள புண்கள், வாய்ப் புண். தொண்டை, மூக்கு, குடல்கள் முதலிய இடங்களிலிருந்து வரும் இரத்தம் கறுப்பாகவும் நாற்ற முள்ளதாகவும் இருக்கும். மேகக் கிரந்தியினால் உண்டாகும் புண்கள் அழுகிய நாற்றத்துடனும் சதையைத் தின்று கொண்டு வரும் குண முள்ள தாகவும் இருத்தல்.

இறுகக் கட்டிய உணர்ச்சி:—உணவுக் குழாய் முழுவதும் இறுகக் கட்டி யிருக்கும் உணர்ச்சி. தண்ணீர் போன்ற திரவப் பொருள்களையே விழுங்க முடியும் (பாரிடா கார்ப்); சிறிதளவு கெட்டியாக உள்ள உணவு கூட சிக்கிக் கொள்ளும்; தொண்டையை அடைக்கும். மார்பை இறுக்கும் அமுக்கும் உணர்ச்சி. தொண்டை புண்ணாகவும் இறுகக் கட்டப் பட்டது போலவும் தோன்றுதல். உணவுக் குழாயும் உணவுப் பையின் மேல் பக்கத் துவாரமும் வலிப்பினால் இறுகி உணவு எதிர் கழித்து வந்த பல கேசுகளை இவ் வௌஷதத்தினால் குணம் செய்திருப் பதாக க்ளார்க் குறிப்பிடுகிறார். நெற்றியி லுள்ள சருமத்தில் விறைப்பு அதாவது நெற்றியி லுள்ள சருமம் தலைப்பக்கமாக இழுக்கப் பட்டிருக்கும் உணர்ச்சி. (விநோதமான இக்குறி டைபாய்டு சுரத்தில் ஏற்பட்டிருக்கிறது).

நடுக்கம் :—கடுமையான வியாதியில் அடிபட்டுத் தேறிவரும் நிலைமையில் இருப்பது போன்ற உடல் பலவீனமும் நடுக்கமும். நாக்கை வெளியே நீட்டும் போது நடுங்கும். கை கால்களில் நடுக்கம்.

மதமதப்பு : வலி யில்லாமை : பக்ஷவாதப் பலவீனம் :—

மதமதப்பு இருப்பது போல் வலியில்லாமலும் உணர்ச்சியில்லாமலும் மிக வேகமாக விருத்தியாகும் குழிப் புண்கள். வலி இல்லாமல் அழுகிய நாற்றம் வீசும் கறுப்பு நிறமுள்ள புண்கள்: வலி இல்லாத தொண்டைப் புண்: அவ்விடங்கள் கருஞ் சிவப்பாய் இருக்கும். இவ்விதம் வலி இல்லாமல் இருப்பதற்கு உடல் வலிமை மிகவும் குறைவாய் இருப்பதே காரணம்; ஆகவே அது கெடுதலான குறியே. வலி இல்லாமை, அழுகிய நாற்றம், நிறம் கறுத்தல், உடல் சோர்வு ஆகிய இந் நான்கும் ஒன்று சேர்ந்து காணப்படுவது பாப்டீஷியாவுக்குள்ள ஓர் மிக விசேஷக் குறி. தலையிலும் முகத்திலும் மதமதத்த உணர்ச்சியுடன் தலை பெரியதாகி விட்டது போல் தோன்றுதல். இடது பாதத்தில் மதமதப்பு உண்டாகி ஊசி குத்தும் உணர்ச்சி. உடல் முழுவதும், குறிப்பாக இடது பாகத்தில், மதமதப்பு, ஊசி குத்தும் உணர்ச்சி, பக்ஷவாதம் இருப்பது போல் தோன்றுதல்.

வலியில்லாமைக்கு ஒரு சில உதாரணங்கள்: கறுப்பான வயிற்றுப் போக்கு, அதிக நாற்றம் அடிக்கும், வலி இருக்காது. வயிற்றுக் கடுப்பில்: மலம் இரத்தம் கலந்தும் அதிக நாற்ற மாகவும் சிறிதளவு கடுப்புடனும் ஆனால் வலியே இல்லாமல் வெளியாகும்.

இமைகள் பக்ஷவாதத்தினால் சிறிதளவு தாக்கப்பட்டிருக்கும். கீழ்த்தாடை தொங்குதல். படுக்கையை விட்டு நழுவுதல் (மூரியாடிக் ஆஸிட்)—ஒரு விதமான பக்ஷவாதப் பலவீனம். விழுங்கும் உறுப்புகளில் பக்ஷவாதம். மலமும் மூத்திரமும் தாமாகவே வெளியாகும். பேசச் சிரமம் (குரல் வளையில் பக்ஷவாதம்). ஆழ்ந்து மூச்சு விட முடியாது (சுவாச கோசங்களில் பலவீனம்).



### மற்ற குறிகள்

மனச் சோர்வு, கெட்ட செய்திகளைக் கேட்டதினால் ஏற்படும் மன அதிர்ச்சி, கண் விழித்தல், பட்டினி கிடத்தல், லேசான சூடுள்ள சுரம் ஆகிய காரணங்களால் கருச் சிதைவு நேரும் போல் தோன்றுதல். நல்ல கவனிப்போ உணவோ இல்லாமல் கப்பலிலேயே அடைந்து இருந்தால் தோன்றும் சுரம். பிள்ளை பெற்ற பிறகு தோன்றும் சுரம்—மூத்திரம் அனேகமாக அளவு குறைந்தும் கருஞ் சிவப்பு நிறமாகவும் இருக்கும். கார வாசனையும் அழுகிய நாற்றமும். கல்லீரலில் இடைவிடாமல் கடுமையான வலி. இடது அரையிடுக்கிலுள்ள சுரப்பிகள் வீங்கி நடக்கும் போது வலி உண்டாகும். இடது காதின் கீழுள்ள சுரப்பிகளில் வலி.

**உறவு :—** ஆர்ஸனிகம் ஆல்பத்தில் இவ் வௌஷதத்தில் இருக்கும் இரத்தத்தில் விஷம் கலந்த குறிகளே இருக்கும் என்றாலும் அவை மெதுவாக விருத்தியாகும். ஆர்ஸனிகத்துக்குப் பிறகு இது நன்றாக வேலை செய்யக்கூடியது. ஜெல்ஸிமியம், ரஸ் டாக்ஸ் ஆர்னிகா, லாச்சஸிஸ் ஆகிய ஔஷதங்களில் பாப்டீஷியாவில் காணப்படும் பல குறிகள் காணப்படுகின்றன.

---

## பாரிடா கார்பானிகா.
## (BARYTA CARBONICA)

**முன்னுரை :—** இவ்வௌஷதம் தேவைப்படும் வியாதியஸ்தர்களுக்குப் பலவீனம், சிறுத்த உடல், மந்த குணம், பயங்கொள்ளித்தனம், அல்பத்தனம், சுரப்பி வியாதிகள், பக்ஷவாதம் ஆகியவை இருக்கும். குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும் உடல்வாகை அனுசரித்துக் கொடுக்கப் படும் ஔஷதங்களில் இதுவும் ஒன்று. வியாதியஸ்தருக்குத்

தூக்கக் கலக்கமாய் இருக்கும், ஆனால் தூங்க முடியாது; பசி இருக்கும் ஆனால் சாப்பிட முடியாது என்னும் வினோதக் குறிகள் இவ் வௌஷதத்தில் காணப்படுகின்றன.

## பொதுவான குறிகள்.

தகுதி:—குழந்தைப் பருவத்திலும் கிழப் பருவத்திலும் தோன்றும் கோளாறுகளுக்கு மிகவும் தகுந்தது. காற்றுக் குழாயில் களகள வென்ற ஓசையுள்ள கிழவர்கள். சுரப்பிகளில் வீக்கத்துடன் உடல் சிறுத்து நடக்கக் கற்றுக் கொள்வதிலும் படிப்பிலும் சுருங்கச் சொன்னால் வாழ்க்கையின் எல்லா வேலைகளிலும் சுறு சுறுப்பு இல்லாத குழந்தைகள். குழந்தைகளைப் போல் நடந்து கொள்ளும் கிழவர்கள். இளவயதிலேயே கிழட்டுக்களை உண்டாகுதல். டான்சில் சுரப்பிகள் கல் போல் கடினமாகி கழுத்துப் பக்கமுள்ள சுரப்பிகள் வீங்கிக் காணப்படும் குழந்தைகளுக்கும் முன்னதாக ஏற்பட்ட வியாதிகளால் உடலிலும் உள்ளத்திலும் வலிமை குறைந்த கிழவர்களுக்கும் இது உபயோகமுள்ளதென்று லிலியந்தால் விவரிக்கிறார்.

மனம்:—1. மூளைப் பலலீனம். ஞாபக சக்தி குறைவாய் இருத்தல்; மறந்து விடுதல், கவனம் இல்லாமை. நினைவில் வைத்துக் கொள்ளவும் கற்றுக் கொள்ளவும் சக்தியில்லாத குழந்தைகள் 2. மந்த குணம்: குழந்தைக்கு விளையாடப் பிடிக்காது; ஒரு மூலையில் சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருப்பதையே விரும்பும்; சுறு சுறுப்பே இருக்காது. அசடு வழியும் பார்வை. 3. பயங் கொள்ளித்தனம்: புதிய பேர்வழிகளைக் கண்டால் பயம், நடுக்கம், வெட்கம்; அல்ப காரணங்களாலும் பயப்படும். இவ்விதமான மனக் கோளாறுகள் சரியான மூளை வளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் இல்லாத குழந்



தைகளிடம் காணப்படும். 4. அவ நம்பிக்கை: சந்தேகிக்கும் குணம். தன்னம்பிக்கை இருக்காது; எந்தக் காரியத்தையும் செய்யப் பயப்படுதல்.

உடல்:—சுரப்பிகள் வீங்கிக் கல் போல் கடினமாகுதல். அதிக பலவீனம்; அதனால் நீண்ட நேரம் நின்று கொண்டிருக்க முடியாது. பயந்த சுபாவம். பலவீனம் உடலைப் பற்றியும் இருக்கும். அறிவைப் பற்றியதாகவும் இருக்கும். அடி வயிற்றில் உப்பிசம் இருக்கும் போது முகத்திலும் மற்ற உடல்பகுதிகளிலும் சேர்ந்தாற்போல் பருத்தல் அல்லது இளைத்து விடுதல். அடி வயிற்றிலுள்ள சுரப்பிகள் வீங்கிக் கல் போல் கடினமாகும். பக்ஷவாதப் பலவீனம். சிறிதளவு வேலை செய்தாலும் உடல் களைத்துத் தூக்கம் வரும் போல் இருத்தல். ஈரக் கசிவுள்ள (மழை) காலங்களில் வாத சம்பந்தமான பிடிப்புகளும் விறைப்பும். உடல் முழுவதும் வில் போல் வளைதல். தசைகள் சுருங்கி விறைப்புடன் இருத்தல். இரவில் உடல் முழுவதும் தாங்க முடியாத அறிப்பும் ஊசியினால் குத்தும் உணர்ச்சியும். உச்சந் தலையில் மயிர் கொட்டுதல். தலை வழுக்கை, வாடிய தோற்றம். தொண்டைக்கம்மல், நாட்பட்ட குரல் கம்மல், மிகவும் அதிகமான பசி, ஆனால் ஒன்றிரண்டு வாய் சாப்பிட்டவுடன் வயிறு நிரம்பிவிட்ட உணர்ச்சி. மலம் கடினமாகவும் உருண்டைகளாகவும் கஷ்டப்பட்டும் வெளிப்படும். சீரண சக்தி குறைதல். சாப்பிட்டவுடன் வேதனை. பாதங்களில் நாற்றம் அடிக்கும் வியர்வை. சில்லென்றும் இருக்கும்.

உபாதி கூடுதல்:—வியாதியஸ்தருக்குக் குளிர்ந்த உணர்ச்சி; குளிர், குறிப்பாக ஈரக் கசிவுள்ள குளிர், ஒத்துக் கொள்ளாது. போர்த்திக் கொள்ள விரும்புவார். அடிக்கடி நீர்க் கோர்வை உண்டாகும் குணம், அதனால்

தொண்டையில் வேக்காடு தோன்றுதல்; தொண்டைச் சுரப்பிகள் வீங்குதல்.

**உபாதி கூடுதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—பாதங்களில் இருந்த வியர்வையை அடக்கிய தால் இருதயக் கோளாறுகள் தோன்றுதல். "இருதயத்தில் புண் உள்ள உணர்ச்சியுடன் படபடப்பு; இடது பக்க மாகப் படுத்தாலும் அதைப்பற்றி நினைத்துக் கொண்டிருக் கும் போதும் அதிகமாகும்". தன் இருமலைப் பற்றி நினைத்த வுடன் அது தோன்றுகிறது.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

**சுரப்பிகளைத் தாக்கும் குணம்:**—சுரப்பிகள் வீங்கிக் கடின மாகின்றன. காதுப் பக்கங்களிலும் கீழ்த் தாடை யிலும் உள்ள சுரப்பிகளில் வேக்காடு. கழுத்திலும் பின் தலையிலும் உள்ள சுரப்பிகள் பருத்தல். காதுகளைச் சுற்றியுள்ள சுரப்பிகளில் வலியும் வீக்கமும்;(காதிலோ அல் லது காதுக்குப் பின் பக்கத்திலோ சருமக் கோளாறும் இத்துடன் சேர்ந்து இருக்கலாம்). நீர்க் கோர்வை தோன்றும் போதெல்லாம் தொண்டைச் சுரப்பிகள் விங்குதல். கால்களில் ஏற்படும் வியர்வையை அடக் கியதாலும் உண்டாகலாம். தொண்டைச் சுரப்பிகள், குறிப்பாக வலது பக்கத்திலுள்ள சுரப்பி தவருமல் சீழ்க் கொள்ளும். தொண்டைச் சுரப்பிகள் வீங்குவதற் குக் காரணமான உடல் வாகை ஒழுங்கு படுத்தும். கழுத்துச் சுரப்பிகளிலும் மூட்டுகளின் கீழும் காது களுக்குப் பின்புறமும் க்ஷய சம்பந்தமான வீக்கம். தொண்டையைப் பற்றியுள்ள கோளாறுகளில் கீழ்க்கா ணும் குறிகள் காணப்படும். விழுங்குவது போல் செய் தால் வலி அதிகமாகும். விழுங்கும் போது தொண்டை யில் குத்தும் உணர்ச்சி; வாயின் மேல் கூரையில் வீக் கம்; தொண்டையில் தக்கை அடைத்து இருக்கும் உணர்ச்சி, கெட்டியான பொருள்களை விழுங்கும் போது அதிகக் கஷ்டம். திரவ உருவில் உள்ளதைத் தவிர வேறு எதையும் விழுங்க முடியாது (பாப்டீஷியா, லைஸீஷியா). குழந்தைகளுக்கு அடி வயிற்றிலுள்ள சுரப்பிகள் வீங்கி இருத்தல். சுக்கிலச் சுரப்பிகள் பருத்திருத்தல். விரை கள் கல்போல் கடின மாகுதல்.



பாரிடா கார்பில் விரைகளில் வீக்கமும் கடின மாவ தும் தான் காணப்படும் என்று சொல்ல முடியாது. விரைகள் சிறுத்துப் போவதும் உண்டு. இதே போல ஸ்தனங்களில் உள்ள சுரப்பிகளும் சினைப்பைகளும் சிறுத்துப் போகும்.

பல விதமான தசைக் கட்டிகளை இது குணம் செய் திருக்கிறது. கொழுப்பு உள்ள தசைக் கட்டிகள், குறிப்பாகக் கழுத்தில் தோன்றும் கட்டிகளுக்கும்.

**பக்ஷவாத நிலைமைகள்:**—இவ் வௌஷதம் தேவைப் படும் எல்லா வியாதிகளிலும் பக்ஷவாதம் காணப்படும். உடல், மனம் இரண்டும் பக்ஷ வாதத்தினுல் தாக்கப் படும். மூடத்தனம், சுறு சுறுப்பு இல்லாமை, ஞாபக சக்திக் குறைவு ஆகியவை மனதைப் பக்ஷவாதம் தாக்கி ஏற்படும் குறிகள் (மனம் என்ற தலைப்பின் கீழ் பார்க்க வும்). உடலின் பல இடங்களிலும் பக்ஷவாதப் பல வீனத்துடன் இழுத்தல், வயதானவர்களுக்கு உண்டாகும் பொதுவான பக்ஷ வாதமும். நடுக்கு வாதமும். எழுதும் போது கைகள் நடுங்குதல். நிற்கும் போது கால்கள் நடுங்கும். நடக்கும் போது தள்ளாடும். நாக்கில் பக்ஷ வாதம். உணவுக் குழாயின் பக்ஷ வாதத்தினுல் திரவப் பொருள்களைத் தான் விழுங்க முடியும். வயிறு தளர்ந்து தொங்கும் உணர்ச்சி. (இது ஒரு பக்ஷவாதத் தோற்றம்),

வயதானவர்களுக்கு மூளையில் இரத்தப் பெருக்கு ஏற்பட்ட பிறகு உண்டாகும் பக்ஷ வாதம். குழந்தைகள் போல்நடந்து கொள்வார்கள். பேச முடியாது (நாக்கின் பக்ஷ வாதம்). மிகவும் மெதுவாகப் பேசுதல். வயதானவர்களுக்கு மூச்சுத் திணறலை உண்டாக்கும் நீர்க் கோர்வை (மார்பு முழுவதும் சளி இருக்கும் ஆனால் அதை வெளியேற்றச் சக்தி இல்லை) இதனால் சுவாச கோசங்களைப் பக்ஷவாதம் தாக்குமோ என்ற நிலைமை ஏற்படும். ஏராளமான உமிழ்நீர் உற்பத்தியாகி இரவில் வாய் மூலம் வெளியே போகும். ஆண் தன்மைக் குறைவு; மானி தளர்ந்திருக்கும்; வெகு விரைவில் இந்திரியம் வெளிப்படும் புணர்ச்சியில் ஆசை குறையும். (இவை யாவும் உறுப்புகளின் பக்ஷவாத நிலைமையைக் காட்டுகின்றன).

**புண் உள்ள உணர்ச்சி:—**வயிற்றில் புண் உள்ள உணர்ச்சி; உணவு உட்கொள்ளும் போது உணவு செல்லும் இடங்களில் புண் இருப்பதுபோல் உணர்ச்சி. வயிற்றில் ஏதோ ஒரு இடத்தில் மட்டும் புண்ணாய் வலித்தல். ஆசன வாய் வழியாகக் கசியும், புண்ணாகவும் தோன்றும். விரைப் பைக்கும் தொடைகளுக்கும் நடுவில் புண் உள்ள உணர்ச்சியும் கச கச வென்ற நீர்க் கசிவும். இருதயத்தில் புண் உள்ள உணர்ச்சியுடன் படபடப்பு. மார்பில் புண்ணுள்ள உணர்ச்சி. நாக்கின் நுனியில் புண்ணுள்ள உணர்ச்சியுடன் எரிச்சல். காலில் நாற்றமுள்ள வியர்வை. உள்ளங் கால்களில் புண்ணை உண்டாக்கும். சருமத்தில் அரிப்பு, புண் உள்ள உணர்ச்சி, ஈரக்கசிவு. சிறிய காயங்களும் சீழ்ப் பிடித்து மிகவும் புண்ணாகுதல்.

**இடது பக்கமே வியாதிகள் அதிகம்:—**அனேகமாக இடது பக்கமே வியாதிகள் தோன்றுகின்றன. வலது



காதும் அதன் பக்கமுள்ள சுரப்பிகளும் அதிகமாய்த் தாக்கப்படுகின்றன.

### மற்ற குறிகள்

இமைகளில் சிறு சிறு சிறங்குகள்; அவை தடித்திருத்தல்; காலையில் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருக்கும்—அடிவயிற்றைக்கீழே வைத்துப் படுத்தால் இருமல் குறையும்,— பாலுண்ணிகள்—பாதங்கள் சில்லென்றும் ஈரக் கசிவுடனும் காயங்களுடனும் தோல் தடிப்புகளுடனும் இருக்கும். மானியைக் கைகளால் பிடித்துக் குலுக்கி சிற்றின்பம் அனுபவிக்கும் பழக்கத்தினால் ஏற்படும் மனக் கோளாறுகள்.—கீழ் முதுகில் வலியும் விறைப்பும் நாற்காலியிலிருந்து இலகுவில் எழுந்திருக்க முடியாமையும். இரத்த விசை மிகவும் அதிகரித்தல். விட்டுவிட்டுச் சுரம்வரும்வியாதிகளில் எந்த நிலைமையிலும் தாகம் இருக்காது. இருதய வியாதிகளில் படுத்திருக்கும் போது திடீரென்று கடுமையான மன ஏக்கம் தோன்றுதல். சரியான எலும்பு வளர்ச்சியில்லாமல் எலும்பு முனைகளில் வீக்கமுள்ள சிறுவர்களின் வியாதியில் குறைவில்லாமல் உணவு உட்கொண்டு வந்தாலும் உடல் இளைத்தல். சொத்தை விழுந்த பற்களில் சிறிது நேரத்துக்கு ஒரு முறை சுருக்கென்ற குத்து வலி ஒரு தடவை மட்டும் ஏற்பட்டு நின்றுவிடும். சொத்தைப் பற்களில் மாதவிடாய் ஏற்படுவதற்கு முன் வலி.

உறவு:—பகை:—கல்கேரியா கார்ப்.

---

# பெல்லடோன்னா

## (BELLADONNA)

**முன்னுரை :—பெல்லடோன்னா,** வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல மிக வேகமாய் வேலை செய்கிறது. அதனால் ஏற்படும் விளைவுகள் கடுமையாய் இருக்கின்றன. அதனால் ஏற்படும் வலி திடீரென்று தோன்றுகிறது; மறைவதும் அவ்விதமே. **சூடு, சிவசிவப்பு, எரிச்சல், துடிப்பு.** தூக்கத்தில் முனகுதல், அரைத் தூக்கமும் அரை விழிப்பும் உள்ள நிலைமை, **சூடான தலை, புலன் உணர்ச்சிகள் மிக அதிகமாகுதல்,** தாங்க முடியாத வலி, ஆகிய உடல் குறிகளும் ஆத்திரமும், மூர்க்க குணம் ஆகிய மனக்குறிகளும் ஒருவியாதிக்கு **பெல்லடோன்னா** ஏற்றது என்பதை வெளிப்படுத்துகின்றன. புலிபோல் உறுமி, ஒரு பாவமும் அறியாத தன் கணவனைக் கத்தியால் குத்த முயற்சித்த ஒரு பெண் வியாதியஸ்தரை நான் கண்டிருக்கிறேன். குறி ஒரு அங்குலம் பிசகியதால் கணவன் பிழைத்தான். **பெல்லடோன்னாவின்** மற்ற முக்கிய குறிகள், **வலிப்புகள், இழுத்தல், முறுக்குதல், கண்மணிகள் விரிதல்,** வெளிச்சத்தில் கண் கூச்சம் ஆகியவை. சாய்வான நிலையில் படுத்திருந்தால் **பெல்லடோன்னாக்** குறிகள் மிக அதிகமாகும்.

### பொதுக் குறிகள்

**தகுதி :—** முன் கோபமும் மந்த குணமும் உள்ளவர்களுக்கு ஏற்றது. அடிக்கடி உடலில், **விசேஷமாகத் தலையில், அதிக இரத்தம் சேரும்** குறியுள்ள கொழுத்த உடலும் மந்த குணமும் உள்ளவர்கள். உணர்ச்சி அதிகரிக்கும்; பயந்த சுபாவம், வலிப்புகள் தோன்றும் போல் இருத்தல். கொழுத்த உடலும் பருத்த தலையும் உள்ள குழந்தைகளுக்கு மிகவும் ஏற்றது. லேசான மயிர் வளர்ச்சி, நீல நிறக் கண்கள், அழகிய தோற்றம், பூப்போன்ற மென்மையான சருமம் ஆகியவைகளுள்ள பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தகுந்தது. குழந்தை ஒரு நிமிஷம் ஆரோக்கியமாய் இருக்கும். மறு நிமிஷமே வியாதி கொண்டு படுத்துவிடும். ஆரோக்கியமாய் இருக்கும் போது மிக இன்பமாகப் பழகுவோர் வியாதி உண்டானவுடன் மிகக் கடுமையாகவும் பல சமயங்களில் புத்தித் தடுமாற்றத்துடனும் மாறினால் அவர்களுக்குப் பெல்லடோன்னா ஏற்றதாகும்.



**மனம்:—1, புத்தித் தடுமாற்றம்.** மிகக் கடுமையான வகை. புத்தித் தடுமாற்றம் கடுமையாகவும் அதிக நேரம் நீடிப்பதாகவும் இருக்கும் அல்லது அதன் பெரும் பகுதி கடுமையாக இருக்கும். (ஹயஸ்யாமஸில் புத்தித் தடுமாற்றம் எப்போதாவது ஒரு சமயம் கடுமையாய் இருக்கும்; மற்ற எல்லாச் சமயங்களிலும் லேசாகவே இருக்கும். ஹயஸ்யாமஸில் வியாதியஸ்தரின் முகம் வெளுத்திருக்கும். பெல்லடோன்னாவில் முகம் கறுப்பாக இருக்கும்). பிறரைக் கடிக்கப் பிரியம்; துணிகளைக் கிழித்தல், சுற்றி இருப்பவர்களை அடித்தல், அவர்கள் மீது எச்சில் துப்புதல், உரக்கச் சிரித்தல், பற்களை நறநற வென்று கடித்தல், படுக்கையிலிருந்து வெளியே குதிக்க அடிக்கடி முயற்சித்தல்; தப்பித்துச் செல்ல முயற்சித்தல் (ஹெல்லபோரஸ்). ஹயஸ்யாமஸ் வியாதியஸ்தர் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று எழுந்து உட்காருவார், சுற்றிலும் வெறித்துப் பார்ப்பார், படுத்துக் கொள் என்று சொன்னவுடன் படுத்துக் கொண்டு விடுவார். **2. பொய்த் தோற்றங்கள் :—**பேய் பிசாசுகளையும் கோரமான முகங்களையும் பலவிதமான புழு பூச்சிகளையும் பார்ப்பதாக எண்ணுவார். (ஸ்ட்ரமோனியம்); கறுப்பு நிறமுள்ள பிராணிகள், நாய்கள், ஓநாய்கள். இவை

களால் பயம் உண்டாகி ஓட விரும்புவார், 3. சாவில் விருப்பம். தற்கொலை செய்துகொள்ள ஆவல் படுதல். 4. அலட்சியம். மிகுந்த அலட்சியம். தனியாய் இருக்க விரும்புவார். பேச விரும்ப மாட்டார் (அல்லது மிக அவசரமாகப் பேசுதல்).

உடல் :— கடுமையான குறிகளுடன் வியாதி திடீரென்று தோன்றுதல்; ஒரு குறிப்பிட்ட காலம் இருந்துவிட்டுப் பிறகு திடீரென்று மறைதல். வலிகள் திடீரென்று தோன்றும், கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ சிறிது காலம் நீடித்து இருந்து விட்டுப் பிறகு திடீரென்று மறைந்து விடும். முகம் சிவந்து உப்பி இருக்கும்; நாடி வேகமாகவும் முழு அளவுடனும் துடிக்கும். தலையிலும் மார்பிலும் அதிக இரத்தம் சேருதல். தலையை இரண்டு பக்கங்களிலும் உருட்டுதல். தலை சூடாகவும் கைகளும் கால்களும் சில்லென்று குளிர்ந்தும் இருக்கும். கண்மணிகள் விரிந்திருக்கும். வியாதியுள்ள பாகங்கள் சூடாகவும் சிவந்தும் எரிச்சலுடனும் இருக்கும். துடிக்கும் உணர்ச்சி. பொட்டுகளிலுள்ள சுத்த இரத்தக் குழாய்களில் கடுமையான துடிக்கும் வலி. தூக்கக் கலக்கமாய் இருக்கும், ஆனால் தூங்கமுடியாது. கண்களை மூடிய வுடனேயும் தூங்கும் போதும் பயந்து கொண்டது போல் திடீரென்று எழுந்திருத்தல். மூடப்பட்டுள்ள இடங்களில் வியர்வை. குழந்தை திடீரென்று கதறி அழும்; சிறிது நேரம் ஆனவுடன் அதற்கு ஒரு கோளாறும் இல்லாதது போல் திடீரென்று அழுகையை நிறுத்திவிடும். இடைவிடாத முனகலுடன் மந்த குணம். தூங்கும் போது அரைக் கண் மூடியபடி முனகுதல். குழந்தைகள் அதிகமாக அழுவதும் கோபமாய் இருப்பதும். தூக்கத்தில் குழந்தை கதறுதல் (காது வலி). பற்களை நற நற வென்று கடித்தல். தாகம் அதிகமாய் இருக்காது; ஆனால் வாயை ஈரமாக்கிக்



கொள்ள அடிக்கடி விரும்புவார். அல்லது அதிக தாகத்துடன் குளிர்ந்த தண்ணீர் குடிக்கப் பிரியப் படுதல். சுரத்தில் தாகம் இருப்பதில்லை. வாய் திறந்திருக்கும். அடிக்கடி வாயை மெல்லுதல். அடி வயிறு பருத்துத் தொட்டால் வலி உண்டாகும். குமட்டலும் வாந்தியும், தானாகவே மூத்திரம் வெளியாகுதல். தூக்கத்தில் தசைகளில் இழுப்பு. சுரப்பிகள் வீங்கிச் சிவந்து வலியுடன் இருக்கும். சருமம் ஒரு சமயம் சிவந்தும் மறு சமயம் வெளுத்தும் இருத்தல். எலுமிச்சம் பழச்சாறு கலந்த பானங்களில் விருப்பம். மலத்தில் சாக்கட்டி போன்ற வெண்மையான உருண்டைகள்.

உபாதி கூடுதல் :—காற்று வீசுதல் ஒத்துக் கொள்ளாது, குறிப்பாகத் தலையில் காற்று வீசுதல் (வியாதியஸ்தர் தலையை மூடிக்கொள்ள விரும்புவார்), குளிர் காற்று கொஞ்சங்கூட ஒத்துக் கொள்ளாது; வெகு சீக்கிரத்தில் உடம்பில் குளிர் உண்டாகும். வலியைத் தாங்க முடியாத உடல் வாகு அதனால் சிறிது அசைவு ஏற்பட்டாலும் லேசாகத் தொட்டாலும் வலி அதிகமாகும். சிறிதளவு அதிர்ச்சி கூட பெல்லடொன்னா வியாதியஸ்தரின் வலியை அதிகமாக்கும் என்றால் அதில் அதிசயம் இல்லை. வியாதியஸ்தருடைய படுக்கையில் கொஞ்சங் கூட அசைவு உண்டாகாமல் எவ்வளவு ஜாக்கிரதையாக உட்கார்ந்து கொண்டாலும் அவருக்கு தாங்க முடியாத அளவில் வலி கூடுதலாகும். அவர் படுத்திருக்கும் அறையில் பிறர் நடக்கும் போது உண்டாகும் அதிர்ச்சியும் வலியை அதிகரிக்கும். பேசினால் கூட வலியுள்ள இடங்களில் அடிப்பது போல் இருக்கும். கீழே படுத்தால் வலி அதிகமாவது என்னும் குறி ஓர் இரத்தினம். இந்த ஒரு குறியைக் கொண்டே வியாதிக்கு ஏற்றது பெல்லடொன்னா என்று கண்டு பிடிக்கப்பட்ட பல கேசுகள் இருக்கின்றன.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- வலி, வேக்காடு இவ்விரண்டைப் பற்றியும் மேலே பார்க்கவும். மாலை 3 மணிக்குப் பிறகு, இரவில், நள்ளிரவுக்குப் பிறகு, தலையை மூடாமல் திறந்து இருத்தல், கோடைக் கால வெய்யில் ஆகியவைகளால் குறிகள் அதிகமாகலாம். வலிகள் (சுவாசகோச உறை வேக்காட்டிலும் சுவாசகோச வேக்காட்டிலும் இருப்பது போன்ற) அமுக்கினால் அதிகமாகும் (குறைந்தால், பிரயோனியா). அதனால் வியாதியுள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுக்கமுடியாது. தலைமயிரைக் கத்தரித்தால் தலைவலி அல்லது கழுத்தில் பிடிப்பு ஏற்படும்.

**உபாதி குறைதல்**:—வலியுள்ள பாகங்களை பின்பக்கமாகவோ அல்லது உள் பக்கமாகவோ வளைத்தால் வலி குறையும். வயிற்று வலியில், **லேசாகத் தொட்டால் அல்லது அமுக்கினால் வலி அதிகமாகும். ஆனால் அடிவயிற்றின் குறுக்குப் பாகத்தில் பலமாய் அமுக்கினால் வலி குறையும்.** நின்று கொண்டிருந்தாலும் குறையும். டயஸ்கோரியாவின் வயிற்று வலி உடலை முன்பக்கமாய் வளைத்தால் அதிகமாகி உடலை நேராக விறைப்பாய் வைத்தாலும் நடந்து கொண்டிருந்தாலும் குறையும். ரஸ் டாக்ஸின் வயிற்று வலி வியாதியஸ்தரைக் குனிந்தபடியே நடக்கச் செய்யும் அல்லது அடிவயிற்றைக் கீழே அமுக்கி வைத்துப் படுக்கச் செய்யும். காலோஸிந்திசின் வயிற்று வலியில் வியாதியஸ்தர் உடலை முன் பக்கமாய் இரண்டாக வளைத்துக் கொள்வார். கடினமான ஒரு பொருளை வைத்து அமுக்கினால் வலி குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**உணர்ச்சி அதிகரித்தல்**:—உபாதி கூடுதல் என்னும் தலைப்பைப் பார்க்கவும். எதிர்த்துப் பேசினால் தாங்க முடியாது; கடுங் கோபம் வந்துவிடும். அடிவயிற்றில்



வலி, உப்பிசம், சிறிது அதிர்ச்சியாலும் வலி அதிகமாகுதல், படுக்கையில் உண்டாகும் அசைவும் தாங்காது; அதிர்ச்சி ஏற்படுமோ என்று மிக ஜாக்கிரதையாய் நடத்தல். அடிவயிற்றின் வலது பக்கத்தில் வலி, படுக்கை விரிப்பு பட்டால் கூட வலி அதிகமாகும்.

**திடீரென்று தோன்றுதல்: வேகமாக வளருதல்**:—உடல் என்னும் தலைப்பைக் கவனிக்கவும். சிரங்குக் கட்டிகளில் மிகச் சீக்கிரமாகச் சீழ் உண்டாகும். கறப்பான் படை நம்பவே முடியாத, கவலையை உண்டாக்கும் அளவுக்கு, வேகமாகப் பரவும். அக்கி மிகச் சீக்கிரமாக சீழ்ப் பிடித்தல். வியாதியுள்ள பாகங்கள் திடீரென்று வீங்குதல். திடீரென்று அதிக இரத்தம் சேருதல். மிகவும் திடீரென்று வலிப்புகள் தோன்றுதல். இறந்து விட்டது போல் உடல் உணர்ச்சிகளும் அசைவுகளும் மறைந்து திடீர் திடீரென்று மயக்கம். தொண்டைச் சுரப்பிகளில் வேக்காடும் வீக்கமும் தோன்றிய சமயங்களில் மிக விரைவில் சீழ் உள்ள இரணங்கள் ஏற்படுதல். திடீரென்று தொண்டை கம்மிவிடும். வேகமான அசைவுக்குச் சில உதாரணங்கள் 1. வேகமாகக் கண்களை மூடித் திறத்தலும் விழிகளை உருட்டுவதும். 2. மிக அவசரமாகத் தண்ணீர் குடித்தல் (வலிப்புகளிலும் சுரத்திலும் காணப்படுவது போல்).

**கடுமை**:—உடல் என்னும் தலைப்பைக் கவனிக்கவும். மிகக் கடுமையான குறிகள். தலையில் கடுமையான துடிப்புகள். **பொட்டுகளில் உள்ள இரத்தக் குழாய்களில் கடுமையான துடிப்புகள். பற்களைப் பலமாகக் கடித்தல்,** மிகுந்த ஓசையுடன் வெளி மூச்சு விடுதல். இருதயம் பலமாய்த் துடித்தல், அத்துடிப்புகள் சில சமயங்களில் தலையிலும் தென்படும். உடலைப் பலவிதமாகவும், அனேக

மாக உள்ளங் கால்களும் பின் தலையும் மட்டும் பூமியைத் தொட்டுக் கொண்டிருக்க மற்ற உடல் பகுதி பல்லாக்குப் போல் வளைந்திருக்கச் செய்யும், கடுமையான வலிப்புகள், அனேகமாகக் குழந்தைகளுக்கு ஏற்படும். வயிற்றுக் கடுப்பில், உடலை நடுக்கும் அளவுக்குக் கடுமையான கடுப்பு.

சூடு: சிவ சிவப்பு: எரிச்சல்: துடிப்பு:—வேக்காடு உள்ள இடங்களில் கடுமையான சூடு. சுரத்தில் சருமம் காய்ந்து மிகவும் சூடாய் இருக்கும். சூட்டுடன் எரிச்சல் இருக்கும் உணர்ச்சி. வேக்காடுள்ள இடங்கள் சிவப்பாய் இருக்கும் சில சமயங்களில் மிகவும் சிவப்பாய் இருக்கும். ஆனால் நாளடைவில் கருஞ் சிவப்பு நிறமாய் மாறும். வேக்காடு சம்பந்தமான வேதனை கடுமையாகவும் அவ்விடங்களில் துடிப்பும் இருக்கும். வேக்காடுள்ள இடங்களோடு நிற்காமல் பொட்டுகளிலும் உடல் முழுவதும் கூட துடிப்பு காணப்படும். பெல்லடொன்னாவின் வேக்காடுகளில் ஏற்படும் குறிகள் கண்கள், தொண்டை, காதுகள், கல்லீரல், மூளை ஆகிய இடங்களில் தெளிவாகத் தென்படும். பொட்டுகளில் உள்ள இரத்தக் குழாய்களில் கடுமையான துடிப்பு இருப்பது ஒரு முக்கிய குறி. வேக்காடு உள்ள சுரப்பியில் ஓர் இடம் நெருப்புப் போல் சிவந்திருக்கும். ஸ்தனங்களின் வேக்காட்டில் அவை கோவைப் பழம் போல் சிவந்து அல்லது சிவப்பான பல கோடுகளுடன் காணப்படும். வேக்காடுள்ள பாகங்கள் மிக வேகமாக வீங்கும். இரத்தப் பெருக்கில் இரத்தம் வெளியாகும் போது அவ்விடத்தில் சூடான உணர்ச்சி இருக்கும்.

வறட்சி:—சளிச் சவ்வுகள் மிகவும் காய்ந்திருத்தல். மூக்கு, வாய், நாக்கு, சுவாசக் குழாய்கள் (வறண்ட



இருமல்) ஆகியவைகளில் வறட்சி. காய்ந்தும் இருக்கலாம் அல்லது காய்ந்த உணர்ச்சி மட்டும் இருப்பதும் உண்டு.

இறுக்கும் உணர்ச்சி:—உடலிலுள்ள துவாரங்களிலும் அத் துவாரங்களிலுள்ள தசைகளிலும் இரத்தக் குழாய்களிலுள்ள வட்ட வடிவமான நார்களிலும் இறுக்குவது போன்ற அல்லது சுருங்கும் உணர்ச்சி உண்டாகும். இச்சுருங்கும் உணர்ச்சி எப்பொழுதும் வட்டமான குணத்தையே கொண்டிருக்கும். கருப்பை ஒரு கயிற்றினால் சுற்றப்பட்டு, விரல்களால் பிடிக்கப்பட்டது போல் இறுக்கப்பட்ட உணர்ச்சி. அதனால் பிரசவமாகத் தாமதம், மாதவிடாயில் போக்கு வெளியாவதில்லை ஆகியவை உண்டாகும் (வலியுள்ள மாதவிடாய்). வயிற்றுக் கடுப்பில் இடைவிடாமல் அமுக்கும் உணர்ச்சியுடன் ஆசன வாயில் இறுக்குதல்; அடிவயிற்றில் இறுக்குவது போன்ற வலியும் இருக்கலாம். இவ்வலி முன் பக்கமாய்க் குனிந்தாலும் அமுக்கினாலும் குறையும். இறுக்கும் உணர்ச்சி விட்டு விட்டுத் தோன்றுவது ஓர் விசேஷக் குறி. பிரசவ சமயத்தில் கருப்பையின் வாய் சூடாகவும் வலியுடனும், ஈரக்கசிவுடனும் விரைப்பாகவும் அடிக்கடி சுருங்கிவிடும். இதனால் குழந்தை வெளியே வருவதற்கு அவசியமான தளர்ச்சி ஏற்படுவதில்லை. கருப்பை விட்டு விட்டுச் சுருங்கி இரத்தப் பெருக்கு தோன்றுதல். கருப்பை ஒழுங்கு இல்லாமல் சுருங்குவதும் இரத்தப் பெருக்கும் உள்ள சமயங்களில் பெல்லடொன்னா அதிக உதவி அளித்தாலும் பிறகு ஆயுத சிகிச்சை தேவைப்படுகிறது. தொண்டை விட்டு விட்டுச் சுருங்குதல், அதனால் விழுங்க சிரமம் ஏற்படும். சில சமயங்களில் திரவ உருவிலுள்ளவைகளைக் கூட விழுங்க முடியாமல்

போகும். முயற்சி செய்தால் பல சமயங்களில் மூக்கில் ஏறி வெளியே வந்துவிடும்.

வலிப்புகள் : துடிப்புகள்; இழுத்தல் :—சுரம், சூடான தலை, சிவந்த முகம், உடம்பு கடுமையாக வளைக்கப் படுதல் முதலிய குறிகளுடன் குழந்தைகளுக்கு உண்டாகும் வலிப்புகள் (சுரம் இல்லாமல் இருந்தால், மெக்னீஷியா பாஸ்). முகத்தில் அதிக இழுப்பு தூங்க ஆரம்பிக்கும் போதும் தூங்கும் போதும் திடீரென்று இழுத்தல்.

இரத்தப் பெருக்கு :—இரத்தம் வெளியாகும் போது சூடாக இருப்பது போல் உணர்ச்சி (மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல், கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு முதலியவை). கருப்பையிலிருந்து வெளிப்படும் இரத்தம் யோனியின் வழியே வெளிவரும் போது சூடாக இருக்கும்; நல்ல சிவப்பு நிறமாகவும் ஏராளமாகவும் இருக்கும். பிரசவத்துக்குப்பின் கருப்பையிலிருந்து வெளியாகும் இரத்தப் பெருக்குக்கு அடிக்கடி தேவைப் படுகிறது. இரத்தம் சில சமயங்களில் நாற்றம் அடிக்கும். இரத்தம் நல்ல சிவந்த நிறத்துடன் கருப்பையிலிருந்து வரும் கட்டிகளுடன் கலந்திருக்கும். அதிகப் புண் உள்ள உணர்ச்சியுடனும் சிறிது அதிர்ச்சியினாலும் உபாதி அதிகரிக்கும் தன்மையுடனும் கருப்பை யிலிருந்து இரத்தப் பெருக்கு வெளிப்பட்டால் அதற்கு பெல்லடொன்னா மிகவும் ஏற்றது சிவந்த முகத்துடன் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல்.

பக்ஷவாத நிலைமைகள்—மூத்திரப் பையின் கழுத்து பக்ஷ வாதத்தால் தாக்கப் படுதல். பாரிச வாதத்தினால் தாக்கப் பட்டது போல் கைகள் கனமாய்த் தோன்றுதல். கைகால்களில் நடுக்கம். தட்டுத்தடுமாறி நடத்தல். முழங்கால்களில் நடுக்கம். உடலின் ஒரு பாகத்தில்



பக்ஷ வாதமும் மறு பாகத்தில் வலிப்புகளும். நாக்கு கனமாக இருக்கும் உணர்ச்சி, நடுக்கம், பக்ஷ வாதப் பல வீனம், இவைகளால் சிரமப்பட்டு வாய் குளறிப் பேசுதல். காது நரம்புகளின் பக்ஷ வாதத்தில் காதுகளில் பல வகையான ஓசைகள், காது செவிடாகுதல். பெல்லடொன்னாவைத் தாய்த் திரவ உருவில் சொட்டுக் கணக்காக உபயோகித்து நாட்பட்ட காது செவிட்டுத் தன்மையை டாக்டர் கூப்பர் குணப்படுத்தியதாக க்ளார்க் குறிப்பிடுகிறார்.

வலது பக்கமே வியாதிகள் அதிகம் :—பெல்லடொன்னா வியாதிகள் பலவும் வலது பக்கத்தையே அதிகமாய்த் தாக்குகின்றன. வலது கண், வலது காது, வலது மார்பு, வலது கால், வலது கை, ஆனால் வாய், தொண்டை பற்றிய வரை இடது பக்கம் ஆகியவை அனேகமாகத் தாக்கப்பட்டிருக்கும். முகத்தில் வலது பக்கம் உள்ள பக்ஷ வாதம்.

## மற்ற குறிகள்

ஆகாய விமானிகளுக்கு ஏற்படும் மூச்சுத் திணறல், தடுக்க உதவும்.—ஸ்கார்லேடினாவில் சருமக் கோளாறு வழுவழுப் பாகவும் நல்ல சிவந்த நிறமாயும் இருத்தல். தொண்டையில் குறு குறு வென்ற உணர்ச்சியுடன் வறண்ட இருமல். தலையைத் தலையணையுள் வைத்துக் குடைதல் (அபிஸ், பெல்லடொன்னா, போடோபில்லம்). முதுகு முறிந்து விடும்போல் முதுகில் வலி (முறிந்து விட்டது போல் தோன்றினால் மெக்னீஷியா கார்ப். கிராபைடிஸ், பாஸ்பரஸ்). இரவில் கண்தெரியாமை (சந்திர வெளிச்சத்தில் கண் தெரியாமை). பாதங்களில் வீக்கம். கால்களில் இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படும் வீக்கம். இரவில் பயங்கரமான கனவுகள்.

வாய் காய்ந்து இருத்தல், ஆனால் தாகம் இருக்காது. நாக்கு சிவந்து, சூடாகவும் காய்ந்தும் ஓரங்களில் சிவந்து, நடுவில் வெள்ளையாக இருக்கும். நாக்கின் முளைகள் பெரியதாகவும் நல்ல சிவப்பு நிறமாகவும் இருக்கும். உமிழ் நீர் ஏராளமாய் உற்பத்தி யாகும். அடிவயிற்றிலுள்ள உறுப்புகள் யோனி வழியாக வெளியே வந்து விடுமோ என்று தோன்றும் அளவுக்கு கீழே அழுத்தும் உணர்ச்சி; காலை வேளையில் அதிகமாய் இருக்கும்; நிற்கும் போதும் நேராய் உட்கார்ந்தாலும் குறையும் (லிலியம் டிக்ரினம், ஸேபியா ஆகியவைகளுடன் ஒப்பிடவும்). வயிற்று வலியில் குறுக்கே செல்லும் பெருங்குடல் பகுதி முன் பக்கமாய்ப் பிதுங்குதல். பல் முளைக்கும்போது ஈறுகள் வீங்கி வாய் காய்ந்தும் சூடாகவும் இருக்கும்.

**உறவு** —ஆரம்பத்தில் **பெல்லடொன்ன** தேவைப் படும் வியாதிகளுக்கு முற்றிய நிலைமையில் **கல்கேரியா கார்ப்** பயன் தரும். தலைவலி, வலிப்புகள் போன்ற அதிக இரத்தம் சேர்ந்து தோன்றும் வியாதிகளில் **பெல்லடொன்ன** முதலில் கொடுத்துக் குணமானாலும் மீண்டும் மீண்டும் அவை தோன்றுமானால் **கல்கேரியா கார்ப்**பைக் கொடுக்க முழுவதும் குணம் ஏற்படும். ஆகவே **பெல்லடொன்ன**வுக்குப் பிறகு வேலை செய்யக் கூடியது **கல்கேரியா கார்ப்**.

---

## பென்ஸாயிக் ஆஸிட்
## (BENZOIC ACID)

**முன்னுரை :**—இவ்வௌஷதத்தின் மிக முக்கியமான குறி மூத்திரத்தில் காணப்படும் ஒரு விதநாற்றமேயாகும். காசம், வயிற்றுப்போக்கு, தானாகவே மூத்திரம் வெளியாகுதல், கீல்வாதம், வாதரோகம், தொண்டைச் சுரப்பிகளில் வேக்காடு, நீர்ச்சுரப்பு வீக்கம், தலைவலி, குழிப்புண்கள், மாதவிடாய் வெளியாகாமை, மேகவெட்டை முதலிய பல வியாதிகளில் இக்குறியும் சேர்ந்து காணப்படுகிறது.



### பொதுவான குறிகள்

**தகுதி :**— கீல் வாதமும் வாத ரோகமும் தோன்றும் உடல் வாகு. இந்த உடல்வாகு மேக வெட்டை அல்லது மேகக் கிரந்தியினால் ஏற்பட்டிருக்கலாம். தனியாகவும் ஏற்பட்டிருக்கலாம். மேக வெட்டையினாலும் மேகக் கிரந்தியினாலும் தாக்கப்பட்டுள்ளவர்கள்.

**மனம் :**— மகிழ்ச்சியற்ற விஷயங்களையே எப்போதும் சிந்தித்தல்; நொண்டியாய் இருப்பவர்களைப் பார்த்தால் உடலைச் சிலிர்த்துக் கொள்வார். எழுதும் போது பல சமயங்களிலும் வார்த்தைகளை எழுதாமல் விட்டு விடுதல். மனச் சோர்வு.

**உடல் :**— வாசனை அறியும் சக்தி குறைந்திருத்தல். முகத்தில் செம்பு போல் நிறமுள்ள பல புள்ளிகள். சோர்வும் அசதியும். வலி திடீரென்று ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு மாறும். (மேகக் கிரந்தி). வியர்வை ஏராளமாய் இருக்கும், ஆனால் அதனால் அனுகூலம் எதுவும் ஏற்படாது. வியர்வையுடன் மன ஏக்கம். இரவில் வியர்வை. வியர்வை நல்ல வாசனையுள்ளதாய் இருக்கும். தலை, முகம், பாதங்கள் ஆகியவைகளில் குளிர்ந்த வியர்வை. நாக்கு மேல் பாகத்தில் பஞ்சுபோலவும் ஆழமான வெடிப்புகளுடனும் பரவிவரும் குழிப்புண்களுடனும் இருக்கும். உடலில் பல இடங்களில் அரிப்பு. இருதயப் படபடப்புடன் நடுங்குதல். ஏராளமான, தண்ணீர் போன்ற, வெள்ளை அல்லது மங்கலான நிறமுள்ள மலம்; சோப்பு நுரை போல் இருக்கும்

(முதல் பாகம்); மலம் அதிக நாற்றம் வீசும், வீடு முழுவதும் நாற்றம் வீசும். குறிப்பிடத்தக்க மூத்திரம் (குறிப்பிடத்தக்க குறிகள் என்னும் தலைப்பைக் கவனிக்கவும்).

**உபாதி கூடுதல் :**—வியாதியஸ்தருக்கு எப்பொழுதும் குளிரும் உணர்ச்சி; திறந்த இடங்களிலும் உடம்பைத் திறந்து வைத்திருந்தாலும் குறிகள் அதிகமாகும். பல குறிகள் அசைவினால் அதிகமாகும். ஆனால் தலைவலி இளைப்பாறும்போது சௌகரியம் ஆகும். மலம் போகுமுன் மயிர்க் கூச்சல் அல்லது உடலில் சில்லிப்பு உண்டாகும்.

**உபாதி குறைதல் :**— சூட்டினால், ஏராளமான மூத்திரம் வெளியானால், கீல் வாயு வலிகளும் அதனுடன் சேர்ந்து வரும் தலை வலி, குளிர் காற்று ஒத்துக் கொள்ளாமை ஆகிய குறிகளும் மூத்திரத்தின் அளவு குறையும்போது அதிகமாகவும் மூத்திரம் ஏராளமாகப் பிரியும் போது குறைவாகவும் இருக்கும்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

**நாற்றம் :**— மூத்திரம் கடுமையான வாடையுடன் நாற்றம் அடிக்கும். பொதுவாகக் கறுப்பாகவும் இருக்கும். மனித மூத்திரத்தைப் போலவே அதிக அளவில் நாற்றம் இருக்கலாம். அல்லது குதிரை மூத்திரம் போல அதிக நாற்றம் வீசலாம். மூத்திரம் வெளியாகும் சமயத்திலேயே காணப்படும் துர்நாற்றத்தைத்தான் இப்பொழுது குறிப்பிடுகிறோம். வெளிப்பட்டுப் பல நாழியாகிவிட்ட மூத்திரத்தைப் பற்றியதல்ல. வெளியாகும் போதே அம்மோனியாவைப்போல் கடுமையான நாற்றமுள்ள மூத்திரத்துக்கும் இவ்வௌஷதம் ஏற்றதே. இச்சமயத்தில் மூத்திரத்தின் நிறம் அதிகமாய் இருக்கும். மூத்திரத்தின் நிறம் அவ்வளவு முக்கியமானதல்ல; அது கறும்



பழுப்பு நிறமாகவும் அதிக நாற்றம் உள்ளதாகவும் இருந்தால் பென்ஸாயிக் ஆஸிட் தகுந்தது. மலமும் மூத்திர நாற்றம் வீசும். வியாதியஸ்தர் உடம்புகூட மூத்திர நாற்றம் வீசலாம்.

**மாறி வருதல் : இடம் மாறுதல்:**— கை கால்களிலுள்ள வாத வலிகள் மறைந்தவுடன் இருதயம் தாக்கப்படும். இருதயக் கோளாறு மறைந்தவுடன் கை கால்களில் ஏற்படும். விளக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால் வாதம் கை கால்கள், கை விரல்கள், கால் விரல்கள், முழங்கால் முதலிய இடங்களைப் பிடித்துக் கொண்டவுடன் இருதயக் கோளாறு நீங்கிவிடும். ஆழ்ந்த தூக்கமும் பல நாட்கள் சேர்ந்தாற் போல் சிறிதளவு தூக்கங்கூட வராமலிருப்பதும் மாறி மாறி வரும். எல்லா எலும்பு மூட்டுகளையும்விட இவ்வௌஷதத்தில் முழங்கால் மூட்டுதான் அதிகம் தாக்கப்படும். முழங்கால்களில் வீக்கம், நடக்கும் போதும் கால்களை நீட்டும் போதும் மடக்கும் போதும் முழங்காலில் ஒடியும் ஓசை. வலிகள் ஓயாமல் இடம் மாறிக் கொண்டிருக்குமென்றாலும் இருதயத்தைப் பற்றிய வலிகள் மட்டும் இடைவிடாமல் இருந்து கொண்டிருக்கும். கடைசியாக கீல்வாயுக் குறிகளும் மேலே விவரிக்கப்பட்டுள்ள மூத்திரக் குறிகளும் மாறிமாறி வரும். பல காலமாய் இருந்து வரும் எலும்பு வீக்கங்களில் வலி உண்டாகுதல். வலி குறைந்தவுடன் இருதயப் படபடப்பு உண்டாகி மீண்டும் பழயபடி வலி அதிகமாகும் போது குறையும்.

**அறிப்பு :**— பல இடங்களில் அறிப்பு; சொறியும் போது ஆனந்தமாய் இருக்கும் ஆனால் பிறகு எரிச்சல் உண்டாகும். மூக்குத் துவாரங்களின் நடுவிலுள்ள

குருத்தெலும்பு, முகவாய்க்கட்டை; மானியின் கொண்டை ஆகிய இடங்களில் அறிப்பு.

**முண்டுகள்: சாக்கட்டிபோன்ற பொருள் தோன்றுதல்:—** கீல் வாயுவில் தாக்கப்பட்ட மூட்டுகளைச்சுற்றி சாக்கட்டி போன்ற பொறுக்குகள் உண்டாகும்; கைகளிலும் கால்களிலும் கீல்வாயு சம்பந்தமான முண்டுகள்; மூட்டுகளில் ஓடியும் வலி.

**பக்கம்; திசை :—** பல குறிகள் இடமிருந்து வலமும் கீழ் இருந்து மேலும் தாவும், குறிப்பாகக் கீல்வாயு, வாத ரோகம் ஆகியவைகளில்.

## மற்ற குறிகள்

குழந்தை எப்பொழுதும் தன்னைத் தூக்கிக் கொண்டே இருப்பதை விரும்பும், கீழே விடக் கூடாது என்று அழும். **கிழவர்களுக்கு நாற்றமுள்ள மூத்திரம் சொட்டுச் சொட்டாக ஒழுகுதல்.** மேக வெட்டையை அமுக்கிய பிறகு மூத்திரப் பையில் நீர்க் கோர்வை உண்டாகித் தண்ணீரும் சளிப் பொருளும் மூத்திரத்துடன் வெளிப்படுதல். மேக வெட்டையை அமுக்கியதால் பல நாட்கள் நீடித்திருக்கும் வறண்ட இருமல். வலது முழங்காலில் வீக்கமும் வலியும். தொண்டையில் வீங்கியிருப்பது போல் அல்லது இறுக்குவது போன்ற உணர்ச்சி. இருமியவுடன் பச்சை நிறமுள்ள கோழை வருதல். வாத ரோகத்துடன் காசம். மேகக் கிரந்தி சம்பந்தமுள்ள புள்ளிகளும் அடையாளங்களும்.

**உறவு:—** கீல் வாயுவில் **கோல்சிகத்தினால்** குணம் ஏற்படாதபோது இது உபயோகப்படும். மேக வெட்டையில் கோபைபாவை அளவு மீறி உபயோகித்தால் உண்டாகும் கெடுதல்களைப் போக்கும்.

***ஒப்பிடுதல் :—*** மேகவெட்டையைத் தடைசெய்தால் அம்மோனியா போல் நாற்றமுள்ள மூத்திரம் வெளியானால் **கோகா** உபயோகப்படும். நீரிழிவில் இனிப்பான மூத்திரத்துக்கு **அர்ஜண்டம் மெட்டாலிகம்.** குதிரை மூத்திரம் போன்ற மூத்திரத்துக்கு **நேட்ரம் கார்ப், ஸைட்ரிக் ஆஸிட், பென்ஸாயிக் ஆஸிட்.** மேகக் கிரந்தியில் மூத்திரம் வெளியாகும் போதே அதிக நாற்றம் இருந்தால்—**நைட்ரிக் ஆஸிட்.**



---

# பெர்பெரீஸ் வல்கெரீஸ்
## (BERBERIS VULGARIS)

**முன்னுரை:-** இவ்வௌஷதம் தேவைப்படும் வியாதிகள் மிகக் கொஞ்சமே. ஆயினும் மிக முக்கியமான ஔஷதங்களில் ஒன்று என்பதில் சந்தேகமே இல்லை.

மிக வேகமாய் வேலைசெய்கிறது. மூத்திரக் காய்கள் பற்றிய வியாதிகளில் மின்னல் வேகத்தில் அது வேலை செய்திருப்பதை என் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

கீழ் முதுகுப் பகுதியையே பெரும்பாலும் தாக்குகிறது. அதாவது மூத்திரக்காய்கள், கல்லீரல், மூத்திரப்பை, கருப்பை, எலும்பு மூட்டுகள், விரைகள், இந்திரிய நரம்பு ஆகியவை அனேகமாகத் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

பித்தம், பித்தக்கற்கள் இவைகளால் உண்டாகும் வலிகளில் அடிக்கடி தேவைப் படுகிறது.

## பொதுவான குறிகள்.

**தகுதி :—** பித்தம் கூடுதலாக உள்ளவர்கள். மூத்திரக் காய்கள், மூத்திரப்பை பற்றிய குறிகளே பிரதானமாக உள்ள கேசுகள். கீல் வாயுவிலும் வாத ரோகத்திலும் கல்லீரலையும் மூத்திரக் காய்களையும் பற்றிய கோளாறுகள் சேர்ந்திருக்கும். (இருதயம் அதிகமாய்த் தாக்கப் பட்டால், **பென்ஸாயிக் ஆஸிட்**). உடலிலும்

மனதிலும் தளர்ச்சி யடைந்தவர்கள். சதைப் பிடிப்பான உடலும் ஒழுங்கான முறையில் வாழ்க்கை நடத்துவதும் இருந்தாலும் சிறிது நேரம் கூட சேர்ந்தாற் போல் வேலை செய்ய முடியாது (வி. போரிக்). நீண்ட காலமாகக் கீல் வாயுவினால் தாக்கப் பட்டுள்ளவர்கள். இளமைப் பருவத்திலேயே கிழடுதட்டிச் சருமம் சுருங்கிய ஆண், பெண்கள் (கெண்ட்). வியாதி வேர் ஊன்றிவிட்டது என்று அறிவிக்கும் முகக் களை. முகம் வெளுத்துக் கன்னங்கள் ஒட்டிக் கண்கள் குழிந்து சுற்றிலும் நீலவளையங்களுடன் இருத்தல். "சுவாச கோச க்ஷயம் உள்ள நிலைமைகள்" (கெண்ட்).

**மனம் :—** அலட்சியமாகவும், அமைதியாகவும் கவனம் இல்லாமலும் இருத்தல். பயந்து கொள்ளும் சுபாவம். மனதினால் வேலை செய்தால் களைப்புத் தோன்றுதல், குறிப்பாகக் காலை வேளைகளில். ஞாபக சக்தி குறைவாய் இருத்தல், மறதி. அடிக்கடி அழும் குணத்துடன் மன ஏக்கம்.

**உடல் :—** அதிக உடல் சோர்வு, நடந்தாலும் அல்லது நீண்ட நேரம் நின்று கொண்டே இருந்தாலும் அதிகமாகும். அல்ப வேலையினாலும் களைப்புத் தோன்றும். உடம்பில் நடுக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்குப் பலவீனம். வண்டியில் சிறிது நேரம் இருந்தால் மயக்கம் வருதல். தலை முழுவதும் ஒரு குல்லாயினால் இறுகி அழுத்தப் பட்டிருக்கும் உணர்ச்சி. தலை நிமிஷத்துக்கு நிமிஷம் பெரியதாகி வருவது போல் தோன்றும். காலை உணவு உட்கொள்ளுமுன் குமட்டல். உணவு உட் கொண்ட பிறகு குமட்டல் குறையும். சீரண சக்தி மிகவும் குறைவாய் இருத்தல். பகலிலும் பகல் உணவு உட் கொண்ட பிறகும் தூக்கக் கலக்கமாய் இருத்தல். புணர்ச்சியில் ஆசை



குறைதல் பெண்களுக்குப் புணர்ச்சி இன்பம் தாமதமாக ஏற்படும் அல்லது புணர்ச்சியில் கடுமையான வெறுப்பு; புணர்ச்சி செய்தால் வலி உண்டாகும்; புணர்ச்சிக்கு உட்பட்ட பிறகு உடல் களைப்பு. எல்லா விஷயங்களும் வியர்வையைத் தோற்றுவிக்கும்.

**உபாதி குறைதல் :—** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—எல்லா வலிகளும் அசைவினால் அதிகமாகும். வலிகள் அமுக்கினால் அதிகரிப்பதில்லை. ஆனால் படுத்தாலும் உட்கார்ந்தாலும் அதிகமாகி நின்று கொண்டிருந்தால் குறையும். கீழ் முதுகுவலியில் மிக அதிகமான வலி இருப்பதால் அதிர்ச்சியையோ அல்லது வண்டியிலிருந்து கீழே அடி எடுத்து வைப்பதையோ தாங்கமுடியாது. மூத்திரக் கோளாறுகளும் ஆணின் பிறப்பு உறுப்புகள்பற்றிய கோளாறுகளில் பலவும் அசைவினால் அதிகமாகும் அல்லது ஏற்படும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**வலிகள் :—** இவ்வௌஷதத்தின் வியாதிக் குறிகளைத் தனித் தனியாகப் பிரித்துக் கூறுவது சாத்தியமாய் இல்லை. ஒவ்வொன்றும் வலியுடன் நெருங்கிய உறவு உள்ளதாக இருக்கிறது. விசேஷமாகக் கீழ் முதுகு, மூத்திரக்காய், மூத்திரப்பை, மூத்திரக் குழாய், கல்லீரல் ஆகியவைகளில் உள்ள வலிகளை ஒட்டியதாகவே இருக்கிறது. கருப்பை, சினைப்பைகள், யோனி, விரைகள், இந்திரிய நரம்புகள் ஆகியவைகளிலும் வலி இருக்கும். எலும்பு மூட்டுகளில் கூட வலி இருக்கிறது.

பெர்பெரீஸ் வலிகளைப் பிரித்துப் பார்த்தால் 1. பல விதமான வலிகள், கிழிக்கும் வலிகள், வெட்டும் வலிகள். குத்தும் வலிகள், எரிச்சலுள்ள வலிகள். கொப்பளம் விடுவது போல் குத்தும் வலிகளும்

இருக்கும். அல்லது உடலில் பல இடங்களில், குறிப்பாக மூத்திரக் காய்களில், கொப்பளம் உண்டாவது போல் உணர்ச்சி (மெதாரினம்). 2. வலிகள் அங்கு மிங்கும் தாவிக் கொண்டே இருக்கும். தோன்றுவதும் மறைவதுமாய் இருக்கும். வலி தோன்றும் போது வியாதியஸ்தர் உறத்த குரலில் ஊளையிடுவார். 3. வலிகள் குறிப்பாக எந்தப் பகுதியிலும் பரவுவது கிடையாது. மேலே தாவலாம். கீழே இறங்கலாம் அல்லது மேலும் கீழும் சேர்ந்தாற் போல் பரவலாம். 4. பரவும் வலிகள். குறிப்பாக ஓர் இடத்தில் வலி ஏற்பட்டு அங்கிருந்து பல இடங்களில் பரவும்.

இப்பொழுது கீழ் உள்ள விசேஷக் குறிகளைக் கவனிக்கலாம்.

**மூத்திரக் காய்களில் வலி:**—ஒரு மூத்திரக் காயிலோ அல்லது இரண்டு காய்களிலுமோ குத்தும், கிழிக்கும் அல்லது துடிப்பது போன்ற வலிகள், நன்றாக அழுத்தினால் அதிகமாகும், மூத்திரக் காய்களிலிருந்து மூத்திரப்பை அல்லது மூத்திரக் குழாய் வரை பரவி இருக்கும்; அடிக்கடி மூத்திரம் கழிக்க உணர்ச்சி ஏற்படும்.

**பித்தக் கற்களினால் வலி:**—பலமான குத்து வலிகள். (இவ்வித வலிகள் கீல்வாயு உள்ளவர்களுக்குத் தோன்றும். அத்துடன் இவ் வௌஷதத்தின் மூத்திரக் குறிகளும் கல்லீரல் குறிகளும் சேர்ந்து காணப்படும்). "பித்தப்பைப் பகுதியில் பாய்வது போலவும் அமுக்குவது போலவும் எரிச்சலுடனும் உள்ள வலிகள்; வலி விட்டு விட்டு வரும்; ஒரு சிறு இடத்திலேயே காணப்படும்; ஏராளமான வண்டலுடன் குழ குழப்பான கறுப்பு நிறமுள்ள மூத்திரம் முதுகிலும் சப்பைகளிலும் வலியுடன் வெளிப்படும்" (லிலியந்தால்),

**கல்லீரல் வேக்காடு,**—"கல்லீரல் பகுதியில் குத்து



வலிகளும் அமுக்கும் உணர்ச்சியும். கல்லீரலில் பலமாகக் கிள்ளுவது போல் வலிகள், திடீரென்று கடுமையாகவும் தோன்றிச் சில சமயங்களில் வியாதியஸ்தர் மூச்சு விடவும் முடியாமல் முன்பக்கமாய்க் குனியச் செய்யும்; முகம் சிவந்து விடும்" (லிலியந்தால்). களிமண் போல் நிறமுள்ள மலம்.

## மற்ற குறிகள்.

முதுகிலிருந்து வயிற்றுக்கும் அல்லது வயிற்றிலிருந்து முதுகுக்கும் தாவும் வலிகள், அடிவயிறைச் சுற்றிக் கொண்டு மூத்திரக் காய்களுக்குச் செல்லும். மஞ்சட் காமாலையுடன் பித்தக் கற்களினால் உண்டாகும் வலி. ஆசனப் பவுத்திரம். ஆப்பரேஷன் செய்து பவுத்திரத் துவாரம் மூடிய பிறகு கடுமையான குத்து வலிகளும் மற்ற கோளாறுகளும் தோன்றுதல் (சிறு இருமல், சுவாச கோசக் கோளாறுகள்). (கல்கேரியா பாஸ், ஸைலிஷியா). இடது மூத்திரக் காயில் கடுமையான வெட்டும், குத்தும் வலிகள் ஆரம்பித்து மேல் மூத்திரக் குழாய், மூத்திரப்பை, கீழ் மூத்திரக் குழாய் ஆகியவைகளில் படிப்படியாகத் தோன்றும் (டபாகம்.—வலது மூத்திரக் குழாய்—ஹைகபோடியம்). மூத்திரக் காய்களில் வலி, இடது பக்கம் அதிகமாய் இருக்கும். மூத்திரக் காய்ப் பாகங்களில் எரிச்சலும் புண் உள்ள வலியும்.—விரைப்பும் மத மதப்பும் இருத்தல்—மூத்திரம் வெளிப்படும் போது தொடைகளிலும் சப்பைப் பாகங்களிலும் வலி, இந்திரிய நரம்புகளில் இழுக்கும் அல்லது கிழிக்கும் வலி, விரைகள் வரை பரவி இருக்கும். வலியுள்ள மூத்திரக் குறிகளுடன் சேர்ந்து காணப்படும் கருப்பைக் கோளாறுகளும் வெள்ளை ஒழுக்கும்.-மூத்திரம் கழிக்கும் போதும் அமுக்கும் உணர்ச்சி. மூத்திரப் பையில் எரிச்சலுள்ள உணர்ச்சி. மூத்திரம் கழிக்கும்

போதும் கழித்த பிறகும் மூத்திரக் குழாயில் எரிச்சலுடன் வலி ஆனால் மற்ற சமயங்களில் தான் அனேகமாக எரிச்சலும் வலியும் இருக்கும். அதிக வலியுடன் உள்ள மாதவிடாயில் உடம்பில் சில்லிப்புடன் வலி நாலா பக்கங்களிலும் பரவி, கீழே தொடைகள், கால் ஆடு தசை முதலியவைகளுக்கும் பரவும். போக்கு மிகக் கொஞ்சமாகவும் வழக்கத்தை விடக் குறைவான நேரமும் பழுப்பான ஊனீர் அல்லது சளி அல்லது கறுப்பான, நாற்றமுள்ள சளி போலவும் இருக்கும். மூத்திரம் வெளியாகும் போது குழ குழப்பாகவும் ஏராளமான, மஞ்சள் நிற முள்ள வண்டல் தேங்குவதாகவும் இருக்கும்; கெட்டியான, குழ குழப்புள்ள சளியுடன் இரத்தம் போல் சிவப்பாய் இருக்கலாம். பச்சையாகவும் இருக்கலாம். விரல் எலும்பு மூட்டுகளில் வீக்கத்துடன் விரல் நகங்களில் நரம்பு சம்பந்தமான வலி, தோள்பட்டைகள், கைகள், விரல்கள், கால்கள், பாதங்கள் ஆகியவைகளில் வாத சம்பந்தமான வலிகள். கடுமையான சோர்வுடன் முதுகு வலி. உடலில் பல இடங்களில் குளிர்ந்த தண்ணீரைத் தெளித்தது போல் குளிர்ந்த உணர்ச்சி.

உறவு:—பிரயோனியா, காலி பைக்ரமிகம், ரஸ் டாக்ஸ், ஸல்பர் ஆகியவைகளுக்குப் பிறகு நன்றாய் வேலைசெய்கிறது. பெர்பெரீஸ் கொடுக்கப்படும் சமயத்தில் அவ்வப்போது லைகபோடியத்தைக் கொடுத்து வந்தால் வியாதி சீக்கிரம் குணமாகும் என்று சொல்லப்படுகிறது.

———



# போரக்ஸ்

## (BORAX)

முன்னுரை:—இவ் வௌஷதத்தின் மிக முக்கியமான குறிகள் மூன்று. அவைகளில் முதன்மையானது கீழ்ப்பக்கமான அசைவுகளைத் தாங்கமுடியாது என்பதாகும். அதற்கடுத்தபடியான குறி, எவ்வளவு லேசான ஓசையாய் இருந்தாலும் அது திடீரென்று ஏற்பட்டால் உடனே உடம்பைத் தூக்கிப் போடுதல் அல்லது பயத்தை உண்டாக்கும். கடைசிக் குறி, சளிச்சவ்வுகளில் வெண்மையாள குழிப் புண்கள்.

### பொதுவான குறிகள்

தகுதி:—இது பெரும்பாலும் குழந்தைகளுக்கே உபயோகமாகும் ஔஷதம். முக்கியமாகப் பல் முளைக்கும் காலத்திலும் அதைவிடத் தாய்ப்பால் குடிக்கும் சிசுக்களுக்கும் ஏற்படும் கோளாறுகளுக்குத் தேவைப்படுகிறது. "சதை மிருதுவாகவும் கொளகொளப்பாகவும் வளருதல். சருமத்தில் சுருக்கங்கள்."

மனம்:—1. கீழ்ப்பக்க அசைவுகளைத் தாங்கமுடியாது. அனேகமாக எல்லா வியாதிகளிலும் இதுவே முக்கிய குறியாகக் காணப்படும். கீழே படுக்கையில் படுக்கப் போடும்போதும் உயரமான இடங்களிலிருந்து கீழே கொண்டுவரும்போதும் குழந்தை திடீர் என்று குதித்து அதன் கைகளை உயரத்தூக்கிக் கவலைதோன்றும் முகத்துடன் கதறும். தூங்கிக்கொண்டிருக்கும்போது கீழ்ப்பக்கம் கொண்டுவந்தாலும் இப்படியே செய்யும். தூளியிலோ, தொட்டிலிலோ, போட்டு ஆட்டினால் பயந்து கொண்டு அலறும் வியாதியஸ்தருக்கு மேலிருந்து கீழே இறங்கப் பயம், ஊஞ்சல்போன்றவைகளில் ஆடமுடியாது. மலையிலிருந்து கீழே இறங்கமுடியாது. குதிரை சவாரி செய்வதும் பயத்தை உண்டாக்கும். வண்டிப் பயணம் செய்த

பிறகு உண்டாகும் தலைச்சுற்றலுக்கும் மற்ற கோளாறுகளுக்கும் போரக்ஸ் ஏற்றது. அதுவும் வியாதியஸ்தர் வண்டியின் பின்பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பயணம் செய்திருந்தால் போரக்ஸ் மிகவும் நன்மைதரும். வண்டிப் பயணத்தினால் தோன்றும் கோளாறுகளுக்கு காக்குலஸ் மிக உபயோகமுள்ளது என்று புகழ் பெற்றிருந்தாலும் போரக்ஸையும் மறந்துவிடக்கூடாது. 2. பயப்படும், திடுக்கிடும் குணம்: திடீரென்று ஏற்படும் ஓசையைத் தாங்க முடியாது; உதாரணமாக எங்கேயோ தூரத்தில் ஒரு வெடி வெடித்தால் அவரைத் திடுக்கிடச் செய்யும். நெருப்புக் குச்சியைப் பற்ற வைத்தல், கதவின் தாழ்ப்பாள் செய்யும் ஓசை, காகிதத்தைக் கசக்குதல், ஆடைகளின் சலசலப்பு, இருமல், தும்மல் இன்னும் இவை போன்ற மிக அல்பமான ஓசைகள் கூட வியாதியஸ்தரைப் பயப்படவும் திடுக்கிடவும் செய்யும். குழந்தைகள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருககும், ஆனால் திடீரென்று விழித்துக்கொண்டு ஒரு விதக் காரணமும் இல்லாமல் தொட்டில் சட்டத்தை இறுகப் பிடித்துக்கொண்டு அலறும். 3. ஆழ்ந்து யோசனை செய்தால் குமட்டல் உண்டாகும். தன் வேலையைப் பற்றி ஆழ்ந்து யோசனை செய்து கொண்டிருக்கும் போது கடுமையான குமட்டல் ஏற்படும். 4, வேதனை. உடம்பு முழுவதும் வேதனை, இதனால் ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்து இருக்க முடியாது. இக்குறிகள் யாவும் அளவு கடந்த பயத்தினால் தோன்றுகின்றன.

உடல்:— அல்ப ஓசையினாலும் விழித்துக் கொள்ளும் சிறு குழந்தைகள், எப்பொழுதும் அழுது கொண்டே இருக்கும், சரியான வளர்ச்சி ஏற்படுவதில்லை. போதிய ஊட்டம் இல்லாமை; சதை தொய்ந்து இருக்கும், உடம்பு இளைத்துவிடும் (கொள கொள வென்ற சதைப் பிடிப்புடன் இருந்த குழந்தை இளைத்துவிடும்). வெளுத்தக் களிமண்ணைப்போல் நிறமுள்ள முகம். உடம்பு வெளுத்து அல்லது நிறம் மாறி இருக்கும். முகம் உப்பி இருக்கும். வாய், உள்ளங்கைகள், தலை ஆகிய இடங்களில் சூடுள்ள குழந்தைகள். நாக்கிலும் கன்னங்களின் உட்புறங்களிலும் வெள்ளையான குழிப் புண்கள். குழந்தைகளுடைய வாயின் மேற் கூரையில் சுருக்கங்கள் இருப்பதுபோல் தோன்றும்; தாய்ப்பால் குடிக்கும்போது அழும். மூத்திரம் போகுமுன் குழந்தைகள் கதறுதல். மூத்திரம் சூடாகவும் நாற்றத்துடனும் வெளிப்படும். தூங்க ஆரம்பித்தவுடன் கால்கள் தூக்கிப்போடும். பசி இல்லாமை; ஜீரணம் ஆகாது. பலம் இல்லாமை, குறிப்பாக எலும்பு மூட்டுகளில். புளிப்பான பொருள்களில் விருப்பம். சிலந்தி வலை ஒட்டிக்கொண்டிருக்கும் உணர்ச்சி.

உபாதி கூடுதல்: — கீழ்ப்பக்கமான அசைவுகளால்; திடீரென்று ஏற்படும் ஓசைகளால்: ஈரக்கசிவும் குழப்பமான சீதோஷ்ண நிலைமையுள்ள பருவகாலங்கள், உணவு உட்கொள்வதற்கு முன்பும் உட்கொண்ட பிறகும்.

உபாதி குறைதல்:— இரவு 11 மணிக்கு, "இரவு 11 மணிவரை மன ஏக்கம் அதிகமாய் இருக்கும். பைத்தியம் பிடித்துள்ளவர்களுக்கு இரவு 11 மணிவரை பரபரப்பு இருக்கும்; பிறகு தணியும் (கடுமையான புயலுக்குப்பின் தோன்றும் அமைதியைப் போல).

### விசேஷக் குறிகளின் விளக்கம்

உணர்ச்சிகள் அதிகரித்தல்:— எல்லா மனக்குறிகளும் அதிகரித்த உணர்ச்சியின் விளைவுகளே. சருமமும் வியாதி பிடித்ததுபோல் தோன்றி இந்த முக்கிய குறி

யுடன் சேர்ந்து கொள்வதுபோல் காணப்படுகிறது. ஒவ்வொரு காயமும் தப்பாமல் சீழ்ப்பிடிக்கும்; இலகுவில் ஆறாது. எண்ணெய் விளக்கு வெளிச்சத்தைக் கண்களால் பார்க்க முடியாது.

**வெண்மையான குழிப் புண்கள் :**—சளிச் சவ்வுகளில் வெண்மையான குழிப்புண்கள், நாக்கிலும் கன்னங்களின் உட்புறங்களிலும் வெண்மையான குழிப்புண்கள்; உணவு உட்கொள்ளும்போது இரத்தப்பெருக்கு ஏற்படலாம்.

**சுருக்கங்கள் :**— சருமம் சுருங்குதல், சிறு குழந்தைகளின் வாயின் மேல்கூரையில் சுருக்கங்கள் தோன்றி தாய்ப்பால் குடிக்கும்போது அலறுதல்.

**புண் உள்ள வலி:**—குழிப்புண்களில் அதிக வலி உண்டாவதினால் தாய்ப்பால் குடிக்க முடியாமை; குழந்தை பால் குடிப்பதை நிறுத்திவிட்டு வலியினாலும் வேதனையினாலும் கதறி அழும். அல்லது தாய்ப்பால் குடிக்க அடியோடு மறுக்கும். மூத்திரக் குழாயில் புண் உள்ள வலி (சளிச்சவ்வில் வேக்காடு) அதனால் மூத்திரம் கழிப்பதற்கு முன் குழந்தை அழும் (அதாவது மூத்திரம் கழிக்க உணர்ச்சி தோன்றியவுடன் அதனால் ஏற்படக் கூடிய வலியை நினைத்துப் பயந்து குழந்தை அழவாரம்பிக்கிறது). அழுகையுடன் அடிக்கடி மூத்திரம் வெளிப்படுதல். மூத்திரம் கழித்தபிறகு மூத்திரக் குழாயின் வெளித் துவாரத்தில் புண் இருப்பதுபோல் வலி. அதிகமான புண் உள்ள உணர்ச்சி, வலி, நுனி மூக்கில் வீக்கம் ஆகியவைகளுடன் மூக்குத்துவாரங்கள் புண்ணாய் இருத்தல். கண்களின் வேக்காடு, குறிப்பாக கண்களின் உள் மூலைகளில்; அத்துடன் இமைகளின் ஓரங்களில்



தோல் உறிவும் இருக்கும்; இரவில் இமைகள் ஒட்டிக் கொள்ளும்.

**விரோத குண முள்ள குறிகள் :**—குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களையும் போரக்ஸ் விட்டு விடுவதில்லை. குழந்தை பால் குடிக்கும்போது வலி உண்டாகும்; குடித்த பிறகு வலிக்கும். குழந்தை பால் குடித்த பிறகு தன் ஸ்தனங்களைக் கைகளால் இறுக அமுக்க வேண்டி வரும்; ஏனென்றால் பால் இல்லாத காலி ஸ்தனங்களில் வலி உண்டாகிறது. தாயின் பாலையும் போரக்ஸ் கெடுக்கும். அது மிகவும் கெட்டியாகவும் கெட்ட ருசியுடனும் இருக்கும். குழந்தை தாய்ப் பாலை வெறுக்கும் (பால் கெட்ட சுவையாய் இருப்பது காரணம்). குழந்தை குடிக்கும்போது அந்த ஸ்தனத்தில் வலி இல்லாவிட்டாலும் மறு பக்க முள்ள ஸ்தனத்தில் வலி தோன்றும். குழந்தை பால் குடித்த பிறகு ஸ்தனங்கள் காலியாய் இருக்கும் உணர்ச்சி.

**சூடு :**—வாய், தலை, உள்ளங்கைகள், தொடைகள், யோனி ஆகிய இவை போன்ற சிறிய சிறிய இடங்களில் மட்டும் சூடு உண்டாகுதல். குழந்தையின் தலை சூடாய் இருக்கும். வெள்ளை ஒழுக்கு மிகவும் சூடாய் இருத்தல்.

**கஞ்சி போன்ற கழிவுகள் :**— வெள்ளை ஒழுக்கில் போக்கு முட்டையின் வெள்ளை அல்லது கஞ்சியைப் போல் சூடான தண்ணீர் வெளியாகும் உணர்ச்சியுடனும் வெளிப்படும். மாதவிடாய்களுக்கு இடையிலே தோன்றும் (இரண்டு வாரங்கள் இருக்கலாம்). (போவிஸ்டாவில் மாதவிடாய்க்குச் சில நாட்கள் முன்னதாகவோ அல்லது பிறகோ வெள்ளை ஒழுக்கு தோன்றும்.

**பச்சை நிறமுள்ள கழிவுகள் :**— மூக்கினுள்ளே பச்சை நிறமுள்ள கெட்டியான சளி அடைந்திருக்கும். குழந்தை

களுக்குப் பச்சை நிறம் உள்ள குழகுழப்பான மலமுள்ள வயிற்றுப் போக்கு.

படியாத மயிர் :— இமைகளில் உள்ள மயிர்களும் மற்ற மயிர்களும் அவை இருக்க வேண்டிய ஒழுங்கில் இருப்பதில்லை. மயிர்கள் ஒன்றோடொன்று பின்னிக் கொள்ளும். கட்டைபாய்ந்து நுனியில் பிளந்துகொள்ளும், ஒட்டிக்கொள்ளும். இவ்விதம் உள்ள மயிர்களைக் கத்தரித்துவிட்டால் மீண்டும் அப்படியே உண்டாகும். வழுவழுவென்று வார முடியாது. (ப்ளுவாரிக் ஆஸிட், லைகபோடியம், ஸோரினம், ட்யுபர்குலினம்). இமைகளின் மயிர் கண்ணின் உட்புறமாக வளர்ந்து கண்ணில் வேக்காடு தோன்றச் செய்யும்.

## மற்ற குறிகள்

மூக்கின் நுனி சிவந்து மின்னுதல்; இளம் பெண்களுக்கு மூக்கு சிவத்தல். பாசி போன்ற நிறமும் மணமும் உள்ள கோழையுடன் இருமல், கோழையுடன் இரத்தமும் கலந்திருத்தல் (சுவாசகோசக் கோளாறுகள், சுவாச கோச க்ஷயம்), பிறந்த நாளிலிருந்தே உடல் நீலமாக உள்ள குழந்தை. மானியின் நுனித்தோல் முழுவதும் பறங்கிப் புண்கள் நிறைந்து இருத்தல். இமைகளில் சிறு சிறு கொப்பளங்கள். கனமான பொருள்களைத் தூக்கியதால் வயிற்றில் வலி தோன்றி கீழ் முதுகுக்கும் பரவி வியாதியஸ்தரை எந்தக் காரியத்துக்கும் தகுதியற்றவராய் ஆக்குதல். வலியுள்ள, சதைத் துணுக்குகள் கலந்த போக்குள்ள மாதவிடாயில் கருப்பை வெளியே தள்ளப்படுமோ என்ற உணர்ச்சியுடன் போக்கு வெளிவருவதற்கு முன்பும் வெளியாகும் போதும் பிரசவ வலியை ஒத்த வலிகள். சதைத் துணுக்குகள் வெளியானவுடன்



வலி குறையும். (போரக்ஸின் பயக்குறிகள் இருந்தால் சந்தேகமில்லாமல் தேர்ந்தெடுக்கலாம்.

உறவு :—அஸடிக் ஆஸிடுக்கு முன்னதாகவோ அல்லது பிறகோ இவ் வௌஷதத்தைக் கொடுக்கக்கூடாது.

---

# ப்ரோமியம்
## (BROMIUM)

முன்னுரை :—ப்ரோமியம் குரல் வளையையும் மூச்சு விடும் வேலையையும் தாக்குகிறது. இதற்கு அடுத்தபடியாக சுரப்பிகளைத் தாக்குகிறது, முக்கியமாகக் காதுப் பக்கமுள்ள சுரப்பிகள்.

## பொதுவான குறிகள்.

தகுதி :—மங்கிய நீல நிறக்கண்களும், மங்கிய மஞ்சள் பழுப்பு நிறமுள்ள தலைமயிரும், அடர்த்தியான மயிர் இல்லாத புருவங்களும், சிவந்த நிறம், பூப் போன்ற மென்மை ஆகியவைகளுள்ள சருமமும் உடையவர்கள். திடீர் வியாதிகளிலும் நிலைமைகளிலும் சிவந்த உடலும் கன்னங்களும் உள்ள பெண்களிடம் ப்ரோமியம் சிறப்பாக வேலை செய்கிறது. உடல்வாகை அனுசரித்து ப்ரோமியம் கொடுக்கப்பட வேண்டியதாக இருக்கும் சமயங்களில் வியாதியஸ்தர் உடலும் முகமும் கறுத்து கிழட்டுக்களை தட்டிவிடும். சுரப்பிகளில் வீக்கமும் க்ஷயரோகம் ஏற்படும் நிலைமைகளும்.

மனம் :—1. ஏக்கம். மிகவும் விநோதமான ஏக்கமும் பயமும். இந்த ஏக்கம் மனதைப் பற்றியதாக இருப்பதில்லை. ஏதோ ஒரு உடல் கோளாறினால் உண்டாகிறது (இருதயம், சுவாச கோசங்களைப்பற்றிய வியாதிகள்). அதன் பிறகே மனக்குறிகள் தோன்றுகின்றன. தரை

யில் உள்ள சாமான்கள் குதிக்கப் போவதாக வியாதியஸ்தர் நினைப்பார்; தான் திரும்பிப் பார்த்தால் ஏதோ ஒரு பொருளைப் பார்க்கக்கூடுமென்று எண்ணுவார். தனக்குப் பின்னால் யாரோ ஒருவர் இருப்பதாக நம்புவார். பல கோளாறுகளிலும் ஏக்கம் காணப்படும், 2. மனச் சோர்வு. உற்சாகம் மிகவும் குறைந்திருத்தல்.

உடல் :—மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு. மார்பில் படபடப்பு. கஷ்டப்பட்டு வேலை செய்தால் இருதயத்தை அமுக்குவது போல் இருத்தல். அதிக உடல் சோர்வு. உடல்முழுவதும் நடுக்கம். புளிப்புப் பொருள்களில் விருப்பு. ஆனால் அவை ஒத்துக் கொள்ளாது. வயிற்றுப் போக்கை உண்டாக்கும். அடிவயிறு பானைபோல் உப்பி அபானவாயு அதிகமாய் வெளியாகும். நரம்பு சம்பந்தமான படபடப்பு. முன்கைகள் பனிக்கட்டி போல் சில்லென்றிருத்தல். மூச்சை உள்ளே இழுப்பது மிகவும் சிரமமாய் இருக்கும். சுவாசகோச வியாதிகளில் இடைவிடாமல் கொட்டாவி விடுவதும் மந்த குணமும்.

உபாதி கூடுதல் :—சூட்டினால் உபாதிகள் அதிகமாவது தான் மிக முக்கியமானது. உடம்பில் மிக விரைவில் சூடு உண்டாகும். வெய்யில் சூடு, அல்லது கதகதப்பு, அறையின் சூடு, போர்த்திக் கொண்டால் ஏற்படும் சூடு ஆகிய யாவும் உபாதிகளைக் கூடுதலாகச் செய்யும். இக்குறியைப்பற்றி கெண்ட் விளக்கமாக எழுதியுள்ளார். டிப்தீரியா (தொண்டையில் கெட்ட சதை வளரும் வியாதி) பெருவாரியாய்த் தோன்றும் காலங்களில் சூடு ஒத்துக் கொள்ளாத குழந்தைகளைப் போர்த்தி வைத்தால் அதனால் சூடு அதிகமாகி அவர்களை வியாதி தாக்கக்கூடும். ஆனால் வியாதி தோன்றிய பிறகு வியாதியஸ்தருக்குக் குளிர் ஒத்துக் கொள்ளாது (குளிர் காற்று அடித்தல்).



ப்ரோமியம் வியாதியஸ்தர்களுக்குக் குளிர்ந்த தண்ணீர், குளிர்ச்சியான உணவு, ஈரக் கசிவுள்ள குளிர் காலம் ஆகிய எதுவும் ஒத்துக் கொள்ளாது. தொண்டை வேக்காட்டு வியாதியில் குளிர்ச்சியான பொருள்களை உட்கொள்ளும் போது குழந்தை மூச்சுவிடத் திணறலினால் குதிக்கும். சூடான அல்லது கொதிக்கும் பொருள்களை உட்கொண்டால் சௌகரியமாய் இருக்கும். சூடாய் இருக்கும் போதே திடீரென்று குளிர்ந்து விடுதல். உடலில் பலவீனமும் மிக விரைவில் சூடு உண்டாவதும் பிறகு வியர்வை கண்டு காற்றுப்பட்டால் குளிர் உண்டாகும். மாலையிலிருந்து நள்ளிரவு வரை உபாதிகள் அதிகமாகும்.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—சூடுள்ள அறையில் நுழைந்தவுடன் இருமல் அதிகம். நண்டு, நத்தைகளைத் தின்றதால் ஏற்படும் வயிற்றுப் போக்கு. உணவு உட்கொண்டவுடன் வயிற்றுப் போக்கும் வாந்தியும். உடம்பில் அதிகச் சூடு ஏற்பட்டால் தொண்டை கட்டிக் கொள்ளும் அல்லது பேசவே முடியாமல் போகும். வயிற்றில் புண் இருந்தால் அல்லது புண் உண்டாகும் நிலைமை உள்ளபோது சூடான உணவு அல்லது தண்ணீர் உட்கொண்டால் வயிற்றில் வலி தோன்றும். தூசி, தும்புகளினால் உபாதிகள் அதிகமாவதும் குறிப்பிடத் தக்கதே. தூசி உள்ள இடங்களில் இருந்தால் தும்மல், தொண்டைக் கறகறப்பு, சுவாசக் குழாய்களில் வேதனை முதலியவை உண்டாகும். (கெண்ட்). தூசியினால் அதிகமாகும் ஆஸ்துமா (என் சொந்த அனுபவத்திலேயே பார்த்திருக்கிறேன்).

உபாதி குறைதல் :—கடலில் இருக்கும் போது கோளாறுகள் சௌகரியமாய் இருக்கும். உதாரணமாக காச வியாதி உள்ள ஒருவருக்கு கடலில் இருக்கும் போது சௌகரியமாய் இருந்தால் அவருக்கு ப்ரோமியம் உபயோ

கமாகும். கப்பலில் வேலை செய்வோருக்குக் கரையில் இறங்கியவுடன் காச வியாதி உண்டாகும். (மறுபடி கடலில் சென்றுவிட்டால் சௌகரியமாகிவிடும்). க்ளார்க் வேறு விதமாய் எழுதுகிறார். "ப்ரோமியம் வியாதிகள், வியாதியஸ்தர் கடலின் அருகில் உள்ள போது சௌகரியமாய் இருக்கும் (நேட்ரம் மூரில் இதற்கு விரோதமான குறி). ஆனால் கப்பல் வேலை செய்வோருக்குக் கரையில் இறங்கியவுடன் வியாதி அதிகரிக்கும்". ஆகவே க்ளார்க்கின் அபிப்பிராயப்படி கடலின் அருகே சௌகரியம் ஏற்படுவது பொதுவாக எல்லோரிடமும் காணப்படும் குறி. கப்பல் வேலை செய்வோருக்குக் கரையில் இறங்கியவுடன் வியாதி அதிகரிப்பது விதி விலக்கான குறி.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**சுரப்பிகள் தாக்கப்படுதல்:**—சுரப்பிகளில் குறிப்பாகக் கீழ்த் தாடையிலும் தொண்டையிலும் உள்ளவைகளில் க்ஷய சம்பந்த முள்ள வீக்கம், அவை கல் போல் கடினமாகுதல். காதுப் பக்க முள்ள சுரப்பிகள், தைராய்டு சுரப்பிகள். சினைப்பை, ஸ்தனங்கள், விரைகள் முதலியவை அனேகமாகச் சீழ்ப் பிடிப்பதில்லை. காதுப் பக்க முள்ள சுரப்பிகள் எப்பொழுதாவது ஒரு தடவை சீழ்ப் பிடிக்கும், சீழ்ப் பிடிக்கும் போது சுரப்பியில் உண்டாகும் துவாரத்தைச் சுற்றிலும் கல் போல் கடினமாகவே இருப்பது கவனிக்கத் தக்க ஒரு விநோதமான குறி. ப்ரோமியம் தேவைப்படும் சுரப்பி வீக்கங்களில் காணப்படும் மற்றொரு விநோதக் குறி (சீழ்ப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும்) சுரப்பிகள் மிகவும் சூடாக இருப்பது தான். விரைகள் "வீங்கிக் கல் போல் கடினமாகும்; வழு வழுப்பாகவும் அதிகச் சூடாகவும் இருக்கும்" (பாரிங்டன்). கடினமாகவுள்ள கண்டமாலை (ஸ்பாஞ்சியா). இவ் வியாதியில்



ஐயோடியத்தினால் குணம் ஏற்படாத சமயங்களில் ப்ரோமியம் குணம் செய்திருக்கிறது. சுரப்பிகள் மெதுவாகப் பருக்கும்.

**வலிப்பு: இறுக்கும் உணர்ச்சி: மூச்சு அடைத்தல்:**—ஔஷதப் பரீக்ஷையில் தொண்டையில் திடீரென்று வலிப்பு அல்லது இறுக்கும் உணர்ச்சி, உள் மூச்சு வாங்க முடியாது (சுவாசகோசங்களினுள்ளே காற்றைச் செலுத்த முடியாமை) ஆகிய குறிகளை ப்ரோமியம் உண்டாக்கி இருக்கிறது. குழந்தையின் முகம் நீல நிறமாய் மாறி வலிப்புகள் உண்டாகும். வலிப்புகள் விட்டுவிட்டு வரும். தொண்டைவேக்காட்டில் குழந்தை திடீரென்று மூச்சு விடமுடியாமல் விழித்துக்கொள்ளும்போது பல சமயங்களில்வலிப்பும்உண்டாகும், 'தொண்டையில் இழுப்பு ஓசையுடன் மூச்சுவிடத்தடையும்சிரமமும் தோன்றும். ரம்பத்தினால் அறுப்பது போலவும் ஊதுவதுபோலவும் தொண்டையில் அளவுமிஞ்சிச் சேர்ந்துள்ள கோழையினால் மூச்சு நின்றுவிடுமோ என்று எண்ணும்படியும் சுவாசித்தல் (மார்பின் கீழ்ப் பகுதியில், ஆண்டிம். டார்ட்).

**புண் உள்ள உணர்ச்சி: தோல் உறிதல்:**— காரமான, எரிச்சலைத் தரும் நீர்க் கோர்வை, மூக்கினுள் புண்ணை ஏற்படுத்தும். தொண்டையில் புண் உள்ள உணர்ச்சியால் இருமல், விழுங்க சிரமம், குறிப்பாகத் திரவப்பொருள்களை. ப்ரோமியத்தில் புண் அனேகமாகக் குரல்வளையின் கீழேயே தென்படும். இடது விரை வலியுடன் வீங்கிக் கல்போல் கடினமாகுதல். காதுப்பக்கமுள்ள சுரப்பிகள் (விசேஷமாக இடது) சீழ்ப் பிடித்தல், தண்ணீர் போன்ற, தோலில் புண்ணை உண்டாக்கும் குணமுள்ள

ஊநீர் வடிதல். காற்றை உள்ளே இழுக்கும்போது தொண்டையில் புண் உள்ள உணர்ச்சி.

**சில்லிப்பு:**— குளிருவதும் குளிர்ந்த உணர்ச்சியும். முன் கைகள் பனிக்கட்டிபோல் சில்லென்றுகுதல். உள்மூச்சு இழுக்கும்போது தொண்டையில் குளிர்ந்த உணர்ச்சி (ரஸ் டாக்ஸ், ஸல்பர்): க்ஷவரம் செய்து கொண்டால் சௌகரியமாய் இருக்கும் (க்ஷவரம் செய்துகொண்ட பிறகு அதிகமானால், கார்போ அனி.) குரல்வளை வேக்காட்டில் அவ்விடத்தில் வெல்வெட்டுத் துணி வைத்திருக்கும் உணர்ச்சி (அந்த இடத்தில் ஏற்படும் அதிகச் சில்லிப்பினால் இந்த உணர்ச்சியுடன் வீக்கமும் கல்போல் கடினமாய் இருத்தலும்.)

**இருதயப் படபடப்பு:**—பல கோளாறுகளுடன் காணப்படும். "குமட்டலுடன் பரபரப்பு, தலைவலியுடன் படபடப்பு, பல விதமான மனக்கிளர்ச்சிகளுடன் படபடப்பு." (கெண்ட்). கடுமையான படபடப்பு, இடது பக்கமாய்ப்படுத்தால் அதிகரிக்கும். இருதயக்கொழுப்பு, விசேஷமாக உடல்பயிற்சி செய்யும், வளரும் பருவத்திலுள்ள ஆண்களுக்கு ஏற்படும் இருதயக் கொழுப்பு.

**மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு :**— பல கோளாறுகளுடன் சேர்ந்திருக்கும், விசேஷமாக மார்பு சம்பந்தமான கோளாறுகளுடன், பெருக்கு ஏற்பட்ட பிறகு சௌகரியமாய் இருக்கும்.

**மேலே பரவும் குணம் :**— டிப்தீரியா குரல் வளையில் ஆரம்பித்து மேலே பரவும். மார்பு வலிகள் மேற்பக்கமாகச் செல்லும். சில சமயங்களில் இதற்கு மாறாகவும் இருக்கலாம். டிப்தீரியா தொண்டையில் ஆரம்பித்துக் குரல்வளைக்குப்போகும். விஷத்தன்மை வாய்ந்த டிப்தீரியா குரல்வளையைத் தாக்கிப் பிறகு சுவாசகோசங்களுக்கும் பரவி



அதிகக் களைப்பை உண்டாக்கும். குளிர் முதலில் குரல்வளையைத் தாக்கிப் பிறகு மேலே பரவும் (மெர்கூறியஸ் ஸால், ஸேபியா) அல்லது கீழே பரவும். இருதயத்தில் ஏற்படும் வலி அக்குள்வரை பரவும்.

**போலிச் சதை வளர்ச்சிகள்:**-சதை வளரும் தொண்டை வேக்காடு அல்லது டிப்தீரியா. சதை குரல் வளையிலிருந்து தொண்டைவரை காணப்படும். சதை வெளிப்படும் வலியுடன் கூடிய மாத விடாயில் போக்கு வெளிப்படும் சமயத்திலும் அதற்கு முன்னதாகவும் பல மணி நேரம் கடுமையான வலிகள் காணப்படும். இதனால் அடிவயிறு புண்ணாய் வலிக்கும். யோனியிலிருந்து பலமான ஓசையுடன் அபான வாயுபோல் காற்று வெளியாகும். குடலைத் துருவியதுபோல் துண்டுகள் கலந்த மலம் வலியில்லாமலும் நாற்றமில்லாமலும் வெளியாகும். ஆனால் இக்குறி யோனியிலிருந்து காற்றுப்போகும் குறியைவிட மிக அபூர்வமாகவே இருக்கும்.

**உடல் சோர்வு :**— ப்ரோமியம் வியாதியஸ்தருக்கு அனேகமாக சாவு நேர்ந்துவிடுமோ என்று நினைக்கும்படியான உடல் பலவீனம் ஏற்படும் (டிப்தீரியாவில் இருப்பதுபோல் விஷத்தன்மை வாய்ந்த குறிகள் இருப்பதே இதற்குக் காரணம்). உடல் முழுவதும் வெலவெலத்துப்போகும். டிப்தீரியாவில் மற்ற எல்லா குறிகளும் மறைந்த பிறகு அதிக உடல் பலவீனமும் அலுப்பும் ஏற்படுதல்.

**இடது பக்கமே அதிகம் தாக்கப்படுதல் :**— அனேகமாக இடது பக்கத்தையே வியாதிகள் தாக்கும். மண்டைக் குத்து எனப்படும் தலைவலியில் வலி இடது பக்கமே இருக்கும். குனிந்தாலும் விசேஷமாகப் பால் குடித்த பிறகும் வலி கூடுதலாகும். தாடை வீக்கம் இடது பக்கமே

ஏற்படும். தொண்டையின் இடது பக்கம்; இடது விரை. இடது சினைப்பையில் மந்தமான வலி, கல்போல் கடினமாகுதல். இடது ஸ்தனத்தில் கடுமையான குத்துவலி, அமுக்கினால் அதிகரிக்கும். **விதிவிலக்கு :—** வலது சுவாசகோசம் அதிகமாகத் தாக்கப்படும். வலது சுவாசகோசத்தில் க்ஷயம். மார்பின் வலதுபக்கத்தில் குத்தும் வலிகள்.

## மற்ற குறிகள்.

முகத்தில் சிலந்தி வலை நூல் ஒட்டிக்கொண்டிருக்கும் உணர்ச்சி.—வாயிலிருந்து வயிறுவரை எரிச்சல்.—நாட்பட்ட மேகவெட்டையினால் விரைப்பை வீங்குதல்,—ஓடும் தண்ணீரைப் பார்த்தாலும் ஆற்றுப்பாலத்தின்மேல் நடக்கும்போதும் அதிகமாகும் தலைச் சுற்றல்.

**தொண்டைச் சுரப்பி வேக்காடு:—** தொண்டைச் சுரப்பிகள் கருஞ் சிவப்பு நிறமுள்ள வீக்கத்துடன் இருக்கும். அவ்விடமுள்ள இரத்தக் குழாய்கள் யாவும் வீங்கிப் புண்களும் காணப்படலாம். கெட்டியான உணவைவிட திரவமான உணவை விழுங்கவே அதிக சிரமம் இருக்கும். இவ்விதமான தொண்டைச்சுரப்பி வேக்காட்டுடன் வெளிப்பக்கமுள்ள சுரப்பிகளிலும் வீக்கம் தோன்றினால் அது க்ஷயரோகத்துக்கு முன்னறிவிப்பான குறியாகும்.

**மூலம் ;—** குளிர்ந்த அல்லது சூடான தண்ணீர் ஒத்துக்கொள்ளாது; உமிழ் நீரை அந்த இடத்தில் தடவினால் சௌகரியமாய் இருக்கும். இரத்தம் வெளியாகாத, அதிக வலியுள்ள, கறுப்பான நிறமுள்ள வயிற்றுப்போக்குடன்கூடிய மூலம்.

**உறவு :—** ஐயோடியம், பாஸ்பரஸ், ஸ்பாஞ்சியா ஆகியவைகளுக்குப் பிறகு உபயோகமாகும்.

---



# பிரயோனியா ஆல்பா

## (BRYONIA ALBA)

**முன்னுரை :—** பிரயோனியா பலவிதமான வியாதிகளில் தேவைப்படுகிறது.

பிரயோனியாவின் திடீர் வியாதிகள் **அகோனைட்டிலும் பெல்லடொன்னாவிலும்** காணப்படுவதுபோல் ஆரம்ப நிலைமையில் கடுமையாக இருப்பதோ வேகமாக விருத்தியாவதோ இல்லை. ஆனால் உடலினுள்ளே ஆழமாகப் புகுந்து விடுகிறது ; **ஸல்பரைப்போல்** மிக ஆழமாய்ப் புகுவதில்லை. பல சமயங்களில் ஒரு வியாதியில் **அகோனைட்** கொடுத்து சிறிது குணம் கண்டு மேலும் குணம் ஏற்பட இடம் இல்லாமல் போகும்போது **பிரயோனியா** தேவைப்படும். கடைசியில் **பிரயோனியாவினாலும்** முழு குணம் ஏற்படாவிட்டால் **ஸல்பர்** உபயோகமாகி முழு குணம் தோன்றும். சுரம், சுவாசகோச உறைவேக்காடு, சுவாசகோச வேக்காடு ஆகியவைகளில் அனேகமாக இவ்விதமே சிகிச்சை நடைபெறுகிறது.

இவ் வௌஷதத்தின் மிக முக்கிய குறிகள் :—**1. அசைவினால் உபாதிகள் அதிகரித்தல். 2. அமுக்கினால் உபாதிகள் குறைதல். 3. சளிச் சவ்வுகளில் வறட்சி. 4. அளவு மீறிய தாகம். 5. குத்தும் வலிகள் ; தலைச் சுற்றல்.**

வியாதிகள் உள் அமுக்கப் பட்டதாலும் ஒரு வியாதியின் எதிரொலியாகவும் தோன்றும் கோளாறுகளை **பிரயோனியா** நீக்குகிறது.

## பொதுவான குறிகள்.

**தகுதி :—** வாதரோகமும் கீல்வாயுவும் உள்ளவர்கள். **பித்தக் கோளாறுகள்** அடிக்கடி ஏற்படுதல். கறுத்த மயிரும் கறுத்த உடலும் உறுதியான **தசைகளும்** உடையவர்கள். **காய்ந்து, மெலிந்த உடலும்** பயந்த சுபாவமும்

உள்ளவர்கள். பொதுவாக உடம்பில் சில்லிப்பு உணர்ச்சியே இருக்கும். தேவைக் கதிகமாகவே உணவு உட்கொள்வோர்; புஷ்டியான உணவைச் சாப்பிடும் வழக்கம் உள்ளோர். குளிர் தாக்கியவுடன் நீர்க்கோர்வை உண்டாகும் உடல்வாகு உள்ளவர்கள். மந்த குணம்.

**மனம்**:—1. முன்கோபம். மிகவும் முன்கோபம். 2. பயம். வருங்காலத்தைப் பற்றிய கவலையுடன் ஏக்கமும் பரபரப்பும். தான் இறந்துவிடுவோமென்ற பயத்துடன் வியாதி குணமாகாதோ என்று மனம் தளருதல். 3. விசித்திரமான மனப்பாங்கு: கிடைக்காத சாமான்களை உடனே வேண்டும் என்று கேட்பார். கேட்டதைக் கொடுத்தால் வேண்டாம் என்று மறுத்து விடுவார்." அவருக்கு ஏதோ ஒன்று வேண்டும்; ஆனால் அது என்ன என்று அவருக்கே தெரியாது." தூக்கிக்கொள்வதோ அல்லது படுக்கையிலிருந்து எழுப்புவதோ குழந்தைக்குப் பிடிக்காது. லேசான புத்தித் தடுமாற்றத்திலும் மந்தகுணம் உள்ள நிலைமைகளிலும் வியாதியஸ்தர் படுக்கையை விட்டு எழுந்திருந்து வீட்டுக்குப் போகவேண்டுமென்று சொல்வார். (அக்டியா ரஸிமோஸா ஹயஸ்யாமஸ்). ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத பேச்சு, தன் தொழிலைப் பற்றிய பிதற்றுதல், மாலை 3 மணிக்குப் பிறகு அதிகமாகும் (பகலில் நடந்த விஷயங்கள் தெளிவாகக் கனவில் காணப்படும்).

**உடல்**:—கீழே படுத்துக் கொண்டு பேசாமல் இருக்க விரும்புதல். சிறிதளவு அசைவையும் வெறுப்பார். சளிச்சவ்வுகள் காய்ந்து இருக்கும். ஏராளமாய்த் தண்ணீர் குடிக்கத் தாகம், ஆனால் அடிக்கடி தாகம் ஏற்படுவதில்லை. எழுந்து உட்கார்ந்தால் குமட்டலும் மயக்கமும். வாயில் கசப்பான சுவை, உணவும் கசக்கும். முழு அளவுடன் வேகமாகவும்



பலமாகவும் துடிக்கும் நாடி. பிடிக்காத பொருள்களை விரும்புதல். மலச்சிக்கலில் மலம் பெரியதாகவும் கடினமாகவும் காய்ந்தும் இருக்கும். மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு "அடிக்கடி ஆழ்ந்து மூச்சுவிட ஆவல்; சுவாச கோசங்களை விரியச் செய்யவேண்டுமென்று நினைப்பார்" "அடிக்கடி பெருமூச்சுவிட ஆவல்." அடிக்கடி கொட்டாவிவிடுதல். பாதிக்கண்களை மூடியபடி மந்தமாய் இருத்தல். "உடல் பலவீனம்; எல்லா விஷயங்களிலும் அலட்சியம்." வாயை மெல்லுவது போல் அசைத்தல். தலைமயிர் அதிகமாக சிக்குப்பிடிக்கும். தூங்கும்போது இரவிலும் குறிப்பாக விடியற் காலையிலும் தலையிலும் (உடம்பு முழுவதும் கூட இருக்கலாம்) புளிப்பு நாற்றம் அடிக்கும், எண்ணெய் போல் பிசுக்கென்று ஒட்டும் வியர்வை.

**உபாதி கூடுதல்**:—பிரயோனியாவில் உபாதிகள் அசைவினால் அதிகமாவது என்ற குறி லேசானவிஷயம் இல்லை. இடம்மாறி உட்காருதல் அல்லது படுத்தல், அதிர்ச்சி, சிறிதளவு உடல் வேலை (பேசும்போது, யோசனை செய்யும்போது, இருமும்போது, கண்விழிகளைத் திருப்பும்போது, இமைகளை மூடித்திறக்கும் போது, பார்ப்பது, கேட்பது முதலிய காரியங்களால் உண்டாகும் அல்பமான வேலைகூட) ஆகியவைகளால் உபாதி கூடுதலாகும். பிரயோனியா வியாதியஸ்தர் ஆழ்ந்து மூச்சுவிட விரும்புவார் ஆனால் அது வலியை (சுவாச கோசங்களில்) ஏற்படுத்துவதால் சிறு சிறு மூச்சுகளாகவே சுவாசிப்பார். ஆகவே இரைப்பு வாங்குவது போல் இருக்கும். வெளிச்சம் ஒத்துக்கொள்ளாது (இருட்டான இடங்களிலேயே இருக்க விரும்புவார்). எல்லா விதமான ஓசைகளும் காதுக்கு வேதனையாக இருக்கும். வெளிச்சம் கண்

களின் தசைகளிலும், ஓசை காது நரம்புகளிலும் அதிர்ச்சியை உண்டு பண்ணுவதால் தான் இக்குறிகள் தோன்றுகின்றன என்று அறியவேண்டும். எழுந்து உட்கார்ந்தவுடன் தலைச்சுற்றல் அல்லது மயக்கம் உண்டாகும். குமட்டலையும் வாந்தியையும் கூட ஏற்படுத்தலாம். ஆகவே வியாதியஸ்தர். மனதினாலோ, உடலாலோ எவ்வித வேலையும் செய்யாமல் இருக்க விரும்புவார்.

"அசைவுக்கு" அடுத்தபடியாக இருப்பது "சூடு". உடலில் அதிகச் சூடு உண்டானால் ஒத்துக் கொள்ளாது. கோடை போல் அதிக வெய்யில் உள்ள காலங்களிலும் குளிர் காலம் கழிந்து கோடைக் காலம் ஆரம்பமாகும் போதும் உபாதிகள் அதிகரிக்கின்றன. சூடு உள்ள அறைகளில் உபாதிகள் அதிகமாகும். காற்று அடைபட்டது போல் உள்ள இடங்களில் இருக்க முடியாது (சினிமாக் கொட்டகை, மாதா கோவில் போன்ற இடங்கள்). குழந்தை போர்வையை உதறித் தள்ளும்.

உணவு உட் கொண்டால் உபாதி அதிகமாகும். காய்கறிகள் ஒத்துக் கொள்வதில்லை. வேதனை, அவமானம், ஏமாற்றம், கோபம் முதலிய மன உணர்ச்சிகளால் தோன்றும் கோளாறுகள் (காலோஸிந்திஸ், ஸ்டாபிஸாக்ரியா).

பெரும்பாலான குறிகள் இரவு 9 மணிக்கும் குறிப்பாகக் காலையில் தூங்கி எழுந்தவுடனும் அதிகமாகும்.

வியாதி உள்ளே அமுக்கப்படுதல், வெளியே தோன்றாமை அல்லது கழிவுகளும் சருமக் கோளாறுகளும் சரிவர வெளியே தோன்றாமை முதலிய காரணங்களினால் உபாதி அதிகரித்தல். தாய்மார்களுக்கு ஸ்தனங்களில் சுரக்க வேண்டிய பால் அமுக்கப்பட்டு அதன் விளைவாய்த் தோன்றும் கோளாறுகள். காலில் மங்கிய பழுப்பு நிறமுள்ள வீக்கம்.



உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—குளிர், சுரம், புத்தித் தடுமாற்றம் முதலியவை இரவு 9 மணிக்கு ஆரம்பிக்கும். இருமல், தலைவலி, கில் வாயுக் குறிகள் ஆகியவை சாப்பிட்டவுடன் அதிகமாகும். பல்வலி சூட்டினால் கூடுதலாகும். உடம்பில் உள்ள குளிர் சூடான அறையில் அதிகரிக்கும். உடலில் அதிகச் சூடு ஏற்பட்டால் காச வியாதி அடிக்கடி ஏற்படும். காலையில் நடக்க ஆரம்பித்தவுடன் வயிற்றுப் போக்கு அதிகமாகும். அல்பமான அசைவுகூட, கை காலை அசைப்பதுகூட வயிற்றுப் போக்கை அதிகரிக்கும். கோடைக் காலத்திலும் சேர்ந்தாற்போல் சிலநாட்கள் நல்ல வெய்யில் காய்ந்தாலும் வயிற்றுப்போக்கு தோன்றும். சூடான அறையில் நுழைந்தவுடன் இருமல் அதிகமாகும்; ஆழ்ந்து மூச்சு விட்டாலும் அதிகரிக்கும். கோடைக்காலத்தில் ஒழுங்காகச் சீரணம் ஆகாது. குளிர்ந்த வறண்ட காற்றினால் உண்டாகும் கோளாறுகள் (அகோனைட்).

உபாதி குறைதல் :—அமுக்கினால் (வலியுள்ள இடத்தைக் கீழே வைத்துப் படுத்தல், துணியினால் இறுக்கிக் கட்டுதல் முதலியவை). திறந்த இடங்களில் இருந்தால், கொஞ்சம் கூட அசையாமல் இருந்தால்.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—விஷத்தன்மை வாய்ந்த ஒரு வயிற்றுக் கடுப்பு வியாதியில் திறமை வாய்ந்த பல அல்லோபதி வைத்தியர்களாலும் ஹோமியோபதி வைத்தியர்களாலும் பல நாட்கள் சிகிச்சை செய்தும் பலன் இல்லாமல் போய் விட்டது. வைத்திய அறிவே இல்லாத ஒருவர் என்னால் எழுதப்பட்டுள்ள சிகிச்சை விஷயமான புத்தகத்தில் கீழ்க்காணும் குறிகளைப் பார்த்தார். வியாதியிலும் இதே போன்ற குறிகள் இருந்ததால் பிரயோனியா 200 வீரியத்தில் ஒரு வேளை கொடுத்தார். பிழைக்காது என்று கைவிடப் பட்ட அவ்வியாதியஸ்தர் சில மணி நேரங்களில் பிழைத்து விட்

டார். அக்குறிகளின் விவரமாவது" அசைவினால், படுக்கையில் திரும்பிப் படுத்தாலும், வலியும் வயிற்றுப் போக்கும் அதிகமாகுதல், சிறிது அசைவுகூட இல்லாமல் இருக்கவிரும்புதல்." பொதுவாக சூட்டினால் கோளாறுகள் அதிகமானாலும் எலும்பு மூட்டுகளிலும் கைகால்களிலும் உள்ள வலிகள் சூட்டினால் குறையும். பிரயோனியாவில் இதுபோல் பல மாறுதல்கள் காணப்படுவது உண்மையே ஆயினும் ஔஷதத்தின் உருவம் மிகத் தெளிவாய் இருப்பதால் அதைத் தேர்ந்தெடுப்பது சுலபமாய் இருக்கிறது. பிரயோனியா வியாதிகள் ஏராளமாய் வியர்வை ஏற்பட்டால் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**மிக மெதுவாகத் தோன்றுதல்: மந்த குணம்:**—திடீர் வியாதிகளில் வியாதி மெதுவாகவே விருத்தியாகும். வியாதியின் ஆரம்பத்தில் கடுமையான குறிகள் இருக்காது ஆனால் கடுமையாக வளரும். நீர்க் கோர்வை தோன்றிய பிறகு இரண்டொரு நாட்கள் சென்ற பிறகே வியாதி உண்டாகும். அகோனைட்டைப் போல் ஒரு சில மணி நேரங்களில் வியாதி ஏற்படுவதில்லை. "வியாதி மெதுவாகவும் மந்தமாகவும் ஆரம்பித்து அதே போல் விருத்தியாகும்". புத்தித் தடுமாற்றம் லேசாகத்தான் இருக்கும். இந்த நிலைமையில் வியாதியஸ்தர் தான் எங்கேயோ ஓர் இடத்தில் இருப்பது போல் தவறாக நினைத்துத் தன் வீட்டுக்குப் போக வேண்டுமென்று விரும்புதல்.

உணர்ச்சியிலும் மந்த குணம் இருக்கும். நாக்குக்கு ஒரு வித சுவையும் தெரியாது. படிக்கும்போது எழுத்துக்களில் வித்தியாசம் தெரியாமல் குழப்பம் உண்டாகும். உள்ளங் கைகளில் உணர்ச்சிக் குறைவு.

**வறட்சி: நீர் குறைவாய் உற்பத்தி யாகுதல்:**—எல்லா



இடங்களிலும் வறட்சி. சளிச் சவ்வுகளில் வறட்சி; குறிப்பாக வாயும் வயிறும். நீர் குறைவாய் உற்பத்தியாவதே இதற்குக் காரணம். வாய் காய்ந்திருக்கும். உதடுகள் காய்ந்து உலர்ந்து வெடித்துச் சில சமயங்களில் இரத்தப் பெருக்கும் உண்டாகலாம். வயிற்றில் உற்பத்தியாக வேண்டிய நீர் குறைவாய் உற்பத்தியாவதால் அசீரணம் தோன்றுகிறது. உணவு வயிற்றில் கல் போல் கிடக்கிறது (சீரணம் ஆகாமல்). வயிற்றின் அடிப் புறத்தில் கல் இருப்பது போல் அழுத்தும் உணர்ச்சி, ஏப்பம் விட்டால் சௌகரியமாய் இருக்கும். (நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா). வறண்ட, (கோழை கொஞ்சமாய் இருக்கலாம் அல்லது கொஞ்சம் கூட இல்லாமலும் இருக்கலாம்), கடினமான, வலியுடன் கூடிய இருமல், வயிற்றிலிருந்து வருவது போல் இருக்கும்; உணவு உட்கொண்ட உடனும் அல்லது தண்ணீர் குடித்தவுடனும் இருமல் அதிகமாகும். மலம் கட்டையாகவும் மிகவும் காய்ந்து கடினமாகவும் இருக்கும். மலம் கடினமாகவும் கரும் பழுப்பு நிறமாகவும் அல்லது கறுப்பாகவும் சுட்டது போல் காய்ந்தும் இருக்கும். வறட்சியுடனும் எரிச்சலுடனும் சூடு (சுரம்). வறண்ட, உராய்வது போன்ற ஓசை (சுவாச கோச உறை வேக்காட்டில்). தாய்மார்களுக்கு ஸ்தனங்களில் பால் இல்லாமை அல்லது மிகக் குறைவாய் இருத்தல் (பிரயோனியாவை 200 வீரியத்தில் உபயோகிக்கவும்). தாய்மார்களுக்குச் சிற்சில சந்தர்ப்பங்களில் ஸ்தனங்களில் பாலை வற்றச் செய்ய வேண்டி வரலாம். அப்பொழுது பிரயோனியாவையே 3-x வீரியத்தில் சில வேளைகள் கொடுக்க வேண்டும். மூத்திரம் அளவு குறைந்தும் சிவப்பாகவும் சூடாகவும் இருக்கும். கடுமையான உடல் வேலை செய்த பிறகு மூத்திரத்தின் அளவு குறைதல், கடைசியாக (அதிக

வேலையினால் அல்லது உடம்பில் அதிகச் சூடு ஏற்பட்டதால்) மாதவிடாய் கூட அடக்கப் படலாம். ஆனால் இரவிலும் காலையிலும் வியர்வை ஏராளமாய் இருக்கும்.

அளவு மீறிய தாகம்: வெகு நேரத்திற்கொரு தடவை ஏராளமாய்த் தண்ணீர் குடிக்கத் தாகம். வாய் எப்பொழுதும் காய்ந்தே இருக்கும். நக்ஸ் மாஸ்சாடாவில் வாயும் தொண்டையும்; காய்ந்திருக்கும். ஆனால் தாகம் இருக்காது.

குத்து வலிகள்: ஊநீர்ச் சவ்வுகள் தாக்கப்படுதல்:— ஊநீர்ச் சவ்வுகளின் வேக்காட்டில் (உதாரணமாக அடிவயிற்று உட்தசை வேக்காடு. இருதய உறை வேக்காடு, மூளை வேக்காடு, விசேஷமாக சுவாசகோச உறை வேக்காடு) ஆரம்பத்தில் அகோனைட், பெர்ரம் பாஸ், பெல்லடொன்னா முதலிய ஔஷதங்களே அனேகமாகத் தேவைப்படுகின்றன. இவை வியாதியில் காணப்படும் கடுமையான வேக்காட்டை எதிர்க்கின்றன. அந்த இடங்களில் கெட்ட நீர் உற்பத்தியாகும்போது அதாவது மார்பில் உராயும் ஓசைகளும் அசைந்தால் மிகக் கடுமையாகும் குத்து வலிகளும் காணப்படும்போது பிரயோனியா அனேகமாக உபயோகப்படும். வியாதியஸ்தர் வியாதியுள்ள பக்கத்தைக் கீழே வைத்து ஒருவித அசைவும் ஏற்படாத வண்ணம் படுத்திருப்பார்.

உடைக்கும் வலிகள்: புண் உள்ள உணர்ச்சி: எட்டியுள்ள இடங்களில் வேதனை: கனத்த உணர்ச்சி:—உடைக்கும், பிளக்கும் தலைவலி, எல்லாம் வெளியே பிதுங்கி வந்துவிடும் போல் தோன்றும்: குனிந்தாலும் அசைவினாலும் வலி மும்முரமாகும், தலையில் அதிகக் கனம். விழிகளை அசைக்கும்போது அவ்விடங்களில் புண் உள்ள உணர்ச்சியுடன் வலி. இருமும்போது மார்பு வெடித்துவிடும் போல் தோன்றும். இருமும்போது எட்டியுள்ள இடங்களில் அதா



வது தலை, மார்பு, வயிறு, கல்லீரல் முதலானவைகளில் வேதனை அல்லது வலி. அதனால் வலிக்கும் இடத்தைப் பிடித்துக் கொள்வார். அவ்வாறு பிடித்துக்கொண்டால் வலி குறையும். கல்லீரல் புண்ணாய் இருப்பது போலவும் பளுவாயும் தோன்றும். கல்லீரல் பகுதியைக் கீழே வைத்துப் படுத்தால் சௌகரியமாய் இருக்கும். ஸ்தனங்களின் வேக்காட்டில் அவை வீங்கிக் கல்போல் கடினமாகி, வெளுத்துச் சூடாகவும் வலியுடனும் இருக்கும். ஸ்தனங்கள் மிகவும் கனமாய்த் தோன்றுவதால் அவைகளைத் தாங்கவேண்டிவரும் (பைடோலக்கா), மண்டைத் தோலில் புண் இருப்பது போல் தோன்றும்;. ஒவ்வொரு மயிர்க்காலிலும் வலி, தலைப் பொடுகு. வயிற்றில் பளுவான பொருள் இருப்பதுபோல் உணர்ச்சி (நாட்பட்ட அசீரணம்). மாதவிடாய்க்கு முன்னதாக அரையிடுக்குகளில் புண் உள்ள உணர்ச்சி.

கல்போல் கடினம்:— ஸ்தனங்களின் வேக்காட்டில் அவை கல்போல் கடினமாகும். உடம்பின் பல இடங்களில் கல்போல் கடினமான வீக்கங்கள். காய்ந்த, கடினமான மலம். தொப்பூழைச் சுற்றிக் கடினமான வீக்கம். மூக்கினுள்ளே கடினமான சளி காய்ந்து பொறுக்குகளாக மாறுதல். பால் உற்பத்தி தடைப்பட்டதால் அல்லது குறைந்து விட்டதால் ஸ்தனங்கள் கல்போல் கடினமாகுதல்.

அவசரம்:— திணறிக்கொண்டும் மிக வேகமாகவும் சிறு சிறு மூச்சுகளாகவும் சுவாசித்தல். டைபாய்டு நிலைமைகளில் மயக்கத்திலிருந்து எழுப்பினால் மிக் ஆத்திரத்துடன் அல்லது அவசரமாகக் குடிப்பார். மிக அவசரமாய்ப் பேசுதல் (புத்தித் தடுமாற்றத்தில்). மூத்திரத்தை அடக்கும் சக்தி இல்லாமல் மிக அவசரமாக மூத்திரம் கழிக்கத் தூண்டுதல்.

**வேதனை :—** "மனதிலும் உடலிலும் வேதனை" **மனம்** என்னும் தலைப்பைப் பார்க்கவும். **விக்கல்,** ஏப்பம், வாந்தி, (பித்தம்) ஆகியகுறிகளுடன் வயிற்றில்வேதனை. உணவு உட்கொண்டால் வயிற்றில் வலி கடுமையாகிறது; லேசாக அமுக்கினாலும் வலி கூடுதலாகிறது. (வயிற்றிலும் குடலிலும் வேக்காடு) **தொண்டையை அடைக்கும் குணமும் வாந்தியும் உள்ள** வறண்ட, விட்டு விட்டு வரும் இருமல்.

**வீக்கம் :—**கால்களில் வீக்கம். நீர்ச் சுரப்புள்ள வீக்கங்கள் அடிவயிற்றில் நீர்ச் சுரப்பு வீக்கம். எலும்பு மூட்டுகள் சிவந்து வீங்கி விரைத்துச் சிறிதளவு அசைவினாலும் குத்து வலிகள் உண்டாகும். பிறவியிலிருந்தே இருந்த விரைப்பை வீக்கத்தைப் **பிரயோனியாவினால்** தான் குணம் செய்திருப்பதாக **க்ளார்க்** சொல்லுகிறார். வெளுத்த நிறமுள்ள விரைப்பான, (நீர்ச் சுரப்பு வீக்கமல்ல) சூடான வீக்கங்கள். உடலின் சில இடங்களில் மட்டும் சிவப்பான, பள பள வென்று மின்னும் வீக்கமும் அசைந்தால் அவ்விடங்களில் குத்தும் வலிகளும்.

வாத சம்பந்தமான வலிகள் :—**தசைகளைப் பற்றிய வாத ரோகம்;** தசைகளைத் தொட்டால் வலி, சில சமயங்களில் வீங்கி இருக்கும்; சிறிது அசைந்தாலும் வலி அதிகமாகும். **குத்தும், கிழிக்கும் வலிகள், அல்ப அசைவினாலும் அதிகரிக்கும். எலும்பு மூட்டுகளைப் பற்றிய வாத** ரோகம்; வலிகளும் வீக்கமும் இடம் மாறுவதே கிடையாது; ஒரு வேளை மாறினாலும் மெதுவாகவே மாறும்.

**சுரங்கள் பல வகை :—**அனேகமாக எல்லா வகையான சுரங்களும் பிரயோனியாவுக்கு அடங்கும். **விசேஷமாக, பித்த சுரம்,** டைபாய்டு **சுரம்,** சூடு **ஏறி இறங்கும் சுரம் ஆகியவைகளில் பயன் படும். விட்டு விட்டுத் தோன்**



றும் சுரங்களில் குளிர் உள்ள போது அதிகத் தாகம் இருக்கும். சூடு கண்டவுடன் தாகம் இன்னும் அதிகமாகும். வாயில் வறட்சி, அவசரமாகக் குளிர்ந்த தண்ணீர் குடித்தல், அவசரமாகப் பேசுதல் முதலான குறிகளுடன் காணப்பட்ட கடுமையான மலேரியா சுரம் ஒன்றை மேலே உள்ள குறியை ஆதாரமாய் வைத்து சூடு உள்ள போது இரண்டு மணிக்கொரு தடவையாக மூன்று வேளைகள் **பிரயோனியாவை 30** வீரியத்தில் கொடுத்துக் குணம் செய்திருக்கிறேன். (மலேரியாவில் சுரம் உள்ள போது ஔஷதத்தைக் கொடுக்கக்கூடாது என்று சட்டம் இருந்த போதிலும்).

அமுக்கப் படுதல் : எதிரொலி :—ஏராளமான போக்குள்ள மாதவிடாயுடன் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு அல்லது **மாதவிடாய் வெளியாக வேண்டிய சமயத்தில் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு (பாஸ்பரஸ்).** இரத்தம் வாந்தி செய்யப் படுதல். குளிரினால் மாதவிடாய்ப் போக்கு திடீரென்று தடைப்பட்டால் இவ்விதம் மூக்கிலிருந்தும் வாய் மூலமும் (வாந்தி) இரத்தம் வெளியாகும். ஸ்தனங்களில் பாலைத்தடை செய்தால் உண்டாகும் கோளாறுகள் (கால்களில் வீக்கம், சுரம் ஆகியவை). மூளை வேக்காடு போன்ற கோளாறுகள் திடீர் சரும வியாதியில் சருமக் கோளாறு தோன்றாததினால் அல்லது ஒழுங்காகத் தோன்றாததால் அல்லது உள்ளே அமுக்கப் பட்டதால் உண்டாகலாம். "வலியுடன், விடாமல் அடிக்கும் சுரங்கள், டைபாய்டு, நீர்க் கோர்வை சம்பந்தமுள்ள சுரம் ஆகியவை, விசேஷமாக வியாதி உள் அமுக்கப் பட்டதினால். **கோடைக் காலத்தில் வியர்வையைத் திடீரென்று அடக்கியதால் தோன்றும் வயிற்றுப் போக்கு.** மலச்சிக்கலினால் தோன்றும் தலை வலியையும் சேர்த்துக் கொள்ளலாம். **(ஆலோ, காலின்ஸோனியா, ஓபியம்.)**

**வியாதியின் உருவ, இட மாற்றங்கள்:**—வாதரோகம் கண்களைத்தாக்குதல், கண் விழிகள் வழியாகத் தலையின் பின் பக்கம் பாய்ந்து செல்லும் வலிகள்.

**வலது பக்கமே அதிகம் தாக்கப்படுதல்:**—பிரயோனியா வியாதிகள் எந்தப் பக்கத்தை அதிகமாகத் தாக்குகின்றன என்று சொல்வது சற்று சிரமம் தான். சுவாசகோச வேக்காட்டில் வலது பக்கம். வலது பக்கமாய்ப் படுத்தால் குமட்டல் அதிகமாகும். வலது தோள் பட்டையில் குத்து வலிகள். இடது கண்ணின் மேலாக வலி. இடது சினைப் பையில் வலி, வலியுள்ள பக்கத்தைக் கீழேவைத்துப் படுத்தால் சௌகரியமாய் இருக்கும். சுவாசகோச உறை வேக்காட்டில் குத்தும் வலிகள், இடது பக்கத்தில் அதிகமாய் இருக்கும்.

## மற்ற குறிகள்.

அடிக்கடி தும்மல் உண்டாகும்—இருமிக்கொண்டிருக்கும் போது நடுவில் தும்மல் உண்டாகும். குழந்தைகள் உதடுகளை நக்கிக்கொள்ளும்.—பற்களின் மேல் கறுப்பான அழுக்குப் படியும். நாக்கின் மேல் கனமான வெள்ளை அழுக்குப் படிந்திருக்கும்; நடுவில் வெண்மையாகவும் ஓரங்கள் மட்டும் சுத்தமாகவும் இருக்கலாம். பழுப்பான, மெல்லிய, மலம், தூங்கும்போது மலம் தானுகவே வெளியாகும். மலம் பழய வெண்ணெய் போல் நாற்றம் வீசும், இடது கையும் காலும் இடை விடாமல் அசைந்துகொண்டே இருக்கும், (அபோஸினம். ஹெல்லபோரஸ்.) ஒரு வித ருசியும் இல்லாத காற்று ஏப்பம். சோப்புப் போல் குழ குழப்பாகவும் நுரையும் உள்ள உமிழ் நீர், வாயிலிருந்து அழுகிய நாற்றம் வீசும். கீழ் முதுகில் குத்து வலிகளும் விரைப்பும். நாடி முழு அளவுடனும் கடினமாகவும் வேகமாகவும் பலமாகவும் துடிக்கும். கீழ் முதுகு வலி குனிந்தால் அதிகமாகும். மாத விடாய்க் கோளாறுகளினுல் உண்டாகும் இரத்த சோகையுடன் மஞ்சட் காமாலை.—பாதரஸ சம்பந்த முள்ள ஔஷதங்களை மிதமிஞ்சி உபயோகித்ததினுல் பாழ் படுத்தப்பட்ட மஞ்சட் காமாலை.



**உறவு**—அகோனைட், நக்ஸ் வாமிகா; ஓபியம், ரஸ் டாக்ஸ் ஆகியவைகளுக்குப் பிறகு பிரயோனியா நன்ருக வேலை செய்கிறது. அலுமினு, ஆர்ஸனிகம் ஆல்பம், காலீ கார்ப். நக்ஸ் வாமிகா, பாஸ்பரஸ், பல்ஸடில்லா, ரஸ் டாக்ஸ், ஸல்பர் ஆகியவை பிரயோனியாவுக்குப் பிறகு நன்ருக வேலை செய்கின்றன. அலுமினு, ரஸ் டாக்ஸ் இவ்விரண்டும் பிரயோனியாவின் வேலையைப் பூர்த்தி செய்யும். காலீ கார்ப், நேட்ரம் மூர் ஆகியவைகளும் இவ்விதம் பூர்த்தி செய்ய உதவும் என்ருலும் அவ்வளவு முக்கியமானவையல்ல.

**ஒப்பிடுதல்:**—அவசரமாகப் பேசுவது, அவசரமாகக் குடிப்பது ஆகிய குறிகள் பெல்லடொன்னுவிலும் ஹிப்பார் ஸல்பரிலும் காணப்படுகின்றன. வலியுள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தால் சௌகரியம். பல்ஸடில்லாவில், பெல்லடொன்னுவில் வலியுள்ள பாகத்தைக் கீழே வைத்துப் படுத்தால் வலி அதிகமாகும். பெல்லடொன்னுவில் பிரயோனியாவைப் போல் வாயை மெல்லுவது இருந்தாலும் வாயில் வறட்சி இல்லை. நக்ஸ் வாமிகா வியாதியஸ்தர் இன்பவாழ்க்கையில் ஈடு பாடுள்ளவராகவும் பிரயோனியா வியாதியஸ்தர் பெருந்தீனிக் காரராகவும் இருப்பார். பிரயோனியா அனேகமாக கல்கேரியா கார்பை ஒத்திருக்கிறது. இவ்விரு ஔஷதங்களும் ஒன்றுக்கொன்று பகையானவை. ஆகவே ஒன்று கொடுத்த பிறகு உடனே மறு ஔஷதத்தைக் கொடுப்பது கூடாது. இடையில் வேறு ஏதாவது ஒரு ஔஷதத்தைக் கொடுத்த பிறகே இவைகளை உபயோகிக்கலாம்.

ஊனீர்ப் பெருக்குள்ள வியாதிகளில் பிரயோனியா காலீ கார்ப். அபிஸ், ஸல்பர் ஆகிய இந்நான்கு ஔஷதங்களும் மிகமுக்கியமானவை. முதல் மூன்று ஔஷதங்களில் வியாதியஸ்தர் வலியினால் மிகவும் பலமாகக் கதறுவார். இம் மூன்றில் முதல் இரண்டு ஔஷதங்களில் குத்தும் வலிகளாலும் மூன்றாவதில் கொட்டும் வலிகளால் திடீரென்றும் பலமாகவும்! கீச்சுக் குரலிலும் வியாதியஸ்தர் கதறுவார். ஊனீர்களை உறிஞ்சும் விஷயமாக நமது ஔஷதங்களில் தலைசிறந்தது ஸல்பர். இதுமேலே உள்ள மூன்று ஔஷதங்களுக்கும் முன்னதாகவும் பிறகும் நன்றாக வேலை செய்யக் கூடியது. குறிப்பாக பிரயோனியாவுக்குப் பிறகு மிக நன்றாய் வேலை செய்யும்.

**குறிப்புகள் :—** நீர்க்கோர்வை, இருமல், சுரம், சுவாச கோச உறை வேக்காடு, சுவாசகோச வேக்காடு ஆகியவைகளில் பிரயோனியாவை 30 வீரியத்தில் (200 வீரியம் மிக அரிதாகத் தேவைப்படும்) ஒரே ஒரு வேளை கொடுத்தால் போதும், அற்புதமாய் வேலைசெய்யும். மறுபடி கொடுக்கக் கூடாது. கொடுத்தால் குணம் உண்டாகாது. பிரயோனியாக் கேசுகளில் நூற்றுக்கு 99 கேசுகள் இரண்டாம் வேளை ஔஷதம் கொடுப்பதால் ஈடுசெய்ய முடியாத அளவுக்குப் பாழாகி விடுகின்றன. ஆனால் சுரம் மட்டும் இதற்கு விதிவிலக்கு என்பதைக் குறித்துக் கொள்ளவும்.

எலும்பு மூட்டுகளில் ஏற்படும் காயங்கள் முதலானவைகளில் ஆர்னிகா வினால் ஒருவிதமான நன்மையும் ஏற்படாதபோது பிரயோனியா பல சமயங்களிலும் பயன் அளிக்கும்.

———



# காக்டஸ் க்ராண்டிப்ளோரஸ்

## (CACTUS GRANDIFLORUS)

**முன்னுரை :—** இறுக்கும் உணர்ச்சியுள்ள ஔஷதங்களில் இவ்வௌஷதத்தை அரசன் என்றே மதிக்கலாம். இது தேவைப்படும் எல்லா வியாதிகளிலும் இறுக்கும் உணர்ச்சி காணப்படுகிறது. விநோதமான, பயங்கரமான இவ்வுணர்ச்சி அல்லது வலி வியாதியஸ்தரின் தைரியத்தைக் குலைத்து தனக்குக் கெடுதல் நேரப்போகிறதென்று பீனைக்கும் கிலியை ஏற்படுத்துகிறது. இறுக்கும் உணர்ச்சி உள்ள பாகத்தில் அல்லது உறுப்பில் பல சமயங்களிலும் அதிக இரத்தம் சேர்ந்து விடும். அல்லது வேறு ஏதோ ஒரு இடத்திலும் அதிக இரத்தம் சேரலாம். சிற்சில சமயங்களில் மிகக் கடுமையான அளவில் அதிக இரத்தம் சேரலாம். இரத்த ஓட்டம் ஒழுங்காக இருக்காது. உடம்பில் சில இடங்கள் சூடாய் இருக்கும். வேறு சில இடங்கள் குளிர்ந்து இருக்கும். அடுத்த படியாக வேக்காடு. கடைசியாக இரத்தப் பெருக்கு. காக்டஸின் வியாதிகள் இந்த வரிசையிலே தோன்றும். அதிக இரத்தம் சேரும் போது அனேகமாக சுரம் தோன்றுவது கிடையாது; அப்படிச் சுரம் தோன்றினாலும் அல்பமாகவே இருக்கும் இது இவ் வௌஷதத்தின் சிறப்பான ஒரு குறி. மார்பு பற்றிய கோளாறுகளில் திணறிக்கொண்டு மூச்சுவிடுவதும் ஒரு முக்கியமான குறியே.

### பொதுவான குறிகள்

**தகுதி :—** அதிக இரத்தம் உள்ளவர்கள் அகோனைட்). **மனம் :—1.** பயம். சாவைப் பற்றிய பயம், தன் வியாதி தீர்க்க முடியாதது என்று நம்புதல். அல்ப காரணங்களாலும் பயப்படுதல். **2.** வருத்தமும் அதிகமாய்ப் பேச விரும்பாமையும். ஏக்கம் பிடித்து கடு கடுப்புடன்

இருத்தல் (இருதய வியாதி யுள்ளவர்களுக்கு சகஜம்). "மௌனமாய் இருத்தல். ஒருவார்த்தை கூடப் பேசமாட்டார், பதிலும் கொடுக்க மாட்டார்." கதறி அழுவார், எதற்காக என்று தனக்கே தெரியாது, ஆறுதல் கூறினால் அதிகமாகும்.

கடுமையான வலிகள் இருந்தாலும் வியாதியஸ்தர் சிறிது கூட கவலை கொள்ளாமல் இருப்பது ஒரு விந்தையான குறி.

**உடல்** :—பொது உடல் பலவீனமும் சோர்வும். நாடித் துடிப்பு ஒழுங்கில்லாமல் இருக்கலாம். உடம்பின் சூடு சராசரியை விடக்குறைந்த அளவில் பலநாட்கள் இருக்கும். மன உணர்ச்சிகளின் தன்மை சிறிதளவு அதிகமானாலும் படபடப்பு, படபடப்பு பலமாய் இருக்காது, ஒழுங்காகவும் இருக்காது. இரத்தவிசை குறைதல், தலையில் அல்லது மார்பில் சூடு; கைகளும் கால்களும் சில்லென்றிருக்கும், சில்லிப்பே அதிகமாய் இருக்கும். சுத்த இரத்தக் குழாய்களில் வீக்கமும் தொட்டால் வலியும். இறுக்கும் உணர்ச்சியுடன் வலிகள். அதிக இரத்தம் சேருதல். இரத்தப் பெருக்கு. திணறலுடன் மூச்சுவிடுதல். பயங்கரமான கனவுகள். கடினமான, கறுப்பு நிறமுள்ள மலம்.

**உபாதி கூடுதல்** :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—பலகுறிகள் இரவில் அதிகமாகும். மாதவிடாயில் போக்கு இரவில் நின்று விடும். பல கோளாறுகள் படுத்துக் கொண்டவுடனே தோன்றுகின்றன அல்லது அதிகரிக்கின்றன. "மார்பில் படபடப்பு நடக்கும் போது அல்லது இடது பக்கமாய்ப் படுக்கும்போது கூடுதலாகும். குளிர் (விசேஷமாகத் தலையில் கடுமையான இரத்தச் சேர்க்கையுடன் உள்ள குளிர்) ஒவ்வொருநாளும் ஒரேசமயத்தில்



அதாவது காலை 11 மணி அல்லது இரவு 11 மணிக்குத் தோன்றும். சில சமயங்களில் காலை 11 மணிக்கு, மற்றும் சில சமயங்களில் இரவு 11 மணிக்கும் தோன்றுவதும் உண்டு. "காலை 11 மணிக்குக் கடுமையான குளிர், தாகம், தலைவலி, தலை சூடாய் இருத்தல், மற்ற இடங்களில் தனியாகச் சூடு இல்லாமை ஆகியவை தோன்றுதல். தலையில் அதிக இரத்தம் சேர்ந்து உண்டாகும் வலி, ஓசையினாலும் வெளிச்சத்தினாலும் அதிகமாகும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—உச்சந்தலையில் தலை கீழே அமுக்கப் படும் உணர்ச்சி; அமுக்கினால் சௌகரியமாகும் (இது வினோதமாய் இருக்கிறதல்லவா!)

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**இறுக்கும் உணர்ச்சிகள்** :— இறுக்கும் உணர்ச்சி என்பது அனேகமாகச் சுருங்கிவிட்ட உணர்ச்சியையே குறிக்கிறது. ஆயினும் அழுத்தமாகக் கட்டப்பட்டிருத்தல், விறைப்பாய் இருத்தல், இழுத்தல், அமுக்குதல், கனம் ஆகிய உணர்ச்சிகளையும் குறிப்பிடும். தொண்டை, மார்பு, இருதயம், மூத்திரப் பை, மலப் பை, கருப் பை, யோனி முதலிய உறுப்புகளில் இறுக்கும் உணர்ச்சி. இவ்வுணர்ச்சி பல சமயங்களில் லேசாகத் தொடுவதினால் தோன்றும். "தசைகளில் லேசாக இழுத்தலும் சம்பந்தப்பட்ட இடங்களைத் தொட்டால் இறுக்கும் உணர்ச்சி உண்டாவதும்." இந்த உணர்ச்சி அனேகமாய் வலியுடன் இருக்கும்; சில சமயங்களில் வலி மிகக் கடுமையாகவும் இருக்கும். இதனால் வியாதியஸ்தர் பக்கத்து வீடுகளில் இருப்பவர்களுக்கும் கேட்கும்படி உறக்கக் கத்துவார் அல்லது கீச்சுக் குரலில் கத்துவார். இருதயத்தை இரும்புக் கைகளால் வேகமாகவும் இறுக்கியும் பிடித்துப் பிடித்து விடுவது

போல் தோன்றும்; அல்லது இரும்புக் கை இருதயத்தைப் பிடித்துக்கொண்டிருப்பதால் இருதயம் அதன் இயற்கையான வேலையைச் செய்ய முடியாமலிருப்பது போலவும் தோன்றலாம். "மார்பின் கீழ்ப்பாகத்தைச்சுற்றி ஓர் கயிற்றினால் இறுக்கக் கட்டியுள்ள உணர்ச்சி. கழுத்தில் நாடாவினால் இறுக்கக் கட்டியிருக்கும் உணர்ச்சியினால் மூச்சு அடைக்கும் (சங்கா தோஷத்தில்). உணவுக் குழாயில் இறுக்கும் உணர்ச்சியினால் விழுங்க முடியாது. தொண்டையில் இறுக்கும் உணர்ச்சியினால் அடிக்கடி விழுங்குவதுபோல் செய்தல். மூத்திரப் பையின் கழுத்தில் இறுக்கும் உணர்ச்சியினால் மூத்திரம் அடக்கப்படுதல். யோனியில் இறுக்கும் உணர்ச்சியினால் புணர்ச்சிக்கு உட்படமுடியாது. மார்பெலும்பின் நடுவில் அந்த இடங்களில் இரும்புக் கிடுக்கிகளால் நசுக்குவதுபோல் இறுக்கும் உணர்ச்சியும் மூச்சுவிடச் சிரமமும். தன் உடம்பு முழுவதுமே ஒரு இரும்புக் கூண்டினுள் போடப்பட்டு கூண்டின் கம்பிகள் ஒவ்வொன்றும் முறுக்கப்பட்டுக்கொண்டே இருப்பது போல் இறுக்கும் உணர்ச்சி.

கருப்பையில் கடுமையான பிடிப்புவலிகளும் இழுக்கும் வலிகளும்; இவைகளால் வியாதியஸ்தர் உறக்கக் கத்துவார். நீளமான தசைகளில் விறைப்பும், இழுக்கும் வலிகளும், இழுக்கும் வலிகள், விசேஷமாக இடது கையில், சருமம் விறைப்பாய் இருக்கும். மண்டைத் தோலில் விறைப்பு, நாளுக்கு நாள் அதிகமாகும்.

அமுக்குவதுபோல் அல்லது கனமான உணர்ச்சி. உபாதி குறைதல் என்னும் தலைப்பைப் பார்க்கவும். உச்சந்தலை அல்லது மார்பில் கனமாய் இருக்கும் உணர்ச்சி; கனம் இருப்பதுபோல் மார்பில் அமுக்கும் உணர்ச்சி. இரும்புக் கையினால் இறுகப் பிடிக்கப்பட்டு அதனால்



வழக்கம்போல் மார்பை அசைக்க முடியவில்லையென்று தோன்றுதல். தொண்டையில் பந்து அல்லது உருண்டையான பொருள் அடைத்துக்கொண்டிருக்கும் உணர்ச்சி, இதனால் அடிக்கடி விழுங்க ஆவல், ஆனால் மூச்சு அடைக்கும்; இடது கை மிகவும் மதமதப்பாய் இருக்கும்

**இருதயம் அதிகம் தாக்கப்படுதல் :—** காக்டஸ் "ஒரு இருதய ஔஷதம்". இருதயக் கோளாறுகளில் காக்டஸின் பல குறிகள் தோன்றுகின்றன. "இருதயப் பாகத்தில் இடைவிடாமல் வலி, இருதயத்தை இறுகக் கட்டி விட்டதுபோல் அல்லது இருதயம் துடிக்கப்போதுமான இடம் இல்லாததுபோல உணர்ச்சி." "இருதய வலிகள் மெதுவாகத் தோன்றும், கொஞ்சம் கொஞ்சமாய் விருத்தியாகும். பிறகு அதே போலக் கொஞ்சங்கொஞ்சமாகக் குறையும்." "மன உணர்ச்சிகள் அதிகமாகும் போது இருதயம் பறவைபோல் இறக்கை அடித்துப் பறக்கும் உணர்ச்சியுடன் படபடவென்று துடித்தல்." இரவிலும் பகலிலும் இடைவிடாத இருதயப்படபடப்பு; நடந்தாலும் இரவு நேரங்களில் இடது பக்கமாய்ப் படுத்தாலும் அதிகமாகும். "காக்டஸ் இருதய வேலையை மிதப்படுத்தி ஒழுங்காக்கி அதன் வேலையைச் சிக்கனமாக்கும்." (லிலியந்தால்).

**அதிக இரத்தம் சேருதல்: வேக்காடு: ஒழுங்கு இல்லாத இரத்த ஓட்டம்:** அதிக இரத்தம் சேருவதால் தோன்றும் தலைவலி, நரம்பு வலி; குறிப்பிட்ட சில சமயங்களில் வழக்கமாகத் தோன்றும்; வலப்பக்கமே இருக்கும், வலி கடுமையாவதும் துடிப்பது போலவும் இருக்கும். "தோன்ற முடியாத இடங்களில் பலமான நாடித் துடிப்புகள்." சூடான தலை, சிவந்த முகம், குளிர்ந்த உடல் (கோளாறுகளின் ஆரம்ப நிலை, சுவாசகோச வேக்

காடு) ஆகியவைகளுடன் அதிக இரத்தம் சேர்ந்த குளிர். முன்னுரை, உடல் என்னும் தலைப்புகளைக் கவனிக்கவும். இருதயத்தில் திடீர் வேக்காடும் நாட்பட்ட வேக்காடும். அதிக மன உழைப்பினால் தலைவலியில் சூடு ஏற்படுதல்.

**இரத்தப் பெருக்கு: கட்டிகள் உள்ள இரத்தம்:—** மூக்கு, சுவாசகோசங்கள், மலப்பை, வயிறு, மூத்திரப்பை ஆகியவைகளிலிருந்து இரத்தப் பெருக்கு, மூலங்களிலிருந்து இரத்தம் கொட்டுதல். காக்டஸின் இரத்தப் பெருக்குகளில் இரத்தம் மிகச் சீக்கிரத்தில் கட்டிகளாய் மாறும். **கீழே இழுக்கும் வலிகளுடன் மாத விடாயின் இடைக்காலங்களில் கருப்பையிலிருந்து கட்டிதட்டிய இரத்தம் வெளியாகும்.** "பெண்களுக்கு மூத்திரத் துவாரத்தை இரத்தக் கட்டிகள் அடைத்து விடும்போது மூத்திரம் வெளியாகத் தடை ஏற்படும், "பலமான இருதயத் துடிப்புகளுடன் வேகமாக இரத்தம் வெளிப்படும் இரத்தப் பெருக்கு, ஆனால் மனக்கவலையும் சுரமும் அகோனைட்டை விட குறைவாகவே இருக்கும்." (லிலியந்தால்). மாதவிடாயில் போக்கு கறுப்பாகவும் கட்டிகளுடனும் கீழே படுத்துக் கொண்டால் நின்றுவிடுவதாகவும் இருக்கும் (போஸிஸ்டா, காஸ்டிகம்).

**மதமதப்பு: ஊசி குத்தும் உணர்ச்சி: வீக்கம்:—** இடது கையில் மதமதப்பு. விரல்களில் ஊசிகுத்தும் உணர்ச்சி, "இடது கையில் மட்டும் வீக்கத்தை ஏற்படுத்தும் இருதய வியாதிகள்."

**இடது பக்கமே அதிகம் தாக்கப்படுதல்:—** இடது கை அதிகம் தாக்கப்படும் (மேலே பார்க்கவும்). இடது கையில் இழுப்பு வலிகள். இடது கை பலவீனமாய் இருத்தல். கைகளில் நீர்ச்சுரப்பு, இடது கையில் அதிகம். இடது தோள் பட்டையின் கீழே வலி (இருதயப் பட



டப்புடன்) ஆனால் தலையின் வலது பக்கத்தில் குறிப்பிட்ட சமயங்களில் வழக்கமாகத் தோன்றும் கடுமையான நரம்பு வலி.

### மற்ற குறிகள்

**நரம்பு வலி:—** பழக்கமான உணவு உட்கொள்ளத் தவறிய உடனே நரம்பு சம்பந்தமான வலிகள்; ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஏற்படும், ஆனால் மலேரியா சம்பந்தம் உள்ளதல்ல" (லிலியந்தால்).

**காசம்:—** மார்பில் அதிக இறுக்க உணர்ச்சி, கோழை வர ஆரம்பித்தவுடன் சௌகரியமாகும். மார்பில் அதிக கனம் இருப்பது போல் அமுக்கும் உணர்ச்சி.

**முறைச் சுரம்:—** குளிர் உள்ளபோது தாகம் இருக்காது; சூடு கண்டவுடன் குளிர் நீங்காது; தலையில் அதிக இரத்தம் சேருதல், சிவந்து உப்பிய முகம், மூச்சுத் திணறல் ஆகியவைகளும் காணப்படும். (உபாதி கூடுதல் என்னும் தலைப்பையும் பார்க்கவும்).

---

## கல்கேரியா கார்பானிகா
## (CALCAREA CARBONICA.)

முன்னுரை:— உடல்வாகை அனுசரித்துக் கொடுக்கப்படும் ஔஷதங்களில் **கல்கேரியா** கார்ப் மிகச் சிறந்தது. கடவுளின் படைப்புப் பொருள்களாகிய மனிதர்களுக்குக் குழந்தைப் பருவத்திலே தோன்றும் ஊட்டக் குறைவு, உண்ட உணவு உடம்பில் ஒட்டாமை ஆகிய கோளாறுகளை நீக்கும் சக்தி கிளிஞ்சல் ஓடுகளினுள்ளே மறைந்து இருக்கிறது என்னும் இரகசியம் ஹானிமனின் கூரிய அறிவினால் வெளிப்பட்டது. **வல்லமை உள்ளதே வாழ முடியும்** என்ற தத்துவத்தைப் பொய்யாக்கி வாழ்க்கைப் போராட்டத்தை

வெற்றிகரமாய் நடத்த எல்லோரையும் வல்லமை உள்ளவர்களாய் ஆக்குகிறது. உண்ணும் உணவிலுள்ள சுண்ணும்புச் சத்தைக் கிரகித்துக் கொள்ளும் சக்தி அழிந்து அதனுல் தோன்றும் வியாதிகளுக்கு அல்லோபதியில் சுண்ணும்புப்பொருள்களை அப்படியே கொடுத்து வருகிறுர்கள். இது மூடத்தனமான காரியம். ஹோமியோபதியிலோ சுண்ணும்புச்சத்து வீரியப் படுத்தப்பட்டு மிக நுண்ணிய அளவில் கொடுக்கப்படுகிறது. இதனுல் மனித உடலிலே தூங்கிக் கொண்டிருந்த சூட்சுமமானதோர் சக்தி தட்டி எழுப்பப்பட்டு சுண்ணும்புச்சத்து உடம்பில் ஒட்ட முடிகிறது.

## பொதுவான குறிகள்

**தகுதி :—மந்தகுணம், ஸோரா விஷமும் மேகக்கிரந்தி விஷமும் அதிகரித்துள்ள உடலுள்ளவர்கள். கல்கேரியா கார்ப் வியாதியஸ்தர் நல்ல நிறமாகவும் ஊளைச்சதை உள்ளவராகவும் பருமனுகவும் இருப்பார்.** குழந்தைகளும் வாலிபப் பருவத்திலுள்ளவர்களும் ஊளைச் சதைப் பிடித்து பருமனுகவும் கட்டிப்பிடிக்க முடியாதபடி வளருவார்கள். பழுப்பான தலைமயிரும் நீலக் கண்களும் நல்ல உடல் நிறமுமுள்ள பெண்கள். குழந்தைகளின் முகம் வெளுத்திருக்கும், ஆனுல் அல்ப காரணங்களாலும் சிவக்கும். தசைகள் உறுதியாய் இல்லாமல் தொள தொள வென்று இருக்கும்; அல்ப காரணங்களாலும் வியர்வை ஏற்படும்; இதனுல் உடனே நீர்க்கோர்வை தோன்றும். **அதிகச்சதை, அதிக இரத்தம் உள்ளவர் போல் சிவந்த தோற்றம், மிக வேகமாய் ஏற்படும் உடல் வளர்ச்சி, ஆகியவை இருந்தாலும் மிகச் சீக்கிரத்தில் களைப்பு ஏற்பட்டு மூச்சுத் திணறும் பெண்கள்.** மலச் சிக்கல் உள்ளபோது உடல் நலம் பொதுவாக நன்ருக இருக்கிறதென்று நினைக்கும் வியாதியஸ்தர்கள்.



**மனம் :—1. ஏக்கம்.** வருத்தம். அல்ப காரணங்களால் கூட அழுதல். **2. பயம்.** அல்ப காரணங்களாலும் பயப்படுதல். **தன் பகுத்தறியும் சக்தி அழிந்து விடுமென்றும் தன் மனக் குழப்பத்தைப் பிறர் கண்டு பிடித்து விடுவார்களென்றும் நினைத்துப் பயப்படுதல்.** பயங்கரக் கனவுகள். " குழந்தை இரவு 2 அல்லது 3 மணிக்கு விழித்துக் கொண்டு கதறியழும்; என்ன சொன்னுலும் அதற்குப் புரியாது, காலையில் அதை மறந்துவிடும்." ஏதோ ஒரு துரதிர்ஷ்டம் தனக்கு நேரப் போகிறதென்று நினைத்துக் கவலைப் படுதல். **3. அலட்சியம்.** பிறருடன் பேச வெறுப்பு. **4. பொய்த் தோற்றங்கள் :** நெருப்புப் பிடித்து எரிவதுபோல், சுண்டெலிகள், எலிகள் ஓடுவது போல். சாணக்குவியல், அழுகிய முட்டைகள், அல்லது வெடி மருந்து ஆகியவை பக்கத்தில் இருப்பது போல் மூக்குக்கு நாற்றம் தெரியும்.

**கல்கேரியா கார்ப் தேவைப்படும் குழந்தையைப் பற்றி** மேலும் சில குறிகள்." குழந்தை பிஞ்சில் பழுத்த பழம் போலவும் பிடிவாத குண முள்ளதாகவும் இடை விடாமல் அழுது கொண்டும் இருக்கும்." "இரவில் அடிக்கடி அழுது கொண்டு நிலையில்லாத தூக்கம்: தூங்கி எழுந்தவுடன் குழந்தை தன் தலையைப் பிருண்டிக் கொள்ளும்."

**உடல் :—**முக்கியமான குறிகள் கீழே சுருக்கமாய்க் கொடுக்கப் பட்டுள்ளன.

**ஒழுங்கு இல்லாத உடல் வளர்ச்சி, ஊட்டக் குறையும் உண்ணும் உணவின் சத்து உடம்பில் ஒட்டாமையும். அடி வயிறு பருத்தும் கல்போல் கடினமாகவும் ஆகும். உடலில் பல இடங்களில் சருமம் உறிந்து புண்ணுகும். முகம் வெளுத்து, உப்பி இருக்கும்.** உதடுகள், குறிப்பாக மேலுதடு, வீங்கும். **தலையில் வியர்வை. பாதங்கள்**

ஈரக்கசிவுடனும் சில்லென்றும் இருக்கும். "சருமம் பாம்பைத் தொடுவது போல் சில்லென்றும் இருக்கும்." உள்ளங்கைகளில் ஒட்டும் வியர்வை, முழங்கால்களில் ஒட்டும் வியர்வை, தசை சுருங்குவதும் இழுத்தலும், விசேஷமாகக் கை கால் விரல்களில். கை கால்களில் அடிக்கடி மத மதப்பு. மிக எளிதாக சுளுக்கு விழுதல், குறிப்பாக முதுகில், உடல் வேலை செய்தாலும் மன வேலை செய்தாலும் வெகு சீக்கிரத்தில் களைப்பு உண்டாகும். மூச்சு விடத் திணறல், குறிப்பாக உயரே ஏறும்போது. சிறிய வேலை செய்தாலும் மூச்சுத் திணறும். பல வீனமான இருதயம். மூத்திரம் பொதுவாகத் தெளிவாகவே இருக்கும், ஆனால் ஒரு விதமான கெட்ட நாற்றம் வீசும். வெள்ளை நிற முள்ள மலம். விடியற்காலையிலும் சாப்பிட்ட உடனேயும் பசி உண்டாகும். முட்டைகளைத் தின்ன அபரிமிதமான ஆவல். பாலிலும் மாமிசத்திலும் வெறுப்பு. புளித்த பாலாக வாந்தி செய்தல். புளிப்பான கழிவுகள். தூங்கும் போது வாயை மெல்லுதல், விழுங்குதல். வெளிச்சத்தில் கடுமையான கண் கூச்சம். கருமணிகள் விரிந்திருத்தல்.

உபாதி கூடுதல் :—குளிர், குளிர் காற்று, குளிர்ந்த தண்ணீரில் வேலை செய்தல், குளித்தல்; குளிர்ந்த பருவ காலம், குளிர்ந்த, ஈரக்கசிவுள்ள காற்று ஆகியவைகளால் உபாதிகள் அதிகமாகும், குளிர்ந்த. ஈரக்கசிவுள்ள காற்று உடம்பைத்துளைப்பது போல் இருக்கும். குளிப்பது, தண்ணீர் ஆகியவைகளை நினைத்தாலே பயம். பருவநிலையில் சிறிது குளிர் உண்டானாலும் ஒத்துக் கொள்ளாது. வெய்யிலையும் தாங்க முடியாது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- வேலைசெய்தால் அதிகமாகும். பலவீனம் என்னும் தலைப்பைப் பார்க்கவும். வயிற்றுப்போக்கு பொதுவாக பிற்பகலிலும் சாப்பிட்ட பிறகும் அதிகமாகும். தொண்டையில் வலியில்லாமல் கட்டியிருத்தல் காலையில் அதிகமாய் இருக்கும். கல்கேரியா கார்பின் வலிகள் அனேகமாகப் படுக்கையில் படுத்திருக்கும் போது அல்லது உட்கார்ந்திருக்கும் போது தோன்றும். சிறிது நேரம் சேர்ந்தாற் போல் கீழே வைத்துப் படுத்திருந்த பாகங்களில் காணப்படும்." நள்ளிரவுக்குப் பிறகும் விடியற்காலையிலும் தூங்கியெழுந்தவுடனும் அதிகமாகும். பால் குடித்த பிறகு, கைகளைத் தொங்கப் போட்டபிறகு. பௌர்ணமி நாட்களில், அமாவாசை நாட்களிலும். ஆடைகள் இறுக்குவதால்.

பளுவான சாமான்களைத் தூக்குதல், மூச்சுப் பிடித்து வேலை செய்தல், மன உழைப்பு (எழுத்து வேலை), உடம்பிலுள்ள நீர் வெளியேறுதல், வியர்வையை அடக்குதல், சருமக் கோளாறை உள்ளே அமுக்குதல், மாதவிடாய்ப் போக்கைத் தடை செய்தல், பயம், மனக்கிளர்ச்சி ஆகியவைகளால் தோன்றும் கோளாறுகள். "மன உணர்ச்சி சிறிதளவு அதிகமானாலும் ஏராளமான அளவு மாதவிடாய்ப் போக்குத் திரும்பவும் தோன்றும்" (ஸல்பர், ட்யுபர்குலினம்).

உபாதி குறைதல் :—வறட்சியுள்ள பருவ காலம். மல்லார்ந்து படுத்தால்; கீழே படுத்த பிறகு.

உபாதி கூடுதல், குறைவில் எதிர்க்குண முள்ள விளைவுகள். இவ் வௌஷதத்தின் வியாதியஸ்தருக்குக் குளிர் கொஞ்சங்கூட ஒத்துக் கொள்ளாது என்னும் குறியை ருசுப்படுத்துவது போல திறந்த இடங்களில் நடக்க ஆரம்பித்தவுடன் மன வருத்தம், கண்ணீர் வடிதல், தலைவலி, அடிவயிற்று உப்பிசம், இருதயப் படபடப்பு. வியர்வை, அதிகக் களைப்பு இன்னும் பல கோளாறுகளும் தோன்றும்," (க்ளார்க்) ஆனால் "(அறை

யில் உள்ள போது) சுத்தமான காற்றை சுவாசிக்க ஆவலுடன் விரும்புதல். அக் காற்று ஊக்கத்தையும், பலத்தையும் அளிக்கிறது. (பல்ஸடில்லா, ஸல்பர்.'') (அல்லென்).

விசேஷக் குறிகளின் விளக்கம்

**கோளாறுன எலும்பு வளர்ச்சி:**—எலும்புகள் சரிவர வளராமை; முதுகெலும்பும் நீளமான எலும்புகளும் வளைதல். கை, கால்கள் ஒழுங்கானபடி வளராமல் வளைந்திருக்கும். எலும்புகள் வீங்கி வளையும். எலும்பு மூட்டுகளில் வீக்கம், ஆனால் அவ்விடங்களில் சருமத்தின் நிறம் மாறுவதில்லை. ஒரு எலும்பில் சுண்ணாம்புச் சத்து (கால்ஸியம்—Calcium) மிகவும் குறைவாகவும், மற்றொரு எலும்பில் மிகவும் அதிகமாகி முண்டுகளுடனும் காணப்படும். எலும்பு வளர்ச்சியில் உள்ள கோளாறுகளினால் நிற்கும்போதும், நடக்கும் போதும் சிரமம் ஏற்படும்.

**ஊட்டக் குறைவு:**—உண்ணும் உணவு உடம்பில் ஒட்டாமை: எலும்புகளின் ஊட்டக் குறைவுடன் கல்கேரியா கார்பில் வியாதியஸ்தரின் அடிவயிறும் தலையும் மிகப் பருத்துக் கழுத்தும் கை கால்களும் மெலிந்திருக்கும். அடிவயிறு பானையைக் கவிழ்த்தது போல் இருக்கும்." பசியில் கோளாறு எதுவும் இல்லாமல் (அடி வயிற்று வீக்கத்துடன்) உடல் மெலிவு.'' நகங்கள் ஒழுங்காக வளருவதில்லை. கறடு முறடாய் இருக்கும். சருமம் காய்ந்து குளிர்ந்து இருக்கும். சருமம் தொள தொள வென்று தளர்ச்சி அடையும். தலைமயிர் அடை அடையாக உதிரும். தலை மயிர் பளபளப்புக் குறைந்து இருக்கும். உண்ணும் உணவு உடம்பில் ஒட்டவில்லை என்பது மலத்திலிருந்தும் தெரியும். மலம் வெள்ளையாகவும், சீரணமாகாத உணவுப்பொருள்களுடன் கட்டி



தட்டிய பாலுடனும் காணப்படும். பால் உடலுக்கு ஒத்துக் கொள்ளாமல் இடைவிடாத வாந்தி ஏற்படுதல்.

**பலவீனம்: மந்தகுணம்; தளர்ச்சி:**—1. பலவீனம். உடலும் உள்ளமும் களைத்துப் பலவீனம். கால்களில் பலவீனம், குதி கால்களில் பலவீனம். கழுத்தில் பலவீனம், முதுகில் பலவீனம், சுவாசகோசங்களில் பலவீனம், இருதயத்தில் பலவீனம், உடல் முழுவதுமே பலவீனம். இவ்வௌஷதம் தேவைப் படும் வியாதிகள் எல்லாவற்றிலும் பலவீனம் காணப்படுகிறது. இப் பலவீனத்தைப் பின் வரும் குறிகளால் அறியலாம். நடக்கவோ, நிற்கவோ முடியாது.'' குழந்தை நடமாட மறுக்கிறது. அனேகமாக எப்பொழுதும் படுத்துக் கொண்டே இருக்கிறது.'' அல்ப வேலை செய்தாலும் மூச்சுத் திணறுதல். சிறிது தூரம் நடந்தால் நிச்சயமாகப் பலவீனம் ஏற்படும். சுவாசகோச க்ஷயத்துடன் சேர்ந்து அல்லது முன்னதாகத் தோன்றும் பொதுவான பலவீனம். எவ்வித மனவேலை செய்தாலும் களைப்புத் தோன்றும். பேசினால் மார்பில் பலவீனம் ஏற்படுவது போல் தோன்றும். படித்தாலும் எழுதினாலும் கண்களில் பலவீனம். சிறிதளவு ஓசையையும் தாங்க முடியாது. இவ்வௌஷதத்தின் பலவீனம் பல வகைகளாக இருக்கும். சிலருக்குப் பலவீனம் கொஞ்சமாக இருக்கலாம். மற்றும் சிலருக்குப் பலவீனம் மிக அதிகமாகி மாடிப்படி ஏறுவதும் சிரமமாய் இருக்கும். ஒவ்வொரு படியைத் தாண்டும்போதும் அதிகக் களைப்பு உண்டாகும். இருதயத்தில் நடுங்குவது போன்ற அசைவு. கீழ் முதுகில் (சுளுக்கிக் கொண்டது போல்) வலி. உட்கார்ந்து விட்டு எழுந்திருப்பது மிகவும் சிரமமாக இருக்கும். முதுகெலும்புப் பலவீனத்தில் நேராக

நிமிர்ந்து உட்கார முடியாது; நாற்காலியில் சாய்ந்தே உட்காருவார், தலையும் பின் பக்கமும் நாற்காலியின் பின் பக்கத்தில் தாங்கப்பட்டு இருக்கும். கைகளில் திடீர்திடீரென்று பட்சவாதப் பலவீனம் தோன்றும். விரல்களிலும் இவ்விதமான பலவீனம் தோன்றும், குரல் வளை தளர்ச்சியுற்று ஒருவிதமான பட்சவாதப் பலவீனத்துடன் இருப்பது போல் குரல் கம்முதல், வலி இருப்பதில்லை. காலை வேளையில் அதிகமாகும். புணர்ச்சியில் சக்தி குறைதல், மிக சீக்கிரத்தில் இந்திரியம் வெளியே வந்து விடும், மானியின் விறைப்பு சிறிது நேரமே இருக்கும் ஆண் தன்மைக் குறைவு. சிறு வயதிலேயே மானியைக் கைகளால் ஆட்டி சிற்றின்பம் அநுபவித்ததால் ஏற்படும் கோளாறுகள் (லைகபோடியம், நக்ஸ் வாமிகா, ஸல்பர்) புணர்ச்சி செய்த பிறகு (விவாகமானவர்களுக்கு) ஒவ்வொரு தடவையும் உடலிலும் உள்ளத்திலும் அளவுக்கு அதிகமான பலவீனம். இரவில் வியர்வை. முதுகில் பலவீனம், உடல் நடுக்கம், மனக் குழப்பம், இருதயப் படபடப்பு, ஆகிய எல்லாக் கோளாறுகளுமோ அல்லது ஒரு சில மட்டுமோ ஏற்படலாம். (இக்குறிகள் ஆண், பெண் இருவருக்கும் ஏற்படக்கூடும். இக்காரணத்தால் பெண் மலடியாகவும் இருக்கலாம்.

**2. மந்த குணம்:—கல்கேரியா கார்ப்** வியாதியஸ்தர் மிகவும் மெதுவாகவே நடமாடுவார் (ஸல்பர் வியாதியஸ்தர் சுறுசுறுப்பாக நடமாடுவார்). தாமதமாகவே பல் முளைக்கும். பல் வளருவதும் தாமதமாகவே. நாக்கை அசைக்கக் கஷ்டமாய் இருப்பதால் தட்டுத் தடுமாறித் தெளிவு இல்லாமல் பேசுதல். எலும்புகள் கோளாறாக வளருதல். சீரணம் மெதுவாக ஆகும். புணர்ச்சி செய்யும்போது இந்திரியம் மிக மெதுவாக வெளிப்படும்.



**தளர்ச்சி:—** வேலை செய்த பிறகு உடல் களைத்துத் தளர்ச்சி ஏற்படும். புணர்ச்சி செய்த பிறகு புணர்ச்சிக் கருவிகள் தளர்ந்து இருக்கும். கருவுற்ற காலங்களில் உடல் தளர்ந்த நிலைமை. கருச் சிதைவு ஏற்படும் என்று தோன்றுதல். கனமான பொருள்களைத் தூக்கியதால் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு. சருமம் தொளதொளவென்று தளர்ந்திருக்கும். ஆண் தன்மைக் குறைவில் மானி சில்லிட்டும் தளர்ந்தும் இருக்கும். கருப்பையில் அழுத்தும் உணர்ச்சியுடனும் கீழே இழுக்கும் வலிகளுடனும் கருப்பை நழுவுதல், நின்று கொண்டு இருந்தால் அதிகமாகும்.

**சில்லிப்பு:—** சில்லிப்பு உடல் முழுவதும் இருக்கலாம்; அல்லது தலை, பாதங்கள், கால்கள், அடிவயிறு, வயிறு, கண்கள் ஆகிய ஒரு சில இடங்களில் மட்டும் இருக்கலாம். பாதங்களை ஈரத்துணியின்மேல் வைத்துக்கொண்டிருப்பது போல் சில்லிப்பு. உடம்பின் உள்ளே குளிர்ந்த உணர்ச்சி இருப்பதாகச் சொல்வார். தலையினுள்ளே வெவ்வேறு இடங்களில் பனிக்கட்டியை வைத்திருப்பதுபோல் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் சில்லிப்பு; இத்துடன் முகம் வெளுத்து உப்பி இருக்கும். மூக்கு, முகவாய்க்கட்டை, காதுகளின் நுனி ஆகியவை சில்லென்றும் இருக்கும். இரவில் படுத்திருக்கும் போது பாதங்களில் சில்லிப்பு. குளிர் ஒத்துக்கொள்ளாது. மண்டைத் தோலில் குளிருவதுபோல் இருக்கும். இதனால் தலையைத் துணியினால் சுற்றிக் கொள்வார். வியர்வை உள்ள இடங்களில் சில்லிப்பாக இருக்கும். தலையில் ஏராளமான குளிர்ந்த வியர்வை. கால்களிலும் ஏராளமான குளிர்ந்த வியர்வை. கைகளில் சில்லிப்புடன் பட்சவாதம்.

**அதிக இரத்தம் சேருதல்:**— சில சமயங்களில் தலை சூடாகவும் (அதிக இரத்தம் சேருவதால்) மற்றும் சில சமயங்களில் சில்லென்றும் இருக்கும். சுரத்தில் தலையில் ஏராளமான வியர்வை தோன்றி அதனால் தலை மட்டும் சில்லென்றும் மற்ற இடங்கள் சூடாகவும் இருக்கும். உடலின் வெளிப்புறத்தில் சில்லென்றும் உட்புறத்திலே சூடாகவும் இருத்தல். உள் உறுப்புகளிலே (மார்பு; வயிறு) அதிக இரத்தம் சேரும்போது கைகளும் கால்களும் பனிக்கட்டிபோல் குளிர்ந்து விடும். சூட்டுடனும் மூளையைக் கலங்க வைக்கும் கடுமையான தலைவலியுடனும் தலையில் அதிக இரத்தம் சேருதல்; அத்துடன் முகம் சிவந்து உப்பி இருக்கும்.

**வியர்வை:**—தலையில் ஏராளமான வியர்வை, குறிப்பாகத் தூங்கும்போது, ஏற்பட்டுத் தலையணையை நனைத்து விடும். (ஸானிகுலா) பெரிய தலையும், மூடாத உச்சிக் குழியும் உள்ள சிறுவர்களுக்கு தலையில் ஏராளமாக வியர்வை. கல்கேரியா கார்பில் வியர்வை அநேகமாகத் தலையின் பின் பக்கத்திலும் முன் பக்கத்திலும் இருக்கும். ஸைலிஷியாவில் வியர்வை தலைமுழுவதுமே இருக்கும். கல்கேரியா கார்பில் தலை வியர்வை பல சமயங்களிலும் பெரிய முத்துக்களைப் போலவும் மிக ஏராளமாகவும் இருக்கும். சிற்சில சமயங்களில் வியர்வை முகத்திலும் கழுத்திலும் வழிந்தும் ஓடலாம். ஒழுங்கு இல்லாத அல்லது ஒரு சில இடங்களில் மட்டும் வியர்வை. உதாரணமாக மானி, பிடரிக்கழுத்து, மார்பு, அக்குள்கள், உள்ளங்கைகள், முழங்கால்கள். பாதங்கள் ஆகிய இடங்களில் ஏதோ ஒன்றில் மட்டும், இரவில் வியர்வை, முக்கியமாக மார்பில். சுவாசகோச க்ஷயம் உள்ளவர்களுக்கு இரவில் வியர்வை. இவ்விதமான வியர்வைகளில் வியர்வை உள்ள இடம் சில்



லென்று தென்படுவது கவனிக்கத்தக்கது என்று நாஷ் குறிப்பிடுகிறார். குறிப்பாகக் கால்கள் குளிர்ச்சியாக இருக்கும்.

**புளிப்பு:**— புளிப்பான ஏப்பம்; புளிப்பான வாந்தி; புளிப்பான மலம்; உடலே புளிப்பு நாற்றம் வீசும். ஸல்பரில் வியாதியஸ்தர் உடல் கெட்ட நாற்றம் வீசும். இரவில் ஏராளமான வியர்வை, புளிப்பாகவும் இருக்கலாம் அல்லது ஒருவித வாசனையும் இல்லாமலும் இருக்கலாம். பெரிய பெரிய தயிர்க் கட்டிகளாக புளிப்பு நாற்றமுள்ள வாந்தி.

**சுரப்பிகள், அதிகம் தாக்கப்படுதல்:**— கீழ்த் தாடை, காதுகளின் கீழ், அரையிடுக்கு, முகம், கழுத்து ஆகிய இடங்களிலுள்ள சுரப்பிகளில் வேக்காடும், வலியுள்ள வீக்கமும் தோன்றி அவை கல்போல் கடினமாகுதல். இவைகளுடன் காதுகளிலிருந்து சீழ் வடிதல், காது கேட்பது குறைவாகவும் இருந்தால் இவ்வௌஷதம் நல்ல குணமளிக்கும். அடி வயிற்றிலுள்ள சுரப்பிகளில் (க்ஷயத்துடன் சம்பந்தப்பட்டிருக்கலாம்) வீக்கமும் கல் போல் கடினமாகுதல்.

**கெட்ட சதை வளர்ச்சி: தடித்தல்: கடினமாகுதல்:**— மூக்கு, காது, யோனி, கருப்பை, மூத்திரப் பை ஆகியவைகளில் கெட்ட சதை வளருதல். முகம், கழுத்து, விரல்கள் ஆகிய இடங்களில் பாலுண்ணி. கல்கேரியா கார்பின் பாலுண்ணிகள் வேக்காட்டுடன் புண்ணாகிக் கடினமாகவும் வலியுடனும் இருக்கலாம். செவிப்பறை தடித்துக் காது கேட்பது குறைவாகும் அல்லது கோளாறாகும். முகத்தில் அல்லது மண்டைத் தோலில் அடை அடையாகக் கனமான பொருக்குகள் ஏற்பட்டு அவைகளின் அடியிலே மஞ்ச

ளான சீழ் இருக்கும், அல்லது இவ்வகையான பொருக்குகள் முதலில் பின் தலையில் தோன்றி அங்கிருந்து முகத்திற்கும் பரவும்; அல்லது மண்டைத்தோலில் ஆரம்பித்துக் கீழே முகத்தில் பரவும்; குழந்தைகளின் மண்டைத் தோலில் சாக்கட்டிபோல் வெண்மையான பொருக்குகள்; குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் மண்டைத் தோலிலும், முகத்திலும் தோன்றும் கரப்பான் படையில் தூங்கி எழுந்தவுடன் குழந்தை தன் தலையைப் பலமாகச் சொறிந்து கொள்ளும். பாரிங்டன் குறிப்பிடுவது போல இது வேலையினால் வியாதி அதிகமாவதன் குறிகளில் ஒன்று. தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வதும் ஒரு வேலையே, இமைகளில் வேக்காடும், வீக்கமும் ஏற்பட்டு ஏராளமான பீளை உற்பத்தியாகி அதனால் இரவில் இமைகள் ஒட்டிக்கொள்வதும் இமை மயிர்கள் உதிர்ந்து போவதும் ஏற்படும். சருமம் காய்த்துப்போன இடங்களில் ஏற்படும் வீக்கங்களில் வலியுடன் தோல் உறிதலும் எரிச்சலும். குழிப்புண்கள் (ஆழமாய் இருத்தல், பவுத்திரம் போல் இருத்தல், அழுகுதல்) புண்களின் வரம்புகளும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் கல்போல் கடினமாய் இருத்தல். (இவ்விதமான குழிப்புண்கள் விஷத்தன்மை வாய்ந்தவை) மூக்குத் துவாரங்கள் புண்ணாகவும், பொருக்குகள் நிறைந்தும் இருக்கும்.

**புண்ணாகுதல்:**— உள்ளும் புறமும் கல்போல் கடினமாகவுள்ள புண்கள். எரிச்சலுடனும் குத்து வலிகளுடனும் உள்ள புற்று வியாதி சம்பந்தமான குழிப்புண்கள். வியாதி பிடித்த சருமம் சிறு காயமும் சீழ்ப்பிடித்தல். கண்ணின் கரு விழியில் புண். சுவாசகோசங்களில் புண். சுவாசகோச க்ஷயத்தில் பெரிய குழிகள் ஏற்பட்ட சமயத்தில் உபயோகமாகும்.



**தோல் உறிதல் :**—பல இடங்களில் தோல் உரியும். சிறு குழந்தைகளுக்கு மலம் புளிப்பாகவும். காரமாகவும் வெளியாவதால். மலம்பட்ட இடங்களில் தோல் உரிதல். ஆசன வாயிலும் ஆசனத் தட்டுகள், தொடைகள் ஆகியவைகளின் இடுக்குகளிலும் தோல் உரிதல். பாதங்களில் ஏற்படும் வியர்வையினால் அவ்விடங்களில் புண் உண்டாகுதல். சிறு பெண் குழந்தைகளுக்குத் தோல் உரியச்செய்யும் குணமுள்ள வெள்ளை ஒழுக்கு. வெள்ளை ஒழுக்கினால் அரிப்பும், புண்ணும் தோன்றும்.

**பிடிப்பு; இழுக்கும் வலிகள் :**—உடல் முழுவதும் பிடிப்பு, அதாவது விரைத்து இருத்தல். ரஸ் டாக்ஸில் இருப்பது போல் இவ் வௌஷதத்திலும் வியாதியஸ்தர் நகர ஆரம்பித்தவுடன் உடலில் பிடிப்பும் தண்ணீரில் வேலை செய்ததினால் உபாதி கூடுதலாவதும் காணப்படுகின்றன. நகர ஆரம்பித்த உடன் எலும்பு மூட்டுகளில் பிடிப்பு. ஆகையினால், வாத ரோகத்தில் இவ்வௌஷதம் தேவைப்படும். பல சமயங்களில் ரஸ் டாக்ஸினால் குணம் ஏற்படாத போது இது உபயோகப் பட்டிருக்கிறது. கை, கால்களில் முக்கியமாகக் கை. கால் விரல்களில் இழுக்கும் வலி.

**விநோதமான நாக்குச் சுவை :**—வியாதி உள்ளபோதோ அல்லது வியாதி நீங்கி உடல் பழைய நிலைமைக்குத் திரும்பும் போதோ முட்டைகளைத் தின்ன அளவுகடந்த ஆவல். கரிக் கட்டை, சாக்கட்டி அல்லது இவை போன்ற சீரணமாகாத பொருள்களைத் தின்ன ஆவல் படுதல் (அலுமினா). உப்பிட்ட பண்டங்களிலும், ஒயினிலும் விருப்பம் (மாமிசத்தில் வெறுப்பு, பால் ஒத்துக் கொள்ளாது).

**குறிப்பிட்ட நாட்களில் தோன்றுதல் :**—அமாவாசை

நாட்களிலும், பௌர்ணமி நாட்களிலும் தட்சிணாயண' உத்தராயண காலங்கள் முடியும் நாட்களிலும் உபாதிகள் கூடுதலாகும்.

**தூக்கம் கெடுதல்:**—யோசனை அல்லது சிற்றின்பக் கனவுகள் அல்லது பயங்கரமான கனவுகள் ஆகிய காரணங்களால் தூக்கம் வராமை அல்லது அடிக்கடி கலைக்கப்படுதல். சில வியாதிகளுக்கு முன்னதாகவும் மற்றும் சில வியாதிகளுக்குப் பிறகும் பல நாட்களுக்கு தூக்கம் வராமல் இருக்கும் நிலைமைகளில் இவ்வௌஷதம் உபயோகமாவதாக பாரிங்டன் குறிப்பிடுகிறார். இவ்வௌஷதத்தை 30 வீரியத்தில் மூன்று மணிக்கு ஒரு தடவையாக பகல் நேரத்தில் சில வேளைகள் கொடுக்கலாம் என்று அவர் சிபாரிசு செய்கிறார். இதனால் அன்று இரவு நல்ல தூக்கம் உண்டாகும்.

**வலது பக்கமே அதிகம் தாக்கப் படுதல்:**—பொதுவாக வியாதிகள் வலப்பக்கத்தையே தாக்குகின்றன. தலையின் வலதுபக்கம், முகத்தின் வலது பக்கம், வலது கண், பிறப்பு உறுப்புகளின் வலது பக்கம், வலப்பக்க முதுகு, வலப் பக்க மார்பு, வலது கை ஆகியவை. சுவாசகோசக்ஷயத்தில் வலது சுவாச கோசத்தின் நடுப் பாகத்தில் வியாதி உள்ளபோது, இவ்வௌஷதம் தேவைப்படும். வலது காதின் பின்பக்கத்தில் சருமக் கோளாறு.

## மற்ற குறிகள்

"உணவு உட்கொண்ட மறுகணமே பசியும் வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சியும். விடியற் காலையிலும் இக்குறி காணப்படலாம்." (காலை 11 மணிக்கு, ஸல்பர்) காலையில் அடிக்கடி பசி ஏற்படுவதும் ஒவ்வொரு தடவையும் சிறிதளவே உட்கொள்ள முடிவதும். உள்



மூச்சு இழுக்கும் போதும் கையினால் தொட்டாலும் மார்பில் வலி. உயரமாகவும் மெலிந்தும் மிக வேகமான வளர்ச்சியும் உள்ள இளைஞர்களுக்கு ஏற்படும் சுவாச கோச வியாதிகள்; அநேகமாக வலது சுவாச கோசத்தின் மேல்பாகமே தாக்கப்பட்டிருக்கும், (ஆர்ஸனிகம்—இடது சுவாசகோசத்தின் மேல்பகுதி, மைரிஸ்டிகா, ஸல்பர்). உள்ளங்கைகள் மிருதுவாகவும் சூடாகவும் ஈரக் கசிவுடனும் இருக்கும். ஆழ்ந்து சுவாசிக்க வேண்டும் என்ற தூண்டுதல் திடீரென்று ஏற்படும். உட்கார்ந்திருக்கும் போது கால்கள் மறத்துப் போய் விடுதல். குரல்வளை, பெரிய சுவாசக் குழாய், சிறிய சுவாசக் குழாய்கள் ஆகியவைகளில் ஏராளமான கோழை இருப்பது போல் ஓசை. கல் தச்சர்களுக்கு ஏற்படும் சுவாச கோச க்ஷயம். அளவு மீறிய புணர்ச்சி, இயற்கைக்கு விரோதமான முறைகளில் சிற்றின்பம் அனுபவித்தல் ஆகிய காரணங்களால் முதுகெலும்பில் வேதனை. கைகளில் வெடிப்பு, தாய்ப்பால் மிக அதிகமாகச் சுரத்தல் அல்லது அடக்கப் படுதல். கை விரல்களைச் சுற்றிக் கீல்வாயு சம்பந்தமான சிறு முண்டுகள்.

**காக்கை வலிப்பு:**—முன் அறிவிப்புக் குறி வயிற்றின் உட்புறத்திலே தோன்றி மேலே செல்லும். வலிப்பு ஏற்படுவதற்கு முன் கைகளில் சுண்டெலி ஓடுவது போன்ற உணர்ச்சி (ஸல்பர்). நாட்பட்ட சருமக் கோளாறை அடக்கியதாலும் அல்லது அளவு மிஞ்சிய புணர்ச்சியாலும் ஏற்படும் வலிப்புகள் (ஸல்பர்)

**கருவிழிகள் மங்குதல்:**—பால்போல் வெள்ளையாகும் அல்லது நீலமாகும். இக் கோளாறுக்கு இது ஒரு முக்கியமான ஔஷதம்.

**மூத்திரக் காய்களிலும், மூத்திரப்பைகளிலும் கற்கள்:**-

கல்கேரியா கார்புக்கு இக் குற்கலை வெளியேற்றும் வல்லமை உண்டு. மூத்திரம் இரத்தம் போல் சிவந்து அல்லது வெண்மையான வண்டலுடன் மங்கிய சிவப்பு நிறமாய் இருக்கும். பாத்திரத்தில் பிடித்து வைத்தால் சிறிது நேரத்தில் சுண்ணும்புத் தண்ணீர் போல் குழம்பி இருக்கும்.

**முறைச்சுரம் :** குளிர் உள்ளபோது தாகம். சூடு. வியர்வை ஆகிய நிலைமைகளில் தாகம் இருப்பதில்லை (சூடு ஏற்படும் போது சில சமயம் தாகம் இருக்கலாம்) சுரத்திற்குப் பிறகு மறுபடி குளிர் ஏற்படும்; கைகள் சில்லென்றுகும். உடம்பில் உள் ளூரக் குளிர் இருக்கும். சூடும் குளிரும் மாறி மாறி வருதல்.

**வெள்ளை ஒழுக்கு :** பால் போன்ற வெண்மையான கழிவு எரிச்சலுடனும் அரிப்புடனும் வெளிப்படும். சிறு பெண் குழந்தைகளுக்கும் பருவமடையும் தருணத்திலுள்ள பெண்களுக்கும் ஏற்படலாம்.

**மாத விடாயில் அதிகப் போக்கு ;** மாத விடாய் அடிக்கடி தோன்றும். அதிக நாள் நீடிக்கும். போக்கும் அதிகமாக இருக்கும்.

**உறவு :**—பெல்லடொன்ன முற்றினல் கல்கேரியா கார்ப். நைட்ரிக் ஆஸிட், நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா, ஸைலீஷியா ஆகியவைகளுக்குப் பிறகு கல்கேரியா கார்ப் நன்ருக வேலை செய்யும். ஸல்பர், நைட்ரிக் ஆஸிட் ஆகியவைகளுக்கு முன் கல்கேரியா கார்ப் கொடுக்கக் கூடாது. கல். கார்பும், பிரயோனியாவும் பகை ஔஷதங்கள். ஆகவே பிரயோனியாவுக்கு முன்போ, பிறகோ கல். கார்பைக் கொடுக்கக்கூடாது.

**ஒப்பிடுதல் :** குழந்தை தூங்கும் போது மென்று விழுங்குகிறது (அமில் நைட்ரேட், பிரயோனியா, இக்னேஷியா). உச்சந் தலையில் எரிச்சல் (பாஸ்பரஸ், ஸல்பர்.



சிறு பெண் குழந்தைகளுக்கு வெள்ளை ஒழுக்கு (கன்.ஸடீவா) மாமிசத்தில் வெறுப்பு (மெர். விவஸ், பல்ஸடில்லா). இடுப்பைச் சுற்றி ஆடைகளை இறுகக் கட்டமுடியாது (லேக போடியம், நக்ஸ் வாமிகா) உள்ளங்கால்களில் எரிச்சல் (சாமோ, ஸல்பர்) இமைகளில் நாட்பட்ட வேக்காடு (ஆண்டிம் க்ரூடம், ஆர்ஸனிகம் ஆல்பம், ஸல்பர்) கல். கார்பில் சிறிது வேலை செய்தாலும் வியர்வை தோன்றும். ஸேபியாவில் வேலை செய்துவிட்டு உட்காந்திருக்கும் போது வியர்வை தோன்றும். தலையிலும் முகத்திலும் மட்டும் வியர்வை (அர்ஜ். நைட், பாஸ்பரஸ், ஸெலெனியம்). ரஸ் டாக்ஸில் தலை, முகம் தவிர மற்ற இடங்களில் வியர்வை.

**குறிப்புகள் :** அமாவாசை அல்லது பௌர்ணமி நாட்களில் கல். கார்பைக் கொடுக்கக்கூடாது. இந்நாட்களிலே இவ்வௌஷதத்தின் வியாதிகள் அதிகமாவது இதற்குக் காரணம். துரதிர்ஷ்டவசமாக பௌர்ணமி யன்று (கவனக் குறைவுதான் காரணம்). ஒரு கேசுக்கு கல். கார்பை 200 வீரியத்தில் ஒரு வேளை கொடுத்து விட்டேன். அதனல் வியாதியஸ்தர் உடலில் ஏற்பட்ட கெடுதல்களை நீக்க மிகவும் பாடுபட வேண்டி வந்தது. சிறு குழந்தைகளுக்கு கல். கார்பை அடிக்கடிகொடுக்கலாம். என்று அல்லென் சொல்லுகிருர். மூன்று அல்லது நான்கு வேளைகளுக்குமேல் எந்தக் குழந்தைக்கும் கொடுக்கக் கூடாது என்பது என் அபிப்பிராயம். பெரியவர்களுக்கு ஒருபொழுதும் இரண்டாவது வேளை கொடுக்கக்கூடாது. முதல்வேளை ஔஷதத்தினல் ஏற்படும் நன்மையை இரண்டாம் வேளை ஔஷதம் அழிப்பதுடன் கெடுதலையும் செய்யும் என்று அல்லென் சொல்லுகிருர். இரத்த விசை அதிகமாயிருந்த ஒருவருக்கு நான் கல். கார்பில் ஒருவேளை கொடுத்தேன். இரண்டுமாதங்கள் வரை வியாதி குறைந்து கொண்டே வந்தது. அதன் பிறகு அபிவிருத்தி காணுததால், அதே ஔஷதத்தை மறுபடி கொடுத்தேன். இதனல் முன்னிருந்த குறிகள் புயல் காற்

றைப்போல் கடுமையாகத் திரும்பவும் வந்துவிட்டன. உண்மை இப்படி இருந்தபோதிலும இவ்வௌஷதத்தை உயர்ந்த வீரியங்களில் அடிக்கடி கொடுத்து வியாதியஸ்தர்களை யமன் உலகுக்கு அனுப்பி வரும் சில ஹோமியோபதியர்கள் இருந்து வருகின்றனர்.

சுவாசகோச க்ஷயத்தில் இவ் வௌஷதத்தை இரண்டாம் வேளை கொடுப்பது அனேகமாகக் கெடுதலையே விளைக்கும். இவ்விதக் கேசில் இவ்வௌஷதம் தேவைப்படும் என்று தோன்றினால் 30 வீரியத்தில் ஒரே ஒரு வேளை மட்டும் கொடுக்க நான் சிபாரிசு செய்கிறேன். நீங்கள் இதைவிட உயர்ந்த வீரியத்திலும் கொடுக்கலாம். அடிக்கடியும் கொடுக்கலாம். ஆனால் ஈடு செய்ய முடியாத கெடுதல் நேர்ந்து விட்டால், ஏன் என்று என்னைக் கேட்கக் கூடாது.

---

## கல்கேரியா ப்ளூவாரிகா

## (GALCAREA FLUORICA)

**முன்னுரை:**—ஷுஸ்லர் அவர்களின் உயிர் உப்புகளில் இதுவும் ஒன்று. ஷுஸ்லர் இதைப் பிரபலப் படுத்தியதற்கு முன் இவ்வௌஷதம் உபயோகப்பட்டதே இல்லை எனச் சொல்லலாம். 'எலும்பு உப்பு' என்ற அடைமொழி இதற்கு உண்டு.

### பொதுக் குறிகள்

**தகுதி:**—எலும்புகளில் ஒழுங்கான வளர்ச்சி இல்லாமை. எலும்புகளில் வீக்கம், கல் போல் கடினமான சுரப்பிகள், அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கிச் சுருட்டிக் கொள்ளுதல். இக் கோளாறுகள் உள்ள வியாதிகள் மேகக் கிரந்தி, பிறவியிலிருந்தே மேகக் கிரந்தி. க்ஷயம்.

**மனம்:**—அதிகச் சோர்வு, தான் ஏழையாகி விடுவோம் என்று காரணமில்லாமல் பயப்படுதல்.



**உடல்:**—பற்களின் எனுமல் (Enamel) பொருள் குறைதல். வாய் மிகவும் காய்ந்திருக்கும். வயிற்று உப்பிசம். சிறு குழந்தைகளின் வாந்தி. சீரணமாகாத உணவு வாந்தி செய்யப்படும். உடல் வெளுத்து விடுதல். சருமத்தில் வெடிப்பு. உள்ளங்கைகளில் வெடிப்பு. சருமம் கரடு முரடாகவும் காய்ந்தும் இருக்கும். மலச் சிக்கலில் மலத்தைக் கழிக்க முடியாமை. மூத்திரம் அளவு குறைந்து நிறம் கறுத்து நாற்றம் வீசும். கல் போல் கடினமான வீக்கங்கள். அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்குதல் அல்லது சுருட்டிக் கொள்ளுதல்.

**உபாதி கூடுதல்:**—ஈரக் கசிவுள்ள பருவம், குளிர் காற்று வீசுதல், பருவ நிலைமையில் ஏற்படும் மாறுதல்கள் ஆகியவைகளால்.

**உபாதி கூடுதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே): சிரமப்பட்டு உடல்வேலைசெய்தால் முதுகுவலி அதிகமாகும் இளைப்பாறிய பிறகு வலி கூடுதல். சிறிது அசைந்தாலும், சூட்டினாலும் சௌகரியம் ஏற்படும். இவ் விஷயத்தில் ரஸ் டாக்ஸைப் போல் இருக்கிறது; ரஸ் டாக்ஸ் குணம் செய்யத் தவறும்போது கல் ப்ளூவார் பயன்படும். தொண்டை வலி, குளிர்ந்த தண்ணீர் குடித்தால் கூடுதலாகும்.

**உபாதி குறைதல்:**—சூட்டினால், சூடான தண்ணீர் குடித்தால், உடம்பைத் தேய்த்து விட்டால் சௌகரியம் ஏற்படும்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

**கல் போல் கடினமாகுதல்:**—வீக்கங்கள் கல் போல் கடினமாய் இருக்கும். தொண்டைச் சுரப்பிகள் வீங்கிக் கல் கடினமாய் இருக்கும் போது பாரிடா கார்பினால் பயன் ஏற்படாவிட்டால். ஸ்தனங்களிலே கடினமான உருண்டைகள். நாக்கில் வேக்காடு ஏற்பட்ட பிறகு

அது கடினமாக மாறுதல். கழுத்துப் பக்கமுள்ள சுரப்பிகள் கல்போல் கடினமாகுதல். விரைகள் கடினமாகுதல். பறங்கிப் புண்ணில் புண்ணைச் சுற்றிலும் கடினமாக இருத்தல். எலும்புகளிலிருந்து வெளியாகும் கழிவுகள் சீக்கிரத்தில் கெட்டிப்பட்டு உருண்டைகள் போல் மாறுதல். **குழிப் புண்கள், வீக்கம்** என்னும் தலைப்புகளையும் பார்க்கவும். புண்களும் வீக்கங்களும் கூட கடினமாகும் தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன.

**ஒழுங்கில்லாத எலும்பு வளர்ச்சி:**—விசேஷமாகப் பற்களில்; பற்களின் எனாமல் குறைவாக இருக்கும். பற்களில் சொத்தை விழுதல். எலும்புகளின் வியாதிகள்; அழுகுதல்; மேகக் கிரந்தியினால் ஏற்படும் அழுகுதல். எலும்புகளில் சீழ்ப் பிடித்தல்.

**வீக்கம்;**—எலும்பு மூட்டுகளில் வீக்கங்கள். நாட்பட்ட எலும்பு மூட்டு வீக்கம், குறிப்பாக முழங்கால் மூட்டு, தாடை அல்லது அதன் கீழ்ப்புறத்தில் கடினமான வீக்கம். மேகக் கிரந்தி சம்பந்தமான எலும்பு வீக்கம். இரைப்பை வீக்கம். அசுத்த இரத்தக் குழாய்களின் வீக்கம். அல்லது அவை சுருட்டிக் கொள்ளுதல். பெண்களின் பிறப்பு உறுப்புகளிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் சுருட்டிக் கொள்ளுதல். கால்களின் ஆடு தசைகளிலே சுருட்டிக் கொள்ளுவதும், இழுத்தலும். சிறு குழந்தைகளுக்குத் தொடையெலும்பு வீங்குதல். விரல் எலும்பு மூட்டுகளில் கீல் வாயு சம்பந்தமான வீக்கங்கள்.

**புண்ணாகுதல் : சீழ்ப் பிடித்தல் :**—எலும்புகளில் புண்ணாகுதல், மண்டைத் தோலில் புண்கள், கடினமான விளிம்புகளுடன் இருக்கும். விளிம்புகள் உயர்ந்து கடினமாகிச் சுற்றியுள்ள சருமம் வீங்கி ஊதா நிறமடைந்துள்ள புண்கள், கெட்டியான, மஞ்சள் நிறமுள்ள சீழை



வெளிப்படுத்தும், தூங்கி வழியும் குணமுள்ள பவுத்திரச் சிரங்குகள், உட்காதில் நாட்பட்ட சீழ். கல்போல் கடினமாக மாறிய இடங்கள் சீழ் பிடிக்கும்போல் தோன்றுதல்.

**வெடிப்புகள் :**—சருமத்தில் வெடிப்புகள். வலியுடன் அல்லது வலி இல்லாமல் நாக்கில் வெடிப்புகள். ஆசனவாயில் வெடிப்பு. ஆசனவாயில் அரிப்பு, கடினமான மூல முளைகள், இரத்தப் பெருக்கெடுக்கும்; கீழ் முதுகில் களைப்புடன் வலி.

**தளர்ச்சி :**—உள்நாக்குத் தளர்ந்து தொண்டையில் குத்தும் உணர்ச்சி ஏற்படும். கீழ் இழுக்கும் உணர்ச்சியுடன் கருப்பை நழுவுதல். பற்களில் அளவுமீறிய ஆட்டம், வலி இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்.

### மற்ற குறிகள்

குழந்தைகளின் தொண்டை வேக்காடு—விட்டு விட்டு இருமல்—" க்ஷயரோக விஷப் பொருள் இருதயத்தையும் இரத்தக் குழாயையும் தாக்குதல்."

**குறிப்பு :**—கல். ப்ளூவார் மெதுவாகவே வேலை செய்யும். இவ்வௌஷதத்தை அடிக்கடி கொடுப்பது கூடாதென்று போரிக் போதிக்கிறார்.

---

## கல்கேரியா பாஸ்பாரிகா

## (CALCAREA PHOSPHORICA)

**முன்னுரை :**—கல். கார்பைப் போலவே கோளாறான உடல் வளர்ச்சிக்கு இதுவும் ஓர் சிறந்த ஔஷதம். இவ்விரண்டின் குணம் குறிகள் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருக்கின்றன. ஆயினும், கல். பாஸின் குறிகள் மிகத் தெளிவாய் இருப்பதால் ஒரு கேசுக்கு ஏற்ற ஔஷதம் எதுவென்று நிர்ணயம் செய்யக் கஷ்டம் ஏற்படுவதில்லை.

கல். பாஸில் வியாதியஸ்தரின் அடிவயிறு ஒட்டியம் பல சமயங்களில் தொள தொளவென்று தளர்ந்தும் இருப்பது முக்கியமான வேற்றுமைக்குறி. கல். கார்பில் வியாதியஸ்தருக்கு அடிவயிறு பருத்துக் கடினமாகவும் இருக்கலாம்.

## பொதுவான குறிகள்

தகுதி:—சுரப்பிகளில் வீக்கமுள்ள சிறுவர்கள். சுவாசகோச க்ஷயம் உள்ளவர்கள். வெளுத்த மெழுகு தடவியதுபோல் பளபளப்பான சருமமும் இரத்த சோகையும் உள்ளவர்கள். இளைத்தும். மெலிந்தும் உள்ளவர்கள். உயரமாக, சதைப் பிடிப்பே இல்லாமல் வளரும் சிறுவர்கள். அவர்களின் உடல் அழுக்குப் பிடித்த வெள்ளை நிறமாகவோ அல்லது பழுப்பாகவோ இருக்கும். உயரமாகவும் மிக வேகமாகவும் வளரும் பெண்களுக்குப் பருவமடையும் காலம். தொள தொள வென்றும் சுருங்கியும் மெலிந்தும் உள்ள சிறுவர்கள்.

மனம்:—1. முன்கோபம். குழந்தைகள் சிடு சிடுப்பாகவே இருக்கும். 2. மூளைப் பலவீனம். எந்த விஷயத்தையும் தாமதமாகவே புரிந்து கொள்ளுதல். அறிவை உபயோகித்துச் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யக் கஷ்டம். மூளை தாமதமாகவே வளர்ச்சி அடையும், மூடத்தனமும் இருக்கலாம். ஞாபக சக்திக் குறைவு. 3. குதர்க்க புத்தி. வெளியில் இருக்கும் போது வீட்டிற்குப் போக வேண்டு மென்றும், வீட்டில் இருக்கும் போது வெளியே போகவேண்டும் என்றும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று கொண்டே யிருப்பார்.

உடல்:—தலை உடலுக்கு ஏற்றபடி இல்லாமல் மிகப் பெரியதாய் இருத்தல். அடிவயிறு தொள தொள வென்று ஒட்டியும் இருக்கும். தொண்டைச் சுரப்பிகள் பெரியதாய் இருக்கும், பற்கள் ஒழுங்காக வளராமை. சருமம் காய்ந்



தும் சில்லென்று குளிர்ந்தும் இருக்கும். மூச்சு விடச் சிரமம். அடிக்கடி தன்னையும் அறியாமல் பெருமூச்சு விடுதல் (இக்னேஷியா). குழந்தை தாமதமாக நடக்க ஆரம்பித்தல். கழுத்து மெலிந்து பலவீனமாய் இருக்கும். சீரண சக்திக் குறைவு. இடைவிடாமல் பாலை வாந்தி செய்தல். மலம் பச்சை நிறமாகவும். குழகுழப்பாயும் இருக்கும். அபான வாயு நாற்றம் வீசும். வயிற்றில் அதிக உப்பிசம். மாடிப்படி ஏறும்போது களைப்பு, சுரப்பிகள், எலும்புகள் இவை பற்றிய கோளாறுகள் தோன்றும் உடல் வாகு.

உபாதி கூடுதல்:—குளிர்ந்த. ஈரக்கசிவுள்ள பருவக் காலங்களிலும் பருவ நிலையில் குளிர்ச்சி ஏற்படும் போது ஒவ்வொரு தடவையும் உபாதிகள் கூடுதலாகும். அறையின் சூடு தாங்கமுடியாதது போல் தோன்றும். குளிர் ஒத்துக் கொள்வதில்லை.

உபாதி கூடுதல்:—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—பருவ நிலைமையில் குளிர்ச்சியும் ஈரக்கசிவும் தோன்றும்போது ஒவ்வொரு தடவையும் தவறாமல் எலும்பு மூட்டுகளிலும் மற்றும் பல இடங்களிலும் உள்ள வாத சம்பந்தமான வலிகள் கூடுதலாகும். மழையில் நனைந்த பிறகு வாத ரோகம் தோன்றுதல். கோடைக் காலத்திலே மறைந்து குளிர் காலத்திலே தோன்றும் வாதரோகம். மனதினால் வேலை செய்தால் தலைவலி உண்டாகும். (பள்ளியில் படித்துவிட்டு வீடு திரும்பியவுடன் சிறுவர்களுக்கு ஏற்படும் தலைவலி). எல்லாக் கோளாறுகளும் பொதுவாக வேலை செய்யாமல் ஓய்வாக இருக்கும்போது குறைவாக இருக்கும். அசைவினால் தோன்றும், சிரமப்பட்டு வேலை செய்தால் மிகஅதிகமாகும். சாப்பிட்டவுடன் அதிகமாகும். சாப்பிட்டவுடன் வலியை உண்டாக்கும் நாட்பட்ட அசீரணம். உணவு உட்கொள்ள ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு

தடவையும் அடிவயிற்றில் கடுமையான வலி. அவைகளைப் பற்றி நினைக்கும்போது கோளாறுகள் கூடுதலாகும் (ஹெலோனியாஸ், ஆக்ஸாலிக் ஆஸிட்). வருத்தம், காதலில் ஏமாற்றம் ஆகியவைகளால் ஏற்படும் கோளாறுகள் (இக்னேஷியா, பாஸ்பாரிக் ஆஸிட்).

**உபாதி குறைதல்:**—கோடைக்காலம். வறண்ட, சூடுள்ள பருவகாலம் இவைகளால் உபாதி குறையும். மூச்சுத்திணறலை உண்டாக்கும் இருமல், கீழே படித்தால் குறையும்,

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**கோளாறான எலும்பு வளர்ச்சி :**—எலும்புகள் வளைய ஆரம்பித்தல். முதுகெலும்பு இடது பக்கமாக வளைதல், முதுகெலும்பின் கீழ்ப்பக்கம் முன்பக்கமாகவோ அல்லது இடது பக்கமாகவோ வளைதல். எலும்புகள் மிருதுவாகவும் மெலிந்தும் எளிதில் முறியும் தன்மை உள்ளதாகவும் இருத்தல். மண்டை எலும்புகள் (விசேஷமாகப் பின் பக்கத்தில்) மிகவும் மிருதுவாகவும் மெலிந்தும் இருப்பதுடன் அமுக்கினால் காகிதம் போல் ஓசையை உண்டாக்கும். குழந்தைகளின் உச்சிக்குழி உரிய காலத்தில் மூடப்படாமல் இருத்தல், அல்லது ஒரு தடவை மூடிப் பிறகு மீண்டும் திறந்து கொள்ளலாம். முன்பக்கமுள்ள உச்சிக்குழி மிகவும் பெரியதாய் இருத்தல் (கல்கேரியா கார்பில் பின்னதாக உள்ள உச்சிக்குழி திறந்திருக்கும்).

**ஊட்டக் குறைவு : உண்ணும் உணவு உடம்பில் ஒட்டாமை:**—குழந்தைப் பருவத்திலும், பருவமடையும் காலத்திலும், கிழ வயதிலும் உடல் வளர்ச்சி ஒழுங்காய் இல்லாமை. குழந்தைகள் உடல் மெலிந்து அடிவயிறு தொள தொள வென்றும் குழி விழுந்தும் இருப்பார்கள். பற்கள் மிக வேகமாகச் சொத்தை ஆகுதல்.



கழுத்து மிகவும் மெலிந்து இருக்கும் ; தலையைத் தாங்க முடியாது. அதனால் தலை ஆடும். அதிக இளைப்பு, குழந்தை வயதானவர்களைப்போல் சுருக்கம் விழுந்து காணப்படும். சருமம் காய்ந்து சில்லென்றும் குளிர்ந்தும் இருக்கும்.

**பலவீனம்: மந்த குணம்: தளர்ச்சி :**—கால்களில் பலவீனம். எறும்பு ஊருவது போலவும் மெதுவாகக் குத்துவது போலவும் உணர்ச்சி. வேலை செய்ய வெறுப்பு. மாடிப்படி ஏறும்போது சோர்வு. கீழ்முதுகுப் பக்கத்தில் அதிக பலவீனம் இருப்பதால், தாங்குவதற்கு ஏதாவது இருந்தாலொழிய குழந்தையினால் நேராய் நிமிர்ந்து உட்கார முடியாமை, குதிகால்களின் பலவீனத்தினால் தாமதமாக நடக்க ஆரம்பித்தல். நிற்கவும் முடியாது. மூளைப் பலவீனம் (மனம், உபாதி கூடுதல் ஆகிய தலைப்புக்களைக் கவனிக்க வேண்டும்). பலவீனமான உணர்ச்சியுடன் மலம் கழிக்கும் போதும் மூத்திரம் பிரியும் போது மலப்பை நழுவுதல் கூடுதலாகும்; அடி வயிற்றில் பலவீனமான உணர்ச்சி.

**சுரப்பிகள் அதிகம் தாக்**
கம். தொண்டைச் சுரப்பி
காதில் வேக்காட்டுடன் நாட
வேக்காடு. "சூடான தண்
விட உமிழ் நீரை உட்கொள்
யில் வலி அதிகமாக இருக்கு
ஒவ்வொரு தடவையும்
வேக்காட்டை ஏற்படுத்தும்
அடிவயிற்றுச் சுரப்பிகள்
பக்கங்களில் கடினமான நீ
உடைந்த எலும்புகள் ஒன்ற

**விருப்பம்:—** உப்பிட்ட, புகையில் வாட்டிய, மாமிசம் ஆகியவைகளில் பிரியம். குழந்தை எப்பொழுதும் தாய்ப் பால் குடித்துக் கொண்டிருக்க விரும்புதல்.

**புண்ணாகுதல் :—** சிறு குழந்தைகளுக்குத் தொப்பூழில் புண்ணாகுதல் அங்கிருந்து இரத்தம் கலந்த நீர் வெளியாகுதல், "மிக சீக்கிரத்தில் புண்ணாகுதல்." மிக எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மையும் அறைகளின் சூட்டைத் தாங்க முடியாமலும் உள்ளவர்களுக்கு ஏற்படும் குழிப்புண்கள். புண்களில் அறிப்பும் எரிச்சலும் இருக்கும். கண்களின் கருவிழிகள், மண்டைத்தோல் ஆகிய இடங்களில் புண். கால்களில் நாட்பட்ட புண், புதிய சதை தோன்றுவதில்லை.

**ஊரும் உணர்ச்சி: மதமதப்பு:—** வாதரோகம் உள்ள இடங்களில் மதமதப்பும். ஊரும் உணர்ச்சியும், பிறப்பு உறுப்புகளில் ஊரும் உணர்ச்சி.

**வியர்வை, சில்லிப்பு:—** உடல் முழுவதும் பொதுவாக சில்லென்று இருக்கும்; இயற்கையாக இருக்க வேண்டிய சூடு குறைவாய் இருத்தல்; சீரணக் கோளாறுகளுடன் கை கால்கள் சில்லென்று இருத்தல்; வலிகள் தோன்றும்போது உடலில் மிக சீக்கிரத்தில் சில்லிப்பு தோன்றுதல்; கால்களில் ஊரும் உணர்ச்சியும் சில்லிப்பும்; பின் தலையில் சில்லிப்பு. சில்லிப்பு முதுகுக்கு ஏறுதல். அடிக்கடி வியர்வை ஏற்படும். இரவில் உடம்பின் ஒரு சில இடங்களில் மட்டும் ஏராளமான வியர்வை. நெற்றியில் சில்லிப்புடன் தலையில் வியர்வை. மார்பில் அதிக வியர்வை.

**பவுத்திரச் சிரங்கு: வெடிப்பு:—** பவுத்திரச் சிரங்கும் மார்புக் கோளாறுகளும் மாறி மாறித் தோன்றும் **(பெர்பரீஸ்) ஸைலீஷியாவில் ஆசனவாயில் பவுத்திரச்சிரங்**



குடன் மார்புக் குறிகள் தோன்றியிருக்கும். புயல் காற்று வீசும் போதும், சீதோஷ்ண நிலைமை குளிர்ச்சியாக மாறும் போதும் ஒவ்வொரு தடவையும் தவறாமல் எலும்பு மூட்டுகளில் வலி ஏற்படும் உடல் வாகு உள்ளவர்களுக்கு உண்டாகும் பவுத்திரச் சிரங்குகள். பவுத்திரச் சிரங்குக்காக ஆப்பரேஷன் செய்துகொண்ட பிறகும், ஆப்பரேஷன் செய்த பிறகும் வேறொரு இடத்தில் பவுத்திரச் சிரங்கு தோன்றினாலும் தோன்றலாம்.

## மற்ற குறிகள்

படிக்க முடியாது; வெளிச்சம் கண்களை உறுத்தும், குறிப்பாக மெழுகுவர்த்தி அல்லது காஸ்லைட் (Gas Light) முதலிய செயற்கை வெளிச்சம். மூக்கில் பெரிய கெட்ட சதை வளர்ச்சி. முகம் செம்பு போல் சிவந்து ஏராளமான பருக்களுடன் இருக்கும்—இரத்த சோகை உள்ள பெண்களுக்குப் பருவமடையும் காலத்தில் தோன்றும் முகப் பருக்கள்—சிறு பெண்களுக்கு மாத விடாயில் போக்கு மிக சீக்கிரமாகத் தோன்றி ஏராளமாகவும் சிவந்த நிறமாகவும் இருக்கும். முட்டையின் வெள்ளைப் பொருள் போன்ற வெள்ளை ஒழுக்கு—குழந்தை தன் தலையைக் கைகளால் இறுகப் பிடித்துக் கொண்டு கதறி அழுதல்—மூளையினுள்ளே நீர்ச்சுரப்பு. இடது மார்பில் சதைக் கட்டி—இரத்த சோகை உள்ளவர்களிடம் காணப்படும் நாட்பட்ட மேகவெட்டை—மாலையில் ஆசன வாயில் அறிப்பு—"நாள்பட்டதாகவும் சீதோஷ்ண நிலைமையில் குளிர்ச்சி ஏற்படும் ஒவ்வொரு சமயத்திலும் அதிகமாகும் குணமுமுள்ள மேகவெட்டை சம்பந்தமான வாதரோகம் **(மெதாரினம்)" (கெண்ட்) க்ஷயசம்பந்த**முள்ள குரல்வளை வேக்காடு **(ஸெலனியம், கல். கார்ப்).** நகங்களின் அடிப்பக்கத்திலே புண்ணுள்ள வலிகள்—

குழந்தைகள் தூக்கத்தில் அலறுதல்—சுவாசகோசங்கள் தாக்கப்படும் நீரிழிவு—அசுத்த இரத்தக் குழாய்களில் வீக்கம்—தாயின் பால் உப்பாகவும் நீலமாகவும் மாறிக் கெட்டு விடுவதால் குழந்தை பால் குடிக்க மறுத்தல்—கண்ணின் கருவிழிகளிலே வெள்ளைத் தோல் படருதல்.

**உறவு**:—முன்னும் பின்னும் வேலை செய்யக் கூடியது (ரூடா). **ஆர்ஸனிகம், சைனா, ஐயோடியம், மெர்கூரியஸ்** ஆகியவைகளுக்குப் பிறகு **கல். பாஸ்** நன்கு வேலைசெய்யும். **கல். பாஸிற்குப்** பிறகு **ஸல்பர்** நன்றாக வேலைசெய்யும்.

**ஒப்பிடுதல்**: திடீர் வியாதிகளுக்குப் பிறகு காணப்படும் பலவீனம் (**ஸோரினம்**) பள்ளியில் படிக்கும் பெண்களுக்கு ஏற்படும் தலைவலி (**நேட்ரம் மூர், ஸோரினம்**).

---

## காம்போரா
## (CAMPHORA)

**முன்னுரை**:—**காம்போரா, குப்ரம் மெட், வெராட்ரம் ஆல்பம்**, ஆகிய இம்மூன்றும் **ஹானிமனால்** கண்டுபிடிக்கப்பட்ட காலரா (Cholera) என்னும் விஷபேதிக்கு முக்கிய ஔஷதங்களாம். இம்மூன்றில் **காம்போராவில்** தான் அதிகமான சில்லிப்பு (சவம்போன்ற சில்லிப்பு) காணப்படுகிறது. **குப்ரம் மெட்டில்** அதிகமான தசை இழுப்புகள் காணப்படுகின்றன. **வெராட்ரம் ஆல்பத்தில்** ஏராளமான போக்கு இருக்கிறது. **குப்ரம் மெட்டாலிகத்தில்** கைகளிலும் கால்களிலும் உள்ள விரல்கள் உட்புறமாக மடக்கப்படும். **ஸீகேல் கார்னூட்டத்தில்** விரல்கள் வெளிப்புறமாக மடக்கப்படும்.

### பொதுவான குறிகள்.

**தகுதி**:—**காம்போராவின்** வேலை செய்யும் சக்தி மிக விரைவில் குறைந்து போய் விடுவதாலும் அதன் குறி



களில் அடிக்கடி மாறுதல் ஏற்படுவதாலும் நாட்பட்ட வியாதிகளைக் குணம் செய்யும் சக்தி அதற்கு இல்லை என்று **ஹானிமன்** சொல்லுகிறார். முன் கோபமும், பலவீனமான சிவந்த உடலும் உள்ள பெண்களுக்கும் க்ஷயம் ஏற்படக் கூடிய உடல்வாகுள்ள குழந்தைகளுக்கும் ஏற்றது. உடலிலும் உள்ளத்திலும் பலவீனத்துடன் முன் கோபம் உள்ளவர்கள். உடல் முழுவதும் ஒரே சில்லிப்பும் சிறிதளவு குளிர்ந்த காற்றைக் கூட தாங்க முடியாத தன்மையும் உள்ளவர்களுக்கு **காம்போரா** தகுந்தது (**ஹிப்பார் ஸல்பர், ஸோரினம்**).

**மனம்**:—1. ஏக்கம். முன் கோபத்துடன் ஏக்கம். "கவலையும் ஏக்கமும் அனேகமாக நினைவு அழிந்து விடுதலும்". 2. பயம். அளவு மிஞ்சிய பயம். தன் எண்ணங்களைக் கண்டே பயப்படுதல். கடும் கோபம். கடுமையான கோபம். துப்புவார். கடிப்பார். உடம்பைக் கிழித்துக் கொள்வார்; வாயில் நுரை தள்ளும்; மிகவும் கேவலமான வார்த்தைகளால் திட்டுவார் (பிள்ளை பெற்ற பிறகு ஏற்படும் புத்தித் தடுமாற்றத்தில் இவ்விதக் கடுமையான கோபம் வரக்கூடும்.)

**உடல்**:—திடீரென்றும் மிக அதிகமான அளவிலும் உடல் வலிமை குறைந்து உடம்பு முழுவதும் கடுமையான சில்லிப்பு. பனிக்கட்டி போல் குளிர்ந்து விடும். ஆனால் உடலைப் போர்த்திக் கொள்ள வெறுப்பு. கை கால்களில் பனிக்கட்டி போன்ற சில்லிப்புடன் இழுத்தல். வெறி பிடித்தது போல் உற்றுப் பார்த்தல். முகத்தில் குளிர்ந்த வியர்வை. மேல் உதடு மேலே தூக்கப்பட்டுப் பற்கள் வெளியில் தெரியும். மூக்கு சில்லென்று கூர்மையாகும். வாயில் நுரை. போக்குகள் குறைவாய் இருக்கும் (மலம், வாந்தி, வியர்வை ஆகியவை கொஞ்சம் கூட இல்லா

மலும் இருக்கலாம்). சருமத்தில் தொட்டாலும் வலி; குரல் கம்மி பலவீனம் ஆகும்.

**உபாதி கூடுதல்:**—குளிர் ஒத்துக் கொள்ளாது. குளிர்ந்த காற்றினால் உபாதிகள் கூடுதலாகும். கிழ வயதில் குளிர் காற்றில் சென்றதினால் ஒவ்வொரு தடவையும் நீர்க் கோர்வை அல்லது மார்ச்சளி தோன்றுதல். உடலில் குளிர்ந்த உணர்ச்சி ஏற்படும். உடம்பின் மேற்புறம் தொடும் போது சில்லென்று இருந்தாலும் வியாதியஸ்தரால் போர்த்திக் கொள்ள முடியாது, போர்வையைத் தூர எறிவார் (மெதானினம், ஸீகேல்).

**உபாதி குறைதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—சூட்டினால்; வியாதியின் பல குறிகளில் எந்தெந்தக் குறிகளை வியாதியஸ்தர் அதிகமாய்க் கவனிக்கிறாரோ அந்தந்தக் குறிகள் பல சமயங்களிலும் மறைந்து விடுதல். (ஹெல்லபோரஸ் — எண்ணும் போது அதிகமாகுதல். கல். பாஸ், ஹெலோனியாஸ், ஆக்ஸாலிக் ஆஸிட்) உடம்பில் எந்த இடத்தை லேசாகத் தொட்டாலும் வலி இருக்கும் உணர்ச்சி.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**திடீரென்று தோன்றுதல்: கடுமை:**—வியாதிகள் மிகவும் திடீரென்று தோன்றுதல், வெய்யில் மயக்கம் (காம்போராவின் குறிகள் இருந்தால் தான்) களைப்பு திடீரென்று தோன்றும். மிக வேகமாக அதிகரிக்கும். களைப்பு ஏற்படுவதற்கு முன் கடுமையான, நீண்ட நேரம் நீடிக்கும், சில்லிப்பு ஏற்படும். களைப்பு திடீரென்றும் கடுமையாகவும் தோன்றுவதால் வியாதியஸ்தரால் நிற்க முடியாது (காலராவின் ஆரம்பத்தில் உள்ளது போல்). சில்லிப்பினால் திடீரென்று உடம்பினுள் வலி தோன்றுதல். கடுமையான வலிப்புகள், வாயின் மூலைகள் இழுக்கப்படுவதால் பற்கள் வெளியே தெரியும். வியாதியின் ஆரம்பத்தில் (காலரா) நினைவு தவறிக் கீழே விழுவார். லாச்சஸிஸில் வியாதியஸ்தர் ஒன்று அல்லது இரண்டு தடவைகள் வயிற்றுப் போக்கு வெளியான பிறகு தடுமாற்றம் ஏற்பட்டு இடியினால் தாக்கப் பட்டது போல் கீழே விழுவார். அதிகக் கடுமையுடன் வாந்தியோ வயிற்றுப் போக்கோ இல்லாமல் தோன்றும் காலரா. "சூடும் குளிர்ச்சியும் அடிக்கடி மாறி ஏற்படும்; திடீரென்று தோன்றும் வேக்காடுள்ள சுரங்கள். அதன் பிறகு களைப்பு உண்டாகும்.



**சில்லிப்பு:**—உடம்பின் உள்ளும் புறமும் சில்லிப்பு (அதாவது வியாதியஸ்தர் குளிர்வதாகச் சொல்லுவார். அதேசமயத்தில் உடம்பைத் தொட்டாலும் சில்லென்று இருக்கும்). ஜல தோஷம், காலரா முதலிய வியாதிகளில் ஆரம்பத்தில் வியாதியஸ்தருக்கு அதிகமான குளிர்ந்த உணர்ச்சி ஏற்படும். சூடு உண்டாகும்படி எவ்வழியிலும் செய்ய முடியாது. சருமத்தின் நிறத்தில் எவ்வித மாறுதலும் இல்லாமல் சில்லென்று இருக்கும் அல்லது சருமம் சில்லிப்புடன் வெளுத்து நீல நிறமாகி அல்லது பழுப்புக் கலந்த நீல நிறமாக இருக்கும். சில்லிப்பான வியர்வை. மூச்சுக் காற்றும் சில்லென்று இருக்கும். மூக்கு சில்லென்றும் கூர்மையாகவும் இருக்கும். நாக்கு சில்லென்றும் பெரியதாக இருப்பது போல் நடுங்கிக் கொண்டும் இருக்கும். உடம்பு முழுவதும் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி.

**இழுப்புகள், வலிப்புகள்:**—"பல விதமான இழுப்புகளும் வலிப்புகளும்". கால்களின் ஆடுதசைகளில் இழுப்பு. கைக்கட்டை விரல்களில் இழுப்பு ஏற்பட்டு அவை பின்பக்கமாக திருப்பப்படுதல். அடிவயிற்றில்

இழுப்புகள். கால் ஆடுதசைகளிலே இழுப்பு, உடலில் சில்லிப்பு, கவலை, தொண்டையிலும் வயிற்றிலும் எரிச்சல் ஆகிய குறிகளுடன் தோன்றும் காலரா. மார்பில் இழுப்புகள். காம்போராவின் இழுப்புகள் குப்ரம் மெடாலிகத்தைப் போல் அவ்வளவு கடுமையாக இருப்பதில்லை. வாய் திறக்க முடியாமல் போவதும் தனுர் வாயுவும்.

**சாவுக் குறிகள் :—**உடம்பு சவம் போல் சில்லிட்டு விடுதல்: முகம் சவம் போல் வெளுத்து விடுதல்; இறந்து விட்டது போன்ற களைப்பு. சில்லென்று மூச்சுக் காற்று. வெறி பிடித்தது போல் வெறித்த பார்வை. கம்மிய, கரகரத்த குரலில் முக்குவதும் முனகுவதும். மூச்சு அடைத்துப் போய் விடுமோ என்று அதிகமாகக் கவலைப் படுதல். முகத்தில் சில்லிப்பான வியர்வை, மேல் உதடு மேல் பக்கமாகத் தூக்கப்பட்டிருக்கும். நாடி அளவு குறைந்தும் மெதுவாகவும் அனேகமாக கைகளுக்குப் பிடிபடாமலும் (அல்லது அளவு மிஞ்சி வேகமாகவும் முழு அளவிலும்) துடிக்கும். முகம் அல்லது சருமம் நீல் நிறமாகிச் சில்லென்றிருக்கும். முகம் வெளுத்துக் களை இழந்து கவலைத் தோற்றம் அளிக்கும். கண்கள் குழி விழுந்து விடும். மூச்சுத் தடைப்படும். மூத்திரப் பையில் ஏராளமான மூத்திரத்துடன் சிறிதுகூட வெளியாகாமல் இருத்தல். குழந்தைகள் பிறந்தவுடன் சுவாசிக்காமல் இருத்தல்.

**குறைந்த போக்கு அல்லது போக்கே இல்லாமை :—**வாந்தியோ அல்லது வயிற்றுப் போக்கோ இல்லாமல் ஆனால் அதன் மற்ற கெடுதலான குறிகளாகிய உடல் வலிமை திடீரெனக் குறைதல், உடல் முழுவதும் பனிக் கட்டி போல் சில்லிடுதல், குரல் கம்முதல் ஆகியவைகளுடன் கடுமையாக ஆரம்பிக்கும் காலரா. (இவ்வகை



யான வியாதியை வறண்ட காலரா (Dry Choleaa) என்று சொல்வார்கள்) அரிசிக் கஞ்சி போன்ற மலம் சிறிது வெளியாகலாம். மலம், வாந்தி, வியர்வை ஆகியவை குறைவாக இருக்கும் அல்லது கொஞ்சம் கூட இருப்பதில்லை. மூத்திரம் அடக்கப்படுதல்.

### மற்ற குறிகள்.

"வயிற்றிலும் குடல்களிலும் ஆரம்பிக்கும் இழுப்புகள் உடலின் மற்றப் பகுதிகளுக்குப் பரவி முடிவில் வலிப்புகளும் பின்பக்கமாக வில்போல் உடம்பு வளைக்கப்படுவதும் ஏற்படலாம்". (கெண்ட்). பின் தலையில் உடைக்கும் வலி. சிற்றின்ப உணர்ச்சி அதிகரித்தல். முறைச் சுரங்களில் சூடு தோன்றும் நிலைமையில் போர்த்திக் கொள்ள விரும்புவார். மேக வெட்டையில் மாணி வலியுடன் விரைத்தல்.

**உறவு :—**அநேகமாக பல ஹோமியோபதி ஔஷதங்கள் காம்போராவினால் முறிக்கப்படுகின்றன. ஆகையால், சுத்தம் செய்யப்படாத காம்போராவை (சூடம், கற்பூரம்) வியாதியஸ்தர் இருக்கும் அறையில் வைத்திருக்கக் கூடாது. அதனுடைய வாசனை பட்டால்கூட வியாதியஸ்தர் உட்கொண்டு வரும் வேறு ஹோமியோபதி ஔஷதங்களை முறித்து குணம் ஏற்படுவதைத் தடை செய்யும்.

---

## கன்னபிஸ் ஸடிவா

## (CANNABIS SATIVA)

**முன்னுரை :—**மேகவெட்டையின் வேக்காடுள்ள ஆரம்ப நிலைமையில் தேவைப்படும் மிக முக்கியமான ஔஷதங்களில் கன்னபிஸ் ஸடிவாவும் ஒன்று என்று நாம் திண்ணமாய்ச் சொல்லலாம். அவ்வியாதிக்கு இவ்வெள்

ஷதம் கொஞ்சங்கூட பயன்படாது என்றுசொல்லும் வைத்தியர்களும் இருக்கின்றனர். உண்மையான மேகவெட்டையில் அது சுத்தமாகப் பயன்படாது என்றுகூட டாக்டர் பெர்ஜூ சொல்கிறார்.

## பொதுவான குறிகள்.

**மனம் :**—மனக் குழப்பம். எண்ணம், பேச்சு ஆகியவைகளில் குழப்பம். கனவு காண்பதாக நினைத்தல். மனதில் எண்ணியவைகளை மறந்து விடுதல். எழுதும்போதும் பேசும் போதும் தவறுகள் செய்தல். குரல்கள், தன்னுடைய குரல் கூட தூரத்தில் இருந்து வருவது போல் தோன்றுதல்.

**உடல் :**—எழுதியதால் அல்லது பேசியதால் அதிகச் சோர்வு. உணவு உட்கொண்ட பிறகு சோர்ந்திருத்தல். பகல் வேளையில் அதிகத் தூக்கக் கலக்கம், இரவில் தூக்கம் வராது. உடல் வெளுத்தும் சில்லென்றும் இருத்தல். உச்சந்தலையில் கனமான பொருள் இருப்பது போல் உணர்ச்சி.

**உபாதி கூடுதல் :**—(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :—சிரமத்துடன் மூச்சுவிடுதல் கீழே படுத்தால் அதிகரிக்கும். மாடிப்படி ஏறும்போது கால்கள் கனமாகத் தோன்றுதல். சுளுக்கிக் கொண்ட பிறகு விரல்களில் இழுப்பு. மாடிப்படி ஏறும்போது முழங்கால் சில்லு நழுவி விடுதல்.

**உபாதி குறைதல் :**—மூச்சுத்திணறல், இருதயப் படபடப்பு அல்லது காசம் ஆகியவை வியாதியஸ்தர் நின்று கொண்டிருந்தால் சௌகரியமாய் இருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**புண்ணுள்ள உணர்ச்சி :**—மானி. குறிப்பாக அதன் கொண்டை (பல சமயங்களிலும் வேக்காட்டுடனும்



கருஞ்சிவப்பு நிறமாகவும் இருக்கும்) வீங்கி, நடக்கும் பொழுது நெருப்புச் சுட்டது போல் வலியுடன் இருத்தல். அதனால் கால்களை அகற்றி வைத்து நடப்பார். வீங்கிய மானியின் கொண்டையில் ஏற்படும் அளவு மிஞ்சிய வலியினால் ஒரு வியாதியஸ்தர் நடக்கும் பொழுது உராய்வு ஏற்படுவதைக் குறைக்கவும் அதனால் வலியை மட்டுப் படுத்தவும் தன் உறுப்பை ஆடையுடன் சேர்த்து இறுகக்கட்டியதை நான் பார்த்திருக்கிறேன். தன் கால்களை அகற்றி வைத்து மிக மெதுவாகவும் நடந்து வந்தார். இது தவிர மூத்திரக் குழாயில் தொட்டாலும் அமுக்கினாலும் அதிக வலி உண்டாகும் (அது புண்ணினால் ஏற்படும் வலி) கால்களை நெருக்கமாக வைத்துக் கொள்ள முடியாது.

**சொட்டும் உணர்ச்சி:**— (தலையின் மேலும் ஆசனவாய், வயிறு, இருதயம் முதலிய இடங்களிலிருந்தும்). குளிர்ந்த தண்ணீர் சொட்டிக் கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி. தலையின் மீது சொட்டு சொட்டுகளாகத் தண்ணீர் விழுந்து கொண்டிருப்பது போன்ற உணர்ச்சியுடன் தலைச் சுற்றல்.

**மூச்சு அடைத்தல்: மூச்சுவிடச் சிரமம் :**— விழுங்கும் போது மூச்சு அடைத்தல், விழுங்கப்படும் பொருள்கள் தவறான வழியில் செல்லுதல் (அனகார்டியம்), காசம் (உபாதி கூடுதல் என்னும் தலைப்பைப் பார்க்கவும்). பேச்சைத் தடைசெய்து மூச்சு விடுவதையும் நிறுத்தும் முதுகு வலி.

**இழுத்தல்: இறுக்கும் உணர்ச்சி:**— கண்களில் (மேகவெட்டை சம்பந்தமான கண் வேக்காடு) இழுக்கும் வலிகள். மேல் வயிற்றில் இழுக்கும் வலிகள். கைகளிலும் கைவிரல்களிலும் இழுத்தல். "பிடிவாத குணம் உள்ள மலச்சிக்கல், மூத்திரத்தை அடக்கி ஆசனவாயில் இறுக்கும் உணர்ச்சியை உண்டு பண்ணும்.

### மற்ற குறிகள்

**மூத்திரக் குழாய்:—** இடைவிடாத தூண்டுதலுடன் மூத்திரம் கழிக்கச் சிரமம். மூத்திரக் குழாயின் தசை நார்களைக் கிழிப்பது போன்ற உணர்ச்சி. மூத்திரக் குழாய் பல முடிப்புகள் போடப்பட்டு இழுக்கப்பட்டது போல் தோன்றுதல். மூத்திரம் கழிக்கும்போது எரிச்சல். ஆனால் அனேகமாக மூத்திரம் கழித்தபிறகே எரிச்சல் நிற்கும். மூத்திரம்கழிக்க ஆரம்பித்தவுடனும் கழித்த பிறகும் எரிச்சல். மூத்திரம் ஒரே தாரையாக இல்லாமல் கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்படும் (கந்தாரிஸ், தூஜா). மூத்திரக் குழாய் சளியினாலும், சீழினாலும் அடைக்கப்படுதல். மூத்திரம் கழிக்கும்போது எரிச்சல் மூத்திரப்பை வரை இருக்கும். மூத்திரக் குழாயில் பல்வேறு இடங்களில் கிழிக்கும் வலிகள்.

**ஆண்களின் பிறப்பு உறுப்புகள்:—** மானி, அதன் கொண்டை, அக் கொண்டையை மூடியிருக்கும் தோல் ஆகியவைகளில் அறிப்பும் வேக்காடுள்ள வீக்கமும். கடுமையான வலிகளுடன் மானி விரைத்தல்; மேக வெட்டையில் வலியுடன் மானி விரைத்தல்; சிற்றின்ப உணர்ச்சி அளவு கடத்தல்; மானியின் கொண்டையை மூடியுள்ள தோல் மிகவும்வீங்கி தொட்டால் வலி தரும்.

**பெண்களின் பிறப்பு உறுப்புகள்:—** மேக வெட்டையில் மூத்திரம் கழிக்கும்போது யோனி உதடுகளின் நடுவிலே வெட்டும் வலிகள்; கடுமையான சிற்றின்ப ஆசையுடன் யோனி வீங்குதல். மூத்திரக் குழாயின் வாய் சீழினால் அடைக்கப்படுதல்; பூவாளியிலிருந்து தண்ணீர் வருவது போல் மூத்திரம் கழிக்கப்படும்; பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் கழிவு.

மலட்டுத் தன்மையுடன் புணர்ச்சியில் அதிக ஆசை. அளவு மிஞ்சிய புணர்ச்சியினால் கருச்சிதைவு நேர்ந்து விடுமோ என்று தோன்றும் நிலைமை. மேகவெட்டையில் சம்பந்தப்பட்டு கருச் சிதைவு நேர்ந்து விடுமோ என்ற நிலைமை.



**டைபாய்டு சுரம்:—** டைபாய்டு சுரத்தின்போது மூச்சு விட மிக சிரமம். (கந்தாரிஸ்)

---

## கந்தாரிஸ்
## (CANTHARIS)

**முன்னுரை:—**கீழ்வரும் முக்கியமான குறிகள் காணப்படும்போது கந்தாரிஸை நினைக்கவும்: 1. எரிச்சலுடன் வலிகள். 2. மூத்திரம் கழிக்கத் தாங்க முடியாத தூண்டுதல்: 3. மூத்திர உற்பத்தி குறைதல் அல்லது அடக்கப்படுதல்.

மூத்திரம் கழிக்கும்போது மூத்திரத் தாரையில் எரிச்சல்; மூத்திரப் பையில் பலவிதமான வேதனை (தூண்டுதல், கடுகடுப்பு), மூத்திர உற்பத்தி தடைப்படுதல் அல்லது மூத்திரம் அடக்கப்படுதல் ஆகிய இக்குறிகளை ஆதாரமாய்க்கொண்டு பலவியாதிகளில் குறிப்பாக வயிற்றுக் கடுப்பு, அக்கிப்படுவன், மூத்திரக்காய், சினைப்பை, சுவாசகோச உறை வேக்காடு, இருதய உறை வேக்காடு முதலிய வேக்காடுள்ள வியாதிகளில் இவ் வௌஷதம் உபயோகிக்கப் படுகிறது. சுவாசகோச வேக்காடு, டைபாய்டு குறிகள் கலந்த சுவாசகோச வேக்காடு ஆகிய வியாதிகளையும் இவ்வரிசையிலே சேர்க்கலாம். (அனுபவக் குறிப்புகள் என்னும் தலைப்பைப் பார்க்கவும்).

### பொதுவான குறிகள்.

**மனம்:—**1. முன்கோபம். ஆத்திர வசப்படும் குணம்;

கதறி அழுதல்; வள்ளென்று விழுதல்; பிறரை அடித்தல் ஆகிய குறிகளுடன் அடிக்கடி கோப வெறி உண்டாகும். பளபளப்பான, கண்களைக் கூசச்செய்யும் பொருள்களையும் தண்ணீரையும் கண்டால் இக்குறிகள் மீண்டும் தோன்றும். **2. ஏக்கம்.** நிலை கொள்ளாத் தன்மையுடன் ஏக்கம். அடிக்கடி ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தல். ஆனால் எதையும் செய்து முடிக்க மாட்டார். **3. புத்தித் தடுமாற்றம்.** வெறி பிடித்த புத்தித் தடுமாற்றம். **4. சிற்றின்ப ஆசை அதிகரித்தல்.** மிகவும் அதிகமான சிற்றின்ப ஆசை. மறுகணமே ஆசையைப் பூர்த்தி செய்து உடல் இன்பம் பெறத் துடிதுடித்தல்.'' காமவெறி. பெண்களுக்கு சிற்றின்பத்தில் அளவு கடந்த ஆசை (அடிக்கடி வலியுடன் விரைத்தல்).

**உடல்:—** எரிச்சலுடன் வலிகள்: உடலில் உள்ள துவாரங்களில் எரிச்சலுடன் வலிகள். மூத்திரம் வெளியாகாமல் இருத்தல் அல்லது உற்பத்தி ஆகாமல் இருத்தல். மூத்திரம் கழிக்க இடைவிடாமல் தாங்கமுடியாத தூண்டுதல். மிகவும் பிசுக்கென்று இருக்கும் கோழை வெளியாகுதல். வலி உள்ளபோது வியாதியஸ்தரின் முகம் பிணம்போல் ஆகும். முகம் வெளுத்துக் குழி விழுந்து பிணக்களை ஏற்படும். தண்ணீர், உணவு, புகையிலை முதலிய எல்லாப் பொருள்களிலும் வெறுப்புடனும் அருவருப்புடனும் பசியே இல்லாமை. உள்ளங் கைகளிலும் பாதங்களிலும் குளிர்ந்த வியர்வை. உள்ளங்கைகளில் இரவில் எரிச்சல். அள்வு கடந்த பலவீனம். எரிச்சலுடன் தாகம் ஆனால் தண்ணீர் குடிக்கவோ அருவருப்பு (உதடுகள், வாய், தொண்டை ஆகியவை காய்ந்து தண்ணீரை வேண்டும். மனதிலோ தண்ணீ



ரின் மீது வெறுப்பு. உபாதி கூடுதல் என்னும் தலைப்பைப் பார்க்கவும்)

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— மூத்திரம் கழிக்கும் போதும் கழித்த பிறகும்; தண்ணீர் குடித்தால்; குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால்; ஒளி வீசும் பொருள்களைப் பார்த்தால்; உடம்பைத் தொட்டால்; தண்ணீர் விழும் ஓசையைக் கேட்டால்; காப்பி குடித்தால் உபாதிகள் கூடுதலாகும்.

வியாதியஸ்தரை லேசாகத் தொட்டாலும்; அவர் அருகிலே சென்றாலும் மனக் குறிகள் அதிகரிக்கும். கதறி அழுதல்; வள்ளென்று விழுதல்; பிறரை அடித்தல் ஆகியவைகளுடன் உள்ள கோப வெறி, குரல் வளையைத் தொட்டாலும் தண்ணீரைக் குடிக்க முயற்சி செய்தாலும் கூடுதலாகும். வெறி நாய் கடித்து அதன் விளைவாக ஏற்படும் வியாதியிலே இக்குறி காணப்படும். மேலும் குரல் வளையைத் தொட்டால் அல்லது அடிவயிற்றை அழுக்கினால் அல்லது தண்ணீரைப் பார்த்தால் அல்லது கண்களைப் பறிக்கும் ஒளி உள்ள பொருள்களைப் பார்த்தால் கோப வெறியும் வலிப்புகளும் மிகவும் அதிகமாகி மாறி மாறி ஏற்படும். சீரணம், கல்லீரல் பற்றிய கோளாறுகள் காப்பி குடித்தால் கூடுதலாகும்; கொஞ்சமாகத் தண்ணீர் ஆகியவை குடித்தாலும் மூத்திரப் பையில் வலி அதிகமாகும். வெய்யிலில் அடிபட்டதினால் ஏற்படும் சரும வியாதிகள்.

**உபாதி குறைதல் :—** ஓய்வினால்; சூட்டினால்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**கடுமை : வேகம் :—** கடுமையான அல்லது கொடுமையான மிகவேகமான தாக்குதல், கொடுமையான இழுப்புகள். கடுமையான கோபம்; **கடுமையான சிற்றின்ப ஆசை.** முனகுதல்; பலமாகக் கதறுதல் இவைகளுடன் நடுநடுவே

வள்ளென்று விழுதல் (வெறி நாய் கடித்து ஏற்படும் வியாதியில்). கடுமையான, திடீரென்று தோன்றும் வேக்காடுகள். மூத்திரக் காய்களிலிருந்து ஆரம்பித்து கீழே மூத்திரக் குழாய் வரை பரவி இருக்கும் கடுமையான எரிச்சலும் வெட்டும் வலிகளும். கடுமையான எரிச்சலை உண்டாக்கும் மூத்திரம். மூத்திரப்பையில் பொறுக்க முடியாத பயங்கரமான கடுகடுப்புடன் வெளியாகும். கடுமையான குமட்டலும் வாந்தியும். கடுமையான வலிகளினால் முக்குவார்; ஒப்பாரி வைத்து அழுவார். முகம் சிவந்து திடீரென்று நினைவு தவறும். வேக்காடுள்ள நிலைமைகள் மிக வேகமாகத் தோன்றும். கடுமையான வேக்காடு உடலை அழிக்கும், தசைகளை அழுகவைக்கும் நிலைமைக்கு மிக வேகமாக முன்னேறலாம். அக்கி மிகச் சீக்கிரத்தில் கறுப்பாக நிறம் மாறுகிறது (அழுகும் நிலைமையை மிக வேகமாக நெருங்குகிறது என்பதற்கு அறிகுறி).

**எரிச்சல் : வேக்காடு** :—எல்லா வியாதிகளிலும் எரிச்சல் தவறாமல் காணப்படுகிறது. உடலின் எல்லாத் துவாரங்களிலும் தோல் உரிந்து விட்டதுபோல எரிச்சலுடன் வலிகள்." குரல்வளையில் எரிச்சலும் கொட்டும் வலிகளும். குறிப்பாக கட்டியான கோழையைக் காறி உமிழ முயற்சி செய்யும்போது." "நரம்புகள் செல்லும் பாதையிலே எரிச்சலும் கூர்மையான கத்தியினால் கிழிக்கும் வலிகளும்." மூத்திரப்பையின் கழுத்திலே எரிச்சலும் வெட்டும் வலிகளும்." "மூத்திரம் வேக்காட்டை உண்டு பண்ணுகிறது; சொட்டுச் சொட்டாக வெளியாகிறது (அகோனைட், பெல்லடோன்னா.") மூத்திரம் வேக்காட்டை ஏற்படுத்திச் சொட்டுச் சொட்டாக வெளியாகும். சில சமயங்களில் இரத்தமும் வெளியாகும். ஈயத்தைக் காய்ச்சி ஊற்றும் போது ஏற்



படும் வேதனையை விட அதிகம் என்று எண்ணும் படியான எரிச்சலும் வெட்டும் வலிகளும். மேலே சொல்லப்பட்ட குறிகள் கந்தாரிஸ் உபயோகமாகும் வியாதிகளில் மிகவும் கடுமையான நிலைமைகளில் தான் காணப்படும். ஆகவே மூத்திரம் பற்றிய வேதனை பலவிதமாய் இருக்கலாம். மூத்திரப்பையின் கழுத்தில் இலேசான வேதனையும் அவ்வேதனை மூத்திரம் கழிந்தவுடன் அதிகமாவதும். இதுதான் கந்தாரிஸ் வியாதியின் குறைவாக உள்ள குறி. புணர்ச்சி செய்தபிறகு மூத்திரக் குழாயில் எரிச்சலுடன் வலி, கண்கள் காதுகள், உதடுகள், வாய், தொண்டை, மூத்திரக் காய்கள், மூத்திரப்பை, மூத்திரக் குழாய், சினைப் பைகள். சுவாச கோசங்கள், மூளை, சுவாசகோச உறை, இருதய உறை ஆகிய சவ்வுகளில் வேக்காடு. இவ்வகையான எல்லா வேக்காடுகளிலும் மூத்திரப்பையில் வேதனை அநேகமாய் இருந்தே தீரும். அக்கி சம்பந்தமான வேக்காடு, அக்கி. மூக்கின் மேல் தண்டிலே ஆரம்பித்து இரு கன்னங்களுக்கும் பரவுதல் (வலது பக்கமே அதிகம் பரவுதல்) பிறகு தோல் உரிதல்.

**வீக்கம்** :— மூக்கில் வீக்கம் (சிவசிவப்புடனும் எரிச்சலுள்ள சூட்டுடனும்); முகத்தில் வீக்கம், குறிப்பாக வலது பக்கத்தில் (விரைப்புடன்); அடிவயிறு (நீர்ச்சுரப்புடன் உள்ள வீக்கம்); விரைகளில் (வலியுடன் வீக்கம்); கருப்பையின் கழுத்தில்வீக்கம்; கைகள், பாதங்கள் ஆகியவைகளில் வீக்கம் (நீர்ச்சுரப்புடன்).

**வேதனை** :— மூத்திரப் பையில் வேதனை இருப்பது குறிப்பிடத்தக்கது:— இடைவிடாமல், தாங்க முடியாத அளவுக்கு மூத்திரம் கழிக்கத் தூண்டுதல். எரிச்சல் என்னும் தலைப்பைப் பார்க்கவும். கடுகடுப்புடனும் துண்டு துண்டுகளாகச் சதை வெளியாகும் போக்குடனும் வயிற்

றுக் கடுப்பு. மன வேதனை. புணர்ச்சி சம்பந்தமான வேதனை (மனம் என்ற தலைப்பைக் கவனிக்கவும்). மானியைப் பலமாய் இழுக்கும் உணர்ச்சி. சுவாசகோச உறை வேக்காடு போன்ற வியாதிகளில் ஊனீர்ச் சவ்வுகளில் வேதனை உண்டாகி அவ் வேதனையின் அடையாளமாய் மார்பிலிருந்து முதுகுவரை பாயும் வலிகளும் எரிச்சலும் குத்து வலிகளும் (வலது பக்கத்தில் அதிகம்); சுவாசகோச உறையினுள்ளே கசிவு உண்டாகும். சருமத்தில் வேதனை தோன்றினால் அதன் விளைவாகக் கொப்பளங்கள் உண்டாகும். சிறுசிறு கொப்பளங்கள் உள்ள சரும வியாதிகள், வியாதியஸ்தர் நிலைகொள்ளாமல் இருப்பார். பெரிய கொப்பளங்களுடன் முகத்தில் ஏற்படும் அக்கி.

**உணர்ச்சிகள் அதிகமாகுதல் :**—வெறுப்புடனும் பலவீனத்துடனும் உடல் முழுவதுமே உணர்ச்சிகள் அதிகரிக்கும். உடலின் உட்புறங்களில் எரிச்சலுடன் உணர்ச்சி அதிகமாகும். மூத்திரப்பை அருகிலுள்ள இடங்களைத் தொட்டால் கடுமையான வலியுள்ள உணர்ச்சி. (மூத்திரப்பை முழுவதும் மூத்திரம் நிறம்பி இருக்கும்போது விசேஷமாகக் காணப்படும்). பெண்களின் பிறப்பு உறுப்புகள் எல்லாவற்றிலும், குறிப்பாக சினைப் பைகளிலும் கருப்பைகளிலும்) அதிக உணர்ச்சியும் தொட்டாலும் லேசாக அமுக்கினாலும் அளவு மீறி வலியுள்ள உணர்ச்சியும் உண்டாகும்.

**சதைத் துண்டுகளுடன், இரத்தம் கலந்து, பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள கழிவுகளும் போக்கும்:**—வயிற்றுக்கடுப்பில் குடல்களைத் துருவி எடுத்ததுபோலவும், இரத்தம் கலந்தும் மலப்பையிலும் மூத்திரப்பையிலும் கடுப்புடனும் மலம் வெளியாகும் (கார்போ அனிமாலிஸ், கோல்சிகம்). மாதவிடாயில் போக்கு கயிறுபோல் நீளும் குணமுள்ள



தாகவும் சதைத் துணுக்குகளுடனும் கறுப்பு இரத்தத்துடனும் வெளிப்படும், மாதவிடாய் வழக்கத்துக்கு முன்னதாகவே ஏற்பட்டு ஏராளமான போக்குடன் இருக்கும். புணர்ச்சியில் அளவு மீறிய விருப்பம். மூத்திரத்தில் உமியைப்போல் சதைத் துண்டுகள், மூத்திரம் குழகுழப்பாகவும் அல்லது இரத்தங் கலந்து அடிக்கடி வலியுடனும் தூண்டுதலுடனும் வெளியாகும்; சொட்டுச் சொட்டாக வெளியாகும். கடுமையான குமட்டலுடன் இரத்தம் கலந்த சதைப் பொருள் வாந்தி செய்யப்படும். நுரைகளுள்ள; இரத்தம் கலந்த உமிழ் நீர். இரத்தம் கலந்த மலம், மூத்திரப்பையிலிருர்து இரத்தம் கலந்த சளி வெளிப்படுதல். இரவு நேரங்களில் மானியிலிருந்து இரத்தம் வெளியாகுதல் (லேடம், மெர்கூறியஸ், பெட்ரோலியம்). தொண்டையிலிருந்து பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள கோழை வெளிப்படுதல் (காலி பைக்). சிறிய அலைக்கழிக்கும் குணமுள்ள இருமல், இருமலுக்குப் பிறகு இரத்தம் கலந்த, பிசுக்கென்று ஒட்டும் தன்மையுள்ள கோழை வெளியாகும். சுவாசக் குழாய்களில் பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள கோழை இருந்தால் (போவிஸ்டா. ஹைட்ராஸ்டிஸ், காலிபைக்ரமிகம்) அத்துடன் கந்தாரிஸில் உள்ள மூத்திரக்குறிகளில் சிலவும் இருந்தால் வியாதி எதுவாய் இருந்தாலும் கந்தாரிஸ் குணம் செய்யும். கந்தாரிஸ் தேவைப்படும் மார்ச்சளி வியாதியில் கபம் ஏராளமாகவும் பிசுக்கென்று ஒட்டும், கயிறு போல் நீளும் குணமுள்ளதாகவும் இருக்கும்.

**இரத்தப் பெருக்கு :**— "மூக்கு, வாய், குடல்கள் பிறப்பு உறுப்புகள், மூத்திர உறுப்புகள் இவைகளிலிருந்து இரத்தப்பெருக்கு." இவ்வித இரத்தப்பெருக்கு, மூத்திரப் பையில் வேதனை, மூத்திரம் கழிக்கும்போது

எரிச்சலும் வலியும் ஆகிய குறிகளுடன் இருக்கும், மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு காலை வேளையில்தான் ஏற்படும், மற்ற எந்தச் சமயத்திலும் ஏற்படாது.

**அழுகும் குணம் :—** கடுமை என்னும் தலைப்பைப் பார்க்கவும். பிறப்பு உறுப்புகள், மானி ஆகியவைகளில் ஏற்படும் வேக்காட்டிலும் அழுகும் தன்மை ஏற்படும் போதும் விசேஷமாய்ப் பயன்படுகிறது.

**வெளியே தள்ளும் சக்தி:—** அழிந்துவிட்ட கருவையும் பத்து மாதமும் சென்று குழந்தை பிறகு அல்லது கருச் சிதைவு ஏற்பட்ட பிறகு வெளியே வராமல் இருக்கும் நஞ்சுப் பையையும் கந்தாரிஸ் வெளியே கொண்டு வந்து விடும். மூத்திரம் கழிக்கும் போது வலியுள்ள எரிச்சலுடன் நஞ்சு அல்லது சதை உள்ளே தங்கி விடுதல். (வெளியே தள்ளும் வலிகள் எதுவும் இருப்பதில்லை). (பெண்களின் மலட்டுக் குணத்தை நீக்கிக் கருத்தரிக்க உதவி செய்யும் என்றும் கந்தாரிஸ் பெயர் பெற்றிருக்கிறது).

**வலது பக்கமே அதிகம் தாக்கப்படுதல் :—** கந்தாரிஸ் வியாதிகள் அனேகமாக வலது பக்கத்தையே தாக்குகின்றன. வலது பக்கத் தலை, முகத்தின் வலது பக்கம் ஆகியவை.

## மற்ற குறிகள்

மேகவெட்டையில் மானி வலியுடன் விறைத்தல்:- சிறுசிறு கொப்பளங்கள் உள்ள சரும வியாதி.— உதடுகள் வெடித்துத் தோல் உறிதல்.— பிள்ளைப் பெற்ற பிறகு வலிப்புகள்.— மலம் கழித்த பிறகு உடலில் சிலிர்ப்பு, மலம் இரத்தம் கலந்து எரிச்சலுடனும் கடுப்புடனும் வெளியாகும்.— "வெய்யிலில் அடிபட்டதால் தோன்றும் சரும வியாதிகள்."



**சுடுதல் :—** நெருப்புச் சுட்ட பிறகும் கொதிக்கும் தண்ணீர் அல்லது எண்ணெய் முதலியவை மேலேபட்ட பிறகும் கொப்பளங்கள் தோன்றுவதற்கு முன் இவ் வௌஷதத்தின் தாய்த் திரவத்தில் பஞ்சை நனைத்து அவ்விடங்களில் லேசாகத் தேய்க்கவும். தாய்த் திரவம் பட்ட உடனே எரிச்சல் மறையும். எரிச்சல் மீண்டும் தோன்றும்போது மறுபடியும் தாய்த்திரவத்தைத் தடவவும். இவ்விதம் எரிச்சல் கொஞ்சங்கூட இல்லை, என்று ஏற்படும் வரை அடிக்கடி தாய்த் திரவத்தை தடவிக் கொண்டே இருக்க வேண்டும். இதனால் கொப்பளங்கள் உண்டாகாமல் தடுத்து விடலாம். கொப்பளங்கள் தோன்றி அவை உடையாமல் இருந்தால் கந்தாரிஸின் வீரியப்படுத்திய திரவத்தை எந்த வீரியத்திலும் (6 அல்லது 30 வீரியம் சிறந்தது) மேலே தடவி அந்த இடத்தைப் பஞ்சினால் மூடிவைக்க வேண்டும். கொப்பளங்கள் உடைந்திருந்தால் ஆவி வடித்த அல்லது கொதிக்க வைத்த தண்ணீரில் 2 அவுன்ஸ் எடுத்து இவ் வௌஷதத்தின் வீரியப்படுத்திய திரவத்தை ஒன்று இரண்டு சொட்டுகள் விட்டுக்கலந்து மேலே தடவலாம்.

எல்லாச்சமயங்களிலும் ஔஷதத்தை மேலே தடவுவதுடன் ஏதோ ஒரு வீரியத்தில் உள்ளுக்கும் கொடுக்க வேண்டும். வீரியப்படுத்திய திரவம் மேலே தடவ உபயோகிக்கப்பட்டால் அதே வீரியத்தில்தான் உள்ளுக்கும் கொடுக்கவேண்டும்.

வீரியப்படுத்திய ஔஷதம் விசேஷமாகக் கீழ்க் கண்ட குறிகள் உள்ளபோது தேவைப்படும். "அக்கி போன்ற, கொப்பளங்கள் உள்ள, நெருப்புச் சுட்ட அல்லது கொதிக்கும் தண்ணீர்பட்ட நிலைமைகள்." "வலிப்புகளும் அவைகளுக்குப்பிறகு ஆழ்ந்த மயக்கமும்."

**ஒப்பிடுதல்** :—கன்னபிஸ் ஸடிவாவில் அதிக எரிச்சல்; **கந்தாரிஸில்** அதிகக் கடுகடுப்பு; பலவீனத்தினாலும் களைப்பினாலும் நஞ்சுக் கொடி வெளியே வராவிட்டால் **காலோபில்லம்.** நஞ்சு வெளியாகாமல் வலிகள் மேற்பக்கமாகவும் முதுகிலும் ஓடினால் **ஜெல்ஸமியம்**; நஞ்சு கருப்பையுடன் இறுக ஒட்டிக் கொண்டு வெளியே இழுக்கமுடியாமல் போகும்போது **காஸிபியம்**; கருச்சிதைவில் கருப்பையின் வாய் இறுக மூடிக் கொண்டு, அதனால் நஞ்சு வெளியே வரமுடியாவிட்டால் **காஸிபியம்**; மூத்திரப் பையில் வேதனையுடன் பிரசவமான பின் இருக்கவேண்டிய வலிகள் இல்லாமலிருந்தால் **கந்தாரிஸ்**; பிரசவத்திற்குப் பின் கடுமையான வலிகள் ஆயினும் கருப்பையின் வாய் இறுக மூடி விடுவதால் நஞ்சு வெளியே வர முடியாமை **காஸிபியம்**; பிரசவித்த பின் வலியே இல்லாமை **ஸபீனா**. **கந்தாரிஸில்** மானி விரைப்பினால் மூத்திரம் வெளியாகத் தடை ஏற்படும். **தூஜாவில்** தடை இருப்பதில்லை.

**அனுபவக் குறிப்புகள்** :— டைபாய்டு சம்பந்தமுள்ள சுவாசகோச வேக்காடுள்ள ஒரு கேசுக்கு **ஆர்ஸனிகம், பாப்டீஷியா, ரஸ் டாக்ஸ்** முதலிய ஔஷதங்களை மூன்று வாரங்களுக்குக் கொடுத்தும் குணமே ஏற்படவில்லை. என்னைக் கூப்பிட்டபோது நிலைமை மோசமாக இருந்தது. வியாதியஸ்தர் ஒரே மயக்கமாய் முனகிக் கொண்டு படுத்திருக்கிறார். மார்பில் பிசுக்கென்ற கபம் இருக்கும் ஓசை. மூத்திரம் கழிக்கும்போது எரிச்சல் ஆகிய குறிகள் இருந்தன. **கந்தாரிஸை** 30 வீரியத்தில் இரண்டு வேளைகள் கொடுத்தவுடன் மிக வேகமாகச் சௌகரியம் ஏற்பட்டது. அதன் பிறகு 200 வீரியத்தில் ஒரே ஒரு வேளை மட்டும் கொடுத்தேன். இரண்டு நாட்களுக்குள் முழுவதும் குணமாகி விட்டது.

ஐந்து வயதுள்ள என் பெண்ணுக்கு சுவாசகோச வேக்



காடு ஏற்பட்டது. பல மருந்துகள் கொடுத்தும் பயன்படவில்லை. நூற்றுக்கணக்கான சுவாசகோச வேக்காடுக் கேசுகளைக் குணப்படுத்திய என்னை இந்தக் கேசு சோதிப்பது போல் இருந்தது. குழந்தை பிழைக்கும் என்ற நம்பிக்கை இழந்து நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது **மூத்திரம் வெளியாகாமல் அடக்கப்பட்டது கந்தாரிஸை** நினைவுக்குக் கொண்டு வந்தது. நினைவு தவறிக் கடுமையான மூச்சுத் திணறல், மிக வேகமாக சுவாசித்தல், மார்பில் களகளத்த ஓசை, அளவு கடந்த பலவீனம் ஆகிய குறிகளும் இருந்தன. **கந்தாரிஸ்** இந்தக் கேசை எவ்வளவு சீக்கிரத்தில் குணம் செய்தது என்பதை நேரில் பார்த்திருந்தால் தான் நம்ப முடியும். மூத்திரம் அடக்கப்படுவதற்கு முன்னும் அக்கேசுக்கு **கந்தாரிஸே** ஏற்றதாக இருந்திருக்கலாம்.

---

## காப்ஸிகம்

## (CAPSICUM)

**முன்னுரை** :—1. எரிச்சல்; 2. மந்த குணம்; 3. குளிர் சிறிது கூட ஒத்துக் கொள்ளாமை; 4. இறுக்கும் உணர்ச்சி; 5. இருமும்போது அழுகிய நாற்றம் வெளிப்படுதல்; 6. தாகமாக இருக்கும். ஆனால் குடித்தால் உடலில் நடுக்கம் ஏற்படும். இவை இவ் ஔஷதத்தின் விசேஷக் குறிகளாம்.

### பொதுவான குறிகள்

**தகுதி** :— குறைவான மயிரும் நீலக் கண்களும் உள்ளவர்கள்; கொழுப்புச் சதை உண்டாகும் உடல்வாகு; தசைகள் தளர்ந்திருத்தல்; சருமம் உப்பி இருக்கும்; மந்த குணம், நடமாட வெறுப்பு. அல்ப வேலைகளாலும் களைத்துப் போகுதல். எந்த விதமான வேலையாலும் பயப்படுதல், திறந்த இடங்களைக் கண்டால் பயம். அங்கே போகவும் மாட்டார். சிவந்த முகமும்

மந்த குணமும், எப்போதும் பிறந்த வீட்டையே நினைக்கும் பெண்கள் (முகம் சிவந்திருக்கும். ஆனால் குளிர் இருக்கும். குளிர்ச்சியாக இல்லாவிட்டாலும் சூடாக இருக்காது).

**மனம் :—** 1. பயம். எளிதிலே பயப்படும் குணம். 2. அடிக்கடி மாறும் குணம் :— குதூகலமாகப் பேசிக் கொண்டு இருக்க விரும்புவார். ஆயினும் அல்ப காரணங்களாலும் கோபம் உண்டாகும், 3. வீட்டைப் பற்றிய நினைவு :— கன்னங்கள் சிவந்து இரவில் தூக்கம் இல்லாமல் இருத்தல்.

**உடல் :—** உடல் வலிமை குறைந்து விடுதல். சில இடங்களில் எரிச்சலுடன் வலிகளும் பொதுவான சில்லிப்பும். உதடுகள் வீங்கி வெடித்திருக்கும். முகம் சிவந்து ஆனால் சில்லென்றே இருக்கும். மூக்கும் சிவந்திருக்கும்; ஆனால் குளிர்ச்சியாய் இருக்கும். பெருமூச்சு விடுவது போல் ஆழ்ந்து சுவாசித்தல். வாய் புளிப்பாய் இருக்கும். ஏராளமாய் உமிழ் நீர் உற்பத்தியாகுதல். புளிப்புக் குறிகள் உள்ள நாட்பட்ட அசீரணம். வயிற்றினுள் சில்லென்று இருக்கும் உணர்ச்சி. அதிக வாயு உப்பிசம், குறிப்பாக உடல் பலவீனம் உள்ளவர்களிடம். எலும்பு மூட்டுகளில் பிடிப்பும் வலியும்; உடையும் ஓசை, குறிப்பாக நடக்க ஆரம்பித்தவுடன். காரணம் எதுவும சொல்ல முடியாமல் தூக்கம் இல்லாமை

**உபாதி கூடுதல் :—** குளிரும் ஈரக் கசிவும் கொஞ்சம் கூட ஒத்துக் கொள்வதில்லை. அவைகளால் பல குறிகள் கூடுதலாகின்றன. குளிர், மழை எதுவும் இல்லாத பருவத்தில் வீசும் சாதாரண காற்று, நல்ல காற்று ஆகியவைகளால் கூட உடம்பில் குளிரும் உணர்ச்சி தோன்றும். காற்று வீசினால் அது சூடாய் இருந்தாலும் சரி,



குளிர்ச்சியாய் இருந்தாலும் சரி, உடலுக்குத் தாங்காது.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— உடம்பை மூடாமல் திறந்து வைத்திருந்தால்; குளித்தால்; விழுங்காமல் இருக்கும் போது தொண்டையில் குத்தும் வலிகள் (தொண்டைப் புண்ணில் இருப்பது போல்).

**உபாதி குறைதல் :—** சூட்டினால் சௌகரியம்; சூடுள்ள அறைகளில் இருக்க விரும்புவார். முறைச் சுரத்தில் சில்லிப்பு முதுகில் ஆரம்பிக்கிறது. **காப்ஸிகம்** தேவைப்படும் வியாதியஸ்தர்களில் சிலர் தங்கள் முதுகின் கீழ் சுடு தண்ணீர்ப் பையை வைத்துக்கொள்ளாமல் தூங்குவதில்லை. இதற்குக் காரணம் இந்த சில்லிப்பு உணர்ச்சி தானே என்று தோன்றுகிறது.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**எரிச்சல்: இறுக்கும் உணர்ச்சி :—** உடலின் பல இடங்களில் எரிச்சல். மிளகாய் வற்றலை அரைத்துத் தடவி விட்டது போல் பற்றி எரிதல், சூடான ஒற்றிடங்களால் குறைவது இல்லை. "எரிச்சலுடன் வலி உள்ள போது வேறு ஹோமியோபதி ஔஷதங்கள் ஏதாவது உபயோகமாகுமென்று நிர்ணயிக்கப் போதுமான விசேஷக்குறிகள் எதுவும் இல்லாவிட்டால் **காப்ஸிகமே** முதன் முதலாகக் கவனிக்கப்பட வேண்டும். **காப்ஸிகத்தின்** எரிச்சல் குளிர்ந்த தண்ணீரினால் கூடுதலாகும்". (**க்ளார்க்**). எரிச்சல், தொண்டை, காதுகள், மூத்திரப்பை, மலப்பை, வயிறு, நுனி நாக்கு, மூலம், சுக்கிலச் சுரப்பி முதலிய பல இடங்களில் தோன்றலாம். மூத்திரக் குழாயின் வாயில் எரிச்சல். அதிகமான புண் உள்ள உணர்ச்சியுடன் இரத்தம் கொட்டும் மூலங்கள், மலம் கழிக்கும் போது எரிச்சல், மலம் தண்ணீர் போல் இருந்தாலும் எரிச்சல் இருக்கும். வாய், நாக்கு, வாயின் மேல் கூரை

ஆகியவைகளில் எரிச்சலுடன் சிறு கொப்பளங்கள். இறுக்கும் உணர்ச்சி, விசேஷமாகத் தொண்டை, மார்பு, மூத்திரப்பை, மலப்பை ஆகியவைகளில்.

மேற் சொன்ன இரு விசேஷக் குறிகளும் அதாவது எரிச்சலும் இறுக்கும் உணர்ச்சியும் ஒன்று சேர்ந்திருத்தல். தொண்டையில் இறுக்கும் உணர்ச்சியுடன் எரிச்சல், விழுங்கும் போது மிக அதிகமாகும். தொண்டைச் சுரப்பி வேக்காட்டில் இவ்விதம் இருக்கும். டிப்தீரியாவில் இறுக்கும் உணர்ச்சி இடைவிடாமல் இருத்தல், அல்லது விழுங்கும் போது கூடுதலாகும்; களைப்பும் குளிரும் உணர்ச்சியும் இருக்கும். மார்பில் இறுக்கும் உணர்ச்சியால் மூச்சு விடத் தடை ஏற்படும். அடிக்கடி விழுங்கத் தூண்டுதலுடன் தொண்டையில் இறுக்கும் உணர்ச்சி.

**குளிர்ச்சியும் சில்லிப்பு உணர்ச்சியும் :—**உடல் முழுவதும் குளிர்ந்திருத்தல். சில இடங்கள் மட்டும் குளிர்ந்திருத்தல். தொடைகள் குளிர்ந்திருத்தல். வியாதியுள்ள பாகங்கள் சில்லென்று இருத்தல். வயிற்றினுள் குளிர்ந்த தண்ணீர் இருக்கும் உணர்ச்சி. மூக்கும் கைகால்களும் சில்லிட்டு உடல் நீல நிறமாகுதல் (அடிவயிறைக் கிழித்து ஆப்பரேஷன் செய்த பிறகு அவ்விடம் உப்பிவிடுதல்). விரைப்பை சில்லென்று ஆகி ஆண் தன்மைக் குறைவு, விரைகள் சிறுத்துப் போய் விடுதல். வலியுடன் சில்லிப்புத் தோன்றுதல். குளிர் முதுகில் ஆரம்பித்து உடல் முழுவதும் பரவும் (முறைச் சுரம்). தண்ணீர் குடித்தவுடன் குளிர் அதிகமாகும் (ஆர்ஸனிகம், சைனு, நக்ஸ் வாமிகா), குளிர் உள்ள போது தாகம் கடுமையாய் இருக்காது ஆயினும் தண்ணீர் குடித்த பிறகு ஒவ்வொரு தடவையும் உடலில் நடுக்கம் உண்டாகும். வயிற்றுக் கடுப்பில் மலம் கழித்தவுடன் ஒவ்வொரு தடவையும் தாகமும் தண்ணீர் குடித்தால் குளிரும் ஏற்படும். உடலின் சில்லிப்பு அதிகமாக ஆக உற்சாகம் குறைந்து விடும்.



**மந்த குணம்: உடலின் எதிர்ப்புச் சக்தி குறைதல் :—**அதிகச் சதை உள்ள உடலும் மந்த குணமும். விகாரமாய் நடமாடுதல், நடமாட வெறுப்பு. உணவு உட்கொண்ட பிறகு தூக்கக் கலக்கமாய் இருத்தல். தனியே இருக்க விரும்புதல்; படுத்துக் கொண்டு தூங்க விருப்பம். மெதுவாகச் சீரணம் ஆகும். உணர்ச்சிகள் மந்தமாகும். தொண்டைப் புண் தூங்கி வழியும். காப்ஸிகம் தேவைப்படும் உடல்வாகு உள்ளவர்களுக்கு ஏற்படும் நாட்பட்ட தொண்டைக் கம்மல். "மந்த குணம், தெளிவாய்ச் சிந்தனை செய்ய முடியாது". கொழுத்த உடலும் தளர்ந்த தசைகளும் உள்ளவர்களுக்கு உடலில் எதிர்ப்புச் சக்தி இருப்பதில்லை. சளி பிடித்த பிறகு எதிர்ப்புச் சக்திக்குறைவினால் கோழையை வெளியேற்ற முடியாத அளவு பலவீனம் உண்டாகும். நாட்பட்ட மேக வெட்டையில் உடலில் எதிர்ப்புச் சக்தி இல்லாமல் கெட்டியான பாலேடை போன்ற போக்கும் மூத்திரம் கழிக்கும் போது எரிச்சலும் உண்டாகும்.

**மாறி வரும் தன்மை :—**குளிரும் சூடும் மாறி வருதல். பிறந்த வீடு அல்லது தாய் நாடு திரும்ப வேண்டுமென்ற ஆவலும் தற் கொலை செய்து கொள்ள எண்ணமும். ஒரு சமயம் சிரிப்பதும் மறுசமயம் அழுவதுமாக மாறி வரும் குணம்: ஒரு சமயம் சந்தோஷமாகவும் பாடிக் கொண்டும் இருப்பார்; அல்ப காரணத்தால் கூட உடனே கோபம் வந்து விடும். ஒரு சமயம் வலது காதிலும் மறு சமயம் இடது காதிலுமாக வியாதி மாறித் தோன்றுதல். கன்னங்கள் ஒரு சமயம் சிவந்து சூடா

கவும் மறுசமயம் வெளுப்பாகவும் மாறுதல். பல இடங்களில் கடுமையான வலிகள், ஒரு சமயம் ஒரு இடத்திலும் மற்றொருசமயம் வேறு ஒரு இடத்திலுமாக மாறித் தோன்றும். அடிக்கடி குணம் மாறும் தன்மை.

**உணர்ச்சி அதிகரிப்பு**:—புலன் உணர்ச்சிகள் மிகவும் அதிகமாகுதல் (மந்தமாகுதல், **ஹெல்லபோரஸ்**). "ஓசைகள், வாசனைகள், சுவை, தொடு உணர்ச்சி, அவமானம் எதையும் தாங்க முடியாது", குளிர்ந்த பானங்கள் கூட ஒத்துக் கொள்ளாது; உடலில் நடுக்கத்தை ஏற்படுத்தும்.

**கடுமையான நிலை: அழுகுதல்**:—புண்கள் குழி விழுந்து இருக்கும், சுவாச கோசங்கள் அழுகி விடுமோ வென்று தோன்றும் நிலைமை. அல்லது அழுகி விடுதல். அழுகி விட்டால் மூச்சுக் காற்று நாறாமல் இருக்கும். ஆனால் இருமும் போது அழுகிய நாற்றம் வீசும்; அதனால் வாயில் நாற்றம் இருப்பது தெரியும் காதுகளின் கீழே உள்ளூர வீக்கம், இரவில் கூடுதலாகும். செவிப் பறையில் துவாரம் செய்து காதுத் துவாரம் முழுவதும் அடைத்துக் கொள்ளும் சீழ் உள்ள நாட்பட்ட காதுக் கோளாறுகள். "சீழ்ப் பிடிக்கும் காது வேக்காடு, காதினுள்ளே அறிப்பு". "வாயில் எரிச்சலை உண்டாக்கும் சிறு கொப்புளங்கள், அழுகிய நாற்றம் அடித்தல்". எரிச்சலுடனும் குளிருடனும் வாயிலும் தொண்டையிலும் சதை ஏராளமாய் அழுகுதல், அழுகிய நாற்றத்துடன் வாயின் மேல் கூறையில் சிறிய கொப்புளங்கள் (டிப்தீரியாவிலும் தொண்டை அழுகும் நிலைமையிலும்), இத்துடன் உடல் சோர்வு. மேக வெட்டையினால் சுக்கிலச் சுரப்பிகளில் வலி. நாற்றமுள்ள கழிவுகள்.

**எலும்புகள் தாக்கப் படுதல்**:—பொதுவாக எல்லா எலும்புக் கோளாறுகளிலும் இது உபயோகப்படும்.



காதுப் பக்கமுள்ள எலும்புகள் அழுகுதல்; எரிச்சலும் கிழிக்கும் வலிகளும், இருமும்போது வலி அதிகமாவதும். வலது சப்பை எலும்பு அழுகுதல்; அதனால் இடது கால் மெலிந்து கடுமையான வலி உண்டாகும். தலை எலும்பு அழுகுதல். முக வெலும்புகளில் வலி.

**எட்டியுள்ள இடங்களில் வலி** :-இருமும் போது எட்டியுள்ள இடங்களில் வலி—காதுகள், கால்கள், முழங்கால்கள், மூத்திரப்பை, வியாதியுள்ள பாகங்களில் வலி, தொடை நரம்பு வாதத்தில் இருமினால் வலி கூடுதலாகும். இருமல் கடுமையாக, வெடிப்பது போல் அல்லது திடீரென்று தோன்றி இடைவிடாமல் இருப்பதினால் உடைக்கும் தலை வலியும் மார்பு தூள் தூளாக நொறுங்கிப் போகுமென்ற உணர்ச்சியும் ஏற்படும். "இருமும் போது ஒவ்வொரு தடவையும் தவறாமல் எலும்பு மூட்டில் வலியை ஏற்படுத்தும்". "இருமலுடன் வியாதியுள்ள பாகங்களில் குத்து வலிகள்".

**ஒட்டும் குணமுள்ள கழிவுகள்**:—வயிற்றுக் கடுப்பில் சீதகம் இரத்தம் கலந்து ஒட்டிக் கொள்ளும். உமிழ் நீர் குழ குழப்பாய் இருக்கும். சுருட்டுக் குடிப்பவர்களின் தொண்டைப் புண்ணில் பிசுக் கென்ற கோழையை வெளியே துப்ப மிக சிரமம் ஏற்படும். (கோழை சிறிதளவு கூட வெளியாகாமலும் இருக்கலாம்).

**கடு கடுப்பு**:—மலம் கழிக்கும் போது, விசேஷமாகக் கழித்த பிறகு ஆசன வாயில் கடுகடுப்பு மூத்திரப் பையில் கடுகடுப்பு; வலியுடன் சொட்டுச் சொட்டாக மூத்திரம் வெளிப்படும்; அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல், ஆனால் மூத்திரம் வெளிப்படுவதில்லை. மலம் இரத்தம் கலந்த சீதகம். எரிச்சல், கடுகடுப்பு ஆகியவைகளுடன் வெளிப்படும். "மலப் பையிலும் மூத்தி

ரப் பையிலும் ஒரே சமயத்தில் கடுமையான கடுகடுப்பு". மூலத்தில் "ஆசன வாயில் கடுகடுப்பு. குதிகால்களைக் கீழே ஊன்றி உட்கார்ந்து கொண்டால் தான் சௌகரியமாய் இருக்கும்".

சிவ சிவப்பு: மற்ற நிறங்கள் :—கன்னங்களில் சிவ சிவப்புடனும் தூக்கம் வராமலும் பிறந்த வீட்டுக்கு அல்லது பிறந்த நாட்டுக்குப் போக வேண்டு மென்ற ஏக்க முள்ளவர்கள், முகம் சிவந்தும் ஆனால் குளிர்ந்தும் இருக்கும் (அஸபோடிடா). மூக்கு சிவந்து ஆனால் சில்லிப் பாய் இருக்கும். சருமம் முழுவதும் சிவந்து எரிச்சலுடன் இருக்கும். முகத்தில் சிவப்பான புள்ளிகள். சிவந்த கண்கள். பாலேடை போன்ற, கெட்டியான கழிவுள்ள மேக வெட்டை. நாக்கின் அடியில் பச்சையாய் இருக்கும். சீதகர் கறுப்பான இரத்தம் கலந்து மலமாய் வெளிப்படும்.

விருப்பு :—ஊக்கம் தரும் பானங்களிலும் அதிகச் சுவையுள்ள பொருள்களிலும் ஆவல். மிளகு, விஸ்கி ஆகியவை வேண்டு மென்பார். வயிற்றுக் கடுப்பில் மலம் கழிந்த பிறகு பனிக்கட்டி போல் குளிர்ந்த தண்ணீர் குடிக்க விரும்புதல்; ஆனால் அதைக் குடித்தால் உடலில் குளிர் நடுக்கம் தோன்றும்.

இடது பக்கமே அதிகம் தாக்கப் படுதல் :—பெரும்பாலும் இடது பாகமே வியாதிகளால் தாக்கப்படும். இடது சினைப்பை உள்ள இடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் உணர்ச்சி.

## மற்ற குறிகள்

உள் நாக்கு வீங்கிக் கடினமான ஒரு பொருளை அழுத்திக் கொண்டிருப்பது போல் தோன்றுதல். வலியுடன் மானி விரைத்தல்: "கடுமையான விரைப்பு,



குளிர்ந்த தண்ணீரை ஊற்றினால்தான் அடங்கும்". விரைகள் மெலிந்து சிறுத்தல்.

---

# கார்போ அனிமாலிஸ்
# (CARBO ANIMALIS)

முன்னுரை :—ஆழ்ந்தும் நீண்ட காலமும் வேலை செய்யும் ஔஷதங்களில் இதுவு மொன்று. கார்போவெஜியைப் போலவே ஆழ்ந்து வேலை செய்வதுடன் இதனால் ஏற்படும் நன்மைகள் அதிக நாள் நீடித்து நிற்கவும் செய்யும். ஔஷதப் பரீக்ஷையில் இது உண்டாக்கிய வியாதிக் குறிகளில் குறிப்பிடத் தக்கவை பின்வருமாறு :—1. எரிச்சல். 2. கல் போல் கடினமாகுதல். 3. அழுகுதல். 4. அதிகக் கழிவுகள் இல்லாவிட்டாலும் உடல் சோர்வு.

## பொதுவான குறிகள்

தகுதி :—சுரப்பிகளில் வீக்கமும் அசுத்த இரத்தக் குழாய்ப் பெருக்கமும் உள்ளவர்கள். வியாதிகளினால் உடல் வலிமை மிகவும் குறைந்து போன கிழவர்கள், குறிப்பாக உடலின் பல்வேறு பகுதிகளிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்களில் வீக்கமும் சருமம் நீல நிறமாவதும் காணப்பட்டால் மிக நன்றாக உபயோகமாகும். இரத்த ஓட்டத்தின் அளவு குறைந்தும் உடல் வலிமை மிகவும் குறைந்தும் உள்ளவர்கள். ("உடலின் சூடும் மிகவும் குறைந்து விடும்"). இரத்த சோகையுள்ள, உடல் கட்டுத் தளர்ந்தவர்களுக்கு வியாதிகள் மிக மெதுவாகத் தோன்றி மிக மெதுவாக வளர்ந்து நாட்பட நீடிக்கவும் செய்து முடிவிலே விஷத் தன்மை வாய்ந்ததாய் மாறுகின்றன. மேகவெட்டை, மேகக் கிரந்தி வியாதிகள் உள்ளவர்கள். சுவாச கோச வேக்காடு, மார்ச் சளி, அல்லது சுவாச கோச க்ஷயம் ஆகிய வியாதிகளில் முற்

றிய நிலைமைகள், தசை அழுகிவிடுதல் (நாற்ற முள்ள கோழை வெளியாகும்).

மனம்:—1. வருத்தம்: உற்சாகம் குறைந்திருத்தல். தாய் வீடு அல்லது தாய் நாடு திரும்ப வேண்டுமென்ற ஏக்கம். தனியே இருக்க விரும்புதல். சாப்பிடும்போது அழுதல். ஒரு சமயம் உற்சாகமாகவும் மறு சமயம் மிகுந்த கவலைப்படுவதுமாக மாறும் குணம், 2. பயம். மிக எளிதில் பயப்படும் சுபாவம், இருட்டைக் கண்டால் பயம். கண்களை மூடும்போது இருட்டுப் பயம் மிக அதிகமாகும். 3. மனக் குழப்பமும், மந்த குணமும்:— ஓசை எங்கிருந்து வருகிறது என்று சொல்லத் தெரியாது. பார்வை மங்கலுடன் கண்கள் அவைகளின் குழிகளில் தளர்ந்து இருப்பதுபோல் தோற்றம். "கிழவர்களுக்குப் படிக்க ஆரம்பித்தவுடன் பார்வை மங்கலாகிக் கண்களைத் தேய்த்துக் கொண்டால் சரியாகி விடும்.

உடல்:—அல்பமான வேலை செய்தாலும் எளிதிலே சுளுக்கு விழுதல். (லேடம்); எலும்பு மூட்டுகள் பலவீனமாய் இருத்தல்; குளிர்ந்த உணர்ச்சி மார்பிலும் (ப்ரோமியம்) வயிற்றிலும் பாதங்களிலும் இருக்கும். கை கால்களில் மதமதப்பு. அதிகச் சோர்வும் பலவீனமும், விசேஷமாக நடக்கும்போது ஏற்படும், அத்துடன் வியர்வையும் சீக்கிரத்தில் உண்டாகும். களைப்பைத்தரும். நாற்றம் வீசும் வியர்வை, குறிப்பாகத் தொடைகளிலும் இரவு நேரங்களிலும். வியர்வை துணியில் மஞ்சள் கறையை உண்டாக்கும். முதுகெலும்பின் கீழ் நுனியில் வலி, குதிரைமேல் ஏறிச் சவாரி செய்தால் ஆசன வாயில் வலியுள்ள புண் தோன்றும் நிலைமை. சீரணம் மெதுவாக ஆகுதல், வயிற்று உப்பிசம்.

உபாதி கூடுதல்:—திறந்த இடங்களில்உள்ள வறண்ட



குளிர்ந்த காற்று ஒத்துக்கொள்ளாது. குறிப்பாக குளிர் காலத்திலுள்ள குளிர் காற்று ஒத்துக்கொள்ளாது, (கார்போ வெஜி வியாதியஸ்தருக்கு சூட்டைக் கண்டால் வெறுப்பு ஏற்படும்). சுமை தூக்குவதால் சுமையின் கனம் அதிகமாய் இல்லா விட்டாலும் உடனே சுளுக்கு ஏற்படும், சுளுக்கு ஏற்பட்டவுடன் உடலில் அதிக சோர்வு தோன்றும். குதிகால் மூட்டுகளில் பலவீனம், நடக்கும்போது மூட்டு புரளுதல்.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— படுத்தவுடனே, குறிப்பாக இரவில், இருமல் கூடுதலாகும்; வலது பக்கமாய்ப் படுத்தாலும் கூடுதலாகும். நடந்தாலும் நின்றாலும் கீழே படுத்தாலும் கீழ் முதுகில் வலி உண்டாகும்; முதுகு முறிந்து விடுமோ என்று தோன்றும். கண்களை மூடிய மறு கணமே மூச்சு அடைத்து விடுவதுபோல் தோன்றும். குளிர் காற்றில் எல்லாக் கோளாறுகளும் கூடுதலாகும். க்ஷவரம் செய்து கொண்ட பிறகு கோளாறுகள் அதிகமாகும் (ப்ரோமியத்தில் குறைவாகும்.)

உபாதி குறைதல்:— சூடுள்ள அறைகளில் சௌகரியமாய் இருக்கும். வயிற்றுப் பக்கமுள்ள சில்லிப்பு இறுக அமுக்கினாலும் தேய்த்தாலும் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

கல்போல் கடினமாகுதல்:— சுரப்பிகள் கடினமாகி, வீங்கி வலியுடன் இருக்கும்; கழுத்து, அக்குள்கள், அரையிடுக்குகள். ஸ்தனங்கள் ஆகிய இடங்களிலுள்ள சுரப்பிகள். வலி வெட்டுவதுபோலவும் கிழிப்பதுபோலவும் எரிச்சலுடனும் இருக்கும். சரியாகக் கவனிக்காமல் விடப்பட்ட அரையாப்புக் கட்டி (மேகவெட்டை அல்லது மேகக் கிரந்தியினால் ஏற்பட்டது) கல்போல் கடினமாகுதல். "அரையாப்புக் கட்டிகளை அடிக்கடி கிழித்து

விட்ட சமயங்களிலும் அக் கட்டிகளில் வாய் அகன்ற புண்ணும் அப்புண் சிறிதளவு தழும்பிட்டுச் சுற்றிலும் உள்ள சதை கல்போல் கடினமாகவும் இருக்கும் சமயங்களிலும் கார்போ அனிமாலிஸ் மிக விசேஷமாய்ப் பயன்படும்'' என்று பாரிங்டன் சொல்கிறார். மூக்கு கடினமாய், சிவந்து, வீங்கி இருக்கும். கருப்பையின் வாய், அல்லது கழுத்து அல்லது கருப்பை முழுவதுமே கல்போல் கடினமாய் மாறுதல். மார்பில் கடினமான, வலி தரும் கட்டிகள். கல்போல் கடினமாகுதல். உடலின் பல இடங்களில் கல்போல் கடினமான கட்டிகள். அக்குள்களிலும் அரை யிடுக்குகளிலும் கடினமான கட்டிகள். குறிப்பாக மேகக்கிரந்தியும் மேகவெட்டையும் உள்ள வியாதியஸ்தர்களுக்கு, கடினமான புண்கள். கருப்பையில் நாட்பட்ட கடினமான வீக்கம். வீக்கம் வருஷத்துக்கு வருஷம் அதிக மாகுதல்; மாதவிடாய்க் காலத்தில் அளவு மீறிய போக்குடன் இருக்கும். ஆரம் மூர், நேட். டில் இவ்விதமான நாட்பட்ட கருப்பை வீக்கம் இருக்கும். ஆனால் சில இடங்களில் மட்டும் கடினமாய் இருக்கும்; அத்துடன் மாதவிடாய்க் காலத்தில் அளவு மீறிய போக்கு இருக்காது.

எரிச்சல்:— எரிச்சலுடன் வலிகள்: வேக்காடு உள்ள இடங்களில் நெருப்பு இருப்பதுபோல் கடுமையான எரிச்சல். (ஆர்ஸனிகம்). அவ்விடங்கள் கல்போல் கடினமாய் நீலமாகவும் இருக்கும். ஸ்தனங்களைப் பற்றிய புற்று வியாதியில் எரிச்சலும் இழுக்கும் வலிகளும் அங்குள்ள சுரப்பிகள் கடினமாகிச் சிறுசிறு கட்டிகளாகவும் இருக்கும். வயிற்றில் எரிச்சலும் இழுத்துப் பிடிக்கும் வலிகளும். கருப்பையின் கழுத்தில் ஏற்படும் விஷத்தன்மை வாய்ந்த புண்ணுடன் எரிச்சலுடன் கூடிய வலி தொடைகளுக்குக் கீழே பரவும்.



**அழுகுதல்: நீல நிற மடைதல்: விஷத்தன்மை :—** புண்ணாகுதல், நாற்றமுள்ள கழிவுகள், நீல நிறம் தோன்றுவது ஒரு விசேஷக் குறி. இவ் வௌஷதம் தேவைப்படும் வியாதிகள் அனைத்தும் விஷத்தன்மை பொருந்தியவையாக இருப்பதும் ஒரு விசேஷமான குறி. பல இடங்களில், குறிப்பாகச் சுரப்பிகளில் புண் தோன்றுதல். புண்கள் கல்போல் கடினமாகுதல் "சாதாரணமாய் ஏற்பட்ட புண் விஷத்தன்மை வாய்ந்ததாய் மாறுதல்." நாற்றமடிக்கும், காரமுள்ள கழிவுகள். இரவில் களைப்பை உண்டாக்கும் அளவு நாற்றமும் உள்ள வியர்வை, ஆடைகளை மஞ்சள் நிறமாக்கும். கோழை பச்சையாகவும். சீழ்ப் போலவும் நாற்றமுள்ளதாகவும் இருக்கும்; வலது சுவாசகோசத்திலிருந்து அதிகமாய் வரும். பச்சை நிறமுள்ள சீழுடன் இருமல் (சுவாசகோசங்களில் சீழ்ப் பிடித்தல், சுவாசகோச க்ஷயம்). உடம்பின் வெளிப்புறத்திலோ அல்லது உட்புறத்திலோ சீழ்ப்பிடித்தலும் நாற்றமுள்ள சீழ் முதலிய பொருள்கள் வெளியாவதும். புற்று வியாதி சம்பந்தமுள்ள புண். கருப்பைப் புண் கொஞ்சங் கொஞ்சமாக விஷத்தன்மை வாய்ந்ததாக மாறுதல். கறுப்பு நிறமுள்ள, நாற்றம் வீசும் மாதவிடாய்ப் போக்கு. கறுப்பான மாதவிடாய்ப் போக்கு காலை வேளைகளில் மட்டும் வெளிப்படும். சருமம், கன்னங்கள், உதடுகள், கைகள், கால்கள் ஆகியவை நீல நிறமாய் இருக்கும். ஊனீருடன் காதிலிருந்து சீழ்வருதல். உடம்பு நீல நிறமாகி, சீழ்ப்போன்ற அதிக நாற்றமும் உள்ள கபத்துடன் டைபாய்டில் இருப்பது போன்ற மயக்க நிலைமை ஏற்படும் சுவாசகோச உறை வேக்காடு. மூக்கின் நுனி சிவந்தோ நீல நிறமாகவோ இருக்கும். காது கேட்பது குறைவாகும், குறும்பை நாற்றம் வீசும்.

**காலி உணர்ச்சி:—** உடம்பிலுள்ள உயிர்த் தண்ணீர் வெளியே போய் விடுதல், முக்கியமாகக் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுத்தல் ஆகியவைகளால் வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி. சாப்பிட்ட பிறகும் இந்த உணர்ச்சி குறையாமல் அப்படியே இருக்கும். (கார்போ விஜியில் சாப்பிட்ட பிறகு சௌகரியமாகும்.)

**உயிர்த் தண்ணீர் சிறிதளவே வெளியானாலும் களைப்பு உண்டாகும் குணம்:—** மாதவிடாயில் போக்கு சிறிதளவு வெளியான வுடனேயே மிகுந்த பலவீனம் உண்டாகிப் பேசவே முடியாமல் போகும் (அலுமினா, காக்குலஸ்). மாதவிடாய்க் காலத்தில் உடம்பை முறித்துக் கொள்வதும் கொட்டாவி விடுவதும் இவைகளுடன் அதிக பலவீனம். மாதவிடாய்க்குப் பிறகு அளவு கடந்த உடல் சோர்வு. மாதவிடாய், வெள்ளை ஒழுக்கு, வயிற்றுப் போக்கு, குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்தல் முதலியவை வியாதியஸ்தருக்குக் களைப்பை உண்டாக்கும் (ஆர்ஸனிகம்).

**வலது பக்கமே அதிகம் தாக்கப்படுதல்:—**வலது சினைப்பை கனமான பந்துபோல் தோன்றும். மார்பின் வலது பக்கத்தில் குத்து வலிகள்.

### மற்ற குறிகள்

"மூச்சை அடைக்கும் வறண்ட இருமலினால் மூளையில் ஆட்டம் கண்டு அவ்வுறுப்பு தலையினுள் ஆடுவதுபோல் தோன்றும்" செப்புப் போன்ற நிறமுள்ள சரும வியாதி, குறிப்பாக நெற்றியில், காதுப் பக்கமுள்ள எலும்பின் மேல் தோலில் வீக்கம்— அரையிடுக்கில் பிதுக்கம் ஏற்படும் குடல் வாதம். மாதவிடாய் வழக்கத்துக்கு மிக முன்னதாகத் தோன்றி போக்கு அதிக நாட்கள் நீடித்தும் ஏராளமாகவும் இருக்கும். சுவாசகோச உறை வேக்காட்டில் மற்ற எல்லாக் கோளாறுகளும் குணமாகிய பிறகும் குத்து வலிகள் மட்டும் மறையாமல் இருத்தல்.



**உறவு:—** முன்னும் பின்னும் வேலை செய்யக் கூடியது கல். பாஸ்.

**குறிப்புகள்:—** அழுகிய பொருள்களைத் தின்றதால் ஏற்படும் கோளாறுகளில் (கெட்டுப்போன மீன் முதலியவை) மிகவும் உபயோகமுள்ளது. அழுகிப்போன காய்கறிகளைத் தின்றதால் தோன்றும் கோளாறுகளையும் நீக்கும் கார்போ வெஜி., அல்லியம் ஸிபா).

---

## கார்போ வெஜிடபிலிஸ்
## (CARBO VEGETABILIS)

**முன்னுரை:—** கரிக்கட்டை வீரியப் படுத்தப் படாத நிலைமையிலும் வீரியப் படுத்தப்பட்ட நிலைமையிலும் நாற்றத்தைப் போக்கவும் வியாதிக் கிருமிகளைக் கொல்லவும் வல்லமை உள்ளதாய் இருக்கிறது. ஆனால் வீரியப்படுத்தப்பட்ட கரி வீரியப் படுத்தப்படாத கரியைவிட ஆழ்ந்து வேலை செய்கிறது. வீரியப் படுத்தப்படாத கரி சில சமயங்களில் அதிகப் புளிப்புடன் கூடிய வயிற்று வேதனையைக் குணம் செய்கிறது. வீரியப் படுத்தப்பட்ட கரியோ ஹோமியோபதித் தத்துவப்படித் தகுந்த ஔஷதம் என்று நிர்ணயிக்கப்படும் சமயங்களில் நாட்பட்ட கோளாறுகளைக்கூட நீக்கிவிடுகிறது. சாவுக்கு முன் அனேகமாகக் காணப்படும் க்ஷீண நிலைமை கார்போ விஜியைக் குறிப்பிடும். சில சமயங்களில் இவ் வௌஷதம் அந்நிலைமையைக் குணம் செய்யவும் வல்லமை உள்ளது.

### பொதுவான குறிகள்.

**தகுதி:—** வயதான, உடல் வலிமை குறைந்தவர்கள், குறிப்பாக வியாதியில் அடிபட்டு உடல் வலிமையை

இழந்தவர்கள். டைபாய்டு சுரத்தில் அடிபட்டுப் பிறகு உடம்பு தேருமல் இருப்பவர்கள் (ஸோரினம்). உடல்வலிமையைக் குறைக்கும் வியாதியுள்ளவர்கள் (சைனு, பாஸ்பரஸ், ஸோரினம்) "பலவீனமான, மெலிந்த உடலுள்ளவர்கள், வயதானவர்களாயும், நாட்பட்ட அசீரணம் உள்ளவர்களாயும் (கண்டபடி சாப்பிட்டு வயிற்றைக் கெடுத்துக் கொண்டவர்கள்) இருத்தல்." பல நாட்களுக்கு முன் ஏதோ ஒரு அடிதடி, காயம் முதலானவை ஏற்பட்டு அதிலிருந்து உடல் நலம் சீராய் இல்லாதவர்கள். "ஏதோ ஒருசமயத்தில் ஒருவியாதி ஏற்பட்டு உடல் வலிமையை அழித்த பிறகு வேருெரு வியாதி ஏற்பட்டு உடலைவிட்டு நீங்காமல் இருத்தல் (ஸோரினம்"). "உதாரணமாகக் குழந்தையாக இருந்த போது கக்குவாய் இருமல் உண்டாகி அதிலிருந்து தான் காச வியாதியினுல் கஷ்டப் படுவதாக வியாதியஸ்தர் சொல்வார்; சில வருஷங்களுக்கு முன் ஒரு தடவை அளவு மிஞ்சிக் கள், சாராயம் முதலிய போதைப் பொருள்களை உட்கொண்டதிலிருந்து நாட்பட்ட அசீரணம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்வார். உடம்பை மிகவும் சிரமப்படுத்தி வேலை செய்த காரணமாக அதிலிருந்து உடல் நலம் கெட்டு இருத்தல். (ரஸ்டாக்ஸ், கல். கார்ப்); உடலைச்சிரமப்படுத்தி வேலை செய்ததுகூட இப்பொழுது பிரமாதமாகத் தோன்றவில்லை, ஆனுல் அவருடைய தற்கால வியாதிகள் யாவும் அதனுல் தான் ஏற்பட்டன; சில வருஷங்களுக்கு முன் அடிதடிக்காயம் ஏற்பட்டது; அதன் அடையாளங்கள் எதுவும் இப்பொழுது தெரியவில்லை; ஆயினும் அவருடைய தற்காலக் கோளாறுகள் யாவும் அடிதடிக் காயம் ஏற்பட்ட நாளிலிருந்துதான் ஆரம்பமாகியது. அல்லது ஈரக்கசிவுள்ள, சூடான காற்றில் எப்போதோ



ஒரு தடவை அடிபட்டுத் தன்னுடைய தற்காலக் கோளாறுகள் அதன் விளைவாய்த் தோன்றின."

உடல்:—சீரணம் தாமதமாக ஆகும். எளிய உணவும் உடலுக்கு ஒத்துக் கொள்வதில்லை. புளிப்பும் பொறுக்க முடியாத நாற்றமும் உள்ள ஏப்பங்கள் குறிப்பாக அடிவயிற்றின் மேல் பாகத்தில் உப்பிசம். கயிறு போல் இழுபடும் சளிப் பொருள் ஏராளமாய் உற்பத்தியாகும். எரிச்சலுடன் வலிகள். சிறிதளவு உடல் வேலையினுலும் அதிகப் பலவீனம். அதிகமான காற்றையும் எப்பொழுதும் விசிறிக் கொண்டே இருப்பதையும் விரும்புவார். எல்லா விதக் கழிவுகளும் அதிக நாற்றம் அடித்தல் (ஆர்ஸனிகம், பாப்டீஷியா). பனிக் கட்டி போல் சில்லிடுதல். மூச்சுக் காற்று சில்லென்றிருக்கும்; நாக்கும் சில்லென்றிருக்கும். வியர்வை சில்லென்றிருக்கும். பாதங்களும் கால்களும் முழங் கால்களுக்குக் கீழே சில்லென்றிருக்கும். படுத்தே இருக்கும் போதும் முழங்கால் சில்லென்றிருக்கும். முகம் சதை ஒட்டிப் போய்ப் பிணக்களையுடன் இருக்கும். "படுத்துக்கொண்டுதூங்கிக் கொண்டே இருக்க விரும்புதல்". அழுகிய நாற்ற முள்ள அபான வாயு, சருமமும் உதடுகளும் நீல நிறமாகுதல். கரகரப்பான குரல் அல்லது குரலே இருக்காது. ஈறுகள் பற்களை விட்டு விலகி மிக எளிதில் இரத்தப் பெருக் கெடுத்தல். குளிருடன் தாகம்; சூடு உள்ள போது தாகம் இல்லாமை. மண்டைத் தோலில் காயம் இருப்பது போல் தொட்டால் வலி உண்டாகும்.

மனம்:—தாமதமாய் யோசனை செய்தல். ஞாபக சக்தி குறைதல், இருட்டைக் கண்டால் வெறுப்பு. பிசாசுகளைப் பற்றிய பயம். அல்ப காரணங்களாலும் கோபம் உண்டாகும். ஏக்கம் ஆனுல் அமைதியாய் இருத்தல். கேட்கும், பார்க்கும் விஷயங்களில் அலட்சியமாய் இருப்பார்.

**உபாதி கூடுதல்:**—சூட்டினால் (குளிர் இருந்தாலும் விசிறிக் கொண்டே இருக்க விரும்புதல்). சூடான, ஈரக் கசிவுள்ள பருவக் காலங்களால்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— கொயினாவினால் அமுக்கப்பட்ட வியாதிகளில் குறிப்பாகக் கொயினாவினால் அமுக்கப்பட்ட முறைச் சுரத்தில் உபயோகப்படும். பாதரஸம் சேர்ந்த ஔஷதங்கள், உப்பு, உப்பிட்ட மாமிசம், கெட்டுப் போன மாமிசம், மீன், கொழுப்புச் சத்து ஆகியவைகளை அளவு மீறி உபயோகித்தால் ஏற்படும் கோளாறுகளுக்கும் தகுந்தது. தொண்டைக் கரகரப்பு மாலையிலும் ஈரக் கசிவுள்ள காற்றிலும், சூடான ஈரக் கசிவுள்ள பருவக் காலங்களிலும் கூடுதலாகும். ஊட்டமுள்ள உணவுப் பொருள்களையே உட்கொள்வதால்; குறிப்பாக **வெண்ணெய் தின்பதால்,** ஏற்படும் கோளாறுகள். "வயிற்று உப்பிசத்தினால் அதிக வலி, கீழே படுத்தவுடன் கூடுதலாகும்.

**உபாதி குறைதல் ;**—விசிறிக் கொண்டிருத்தல்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—ஏப்பம் விட்டால் வயிற்று உப்பிசம் சிறிது நேரம் குறைந்திருக்கும். தலை வலி, வாத சம்பந்தமான வலிகள், இன்னும் மற்ற உபாதிகளும் ஏப்பம் விடுவதால் தணியும். நடுத் தூக்கத்தில் காசம் தோன்றி விழித்துக் கொண்டு சன்னல் அருகே போவார் அல்லது **விசிறிக் கொண்டு இருக்க விரும்புவார்.**

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**மந்த குணம் :**—தாமதமாய் யோசனை செய்தல், அலட்சியமாய் இருத்தல் முதலிய குறிகளால் வெளிப்படும் மூளை மந்தம், உடலிலும் மந்த குணம் இருக்கும். கோளாறுகள் மெதுவாகத் தோன்றுகின்றன. நாட்பட்டதாய் மாறுகின்றன. விரைப்பான, அமுக்குவது போன்ற உணர்ச்சியுடன் கல்லீரல் பருத்து மந்தமாய் வேலை செய்தல். பிரசவ சமயத்தில் வலிகள் மெதுவாகத் தோன்றும், பலமில்லாமல் இருக்கும் அல்லது அதிகச் சோர்வுடன் நின்று விடவும் கூடும். லேசான இரத்தக் கசிவுடன் நஞ்சுக் கொடி கருப்பையினுள் தங்கி விடுதல் (இவ்விதமான மந்த குணத்தைக் கார்போ விஜி. ஒரே வேளை ஔஷதத்தில் நீக்கிக் நஞ்சுக் கொடியை உடனே வெளியேற்றும்). மாதவிடாயில் சிறிதளவு இரத்தக் கசிவே வெளியாகும். இக்கசிவு மற்றொரு தடவை மாதவிடாய் வெளிப்படும் வரையில் கூட நீடித்து இருக்கலாம். சீரணம் மெதுவாய் நடக்கும். தவறு இல்லாமல் தேர்ந் தெடுத்த ஔஷதங்களாலும் குணம் ஆகாத நிலைமை; இதுவும் மந்த குணத்தில்தான் சேர்க்கப்பட வேண்டும் (ஓபியம், வலேரியானா). தூங்கி வழியும், மந்த குணம் உள்ள புண்கள் (ஆறாமல் இருக்கும்).



**எரிச்சல் :**—எரிச்சலுடன் வலிகள்: உடலின் உட்புறத்தில் ஏதோ ஒரு இடத்தில் எரிச்சலும் சூடும்; சருமம் பனிக்கட்டி போல் சில்லென்று இருக்கலாம். அகத்த இரத்தக் குழாய்கள். வயிறு, தலை, சுவாச கோசங்கள், விலாப் பக்கங்கள் ஆகியவைகளில் எரிச்சல், இருமும் போது எரிச்சல், அரிப்பு, சருமத்தில் எரிச்சல். எரிச்சலுள்ள வலிகளுடன் அழுகிய புண்கள், அடிக்கடி இரத்தப் பெருக் கெடுத்தல். சதை அழுகும் சமயங்களில் எரிச்சல்.

**சில்லிப்பு :**—உடல் முழுவதும், குறிப்பாக முழங்கால்களிலிருந்து பாதங்கள் வரை சில்லென்றிருக்கும். படுத்தே இருக்கும் போது கூட முழங் கால்கள் சில்லென்றிருக்கும் (அபிஸ்). மூக்கு, கன்னங்கள், விரல் நுனிகள் ஆகி

யவை பனிக் கட்டி போல் சில்லென்றிருக்கும். மூச்சுக் காற்று சில்லென்றிருக்கும்; நாக்கும் சில்லென்றிருக்கும். குளிர்ந்த வியர்வை ஏராளமாய் உற்பத்தியாகும். உடல் முழுவதும் சில்லென்றும் குளிரும் இருக்கும். "உடலின் உயிர்ச்சக்தி அனேகமாகச் செலவழிந்து, உடல் சில்லிடுதல்; குறிப்பாக முழங் கால்களுக்குக் கீழே பாதங்கள் வரை; அசைவில்லாமல் செத்து விட்டது போல் படுத்திருப்பார்; மூச்சுக் காற்று சில்லென்றிருக்கும்; நாடி விட்டு விட்டும் நூல் போல் மெலிந்தும் துடிக்கும்;. கை கால்களில் குளிர்ச்சியான வியர்வை". ஆயுத சிகிச்சையினால் அதிர்ச்சி உண்டாகி அதன் விளைவாக க்ஷீணம் தோன்றுதல்.

**வியர்வை:**—ஏராளமான, குளிர்ச்சியான வியர்வை. களைப்பை உண்டாக்கும் வியர்வை, காலையில் அல்லது இரவில் தோன்றும். வியர்வை அழுகிய அல்லது புளிப்பு நாற்றம் அடிக்கலாம். குளிர்ந்த வியர்வை, குறிப்பாகத் தலையிலும் நெற்றியிலும்.

**க்ஷீணம்:**—அல்ப வேலை செய்தாலும் அதிகச் சோர்வு. க்ஷீணம் திடீரென்று ஏற்படும். சில்லிப்பு என்னும் தலைப்பின் கீழ் கடைசிக் குறியைக் கவனிக்கவும். குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுத்ததினால் அதிக பலவீனம் தோன்றுதல்.

**நீல நிறம்:**—சிறிய இரத்தக் குழாய்களில் இரத்த ஓட்டம் தடைப்பட்டு அதனால் சருமம் நீல நிறமாகி உடலின் வெளிப்புறம் சில்லென்றாகுதல், குறிப்பாகக் கால்களில் சில்லிப்பு, உயிர்ச் சக்தி அனேகமாக ஒடுங்கி விடுதல்; இடை விடாமல் விசிறிக் கொண்டிருக்க விரும்புவார். இரத்தத்தில் போதிய அளவு பிராண வாயு சேரவில்லையென்பதை அறிவிக்கும் குறிகள். கைகள், கால்கள்,



யோனியின் வெளிப் பக்கம் ஆகிய இடங்களில் அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கிச் சுருட்டிக் கொள்ளுதல். கிழவர்களுக்கு உடலில் நீல நிற மேற்படுவதுடன் கூடிய காசம். நீல நிறமும் எரிச்சலுமுள்ள மூலங்கள்; மலம் கழித்த பிறகு வலி.

காற்றுப் பசி:- இடைவிடாமல் விசிறிக்கொண்டேஇருக்க விரும்புவார். பல வியாதிகளில், காச வியாதியில் இக்குறி சில சமயங்களில் காணப்படும். வியாதியஸ்தர் மூச்சுத் திணறிக்கொண்டு "விசிறு, விசிறு" என்று சொல்வார்.

**உப்பிசம்: நிறைந்த உணர்ச்சி:**— சீரணம் மெதுவாக ஆகுதல்; எளிய உணவும் ஒத்துக்கொள்வதில்லை. கொழுப்புச் சத்துள்ள உணவு கொஞ்சம்கூட ஒத்துக் கொள்ளாது (பல்ஸடில்லா); வயிற்றிலும் குடல்களிலும் அளவு மிஞ்சிய வாயு சேருதல்; வயிறு நிறைந்துவிட்ட உணர்ச்சியும் உப்பிசத்தினால் விரைப்பாகவும் இருக்கும். "சைனாவில் அடிவயிறு முழுவதும் உப்பிசம் இருக்கும், கார்போ விஜியில் அடிவயிற்றின் மேல் பாகமும் லைகபோடியத்தில் கீழ்ப்பாகமும் உப்பியிருக்கும். அசுத்த இரத்தக் குழாய்களில் வீங்கிய உணர்ச்சி. அசுத்த இரத்தக் குழாய்கள் சுருட்டிக் கொண்டிருத்தல். முகம் உப்பி நீல நிலமாய் இருக்கும். அசுத்த இரத்தக் குழாய் அளவு மீறி வீங்கியிருப்பதால் முகம் பல நிறமுள்ளதாய்க் காணப்படும்.

**இரத்தப் பெருக்கு:**—உடல் அணுக்களின் வலிமை குறைந்து போவதால் கறுப்பான இரத்தம் கசிய ஆரம்பிக்கும். இரத்தம் கறுப்பாகவும் அனேகமாகத் தண்ணீர் போலவும் இருக்கும். இடை விடாமல் லேசான இரத்தப் பெருக்கு; வியாதியஸ்தர் விசிறிக் கொண்டே இருக்க விரும்புவார். தினந் தோறும் (சில நாட்கள் அல்

லது வாரங்கள்) மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்படுதல்; முகம் வெளுத்திருக்கும்; வேலை செய்தால் பெருக்கு அதிகமாகும். கார்போ விஜியில் மூக்கு, ஈறுகள், வயிறு, குடல்கள், மூத்திரப்பை, மற்றும் சளிச் சவ்வு உள்ள எல்லா இடங்களிலிருந்தும் இரத்தப் பெருக்கு ஏற்படலாம்.

**அழுகுதல்:**—அழுகும் அல்லது இரத்தத்தில் விஷப் பொருள் சேரும் வியாதிகள் எல்லாவற்றிலும். விசேஷமாக எரிச்சல் உணர்ச்சி இருந்தால் தேவைப்படும். நாற்றமுள்ள கோழையும் கபமும் (சுவாச கோச வேக்காட்டில் மார்பில் இழுக்கும் ஓசையுடன் இவ் வௌஷதத்தின் மற்ற முக்கிய குறிகளும் சேர்ந்து காணப்படுதல்). எரிச்சலுடன் நாற்றம் வீசும் புண்கள். அடிக்கடி, வியாதியஸ்தரின் முயற்சி இல்லாமல், பிண நாற்றம் வீசும் மலம் வெளிப்படும் (நாற்றமுள்ள அபான வாயுவுடன்).

**புண்ணாகுதல்: அழுகுதல்: தளர்ச்சி:**— உடல் அணுக்கள் தம் வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்யாமல் பலமிழந்து தளர்ந்து அதன் விளைவாகப் பல இடங்களில் புண்கள் தோன்றுவதும் அவை ஆறாமல் இருப்பதும். சருமம், சளிச் சவ்வு ஆகிய இரண்டிலும் புண்கள் உண்டாகும். கைகளிலும் கால்களிலும் விரல் நுனிகள் புண்ணாகுதல், கிழவர்களுக்கு உடலில் வட்ட வட்டமாகச் சதை செத்து விடுதல், முதலில் கால் கட்டை விரல்களில் தோன்றிப் பிறகு படிப் படியாகக் கால்களுக்குப் பரவும். வியாதியினால் உடல் வலிமை குறைந்தவர்களுக்குச் சதை செத்து விட்ட இடத்தில் ஈரக் கசிவு இருத்தல்; கழிவுகள் அதிக நாற்றம் வீசும், மலம் கழிக்கும் போது சுக்கில நீர் வெளிப்படுதல், மானி தளர்ந்து, சில்லிட்டு



வியர்வையுடன் இருத்தல். ஈறுகள் பற்களைவிட்டு விலகி இரத்தப் பெருக்கெடுத்தல்.

**புண்ணுள்ள உணர்ச்சி: தோல் உரிதல்:**— இருமும் போது தொண்டையினுள் தோல் உறிந்து (புண் இருப்பதுபோல) வலி. ஆசனவாய் வழியாகக் காரமான, பட்ட இடத்தில் புண்ணை உண்டாக்கும் குணமுள்ள நீர்க் கசிதல். வெள்ளை ஒழுக்கு பால்போல் வெண்மையாய் அல்லது பச்சை கலந்த மஞ்சள் நிறமாய் இருக்கும், போக்கு காலையில் அதிகமாகும் குணமுள்ளதாகவும் தோலுறியச் செய்வதாகவும் இருக்கும்.

**விருப்பு:**— காப்பி, புளிப்புச் சுவையுள்ள பொருள்கள், தித்திப்பான பண்டங்கள். உப்பிட்ட பண்டங்கள் ஆகியவைகளில் ஆவல். விஸ்கி, பிராந்தி முதலிய பானங்களை விரும்பும் பழய குடிகாரர்கள். (மாமிசம், பால், கொழுப்பு ஆகியவைகளில் நீண்டகாலமாக வெறுப்பு ஏற்பட்டிருத்தல்).

## மற்ற குறிகள்

பொதுவான உடல் பலவீனத்தினால் தலைமயிர் கொட்டுதல். பிள்ளைப் பெற்ற பிறகு தலைமயிர் கொட்டுதல். நடக்கும்போது சிரமத்துடன் வேகமாகவும் மூச்சு விடுதல். மார்பில் களைத்த உணர்ச்சி, ஒவ்வொரு அசைவினாலும் விக்கல் ஏற்படுதல், கால்களிலும் தொடைகளிலும் தசைகளில் இழுத்தல். "காலராவில் வாந்தி. வயிற்றுப் போக்கு அல்லது தசை இழுத்தல் முதலியவை இல்லாமல் ஆழ்ந்த தூக்கம்." (ஜே. பி. பெல்). குரல் வளையைத் தாக்கும் சுவாசகோச க்ஷயம்,

**உறவு:**— முன்னும் பிறகும் வேலை செய்பவை: சைனா, டிரோஸிரா, காலீ கார்ப்.

# காலோபில்லம்

## CAULOPHYLLUM)

**முன்னுரை:—** அக்டியா ரஸிமோஸாவைப் போலவே இவ் வௌஷதம் பெண்களின் பிறப்பு உறுப்புகளைப்பற்றிய கோளாறுகளில் சிறப்பாய் உபயோகப்படுகிறது. இரண்டு ஔஷதங்களிலும் கருப்பையின் கோளாறுகளால் எதிரொலிக்குறிகள் உண்டாவது காணப்படுகிறது.

## பொதுவான குறிகள்

**தகுதி:—** பெண்களுக்கு (குறிப்பாக பலவீனமான மெலிந்த உடலுள்ளவர்களுக்கு) ஏற்படும் பற்பல வியாதிகளுக்கும் கருப்பை, சினைப்பைகள் பற்றிய கோளாறுகளுக்கும் தகுந்தது. "கருப்பைத் தளர்ச்சி அல்லது கருப்பை இடம் மாறுதல், கொஞ்சங் கொஞ்சமாக கருப்பையில் அதிக இரத்தம் சேருதல், குறிப்பாக கருச்சிதைவுக்குப் பிறகு, ஆகிய வியாதியுள்ள, பயந்த சுபாவமும் இளைத்த உடலும் உள்ள பெண்கள்," வாதரோகத்துடன் சேர்ந்த கோளாறுகள்.

**மனம்:—** கோபகுணம்; பயந்த சுபாவம்; ஏதோ கெடுதல் நேரப் போகிறதென்ற அச்சம்.

**உடல்.—** உடல் களைப்பு. எப்பொழுதும் ஓய்வாக இருப்பதையே விரும்புதல். பலவீனத்துடன் உடலினுள்ளே நடுக்கம். இடம் மாறும் வலிகள். தாகமும் சுரம் இருப்பதுபோல் தாபமும் அல்லது அதிகச் சூடுள்ள சுரம். மாதவிடாய்க்கு முன் உடலில் குளிர். எப்பொழுதும் பாதங்கள் சில்லென்று இருக்கும்.

**உபாதி கூடுதல்:—** வலிகள் மெதுவாக இரவில் கூடுதலாகும்.



## விசேஷக் குறிகளின் விளக்கம்

**இடம் மாறும் வலிகள்:—** வாதரோகத்தில் வலிகள் இடம் மாறும் (சில நிமிஷங்களுக்கு ஒருமுறை மாறும்). பல்ஸடில்லாவுடன் ஒப்பிடவும். வாதரோக வலிகள் கை கால்களில் ஆரம்பித்து முதுகுக்கும் பின் கழுத்துக்கும் தாவுதல். அவ்விடத்திலுள்ள (கழுத்து, முதுகு) தசைகளில் விரைப்பு ஏற்படும். "விட்டு விட்டு வரும், தசைகளை இழுக்கும் அல்லது அங்குமிங்கும் கடுமையான வலிகள்" பிரசவ வலிகள் விட்டு விட்டுத் தோன்றுதல், ஒவ்வொரு இடமாகத் தாவிக்கொண்டே இருத்தல் (அரையிடுக்குகள், அடிவயிறு, மார்பு ஆகிய இடங்கள்), ஆனால் அவை இயற்கையாய்ச் செல்ல வேண்டிய வழியாய்ப் போவதில்லை. வலியுள்ள மாதவிடாயில் வலிகள் உடலின் மற்ற இடங்களுக்குத் தாவுதல்.

**பலவீனம்: சக்திக் குறைவு:—** மிகுந்த பலவீனத்தினால் இயற்கையான அளவு பிரசவ வலி தோன்றுவதில்லை அல்லது சோர்வினாலும் நீண்ட நேரமாய்த் தொடர்ந்து இருந்ததினாலும் வலியின் அளவு குறைந்திருத்தல். பலவீனமான பிரசவ வலிகள் உடல் நடுக்கத்துடன் மறைந்துபோகும். பலவீனமான அல்லது ஒழுங்கு இல்லாத பிரசவ வலிகள். பிள்ளை பெற்ற பிறகு போக்கு பல நாட்கள் நீடித்து வியாதியஸ்தரைப் பலவீனப்படுத்தும்; கருப்பையிலுள்ள இரத்தக் குழாய்களின் தளர்ச்சியால் பல நாட்கள் மெல்லிய கசிவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் (ஸீகேல்). கருச் சிதைவுக்குப் பிறகு லேசான இரத்தக் கசிவு வெளியாகிக் கொண்டிருத்தல்; கருப்பை கொஞ்சங்கூட பலமில்லாமல் இருக்கும். கருச்சிதைவு நேருமோ என்று தோன்றும் நிலைமைகளில் கீழே இழுக்கும் உணர்ச்சி விட்டு விட்டு ஏற்படுதல். முதுகிலும் சப்பை

களிலும் கடுமையான வலி ஆனால் கருப்பை தேவையான அளவு சுருங்காமை. வெள்ளை ஒழுக்கில் போக்கு காரமாகவும் அதிக பலவீனத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். அத்துடன் கண்களின் மேல் இமைகளில் கனத்த உணர்ச்சியும் அதனால் அவைகளை விரல்களின் உதவியால் மேலே தூக்கவேண்டி வருவதும் (ஜெல்ஸெமியம்). உடல் முழுவதும் நடுக்கத்துடன் பலவீனம். பலவீனத்துடன் உள்ளூர நடுக்கம். லேசான இரத்தக் கசிவுடன் இருந்த நாட்பட்ட ஒரு கேசை இக்குறியின் உதவியினால் இவ் வௌஷதத்தை உபயோகித்துக் குணம் செய்திருக்கிறார் நாஷ் என்பவர். பெண் குழந்தைகளின் வெள்ளை ஒழுக்கு, (கல். கார்ப்). அதிகப் பலவீனத்தை உண்டாக்கும்.

எதிரொலிக் குறிகள்:—கருப்பைக் கோளாறுகளால் கால்களில் பாரிச வாதம் தோன்றுதல். கருப்பையில் ஏற்படும் வேதனையினால் வயிற்றில் வலிப்பு. கருப்பை, சினைப்பைகள் பற்றிய கோளாறுகளுடன் சேர்ந்து ஏற்படும் வாத ரோகம். வலியுடன் மாதவிடாய் வெளிப்படும் சமயத்தில் சங்கா குணமுள்ள வலிப்புகள். பெண்கள் பருவமடையும் காலத்தில் தசைகளில் துடிப்பு, சங்கா குணம் அல்லது காக்கை வலிப்பு. முதலியவை உண்டாகும். (அக்டியா ரஸிமோஸா). சுருக்கமாகத் தலைவலி, வாதரோகம், தசைகளில் இழுப்பும் வலிப்பும், வாந்தி, தொண்டைக் கரகரப்பு ஆகியவை கருப்பை பற்றிய கோளாறுகளின் எதிரொலிக் குறிகளாய்த் தோன்றலாம்.

மாறித் தோன்றுதல்:—வாத ரோகமும், இரைப்புடன் சுவாசித்தல், மார்பை அமுக்கும் உணர்ச்சி, நரம்பு சம்பந்தமான உணர்ச்சி அதிகரிப்பு, நடுக்கத்துடன் பலவீனம் முதலிய குறிகளுடன் கூடிய காச வியாதியும் ஒன்று மாற்றி ஒன்று தோன்றுதல்.



சிறிய எலும்பு மூட்டுகளே அதிகம் தாக்கப் படுதல்:—பெண்களுக்கு ஏற்படும் வாத ரோகம், குறிப்பாக விரல்கள், மணிக்கட்டுகள், கால் விரல்கள், குதிகால்கள் போன்ற சிறிய எலும்பு மூட்டுகளில், ஏராளமான வீக்கம், தாவும் வலிகள், தாக்குதலுக் குள்ளான மூட்டுகளில் வலியுடன் பிடிப்பு ஆகியவை காணப்படும். விரல் எலும்பு மூட்டுகளில் வலியுள்ள வீக்கம்.

பொய் உணர்ச்சி:—பிரசவ வலி போன்ற பொய் வலிகள், அடிவயிற்றில் பல இடங்களில் உண்டாகும். கருப்பமாய் இருப்பது போல் பொய்யான அறிகுறிகள்.

வலிகளும் அவைகளின் மற்ற தன்மைகளும்:—வலிகள் இடம் மாறுவதுடன் விட்டு விட்டும் இழுப்புகளுடனும் தோன்றும். முன்னேற்றம் இல்லாமல் பிரசவ வலிகள் விட்டு விட்டும் கடுமையாகவும் தோன்றுதல். கருப்பையின் வாய் அடிக்கடி இறுகிவிடுதல்; பிரசவமாகத் தாமதமாகும். கருப்பையின் வாயில் ஊசியினால் குத்துவது போன்ற வலிகள்.

### மற்ற குறிகள்.

இடது சினைப பையிலும் இடது மார்பில் மூலைக் காம்பின் கீழ்ப் பாகத்திலும் வலிகள் (லிலியம் டிக்; லாக்கஸிஸ், ஸல்பர், யூஸ்டிலேகோ, வைபுர்னம் ஒபுலஸ்). நடக்கும் போதும் திரும்பும் போதும் எலும்பு மூட்டுகளில் வெடிக்கும் ஓசை.

---

## காஸ்டிகம்
## (CAUSTICUM)

முன்னுரை:—காஸ்டிகம் ஆழ்ந்து வேலை செய்யும் ஒரு ஔஷதம். ஸோரா, ஸிபிலிஸ், ஸைக்கோஸிஸ், என்று

அழைக்கப்படும் மூவகை விஷங்களையும் நீக்கும் சக்தி இதற்கு இருக்கிறது. பின்வரும் சில குறிகளைக் கொண்டு பக்கம் பக்கமாக எழுதலாம். வியாதிகள் மெதுவாக விருத்தியாகும்; பாரிச வாதத்துடன் சேர்ந்த பலவீனம்; உடலின் ஒரு சில இடங்களில் மட்டும் பாரிச வாதம் தோன்றுதல்; எலும்புகளைக் கட்டி இருக்கும் தசை நார்கள் சுருங்குதல்; புண்ணாவதும் புண்ணுள்ள உணர்ச்சியும்.

## பொதுவான குறிகள்

தகுதி :—கெட்டியான தசை நார்களும், கறுத்த மயிருமுள்ளவர்கள். மந்த குணம். உடல் கட்டு உடைந்த கிழவர்கள், மஞ்சள் நிறமும் வெளுத்தும் உள்ள உடலுடன் பலவீனமும் சுரப்பிகளில் வீக்கமும் உள்ளவர்கள் இவர்களுக்குக் காணப்படும் நாட்பட்ட வியாதிகள். சருமம் அழுக்குப் பிடித்தது போல் வெளுத்திருக்கும். வியாதி சிறிது காலம் குணமாகி வருவதும் பிறகு அப்படியே நின்று விடுவதும் காணப்படும் (ஸோரினம், ஸல்பர்). நாட்பட்ட அசீரணம் உள்ளவர்களுக்கும் சுவாச கோச க்ஷயம் உள்ளவர்களுக்கும் நீண்ட நாட்களாக அடிக்கடி வயிற்றுப் போக்கு உண்டாகும் தன்மையும் போக்கு புதிய மாமிசம் உட்கொண்டால் அதிகமாவதும். உடம்பில் குளிரும் உணர்ச்சி உள்வர்கள். சுரப்பிகளில் வீக்கமுள்ள குழந்தைகளுக்கு அடிவயிறு வீங்கிக் கல் போல் கடினமாய் இருக்கும்; உடம்பு மெலிந்திருக்கும். கால்கள் உடலுக்குப் பொருத்தமாய் இல்லாமல் சிறியவையாக இருக்கும்.

மனம் :—கோழைத் தனம், பயந்த சுபாவம், பயப்படுதல், இவை இரவில் விசேஷமாகக் காணப்படும். இரவில் தனியாகப் படுத்துக் கொள்ளக் குழந்தை பயப்படுதல், பழக்க மில்லாத மனிதர்களைக் கண்டால் பயப்படுதல். அழும் தன்மையுடன் ஏக்கம். பிறர்படும் துன்பங்களைக் கண்டு அதிக இரக்கம் கொள்ளுதல், அல்ப விஷயங்களானாலும் குழந்தை அழ ஆரம்பித்தல். ஞாபக சக்தி குறைவாய் இருத்தல். பேசும் போதும் தவறு செய்யும் சுபாவம். வேலை செய்ய விருப்பம் இல்லாமை.



உடல் :—கல் போல் கடினமான சுரப்பிகள், காதுகள், கண்கள், மண்டைத் தோல் ஆகிய இடங்களில் வேக்காடு. இரவில் சேர்ந்தாற் போல் ஒரு நிமிஷம் அசையாமல் படுத்திருக்க முடியாது (ரஸ் டாக்ஸ்). இரவில் நடமாடிக் கொண்டே இருத்தல். நகங்கள் கோணல் மாணலாய் வளருதல். பாலுண்ணி போன்ற கெட்ட சதை வளர்ச்சி. குளிர்ந்த தண்ணீர் குடிக்க அதிக தாகம். அடிக்கடி மலம் கழிக்கக் தூண்டுதல், ஆனால் முயற்சி செய்தால் மலம் வெளியாகாது. நாட்பட்ட மலச்சிக்கல். மிக மந்தமாகவும் தூக்கக் கலக்கமாகவும் இருத்தல், விழித்துக் கொண்டிருக்கக் கொஞ்சம் கூட முடியாது. காதுகளில் பலவிதமான ஓசைகள். உள்ளூரக் குளிர் உண்டாகிப் பிறகு சூடு எதுவும் இல்லாமல் வியர்வை தோன்றுதல். வியாதிகள், கவலை, வருத்தம் ஆகியவைகளால் நீண்ட காலமாய் இருந்து வரும் உடல் மெலிவு.

உபாதி கூடுதல் :—சூடு, குளிர் எதுவும் ஒத்துக் கொள்ளாது. காற்று வீசினாலும் குளிர்ச்சியினாலும் உபாதிகள் கூடுதலாகும். குளிர்ந்த வறண்ட காற்று ஒத்துக் கொள்ளாது. பொதுவாக எல்லா உபாதிகளும் மப்பு மந்தாரம் இல்லாமல் தெளிவாய் உள்ள பருவ காலங்களில் அதிகரிக்கும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— தொண்டைக் கரகரப்பு காலையில் அதிகம் (கார்போவிஜி

யிலும் பாஸ்பரஸ்ஸிலும் மாலையில் அதிகம்). சூடும் ஈரக்கசிவும் உள்ள பருவ காலங்களில் வாதரோகம் கூடுதலாகும். உடலுக்கு அதிகமான சூடு தரும்படியான அளவு போர்த்திக் கொள்ளவோ அல்லது ஆடைகளை அணியவோ முடியாது; ஆனாலும் சூட்டினால் உபாதிகள் அதிகமாவதில்லை. மாதவிடாய் (வழக்கத்துக்கு மிக முன்னதாகவும் மிகக் குறைந்த அளவிலும்) இரவில் நின்று பகல் நேரங்களில் மட்டும் வெளியாகும் (ஸைக்ளெமன், பல்ஸடில்லா), இரவில் அதிக பலவீனத்துடன் வெள்ளை ஒழுக்கு (நேட்ரம் மூர்). வேதனை இல்லாமல் நடக்கவே முடியாது. தன் உபாதிகளைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக நினைக்கிறாரோ அவ்வளவுக் கவ்வளவு அவை அதிக மாகும். குறிப்பாக மூல வியாதியில். முன் பக்கமாய் உடலை வளைத்தால் இருமல் அதிகமாகும்; உட்கார்ந்து விட்டு எழுந்திருக்கும் போது பிடிப்பு. புதிய மாமிசத்தை உட் கொண்டால் வயிற்றுப் போக்கு கூடுதலாகும்; புகையில் வாட்டப் பட்ட மாமிசம் ஒத்துக் கொள்ளும்.

கோளாறுகள், நீண்டகாலமாய் இருந்து வரும் வருத்தத்தினால் (பாஸ்பாரிக் ஆஸிட்), தூக்கம் கெடுதல், இரவில் கண்விழித்தல் ஆகியவைகளால் (காக்குலஸ், இக்னேஷியா), பயம், சந்தோஷம், திடீரென்று ஏற்படும் மன அதிர்ச்சிகளால் (காபியா) மேல் பூச்சுக் களிம்புகளைத்தடவி உள்ளே அமுக்கப்பட்ட சரும வியாதிகளால் (மூலைக் கோளாறுகள் போன்றவை) காரியம், கலந்த ஒளஷதங்களால் பாழ்படுத்தப்பட்ட புண்கள். ஸ்கேபீஸ் (Scabies) எனப்படும் அழுகுணிச் சிரங்குகளில் பாதரசம் அல்லது ஸல்பரை அளவு மீறி உபயோகித்தால்.

**உபாதி குறைதல்:—** ஈரக் கசிவுள்ள, மழைக் காலங்களில்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— வலிகள் சூட்டினாலும் படுக்கைச் சூட்டினாலும்



தணியும். வாதரோகம் படுக்கையில் படுத்துச் சிறிது சூடு ஏற்பட்டவுடன் குறைந்து படுக்கையை விட்டெழுந்தவுடன் மீண்டும் தோன்றும், முகத்தில் விட்டு விட்டுத் தோன்றும் நரம்புவலி குளிர்ந்த தண்ணீரினால் குறையும். நின்று கொண்டிருக்கும் போது அதிகமாகும். இருமல் குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் மட்டுப்படும். (காஸ்டிகத்தில் குளிரும் உணர்ச்சி இருந்தாலும் சூட்டினால் சௌகரியம் ஏற்படாமல் இருப்பது ஒரு விநோதம்). பேசினால் தொண்டைக் கரகரப்பு சௌகரியமாகும்,

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**பலவீனம்:** பாரிசவாதப் பலவீனம்:— அதிக பலவீனம். உடல் வலிமை வரவரக் குறைந்து நடுக்கத்துடன் மயக்கம் வருவதுபோன்ற பலவீனம். குதிகால்களில் பலவீனம். குழந்தைகள் தாமதமாக நடக்க ஆரம்பித்தல் (கல். பாஸ்). நீண்டகாலமாய் இருந்துவரும் வருத்தத்தினால் அல்லது வியாதியினால் ஏற்படும் பலவீனம். நீண்ட காலமாய் இருந்துவரும் உபாதிகளால் உடல் மெலிந்து பலவீனப்படும். பலவீனம் நாளடைவில் அதிகமாகி பாரிசவாதம் தோன்றிக் கொஞ்சங் கொஞ்சமாய் அதிகமாகும். கைகளிலும் உள்ளங்கைகளிலும் உள்ள தசைகள் நடுங்கிக் கொண்டே இருக்கும். சிறு குழந்தைகள் தள்ளாடி நடப்பதும் திடீர் திடீர் என்று விழுந்து விடுவதும். இருமும்போது அல்லது தும்மும்போது மூத்திரம் தானாகவே வெளியாகும் (பல்ஸடில்லா, நேட்ரம் மூர்). அதிக முயற்சி செய்த பிறகு மூத்திரம் மிக மெதுவாக வெளியாகும். சில சமயங்களில் அடக்கப்படலாம். மூத்திரம் ஒருவித முயற்சி இல்லாமலும் வெளியாகலாம். இரவில், விசேஷமாக முதல் தூக்கத்திலேயே படுக்கையில் மூத்திரம் கழிக்கப்படும்; மன உணர்ச்சிகள் சிறிது அதிகமானாலும்

அல்லது அளவு மீறிய உடல் பிரயாசையினாலும் இவ் விதம் மூத்திரம் வெளிப்படலாம். கோழையை வெளியே கொண்டு வரவேண்டிய அளவு பலமாக இருமமுடியாது கோழையைத் துப்பமுடியாது; விழுங்காமல் இருக்கமுடியாது. அடிக்கடி மலம் கழிக்கத் தூண்டுதலும் முயற்சி செய்தால் மலம் வெளியாகாமல் இருப்பதும் சில சமயங்களில் அதிகக் கஷ்டத்துடனும் வலியுடனும் வெளிப்படும்; நின்றுகொண்டிருந் தால் தாராளமாய் மலம் வெளியாகும். "பாடகர்கள் அல் லது பேச்சாளர்களுக்கு ஏற்படும் குரல் கோளாறுகள்." நாட்பட்ட தொண்டைக் கரகரப்பு, (காஸ்டிகம் வேலை செய்யாவிட்டால் பல சமயங்களில் ஸல்பர் குணம் செய் யும்). காலையில் அதிகம். இருமும்போது ஆசனவாயில் பிதுக்கம். வாய் திக்கிப் பேசுதல், குளறலாகவும் இருத்தல்.

பாரிச வாதம்:— உடலின் ஏதோ ஒரு அவயவத்தில் அல் லது ஏதோ ஒரு நரம்பில் மட்டும் பாரிச வாதம் தோன்று வது மிகவும் குறிப்பிடத்தக்கது. முகம், உதடுகள், நாக்கு, கண் இமைகள், தொண்டை (விழுங் கும் போது சிரமம்), கைகால்கள், மூத்திரப்பை (மூத்திரம் ஒழுகிக்கொண்டே இருத்தல்), மலப்பை ஆகிய இடங்களில் கடுமையான நரம்பு வியாதிகளால், குறிப்பாகக் குளிர்ந்த காற்றில் அடிபட்டதால், கொஞ் சம் கொஞ்சமாக அதிகமாகி வரும் பாரிசவாதம். நாக் கின் பாரிசவாதத்தில் பேசும்போதும் மெல்லும் போதும் நாக்கு ஒழுங்காக வளைந்து கொடுக்காது; மெல் லும் போது நாக்கையும் கன்னங்களையும் கடித்துக் கொள்வார். கண்களின் மேலிமைகள் தொங்குதல்; கண் களைத் திறந்துவைத்திருக்கமுடியாது (ஜெல்ஸிமியம், கிரா பைடிஸ்). குளிரில், குறிப்பாக வறண்ட குளிர்காற்றில்



அடிபட்டதால் தோன்றும் பாரிசவாதத்தின் ஆரம்ப நிலைமையில் அகோனைட் உபயோகப்படும். அப்பாரிசவாதம் நீடித்ததாக மாறும்போது அகோனைட்டுக்கு அடங்காது. காஸ்டிகமே தேவைப்படும். உடல் வலிமையைக் குறைக் கும் வியாதிகள் அல்லது கடுமையான மன அதிர்ச்சி ஆகியவைகளால் மூளை, முள்ளந்தண்டு இவைகளின் வேலை கோளாறாகி அதனால் பாரிசவாதம் தோன்றுதல். குரல் கரகரத்தல் (குரல் வளைத் தசைகளின் பாரிச வாதம்). ஞாபக சக்தி குறைதல் (மூளை பற்றிய பாரிச வாதம்). பாரிசவாதத்தினால் உணர்ச்சிக் குறைவு மலப் பையில் உணர்ச்சி குறைந்து வியாதியஸ்தருக்குத் தெரி யாமல் கெட்டியான மலம் வெளியாகுதல். மூத்திரப் பையில் உணர்ச்சி குறைந்து வியாதியஸ்தருக்குத் தெரி யாமல் மூத்திரம் வெளிப்படுதல். வியாதியஸ்தருக்குத் தெரியாமல் கெட்டியான மலம் வெளிப்படும் என்னும் குறி ஆலோ விலும் இருக்கிறது. மூத்திரம் தடைப்படு தல். விசேஷமாகப் பெண்களுக்கு, பிள்ளைப்பெற்றபிறகு மூத்திரம் அடக்கப்படுதல் (கந்தாரிஸ். ஹயஸ்யாமஸ்). இவ்விதமான சமயங்களில் மற்ற ஔஷதங்களால் பலன் ஏற்படாத போதும் ஹயஸ்யாமஸ் மிக அருமையாக வேலை செய்ததை நான் என் அனுபவத்தில் கண்டிருக் கிறேன். திக்கியும் குளறியும் பேசுதல் (குரல் அவயவங் களின் பாரிசவாயு). கண் தசைகளின் பாரிசவாதத் தினால் பார்க்கும் பொருள்கள் இரண்டிரண்டாகத் தெரி தல். பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல் (மலப்பையின் பாரிசவாதம்). காரீய விஷம் உடலில் சேர்ந்ததால் உண் டாகும் பாரிசவாதம்.

வலிப்புகள், தசைத் துடிப்புகள், தசைகளில் இழுக் கும் வலி, திடுக்கிடுதல், நிலைகொள்ளாமல் இருத்தல்,

தசைகளில் லேசாக இழுக்கும் வலி ஆகிய பல குறிகளும் பாரிசவாதத்துடன் நெருங்கிய உறவு உள்ளவையே என்று க்ளார்க் குறிப்பிடுகிறார். வலிப்புகளுடன் மூத்திரம் வெளியாகுதல்.

விரைப்பு: பிடிப்பு:— வாதரோகத்தில் எலும்பு மூட்டுகளில் பிடிப்பும் விரைப்பும்; தசைகளில் விரைப்பும் பிடிப்பும். காஸ்டிகத்தைப்போல் க்வாய்கத்திலும் தசை நார்கள் சுருங்கி கால்களைக் கோணல்மாணலாக மடக்கிவிடும், சூட்டினால் சௌகரியம் ஏற்படும். க்வாய்கம் தேவைப்படும் சமயங்களில் வலி எந்த விதமான அசைவினாலும் கூடுதலாகும் என்பதையும் எலும்பு மூட்டுகளில் கீல்வாயு சம்பந்தமுள்ள முண்டுகள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தோன்றும்போது க்வாய்கம் நிச்சயமாய்த் தேவைப்படும் என்பதையும் இங்கே குறிப்பிடலாம். காஸ்டிகத்தில் இடைவிடாமல் அசைந்து கொண்டே இருக்கவேண்டும்; ஆனால் அசைவினால் சௌகரியம் ஏற்படுவதில்லை. மண்டைத்தோலில் சுருக்கம் கண்டு இறுக்கும். "பல நிறமுள்ள சருமம்" விரைப்பின் மற்றொரு உதாரணம்.

எரிச்சல்:—எரிச்சலுடன் கூடிய பல வியாதிகள். வயிற்றில் சுண்ணாம்பு வேகும் உணர்ச்சி. மலப்பை புண் இருப்பதுபோல் எரியும். எலும்பு மூட்டுகளில் எரிச்சல். எரிச்சலுடன் அரிப்பு. மஞ்சள் நிறமுள்ள சருமத்துடன் எரிச்சலும் உள்ள புண்கள். மூலங்களில் நெருப்பு இருப்பது போன்ற எரிச்சல்.

நெருப்புச் சுடுதல்:— நெருப்புச்சுட்டு அல்லது கொதிக்கும் தண்ணீர் முதலியவை பட்டு வெந்து போன பிறகு ஏற்படும் கோளாறுகளை நீக்குவதில் மிகவும் உபயோகமுள்ளது; நெருப்புச் சுட்டதினால் உண்டான நாட்பட்ட புண்கள். நெருப்புச் சுட்டதிலிருந்து உடம்பு நன்றாய்



இல்லை என்று சொல்லும் வியாதியஸ்தர்களுக்கு மிக உபயோக முள்ளதாகும்.

புண் உள்ள உணர்ச்சி:— இது இவ் வௌஷதத்தின் மிக முக்கியமான ஒரு குறி. தொண்டை, காற்றுக் குழாய்கள், மூத்திரக் குழாய், மலப்பை, ஆசனவாய், யோனி, கருப்பை, மண்டைத்தோல் ஆகிய இடங்களிலும் சரும வியாதிகளிலும் புண்ணுள்ள உணர்ச்சி. மார்பில் புண் உள்ள உணர்ச்சியுடன் இருமல். சிரங்கு அல்லது காயம் ஆறித் தழும்பு ஏற்பட்ட இடங்களில் எரிச்சல் ஏற்பட்டுத் தோல் உறிந்து மறுபடியும் புண்ணாகும். பெரிய காற்றுக்குழாயிலும் அதன் கீழும் புண் உள்ள உணர்ச்சி.

சருமத்தில் சுருக்கம் ஏற்படும் இடங்களில், காதுகளின் பின் பக்கங்கள், தொடை இடுக்குகள், இவைகளில் புண் உள்ள உணர்ச்சி. புண்ணுள்ள உணர்ச்சியுடன் தொண்டைக் கரகரப்பு. மூலங்கள் வீங்கி அரிப்பும் எரிச்சலும் புண்ணுள்ள உணர்ச்சியும் நடக்கும் போது கூடுதலாவதும். மூலங்களைப் பற்றி நினைத்தாலும், பேசினாலும் அதிகமாகும்.

வெடிப்புகள் :—ஆசன வாயில் வெடிப்பு. வெடிப்புகளிலும் மூலங்களிலும் துடிப்பும் நெருப்புப் போல் எரிச்சலும். ஸ்தனக் காம்புகள் புண்ணாகி வெடித்தல் (பைடோலக்கா, கிராபைடிஸ்; ஆழமான வெடிப்புகள் ஸேபியா).

பாலுண்ணிகள் :—மூக்கு, புருவங்கள், முகம், விரல்களின் நுனிகள் ஆகிய இடங்களில் நாட்பட்ட பாலுண்ணிகள். பாலுண்ணிகள் பெரியதாகவும் பிளந்தவை போலவும் அடிக்கடி இரத்தப் பெருக்கு எடுத்துக் கொண்டும் இருக்கும். கடினமான, காய்ந்த, கொம்பு முளைத்த பாலுண்ணிகள். சதைப் பற்றுள்ள பாலுண்ணிகள் (டல்கமாரா, ரஸ் டாக்ஸ்). அங் கொன்றும் இங்

கொன்றுமாக எட்டி எட்டி இருக்கும் பாலுண்ணிகள் (கல். கார்ப்; நேட்ரம் கார்ப்).

பளபளப்பு:—பல நிறங்கள் உள்ள சருமம். கடினமான மலம் மிகச் சிரமப்பட்டு வெளிப்படுதல், மலத்தைச் சுற்றி கொழுப்புப் போல் பளபள வென்று ஒளியிடும் சளிப் பொருள் மூடி இருத்தல். கயிறு போல் நீண்ட, பள பளப்பான சளி மிகவும் சிரமத்துடன் வெளியாகும்.

விருப்பும் வெறுப்பும்:—பீர் என்னும் மதுபானம், புகையில் வாட்டப்பட்ட மாமிசம், அதிக வாசனையுள்ள பொருள்கள் ஆகியவைகளை விரும்புதல். தண்ணீரில் வெறுப்புடன் குளிர்ந்த தண்ணீர் குடிக்கத் தாகம். (லாச்சஸிஸ்). தித்திப்புள்ள, சுவையுள்ள பொருள்களில் வெறுப்பு.

முறை வைத்துத் தோன்றுதல்:—வலிப்பு, காக்கை வலிப்பு ஆகியவை. இரண்டு நாட்களுக் கொரு முறை தோன்றுதல். இரண்டு, மூன்று அல்லது நான்கு வாரங் களுக்கு ஒரு முறையாகத் தோன்றுதல். அமாவாசைச் சமயத்தில் தோன்றுதல்.

வலது பக்கமே அதிகம் தாக்கப்படுதல்:—காஸ்டிகம் தேவைப்படும் வியாதிகள் பலவும் வலது பக்கத்தையே அதிகம் தாக்கு கின்றன. வலது பக்கப் பாரிச வாதம் (முகம், பின் கழுத்து, கைகள், ஆகியவை). தசைத் துடிப்பில் இடது பக்கத்தை விட வலது பக்கத்திலேயே வியாதி அதிகமாய் இருக்கும்.

### மற்ற குறிகள்

மார்பில் வலி இடம் மாறிக் கொண்டே இருக்கும். நெற்றிக்கும் மூளைக்கும் நடுவில் இருக்கும் இடத்தில். ஒன்றுமே இல்லாத உணர்ச்சி. கண் விழிகளில் சதை



படருதல், "அடிக்கடி கண்களைத் தொடவும் கசக்கிக் கொள்ளவும் தூண்டுதல்; அவ்வாறு செய்தால் அங்குள்ள அழுத்தும் உணர்ச்சி சிறிது குறையும்". தொண்டைக் கரகரப்புடன் நீர்க் கோர்வை. பிரசவ சமயத்தில் கருப்பை பலவீனமாய் இருத்தல். தன் குரலின் ஒலியே காதுகளில் பலமாகக் கேட்கும், அதனால் வேதனை. உள்ளங் காலில் அரிப்பு. மாதவிடாய் சம்பந்த முள்ள வலி (காலோஸிந்திஸினால் குணம் ஏற்படாத போது). "காக்கை வலிப்பை, வலிப்பு இரவில் தோன்றி அச்சமயத்தில் மூத்திரம் வெளியானால், காஸ்டிகம் குணம் செய்கிறது" என்று க்ளார்க் கூறுகிறார். பெண்களுக்குப் புணர்ச்சியில் ஆசை குறைவாய் இருத்தல். "முகத்தில் எரிச்சலும் அரிப்பும் காரமான நீர் வருவதும் அந்நீர் பொறுக்குகளாய் மாறுவதும்". இடது பக்க இடுப் பெலும்பு மூட்டில் திடீரென்று கடுமையான வலி ஆரம்பித்தல். முழங் காலில் பிடிப்பும் உடையும் ஓசையும். விழுங்கும் போது முது கெலும்பில் வலி. திறந்த இடங்களில் நடக்கும் போது வியர்வை உண்டாகும். "சுவாச கோச க்ஷயத்தை, குறிப்பாக அதிகச் சளியுள்ள அல்லது மிக வேகமாக முன்னேறும் குணமுள்ள வகையை, இது குணம் செய்யும்" என்று கெண்ட் சொல்கிறார்.

உறவு:—முன்னும் பிறகும் வேலை செய்பவை: கார்போ வெஜி, காலோஸிந்திஸ், பெட்ரோஸெலினம். பாஸ்பரஸ். காபியா, இவ்விரண்டையும் காஸ்டிகத்துக்கு அடுத்தபடியாக உபயோகிக்கக்கூடாது. காஸ்டிகத்துக்கு முன்னதாகவோ பிறகோ பாஸ்பரஸ் உபயோகிக்கக் கூடாது.

---

# சாமோமில்லா
## (CHAMOMILLA)

முன்னுரை:— மனக்குறிகளை மட்டும் முக்கிய ஆதாரமாய்க் கொண்டு இவ்வௌஷதம் தேர்ந்தெடுக்கப் படுகிறது. சாமோமில்லா வியாதியஸ்தர்களின் மனநிலைஉணர்ச்சி அதிகரித்தலில் அடங்கி இருக்கிறது. மனக்குறிகள் காணப் படாத சமயங்களில் குணம் அளிப்பது கிடையாது என்றே சொல்லலாம். மனம் நிம்மதியாய் இருந்தால் சாமோமில்லா தேவை இல்லை.

சாமோமில்லாவின் குறிகளை ஒரே வார்த்தையில் குறிப்பிடவேண்டுமானால் "உணர்ச்சிகள் அதிகரித்தல்" என்று குறிப்பிடலாம். மன உணர்ச்சிகள் மிக அதிகமாவதும் வலியைத் தாங்கமுடியாத உடல் வாகும் ஆகிய இவ்விரண்டுமே உணர்ச்சிகள் அதிகரிப்பினால் தோன்றும் குறிகள்.

### பொதுவான குறிகள்.

தகுதி:— லேசான, பழுப்பு நிறமுள்ள தலைமயிரும் முன்கோபம் ஏற்படும் குணமும் உள்ள சிறுவர்களுக்கு விசேஷமாய் ஏற்றது. பிறந்த சிசுக்களுக்கும் குறிப்பாகப் பல் முளைக்கும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கும் தகுந்தது. கருப்ப காலத்திலும், பிரசவ வலி தோன்றும் போதும் பிள்ளைப்பெற்று அறையில் உள்ளபோதும் தோன்றும் கோளாறுகளில் பல சமயங்களிலும் தேவைப்படுகிறது.

மனம்:— 1. முன்கோபம். "அளவுகடந்த வெறுப்புடன், திடீரென்று, அல்லது மரியாதைக் குறைவான பேச்சுடன் முன்கோபம் தோன்றும்." முன்கோபமும் ஆத்திரக் குணமும் மிதம்மீறி இருப்பதால் இணக்கமான முறையில் பதில் சொல்ல வியாதியஸ்தரால் முடியாது. வைத்தியரிடமும் இணக்கம் காண்பிக்கமாட்டார். தன்னைப் பிறர் உற்றுப்பார்ப்பது பிடிக்காது. குழந்தை அளவு மீறிய சிடுசிடுப்புடன் இருக்கும். எப்பொழுதும் தூக்கிக்கொண்டே இருந்தால் தான் சமாதானமாய் இருக்கும். பல பொருள்களை வேண்டுமென்று கேட்கும். கொடுக்காவிட்டால் கோபம் உண்டாகும் அல்லது கொடுத்தால் ஆத்திரத்துடன் வேண்டாமென்று மறுக்கும் அல்லது தூரத்தில் எறிந்துவிடும். "குழந்தை அதன் உடலை விறைப்பாக ஆக்கிக்கொண்டு முன்பக்கமாகக் குனியும். தூக்கினால் உதைக்கும். பேய்க்கூச்சல்போல் கூக்குரல் போட்டு எல்லாப்பொருள்களையும் தூர எறியும்." நிலை கொள்ளாமல் முனகிக்கொண்டே இருத்தல். தன்க்கு வேண்டிய பொருள் கிடைக்காததால் குழந்தை பரிதாபம் ஏற்படும்படி அழுது கொண்டு இருத்தல். "ஒவ்வொரு நிமிஷமும் புதிது புதிதாகச் சாமான்கள் வேண்டுமென்று கேட்கும்." வியாதியஸ்தர் தன்னுடன் பிறர் பேசுவதையோ அல்லது தான் பேசும்போது பிறர் குறுக்கிடுவதையோ பொறுக்க மாட்டார். நரம்புகளின் கூடுதலான உணர்ச்சிகளை மிக நன்றாகச் சாமோமில்லா குணம் செய்வதால் "ஹோமியோபதி ஓபியம்" என்று பெயர் வாங்கி இருக்கிறது.

2. வலிகளைத் தாங்க முடியாமை:— தாங்க முடியாத அளவுக்கு மிகக் கடுமையாகத் தன் வலிகள் இருப்பதாக நினைப்பார். வலியின் கொடுமையால் வியாதியஸ்தர் (பொதுவாகப் பெண்) கோபமடைவார். வலியைத் தாங்க முடியாமல் அதிக முன்கோபம் ஏற்படுவது இவ் வௌஷதம் உபயோக மாகுமென்பதற்கு முக்கியமான குறி. உணர்ச்சி அதிகரித்தல் என்னும் தலைப்பைக் கவனிக்கவும்.

உடல்:— ஒரு கன்னம் சிவந்தும் மறு கன்னம் வெளுத்தும் இருக்கும். "ஒரு கன்னம் சிவந்தும் சூடாகவும் மறு கன்னம்

வெளுத்தும் சில்லென்றும் இருக்கும்." சருமம் வியர்வைக் கசிவுடன் நெருப்புப்போல் சுடும் (பெல்லடொன்னா). அடிவயிறு கடினமாகவும் உப்பியும் இருக்கும். மலம் வெளியாகும்போது சூடாய் இருப்பதுபோல் உணர்ச்சி; அழுகிய முட்டைபோல் நாற்றம் வீசுதல். தலையில் சூடுள்ள வியர்வையுடன் தூக்கத்தில் முனகுதல். உணவில் வெறுப்பு. குளிர்ந்த பானங்களைக் குடிக்க அளவு மீறித் தாகம், மூச்சுக்காற்று கெட்ட, புளிப்பான நாற்றம் வீசும். வாயில் கசப்பு. ஏப்பம்விட்டால் அழுகியமுட்டைகளைப்போல் நாற்றம் தெரியும். மந்தமாய் இருத்தல் ஆனால் தூக்கம் வருவது இல்லை (பெல்லடொன்னா, ஓபியம்) தூங்கும்போது முனகலுடன் மந்தமாய் இருத்தல். தூக்கக் கலக்கம் ஆனால் உடல் கோளாறுகள் அதைக் கெடுத்துவிடும்; கண்கள் பாதி திறந்து இருக்கும். மயக்கம், கொட்டாவி விடுவதும் சோம்பல் முறிப்பதும். முகம் மட்டும் சூடாகவும் மற்ற உடல் பகுதி சில்லென்றும் இருத்தல். இரவில் உள்ளங்கால்களில் எரிச்சல் உண்டாகி அதனால் வியாதிபஸ்தர் தன் கால்களைப் படுக்கையில் வைத்திருக்காமல் வெளியிடத்தில் வைப்பார். (மெதாரினம், பல்ஸடில்லா, ஸாங்வினேரியா, ஸானிகுலா, ஸல்பர்). மஞ்சட் காமாலை.

உபாதி கூடுதல்:—ஈரக் கசிவுள்ள, குளிர் காலங்களில் அதிகமாகும், காற்று வீசினால் மிகவும் பயப்படுதல்.

உபாதி கூடுதல் :-(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) வயிற்றுப்போக்கு, குளிர், கோபம், அவமானம் ஆகியவைகளால் அதிகமாகும். பல் முளைக்கும் குழந்தைகளுக்குப் பச்சை நிறமுள்ள, அழுகிய முட்டைபோல் நாற்றம் வீசும் வயிற்றுப்போக்கு. உப்பிசத்துடன்வயிற்றில்வலி, ஏப்பம்விட்டால் அதிகமாகும். "வறண்ட இருமல், இரவில், குறிப்பாகத்



தூங்கிக் கொண்டிருக்கும்போது அதிகரிக்கும். ஆனால் இருமும்போது வியாதியஸ்தர் விழித்துக் கொள்ள மாட்டார் (கல். கார்ப், ஸோரினம்). வலியை நினைத்தால் அது அதிகமாகும். கோளாறுகள் மாலையில், குறிப்பாக இரவு 9 மணிக்கு அதிகமாகும். சுரம் இரவு 9 மணிக்கு அதிகமாகும். பொதுவாக எல்லாக் குறிகளும் இரவு 9 மணியிலிருந்து 12 மணிவரை அல்லது இரவின் முற்பகுதியில் அதிகமாக இருக்கும். (நள்ளிரவிலிருந்து காலை வரை கோளாறுகள் குறைவாய் இருக்கும்). வறட்சியுள்ள பருவக் காலங்களில் தோன்றும் காசம்.

பல குறிகள் சூட்டினால் அதிகமாகின்றன. ஆனால் வியாதியஸ்தருக்கு மட்டும் சூட்டினால் சௌகரியம் ஏற்படும். பல் வலி சூடான பொருள்களை வாயில் போட்டாலும் (பிஸ்மத், பிரயோனியா, காபியா) படுத்துக் கொண்டிருக்கும்போதும் அதிகரிக்கும்.

கோபத்தினால் கோளாறுகள் உண்டாகும். தாய் அல்லது தாதி உணர்ச்சி வசப்பட்ட சமயங்களில் (கோபம்) தாய்ப்பால் குடித்தவுடன் குழந்தைக்கு வலிப்பு போன்ற கோளாறுகள் தோன்றுதல். இந்தக் கோளாறுக்கு நக்ஸ் வாமிகாவும் உபயோகமாகும். ஆனால் பயத்தினால் இக் கோளாறுகள் தோன்றினால் ஓபியம் தேவைப்படும். ஓபியம் அல்லது மார்பியா (Morphia) அளவுமீறி கொடுத்துப் பாழ்படுத்தப் பட்ட கேசுகளில் உபயோகமாகும். "வழக்கமாக மார்பியாவை உபயோகித்து வந்தவர்களுக்கு அப்பழக்கத்தை நிறுத்தினால் தோன்றும் கோளாறுகளுக்கு ஏற்றது."

வியர்வையை அடக்குவது, வியர்த்துக் கொண்டிருக்கும் போது, கீழே படுத்தவுடன் உபாதிகள் அதிகமாகும், வியர்வையை அடக்கியதால் பல்வலி உண்டாகுதல்.

உபாதி குறைதல்.— சூடுள்ள, ஈரக் கசிவுள்ள பருவக் காலங்களில் குறையும். சூட்டினால் சௌகரியம் உண்டாகும். திறந்த இடங்களில் இருப்பது ஒத்துக்கொள்ளா

விட்டாலும் (விசேஷமாகக் காதுகளைச் சுற்றி) அவ்விடங்களில் இருக்க ஆவல். திறந்த இடங்களில் முகம், தலை சம்பந்தமான கோளாறுகள் அதிகமாவது இல்லை. ஆனால் காதுபற்றிய கோளாறுகள் மட்டும் மிக அதிகமாகும்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்.

**உணர்ச்சி அதிகரித்தல்:**—மனம் என்னும் தலைப்பைக் கவனிக்கவும். வலி உணர்ச்சி அதிகமாகும். வலி கொஞ்சமாய் இருந்தாலும் அதிகமாய் இருப்பதாக வியாதியஸ்தர் கூறுவார். வலியைத் தாங்க முடியாது என்று தோன்றி வியாதியஸ்தர் நம்பிக்கை இழந்து விடுவார். அச்சமயத்தில் வியாதியஸ்தருக்கு முன் கோபமும் சிடு மூஞ்சித்தனமும் சேர்ந்து காணப்பட்டால் சாமோமில்லா குணம் செய்ய ஒரு நாளும் தவறாது. உணர்ச்சி அதிகரித்தல் என்னும் இக்குறி பிரசவ சமயத்திலும் பிரசவத்துக்குப் பின் ஏற்படும் வலிகள், பல்வலி, காதுவலி, நரம்புவலி, வாதரோகம் முதலிய பல சமயங்களில் தோன்றும். வாத ரோகத்தில் வலியினால் வியாதியஸ்தர் படுக்கையிலிருந்து எழுந்திருந்து அங்குமிங்கும் நடந்துகொண்டிருப்பார். பிரசவ வலிகள் ஒழுங்கு இல்லாமல் ஏற்படும். அதனால் அளவு மீறிய வேதனை உண்டாகி வியாதியஸ்தருக்குக் கட்டுங்கடங்காத கோபம் தோன்றும்.

**மத மதப்பு:**—வியாதியினால் தாக்கப்பட்ட இடங்களில் மதமதப்பு உணர்ச்சி காணப்படும். அல்லது ஒரு சமயம் வலியும் மறு சமயம் மத மதப்புமாக மாறி மாறி வரும். வலியுடன் மத மதப்பு.

**நாற்ற குணம்:**—வாயில் அழுகிய நாற்றம், மலம், ஏப்பம் ஆகியவை கெட்டுப்போன முட்டை போல நாறும்.



தாய்ப்பாலின் தரம் கெட்டு அதனால் குழந்தை பால் குடிக்க மறுத்தல்.

**தசை இழுப்புகள்:**—வாயு சம்பந்த முள்ள வயிற்று வலி (தசை இழுப்புகள்) அடிவயிறு பானை போல் உப்பியிருக்கும்; அபானவாயு கொஞ்சங் கொஞ்சமாய் வெளியாகும்; அதனால் சௌகரியம் ஏற்படுவதில்லை. கருப்பையில் சுருட்டி இழுக்கும் வலிகள், சூட்டினால் தணியும். கோபத்தினால் மாத விடாயின் போது வலி. சிறு குழந்தைகளின் வயிற்று வலிக்குப் பல சமயங்களிலும் மிகவும் உபயோக முள்ளது.

**வலிப்புகள்:**—குழந்தையின் உடல் விரைத்துப் பின் பக்கமாய் வளைந்திருக்கும். இரண்டு கால்களையும் மேலும் கீழும் மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டிருக்கும். கைகளால் பிடித்தல் அல்லது பிடிக்கக் கொண்டு போகுதல். வாய் அங்கு மிங்குமாக இழுக்கப்படும், கண்கள் நிலைக்குத்திட்டது போல் அசையாமல் இருக்கும். கண்களின் அமைப்பும் முகத்தின் அமைப்பும் விகாரமாய் மாறுதல்.

**சூடு; சூடான கழிவுகள்:**—சூடான மலம் (அழுகிய முட்டை போல் நாற்றம் வீசும்.) மூத்திரம் சூடாகவும் மஞ்சளாகவும் பிடித்து வைத்தால் அடியில் கம்பளி மயிர் போன்ற வண்டலுடனும் இருக்கும். நெற்றியிலும் மண்டைத்தோலிலும் சூடான, பிசு பிசு வென்று ஒட்டும் வியர்வை, சூடான நீர்க்கோர்வை, சூடு, தாகம், மயக்கம் ஆகியவைகளுடன் காணப்படும் வலிகள். சூடும் தாகமும் இருக்கும் அல்லது வலிகளுடன் சூடான வியர்வை.

**சீர் கெட்ட நிலைமை:**—ஒரு கன்னம் சிவந்து சூடாகவும் மறு கன்னம் வெளுத்துச் சில்லென்றும் இருக்கும்: உடலின் ஒரு பாகம் சில்லென்றும் மற்றொரு பாகம் சூடாக

வும் இருக்கும்; உடம்பைத் திறந்து விட்டால் இவை அதிகமாகும். சூடும் குளிரும் மாறி மாறித் தோன்றும். "உடலில் குளிர் நடுக்கமும் சூடும் ஒரே சமயத்தில் உண்டாகி அனேகமாக அச்சமயத்தில் ஒரு கன்னம் சூடாகவும் மற்றொரு கன்னம் சில்லென்றும் இருக்கும்." உடல் முழுவதும் சில்லென்றாகி, முகத்தில் மட்டும் நெருப்பு இருப்பது போல் சூடு, மூச்சுக்காற்றும் அப்படியே இருக்கும். கருப்பைத் தசை நார்கள் ஒழுங்கு தவறியும் திடீர் திடீரென்றும் சுருங்கி விடுவதால் பிரசவ சமயத்தில் அங்குமிங்கும் இழுக்கும், பிடிக்கும் வலிகள் ஏற்பட்டுக் குழந்தை வெளி வராமல் இருக்கும்.

**தோல் உறிதல்:**—குழந்தைகளுக்குச் சருமத்தில் புண் உண்டாகுதல். குழந்தைகளுக்கு ஆசனவாய் அருகில் தோல் உறிந்திருத்தல். தோலுறியச் செய்யும் காரகுணமுள்ள மலம் (பச்சை நிறமும் தண்ணீர் போலவும் இருக்கும்). தண்ணீர் போலவும் காரமாகவும், புண்ணை உண்டாக்கி எரிச்சலைத் தரும் குணமுள்ளதாகவும் இருக்கும் வெள்ளை ஒழுக்கு.

## மற்ற குறிகள்

ஸ்தனக் காம்புகள் வேக்காட்டுடன் தொட்டால் வலியுடன் இருக்கும். தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனங்களிலிருந்து பால் வழிந்தோடுதல். மலம் முட்டையை அடித்தது போல் இருக்கும். மலம் சூடாகவும், புளிப்பு நாற்றத்துடனும் புல் போல் பச்சை நிறமாகவும் குழ குழப்பாகவும் இருக்கும். பித்தநீர் வாந்தி செய்யப்படுதல்.

**உறவு:**—முன்னும் பிறகும் **பெல்லடொன்னா** நன்றாக வேலை செய்யும்.

**ஒப்பிடுதல்:**—வாத ரோகத்தில் **ரஸ்டாக்ஸ்** தேவைப்



படும் சமயங்களில் அசைந்து கொண்டிருந்தால் அனுகூலம் இருந்தாலும் சாமோமில்லாவிலுள்ள உணர்ச்சி அதிகரித்தல் இருக்காது. மெதுவாக நடந்து கொண்டிருந்தால் அனுகூலம் ஏற்படுவது, பெர்ரம் மெட்டாலிகத்திலும் இருக்கிறது.

---

# செலிடோனியம் மேஜஸ்

## (CHELIDONIUM MAJUS)

**முன்னுரை:**—பொதுவாக திடீர் வியாதிகளுக்கே இவ்வௌஷதம் உபயோகமாகிறது என்றாலும் சில நாட்பட்ட வியாதிகளிலும் (அனேகமாகக் கல்லீரல் கோளாறுகளுடன் உள்ளவை) பயன் படும். ஆனால் ஆழ்ந்து வேலைசெய்யும் குணம் இதற்குக் கிடையாது.

இது சிறப்பான ஒரு பித்த ஔஷதம். மூச்சுத் திணறலைப் போக்க நரியின் சுவாசகோசத்தை உபயோகிக்கலாமென்று கருதப்பட்டது. எல்லாப் பிராணிகளையும் விட நரிக்கே மிகப்பெரிய சுவாச கோசம் இருப்பதைக் கொண்டு இவ்வாறு கருதப்பட்டது. இதேபோல இவ்வௌஷதத்தின் செடியிலிருந்து எடுத்த சாறு பித்தத் தண்ணீர்போல் இருந்ததால் மஞ்சட்காமாலைக்கு இது ஒரு ஔஷதமாகலாமென்று கருதப் பட்டது. இவ்விதம் "குத்து, மதிப்பாக" ஔஷதம் கண்டு பிடிக்கும் விதம் எப்படி என்று விளக்க முடியாவிட்டாலும் குறிப்பிடத் தக்கதாய் இருக்கிறது. மஞ்சட்காமாலைக்குச் செலிடோனியம் மிகச் சிறந்ததென்று உறுதியானதுபோல் நரியின் சுவாசகோசமும் காச வியாதியில் ஏற்படும் மூச்சுத் திணறலைத் தணிக்க மிகவும் உபயோகப் படுகிறது.

## பொதுவான குறிகள்

**தகுதி:**—சிவந்த உடலுள்ளவர்கள். மெலிந்த உடலும் முன் கோபமும் உள்ளவர்கள். கல்லீரல் பற்றி

யும் சிரணம் பற்றியும் கோளாறுகள் உள்ளவர்கள். க்ஷயரோகம் ஏற்படும் உடல் வாகு.

**மனம் :**—உற்சாகம் குறைந்து அடிக்கடி அழும் குணம். பிறருடன் பேசவும் மனவேலை செய்யவும் வெறுப்பு.

**உடல் :**—கிறு கிறுப்பு. பாலில், விசேஷமாகச் சூடான பாலில் விருப்பம். மிகச் சூடாகவுள்ள பானங்களில் விருப்பம்; இவையாவும் உடலுக்கு ஒத்துக் கொள்ளும். வாயில் கசப்பு. வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசும். முகம் வெளுத்து ஒட்டி இருக்கும். மலம் களி மண்ணைப் போன்ற நிறத்துடன் அல்லது மஞ்சளாய் இருக்கும். வயிற்றுப் போக்கும் மலச்சிக்கலும் மாறி மாறித் தோன்றும், விரல் நுனிகள் சில்லென்று இருக்கும். ஒரு பாதம் மட்டும் சில்லென்று இருத்தல். இருமும் போது சிறு சிறு உருண்டைகளாகக் கோழை வாயிலிருந்து வெளிப்படும். (பாடியாகா, காலி கார்ப்.) மஞ்சட்காமாலை.

**உபாதி கூடுதல் :**—பருவ நிலை மாறுதலால் உண்டாகும் புதிய கோளாறுகள் அல்லது திரும்பிவரும் பழய கோளாறுகள். (மெர்கூறியஸ்) பருவ நிலையில் மாறுதல் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்வதில்லை.

**உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):**—பெரும்பாலான குறிகள் அசைவினுல் அதிகமாகின்றன (பிரயோனியா). தொட்டால் (வலி) கூடுதலாகும். சிறிதளவு அசைவினுலும் பீதி அடையும்படியான அளவுக்கு உபாதிகள் அதிகரித்தல். பல குறிகள் விடியற்காலை 4 மணிக்கு அதிகமாகும். மாலை 4 மணிக்கும் பிற்பகலிலும் கூட அதிகமாகும். மாலை 4 மணிக்கு இடை விடாத இருமல். சுரம் உள்ளபோது அல்ப வேலையினுலும் வியர்வை உண்டாகும். தினந்தோறும் மாலை 3 மணிக்குக் கடுமையான குளிர் இடைவிடாமல் சிறிது நேரம் இருக்கும்.



**உபாதி குறைவு :**—சாப்பிட்ட பிறகு, ஓய்வு எடுத்துக் கொண்டால்.

**உபாதி குறைவு (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):**—சிரணக் கோளாறுகள் சாப்பிட்டவுடன் குறையும். எல்லாக் கோளாறுகளுமே சாப்பிட்டால் குறையும். இடது பக்கமாய்ப் படுத்தால் வயிற்றில் உள்ள வலி தணியும். வலியுள்ள இடங்களைச் சுடு தண்ணீரினுல் கழுவினுல் வலி குறைவாய் இருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**மஞ்சள் நிறம் :**—முகம் பழுப்புக் கலந்த மஞ்சள் அல்லது அழுக்குப் பிடித்த மஞ்சள் நிறமாய் இருக்கும். "முகம், நெற்றி, மூக்கு, கன்னங்கள் ஆகியவை நல்ல மஞ்சள் நிறமாய் இருக்கும்." நாக்கின் மேல் கனமான, மஞ்சள் நிறமுள்ள அழுக்கும் அதன் ஓரங்கள் சிவந்தும் பல் பதிந்த கவடுகளும் காணப்படும். மலம் (வயிற்றுப் போக்கில், மஞ்சளாகவே. அல்லது பிரகாசமான மஞ்சளாகவோ இருக்கும். மஞ்சள் நிறமுள்ள மூத்திரம் (அது பீர் என்னும் மதுபானத்தைப் போல் நுங்கு நுரைகளுடன் இருக்கலாம்). சருமத்தில் அரிப்பும் மஞ்சள் நிறமும். கல்லீரலிலும் பித்தப் பையிலும் அடைப்பு ஏற்பட்டதால் தோன்றும் மஞ்சட் காமாலை.

**கல்லீரல் கோளாறுகள் :**— கல்லீரல் பருத்தல். கல்லீரல் பகுதியில் வலி சாப்பிட்டால் குறையும். அடி வயிறு உப்பி அமுக்கினுல் வலி தரும். கல்லீரலைத் தொட்டால் வலி உண்டாகும். குமட்டல், வாந்தி, இவை மிகச் சூடான தண்ணீர் குடித்தால் தணியும். வலது பக்கத்தில் தோன்றும் சுவாச கோச வேக்காடு, விசேஷமாகச் சிறு குழந்தைகளுக்கு. கல்லீரல் கோளாறுகளுடன் சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் கடுமையான மார்ச்சளி

(ஆரம்பத்தில் செலிடோனியம் 3x—ஐ அடிக்கடி கொடுத்துவர வேண்டும்.—இது என் அனுபவமே). பித்தக் கோளாறுகளுடன் இருமல், கல்லீரல் பருத்திருத்தல், நாட்பட்ட, அழுகிய, வர வரப் பெரியதாகிக்கொண்டே இருக்கும் குணமுள்ள புண்ணுடன் பித்தக் கோளாறுகளோ அல்லது க்ஷயரோகம் ஏற்படும் உடல் வாகோ இருந்தால் இவ்வௌஷதம் தேவையாகும். கல்லீரல் கோளாறுகளுடன் நாட்பட்ட வயிற்றுப்போக்கு. உணவு உட் கொண்ட பிறகு குறையும்.

**குளிர்ச்சி :**—விரல் நுனிகள் சில்லென்று இருக்கும். பின் தலையும் பின் கழுத்தும் பனிக்கட்டிபோல் குளிர்ந்திருக்கும். பாதங்களில் சில்லிப்பு. ஒரு பாதத்தில் மட்டும் சில்லிப்பு. வலது பாதத்தில் பனிக்கட்டி போன்ற சில்லிப்பு. வயிற்றில் சில்லென்றிருக்கும் உணர்ச்சி.

**மதமதப்பு :**—கல்லீரல் அருகேயுள்ள தசைகளில் மதமதப்பு. முகம், கழுத்து, தலை ஆகியவைகளின் வலது பக்கத்தில் மதமதப்பு. கால் விரல்கள் செத்து விட்டது போல் சுரணையற்று இருத்தல்.

**மந்த குணம் :**—புத்தி மந்தம்—மூளையினால் வேலை செய்யவும் சிந்திக்கவும் சக்தி இல்லை. உடலில் மந்த குணம்—வேலை செய்யப் பிரியம் இல்லாமை. கல்லீரல் சுறுசுறுப்பாய் வேலை செய்யாது. இருதயப் பலவீனம். இரத்த ஓட்டம் மெதுவாகச் செல்லும்.

**மூச்சுத் திணறல் : மூக்கின் பக்கத் தோல்கள் விரிதல் :**—மார்பில் அமுக்குவது போலவும் இறுகக் கட்டுவது போலவும் உணர்ச்சியுடன் மூச்சுத் திணறி குட்டையான சுவாசங்கள், அடிக்கடி சுவாசித்தல் ஆகியவை. மூக்கின் பக்கத் தோல்கள் அடிக்கடி விரிந்து கொள்ளும் (லைகபோடியம்) (சுவாச கோச வேக்காட்டில்).



**வலது பக்கமே வியாதிகள் அதிகம்:**— செலிடோனியம் வலது பக்க ஔஷதம் என்று தீர்மானமாய்ச் சொல்லலாம், வலது கண், அடிவயிற்றின் வலதுபக்கம், மேல் வயிற்றின் வலது பக்கம், வலது சப்பை, வலது கால், வலது சுவாசகோசம். வலது கால் பனிக்கட்டி போல் சில்லென்றிருக்கும். வலது சுவாசகோசத்தில் குத்து வலி தோன்றி வலது தோள்பட்டையெலும்பின் அடிப்பக்கம் போகும். வலது தோள் பட்டை யெலும்பின் உள் கோணத்திலே இடைவிடாத வலி. ஏராளமான கண்ணீர்ப் பெருக்குடன் வலது கண் உள்ள குழியில் நரம்பு சம்பந்தமான வலி முறை வைத்துத் தோன்றும், கண்ணீர் நன்றாக வழிந்து ஓடும் (ரஸ் டாக்ஸ்). வலது கண்ணின் மேல் பக்கத்திலும் வலது கன்ன எலும்பு, வலது காது ஆகியவைகளிலும் நரம்பு சம்பந்தமான வலி, அளவு கடந்த கண்ணீருடன் தோன்றும். இவ்வலி தோன்றுவதற்கு முன் கல்லீரலில் வலி உண்டாகும். வலது மார்பு முழுவதும் உள்ளூரக் கடுமையான வலி.

வலிகள், நரம்பு சம்பந்த முள்ளவை, வாதரோக சம்பந்த முள்ளவை. பித்தக் கற்கள் சம்பந்த முள்ளவை:—கண் குழிகளில் நரம்பு சம்பந்தமுள்ள வலி (மேலே கவனிக்கவும்). பித்த சம்பந்தமுள்ள நரம்பு வலி. அடிபட்டதனால் ஏற்படும் நரம்பு வலிகளில் ஆர்னிகா சரியானபடி ஒத்து வராவிட்டால்," பித்தக் கோளாறுகள் அனேகமாகச் சேர்ந்திருக்கும். வாதரோக வலிகள். இவ் வலிகள் லேசாகத் தொட்டாலும் அல்ப அசைவினாலும் அதிகமாகும். வியாதியஸ்தர் பலமாகக் கதறும்படியாகவும் அதிகமாகும். வியர்வை ஏற்படுவதினால் அனுகூலம் ஏற்படுவதில்லை (மெர்கூறியஸ்). பித்தக் கற்களை வெளியேற்றவும் அவை உண்டாகாமல் தடுக்கவும் வல்லமை உள்ளது

என்று செலிடோனியம் பெயர் பெற்றிருக்கிறது. வழக்கமாக 2x, 3x வீரியங்களில் உபயோகிக்கப் படுகிறது. பித்தப்பை உள்ள இடத்தில் கடுமையான வலியுடன் குளிரும், கல்லீரலில் ஏற்பட்டு மேலே தாவி முதுகுக்கும் தோள்பட்டைக்கும் பரவும் வலியும் செலிடோனியத்தில் இருக்கின்றன.

### மற்ற குறிகள்

உடல் நிறம் குன்றுதல்—அடிக்கடி கொட்டாவி விடுதல். வெண்ணெய் பிடிக்காது. குளிருடன் மஞ்சட் காமாலை. பிற்பகலில் தொண்டைக் கரகரப்பு.—கால்களில் கனத்த உணர்ச்சி, பிடிப்பு, முடமாய் விட்டது போல் தோன்றுதல்.

உறவு—செலிடோனியத்துக்குப் பிறகு பிரயோனியா, ஆர்ஸனிகம். லைகபோடியம், ஸல்பர் இவை நன்ருக வேலை செய்கின்றன. செலிடோனியக் கேசுகளை முழு குணம் செய்ய இவை பல சமயங்களில் தேவைப் படுகின்றன. ஆனுல் செலிடோனியம் இவ்வெளஷதங்களை முறிக்கும்.

---

## சைனு அபிஷியனேலிஸ்
## (CHINA OFFICIANALIS)

முன்னுரை:—ஸிங்கோனு என்னும் உண்மைப் பெயர் உள்ள இவ்வௌஷதம் அடிக்கடி சைனு என்னும் தவருன பெயரால் வழங்கப்படுகிறது. வியாதிகளில் அதிகமாகவும் அளவு மீறியும் கொடுக்கப்பட்டு மக்களுக்குத் தீங்கு விளைவித்த ஔஷதங்களில் ஒபியத்துக்கு அடுத்த படியாக ஸிங்கோனுவைக் குறிப்பிடலாம் என்று ஹானிமன் அபிப்பிராயப்படுகிருர்.

இவ்வௌஷதத்தின் மிக முக்கியமான விசேஷக்குறிகள்பின்வருமாறு: 1. உடலிலுள்ள உயிர்த் தண்ணீர் வெளியேறுதல்; 2. முறை வைத்துத் தோன்றுதல்; உணர்ச்சிகள் அதிகரித்தல்; வயிற்று உப்பிசம்.



### பொதுவான குறிகள்

தகுதி:—முகம் வெளுத்து, நிறம் குன்றி இருக்கும். (முகம் வற்றிப் போய்விடும்). திடகாத்திரமாக இருந்த உடல் உடலின் உயிர்த் தண்ணீர் வெளியே போய்விட்டதால் இளைத்துக் களைத்திருத்தல் (கார்போ வெஜி.) மெலிந்து, காய்ந்து, பித்தம் அதிகரித்துள்ளவர்கள்; நீர்ச் சுரப்பு வீக்கங்கள், நீர்க் கோர்வை அல்லது வயிற்றுப் போக்கு ஆகியவை தோன்றும் உடல்வாகு; நாட்பட்ட மலேரியா சுரக் கோளாறுகள் உள்ள போது வியாதி கொயினுவினுல் அமுக்கப்பட்டிருந்தால். சுவாசகோச க்ஷயத்தின் ஆரம்ப காலம்.

மனம்:—அலட்சியம், நியாய அனியாயங்களைப் புரிந்து கொள்ளும் உணர்ச்சி இல்லாமை, எல்லா விஷயங்களிலும் வெறுப்பு, அதிகமாகப் பேசமாட்டார். பிறர் மனதைப் புண்படுத்த விரும்பும் குணம். உயிருடன் இருக்க விருப்பம் இல்லை, தற்கொலை செய்து கொள்ள ஆவல் இருக்கும், ஆனுல் அதை நிறைவேற்றத் தைரியம் இல்லை. இரவில் அதிக பயம். நாய்களைப் பற்றியும் மற்ற பிராணிகளைப் பற்றியும் இரவு நேரங்களில் பயப்படுதல். யோசனை செய்யும் சக்தி குறைவுடன் கூடிய நரம்பு வேதனை. எந்த விதமான உடல் வேலை செய்யவும் பேசவும் விரும்பமாட்டார். மனதில் பலப் பல எண்ணங்கள் குவிந்து கொள்வதால் தூக்கம் தடைப்படும். உணர்ச்சி அதிகரித்தல் என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

உடல்:—களைப்பு, உட்கார்ந்துவிட வேண்டும் என்று தோன்றுதல். சீரணம் தாமதமாய் நடைபெறும். பால்

குடித்தால் தவறாமல் சீரணக் கோளாறுகள் உண்டாகுதல். குளிர்ந்த தண்ணீர் குடிக்கத் தாகம். ஊக்கம் தரும், புளிப்புச் சுவை உள்ள நல்ல வாசனை வீசும், உடலுக்குப் புத்துணர்ச்சியைத் தரும் பானங்களையும் பொருள்களையும் விரும்புதல். சுவையுள்ள பொருள்களில் அதிக விருப்பம். உமிழ்நீர் ஏராளமாய் உண்டாகும். சீரணமாகாத உணவுப் பொருள்கள் மலத்தில் சேர்ந்திருத்தல். நடக்கும் போது தலைச் சுற்றல். அடிவயிறு உப்பியிருக்கும்; ஏப்பம் விட்டால் சிறிது நேரம் சௌகரியமாய் இருக்கும். கல்லீரலும் மண்ணீரலும் வீங்கி இருக்கும். கல்லீரலைத் தொட்டாலும் அமுக்கினாலும் வலி. மண்ணீரலில் புண் இருப்பது போல் வலி. மண்டைத் தோலில் தொட்டால் வலி. அடிக்கடி வியர்வை. இரவில் களைப்பை உண்டாக்குமளவுக்கு வியர்வை. சாப்பிட்டவுடனே வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சியுடன் பசி உண்டாகும். நீர்ச் சுரப்பு வீக்கம் அடிக்கடி விழிப்புடன் தூக்கம், அதனால் உடல் அசதி நீங்காமை. விழித்துக் கொண்ட பிறகும் இரவில் கண்ட கனவுகளிலிருந்து விடுபட முடியாமை. ஒரு கை பனிக்கட்டியைப் போல் சில்லென்றும் மற்றொரு கை சூடாகவும் இருக்கும்) டிஜிடாலிஸ், இபிகாக், பல்ஸடில்லா). கண்களின் வெள்ளை விழிகள் மஞ்சளாய் இருத்தல். உதடுகள் காய்ந்து தோல் போல் மாறி வெடித்திருக்கும் (பிரயோனியா).

**உபாதி கூடுதல்:**—விர் விர் என்று வீசும் காற்று ஒத்துக் கொள்ளாது.

**உபாதி கூடுதல்:**—ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே)—லேசாகத் தொட்டாலும் வலிகள் அதிகமாகும்; ஆனால் நன்றாக அமுக்கினால் குறையும் (காப்ஸிகம், ப்ளம்பம்).



வயிற்று வலி இரவில் அதிகமாகி உடலை முன்பக்கமாய் வளைத்தால் குறையும் (காலோஸிந்திஸ்). உடல் அசதியை நீக்காத தூக்கம்; விடியற்காலை 3 மணிக்கு அதிகமாகும்; முன்னதாகவே விழிப்பு ஏற்படுதல். வயிற்றுப் போக்கு உணவு உட்கொண்ட பிறகும் இரவிலும் அதிகமாகும். மண்டைத் தோலில் வலி, சீப்பினால் கோதும்போது கூடுதலாகும். தலைவலி உட்கார்ந்தாலும் படுத்தாலும் அதிகமாவதால் வியாதியஸ்தர் நிற்க அல்லது நடக்க வேண்டிவரும். இரவில் கண்பார்வை மறைதல். வயிற்றுப் போக்கும் வயிற்று உப்பிசமும் பழங்களைத் தின்ற பிறகு அதிகமாகும். கடுமைக் குணமுள்ள திடீர் வியாதிகளுக்குப் பிறகு வயிற்றுப் போக்கு தோன்றும். வாதரோகத்தில் அசைவினால் ஏற்படுவதை விடத் தொடுவதினால் வலி அதிகமாக இருக்கும்; தொடுவதினால் வலி மீண்டும் தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து முடிவில் பீதியை உண்டாக்கும் அளவுக்கு அதிகமாகும். அளவுக்கு மிஞ்சி டீ குடித்ததினால் தோன்றும் கோளாறுகள். முறை வைத்துத் தோன்றுதல் என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—லேசாக அமுக்கினால் வலிகள் அதிகமானாலும் நன்றாக அமுக்கினால் குறையும். சிறிதளவு உணவு உட்கொண்டாலும் வயிற்றில் உப்பிசம் ஏற்பட்டு ஏப்பம் விட்டால் சிறிது நேரத்துக்குச் சௌகரியமாய் இருக்கும். கால்களில் உள்ள வலி அசைவினால் குறையும். துடிக்கும் தலைவலி சூடான ஒற்றிடங்களால் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**நிறைந்த உணர்ச்சி: வாயு உப்பிசம்:**—அடிவயிறு முழுவதும் ஏராளமாய்ப் பருத்து ஏப்பம் விட்டால் தேவலை என்று நினைத்தல்; ஏப்பம் விடுவதினால் சௌகரியம் ஏற்படாது, அல்லது சிறிது நேரமே சௌகரியமாய் இருக்

கும். தலைவலியில் மண்டை வெடித்துப்போய் விடும் போல் தோன்றும் (பிரயோனியா, மெர்கூறியஸ், நேட்ரம் மூர்).

இரத்தப் பெருக்கு:— உடலின் எந்த இடத்திலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்பட்டாலும் போக்கு ஏராளமாகவும் களைப்பை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்; இரத்தம் அனேகமாகக் கறுப்பாக அல்லது கறுப்பாகவும் கட்டிகளுடனும் இருக்கும். திணறலுடன் மூச்சுவிடுதல். (இபிகாக்கின் இரத்தப் பெருக்கு குமட்டலுடன் இருக்கும்). மூச்சுத் திணறலினால் முகத்தில் விசிறிக்கொள்ள விரும்புதல். (கார்போ வெஜி). சருமம் சில்லிட்டு, நீல நிறமாகிப் பிசுபிசுப்பான வியர்வை ஏற்படும். காதுகளில் மணி அடிப்பது போன்ற ஓசை, மயக்கத்தை ஏற்படுத்தும் பலவீனம் அல்லது கண் பார்வை மறைதல், உடல் முழுவதும் பொதுவான சில்லிப்பு, மூச்சுத் திணறல், விசிறிக் கொள்ள விருப்பம் முதலிய குறிகளுடன் அடிக்கடி இரத்தப் பெருக்கு உண்டாகும் குணம்; சில சமயங்களில், வலிப்புகளும் இருக்கலாம்.

வடிதல்:— உடலின் உயிர்த் தண்ணீர் வெளியே வடிந்து நஷ்டமாகிவிட்டதால் தோன்றும் உடல் பலவீனம், தலைவலி, தூக்கம் வராமை, நரம்புவலிபோன்ற பல கோளாறுகள். குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்தல், வாயில் அளவு மீறி உமிழ்நீர் உற்பத்தி யாகுதல், இந்திரியம் வெளியாகுதல், இரத்தப் பெருக்கு முதலியவைகளால் உயிர்த் தண்ணீர் நஷ்டமாகும். ஏராளமாய்ச் சீழ்ப்பிடிக்கும் புண்கள் அல்லது காயங்கள், பல நாட்பட்ட வயிற்றுப் போக்கு, நாட்பட்ட வெள்ளை ஒழுக்கு ஆகியவைகளால் தோன்றும் கோளாறுகள் உடல் பலவீனத்துடன் இருக்குமாதலால் சைனா வினால் குணம் செய்யப்படும். இரத்தப்பெருக்குடன் வலிப்புகள். உடலிலுள்ள



உயிர்த்தண்ணீர் பல காலமாக இடைவிடாமல் வடிந்துகொண்டே இருந்ததால் தோன்றும் கோளாறுகளாவன. முகம் வெளுத்து வியாதியுள்ள தோற்றம் தரும். குழி விழுந்திருக்கும்; கண்கள் பள்ளத்தில் சென்று அவைகளைச் சுற்றிலும் நீலநிறமாய் அல்லது கறுப்பாய் இருக்கும்; துடிக்கும் தலைவலி; ஏராளமான, உடல் சோர்வை உண்டாக்கும் வியர்வை, விசேஷமாக இரவுகளில் அல்ப வேலை செய்தாலும் வியர்வை ஏற்படும்.

உணர்ச்சி:— உடலின் வெளிப்புறத்தில் எந்த இடத்தைத் தொட்டாலும் அதிக வலி ஏற்படும் உணர்ச்சி (ஹீப்பார் ஸல்பர், லாச்சஸிஸ்), மண்டைத்தோலில் உணர்ச்சி அதிகமாவதால் தலைமயிரை லேசாக வாரினாலும் புண்ணுள்ள வலி தோன்றும். இந்த உணர்ச்சி அதிகரிப்பில் உள்ள விநோதம் என்ன வென்றால் லேசாகத் தொடும்போது அதிகமாகும் வலி, நன்றாக அமுக்கினால் சௌகரியமாய் இருக்கிறது என்பதேயாகும். "வலியுள்ள இடத்தில் காற்று வீசினால்கூட வலி கூடுதலாகும்." வியாதியஸ்தர் அருகில் யாராவது சென்றால் தன்னைத் தொட்டுவிடுவாரென்று பயப்படுவார். கீல்வாயுவில் ஆர்னிகா வியாதியஸ்தர் தன் அருகில் வருவோர் தன்னை அடித்துவிடுவார்களோவென்று பயப்படுவார். கல்லீரலில் தொட்டாலும் வலி ஏற்படும், நன்றாக அமுக்கினால் அதிக வலி உண்டாகும். மெதுவாய்த் தொட்டாலும் காற்று வீசினாலும் அதிகமாகும் நரம்பு வலிகள். குளிர் காற்றில் அடிபட்டதால் ஏற்படும் கோளாறுகள். மெதுவாகக் காற்று வீசினால்கூட உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. நரம்புகள் யாவும் உணர்ச்சி அதிகரித்து இருக்கும். "வண்டியில் அல்லது ஆட்டமுள்ள (தொட்டில், ஊஞ்சல்) இடங்களில் இருப்பது முடியாது." ஓசைகளையும் பிரகாசமான வெளிச்சத்தை

யும் வியாதியஸ்தரால் தாங்க முடியாது. அளவு கடந்த ஆத்திரம் உண்டாதும். சிறிய ஓசையையும் தாங்க முடியாது.

**அதிசய தாகம்:—** முறைச் சுரங்களில் சைனாவைத் தேர்ந்தெடுக்க அதன் விசேஷமான தாகக் குறி உதவுகிறது. குளிர் தோன்றுவதற்கு முன் தாகம் (குளிருக்கு முன்னறிவிப்பு போல் தோன்றும். இந்தத் தாகத்தைக் கொண்டு வியாதியஸ்தர் தனக்கு முறைச்சுரம் தோன்றுமென்று அனுமானம் செய்வார்). குளிர் ஆரம்பித்தவுடனே தாகம் மறைந்து விடும் (இந்தத் தாகத்தின் ஒரு அதிசயம் என்னவென்றால் ஒவ்வொரு தடவையும் தண்ணீர் குடித்த பிறகு அது அதிகமாவது தான்). சூடு உள்ள போது தாகம் இல்லாமை அல்லது குளிர் மறைந்தவுடன் தாகம் ஏற்பட்டு சூடு அதிகமாக ஆகத் தாகம் குறைந்து கொண்டே வந்து சூடு உச்ச நிலைக்கு வந்தவுடன் தாகம் மறைந்து விடும்; சுரம் தணியும்போதெல்லாம் தாகம் தோன்றும். வியர்வை உண்டாகும்போது அதிகத் தாகம் இருக்கும். சைனாவின் தாகம் மிக விநோதமாய் இருக்கிறது. சுரம் இல்லாத நிலைமைகளில் ஏராளமான வியர்வையும் அதிக பலவீனமும் இருக்கும்.

**முறை வைத்துத் தோன்றுதல்:—** கோளாறுகள் ஒன்று விட்டொரு நாள் கூடுதலாகும். (ஆர்ஸனிகம், நேட்ரம் மூர்). முறைச் சுரங்களிலும் நரம்பு வலிகளிலும் இவ்விதம் முறை வைத்து உபாதி தோன்றுவது காணப்படுகிறது. இச் சமயங்களில் சைனா வியாதியை முழுவதும் நீக்கும். பதினான்கு நாட்களுக்கு ஒரு முறை வியாதி அதிகரித்தல்; ஒவ்வொரு நாளும் நள்ளிரவில் வியாதி அதிகரித்தல்; வளர் பிறை நாட்களிலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் இலை உதிர் காலங்களிலும் அதிகமாகும்.

**விரோதக் குறிகள் சேர்ந்திருத்தல்:—** "பசியும் பசியே



இல்லாமையும்." "உணவில் வெறுப்பும் கடுமையான பசியும்.," வியாதியஸ்தருக்கு ஆண் தன்மை அழிந்து இருக்கும். ஆயினும் சிற்றின்ப விஷயமாக மிக ஆவலுடன் பேசுவார். யோசனை செய்யச் சக்தி இல்லை ஆனால் மனதில் பல எண்ணங்கள் தோன்றும், விசேஷமாய் இரவில், அதனால் தூக்கம் வராமை. மெதுவாகத் தொடுவது பொறுக்க முடியாமல் நன்றாக அமுக்கினால் சௌகரியம் ஏற்படுதல்.

## மற்ற குறிகள்

அதிக பலவீனம். உடல் நடுக்கம், உடல் பயிற்சி செய்ய வெறுப்பு.— மழைக்காலத்தில் காசம் அதிகமாகும். குறட்டை விடுதல், விசேஷமாகக் குழந்தைகள். வியாதியினால் முகம் சிவந்திருத்தல். நாட்பட்ட வயிற்றுப் போக்கு, வலி இல்லாமல் வெளிப்படும். இரவில் அதிகமாகும். உடல் மெலிவுடன் பலவீனத்தை ஏற்படுத்தும். (பெட்ரோலியம் வயிற்றுப் போக்கு பகல் வேளையில் கூடுதலாகும்), வாயு ஏராளமாய் வெளிப்படும்; சில சமயங்களில் நாற்றமாய் இருக்கும். மலம் கழிக்கும் போது அபான வாயு வெளிப்படும். ஈரக் கசிவுள்ள தசை அழுகல். வேக்காடு தோன்றிய இடங்கள் கல்போல் கடினமாகுதல். பற்களில் ஆட்டம், மெல்லும் போது மட்டும் வலி. ஆசன வாயில் புழுக்கள் இருப்பது போல் ஊரும் உணர்ச்சி. புழுக்களும் வெளிப்படுதல். நகங்கள் நீல நிறமாகுதல். மலம் ஏராளமாய்ச் சேர்ந்து விடுதல், விசேஷமாக இடைவிடாமல் வயிற்றுப் போக்கு வெளியான பிறகு; மலப்பை வேலை செய்யாததினால் மலம் இளகி இருந்தாலும்கூட அதை வெளியேற்ற முடியாமை. குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுக்கும் போது பல்வலி. அடித் தோலினுள்ளே புண் இருப்பது போல் கல்லீரல் அருகே வலி. நரம்பு வலி, விசேஷமாக மலேரியாவினால்

ஏற்பட்டது, பொதுவாகக் கண்களின் கீழே இருக்கும். எந்தப் பக்கத்திலும் இருக்கலாம்; தவறாமல் முறை வைத்துத் தோன்றும்; மெதுவாகத் தொட்டாலும் அல்லது குளிர்ந்த காற்று வீசினாலும் அதிகரிக்கும்.

**உறவு** :—முன்னும் பிறகும் வேலை செய்பவை :—**பெர்ரம், கல். பாஸ். டிஜிடாலிஸ், ஸெலெனியம்** இவைகளுக்குப் பின் உபயோகிக்கக் கூடாது.

**ஒப்பிடுதல்** :—உணவு உட்கொண்ட மறுகணமே வயிற்றுப் போக்கு (**ஆர்ஸனிகம், ஆலோ, போடோபில்லம், ஸ்டாபிஸாக்ரியா**). சாப்பிடும்போதே வயிற்றுப் போக்கு தோன்றுவது **பெர்ரத்தில்** இருக்கிறது. உடலின் உயிர்த் தண்ணீர் வெளியே சென்றதால் ஏற்படும் கோளாறுகள் (**கல். கார்ப்; பாஸ்பாரிக் ஆஸிட்**). களைப்பை உண்டாக்கும் வியர்வை இரவுகளில் தோன்றுதல் (**பாஸ்பரஸ், பாஸ்பாரிக் ஆஸிட், ஸைலீஷியா**),

---

## சின்னினம் ஸல்ப்யுரிகம்
## (CHINNINUM SULPHURICUM)

**முன்னுரை** :—அல்லோபதி வைத்தியர்கள் மலேரியா சுரத்தைச் சிகிச்சை செய்ய இவ்வௌஷதத்தை உபயோகிக்கின்றனர். ஆனால் மிகப் பெரும் பான்மையான கேசுகளில் இவ்வௌஷதம் சுரத்தை உள்ளே அமுக்கிவிடுகிறது. "அதன் குறிகளை ஒத்துள்ள சுரத்தையே **சின்னினம் ஸல்ப்யுரிகம்** குணம் செய்ய வல்லமை உள்ளது. சுரம் உள்ளே அமுக்கப்படும் சமயத்தில் வியாதிச் சக்தியும் ஔஷதச் சக்தியும் ஒன்று சேர்ந்து உடலின் ஏதோ ஒரு இடத்தைப் பிடித்துத் தம் கைவரிசையை அங்கே காட்டி, வாழ்நாள் முழுவதும் நீடிக்கக் கூடிய வியாதியைத் தோற்றுவிக்கின்றன என்று **டாக்டர் க்ளார்க்** குறிப்பிடுகிறார்.



### பொதுவான குறிகள்,

**தகுதி** :—சிறிது கூடத்தவறாமல் ஒழுங்காக முறை வைத்துத் தோன்றுதல், குளிர், சூடு, வியர்வை இம்மூன்று நிலைமைகளும் ஒழுங்காக ஏற்படுதல், நாக்கு அனேகமாகச் சுத்தமாய் இருத்தல், ஏராளமான வியர்வை இவைகளுடன் உள்ள, சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் மலேரியா தான் என்று சொல்லக்கூடிய மலேரியாச் சுரம்.

**மனம்** :—உடல் சோர்வுடன் மந்த குணம். உற்சாகம் இழந்து சிடு சிடுத்தல். கொட்டாவி விடுதல். உடல் வேலை செய்ய அளவு மீறிய வெறுப்பு.

**உடல்** :—சருமம் தளர்ந்து தொட்டால் வலி தரும். காதுகளில் இரைச்சலுடன் தலைச்சுற்றல். சிறிதளவு வேலை செய்தாலும் வியர்த்தல். "ஓய்வாக உட்கார்ந்திருக்கும் போது தலையில் வியர்வை படிப்படியாகத் தோன்றுதல்." "அதிக பலவீனமும், உடலின் உறுதி தளர்ந்து போய் இருப்பதும்." முதலில் உடலின் ஒரு பக்கத்திலும் பிறகு உடல் முழுவதும் தோன்றும் பாரிசவாதம். அடிக்கடி மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு. மூத்திரத்துடன் இரத்தம் வெளிப்படுதல், இரத்தம் ஏராளமாகவும் இருக்கலாம். நாக்கு சுத்தமாய் இருக்கும் ஆனால் கசப்புச் சுவை காணப்படும். உணவு உட்கொள்ள அதிக ஆவல் ஆனால் பசி இருப்பதில்லை. காதுகளில் இரைச்சல் ஆனால் செவிடாய் இருத்தல். கழுத்தில் தூங்கி வழியும் வீக்கம். நீர்ச்சுரப்பு வீக்கம். அறிப்பும் சொரிந்தால் வில்லை வில்லையாகத் தடிக்கும் குணமும் உள்ள சரும வியாதி. மண்ணீரல் அருகே மந்தமான வலி அமுக்கினால் மறைந்து விடும்; வலியுடன் இறுக்குவது போன்ற உணர்ச்சி உண்டாகி ஆடைகளைத் தளர்த்தி விடுதல். கல்லீரல், மண்ணீரல் இவைகளின் அருகில்

கடினமான வீக்கம், கிழிக்கும் வலிகள். குறிப்பாக ஆழ்ந்து சுவாசித்தாலும் தும்முவது போன்ற அசைவுகளாலும் ஏற்படும். அடிவயிறு கல்போல் கடினமாகி அமுக்கினால் வலிக்கும்.

**உபாதி கூடுதல், குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—ஏராளமான வியர்வை வியாதியைத் தணிக்கும், ஆனால் சோர்வை உண்டாக்கும். குளிர் காலை 10 மணிக்கு அல்லது 10 முதல் 11 மணிக்குள் தோன்றும். மாலை 3 அல்லது இரவு 10 மணிக்கும் குளிர் தோன்றலாம். மாலை 3 மணிக்கு உடலை நடுக்கும் குளிர் ஏற்படுவது அனேகமாய்க் குறிப்பிடத் தக்கது.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**தாகம் :**—முறைச் சுரத்தின் எல்லா நிலைமைகளிலும் தாகம். தாகத்துடன் குளிர்; அளவு மீறிய தாகத்துடன் சூடு; அதிக தாகத்துடன் வியர்வை; சுரம் இல்லாத போதும் அதிகத் தாகம்.

**முதுகு வலி:**—கீழே படுக்கும் போது முதுகு அமுக்கப் படுவதால் முது கெலும்பில் வலியுள்ள உணர்ச்சி, குறிப்பாக முறைச்சுரத்தில் நடுக்கலுடன் குளிர் உள்ளபோது தோன்றும். " முது கெலும்பில் (கழுத்திலும் மேல் முதுகிலும்) வலி அல்லது தொட்டால் வலித்தல் முது கெலும்பில் வலியுள்ள உணர்ச்சியும் இவ்வௌஷதத்திலுள்ள முறை வைத்துத் தோன்றும் குணமும் உள்ள வியாதிகள் யாவும் சின்னினம் ஸல்ப்யுரிகத்தினால் குணம் செய்யப் படுகின்றன.

**நீண்ட நேரம் நீடிக்கும் குளிர் :**—வெளுத்த முகம், உதடுகளும் நகங்களும் நீல நிறமாகுதல் இக்குறிகளுடன் ஒரு மணி நேரம் நீடிக்கும்.

**முறை வைத்துத் தோன்றுதல் :**—வியாதிகள் முறை வைத்துத் தோன்றுவது இவ்வௌஷதத்தின் மிக முக்



கிய குறி. ஒவ்வொரு நாளும் அதே நேரத்தில் வியாதி தோன்றும். முறைச் சுரத்தில் சுரம் தோன்றுவதற்கு முன் அறிவிப்பாகக் குளிர் ஏற்படுதல்.

**ஒப்பிடுதல் :** குளிருடன் உதடுகளும் நகங்களும் நீலமாகுதல் (**நக்ஸ் வாமிகா**). ஓய்வாகஇருக்கும்போது தலையில் வியர்வை படிப்படியாகத் தோன்றுதல் (**ஸ்டாபிஸாக்ரியா**) மாலை 3 மணிக்குக் குளிர் (**அபிஸ்**) **நேட்ரம் மூரில்** குளிர் காலை 8 அல்லது 9 மணிக்கு அல்லது 10 மணிக்குமேல் 11 மணிக்குள் தோன்றும். **சின்னினம் ஸல்ப்யுரிகத்தில்** இருப்பதுபோல காலை 10 மணி, மாலை 3 மணி, இரவு 10 மணி இந்நேரங்களில் குளிர் தோன்றும் குறி இன்னும் பல ஔஷதங்களில் காணப்படுகின்றன. குளிர் தோன்றும் நேரம் அவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படத் தேவை இல்லை.

---

# ஸிகுடா விரோஸா

## (CICUTA VIROSA)

**முன்னுரை :**—சக்தி வாய்ந்த விஷமுள்ள இச்செடியின் வேர் சமையலுக்கு உபயோகமாகும் வேறொரு செடியின் வேரை ஒத்திருக்கிறது. அதனால் தவறுதலாக இவ்வேரைச் சாப்பிட்டுப் பலர் இறந்திருக்கின்றனர்.

மூளை நரம்புகள், சருமம் இவைகளையே முக்கியமாக இவ்வௌஷதம் தாக்குகிறது. கொடுமையாய் வேலை செய்யும் குணம் உள்ளது. பெரும்பாலும் வலிப்புகளுக்கு உபயோகப் படுகிறது.

## பொதுவான குறிகள்

**தகுதி:**—குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும் ஏற்றது. வலிப்புகள் தோன்றும் குணமுள்ள பெண்கள். புழுக்களால் அல்லது பல் முளைக்கும் காலத்தில் வலிப்புகள் தோன்றும் குழந்தைகள். **ஸோரா விஷத்தை** நீக்கும் ஔஷதம்.

மனம் :—1. குழப்பம். நிகழ் காலத்தை எதிர் கால மாய் நினைத்தல். தான் ஒரு சிறு குழந்தை என்று நினைத்தல். புதிய மனிதர்களைப் பார்த்தால் பழக்க மானவர்கள் போலவும் பழகிய இடங்கள் புதிய இடங் கள் போலவும் தோன்றும். பார்வை, சுவை, வாசனை ஆகிய உணர்ச்சிகளை அறியும் சக்தி கோளாருகிக் குழப் பமாய் இருத்தல். நிலக்கரி போன்ற பொருள்களைத் தின்ன விரும்புதல். தின்னக் கூடிய பொருள் எது, தின் னக்கூடாத பொருள் என்று அறியும் சக்தி இருப்ப தில்லை. 2. சந்தேதிக்கும் குணம்:—ஒருவரையும் நம்ப மாட்டார். 3. அசட்டுத்தனமான நடத்தை. அசடு வழி வது போல் சிரித்தல், பொம்மைகளுடன் விளையாடுதல்.

மேலே விவரிக்கப்பட்ட எல்லாக் குறிகளும் காக் கை வலிப்புக்குப் பிறகும் இன்னும் அது போன்ற வலிப் புகளுள்ள வியாதிகளுக்குப் பிறகும் ஏற்படக்கூடும்.

உடல் :—வாந்தியுடனும் வயிற்றுப் போக்குடனும் தலையில் அதிக இரத்தம் சேருதல். உடல் நடுக்கத் துடன் இருதயப் படபடப்பு. சிவந்த முகம். தலைச் சுற் றல். கண்களின் கருமணிகள் விரிந்திருத்தல். "உடல் முழுவதும் வியர்வை உண்டாகி அடிக்கடி தூக்கத்திலி ருந்து விழித்துக் கொள்ளுதல்; உடலில் புதிய தெம்பு ஏற்பட்டிருப்பது போல் தோன்றுதல்". கீழ்த் தாடைச் சுரப்பிகளில் வலியுள்ள வீக்கம். பற்களை அறைக்கும் குணம். அடிக்கடி மூத்திரம் கழித்தல்.

உபாதி கூடுதல் :—வலிப்புகள் மெதுவாகத் தொட் டாலும், ஓசை அல்லது அதிர்ச்சி ஆகியவைகளாலும் மீண்டும் தோன்றும். காக்கை வலிப்பு இரவில் அடிக் கடி தோன்றும். அடிபட்டதன் விளைவுகள் என்னும் தலைப் பைக் கவனிக்கவும்.



உபாதி குறைதல் :—தலைக் குறிகள் அபான வாயு வெளியானல் சௌகரியமாய் இருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

கொடுமை :—கொடுமை ஸிகுடாவின் விசேஷக் குறி களில் ஒன்று. முகத்தையும் கை கால்களையும் பயங்கரமான அளவுக்குக் கோணவைக்கும் குண முள்ள கொடுமையான வலிப்புகள். முனகுவார், ஊளையிடுவார். தலை, வயிறு, கைகள், கால்கள் ஆகியவைகளில் திடீரென்று கொடுமை யான அதிர்ச்சி. அதன் பிறகு உடலில் விரைப்பு அல் லது பயங்கரமாகக் கதறுவார்; முடிவில் தசைகளில் இழுப்பும் கொடுமையாக உடல் முறுக்கப்படுவதும்; இவைகளால் மிகுந்த களைப்புத் தோன்றும். பலமான ஓசையுடன், கொடுமையாகவும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் உள்ள விக்கல். காலராவில் இவ்வித மான விக்கல் உண்டாகும். தலை பின்பக்கமாய்ப் பல மாக இழுக்கப் படுதல். காலராவில் வாந்தியும் மார்புத் தசைகளில் கடுமையான இழுப்பும் மாறி மாறித் தோன் றுதல். "விநோதமான, அடக்க முடியாத விருப்பங் கள்". கரியைத் தின்ன ஆவல். மூத்திரம் கழிக்கப் பல மான தூண்டுதல். கடுமையான தலைச் சுற்றல்.

இழுப்புகள் :—ஸிகுடாவில் பலவிதமான இழுப்புக ளும் இருக்கின்றன. இழுப்புகள் விட்டு விட்டு ஏற்படு தல், விடாமல் தொடர்ந்திருத்தல்; பல் முளைக்கும் காலத்தில் இழுப்புகள்; பிள்ளைப் பெற்று அறையி லுள்ளபோது இழுப்புகள்; காக்கைவலிப்பு இழுப்புகள்; புழுக்களால் தோன்றும் சுரத்துடன் வலிப்புகள்; தசை களில் துடிப்புடன் இழுப்புகள்; உணவுக்குழாயின் வாயில் இழுப்புகள்; அதனால் விழுங்க முடியாமை.

கீழ்ப் புறம் செல்லும் குணம் :—கடுமையான வலிப்புகள்

மேலிருந்து கீழே இறங்குதல் (குப்ரம் மெட்டில் மாறாக இருக்கிறது). குப்ரம் மெட்டின் வலிப்புகள் கை விரல்களிலும் கால் விரல்களிலும் ஆரம்பித்துப் பிறகு உடம்பு முழுவதும் பரவும்.

விறைப்பு: பின்பக்கம் வளைதல்:—தசைகள் விறைப்பாய் இருத்தல். தலை ஒரு பக்கமாகத் திருப்பப்பட்டிருக்கும் அல்லது வளைக்கப்பட்டிருக்கும். முதுகு வில் போல் பின் பக்கமாய் வளைக்கப்பட்டு இருக்கும். விழிகள் குத்திட்டிருக்கும்.

விநோதமான விருப்பங்கள்:—கரியைத் தின்ன ஆவல். (கொடுமை என்னும் தலைப்பைப் பார்க்கவும்) சாக்கட்டி போன்ற வழக்கமில்லாத பொருள்களைத் தின்ன அதிகப் பசி.

அடிபட்டதின் விளைவுகள்:—தொண்டையிலோ அல்லது சதையிலோ மீன் எலும்பு குத்தி அதன் காரணமாய் வாய்ப் பூட்டு முதலிய கோளாறுகள் (ஹைபரிகும்). மூளை, முள்ளந் தண்டு ஆகியவைகளில் அடிபட்டதன் விளைவாய்த் தோன்றும் கோளாறுகள், விசேஷமாக வலிப்புகள். "அடிபட்ட பிறகு தோன்றும் மனக் குறிகள், தலைக் குறிகள்".

அமுக்கப்படுதல்:—சருமக் கோளாறுகளை அமுக்கியதால் மூளைபற்றிய வியாதிகள் தோன்றுதல்.

தேன் போல் நிற முள்ள பொறுக்குகள்:—தலையிலும் முகத்திலும் உள்ள கொப்பளங்கள் ஒன்று சேர்ந்து கெட்டியான, மஞ்சள் நிற முள்ள தேன் போல் நிற முள்ள பொறுக்குகள் உண்டாகும். கரப்பான் படையில் வெளியாகும் நீர் கெட்டியான, தேன் போல் நிற முள்ள பொறுக்குகளாய் மாறும்; அறிப்பு இருக்காது. இவ்விதமான மஞ்சள் பொறுக்குகள் ரீசையில் உண்டாகி அம்மயிரை ஒட்ட வைக்கும். மண்டைத் தோல் முழுவதும் இவ்விதப் பொறுக்குகள் உண்டாகிக் கெட்டியான குல்லாயைக்



கவிழ்த்திருப்பது போல் தோன்றும். ஆண்ட்டிம். க்ருடத்தில் மஞ்சள் பொறுக்குகளுள்ள சரும வியாதியில் தொட்டால் அதிக வலி ஏற்படும். பொறுக்குகளைச் சிரமம் இல்லாமல் நீக்கி விடலாம். மெஸெரியத்தில் வாயைச் சுற்றியும் கன்னங்களிலும் தேன் போல் நிற முள்ள பொறுக்குகள் காணப்படும்.

நடுங்குதல்:—கை கால்களில் நடுக்கம். கைகளில் கடுமையான நடுக்கம். கால்கள் நடுங்குதல். இருதயத்தில் நடுக்கத்துடன் படபடப்பு. பார்க்கும் பொருள்கள் யாவும் நடுங்கிக் கொண்டிருப்பது போல் தோன்றுதல் என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

## மற்ற குறிகள்

காதுகளிலிருந்து இரத்தப் பெருக்கு:—இடது கை நாள் முழுவதும் இழுத்துக் கொண்டே இருத்தல். வாயிலிருந்து நுரை, நாக்குக் கடிபடுதல். ஸிகுடா வலிப்புகள் உள்ளபோது வியாதியஸ்தருக்கு நினைவு தப்பிவிடும். பிரசவ சமயத்தில் தோன்றிய வலிப்புகள் பிரசவமான பிறகும் நீடித்திருத்தல். சாப்பிட்டவுடன் அதிகப் பசி. காலையில் மூத்திரம் கழிக்க அடக்க முடியாத ஆவலுடன் வயிற்றுப்போக்கு. தன் உடல் முழுவதும் மிகப் பெரியதாகி விட்ட உணர்ச்சி. வயிற்று வலி, வலிப்புகள் இவைகளுடன் புழுக்களால் உண்டாகும் சுரம்.

ஒப்பிடுதல்:—ஸிகுடாவுக்கு மாறாக நக்ஸ் வாமிகாவில் வலிப்புகள் உள்ளபோது வியாதியஸ்தர் தன் நினைவுடன் இருப்பார். வலிப்பு வந்துபோன பிறகு களைப்பு இருக்காது.

# ஸீனா

## (CINA)

முன்னுரை:—ஸீனா பெரும்பாலும் பூச்சி கொல்லும் ஔஷதமாகவே வேலை செய்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் மேலாகப் பார்க்கும் போது ஸீனா பயன் படாது என்று கருதப்பட்ட பற்பல வியாதிகளில் ஸீனாவில் உள்ள முக்கிய குறிகள் இருப்பதை ஆதாரமாய்வைத்து இவ்வௌஷதம் கொடுக்கப் பட்டுக் குணம் ஏற்பட்டிருக்கிறது.

உணர்ச்சிகள் அதிகரித்தல், வேதனை, பொல்லாத்தனம், வியாதி பிடித்த தோற்றம், வலிப்புகள் ஆகிய குறிகள் இவ்வௌஷதம் தேவையாகும் எல்லா வியாதிகளிலும் விசேஷமாகக் காணப்படுகின்றன.

### பொதுவான குறிகள்

**தகுதி:—** குழந்தைகளுக்கு, குறிப்பாக பல் முளைக்கும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு ஏற்றது. கறுத்த மயிர், கறுப்பான கண்கள், இவைகளுடன் பிடிவாத குணமும் உள்ள குழந்தைகளிடமே ஸீனா நன்றாக வேலை செய்கிறது. இவ்வௌஷதத்தின் விசேஷக் குறியாகிய வேதனைக் குணம் காணப்பட்டால் நிச்சயமாய் உபயோகப்படும். புழு பூச்சிகளால் தாக்கப்பட்டுள்ள குழந்தைகள். இரண்டு வயதுக்கு மேல் பத்து வயதுக்கு உட்பட்ட வியாதியஸ்தர்களுக்குச் சிகிச்சை செய்யும் போது எப்பொழுதும் ஸீனாவை நினைக்க வேண்டுமென்று கூட மாக்கீல் எழுதுகிறார்.

பெருவாரியாகத் தோன்றும் வியாதி பரவி வரும் காலத்தில் (குறிப்பாகச் சின்னம்மை—இது என் சொந்த அனுபவமே) ஸீனா அடிக்கடி தேவைப் படுகிறது.

**மனம்:—** "வேதனை" என்ற ஒரே வார்த்தையில்



இவ்வௌஷதத்தின் மனக் குறிகள் முழுவதையும் அடக்கி விடலாமென்றாலும் நான் அவைகளை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து எழுத விரும்புகிறேன். **1. வேதனை.** குழந்தையைப் பார்க்கப் பிடிக்காது. மிகக் கோபமாய் இருக்கும். தூக்கப் போனால் கதறி அழும் அல்லது "அதைத் தொட்டால் அல்லது கையைப் பிடித்து இழுத்தால் பரிதாபமாக அழும்." இடை விடாமல் அழுது கொண்டும் தொந்தரவு கொடுத்துக் கொண்டும் சுற்றி யிருப்பவர்களை அடித்துக் கொண்டும் இருக்கும். **2. உணர்ச்சி அதிகரித்தல்.** குழந்தை தொட்டால் அழும்; தன்னைத் தொடுவதையும், தன்னுடன் பேசுவதையும் தன்னைப் பார்ப்பதையும் சகிக்க முடியாது. அதன் அருகே செல்வதும் பிடிக்காது. கொஞ்சுவதும் சீராட்டலும் வெறுப்பை உண்டாக்கும். எவ்விதமாகவும் அதை அரவணைக்க முடியாது. **3. பொல்லாத்தனம்:—** பலவிதமான பொருள்கள் வேண்டுமென்று கேட்கும். கொடுத்தால் வேண்டாமென்று சொல்லும் அல்லது உடனேயோ சிறிது நேரம் கழித்தோ தூக்கி எறிந்துவிடும். எப்பொழுதும் தன் உடம்பை வேகமாக ஆட்டிக் கொண்டிருப்பதை விரும்பும். ஆட்டிக் கொண்டிருக்கும் போது தூங்கவும் கூடும். உடல் விரைத்தல், குறிப்பாக எதிர்த்துப் பேசினால்.

**உடல்:—** தூங்கும் போது பற்களை நறநற வென்று கடித்தல், மூக்கினுள் விரலை விட்டுக் குடைதல் அல்லது மூக்கைத் தேய்த்துக் கொள்ளுதல். கண்களின் கீழே கறுப்பான வட்டங்கள். கண் கருமணிகள் விரிந்திருத்தல். ஒரு கன்னம் சிவந்து மறு கன்னம் வெளுத்து இருக்கும். (சாமோமில்லா). வெள்ளையான, கலங்கிய மூத்திரம். படுக்கையில் மூத்திரம் கழித்தல். சாப்பிட்டவுடன் மிகச்

சீக்கிரத்தில் பசி ஏற்படுதல். கோளாறான பசி. எப்பொழுதும் தாய்ப்பால் குடித்துக் கொண்டே இருக்க விரும்பும் சிறு குழந்தைகள். உடலில் இழுப்புடனும் கடுமையான கதறலுடனும் நிலை இல்லாத தூக்கம். தொட்டிலிலோ, தூளியிலோ, தோள் மீதோ போட்டு ஆட்டினால் தான் தூங்கும். பயந்து கொண்டு விழித்துக் கொள்ளுதல். அடி வயிற்றைக் கீழே வைத்துப் படுத்திருக்கும் அல்லது தூக்கத்தில் கைகளையும் முழங் கால்களையும் மடக்கிக் கொண்டு இருக்கும்.

**உபாதி குறைதல்:-** அங்குமிங்கும் நடமாடிக் கொண்டு இருந்தால் குறையும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— பெரும்பாலான கோளாறுகள் இரவில் தோன்றுகின்றன. காலையிலும் மாலையிலும் கூடுதலாய் இருக்கின்றன. கொட்டாவி விடும்போது கோளாறுகள் தோன்றும். **இழுப்புகள் தொட்டால் ஆரம்பமாகும் அல்லது அதிகமாகும்.** படுக்கையில் மூத்திரம் கழித்தல், ஒவ்வொரு அமாவாசையும் அதிகமாகும். குழந்தைபேசவும் அசையவும் பயப்படும். அவைகளால் இருமல் வந்து விடுமோ என்ற கவலை. (பிரயோனியா).

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—தொப்பூழில் வலியுடன் ஏற்படும் முறுக்குதல் அமுக்கினால் குறையும். படிக்கும்போது கண்கள் களைப்புற்று பார்வை குழம்பி எழுத்துக்கள் மங்குதல்; எல்லாக் குறிகளும் கண்களைக் கசக்கிக் கொண்டால் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**வேதனை:—** மூக்கில் அறிப்பு; குழந்தை இடைவிடாமல் மூக்கைத் தேய்த்துக் கொள்ளும் அல்லது உள்ளே விட்டுக் குடையும். இரத்தம் வரும்வரை மூக்கினுள்ளே



விரலை விட்டுக்குடைதல்; மூக்கினுள்ளே விரலை நுழைத்துக் கொண்டிருக்க விரும்பும். ஆசன வாயில் அறிப்பு; உருண்டையான அல்லது நூல் போன்ற பூச்சிகள் வெளிப்படும். தூங்கும்போது குழந்தை பற்களை நறநறவென்று கடிக்கும் அல்லது பல் முளைப்பதற்கு முன் மெல்லுவது போல் தாடைகளை அசைக்கும். காலையில் தூங்கி எழுந்திருந்தவுடன் மூச்சை அடைக்கும் இருமல் (தொண்டையில் உள்ள வேதனையினால்).

**உணர்ச்சி அதிகரிப்பு :—** தலையைச் சீவிக்கொள்வது குழந்தைக்குப் பிடிக்காது. தலைவலி தோன்றுவதற்கு முன்பும் உள்ளபோதும் மண்டைத்தோலில் வலி. தொட்டாலும் அசைந்தாலும் கை கால்களில் வலியுள்ள உணர்ச்சி.

**வியாதி பிடித்த தோற்றம் :—** முகம் வெளுத்திருக்கும். வாயைச் சுற்றிலும் வெள்ளையான அல்லது நீல நிறமுள்ள தோற்றம். கண்களைச் சுற்றிக் கறுப்பு வளையங்கள்.

**தூக்கிப் போடுதல்: இழுப்புகள்; விரைப்பு :—** தூங்கும் போது உடலைத் தூக்கிப்போடுதல் ; அத்துடன் வீறிட்டுக் கதறுவதும் இருக்கலாம். இரவில் வலிப்புகள் தோன்றும். கைகளை ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குத் தூக்கிப் போடுவதுடன் குழந்தைகளுக்கு ஏற்படும் வலிப்புகள். குழந்தைகளுக்குத் திடீரென்று உடல் விரைத்துப் பிறகு உடல் நடுங்குதல்.

குழந்தையைப்பார்த்தால் உடனே அதன் உடல் விரைத்து விடும். இருமும்போது உடல் விரைத்து விடும். புழு, பூச்சிகளால் இழுப்பு; குழந்தையின் உடம்பு நேராக விரைத்து விடும். இருமிய பிறகு இழுப்புத் தோன்றுதல். கக்குவாய் இருமல். கக்குவாய் இருமலிலும் விடா

மல் இருமல் ஏற்படும் சமயங்களிலும் இருமிய பிறகு தொண்டையிலிருந்து கீழே அடிவயிறு வரை கள கள வென்ற (பாட்டிலுக்குள் தண்ணீரை நிரப்பும்போது ஏற்படுவதைப்போன்ற) ஓசை உண்டானால் அக்கேசுக்கு ஸீஞ ஏற்றது என்று அறியலாம். இவ்வித ஓசை வலிப்புகள் உள்ளபோதும் உண்டாகலாம்.

விருப்பம் : வழக்கத்துக்கு மாறான பசி:—உணவு உட்கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் பசி. எப்பொழுதும் தாய்ப்பாலைக் குடித்துக் கொண்டே இருக்க விரும்புதல். நள்ளிரவில் பசி தோன்றக்கூடும். தித்திப்புப் பொருள்களிலும் பலவகைப்பட்ட பொருள்களிலும் விருப்பம். தன் தாயின் பாலைக் குடிக்க வெறுப்பு.

பொய்த் தோற்றம் :—கண்களுக்கு முன் பலவிதமான நிறங்கள், விசேஷமாக மஞ்சள் நிறம் தோன்றுதல், பார்க்கும் பொருள்கள் யாவும் மஞ்சள் நிறமாய்க் காணப்படும்.

மாறி மாறி வரும் குணம் :—வயிற்றுப் போக்கும் மலச்சிக்கலும் மாறி மாறி ஏற்படும். அல்பமான பசியும் பசியே இல்லாமல் இருப்பதும் மாறி மாறி வரும். தலை வலியும் அடிவயிற்று வலியும் மாறி மாறித் தோன்றும்.

எதிரொலிக் குறிகள் :—புழுக்களால் இருமல் (பல சமயங்களில் வறட்சியுடனும் விட்டு விட்டும் வரும்) "எழுத்து வேலை அல்லது படிப்பதினாலும் (மனதுக்குள்ளே) ஏற்படும் இருமல்".

முறை வைத்துத் தோன்றுதல் :—கோடைக் காலத்துக்கு முன்பும் மழைக்காலத்துக்கு முன்பும் ஒவ்வொரு வருஷமும் தவறாமல் இருமல் ஏற்படுதல். ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில், மாலையில், தோன்றும் முறைச் சுரம்.



## மற்ற குறிகள்

கண்களிலிருந்து கண்ணீர் வருமளவுக்குக் கடுமையாக இருமுவார்.—இருமும் போதும் வேலை செய்யும் போதும் அதிக வியர்வை. பருவமடைவதற்கு முன்பு பெண்களுக்குக் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு.-மூத்திரம் வெளிப்பட்ட சிறிது நேரத்தில் பால் போல் மாறுதல். குழம்பு போலவும் ஆகலாம். (இவ்விதமான ஒரு கேசைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. குழந்தையின் பெற்றோரும் சிகிச்சை செய்து வந்த அல்லோபதி வைத்தியரும் கூடப் பயந்து விட்டனர். ஸீஞ 200 ஒரு வேளை மருந்து மூத்திரத்தை அதன் இயற்கை நிலைக்குக் கொண்டுவந்தது). நினைவுடன் அல்லது நினைவு தவறி இரவில் காக்கைவலிப்பு, அரிசிப் பொரி போன்ற, வெண்மையான, சளிப் பொருள் கலந்த மலம். பாகு போன்ற இளகிய மலம். வெளுத்த முகத்துடன் சுரம்.

ஒப்பிடுதல் :—தண்ணீர் போன்ற திரவப் பொருளைக் குடிக்கும்போது கள களவென்ற ஓசை (குப்ரம் ஹெல்லபோரஸ்). தொடுவது பிடிக்காது (ஆண்ட்டிம் க்ரூடம், ஆண்ட்டிம் டார்ட், ஹிப்பார் ஸல்பர், ஸைலீஷியா, தூஜா).

குறிப்புகள் :—வியாதியின் கடுமையான குறிகளை டிரோஸிரா அடக்கிய பிறகு பல சமயங்களிலும் ஸீஞ தேவைப்படுகிறது.

பூச்சிக் கோளாறுகளில் ஸீஞ கொடுக்க வேண்டிய குறிகள் இருந்தாலும் அதனால் குணம் ஏற்படாவிட்டால் ஸாண்டோனினம் (2 x அல்லது 3 x) பல சமயங்களிலும் குணம் செய்கிறது.

# க்ளமேடிஸ் எரெக்டா

## (CLEMATIS ERECTA)

**முன்னுரை** :—சுரப்பிகள், பிறப்பு உறுப்புகள், மூத்திர உறுப்புகள் ஆகியவைகளிலும் சருமத்திலும் கூட இவ்வௌஷதம் வேலை செய்கிறது. சுரப்பிகளிலும் குறிப்பாக விரைகளையே அது அதிகம் தாக்குகிறது. இவ்வௌஷதத்தின் உபாதி கூடுதல் குறைதல் குறிகள் சாமான்யப் பட்டவை அல்ல என்பதை என்னுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டே மெய்ப்பிக்க முடியும்.

காலில் மிகக் கடுமையான ஒரு புண் தோன்றி வேகமாய்ப் பரவி வந்து எலும்பையே குடைந்து தின்று விடும் போல் இருந்தது. ஒரு வருஷ காலம் என்னை ஏமாற்றி வந்தது. கடைசியில் **மெஸரியம் கொடுக்கப் பட்டவுடன்** ஏறக்குறைய நல்ல குணம் ஏற்படதாயினும் அதற்குப் பிறகு முழுகுணம் ஏற்படாமல் அப்படியே நின்றுவிட்டது. பலநாட்கழித்து ஒரு குறி என் கண்ணில் பட்டது. **குளித்தால் வியாதிகள் கூடுதலாகும்** என்பதே அது. இப்பொழுது **க்ளமேடிஸ்** கொடுக்கச் சில நாட்களுக்குள் முழு குணம் உண்டாயிற்று. வியாதியின் இந்த ஒருகுறியில் முழுவியாதியும் அடங்கி இருந்திருக்கிறது. சொந்த அனுபவத்தில் தான் குறிகளின் உண்மையை நாம் முழுவதும் அறிந்து கொள்ள முடிகிறது.

**தகுதி**:— லேசான மயிர் வளர்ச்சி யுள்ளவர்கள்; உடல் மெலிந்து நாட்பட்ட வியாதியில் அடிபட்டவர்கள்; சுரப்பிகளில் வீக்கமும் கல்போல் கடினமாவதும் உள்ளவர்கள்; க்ஷயரோகம் தோன்றக்கூடிய உடல்வாகு உள்ளவர்கள்; மேக வெட்டை வியாதியுள்ளவர்கள், ஆகியவர்களுக்கு ஏற்றது



**மனம்**:— தனியே இருக்கப் பயம்; ஆனால் மற்ற சமயங்களில் பிடித்தமான நண்பர்களுடன் பேசவும் விருப்பம் இல்லாமை. வருத்தம். ஏதோ கெடுதல் நேரப்போகிற தென்ற பயம். ஞாபக சக்திக் கோளாறுகள்.

**உடல்**:— அதிக பலவீனம், பிற்பகல் 3 மணியிலிருந்து 5 மணி வரை, **சாப்பிட்ட பிறகு பலவீனம். கைகால்களில் களைப்பு, விசேஷமாகச் சாப்பிட்ட பிறகு**. அதிக உடல் மெலிவு. முகம் வெளுத்து வியாதி பிடித்தது போல் தோன்றும், சாப்பிட்ட பிறகு குமட்டலும் தூக்கக் கலக்கமும். அதிக தாகம், ஐஸ் தின்ன ஆவல். உடல் முழுவதும் துடிப்பு, குறிப்பாகக் கீழே படுத்தவுடன். தசைகளில் இழுத்தல். நள்ளிரவுக்குப் பிறகு ஏராளமான வியர்வை.

**உபாதி கூடுதல்** :— குளிப்பதில் வியாதியஸ்தருக்கு வெறுப்பு. குளிர் உள்ள பருவ காலங்கள் ஒத்துக் கொள்வதில்லை.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— குறிகள் தொடுவதினால் அதிகமாகும். அசைவினால் எப்பொழுதும் அதிகமாகும். புண், கரப்பான் படை ஆகியவை **குளித்தாலும் குளிர் உள்ள காலங்களிலும் கூடுதலாகும்**. தலையைத் தூக்கினால் அல்லது அசைத்தால் தலைச் சுற்றல். புகையிலைச் சுருட்டு முதலியவைகளைப் பிடித்தால் பல்வலி அதிகமாகும்; படுக்கையின் சூட்டினாலும் பல்வலி அதிகரிக்கும். கரப்பான் படை போன்ற கோளாறுகள் வளர்பிறை நாட்களில் அதிகமாகும் (அப்பொழுது படையில் நீர்க்கசிவு காணப்படும்) ; தேய்பிறை நாட்களில் குறையும் (அப்பொழுது படை காய்ந்து இருக்கும்). ஒவ்வொரு மாதமும் அமாவாசையின் போது அதிகரிக்கும் குணமுள்ள நாட்பட்ட சருமக் கோளாறுகள். சுரப்பிகளில் (அரை

யிடுக்குச் சுரப்பிகள், விரைகள், ஸ்தனங்களிலுள்ள சுரப்பிகள்) வலி பகலில் குறைவாகவும் இரவிலும் படுக்கையில் படுத்திருக்கும்போது அதன் சூட்டினாலும் அதிகமாகவும் இருக்கும். சூடான ஒற்றிடங்களாலும் சுரப்பிகளில் வலி அதிகமாகும். இரவில் சுரப்பிகளைத் தொட்டால் அதிக வலி காணப்படும். இவ்விதம் இரவில் வலி அதிகரிப்பது இவ்வௌஷதத்தின் ஒரு முக்கிய குறி என்று மதிப்பிடலாம்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—வாயில் குளிர்ந்த தண்ணீரை வைத்துக் கொண்டிருந்தால் அல்லது குளிர்ந்த காற்றை வாயினால் இழுத்தால் பல்வலி சிறிது நேரத்துக்குக் குறைவாய் இருக்கும். தேய்பிறை நாட்களில் கரப்பான் படை குறைவாய் இருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**சுரப்பிகள் அதிகமாய்த் தாக்கப்படுதல்; கடினமாகுதல்:-** விரைகள், ஸ்தனங்கள், கருப்பை, சினைப்பை, அரையிடுக்கு, கீழ்த்தாடை ஆகிய இடங்களிலுள்ள சுரப்பிகள் தாக்கப்படுதல். விரைகளில் அடிபட்ட வலியுடன் அவை கல்போல் கடினமாகும். விரைகளிலும் இந்திரிய நரம்புகளிலும் இழுக்கும் வலி கீழிருந்து மேலே பரவும். கீழ்த்தாடைச் சுரப்பிகளில் கடினமான முண்டுகளுடன் வீக்கம், தொட்டால் வலி உண்டாகும். ஸ்தனச் சுரப்பிகளில் வீக்கமும் கல்போல் கடினமும். புண்களுடன் ஸ்தனங்களில் கல்போல் கடினமான வீக்கம். பட்ட இடங்களில் புண்ணை ஏற்படுத்தும் குணமுள்ள வெள்ளை ஒழுக்குடனும் மேலே தாவும் கிழிக்கும் வலிகளுடனும் கருப்பையில் கல்போல் கடினமான வீக்கம். ஸ்தனச் சுரப்பிகளில் வலியும் தொட்டால் வலி அதிகமாவதும்; இரவிலும் வளர் பிறையிலும் அதிகரிக்கும்.



**உள்ளே அமுக்கப் படுதல்:—** மேகவெட்டை அமுக்கப்பட்டதால், அல்லது கோளாறான சிகிச்சை செய்யப்பட்டதால் விரைகளில் வேக்காடு. மேகவெட்டை உள்ளே அமுக்கப்பட்டதால் தோன்றும் கோளாறுகள்.

**வேக்காடு:—**மெதுவாக விருத்தியாகும் வேக்காட்டினால் (மேக வெட்டையில்) மூத்திரத் துவாரம் குறுகி முறுக்கப்பட்டது போல் பெரிதாகத் தோன்றி அமுக்கினால் வலி ஏற்படும். இத்தகைய நாட்பட்ட வேக்காட்டினால் முடிவில் மூத்திரத் துவாரம் அனேகமாக மூடிவிட்டது போல் ஆகும். "மூத்திரத் துவாரத்தில் இறுக்கும் உணர்ச்சி உண்டாகி மூத்திரம் கழிக்கும் போது வியாதியஸ்தர் முக்க வேண்டி வரும். மூத்திரம் மெல்லிய தாரையாக வெளிவர ஆரம்பித்து முழுவதும் வெளியாவதற்குள் நின்று விடும்". வேக்காட்டினால் மூத்திரம் தடைப்படும் சமயங்களில் ஆரம்ப நிலைமைகளில் க்ளமேடிஸ் அதிக உபயோகமுள்ளது. இமைகளின் ஓரங்களில் நாட்பட்ட வேக்காடும் புண்ணும்.

**தோல் உறிதல்:—**கருப்பைப் புற்றில் பட்ட இடங்களில் தோலுறியச் செய்து புண்ணை உண்டாக்கும் வெள்ளை ஒழுக்கு. தோலை உறிக்கும் குண முள்ள சருமக் கோளாறுகள், மேலாகப் பரவி தோலை அறித்து விடும் குணமுள்ள புண்கள்.

**வலது பக்கமே வியாதிகள் அதிகம்:—**இவ் வௌஷதத்தின் வியாதிகள் பெரும்பாலும் வலப் பக்கத்தையே தாக்குகின்றன. வலது மார்பு; வலது அரையிடுக்குச் சுரப்பிகள்; வலது விரை; விரைப்பையின் வலது பாதியில் வீக்கம்.

## மற்ற குறிகள்

"மூத்திரம் நின்று நின்று வெளியாகுதல்; அல்லது

உட்கார்ந்து வெகு நேரம் கழித்து மூத்திரத் துவாரத்தின் மேல் பகுதியில் கடுமையான வலியுடன் மூத்திரம் வெளிப்படுதல்". மூத்திரத் துவாரத்தில் குத்து வலிகளுடன் மானி கடுமையாக விறைத்தல். மூத்திரம் முழுவதையும் கழிக்க முடியாமை; மூத்திரம் கழித்த பிறகு சொட்டுச் சொட்டாக ஒழுகிக் கொண்டிருத்தல்.

---

## கோபால்டம்
## (COBALTUM)

**முன்னுரை:**—முதுகு வலியில் இது விசேஷமாய்ப் பயன்படுகிறது.

### பொதுவான குறிகள்

**தகுதி:**—சிற்றின்பத்தில் அளவு மீறி ஈடுபட்டதால் முதுகில் வலி உள்ளவர்கள். "முது கெலும்பிலுள்ள நரம்புகளில் தளர்ச்சி உள்ள நிலைமைகள்".

**மனம்:**—அளவுகடந்த உற்சாகம். அதிக உற்சாகமும் மிக வேகமாகப் பெருகும் எண்ணங்களும் (மாலையில்). "ஏதோ குற்றம் செய்துவிட்டது போல் நினைத்தல்". மன உணர்ச்சிகள் அதிகரித்தால் அது எவ்வகையானதாய் இருந்தாலும் உபாதிகள் கூடுதலாகும்.

**உடல்:**—வாயை இறுக மூடிக் கொள்ளும் குணம். பாதங்களில், அனேகமாக விரல்களுக்கு நடுவில், புளிப்பான அல்லது தோல் போல் நாற்ற முள்ள, வியர்வை. நாக்கில் வெண்மையான அழுக்கும் நடுவில் வெடிப்பும் இருக்கும். அடிவயிற்றிலும் தொப்பூழிலும் ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி. அடிவயிற்றில் மஞ்சள் நிற முள்ள புள்ளிகள். இரவில் பசி எடுப்பதில்லை. மூத்திரம் கடுமையான வாடையுடன் இருக்கும். தூக்கக்



கலக்கம்; விழிப்புடன் தூங்குதல்; புத்துணர்ச்சியை அளிக்காத தூக்கம். சிற்றின்பக் கனவுகளால் தூக்கம் கெடுதல்.

**உபாதி கூடுதல்:**—பல குறிகள் காலையில் கூடுதலாகும். அளவு மீறிய சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் அதிகமாகும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— முதுகு வலி உட்கார்ந்திருக்கும் போது அதிகமாகும் (லிங்கம்). சோர்வு காலையில் அதிகமாகும். எலும்பு வலிகளும் இவ்விதமே அதிகப்படும். குளிர் காற்றினால் கண்ணீர்ப் பெருக்கு உண்டாவதுடன் பல்வலியும் கூடுதலாகும். புணர்ச்சி செய்ததினாலும் அளவு மீறிப் புணர்ச்சியில் ஈடுபட்டதாலும் தோன்றும் முதுகு வலியில் விசேஷமாகப் பயன்படும். தலையை முன்பக்கமாகக் குனிந்தால் தலை வலி அதிகரிக்கும். (க்ளமேடிஸ் தலை வலியில் தலையைப் பின்பக்கம் சாய்த்தால் வலி அதிகமாகும்), படுக்கையின் சூட்டினால் உடம்பு முழுவதும் அரிப்பு உண்டாகும்.

**உபாதி குறைதல்:**—முதுகு வலி, எழுந்திருந்தால், நடந்தால் அல்லது கீழே படுத்தால் குறையும்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்.

**முதுகு வலி:**—மேலே குறிப்பிட்ட கூடுதல், குறைவுகளுடன் உள்ள முதுகு வலி. விசேஷமாக மிதம் மிஞ்சிய சிற்றின்ப ஈடுபாட்டினால் தோன்றும் போது.

**புளிப்புக் குணம்:**—" வாயில் புளிப்பான சுவை, வயிற்றில் புளிப்புத் தட்டுதல், பாதங்களில் புளிப்பு வாசனையுள்ள வியர்வை முதலியவை."

**நுரைக்கும் குணம்:**—நுரையுள்ள வெண்மையான சளி ஏராளமாய் வெளிப்படுதல். " தித்திப்பான, நுரையுள்ள, கட்டி கட்டியான கோழை."

**பழுப்பு மஞ்சள் நிறம்:**—பிறப்பு உறுப்புகளிலும்

அடி வயிற்றிலும் மஞ்சளும் பழுப்பும் கலந்த நிறமுள்ள புள்ளிகள். மஞ்சள் நிறமுள்ள, கம்பளித்தூசிபோன்ற வண்டல் படிவதுடன் மூத்திரத்தின் அளவு குறைதல்.

புண் உள்ள உணர்ச்சி :—காறித் துப்பும் போது தொண்டையில் புண்ணுள்ள உணர்ச்சி. விக்கலினுல் வயிற்றினுள்ளே புண்ணுள்ள உணர்ச்சி.

அறிப்பு :—படுக்கைச் சூட்டினுல் உடம்பு முழுவதும் அறிப்பு. தோள் பட்டைகளிலும் முழுங்கால்களுக்கு அப்பாலும் அறிப்பு.

பலவீனம் :—முழுங்கால்களில் அளவுக்கு அதிகமான பலவீனம். ஆண் தன்மைக் குறைவும் விரைப்பு ஏற்படாமல் இரவில் இந்திரியம் வெளிப்படுவதும், இந்திரியம் வெளியான பிறகு கால்களிலும் முதுகிலும்வலி.

ஒப்பிடுதல் :—கீழே படுத்தால் முதுகு வலி குறையும் (நக்ஸ் வாமிகா). நடக்கும்போது சௌகரியம் (அர்ஜண்டம் நைட்; பாரிடா கார்ப்; பெல்லடொன்ன, பாஸ்பரஸ், ரஸ் டாக்ஸ், ருடா, ஸேபியா).

---

## காக்குலஸ்
## (COCCULUS)

முன்னுரை :—இவ்வௌஷதத்தின் விதைகளில் உள்ள ஒருவகைப் பொருள் மீன்களை உணர்வு இழக்கும்படிச் செய்கிறது. இவ்விதைகளை உபயோகித்து மீன்பிடிப்பது மிகப் பழயகாலத்தில் கையாளப்பட்ட முறை.

இழுப்புகள், பாரிச வாதப் பலவீனம், நரம்பு மண்டலங்களில் வேதனை, கப்பல்களிலும் கார்களிலும் பயணம் செல்லும்போது தோன்றும் கோளாறுகள், காலியாய் இருக்கும் உணர்ச்சி ஆகியவை இவ்வௌஷதத்தின் மிக விசேஷக் குறிகளாகும்.



### பொதுவான குறிகள்

தகுதி :—பணிவான, மந்தமான குணம் உள்ளவர்கள்; லேசான மயிர் வளர்ச்சியும் வெளுத்த கண்களும் உள்ள பெண்கள், குழந்தைகள், பயந்த சுபாவமும் ஏக்க குணமும் உள்ளவர்கள்; மாத விடாயின் போதும் கருப்பமாய் இருக்கும்போதும் கடுமையான துன்பம் அனுபவிக்கும் பெண்கள், அதிகமாகப்படித்தல், அளவு மீறி சிற்றின்பத்தில் ஈடுபடுதல் ஆகியவைகளால் தோன்றும் வியாதிகள் ஆகியவைகளுக்கு ஏற்றது.

மனம் :—கரை காண முடியாத வருத்தம்; தன்னைச் சுற்றி இருப்பதைச் சிறிதும் கவனியாமல் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு இடை விடாமல் வருத்த நினைவுகளில் ஆழ்ந்து விடுதல். நேரம் மிக வேகமாய்ப் போவது போல் தோன்றும் (மிக மெதுவாகப் போனுல், அர்ஜண்டம் நைட், கன்னபிஸ் இண்டிகா). கோப குணம் என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

உடல் :—உலோகச் சுவையுடன் பசி குறைதல் (மெர்கூறியஸ் சொலு). புகையிலை, பானங்கள், உணவு ஆகியவைகளில் வெறுப்பு, அசையும் போது முழங்கால்களில் உடையும் ஓசை. உள் உறுப்புகளில் காலியாய் வெறும் கூடாய் இருக்கும் உணர்ச்சி. பாரிச வாதப் பலவீனம், நடுக்கம், சிற்சில சமயங்களில் மட்டும் தோன்றிச் சிறிது நேரத்தில் மறையும் மத மதப்பு. அளவு மீறிய குமட்டலும் தலைச் சுற்றலும், வாந்தி செய்தல். உடல் வெளுத்துப்போகுதல் மூட்டுகளில் விரைப்பு, "கால்களை நீட்டி வைத்துச் சிறிது நேரம் கழித்து மடக்கினுல் வலி ஏற்படும்."

உபாதி கூடுதல் :—திறந்த இடங்களில். திறந்த இடங்களில் அது சூடாய் இருந்தாலும் சரி, குளிர்ச்சியாய் இருந்தாலும் சரி, உபாதிகள் மிகவும் அதிகமாகும்.

மாலையிலும் இரவிலும், விசேஷமாக நள்ளிரவிலும் இரவு 1 மணிக்கும் அதிகமாகும், பொதுவாக அசைவினால் எல்லாக் கோளாறுகளும் கூடுதலாகும். உடலை அசைத்தல்; படுக்கையிலிருந்து எழுந்திருத்தல் (கருப்பமாய் உள்ளபோது); குனிந்தால்; நடந்தால்; உமிழ் நீரை விழுங்கினால். வெய்யிலினால்; கூடுதலாகும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— **வண்டி, படகு, கப்பல் ஆகியவைகளில் ஏறிப் பயணம் செய்யும் போது** ஏற்படும் குமட்டலும் வாந்தியும். அக்காரணங்களால் ஏற்படும் மண்டை இடி. தொட்டாலும், அமுக்கினாலும் அதிர்ச்சியினாலும் அதிகமாகுதல் (**கோப குணம்** என்னும் தலைப்பைப் பார்க்கவும்). **கண் விழித்ததால்** ஏற்படும் கோளாறுகள். **சிறிதளவு தூக்கம் கெட்டாலும் கோளாறை ஏற்படுத்தும்**; வலிப்புகள் கூட உண்டாகலாம். மன உணர்ச்சிகள் அதிகரித்ததினாலும் ஞாபகசக்தியை அளவு மிஞ்சிச்சோதித்ததாலும் தூக்கம் வராமை. பலநாட்களாகச் சேர்ந்தாற்போல் தூங்காமல் கண் விழிப்பதினால் ஏற்படும் கோளாறுகள். விசேஷமாகக் கவலையுடனும் ஏக்கத்துடனும் கண் விழித்திருந்தால்.

**உபாதி குறைதல்** :—சில குறிகள் உட்கார்ந்திருந்தால் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**தாமத குணம்**:—மெதுவாகப் புரிந்து கொள்ளுதல் (கிள்ளினால் உடனே துள்ள மாட்டார்). வேகமாக யோசனை செய்ய முடியாது. விஷயங்களைக் கிரகித்துக் கொள்ள முடியாது. உடல் வேலைகளும் தாமதமாகவே இருக்கும். தான் நினைப்பதை வெளியிடச் சரியான வார்த்தைகள் நினைவுக்கு வராமை (டைபாய்டு சுரம்). (**ஆர்னிகாவில் வார்த்தைகளை** மறந்தே **விடுவார்**). கேள்விகளுக்கு மெதுவாகப் பதில் சொல்வார். இவ்வித



மான தாமதம் முடிவில் பாரிசவாத நிலைமைகளாய் மாறும். எவ்வகைச் சுரமாய் இருந்தாலும் அது "மெதுவாகவும் மறை முகமாகவும் விருத்தியாகி தலைச் சுற்றலுடன் நரம்புகளைத் தாக்கும் குணம்" கொண்டதாய் இருந்தால் காக்குலஸ் உபயோகமாகும்,

**பலவீனம்; பாரிசவாத நிலைமைகள்: நடுக்கம், மதமதப்பு**:— கைகளிலும் கால்களிலும் உள்ள தசைகளில் பலவீனம். "உடல் முழுவதுமே அதிகச் சோர்வு; சிரமப்பட்டுத் தான் நேராக நிற்க முடியும்; பலமாகப் பேச முடியாது போலத்தோன்றும்" **முதுகெலும்பில் பலவீனம்**. மாதவிடாயின்போது முதுகிலும் கால்களிலும் பாரிசவாதப் பலவீனம் தோன்றி வியாதியஸ்தரால் **நிற்கவே** முடியாமல் **போகும். (அலுமினா, கார்போ அனி).** சிரமப் பட்டுத் தான் பேச முடியும் அல்லது விழுங்கமுடியும். "**தலையை நேராய் நிமிர்த்தி வைத்துக் கொள்ளவோ நிற்கவோ அல்லது பேசுவதற்குக்கூடமுடியாத அளவுக்கு அதிகமான பலவீனம்.**" கால்களில் பாரிசவாதம், இடுப்பிலிருந்து ஆரம்பித்தல். கழுத்துச் சதைகளில் பாரிசவாதப் பலவீனம். தாக்கப் பட்டுள்ள இடங்களை அசைக்க முடியாமை. உடலின் வெளிப்பாகங்களில் மதமதப்பு (கால்கள், கைவிரல்கள். முகம் முதலியவை). பாரிசவாதப் பலவீனத்துடன் சேர்ந்திருக்கும் மதமதப்பு. மதமதப்பு இடம் மாறாமல் இருக்கலாம் அல்லது இடம் மாறவும் கூடும். கை கால்கள் தூங்கிப் போய் விட்டது போல் தோன்றுதல். கை கால்களில் பாரிசவாதத்துடன் வலி இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். தட்டுத் தடுமாறி நடப்பதும் மதமதப்பும்.

கடைசியாகத் தொப்பூழிலும் விசேஷமாக அரையிடுக்கிலும் தோன்றும் குடல் பிதுக்கங்களுக்கு காக்கு

லஸ் முக்கியமான ஔஷதமாகும். அடிவயிற்றுத் தசைகளில் பலவீனம் இருந்தால் நிச்சயமாகக் காக்குலஸ் உபயோகப்படும். அடிவயிற்றுத் தசை வளையத்தில் பாரிசவாதம் ஏற்பட்டிருப்பது போல குடல் பிதுக்கம் கொஞ்சங் கொஞ்சமாக வளரும். அரையிடுக்கில் உண்டாகும் குடல் பிதுக்கத்தில் வலது பக்கம் அதிகமாய் இருக்கும். பிடிவாத குணமுள்ள மலச்சிக்கலுடன் தொப்பூழில் குடல் பிதுங்கிய போது நக்ஸ் வாமிகாவினாலும் குணம் ஏற்படாத கேசுகளைக் காக்குலஸ் குணம் செய்திருக்கிறது.

**கோப குணம்: உணர்ச்சிகள் அதிகரித்தல்**:—உடல், மனம் இரண்டிலும் இருக்கும். எல்லா விஷயங்களையும் குற்றமாக எடுத்துக் கொண்டு கோபப்படுதல். மிக எளிதிலே குற்றம் கண்டு பிடிக்கும் குணம். மறுத்துப் பேசினால் பொறுக்க முடியாது. சிறிதளவு தூக்கம் கெடுதல், சிறிய அதிர்ச்சி, அசைவு, உடல் பிரயாசை, ஓசை, தொடுவது போன்ற அல்ப காரணங்களும் உபாதியை அதிகரித்து விடும். வயிற்று வலியில், ஒவ்வொரு தடவையும் அசையும் போது அடிவயிற்றினுள் கூர்மையான கற்கள் ஒன்றொடொன்று உராய்வது போன்ற உணர்ச்சி. பாதங்களைத் தூக்கினால் மாதவிடாய்ப் போக்கு அருவி போல் குபு குபு வென்று வெளியாகும். பயம், கோபம், வருத்தம் முதலிய எல்லாவிதமான மன உணர்ச்சிகளினாலும் தாக்கப்படும் குணம். மிக எளிதில் திடுக்கிடுதல். சிறிதளவு அதிர்ச்சியையோ அல்லது அசைவையோ தாங்க முடியாது (நிலத்திலும் நீரிலும் பிரயாணம் செய்தல்). தண்ணீரில் அசைந்து செல்லும் படகைக் கண்ணால் பார்த்தால் கூட குமட்டலும் வாந்தியும் உண்டாகும். திறந்த இடங்களில், அவ்விடங்கள் சூடாகவோ, குளிர்ச்சியாகவோ எப்படி இருந்தாலும், ஒத்துக் கொள்வதில்லை.



மெதுவாகத் தொட்டாலும் வலி உண்டாகும் உணர்ச்சி (வாத ரோகம், புண்கள்). சிறிதளவு உடல் சோர்வினாலும் பலம் குறைந்து விடுதல்.

**குமட்டல்: வாந்தி: தலைச் சுற்றல்**:—உபாதி கூடுதல் என்ற தலைப்பைக் கவனிக்கவும். குமட்டலுடன் தலைச் சுற்றல், விசேஷமாகப் படுக்கையிலிருந்து எழுந்தவுடன். இதனால் மீண்டும் கீழே படுத்துக் கொள்ள நேருதல் (டைபாய்டு சுரம்). உணவின் வாசனை பட்டால் குமட்டலும் வெறுப்பும். அடிக்கடி மூர்ச்சை யாகுதல் என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**காலியான, கூடு போன்ற உணர்ச்சிகள்**:-உள் உறுப்புகளிலே (தலை, அடிவயிறு)யும் மற்ற இடங்களிலும் (இக்னேஷியா) காலியாகவும் உள்ளே ஒன்றும் இல்லாமல் கூடாய் இருப்பது போலவும் உணர்ச்சி.

**இழுப்பு**:—"கை கால்களிலும் உடம்பு முழுவதும் இழுப்புகளும் வலிப்புகளும். இவை சில சமயங்களில் புண்களால் அல்லது காயங்களால் தோன்றக் கூடும். புண்ணுள்ள இடங்களைத் தொட்டால் அல்லது உபயோகப் படுத்தினால் வலி அதிகரிக்கும்". தூக்கம் கெட்ட பிறகு வலிப்புகள் தோன்றுதல்.

**மாறி வருதல்**:—கைகளில் மத மதப்பு; ஒரு சமயம் சூடாகவும் மறுசமயம் சில்லென்றும் மாறி மாறி வருதல். உச்சித் தலையில் தலை வலி, அவ்விடத்தில் தலை திறந்து கொண்டும் மூடிக் கொண்டும் இருப்பது போன்ற உணர்ச்சி.

**மாற்றுக் குறிகள்**:—மாதவிடாய்ப் போக்குக்குப் பதிலாக ஏராளமான வெள்ளை ஒழுக்கு அல்லது இடைக் காலங்களில் ஏராளமான வெள்ளை ஒழுக்கு. மாதவிடாய் தடைப்பட்டு மூலைக் கோளாறுகள் தோன்றுதல். வலியுள்ள மாதவிடாய்க்குப் பிறகு மூலம் தோன்றுதல்.

### மற்ற குறிகள்

கருப்பமாய் இருக்கும் போது கருப்பையிலிருந்து இரத்தம் கலந்த சளிப் பொருள் வெளிப்படுதல்.—இரத்தம் போலுள்ள வெள்ளை ஒழுக்கு; மாமிசத்தைக் கழுவிய தண்ணீர் போல் இருக்கும். பின் தலையில் தலை வலி; அவ்விடத்தைக் கீழே வைத்துப் படுக்க முடியாது; பக்கவாட்டில் திரும்பிப் படுக்க நேரும்; பின் பக்கமாகத் தலையை வளைத்தால் சௌகரியமாய் இருக்கும்.

குறிப்புகள் :—வண்டிப்பயணம் செய்யும்போதுதோன்றும் கோளாறுகளைத் தடுக்க வல்லமை உள்ளது (30 வீரியத்தில் உபயோகிக்கலாம்.) பயணம் செய்வதற்கு முன் இரண்டு நாட்களுக்கு, ஒவ்வொரு நாளும் ஒருவேளை வீதம் உட்கொள்ளுவது நல்லது.

---

## காபியா க்ரூடா
## (COFFEA CRUDA)

முன்னுரை :—காபியாவில் உணர்ச்சிகள் மிக அதிகமாகும்.

### பொதுவான குறிகள்

தகுதி :—உயரமாய், ஒல்லியாய், கூன் விழுந்து, கறுத்த உடல் உள்ளவர்களுக்கு ஏற்றது. தைரியமும் முன் கோபமும் உள்ளவர்கள். சிறு குழந்தைகளுக்கும் பல் முளைக்கும் சமயத்திலும் தோன்றும் கோளாறுகள்.

மனம் :—உணர்ச்சிகள் மிக அதிகரித்தல். அல்ப காரணங்களாலும் அளவு கடந்து அழுவதும் ஒப்பாரி வைப்பதும். ஆறுதலான வார்த்தை சொன்னால் பிடிக்காது. புத்திக் கூர்மையும் வாய் ஓயாமல் பேசுவதும்.



ஒரு சமயம் சிரிப்பதும் மறு சமயம் அழுவதுமாக இருப்பார்.

உடல் :—அவசரமாகச் சாப்பிடுவதும் குடிப்பதும் (பெல்லடொன்னா, ஹிப்பார் ஸல்பர்).

உபாதி கூடுதல் :—குளிர்ச்சியான, திறந்த இடங்களில் அதிகமாகும். திடீர் என்று ஏற்படும் மன உணர்ச்சிகளால். அளவு கடந்த சந்தோஷத்தினால். மன உணர்ச்சிகளில் அதிகரிப்பு என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—ஒரு விநோதமான குறி என்னவென்றால், காபியாவின் குறிகள் யாவும் குளிர்ச்சியினால் அதிகமாகும்போது பல்வலி மட்டும் குளிர்ச்சியான தண்ணீரை வாயில் ஊற்றிக் கொள்ளும் போது குறைந்து அந்தத் தண்ணீர் சூடாய் மாறியவுடன் அதிகமாகும். (பிஸ்மத், பிரயோனியா, பல்ஸடில்லா, காஸ்டிகம், ஸேபியா, நேட்ரம் ஸல்ப்).

### விசேஷக் குறிகளின் விளக்கம்

எல்லா உணர்ச்சிகளும் மிகவும் அதிகமாகுதல் :—பார்வை, ஓசை, தொடுதல், சுவை ஆகிய உணர்ச்சிகளை அறியும் சக்தி வழக்கத்தை விட மிகவும் அதிகமாகும். (பெல்லடொன்னா, சாமோமில்லா, ஓபியம்). பார்வை மிகத் தெளிவாய் இருக்கும்; பொடியான எழுத்துக்களை மிகச் சுலபமாகவும் தெளிவாகவும் படிப்பார் அல்லது "இதற்கு முன் எந்த சமயத்திலும் இல்லாத தெளிவுடன் படிப்பார்". ஓசைகளைத் தாங்க முடியாது. "தூரத்தில் உண்டாகும் ஓசைகள் பலமாய்க் கேட்கும்". உடம்பின் மேல் பக்கத்தில் மெதுவாகத் தொட்டாலும் துள்ளிக் குதிப்பார்". சருமத்தில் வலியுள்ள உணர்ச்சி. வலிகள் மிகக் கடுமையாக இருக்கும்; தாங்க முடியாது போல் தோன்றி வியாதியஸ்தர் மனம் தளர்ந்து விடுவார்

(அகோனைட், சாமோமில்லா). வேதனையுடன் புழுவாய்த் துடிப்பார்; வலியினால் பிறருக்குப் பரிதாபம் தோன்றும் படி அழுவார். பலமாகவும் அழவும் செய்யலாம். யோனியிலும் வெளியிலும் காமத்தை உண்டாக்கும் அறிப்புடன் தொட்டால் வலி ஏற்படும். மேக வெட்டை வியாதி இருந்த ஒரு பெண்ணிட மிருந்து இக்குறி உண்மையானது என்பதைக் கண்டு கொண்டேன்.

**மன உணர்ச்சிகளில் அதிகரிப்பு** :—மனம் மிக வேகமாக வேலை செய்தல்; எண்ணங்கள் குவிதல்; யோசனை செய்யும் சக்தி அதிகரித்தல்; வெளியில் நடக்கும் விஷயங்கள் யாவும் பலமாக உணரப்படுதல். "மனதில் எண்ணங்கள் குவிந்து விடும், காரியங்களைச் செய்யத் துடி துடிப்பு, இதனால் தூக்கம் வராமை". மனதில் பற்பல எண்ணங்களும் யோசனைகளும் தோன்றுவதால் தூங்க முடியாமல் போகும். இச்சமயத்தில் தேவையானது படுக்கைக்குப் போவதற்கு முன் காபியா 200-ல் ஒரு வேளை ஔஷதம் தான். அல்பமான அசைவையும் அறியும் சக்தி; இதனால் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடப்பது அதற்குப் பிடிக்காது. திடீரென்று தோன்றும் மன உணர்ச்சிகளால் விசேஷமாகத் திடீரென்று சந்தோஷச் செய்தி கேட்பது சில சமயங்களில் ஆபத்தாக முடியலாம்.

## மற்ற குறிகள்

சின்னம்மைக்குப் பிறகு ஏற்படும் இருமலும் தூக்கம் இல்லாமையும்.—அறிப்பு, இரத்தம் வரும் வரை சொறிந்து விடுவார். நீண்ட தூரம் பயணம் செய்த பிறகு, விசேஷமாகக் கோடைக் காலங்களில், ஏற்படும் அதிகக் களைப்பைப் போக்குகிறது.

**உறவு** :—காபியா க்ரூடாவுக்குப் பிறகு கந்தாரிஸ், காஸ்டிகம், காக்குலஸ், இக்னேஷியா ஆகியவைகளை உபயோகிக்கக் கூடாது.

---



# கோல்சிகம்
## (COLCHICUM)

முன்னுரை ;—கீல்வாதம், வாதரோகம், ஆகிய வியாதிகளுக்கு மிகவும் உபயோக முள்ளது. எலும்பு மூட்டுகளிலும் விசேஷமாகச் சிறிய எலும்பு மூட்டுகளில், தசைகளிலும், இருதயத்திலும் சீரண உறுப்புகளிலும் தோன்றும் கோளாறுகளுக்கு மிகச் சிறந்தது.

**கோல்சிகம்** வியாதியஸ்தருக்கு உடம்பில் குளிரும் உணர்ச்சி, ஒளி, ஓசை, வாசனை முதலிய வெளி விஷயங்களில் உணர்ச்சி அதிகரித்தல், முன்கோபம், தளர்ச்சி, நீர்ச் சுரப்பு வீக்கம், பானைபோல் அடிவயிறு உப்புதல், கடுமையான வலிகள், கடுகடுப்பு, தொடுவதினாலும் அசைவினாலும் உபாதி மிகவும் கூடுதலாகுதல் ஆகியவை காணப்படும்.

## பொதுவான குறிகள்

தகுதி:— கீல் வாயு, வாதரோகம் இவை சம்பந்தப்பட்ட வியாதிகள் உள்ளவர்கள்; கிழவர்களுக்கு ஏற்படும் கோளாறுகள்; காச வியாதி உள்ளவர்கள்; **உறுதியான உடலும் நல்ல பருவமும் உள்ளவர்களுக்குத் தோன்றும் கீல்வாயு.**

மனம்:— அதிக மனச் சோர்வு. எல்லா விஷயங்களிலும் அதிருப்தி. **அளவு மீறி உணர்ச்சிகள் அதிகரித்தல்** என்னும் தலைப்பைக் கவனிக்கவும்.

உடல்:— கை கால்களில் முடமான உணர்ச்சியுடன் அதிகப் பலவீனம். ஓய்வு எடுத்துக்கொண்டு கீழே படுத்துக்கொள்ள நேரும். முகம் அளவு மீறி வெளுப்பாய் மாறுதல், முகத்தில் மஞ்சள் நிறமுள்ள புள்ளிகள். உதடுகளில் வெடிப்பு. இடது பக்கமாய்ப் படுக்க முடியாது. மூத்திரம் சிவந்த நிறமாகவும் அளவு குறைந்தும் இருக்கும். உடம்பு முழுவதும் பொதுவான நீர்ச் சுரப்பு.

**உபாதி கூடுதல்:—** அசைவினால் அதிகமாகும். அசை வில் வெறுப்பு. குளிர் உள்ள, ஈரக் கசிவுள்ள பருவ காலங்களில் கூடுதலாகும். வியாதியஸ்தருக்கு உடம்பில் குளிரும் உணர்ச்சியும் குளிர் காற்று ஒத்துக் கொள்ளா மையும். பருவநிலை மாறுதல்களால் கூடுதல், கடுமை யான வெய்யில் சூட்டினாலும் அதிகரிக்கும்.

**உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—** வலியும் மற்ற கோளாறுகளும் அசைவினால் மிகவும் அதிக மாவதால் வியாதியஸ்தர் அசைவைக்கண்டு பயப்படுவார் (பிரயோனியா). வலியுள்ள இடங்களைத் தொட்டால் மிக அதிகமான வலி உண்டாகும். கீல் வாயுவில் "எலும்பு மூட்டைத் தொட்டால் அல்லது கால்விரல்தடுக்கி விட்டால் கடுமையான வலி கண்டு அலறுவார்" சில குறிகள் மாலையி லிருந்து விடியற் காலைவரை அதிகமாய் இருக்கும். வருத் தத்தினாலும் பிறர் தவறாக நடந்து கொண்டாலும் தோன் றும் கோளாறுகள். பாதங்களில் ஏற்படும் வியர்வை யைத் தடை செய்ததால் உண்டாகும் வியாதிகள்.

**உபாதி குறைதல்:—** சூட்டினால், ஆனால் சூடுள்ள இடங்களில் இருக்கும்போது உணர்ச்சி தோன்றக்கூடும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**அளவு மீறி உணர்ச்சிகள் அதிகரித்தல்:—** வெளியில் நடக்கும் அல்பமான விஷயங்கள் கூட (ஒளி, ஓசை, வாசனை, பிறருடைய பிசகான நடத்தை) வேதனையை உண்டாக்கும் அல்லது பைத்தியம் பிடித்து விட்டது என்று நினைக்குமளவுக்குக் கோப வெறியைத் தோன் றச் செய்யும். மெதுவாகத் தொட்டாலும் தாங்க முடி யாது (யாராவது அவர் அருகே வந்தால் பயப்படுவார்). சிறிதளவு அசைவையும் பொறுக்க முடியாது. சிறி தளவு அதிர்ச்சியும் (வியாதியஸ்தர் படுத்திருக்கும் இடத் தில் நடக்கும்போது உண்டாகும் அதிர்ச்சி கூட) வலி யைப் பொறுக்க முடியாத அளவுக்கு அதிகரிக்கும். வாசனைகள் பிடிக்காது. சமையல் அறையிலிருந்து வரும் வாசனை மயக்கத்தை உண்டாக்கும் அளவு கடுமையான குமட்டலை உண்டு பண்ணலாம். முக்கியமாக மீன், முட்டை, பன்றி மாமிசம் அல்லது கொழுப்புச் சத்து உள்ள மாமி சம் ஆகியவைகளைச் சமைக்கும்போது ஏற்படும் வாசனை (ஆர்ஸனிகம், ஸேபியா). கடுமையான வலிகளையும் கடுமை யான வெறுப்புக் குணத்தையும் அளவு மீறி உணர்ச்சி கள் அதிகரித்தல் என்று கணக்கிடலாமாயினும் தனித் தனியாகவே குறிப்பிட விரும்புகிறேன். மனம் என்னும் தலைப்பையும் பார்க்கவும்.



**வலி உணர்ச்சி அதிகமாகுதல்: கடுமைக் குணம்:—** வாத ரோகம், வயிற்றுக் கடுப்பு ஆகிய வியாதிகளில் காணப்படுவது போன்ற வலிகள் அளவு மீறிக் கடுமை யாகவும் தாங்க முடியாமலும் ஆகும். அளவு மீறிய வலி யுடன் மலம் வெளிப்படும். கீல்வாயு வலியினால் அவ் விடங்களைத் தொட்டால் வியாதியஸ்தர் கதறி அழு வார். மலம் கழிக்கும்போது மலப்பையின் வட்டத்தசை துண்டு துண்டாகக் கிழிந்து போய் விட்டது போல் தோன்றும், "சிறிய துன்பமும் கடுமையான வலியைத் தரும்." வலிகள் கிழிப்பது போலவும் தோண்டுவது போலவும் இழுப்பது போலவும் இருக்கும். பக லில் சூடாகவும் இரவில் குளிர்ச்சி யாகவும் உள்ள பருவக் காலங்களில் வெண்மையான சளிக கழிவுடனும் கடுமையான கடுகடுப்புடனும் ஏற்படும் வயிற்றுக்கடுப்பு. மலப்பையின் வளையத் தசையில் கடுமையான இழுப்பு வலியுள்ள வயிற்றுக்கடுப்பு. வயிற்

றுக் கடுப்பில் கடுமையான கடுகடுப்புக்குப் பிறகு மலப்பை வளையத் தசையில் இழுப்புடன் உள்ள வலி ஏற்பட்டால் அல்லது ஆசன வாயில் இறுக்கிய உணர்ச்சி உண்டானால் அதற்கு கோல்சிகம் அனேகமாக ஏற்றதாய் இருக்கும். "கடுமையான சுருட்டிப் பிடிக்கும் வலிகளுடன் வயிற்றுப் போக்கு." இருதயம் கடுமையாய்த் துடித்தல். "வியாதியஸ்தர் இருக்கும் அறை முழுவதும் இருதயத் துடிப்பின் ஓசை கேட்கும்." அபான வாயுவுடன் அடிவயிறு மிகவும் அதிகமாக உப்பி இருத்தல் (டைபாய்டில் இருப்பது போல்); அடிவயிறு வெடித்து விடும் போல் தோன்றும்.

கடுமையான வெறுப்பு:— உணவில் அளவு கடந்த வெறுப்பு. உணவைக் கண்ணால் பார்த்தாலும் வெறுப்பு; அதன் வாசனை பட்டால் வெறுப்பு மேலும் அதிகமாகும். உணவு என்ற பேச்சை எடுத்தாலே வியாதியஸ்தருக்குத் தொண்டையை அடைக்கும். இவ்விதமான அளவு கடந்த வெறுப்புடன் கடுமையான குமட்டலும் வாந்தியும்.

அளவு கடந்த தளர்ச்சி:— எல்லாத் தசைகளிலும் அதிகத் தளர்ச்சி. தலை முன் பக்கமாக மார்பின் மேல் விழுதல் அல்லது டைபாய்டில் இருப்பது போல பின் பக்கமாகத் தலை சாய்தல். எவ்வளவு தடவை சரியாய்த் தலையணையில் பொருத்தி வைத்தாலும் மீண்டும் மீண்டும் தலை பின் பக்கம் சாய்ந்து விடும். வாய் விரியத் திறந்து கொள்ளும். மலம் (அடிக்கடியும், தண்ணீர் போலவும்) தானாகவே வெளிப்படும். தானாகவே வெளிப்படும் ஏராளமான மூத்திரம் (அடக்கப் பட்டும் போகலாம்).

அளவு மீறிய க்ஷீணம்:—கோல்சிகம் வியாதிகள் பலவற்றில் அதிக க்ஷீணம் உண்டாகிறது. விசேஷமாக



டைபாய்டு சுரத்திலும் டைபாய்டு நிலைமைகளிலும், அதிக க்ஷீணம். பிணம் போல் முகக்களை மாறுதல், தசைகளில் இழுப்பு, கடைசியாக அரிசிக் கஞ்சி போன்ற மலம் ஆகிய இக்குறிகள் யாவும் ஒன்று சேர்ந்து காணப்படும் காலரா வியாதியைச் சில சமயங்களில் கோல்சிகம் குணம் செய்திருக்கிறது.

சில்லிப்பு உணர்ச்சி:— வயிற்றில் பனிக்கட்டி இருப்பது போல் சில்லிப்பு. கைகால்கள் சில்லென்றிருத்தல். மூச்சுக் காற்று குளிர்ச்சியாய் இருக்கும். நெற்றியில் குளிர்ந்த வியர்வை (வெராட்ரம் ஆல்பம்). கை கால்கள் சில்லென்றும் அடி வயிறு சூடாகவும் இருக்கும். இக் குறிகள் யாவும் டைபாய்டு சுரத்தில் காணப்படும். ஏராளமான, குளிர்ச்சியான வியர்வை.

எரிச்சல்:— அடி வயிறு முதலிய பொந்துகள் போல் உள்ள உள் உறுப்புகளில். கோல்சிகத்தின் எரிச்சல் கடுமையான குளிரும் உணர்ச்சியாகவும் இருக்கலாம். இவ்விரு உணர்ச்சிகளும் ஒன்றுக்கொன்று வேற்றுமை கண்டு பிடிக்க முடியாமல் போகலாம்.

நிலைத்து நிற்காத குணம்:—வாத ரோகத்தில் வலிகள் அலை மோதுவது போல் பல இடங்களிலும் பரவி ஒரு இடத்திலும் நிலைத்து நிற்காமல் இருக்கும். இல் வாயுவிலும் வாதரோகத்திலும் வலிகள் இடமிருந்து வலம் போகும். தலைவலியில் வலி வலமிருந்து இடம் செல்லும்.

நீர்ச்சுரப்பு நிலைமைகள்:—கோல்சிகத்தில் உடம்பு முழுவதும் பொதுவான நீர்ச்சுரப்பு காணப்படும். முகத்தில் நீர்ச்சுரப்பு உள்ள வீக்கம், அடிவயிற்றில் நீர்ச்சுரப்புள்ள வீக்கம் (பிறப்பு உறுப்புக்கு மேலுள்ள மயிர்ப்பாகத்தில் ஒரு மடிப்புடன்), மார்பு, இருதய உறை, சுவாச கோச உறை ஆகியவைகளில் நீர்ச்சுரப்பு.

கறுப்பு நிறம் :—மூத்திரம் கறும்பழுப்பு நிறமாகவும் அளவு குறைந்தும் இருக்கும் அல்லது எழுதும் கறுப்பு மை போல் மிகக் கறுப்பாகவும் ஏராளமான முட்டைச்சத்துக் கலந்தும் இருக்கலாம். மூக்குத்துவாரங்கள் காய்ந்தும் சுறுத்தும் இருக்கும்.

மாறித் தோன்றுதல் :—வயிற்றுப் போக்குக்குப் பிறகு கீல் வாயுக் குறிகள் தோன்றும். "கீல் வாயுவுடன் சம்பந்தப்பட்ட நீரிழிவு, மூத்திரத்தில் சர்க்கரை மறைந்தவுடன் யூரிக் ஆஸிட் (Uric Acid) என்று அழைக்கப்படும் புளிச் சத்து தோன்றும்". கை கால்களில் இருந்த வாத ரோகம் மறைந்தவுடன் இருதயம் தாக்கப்பட்டு (இருதயத் தசை மூடிக் கோளாறு அல்லது இருதய உறை வேக்காடு) மார்பில் கடுமையான வலிகளும் இருதயம் துணியினால் இறுக்கிக் கட்டிப் பிழியப்படுவது போல் தோன்றுவதும். இந்தக் குறியிலும் கோல்சிகத்தின் விசேஷக் குறியான கடுமையைக் கவனிக்கவும்.

## மற்ற குறிகள்

வயிற்றுக் கடுப்பில்:—மலம் பாகு போன்ற சளிப் பொருள்களுடன் இருக்கும். வெண்மையாகவும் அல்லது இரத்தம் கலந்தும் குடல்களின் உட்புறச் சவ்வுகள் தருவி எடுக்கப்பட்டது போலவும் உள்ள போக்கு. வலது கையில் நடுக்கத்தினால் எழுத முடியாமை. பல இடங்களில் பனியினால் உறைந்து விட்டால் ஏற்படுவது போன்ற மெதுவான குத்து வலிகள்.

உறவு:—லைகபோடியத்துக்குப் பிறகு நன்றாக வேலை செய்கிறது. கோல்சிகத்துக்குப் பின் (அடிவயிற்று நீர்ச் சுரப்பில்) கார்போ வெஜி. நன்றாய் வேலை செய்யும். தூஜாவை முறிக்கிறது.

ஒப்பிடுதல் :—இருதயத்துக்கு வியாதி தாவுவதில் காக்டஸ், அப்ரொடேனம் ஆகியவைகளுடன். கீல் வாதம், ஊனீர்ச் சுரப்புள்ள வாத ரோகம், அசைவினால் வலிகள் மிகவும் அதிகமாகுதல் ஆகியவைகளில் பிரயோனியாவுடன். கறுப்பு நிறமுள்ள மூத்திரத்தில் லைகபோடியத்துடன்.



குறிப்பு :—அபிஸ், ஆர்ஸனிகம் இவைகளால் குணம் ஆகாத நீர்ச் சுரப்பு வியாதியைப் பல சமயங்களிலும் கோல்சிகம் குணம் செய்கிறது.

---

# காலோஸிந்த்
## (COLOCYNTH)

முன்னுரை :—கடுமையான இறுக்கிப் பிடிக்கும், வெட்டும் வலிகள், உடலை முன்பக்கமாய் இரண்டாக வளைத்தாலும் இறுக அமுக்கினாலும் வலிகள் குறைதல் ஆகியவை இவ் வௌஷதத்தின் மிக முக்கிய குறிகளாகும்.

## பொதுவான குறிகள்

தகுதி :—கோபம் ஏற்படும் குணம் உள்ளவர்கள்; "மனக் கசப்பு, அவமரியாதையினால் மனம் புழுங்குதல் ஆகியவைகளால் தோன்றும் கோளாறு உள்ளவர்கள்". ஏராளமான மாதவிடாய்ப் போக்குள்ள பெண்கள். சாதாரணமான போதை தரும் பானங்களைக் (பீர் குடித்தல்) குடித்தால் கூட குடி மயக்கம் தோன்றும் உடல்வாகு உள்ளவர்கள்; "பழங்கள், காரிய விஷம் அல்லது சிற்றின்பத்தில் அளவு மீறி ஈடுபடுதல் ஆகிய காரணங்களால் தசைகளில் இழுப்பும் வயிற்று வலியும் உண்டாகும் உடலுள்ளவர்கள்".

மனம் :—பிறருடன் பேச வெறுப்பு: கேள்விகளுக்குப் பதில் சொல்ல விரும்பாமை. அளவு கடந்த ஆத்திரம்; பொறுமை இல்லாமை. கேள்வி கேட்டால் கோபம் கொள்வார். கையில் இருக்கும் பொருள்களை

வெளியே தூக்கி எறியும் வினோதமான ஆத்திர குணம்.

உடல் :—உடலின் ஒரு பக்கத்தில் கீழேயோ அல்லது மேல் புறமோ வலிகள். எல்லா எலும்பு மூட்டுகளிலும் பிடிப்பு. வலிகளுடன் விரைப்பு பல சமயங்களிலும் சேர்ந்திருக்கும். வியர்வை மூத்திர நாற்றம் வீசும். உடம்பினுள்ளே துடிப்புகள், உருளைக்கிழங்கும் அது போல் கஞ்சிப் பொருள் நிறைந்த உணவுகளும் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்வதில்லை.

**உபாதி கூடுதல் :—மன உணர்ச்சிகளால் : வேதனை.** கோபம், தாபம், வருத்தம்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—வருத்தம், மனத் தாங்கல் ஆகியவைகளால் வயிற்றுப் போக்கு. மனத் தாங்கலினால் வயிற்று வலி அல்லது குழந்தை பிறந்த பிறகு தோன்றும் ஒழுக்கு தடைப்படுதல்' ஓய்வாய் இருந்தால் வலிகள் அதிகமாகும். சிறிதளவு உணவோ, அல்லது தண்ணீரோ உட் கொண்டாலும் ஒவ்வொரு தடவையும் தவறாமல் மலம் வெளிப்படும் குணமுள்ள வயிற்றுக் கடுப்பு. வயிற்று வலி, வலி ஆகியவை மாலை 4 மணிக்குத் தோன்றும் (லைகபோடியம், ஹெல்லபோரஸ், காஸ்டிகம்). உருளைக் கிழங்கு தின்றதால் உண்டாகும் வயிற்று வலி.

**உபாதி குறைதல் :—**(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—வயிற்று வலி, நரம்பு வலி, தொடை நரம்பு வாதம் ஆகியவை இறுக அமுக்கினால் குறையும். உடலை இரண்டாக வளைத்தால் வயிற்று வலி குறையும். உண்மையைச் சொல்லுமிடத்து வயிற்றுவலியே வியாதியஸ்தரை அவர் உடலை இரண்டாய் வளைக்கும்படிச் செய்துவிடும். அப்படிச் செய்வதால் சௌகரியம் ஏற்படுகிறது. மேஜையின் மூலை, கட்டில் கால்களின் மேல் குமிழ் இவை போன்ற எதையாவது அடிவயிற்றில் இறுக அமுக்கி வலி குறையும் வழியைத்



தேடுவார். சூட்டினால் வலிகள் குறையும். வயிற்றுக் கடுப்பில் மலம் கழிக்கும் போது அதிகமாய் முக்கவேண்டியிருப்பதும் ஆசன வாயில் எரிச்சலும். இவை மலம் கழித்த பிறகும் படுக்கைச் சூட்டினாலும் சிறிது நேரத்துக்குக் குறைவாய் இருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**திடீரென்று தோன்றுதல் : கடுமையாய் இருத்தல் : இறுக்கிப் பிடித்தல்; விட்டு விட்டு வருதல் :**—காலோஸிந்திஸின் வலிகள் மேலே குறிப்பிட்டுள்ள நான்குவித இலட்சணங்கள் கொண்டவையாய் இருக்கும். வலிகள் அனேகமாக நரம்பு சம்பந்தமுள்ளவையாகவும் திடீரென்று தோன்றி சிறிது நேரம் கழித்துத் தோன்றியது போலவே திடீரென்று மறையும் குணமுள்ளவையாகவும் இருக்கும். இது தவிர அவ்வலிகள் (வயிற்று வலியில் இருப்பது போல்) விட்டு விட்டு ஏற்பட்டு ஒவ்வொரு தடவையும் அதற்கு முன் இருந்ததை விட அதிகமான வலியுடன் இருக்கும். திடீரென்று மிகக் கடுமையாக, இழுக்கும், இறுக்கிப் பிடிக்கும், கிழிக்கும், வெட்டும் வலிகள் தோன்றி அவ்வலிகளை அடக்குவதற்காக வியாதியஸ்தர் உடலை முறிப்பார், நெளிப்பார், துடிப்பார், வலியினால் கோவென்று கதறுவார். தொடை நரம்பு வேக்காட்டில் "வலிகள் திடீரென்று தோன்றி இடைவிடாமல் இருக்கும், கொஞ்சங் கொஞ்சமாகப் பொறுக்க முடியாத அளவுக்கு அதிகரிக்கும்" வலிகளுடன் வயிற்றுப் போக்கு, குமட்டல், வாந்தி, நிலை கொள்ளாமை ஆகியவைகளும் இருக்கும். வலியின் கடுமையினால் மயக்கமும் தோன்றலாம். வலியினால் வியாதியஸ்தர் கதறுவார். வயிற்றுக் கடுப்பில் மலம் கழிக்கும் போது பயங்கரமான கடு கடுப்பு. வலியின் கடுமை அதிகமாக ஆக குமட்டலும் அதிகரித்து வாந்தி

யில் முடியும். முகத்தில் வலி, விழித் திரை வேக்காடு, விழி வேக்காடு, தொடை நரம்பு வேக்காடு, சினைப்பை வேக்காடு ஆகிய வியாதிகளில் காலோஸிந்திஸின் நரம்பு வலிகள் எவ்வளவு கடுமையாய் இருக்கு மென்பதை நாம் அறியலாம். காலோஸிந்திஸின் வலிகளில் அமுக்கினால் முதலில் சௌகரியம் ஏற்பட்டாலும் பிறகு அமுக்குவதினால் அசௌகரியமே தோன்றும். காலோஸிந்திஸின் வலி தனியாகவும் தோன்றலாம், வயிற்றுக் கடுப்பு. காலரா போன்ற வியாதிகளுடன் சேர்ந்தும் தோன்றலாம்.

**குழ குழப்பு : பாகு போல் :**—வயிற்றுக் கடுப்பில் மலம் இரத்தம் கலந்தும், குழ குழப்பாகவும், துருவியது போலவும் கடு கடுப்புடனும் வெளிப்படும்; மலம் கழித்த பிறகு சௌகரியமாய் இருத்தல் (கந்தாரிஸ்). நாற்றமுள்ள மூத்திரம், மிகச் சீக்கிரத்தில் கெட்டியாகவும் பாகு போலவும் மாறும்.

**இடது பக்கமே அதிகம் தாக்கப்படுதல் :**—பொதுவாக இடது பக்கம் அதிகமாகத் தாக்கப்படும். பொதுவாக வலது பக்கத்தில் வியாதிகள் தோன்று மென்று க்ளார்க் கூறுகிறார். காதுகள் இரண்டிலும், விசேஷமாக இடது காதில் இடைவிடாமல் ஓசையும் துடிப்பும். முகத்தின் இடது பக்கத்தில் வலி. இடது கன்ன எலும்பில் இறுக்கும் அமுக்கும் உணர்ச்சி, இடது கண் வரை பரவி இருக்கும். வலது தொடை நரம்பில் வேக்காடு (க்னாபாலியம்). இடது சினைப் பையில் வலி, பலமாக நசுக்கப்படும் உணர்ச்சி; போக்கு வெளிவர ஆரம்பித்த உடனே வலி குறையும்.

## மற்ற குறிகள்

"தொடை நரம்பில் இழுக்கும் வலி, இடுப்புக்குக்



கீழே தொடையின் பின் பாகம் முழுவதும் வலி; இறுக அமுக்கினாலும் சூட்டினாலும் குறையும்; ஓய்வாய் இருக்கும் போது மிகக் கடுமையாகி வியாதியஸ்தருக்குத் தைரியம் குலைந்து விடும்".—"கடுமையாகவும் முறை வைத்தும் அல்லது விட்டு விட்டு வரும் தலை வலி".—வயிற்று வலியில் குடல்கள் கற்களுக்கு நடுவில் வைத்து நசுக்கப்படுவது போல் தோன்றும்.—கடுமையான, விட்டு விட்டுத் தோன்றும் வலியுடன் மாதவிடாய், பலமாய் அமுக்கினாலும் சூட்டினாலும் வலி குறையும்; அளவு மீறிய குமட்டலும் வாந்தியும் பாதங்களில் சில்லிப்பும் (இக்குறிகள் மாதவிடாய் ஏற்படுவதற்குப் பல நாட்களுக்கு முன்னதாகவே தோன்றக் கூடும்). அரை யிருக்குகளில் ஏற்படும் குடல் பிதுக்கம். ஸ்தனங்களில் வலியுள்ள முண்டுகள். இரவில் அடிக்கடி தோன்றும் காச வியாதி.

**உறவு :**—காலோஸிந்திசுக்குப் பின் ஸ்டாபிஸாக்ரியாவும் சாமோமில்லாவும் நன்றாக வேலை செய்யும். மெர்கூரியஸ் முன்னும் பிறகும் உபயோகப்படும் (அதிக கடு கடுப்புள்ள வயிற்றுக் கடுப்பு).

**ஒப்பிடுதல் :**—காலோஸிந்திஸை அனேகமாக பிரயோனியா ஒத்திருக்கிறது. டயஸ்கோரியாவின் வயிற்று வலியும் அமுக்கினால் குறையு மென்றாலும் முன்பக்கமாக உடலை வளைத்தாலும் பின்பக்கமாய் வளைத்தாலும் அதிகரிக்கும். க்னாபாலியத்தின் வலிகள் மத மதப்புடன் மாறி மாறி வரும், உட்கார்ந்தால் குறையும், அனேகமாக வலது பக்கத்தையே தாக்கும். மனக் கசப்புக்கு மற்றொரு ஔஷதமாகிய ஸ்டாபிஸாக்ரியா, வெறுப்பை உள்ளேயே அடக்கியதாலும் வருத்தத்தை மனதுக்குள்ளேயே வைத்திருந்ததாலும் ஏற்படும் கோளாறுகளுக்கு ஏற்றது. பற்களின் நுனியில் கறுப்பு நிறம் படிவதும் சொத்தை விழுவதும் ஆகிய கோளாறுக்கு ஸ்டாபிஸாக்ரியா மிக ஏற்றது.

குறிப்பு :—உபயோகித்த மறுகணமே இவ் வௌஷதம் குணம் அளிக்கிறது. மிக வேகமாக வேலை செய்யும் ஔஷதங்களில் இதுவும் ஒன்று என்று சொல்லலாம்.

---

## கோனியம் மெகுலேட்டம்
## (CONIUM MACULATUM)

முன்னுரை :—நாட்பட்ட, கல் போல் கடினமான வீக்கங்களில், விசேஷமாக அவை சுரப்பிகளைப் பற்றியதாகவும் அல்லது காயங்களினால் ஏற்பட்டதாகவும் இருந்தால் இது மிகவும் உபயோகமுள்ளது. பலவீனம் (மனதிலும் உடலிலும்,) மேலே பரவும் பாரிச வாதம், கல் போல் கடினமான வீக்கம், தலைச் சுற்றல் ஆகியவை இவ் வௌஷதத்தின் மிக முக்கியமான குறிகள். ஆழ்ந்தும், பல நாட்கள் நீடித்தும் வேலை செய்யும். ஸோரா விஷத்தை நீக்கும்.

### பொதுவான குறிகள்

தகுதி :—கிழவர்கள்; பலவீன முள்ள கிழவர்கள். மணம் செய்து கொள்ளாமல் பிரும்மசாரிகளாகவும் கன்னிகைகளாகவும் வாழ் நாளைக் கழித்த ஆண் பெண்கள்; லேசான மயிர் வளர்ச்சி யுள்ளவர்கள்; அல்ப காரணங்களாலும் உணர்ச்சி வசப்படுகிறவர்கள்; மாதவிடாயில் குறைவான போக்கு உள்ள பெண்கள்; சுரப்பிகளில் வீக்கத்துடன் க்ஷயம் தோன்றக் கூடிய உடல்வாகு உள்ளவர்கள்; புற்று வியாதி உண்டாகும் உடல்வாகு உள்ளவர்கள்; இளவயதிலேயே கிழவர்களாக ஆகிவிடுதல்; சுவாச கோச க்ஷயம் உள்ளவர்கள் ஆகியவர்களுக்குத் தகுந்தது. (எதிர்க் குணமுள்ள குறிகள் என்னும் தலைப்பைக் கவனிக்கவும்).

மனம் :—மனதில் வேகம் இல்லாமை. அறிவுத் திறமையும் ஞாபகச் சக்தியும் குறைந்து விடுதல். வேலை



செய்யவோ, படிக்கவோ விருப்பம் இல்லாமை. மந்தகுணம், அலட்சியம், கோழைத்தனம். அல்ப காரணங்களாலும் மன வேதனைப்படுதல்; எதிர்த்துப் பேசுவதைப் பொறுக்க முடியாது. தனியாய் இருக்கப் பயம் இருந்தாலும் பிறருடன் சேர்ந்திருப்பதை விலக்குவார் (காலி கார்ப்; லைகபோடியம்). ஏக்கம்.

உடல் :—சக்திக் குறைவும் நரம்புப் பலவீனமும். கை விரல்களில் மஞ்சளான புள்ளிகள்; நகங்கள் மஞ்சளாய் இருக்கும். மண்டைத் தோலில் மத மதப்பு. தூங்கும் போது ஏராளமாக வியர்வை உற்பத்தியாகுதல். நடக்கும் போது திடீரென்று பலம் குறைந்து விடும். படுத்தாலும் படுக்கையில் திரும்பினாலும் தலைச் சுற்றல். காதுக் குறும்பி குழ குழ வென்று இருக்கும். சாராயம் கலந்த பானங்களைக் கொஞ்சமாய்க் குடித்தாலும் மயக்கம் ஏற்படுதல்.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே). கோபத்தினாலும் மனக்கசப்பினாலும் தோன்றும் கோளாறுகள். "அடிபடுதல், அளவு மீறி வேலை செய்தல் முதலிய காரணங்களால் (ஆனால் குறிப்பாக எச்தக் காரணம் என்பது மறந்துபோய் இருக்கலாம்)" சுரப்பிகளில் வியாதி உண்டாகுதல். சிற்றின்ப ஆசையை அடக்கியதால் அல்லது அளவு மீறி ஈடுபட்டதினால் ஏற்படும் கோளாறுகள். மாதவிடாய் தடைப்பட்டதால் உண்டாகும் கோளாறுகள். பெரும்பாலான குறிகள் வியாதியஸ்தர் ஓய்வாய் இருக்கும் போது, விசேஷமாக இரவில், ஆரம்பிக்கும். குளிர்ந்த தண்ணீரில் கைகளை நனைத்ததால் மாதவிடாய் தடைப்படுதல். (லாக். டிப்.) "முது கெலும்பில் அடிபட்டதாலும் அதிர்ச்சி தாக்கியதாலும். உண்டாகும் கோளாறுகள். கண்களில் அடிபட்டதால் ஏற்படும் கெட்ட சதை வளர்ச்சி.

உபாதி குறைதல்:—வியாதியஸ்தரின் உபாதிகள் வியாதி யுள்ள கால்களைக் கீழே தொங்கவிட்டால் சௌகரியமாகும்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

வளரும் பலவீனம் (மனம், உடல் இரண்டிலும்:)—கிழவயது, மானியைக் கைகளால் குலுக்கிச் சிற்றின்பப் பெறுதல், அளவுமீறிச் சிற்றின்பத்தில் ஈடுபடுதல், டிப்தீரியா, டைபாய்டு போன்ற கடுமையான வியாதிகளின் விளைவுகள், ஆகிய காரணங்களால் ஏற்படும் பலவீனப் நாளுக்கு நாள் வளர்ந்து பாரிசவாத நிலைமையை உண்டாக்கும். இப்பாரிசவாத நிலைமை இவ்வௌஷதத்தின் மிக முக்கியமான குறியை (கீழிருந்து மேலே பரவும் குணம்) அனுசரித்துப் பல சமயங்களிலும் கீழே இருந்து மேலே பரவும்.—உடலின் கீழ்ப் பக்கமே முதலில் தாக்கப்படும். பிறகுதான் மேல்ப் பக்கம். திடீர் என்று தோன்றும் முது கெலும்புப் பாரிச வாதம் மேலே பரவும். (ஸாக்ரெடிஸ் என்னும் கிரேக்க நாட்டு அறிஞர் ஒருவரை இவ்வௌஷதத்தினால் தான் விஷமிட்டுக் கொலை செய்தனர் அந்நாட்டு அதிகாரிகள்) பாரிசவாத நிலைமை முடிவில் பாரிசவாதமாக மாறும். இயக்குத் தசைகளில் பொதுவான பாரிசவாதம். கால்களில் பலவீனமும் தட்டுத்தடுமாறி நடத்தலும். நடந்து கொண்டிருக்கும் போது திடீரென்று பலம் குறைந்து விடுதல். உடலில் நடுக்கத்துடன் பலவீனம். நடுக்கத்துடன் பார்வை. அசையும் பொருள்களைப் பார்க்க முடியாது. (கண் தசைகளின் பலவீனத்தினால் தேவையான அளவு வேகத்துடன் குறி வைத்துப் பார்க்க முடியாது). சிரமப்பட்டு இவ்விதம் பார்த்ததால் ஏற்படும் களைப்பு, குமட்டல், தலைவலி; மனக் கோளாறுகளும் உண்டாக



லாம். விழுங்குவது மிகவும் சிரமமாய் இருக்கும் அல்லது விழுங்கவே முடியாது (உணவு மார்பில் சிக்கிக் கொண்டு மிகச் சிரமப்பட்டு விழுங்க நேருதல்). சுவாச கோச க்ஷயத்தில் இளகியிருக்கும் கோழையை வெளியே துப்பமுடியாது; விழுங்கவேண்டிவரும் (ஆர்னிகா, காஸ்டிகம்). ஆண்களின் பிறப்பு உறுப்புகளிலும் இவ்விதமான பாரிசவாத நிலைமை காணப்படும். மலம் கழிக்கும் போதும், மன உணர்ச்சிகளில் அதிகரிப்பு உண்டாகும் போதும் சுக்கிலத் தண்ணீர் ஒழுகுதல் (தானாகவே வெளிப்படும், காம உணர்ச்சியால் அல்ல). ஆண் தன்மைக் குறைவு; மானி போதுமான அளவு விரைப்பதில்லை அல்லது கொஞ்சங்கூட விரைப்பதில்லை. புணர்ச்சி செய்யும் போது வேகம் இருப்பதில்லை. பெண்களின் எதிரே நின்றாலும் இந்திரியம் நழுவுதல். மலம் கழிக்க முக்க முடியாது. "மலம் கழித்த பிறகு ஒவ்வொரு தடவையும் நடுக்கத்துடன் பலவீனமும் இருதயத்தில் படபடப்பும்." மூத்திரம் திடீரென்று நின்று விடும்; சில விநாடிகளுக்கு வெளியாகாமல் இருக்கும். மூத்திரம் கழிக்க அதிகச் சிரமம்; முதலில் முழுத்தாரையாக வெளியாகும்; பிறகு நிற்கும், மறுபடி வெளியாகும் அதாவது விட்டு விட்டு வெளிப்படும்.

விஷயங்களைத் தாமதமாய்ப் புரிந்து கொள்ளுதல். எந்த விஷயத்திலும் மனதைச் செலுத்த முடியாமை. நாளடைவில் பைத்தியம் பிடிக்கும். "வருத்தமாகவும் உற்சாகம் இல்லாமலும் இருத்தல் 14 நாட்களுக்கு ஒரு முறை மனதில் சந்தோஷம் என்பதே துளிக்கூட இல்லாமல் போகலாம்."

கல் போல் கடினம்:—சுரப்பிகளில் வீக்கம் முதலியவை கல்போல் கடினமாகும்; ஸ்தனங்கள், விரைப்

பைகள், கருப்பை ஆகியவைகளில்; அனேகமாக வலி இருப்பதில்லை. க்ஷயம் தோன்றும் உடல் வாகு உள்ள குழந்தைகளுக்குக் கழுத்துப் பக்கங்களில் உள்ள சுரப்பிகள் வீங்கிக் கல்போல் கடினமாகும். இவையாவும் காயம் பட்டதினால் அல்லது அடிபட்டதால் தோன்றக்கூடும். மாதவிடாய் ஏற்படுவதற்கு முன்பும் அச்சமயத்திலும் ஸ்தனங்கள் வலியுடன் வீங்கும். (லாக். கானினம், காலி கார்ப்).'' உடல் முழுவதும் மேலாக உள்ள சுரப்பிகள் வீங்கிப் பருத்துக் கல்போல் கடினமாகும்.'' புண்ணின் அடியிலே கடினமாகுதல். ''ஸ்தனங்களில் ஒரு சீழ்க்கட்டியைச் சுற்றிப் பல முண்டுகள் தோன்றுதல்.'' ''கல்லீரல் கல்போல் கடினமாகிப் பருத்து மந்தமாய் வேலை செய்யும்.''

**தலைச் சுற்றல்:—** தலைச் சுற்றல், விசேஷமாகக் கீழே படுத்தவுடன் அல்லது படுத்துக் கொண்டு திரும்பினால் ஏற்படும். படுத்துக் கொண்டிருந்தாலும் அல்லது நின்று கொண்டிருந்தாலும் தலையைப் பக்க வாட்டில் திருப்பினால் தலைச் சுற்றல் மிக அதிகமாகும். சிறிது அசைந்தாலும் தாங்க முடியாத தலைச்சுற்றல் உண்டாவதால் கொஞ்சம் கூட அசைவு ஏற்படாமல் மல்லார்ந்து படுத்திருப்பார்.

**மதமதப்பு:—** மண்டைத் தோலில் மதமதப்பு. பாரிச வாதத்தினால் தாக்கப்பட்ட இடங்களில் மதமதப்பு. சுரப்பிகள் வீங்கிக் கடினமாகி மதமதப்பான உணர்ச்சியுடன் இருக்கும். மூளையில் மதமதப்பான உணர்ச்சியுடன் தலை சுற்றல். பலவீனத்துடன் மதமதப்பு. பாதங்களில் மதமதப்பும் சில்லிப்பும்.

**புண்ணாகுதல்:—** புற்று நோய் போன்ற வியாதிகளை அடிப்படையாகக் கொண்டு உண்டாகும் புண்கள். உதட்டில் புற்று நோய் சம்பந்தமுள்ள புண் (குழாய்



மூலம் புகை பிடிக்கும் வழக்கம் உள்ளவர்களுக்கு அக்குழாய் உதட்டை அழுத்தியதால்). அழுகும் குணமுள்ள புண்கள். எலும்புகளில் புண் உண்டாகுதல். புண்கள் ஆழமாகவும் எரிச்சலுடனும் இருக்கும். வயிற்றில் புண்கள். வயிற்றுப் புற்று. விழிகளில் ஏற்பட்ட புண்களைக் கோனியம் குணம் செய்திருப்பதாகக் கெண்ட் சொல்கிறார்

**வியர்வை:—** இரவில் தூங்க ஆரம்பித்த உடனேயே வியர்வை உண்டாகுதல். தூங்க ஆரம்பித்தவுடன் அல்லது கண்களை மூடிக் கொண்டாலும் வியர்வை ஏற்படுதல் (சைனா).

**சில்லிப்பு:—** சில்லிப்பு. பாதங்களைச் சிறிது திறந்து வைத்திருந்தாலும் சில்லிப்பு உண்டாகுதல். பாதங்களில் மதமதப்பும் சில்லிப்பும். அபான வாயு குளிர்ச்சியாய் இருத்தல். கழுத்தின் பின் பக்கத்தில் அல்லது உள்ளங் கைகளில் சில்லிப்பான வியர்வை. வயிற்றில் குளிர்ந்த உணர்ச்சியுடன் வலி.

**எதிர்க் குணமுள்ள குறிகள்:—** (வலியுடன் இருப்பதும் வலி இல்லாமல் இருப்பதும்). கல்போல் கடினமான சுரப்பியில் வலி கொஞ்சமாய் இருக்கலாம் அல்லது கொஞ்சங் கூட இல்லாமல் இருக்கலாம். சில சமயங்களில் தெரிக்கும் வலி ஏற்படக்கூடும். வலியில்லாத புண்கள். வலி இல்லாத, கடினமான, பவுத்திரச் சிரங்கு போன்ற புண்கள். இந்திரியம் வெளிப்படும் போது வலி. முடமாய் விட்ட உணர்ச்சியுடன் வலி இல்லாமை. பாரிசவாத நிலைமைகளில் வலி இல்லாமை. மாத விடாய்க்கு முன்னதாக ஸ்தனங்கள் கடினமாகி வலியுடன் இருத்தல்.

**எதிர்க் குணமுள்ள மற்ற குறிகள்:—** நாளுக்கு நாள் அதிகமாகும் பலவீனம். ஸ்தனச் சுரப்பிகள் பருத்துக் கல்போல் கடின மாகுதல், ஸ்தனங்கள் ஒட்டிப் போகுதல்,

உற்சாகத்துடன் சண்டை போடும் குணமும் உற்சாகம் இல்லாமல் ஏங்கி இருப்பதும் மாறி மாறித் தோன்றும். விரைகள் வீங்கிக் கல்போல் கடினமாய் இருக்கும். அல்லது சிறுத்துப் போய் விடும்.

## மற்ற குறிகள்

சீழ்ப் பிடிக்கும் குணம் இல்லாமல் தொண்டைச் சுரப்பிகள் பருத்திருத்தல். குரல்வளையில் ஒரு இடத்தில் காயந்திருப்பது போன்ற உணர்ச்சியினால் அடிக்கடி வறண்ட இருமல்; தொண்டையினுள் குத்தும் உணர்ச்சியினாலும் இவ் விதமான இருமல் உண்டாகலாம். இரவில் படுத்த பிறகு வெகு நேரம் விடாமல் இருக்கும். பகலில் இருமல் ஒரு தடவை கூட ஏற்படுவதில்லை.

உறவு:— "விஷத்தன்மை வாய்ந்ததாக மாறும் ஸ்தனக் கட்டிகளில் கோனியத்துக்குப் பிறகு ஸோரினம் நன்றாய் வேலை செய்கிறது" என்று அல்லென் சொல்கிறார். "ஸோரினத்தை உட்கொண்டு வந்த வியாதியஸ்தர்களுக்குக் கோனியம் ஒத்துக்கொள்வதில்லை யென்பதைச் சில சமயங்களில் நான் பார்த்திருக்கிறேன்." என்று க்ளார்க் கூறுகிறார். வலது ஸ்தனத்திலுள்ள சுரப்பியில் சந்தேகத்துக்கு இடமில்லாமல் விஷத்தன்மை உள்ளதென்று முடிவு செய்யப்பட்ட ஒரு கெடுதலான கேசை நானே சமாளிக்க நேரிட்டது. வியாதியஸ்தருக்கு எப்பொழுதோ ஒரு சமயம் அந்த இடத்தில் அடிபட்டதாக விவரங்களிலிருந்து தெரியவந்தது. ஆகையினால் நான் கோனியம் கொடுத்தேன். ஒரு விதமான நன்மையும் ஏற்படவில்லை யென்றே சொல்ல வேண்டும். பிறகு ஸோரினம் ஒரு வேளை கொடுக்கப்பட்டது. அதனால் வியாதி முழுவதும் குணமாகவில்லை யென்றாலும் வியாதியஸ்தரின் கஷ்டத்தைப் பெரிதும் நீக்கியது.

---



# குப்ரம் மெட்டாலிகம்
## (CUPRUM METALLICUM)

முன்னுரை:— ஆழ்ந்து வேலை செய்யும், ஸோரா விஷத்தை அகற்றும் ஔஷதங்களில் இதுவும் ஒன்று. சருமத்தை ஒட்டியபடி செப்புத் தகட்டைக் கட்டிக் கொள்வது, விசேஷமாகக் குழந்தைகளுக்கு, இந்தியாவிலுள்ள மிகப் பழைய வழக்கம் ஆகும். ஆனால் நாகரிகம் முற்றி வரும் இக்காலத்தில் கண்ணுக்கு அழகாய் இல்லை யென்ற காரணத்தினால் அப்பழக்கம் அனேகமாக மறைந்து போய் விட்டது என்றே சொல்லலாம். வீரியப் படுத்தப்பட்ட செப்பு காலராவிலும் அது போன்ற பல கடுமையான வியாதிகளிலும் நிலைமைகளிலும் ஔஷதமாக உபயோகப் படுகிறது. செப்புத் தகட்டை உடம்பிலே படும்படிக் கட்டிக் கொண்டிருந்தாலே மேலே கூறிய வியாதிகளைத் தடுக்கும் சக்தி உடலில் உண்டாகிறதென்று நினைக்க இடம் இருக்கிறது.

தசைகளில் இழுப்பு, விட்டு விட்டுத் தோன்றுதல், கடுமைக் குணம், நீல நிறமாகுதல், சில்லிப்பு, க்ஷீணம் ஆகியவை இவ் வௌஷதத்தின் மிக முக்கிய குறிகள்.

## பொதுவான குறிகள்

தகுதி:— அதிகக் கறுமை இல்லாத மயிர் உள்ளவர்கள்; இரத்தத்தில் உள்ள கரியமில வாயு மெதுவாக வெளியேறும் உடல்வாகு உள்ளவர்கள்; அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் அல்லது உடலையும் மனதையும் அளவுக்கு மிஞ்சிய உழைப்புக்கு உட்படுத்தியதாலும் மிகச் சீக்கிரத்தில் கிழவர்களாக ஆகியவர்கள்.

மனம்:— கெட்ட எண்ணம், பிறரைத் துன்புறுத்த விரும்புதல். ஏதோ ஒரு கெடுதல் நேரப் போகிறதென்று நினைத்து அடக்க முடியாத அளவுக்கு வருத்தமாகவும்

ஏக்கத்துடனும் இருத்தல். மூளைக் குறிகளுடன் பலமாக அலறுதல்.

உடல்:— தித்திப்பான அல்லது உலோக சம்பந்தமுள்ள சுவை (ரஸ் டாக்ஸ்). இமைகளை மூடியவுடன் கண் விழிகள் உருளுதல். பாம்பு போல அடிக்கடி நாக்கை நீட்டி உள்ளே இழுத்துக் கொள்ளுதல் (லாச்சஸிஸ்) குடிக்கும் போது தண்ணீர் களகள வென்ற ஓசையுடன் உள்ளே இறங்குதல் (ஆர்ஸனிகம், தூஜா). உமிழ்நீர் கூட அதிகமாய் உற்பத்தியாகும். அதிகச் சோர்வு. உடல் முழுவதும் சளைத்துப் போய் விடுதல். பாதங்களில் வலியுடன் சோர்வும் பிடிப்பும். அடிக்கடி மூச்சை அடைக்கும். குமட்டல்; வாந்தி. சூடான உணவையும் சூடான பானங்களையும் விரும்புதல். மூத்திரம் அடக்கப் படுதல். உண்ணும் போதும் குடிக்கும் போதும் மிக அவசரப் படுதல். பற்களை அறைத்தல்.

உபாதி கூடுதல்:— குளிர் காற்றினால்; அமாவாசை நாட்களில்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— இரும்பு சேர்ந்த ஔஷதங்களை அளவுமீறி உட்கொண்டதால் பெண்களுக்கு உண்டாகும் சூதக பாண்டு எனப்படும் இரத்த சோகை. மாத விடாய்க்கு முன் வலிப்புகள். பல குறிகள் கோடைக் காலத்தில் கூடுதலாகும்.

உபாதி குறைதல் :— இருமல், வயிற்றுவலி, வலிப்பு, விக்கல், வாந்தி ஆகியவை குளிர்ந்த தண்ணீர் குடித்தால் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

தசை இழுப்புகள், வலிப்புகள்:— பலவகைப் பட்ட தசை இழுப்புகளும் வலிப்புகளும். பொதுவாக இவை கடுமையாகவே இருக்கின்றன. குப்ரம் மெட்டாலிகத்தில்



வியாதிகள் கடுமையாக இருப்பது ஒரு முக்கிய குறியல்லவா? கைகால்கள், மார்பிலுள்ள தசைகள், உள்ளங்கால்கள், கால் ஆடு தசைகள், தொடைகள் ஆகியவைகளில் அதிகச் சோர்வுடன் இழுப்புகள். தொண்டையிலுள்ள தசைகளில் இழுப்பினால் பேசமுடியாமல் போகும். இழுப்பு விசேஷமாக மடக்கும் தசைகளிலேயே ஏற்படுவதால் ஸீகேலில் காணப்படுவதற்கு மாறாக கைகால் விரல்கள் உட்புறமாக மடக்கப் பட்டிருக்கும். இழுப்பு கைகால் களில் (விரல்கள்) ஆரம்பித்து உடம்பு முழுவதும் பரவுமானால் அப்பொழுது அனேகமாகக் குப்ரம் தான் தேவைப்படும். இழுப்பினால் வியாதியஸ்தர் பலமாகக் கதறுவார். உடல் தளர்ந்த கிழவர்களுக்குப் புணர்ச்சி செய்யும் போது கால் ஆடுதசைகள் முதலியவைகளில் இழுப்பு உண்டாகி அதனால் புணர்ச்சி செய்ய முடியாமல் போகும். குழந்தைகள் பலமாகக் கதறிய உடன் வலிப்புகள் தோன்றுதல். சேர்ந்தாற்போல் பலதடவை வலிப்புகள் ஏற்பட்டுப் பிறகு வியாதியஸ்தர் இறந்து போய் விட்டது போல் தோன்றுமளவுக்கு உடல் சக்தி ஒடுங்கிவிடும். கக்குவாய் இருமலில் இந்நிலைமையை அடிக்கடி பார்க்கலாம். வலிப்புகளுடன் வலியுள்ள மாதவிடாய். காக்கை வலிப்பில் வலிப்புகள் கைகால் விரல்களில் அல்லது முன் கைகளில் ஆரம்பிக்கும்; கட்டை விரல்கள் மடங்கி (உட்புறமாக வளைதல்) விடும்; வலிப்பு தோன்றுவதற்கு முன் திடீரென்று பலமாகக் கதறுதல். பல் முளைக்கும் காலத்தில் குழந்தைகளுக்கு உண்டாகும் வலிப்புகள். கர்ப்பமாய் இருக்கும் போது வலிப்புகள். பிள்ளைப் பெற்ற பிறகு வலிப்புகள். மூத்திரம் அளவு குறையும் போது அல்லது வெளியாகாமல் அடக்கப் பட்ட போது வலிப்புகள். உணவுக் குழாய் மூடியின்

வலிப்பு (இதனால்தான் தண்ணீர் குடிக்கும்போது களகள வென்ற ஓசை உண்டாகிறது).

**கடுமை:**— இவ் வௌஷதம் தேவைப்படும் எல்லா வியாதிகளும் கடுமையாக இருக்கின்றன. தசை இழுப்பு மிகக் கடுமையாய் இருப்பதால் தாக்குதலுக்கு உள்ளான தசைகளில் கண்ணுக்குப் புலப்படும் படியான பல முண்டுகள் ஏற்படும். தசைகளில் ஏற்படும் கடுமையான சுருக்கத்தினால் வலி உண்டாகி வியாதியஸ்தர் பலமாய்க் கதறுவார். கடுமையான வயிற்று வலி; அடிவயிறு உட்பக்கமாக இழுக்கப்பட்டு விடும். கடுமையான வலிப்புகள். அதனால் பலமாகக் கதறுவார். கடுமையான வயிற்றுப் போக்கு. கடுமையான, விட்டு விட்டு வரும் குணமுள்ள, வாந்தி. இரவில் ஏராளமான வியர்வை. கக்குவாய் இருமல் மிகக் கடுமையாகவும் களைப்பை உண்டாக்குவதாகவும் இருப்பதால் குழந்தையின் உடல் விறைத்து உணர்ச்சி அழிந்து கட்டை போல் ஆகும். இடை விடாமல் இருக்கும் கடுமையான தலைவலி; இடது கண்ணுக்கு மேல் பக்கத்தில் அதிகமாய் இருக்கும். பிள்ளைப் பெற்ற பிறகு உண்டாகும் வலிகள் மிகக் கடுமையாய் இருத்தல்; இழுக்கும் வலிகள் பாதங்களுக்கும் உள்ளங் கால்களுக்கும் கூடப் பரவும். மிகக் கடுமையான, நீண்ட நேரம் நீடிக்கும் தலைச் சுற்றல். மூச்சுத் திணறல் மிகக் கடுமையாய் இருப்பதால் கைக் குட்டையை முகத்தின் அருகே கொண்டு போனால் பொறுக்க முடியாது. மூளைக் கோளாறுகளில் கடுமையான குறிகள். கடுமையான புத்தித் தடுமாற்றம். கடுமையான தாகம். உடலின் வெளிப்புறம் மிகக் குளிர்ந்து இருக்கும். (பனிக் கட்டி போல் சில்லிப்பு). நரம்பு சம்பந்தமுள்ள, அடிக்கடி தோன்றும் குணமுள்ள, இடை விடாத, வறண்ட இருமல்;



ஒரு வார்த்தை கூடப் பேச முடியாது; இரவில் அதிகமாகும்; குளிர்ந்த தண்ணீர் குடித்தால் குறையும்.

**நீல நிற மாகுதல்: சில்லிப்பு: க்ஷீணம்:**— முகம் நீலம் கலந்த சிவப்பாய் அல்லது நீலமாய் இருக்கும்; உதடுகளும் நகங்களும் நீலமாய் இருக்கும். உடல் பலம் மிகவும் ஒடுங்குதல், நீண்ட நேரம் நீடித்திருக்கும் வியர்வை ஆகியவைகளுடன் (காலராவில் காணப்படுவது போல்) உடம்பின் வெளிப்புறம் அதிகம் குளிர்ந்து சில்லிப்பாகவும் நீலமாகவும் ஆகும். நாக்கு சில்லென்றிருக்கும். மூச்சுக் காற்றும் சில்லென்றிருக்கும். இரவில் குளிர்ச்சியான ஒட்டும் குணமுள்ள வியர்வை; க்ஷீணம்.

**அடக்கப் படுதல்: வெளியே தோன்றாமை: வியாதியின் உருவ, இட மாற்றங்கள்:**— சரும வியாதிகளை அல்லது பாதங்களில் உண்டாகும் வியர்வையை அடக்கியதால் தோன்றும் கோளாறுகள்; குளிரில் அல்லது காற்றில் அடிபட்டதால் சின்னம்மை உள்ளே அமுங்கி உண்டாகும் கோளாறுகள்; அல்லோபதி இஞ்சக்ஷன்களால் வெள்ளை ஒழுக்குத் தடைப்பட்டு ஏற்படும் கோளாறுகள்; நாட்பட்ட புண்கள், பவுத்திரப் புண்கள் ஆகியவைகளிலிருந்து வெளியாகும் சீழ் முதலிய கழிவுகளை அடக்கியதால் உண்டாகும் கோளாறுகள்; குளிர்ந்த தண்ணீரில் குளித்ததினால் மாதவிடாய்த் தடைப்பட்டு உண்டாகும் கோளாறுகள். அக்கியைத் தடை செய்ததால் தோன்றும் கோளாறுகள். இவ்விதம் தடை செய்தால் ஏற்படும் கோளாறுகளில் மிகவும் முக்கியமானது வலிப்பு. மூத்திரம் அடக்கப் படுதல், வயிற்றுப் போக்கு தோன்றுதல் முதலியவை மற்ற கோளாறுகளாகும். சரும வியாதியை அடக்கியதால் வயிற்றுப் போக்கு, வலிப்பும் இரண்டும் சேர்ந்து தோன்றலாம். 'மாதவிடாய்

தடைப்பட்டதால் அடிவயிற்றில் தசைகள் இழுத்துக் கொள்ளுதல் அல்லது வலிப்புகள் ஏற்படும். அல்லது இரண்டும் சேர்ந்து ஏற்படுவதுமுண்டு. சரும வியாதிகள் அல்லது பாதங்களில் ஏற்படும் வியர்வையைத் தடை செய்ததால் அல்லது தலையில் அடி பட்டதினால் உண்டாகும் காக்கை வலிப்பு. சரும வியாதிகளில் கோளாறு வெளியே வரா விட்டால் உடனே வலிப்புகள் தோன்றும். இவ்விதமான சமயங்களில் ஸிங்க்கம் மெட்டாலிகம் தான் பெரும்பாலும் உபயோகப்படுகிறது. குப்ரம் அல்ல. வியாதி மற்ற உறுப்புகளிலிருந்து மூளைக்குத் தாவுதல் (ஸிங்க்கம்).

**பாரிச வாதம்:**— நாக்கின் பாரிச வாதம்; கோளாறாகவும் திக்கிக் கொண்டும் பேசுதல். மூளை இரத்தக்குழாய் வெடிப்பு, டைபாய்டு போன்ற வியாதிகளுக்குப் பிறகு பாரிசவாதம் தோன்றுதல்.

**முறை வைத்துத் தோன்றுதல்: குறைவான எதிர்ப்புச் சக்தி:**— எல்லாக் குறிகளும் முறை வைத்து அடிக்கடி தோன்றும் குணமுள்ளவையாய் இருக்கின்றன. சுரம் அடிக்கடி தோன்றுதல். உடலின் எதிர்ப்புச் சக்தி குறைவாக அல்லது கோளாறாக இருப்பதே இதற்குக் காரணம். உடலாலும் மனதாலும் சக்திக்கு மீறி வேலை செய்ததன் விளைவாக எதிர்ப்புச் சக்தி குறைந்து போனவர்களுக்கு விசேஷமாகப் பயன்படும். இவ்விதக் கேசுகளில் இழந்த எதிர்ப்புச் சக்தியைக் குப்ரம் மீட்டுத் தந்து தகுதி வாய்ந்த வேறு ஒரு ஔஷதத்தினால் குணம் ஏற்பட வழி யமைக்கிறது.

**அடிக்கடி தோன்றுதல்:**— பலவகைக் குறிகள் அவ்வப்போது தோன்றும். எப்பொழுது என்று கணக்குச் சொல்ல முடியாது. 15 நாட்களுக் கொரு முறை தோன்றலாம். 15, 30 அல்லது 60 நிமிஷங்களுக்கு ஒரு முறையும் தோன்றக்கூடும்.



## மற்ற குறிகள்

கடுமை என்ற தலைப்பின்கீழ் பிள்ளைப் பெற்ற பிறகு உண்டாகும் வலிகள் மிகக் கடுமையாய் இருக்குமென்று குறிப்பிட் டிருக்கிறோம். இவ்விதமான வலிகள் பல சமயங்களிலும் பல குழந்தைகளைப் பெற்றெடுத்த பெண்களிடமே காணப்படும். கக்குவாய் இருமலில் இருமும் போதே வலிப்புகள் தோன்றும்; இருமல் நீண்ட நேரம் நீடித்து முடிவிலே மூச்சு நின்று விட்டது போல் தோன்றும்; குறுகிய வாய் உள்ள கண்ணாடிப் பாட்டிலில் தண்ணீரை நிரப்பும் போது உண்டாகும் ஓசையை ஒத்த ஓசையுடன் இருமல்; மூச்சுவிடத் திணறி முகம் நீலநிறமாகி விரைப்பு உண்டாகும்: சேர்ந்தாற் போல் மூன்று தடவை இருமல் ஏற்படும் (ஸ்டான்னம்); குளிர்ந்த காற்றைச் சுவாசித்தால் இருமல் அதிகமாகும். காக்கை வலிப்பில் முன்னறிவிப்புக்குறி முழங்கால்களில் ஆரம்பித்து மேலே பரவும்; வலிப்புகள் இரவில் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஏற்படும் (புபோ); அமாவாசை நாட்களில்; குறிப்பிட்ட காலங்களில் முறை வைத்து ஒழுங்காக; வியாதியஸ்தருக்கு வலிப்பு தோன்றப் போகிறது என்று முன் கூட்டியே தெரியும்.

**உறவு:**—முன்னும் பின்னும் வேலை செய்யக்கூடியது கல். கார்ப்.

**ஒப்பிடுதல்:**—எதிர்ப்புச்சக்தி இல்லாமை:— (லைப்பர், கார்போ வெஜி. அம்ப்ரா க்ரிஸியா, காப்ஸிகம், ஒபியம், ஸோரினம், ஸ்ட்ரமோனியம், பிரயோனியா, அபிஸ்).

---

## டிஜிடாலிஸ்
## (DIGITALIS)

**முன்னுரை** :—இருதயம், நாடித்துடிப்பு இவ்விரண்டைப்பற்றிய விசேஷக் குறிகள் **டிஜிடாலிஸில்** முக்கியமாய் இருக்கின்றன. அக்குறிகள் இல்லாத வியாதிகளில் **டிஜிடாலிஸ்** கொஞ்சங்கூட உபயோகப்படாதென்று சொல்லலாம். **டிஜிடாலிஸின்** கோளாறுகள் பல சமயங்களிலும் இருதய வியாதிகளால்தான் தோன்றுகின்றன என்பதே இதற்குக் காரணம். **இருதயம் மெதுவாக வேலை செய்தல்**, நாடி ஒழுங்கில்லாமலும் விட்டு விட்டு நிமிஷத்துக்கு ஏறக்குறைய 50 தடவைகளே துடிப்பதுமாக இருத்தல் ஆகியவை முக்கிய குறிகள்.

### பொதுவான குறிகள்.

**தகுதி** ;—மாதவிடாய் மறையும் காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் கோளாறுகள்; அக்காலங்களிலே உடல் முழுவதும் திடீர் திடீரென்று சூடான அலைகள் ஏற்படுவது போன்ற உணர்ச்சியும் அதைத் தொடர்ந்து பலவீனமும் உண்டாகும். நாடி மெதுவாகவும் ஒழுங்கில்லாமலும் விட்டு விட்டும் துடிப்பதுடன் சிறிதளவு அசைந்தாலும் படபடப்பு அதிகமாகும். "மிகவும் வெளுத்த உடலும் லேசான மயிர் வளர்ச்சியும் க்ஷயம் பிடிக்கக்கூடிய உடல் வாகும் உள்ள குழந்தைகள்."

**மனம்** :—உடல், உள்ளம் இரண்டும் சோர்ந்திருத்தல். பயங்கரமான ஏக்கம். உள்ளூர வேதனை உள்ள உணர்ச்சி. சங்கீதம் கேட்டால் வருத்தம் ஏற்படும். கெடுதல் நேரப் போகிறதென்று நினைத்து மனக்கலக்கம். **உயரமான இடத்திலிருந்து கீழே விழுந்து விடுவது போன்ற கனவுகள் கண்டு மிகுந்த கலவரத்துடன் திடீரென்று விழித்துக் கொள்ளுதல்.**



**உடல்** :—விசேஷத்தன்மை வாய்ந்த நாடித்துடிப்பு, கடுமையான குமட்டல். வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி. சாம்பல் போல் வெளுத்த நிறமுள்ள மலம். மஞ்சட் காமாலை. உள் உறுப்புகளிலும் வெளி உறுப்புகளிலும் நீர்ச்சுரப்பு. உடல் மெலிவு. பசி இருப்பதில்லை. ஆனால் அதிகத் தாகம் இருக்கும்.

**உபாதி கூடுதல்** :—சங்கீதம் கேட்பதால் (வருத்தம் ஏற்படும்). இரவில் அல்லது காலை வேளையில் நடக்கும் போது. குளிர் காற்று, குளிர்ந்த பருவக்காலம், சீதோஷ்ண நிலையையில் மாறுதல் ஆகியவைகளால்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- அசைவினால் பெரும்பாலான குறிகள் கூடுதலாகின்றன. அசைவினால் மயக்கமும் க்ஷீணமும் கூட ஏற்படலாம்: இருதயக்கோளாறுகளில் சிறிதளவு அசைவினாலும் கவலை, மயக்கம், இருதயப்படபடப்பு ஆகியவை அதிகமாகும். சிறிதளவு அசைந்தாலும் இருதயத்துக்கு அதிக வேலை ஏற்படும் அல்லது **கடுமையான** படபடப்பு உண்டாகும். சிறிதளவு கவனப்பிசகான அசைவினாலும் மார்பில் வலி தோன்றுதல்; விசேஷமாக வலி மேலே பரவிக் கைகளிலும் காணப்படும் போது.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

**இருதயமே குறிப்பாகத் தாக்கப்படுதல்** (மெதுவாய்வேலை செய்தல் : ஒழுங்கும் அளவும் கோளாறாய் இருத்தல், சிறிது நேரம் வேலை செய்யாமல் நின்று விடுதல்):—இருதயம் மிகப் பலவீனமாகவும் ஒழுங்கு தவறியும் வேலை செய்து, அளவு குறைந்து, மெதுவாகவும் விட்டு விட்டும் துடிக்கும் நாடித்துடிப்புடன் சேர்ந்திருக்கும். நாடித்துடிப்பு மிக மெதுவாகவும் பலவீனமாகவும் இருக்கும்; மூன்று, ஐந்து, ஏழு துடிப்புகளுக்கு ஒரு முறை துடிப்பு மறையும். இருதயத்

துடிப்பை விட நாடித்துடிப்பின் எண்ணிக்கை குறைவாய் இருக்கும். உறுப்பு சம்பந்தப் பட்ட இருதயக் கோளாறுகளில் சிறிது அசைந்தால் இருதயம் வேலை செய்யாமல் நின்று விடும் என்ற உணர்ச்சி ஏற்படும். (அசையாமல் இருந்தால் இருதயம் வேலை செய்யாமல் நின்று விடு மென்று பயப்படுதல், ஜெல்ஸெமியம்). அதிகக் கவலையுடன் இருதயம் திடீரென்று வேலை செய்யாமல் நின்று விட்ட உணர்ச்சி; அதனால் மூச்சு விடுவதை அடக்க நேரிடும். சிறிது கூட அசைவில்லாமல் இருக்க நேரும்.

**கல்லீரலும் தாக்கப் படுதல்:**—கல்லீரல் பருத்துக் கடினமாகித் தொட்டால் அடிபட்டது போல் வலியுடன் இருக்கும்: வாயில் கசப்பான அல்லது இனிப்பான சுவை; மலம் சாம்பல் போல் வெண்மை நிறமாய் இருக்கும் அல்லது சாக்கட்டியைப் போல் மிக வெண்மையாகவும் இருக்கலாம்: பித்தத் தண்ணீர் கலப்பதால் மூத்திரம் அதிக நிறமாய் இருக்கலாம்: நாக்குச் சுத்தமாய் அல்லது வெண்மை கலந்த மஞ்சள் நிறமாய் இருக்கும். டிஜிடாலிஸின் கல்லீரல் கோளாறுகள் கூட உறுப்பு சம்பந்த முள்ள இருதய வியாதிகளால் தோன்றும். இச்சமயத்தில் இருதயப் பகுதியிலும் கல்லீரல் பகுதியிலும் தொட்டால் வலி உண்டாகும். மஞ்சட் காமாலை.

**சோர்வு: மயக்க உணர்ச்சி: பயங்கரமான க்ஷீணம்:**—வயிற்றின் உட்புறத்தில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சியும் மயக்கம் ஏற்படுவது போன்ற உணர்ச்சியும், மனத் தளர்ச்சியும், அதிகமான நரம்புச் சோர்வு. கால்களில் மிகுந்த பலவீனம். மந்த குணம். உடம்பில் திடீரென்று சூடான அலைகள் உண்டாகும் உணர்ச்சியும் தொடர்ந்து அதிகப் பலவீனமும். மார்பில் அதிகப் பலவீனம், அதனால் பேச முடியாது (ஸ்டான்னம்).



**கடுமையான குமட்டல்:**—இருதயம், கல்லீரல் இவை பற்றிய கோளாறுகளினால் வயிற்றினுள் ஒன்றுமே இல்லாத உணர்ச்சியுடன் கடுமையான குமட்டல். "உணவைக் கண்ணால் பார்த்தாலே கடுமையான குமட்டல் தோன்றும்; நாக்குச் சுத்தமாகவும், தாகமும் இருக்கும். ஆனால் சுரம் இருக்காது". அளவு மீறிய புணர்ச்சியினால் இந்நிலைமை அனேகமாகத் தோன்றுகிறது.

**தளர்ச்சி:**—இரவில் தூங்கும் போது படுக்கையில் மூத்திரம் கழித்தல். மூத்திரம் தானாகவே வெளிப்படும். அடிக்கடி மானியில் விரைப்புடனும் இந்திரியம் நழுவுவதுடனும் சிற்றின்ப ஆசை மிகவும் அதிகமாகுதல். பிறப்பு உறுப்புகளில் அதிக பலவீனத்துடன் இரவில் தூங்கும் போது, சிற்றின்பக் கனவுகள் இல்லாத போதும் இந்திரியம் தானாக வெளியேறும். சுக்கில நீர் ஒழுகுதல். மூத்திரம் சொட்டுச் சொட்டாக ஒழுகும். மெதுவாய்ச் சுவாசித்தல்.

**உப்பி இருத்தல்: வீக்கம்: நீர்ச் சுரப்பு:**—இமைகள், காதுகள், உதடுகள், நாக்கு ஆகியவைகளிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் உப்பிப் புடைத்திருத்தல். உள் உறுப்புகளிலும் வெளி உறுப்புகளிலும் நீர்ச் சுரப்பு (இருதய வியாதிகளால் ஏற்பட்டது). அடிவயிற்றில் நீர்ச் சுரப்புள்ள வீக்கம். சுக்கிலச் சுரப்பிகள் பருத்திருத்தல், விசேஷமாகக் கிழவர்களுக்கு. முழங்கால் மூட்டில் நீர்ச் சுரப்பு. பாதங்களில் பகலில் வீக்கம் தோன்றி இரவில் குறைதல். பிறப்பு உறுப்புகளில் நீர்ச் சுரப்பு வீக்கம். மேக வெட்டையினால் மாணியின் கொண்டைத் தோல் நீர்ச் சுரப்புடன் வீங்குதல் (தோல் உப்பி ஊனீர் நிறைந்து இருக்கும்). விரைப்பை வீக்கம் (வலது); விரைப்பை தண்ணீர் நிரப்பிய ரப்பர் பந்து

போல் இருக்கும். மூத்திரம் அளவு குறைந்ததினால் அல்லது வெளியாகாமல் அடக்கப் பட்டதால் தோன்றும் நீர்ச் சுரப்பு. இருதயப் பலவீனத்துடன் காணப்படும் நீர்ச் சுரப்பு.

நீல நிறமாகுதல்: சில்லிப்பு: மூச்சு விடத் திணறல்:— கண் இமைகள், உதடுகள், நாக்கு, விரல்கள் ஆகியவைகளும் சருமமும் நீல நிறமாய் இருத்தல். முகம் வெளுத்திருக்கும். (வெளுத்த சருமத்தின் அடியிலே நீல நிறம் இருக்கும்). "இருதயக் கோளாறுகள் அவ்வப்போது தோன்றும் காலங்களில் உதடுகள் வெளுத்த நீல நிறமாய் இருத்தல்". சருமம் சில்லென்றிருக்கும். கை கால்களும் சில்லென்றிருக்கும். பிசு பிசு வென்று ஒட்டும் குணமுள்ள, குளிர்ந்த வியர்வை. உடம்பில் நீல நிறம் தோன்றும் போது மூச்சை அடைக்கும் உணர்ச்சியும் தோன்றும். இவ்வுணர்ச்சி ஆழ்ந்து சுவாசித்தால் சௌகரியமாகும். இரவில் மூச்சு அடைத்துப் போய் விடுமோ என்று பயப்படுதல்". மல்லார்ந்து படுக்க விரும்புதல்.

**பார்வைக் கோளாறுகளும் பொய்த் தோற்றமும்:—** எல்லாப் பொருள்களும் பச்சையாய் அல்லது மஞ்சளாய் இருப்பது போல் தோன்றுதல். கண்களின் முன்னே ஒளி வீசுதல். வான வில்லில் உள்ள நிறங்கள் தோன்றுதல். ஈக்களைப் போன்ற கறுப்பான உருவங்கள் கண்களுக்கு முன்னே சுற்றி வருவது போல் தோன்றுதல்.

### மற்ற குறிகள்

மேகவெட்டையில் இதற்கு முன் குறிப்பிடப்பட்ட மாணியின் நுனித் தோல் வீக்கத்தைத் தவிர, மூத்திரக் குழாயில் எரிச்சல், சீழ்ப் போல். கெட்டியான, நல்ல மஞ்சள் நிறமுள்ள கழிவு, மாணி வலியுடன் விரைத்தல் ஆகிய குறிகளும் காணப்படும். வடித்த கஞ்சி போன்ற



கோழையுடன் இருமல்.— கீல்வாயு சம்பந்தமான முண்டுகள்.— மூச்சு விடுவது ஒழுங்கில்லாமலும் சிரமத்துடனும் இருக்கும். ஆழ்ந்து சுவாசித்தால் சௌகரியமாய் இருக்கும். ஒரு கை சூடாகவும் மற்றொரு கை சில்லென்றும் இருக்கும் (சைனா, இபிகாக் பல்ஸடில்லா).

**உறவு:—** சைனா முறிவாகும். டிஜிடாலிஸின் நல் விளைவுகளை அழித்து விட்டுக் கவலையை அதிகரிக்கும்.

**ஒப்பிடுதல்:—** மேக வெட்டையில் மாணியின் நுனித் தோல் கல்போல் கடினமாய் மாறினால் ஸல்பரும் ஊனீர்ச் சுரப்புடன் உப்பி யிருந்தால் டிஜிடாலிசும் உபயோகமாகும்.

**குறிப்பு:—** ஆர்ஸனிகம், லாச்சஸிஸ் ஆகியவைகளைப் போல் டிஜிடாலிசுக்குச் சாவைத் துரிதப்படுத்தும் கெடுதலான சக்தி இருப்பதால் குறிகளை அனுசரித்து ஏற்றதாய்க் காணப்பட்டால் தான் அதை உபயோகிக்கலாம்; இல்லாவிட்டால் வியாதி மேலும் மோசமாகி வியாதியஸ்தர் இறக்கக்கூடும் என்று பாரிங்டன் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

---

## டயஸ்கோரியா வில்லோஸா

## (DIOSCOREA VILLOSA)

**முன்னுரை:—** நமது மெட்டீரியா மெடிகாவில் வலிகளுக்கு உபயோகமாகும் மிகச் சிறந்த ஔஷதங்களில் இது ஒன்று. வயிற்றிலும் குடல்களிலும் உள்ள நரம்பு சம்பந்தமான வலிகளில் விசேஷமாகப் பயன்படுகிறது. ஒரு சில வியாதிகளுக்கு மட்டுமே உபயோகப் படுகிறதென்றாலும் இவ்வௌஷதத்தின் குறிகள் மிகத் தெளிவாய் இருப்பதால் சிகிச்சை விஷயங்களில் மிகவும் புகழ் வாய்ந்திருக்கிறது.

## பொதுவான குறிகள்

தகுதி:— பலவீனமான சீரணச் சக்தியுள்ள கிழவர்கள் அல்லது வாலிபர்கள். பலவீனமான சீரணச் சக்தியினால் உணவு உட்கொண்ட பிறகு அடிவயிற்றில் வாயு சேர்ந்து உப்பிக் கொள்ளுதல். அடிக்கடி நகச்சுற்றி தோன்றும் உடல்வாகு உள்ளவர்கள். அடிக்கடி கடுமையான வயிற்றுவலி தோன்றும் குணமுள்ளவர்கள்.

மனம்:— பிறருடன் சேர்ந்திருக்க வெறுப்பு. கோபக் குணம். உற்சாகம் மிகவும் குறைந்திருத்தல்.

உடல்:—களைத்த உணர்ச்சி. பிறப்பு உறுப்புகளில் கடும் வாசனை வீசும், சில்லிப்பான, பிசுபிசு வென்று ஒட்டும் குணமுள்ள வியர்வை. நாக்கின் ஓரங்களில் நெருப்பினால் சுட்டது போல் புண்கள்.

உபாதிகூடுதல்:—(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே);— வயிற்று வலியில் கீழே படுத்துக் கொண்டாலும் உடம்பை வளைத்தாலும் அதிகமாகும். முதுகிலுள்ள மந்தமான வலி முதுகு எலும்பை வளைத்தால் கூடுதலாகும்.

உபாதி குறைதல்:— (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— அசைந்து கொண்டே இருந்தால் வலிகள் குறைவாய் இருக்கும்: ஓய்வாக உட்கார முடியாது. உடல் களைத்திருந்தாலும் நடக்காமல் இருக்க முடியாது. உடலை நேராக வைத்திருந்தால் அல்லது முதுகுப் பக்கமாய் வளைத்தால் வயிற்றுவலி குறையும். (காலோஸிந்திஸில் இதற்கு நேர் மாறாக உடலை முன் பக்கமாய் வளைத்தால் வயிற்று வலி குறையும்).

## விசேஷக் குறிகளின் விளக்கம்

வயிற்றுவலி, நரம்பு சம்பந்தமானவலி (கடுமையாய், பல இடங்களுக்குப் பரவுவதுடன் திடீர் திடீர் என்று இடம் மாறுவதும் விட்டு விட்டுத் தோன்றுவதும்) :—கடுமையான அடி



வயிற்று வலி. டீ குடிப்பவர்களுக்கு உண்டாகும் கடுமையான வயிற்றுவலி. வலியினால் உடம்பில் மயிர்க்கூச்செறிதல். தாங்கமுடியாத, கூர்மையான. கத்தியால் கிழிப்பது போன்ற, திருகுவது போலவும் இறுக்கிப்பிடிப்பது போலவும் உள்ள வலிகள்; வலிகள் துள்ளும் அல்லது பல இடங்களுக்குப் பரவி இருக்கும். வலி ஒரு இடத்தில் திடீரென்று மறைந்து பிறகு வேறு ஒரு இடத்தில் தோன்றும். முதுகில் கடுமையான வலி, விரைகள் வரை பரவி இருக்கும். கடுமையான முதுகு வலி, கடுமையான வலியுடன் கூடிய மாதவிடாய். "இடை விடாமல் இருக்கும் ஒரு வலி சிறிது நேரத்துக்கு ஒரு முறை கடுமையாகுதல். வயிற்றுவலி முதுகு, மார்பு அல்லது கைகளுக்கும் பரவலாம். "மார்பில் அல்லது இருதயத்தில் ஏற்படும் வலிகள் இரண்டு கைகளிலும் பரவும்." வலிகள் மேல் பக்கமும் கீழ்ப்பக்கமும் பரவும். வலி கல்லீரலிலிருந்து வலது முலைக்காம்புக்குத் தாவுதல். வலிகள் பல இடங்களுக்குப் பரவுதல் அல்லது திடீரென்று இடம் மாறுதல், விசேஷமாக அடிவயிற்றிலிருந்து கைவிரல்கள், கால்விரல்கள் போன்ற எட்டியுள்ள இடங்களுக்கு மார்பெலும்பின் வழியாக வலி கைகள்வரை பரவி இருத்தல். விட்டு விட்டுத் தோன்றும் கருப்பை சம்பந்தமான வலி; எட்டி உள்ள இடங்களுக்குத் திடீரென்று வலி தாவும். சருமம் காய்த்துப் போன இடங்களில் தெறிக்கும் வலிகள். வாயு உப்பிசத்தினால் உண்டாகும் வயிற்றுவலி, அடிக்கடி அபான வாயு வெளிப்படும். ஆனால் சௌகரியம் ஏற்படுவதில்லை. டயஸ்கோரியாவின் வயிற்று வலிகள் யாவும் உடலை நேராக வைத்திருந்தால் குறைவாய் இருக்கும். (முன் பக்கமாய் வளைத்தால் வலி அதிகரிக்கும்); அசைந்து

கொண்டே இருந்தால் சௌகரியமாய்த் தோன்றும். இவ்விஷயம் எப்பொழுதும் ஞாபகத்தில் இருக்க வேண்டும். பிரசவத்துக்குப் பின் ஏற்படும் வலிகளை இவ்வௌஷதம் பல சமயங்களில் குணம் செய்திருக்கிறது.

**உணர்ச்சி அதிகரித்தல், தளர்ச்சி :**—இரவு முழுவதும் மானி விரைத்துக் கொண்டே இருத்தல். பிறப்பு உறுப்புகளில் இடை விடாமல் அதிக உணர்ச்சியும் அடிக்கடி விரைத்தலும். தூங்கும்போது இந்திரியம் நழுவும். முழங்கால்களில் பலவீனத்துடன் இந்திரியம் கொஞ்சங் கொஞ்சமாக நழுவுதல், பிறகு சில நாட் கழித்து புணர்ச்சியில் ஆசை இல்லாமை, பிறப்பு உறுப்புகள் சில்லென்று மாறுதல் முதலிய குறிகளுடன் தளர்ச்சி உண்டாகும்,

**தொட்டால் வலி அதிகரித்தல்:**— அடி வயிற்றிலுள்ள நரம்புகளில், குடல்களில் புண் இருப்பது போல் அமுக்கினால் வலி உண்டாகுதல்.

**கற்கள் உண்டாகும் குணம் (பித்தக் கற்கள், மூத்திரக் கற்கள்) :**—பித்தக்கற்கள் உள்ள போது வெட்டும் வலிகள் அடிக்கடி இடம் மாறிப் பல இடங்களுக்குப் பரவும்; அதிக வாயு உப்பிசமும் இருக்கும். மூத்திரக் கற்களில் (வலது மூத்திரக் காயில்) கற்கள் வெளியேறும் போது தசைகளில் இழுப்புடன் புழுப் போல் துடிக்க வைக்கும் வலிகள். இக்குறிகள் வயிற்று வலி, நரம்பு சம்பந்தமான வலி என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டுள்ளன.

## மற்ற குறிகள்

ஆசன வாயில் வலி, வேதனை ஆகியவைகளுடன் பெரிய மூல முளைகள்—அடிக்கடி நகச் சுற்றி ஏற்படும் உடல் வாகு. நகச் சுற்றியுடன் விரல் எலும்புகளில் அடிக்கடி கடுமையான வலிகள் ஏற்படுதல்.

---



# ட்ரோஸிரா ரோடண்டிபோலியா

## (DROSERA ROTUNDIFOLIA)

**முன்னுரை :**—கக்குவாய் இருமலுக்கு மிகவும் உபயோகமுள்ள ஔஷதம். அதன் கோளாறுகள் மிகக் கடுமையாக விட்டு விட்டு வரும்.

## பொதுவான குறிகள்

**தகுதி :**—க்ஷயரோக முள்ளவர்கள், விசேஷமாக விட்டு விட்டு வரும் இருமலுடன் க்ஷயரோக முள்ள இளம் பருவத்தினர். சுவாச கோசத் தசைகளில் அதிகக் காற்றுப் புகுந்து தளர்ந்து விடுவதினால் மார்ச் சளி ஏற்பட்டுள்ள கிழவர்கள்.

**மனம் :**—அல்ப விஷயமும் வியாதியஸ்தரை மிகவும் பாதிக்கும். தண்ணீரில் மூழ்கிச் சாக விருப்பம்.

**உடல் :**—வாயில் அழுகிய நாற்றம் (சுவாச கோச க்ஷயரோகம், குரல்வளை க்ஷயரோகம், கக்குவாய் இருமல் ஆகியவைகளில்). நெற்றியிலும் கை கால்களிலும் குளிர்ந்த வியர்வை. உதடுகள் வெடித்து அடிக்கடி காய்ந்து போகும். பேசும் போது மூச்சுத் திணறும் உணர்ச்சி; அனேகமாக உட்கார்ந்திருக்கும் போது. நாற்ற முள்ள மூச்சுக் காற்றுடன் இருமல், கால்களில் குளிர்ந்த வியர்வையும் அவை எப்பொழுதும் சில்லென்றே இருப்பதும்.

**உபாதி கூடுதல் :**—பெரும்பாலான குறிகள் இரவில் தோன்றுகின்றன. நள்ளிரவுக்குப் பிறகும் தோன்றலாம் அல்லது அச்சமயம் கடுமையாக மாறலாம். மாலைப் பொழுதிலும் கூடுதலாகக் கூடும்.

**உபாதிகூடுதல் :**-(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) சூட்டினால், தண்ணீர் குடித்தால், பேசினால், சிரித்தால்,

நள்ளிரவுக்குப் பிறகு, கீழே படுத்தால். குழந்தைகளுக்குத் தலையைக் கீழே சாய்த்தவுடன், அதாவது படுத்துக் கொண்டவுடன் தொண்டையில் குறு குறுக்கும் உணர்ச்சியுடன் இருமல் (பெல்லடொன்னா, ஹயஸ்யாமஸ், ரூமெக்ஸ்). ஆழத்திலிருந்து வருவது போன்ற ஓசையுடன், கடூரமான குலைப்பது போன்ற இருமல் அல்லது சின்னம்மை உள்ள போதும் அதற்குப் பிறகும் விட்டு விட்டு வரும் இருமல்.

**உபாதி குறைதல்:**—இருமலினால் மார்பிலும் அடிவயிற்றிலும் வலி தோன்றி அதனால் இருமும் போது மார்பைப் பிடித்துக் கொள்ளுதல் அல்லது அடிவயிற்றை அமுக்கிக் கொள்ளுதல்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**கடுமையாகவும் விட்டு விட்டும் தோன்றுதல்:**—குரல் வளையில் குரு குருப்பான உணர்ச்சியினால் இருமல் கடுமையாகவும் விட்டு விட்டும் ஏற்படுதல். கக்குவாய் இருமல். கக்குவாய் இருமலில் சிறிது நேரத்துக்கு ஒரு முறையாய்க் கடுமையான இருமல் மிக வேகமாக ஏற்பட்டு குழந்தைக்கு மூச்சு விடவும் அவகாசம் இல்லாமல் செய்துவிடும்; குறிப்பாக நள்ளிரவுக்குப் பிறகு அதிகமாகும். கடுமையான இருமலினால் (கக்குவாய் இருமலில்) அடிவயிறு முழுவதும் உட்புறமாய் இழுக்கப்படும். இருமிய பிறகு குழந்தை உண்ட உணவை அல்லது கோழையை வாந்தி செய்யும் அல்லது மூக்கு வழியாக இரத்தம் வெளிப்படுவதும் (இரத்தம் கலந்த உமிழ்நீர்) குளிர்ந்த வியர்வை உண்டாவதும் இருக்கலாம். கடுமையான இருமலுக்குப் பிறகு தொண்டையை அடைப்பதும் குமட்டலும் வாந்தியும் தோன்றும் (பிரயோனியா, காலீ கார்ப்). இருமல் விட்டு விட்டுத் தோன்றும், ஆழத்திலிருந்து வருவது போன்ற ஓசையுடன் கடூரமாகவும்



நாய் குலைப்பது போலவும் இருக்கும். மாலையிலும் நள்ளிரவுக்குப் பிறகும் கூடுதலாகும். ஒவ்வொரு தடவையும் அதிக நேரம் நீடித்துத் தொண்டையை அடைக்கும் இருமல்; இருமலினால் வியாதியஸ்தர் தன் விலாப் பக்கங்களைப் பிடித்துக் கொள்வார். மார்பிலும் குரல் வளையிலும் விட்டு விட்டு வரும் கோளாறுகளால் மூச்சு விடச் சிரமமும் மூச்சு அடைப்பதும். க்ஷயரோகம் நிச்சயமாக உண்டாகும் என்று நினைக்கக் கூடிய இளம் பெண்களிடம் காணப்படும் கடுமையான, விட்டு விட்டு ஏற்படும் இருமல், கடுமையான, விட்டு விட்டுத் தோன்றும் இருமலினால் வலிப்புகள் உண்டாகும். இருமும் போது கை கால்களில் இழுத்தல். க்ஷயரோகத்தில், இரவில் அதிகமாகும் குணமுள்ள, விட்டு விட்டுத் தோன்றும் அல்லது தொண்டையில் குரு குருப்பு உணர்ச்சியுடன் உண்டாகும் இருமலை அடக்கிச் சௌகரியம் அளிப்பதில் மிகவும் புகழ் பெற்றது (நானே பல சமயங்களில் கொடுத்துப் பார்த்திருக்கிறேன்). இவ்விதமான கேசுகளில் கோழை இரத்தம் தோய்ந்து அல்லது சீழ்ப் போல் இருக்கும்.

**இழுப்பது போன்ற இறுக்க உணர்ச்சி:**—எதையாவது பிடிக்கப் போனால் கைகளில் இழுத்தல். அடிவயிற்றில் இறுக்குவது போல் விட்டு விட்டு வரும் வலிகள்; குரல் வளை, தொண்டை, மார்பு, விலா வெலும்புகளுக்குக் கீழ் ஆகிய இடங்களிலும் இதே போன்ற வலி இருக்கும். இருமும் போது மார்பில் இறுகக் கட்டியிருக்கும் உணர்ச்சி. குரல் வளையில் இறுக்குவது போலவும் ஏதோ ஊருவது போலவும் உணர்ச்சி, கர கரப்பு, நாற்றமுள்ள கோழை; சில சமயங்களில் கோழையை வெளியே துப்ப முடியாமல் விழுங்க வேண்டி வரும்; குரல் கர கரப்பாகி எதிரொலி இல்லாமல் இருக்கும். தொண்டை

யில் இறுக்கும் உணர்ச்சியினால் உணவை விழுங்கச் சிரமம். எழுத்து வேலை செய்கிறவர்களுக்கு ஏற்படும் கை நடுக்கம். மார்பில் இறுக்கும் உணர்ச்சி.

**இரத்தப் பெருக்கு:**—உடலிலுள்ள பல்வேறு துவாரங்களிலிருந்தும், குறிப்பாக மூக்கு, தொண்டை, குரல் வளை ஆகிய இடங்களிலிருந்து இருமும் போது இரத்தப் பெருக் கெடுத்தல். வாயிலிருந்து இரத்தப் பெருக்கு (உமிழ் நீர் இரத்தமாய் இருத்தல்). வாந்தியுடன், மலத்துடன், கோழையுடன் இரத்தப் பெருக்கு ஏற்படுதல். மூக்கைச் சிந்தினால் இரத்தம் வெளியாகும். கோழை இரத்தம் தோய்ந்து சீழ்ப் போல் இருக்கும். கை கால்களில் விரைப்புடனும் துடிப்புடனும் காக்கை வலிப்பு, கடைசியில் சுவாச கோசங்களிலிருந்து இரத்தம் வெளிப்படுவதும் தூக்கமும் உண்டாகும்.

**வேதனை: குரு குருப்பான உணர்ச்சி: குமட்டல்: வாந்தி:**—குரல் வளையில் குரு குரு என்ற உணர்ச்சியுடன் வேதனை, பிடிப்பது போலவும், இழுப்பது போலவும் இறுக்குவது போலவும் எரிச்சலும் இருத்தல். குரல் வளையில் இறகினால் குத்துவது போன்ற உணர்ச்சி (அதனால் விட்டு விட்டு இருமல் உண்டாகும்) குரல் வளையில் கடுமையான குரு குருப்பு உணர்ச்சியினால் இரவு நேரங்களில் இருமல் தோன்றித் தூக்கத்திலிருந்து எழுப்பி விடும். குரல் வளையில் ஊரும் உணர்ச்சி. அவ்விடத்தில் மிருதுவான ஒரு பொருள் அடைந்திருப்பது போல் தோன்றுதல். குமட்டல், வாந்தி இவைகளைப்பற்றி கடுமையாகவும் விட்டு விட்டும் தோன்றுதல் என்னும் தலைப்பின் கீழ்ப் பார்க்கவும். சாதாரணமான தொண்டை வேக்காட்டிலும் க்ஷய சம்பந்தமான தொண்டை வேக்காட்டிலும் குரு குருக்கும் உணர்ச்சியினால் இருமல் ஏற்படுவது காணப்படுகிறது. இச்சமயங்களில் டிரோஸிராவை ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டும். ஸெலெனியம் என்னும் ஔஷதத்தைப் பார்க்கவும்.



**குத்தும் வலிகள்: கொட்டும் வலிகள்: அறிப்பு:**—பல கோளாறுகளில் குத்தும் வலிகள் காணப்படுகின்றன. மார்பிலும் எல்லா இடங்களிலும் குத்து வலி. இடது இடுப்பிலிருந்து மானிவரை இருக்கும் குத்து வலி; மானியின் நுனியில் அறிப்புடன் குத்து வலிகள். குரல் வளையில் உணவுக் குழாயின் வலது பக்கம் வரை இலேசான குத்து வலிகள். ஆடைகளை அவிழ்க்கும் போது கடுமையான அறிப்பு; சொரியும் போது சருமம் மிக எளிதிலே உறிந்து விடும். சின்னம்மை போன்ற சருமக் கோளாறுகளில் அறிப்பும் எரிச்சலும் ஆடைகளைக் களையும் போது அதிகமாகிச் சொரிந்தால் சௌகரியமாகும். எலும்புகளைப் பற்றிய க்ஷயரோகத்தில் நீளமான எலும்புகளில் குடையும் உணர்ச்சியும் கொட்டும் வலிகளும் ஓய்வாய் இருக்கும் போது அதிகமாகும்.

## மற்ற குறிகள்

முறைச் சுரத்தில் "குடு உள்ள நிலைமையில் வாயில் உமிழ் நீர் ஏராளமாய் உற்பத்தியாகும்". (ஹானிமன்). "தொண்டையில் புண்ணுடனும் குமட்டலுடனும் உள்ள முறைச் சுரம்". (லிப்பே). க்ஷய சம்பந்த முள்ள குரல் வளையும் பெரிய சுவாசக் குழாயும்.

**உறவு:**—நக்ஸ் வாமிகாவுக்கு முன்னும் பிறகும் டிரோஸிரா நல்ல வேலை செய்யும். ஸாம்புகஸ், ஸல்பர், வெராட்ரம் ஆகியவைகளுக்குப் பிறகும் நல்ல வேலை செய்யும். டிரோஸிராவுக்குப் பிறகு கல். கார்ப்; பல்ஸடில்லா, ஸல்பர் ஆகியவை நன்றாக வேலை செய்யும்.

**ஒப்பிடுதல்:**—விட்டு விட்டு வரும் இருமலில் லீனு,

ஹயஸ்யாமஸ், இபிகாக், நேட்ரம் மூர், ரூமெக்ஸ் ஆகியவை, களுடன்.

குறிப்பு:—பெருவாரியாகக் கக்குவாய் இருமல் தோன்றும் காலங்களில் இவ்வௌஷதத்தை 30 வீரியத்தில் ஒரே ஒரு வேளை கொடுத்தால் வியாதியைக் குணம் செய்துவிடும். ஔஷதம் கொடுத்ததிலிருந்து ஏழு அல்லது எட்டு நாட்களில் குணம் தோன்றும். இரண்டாம் வேளை ஔஷதம் ஒரு பொழுதும் கொடுக்கக் கூடாது; கொடுத்தால் முதல் வேளை ஔஷதத்தினால் ஏற்படக் கூடிய நன்மையை நீக்குவதுடன் கெடுதலும் செய்யலாம். இவ்வாறு மெட்டீரியா மெடிகா பூரா என்னும் தன்னுடைய புத்தகத்திலே ஹானிமன் குறிப்பிட்டிருக்கிறார்.

---

# டல்கமாரா

## (DULCAMARA)

**முன்னுரை:**—டல்கமாரா சளிச் சவ்வுகளையே முக்கியமாகத் தாக்குகிறது. வியாதி உள்ளே அமுங்கி அதனால் உடம்பு முழுவதும் சருமக் கோளாறுகள் வெடித்துக் கொட்டி வியாதிப்பொருள்களை உடலிலிருந்து வெளியேற்றும் குணமுள்ள போது உபயோகப்படும் ஔஷதங்களில் இதுவு மொன்று. பலவிதமான சருமக் கோளாறுகளை வேறு ஔஷதங்களின் துணை இல்லாமல் தனித்துக் குணம் செய்யும் சக்தி இவ்வௌஷதத்திலும் இருக்கிறது. ஈரக் கசிவுள்ள குளிர் காற்றில் அடிபடுதல் அல்லது வியர்வை ஏற்படும் போது குளிர் காற்றில் அடிபடுதல் ஆகிய காரணங்களால் உண்டாகும் வியாதிகளில் பெரும்பாலானவை இவ்வௌஷதத்தினால் குணம் செய்யப்படுகின்றன.

## பொதுவான குறிகள்

**தகுதி:**—மந்த குணமும் க்ஷயம் தோன்றும் உடல்வாகும் உள்ளவர்கள்; நிலை கொள்ளாமை, கோப



குணம். குளிரும் ஈரக் கசிவும் உள்ள பருவக் காலங்கள் ஒத்துக் கொள்ளாமை. அக்காலங்களில் நீர்க் கோர்வை, வாத ரோகம், சருமக் கோளாறுகள் ஆகியவை தோன்றுதல் அல்லது அதிகமாகுதல்; சூடான பருவ நிலை குளிர்ச்சியாக, அதுவும் திடீரென்று, மாறினாலும் மேலே உள்ள கோளாறுகள் ஏற்படுதல் முதலிய குறிகள் உள்ளவர்கள்; அடிக்கடி காது வலியினால் கஷ்டப்படும் குழந்தைகள். வெளுத்துப் போய், அழுக்குப் பிடித்த மஞ்சள் நிறமுள்ள முகமும் திடீர் க்ஷயரோகம் உண்டாகுமோ என்று தோன்றும் நிலைமையும் உள்ள உடல் இளைப்பு உள்ளவர்கள்.

**மனம்:**—அதிக ஆத்திரமும் நிலை கொள்ளாமையும். கோபம் இல்லாமல் சண்டை போடும் குணம். கோபம் இல்லாமல் பிறரைக் கடிந்து கொள்ளும் சுபாவம். தன் எண்ணங்களை ஒரே இடத்தில் செலுத்த முடியாமை. எந்த விஷயமாய் இருந்தாலும் அதற்குச் சரியான வார்த்தைகள் ஞாபகத்துக்கு வராமை. மனச் சோர்வு.

**உடல்:**—மிக எளிதிலே வியர்வை தோன்றி நீர்க் கோர்வை உண்டாகும். முகம் வெளுத்துக் கன்னங்களில் வட்டமாய்ச் சிவந்திருக்கும். சளிச் சவ்வுகள் காய்ந்து இருத்தல். நாக்கு காய்ந்து இருத்தல். குளிர்ந்த தண்ணீர் குடிக்க எரிச்சலுள்ள தாகம். உமிழ் நீர் ஏராளமாய் உற்பத்தியாகுதல். உள்ளங் கைகளில் வியர்வை. நாற்றமுள்ள வியர்வை. சிரங்குப் பொருக்குகளில் அரிப்பு. சருமம் காய்ந்து சூடாய் இருக்கும். பலவீனமும் உடம்பு முழுவதும் வலியுடன் ஓய்ச்சலும். மிகச் சீக்கிரத்தில் புத்தித் தடுமாற்றம் தோன்றும்.

**உபாதி கூடுதல்:**—குளிர்ந்த, ஈரக் கசிவுள்ள (பனி,

மழை பெய்யும்) பருவக் காலங்களில். இவ்விதப் பருவ காலங்கள் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. குளிரில் அடிபட்டால், விசேஷமாக உடலில் சூடு ஏற்பட்டிருக்கும் போது திடீரென்று குளிரில் அடிபட்டால், வியாதிகள் கூடுதலாகும். வியர்வையை அடக்கியதால் ஏற்படும் கோளாறுகளுடன் உடல் கழிவுகள் தடை செய்யப்படுதல், சருமக் கோளாறு தடை செய்யப்படுதல் ஆகியவைகளால் உண்டாகும் கோளாறுகளுக்கும் டல்கமாரா ஏற்றது.

உள்ளே அடக்கப்படுதல் என்ற தலைப்பின் கீழ்க் கவனிக்கவும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— குளிர்ந்த ஈரக் கசிவுள்ள பருவக் காலங்கள், நீர்க் கோர்வை, இருமல், வாத ரோகம், நீர்க் கோர்வையுடனும் வாத ரோகத்துடனும் சேர்ந்து தோன்றும் தலை வலி, தொண்டை வலி, கழுத்தில் பிடிப்பு, மூத்திரப் பையின் பாரிச வாதம், நீர்ச் சுரப்பு வீக்க முள்ள கோளாறுகள், ஸ்தனங்களில் பால் அடக்கப்படுதல் (ஸ்தனங்கள் வீங்கி அறிக்கும்), பிரசவத்துக்குப் பின் வெளியாகும் போக்கு, சுரப்பிகளில் வீக்கமும் கல் போல் கடினமாவதும், தொண்டைச் சுரப்பிகளின் வேக்காடு, இடுப்பில் விட்டுப் போகுதல், வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு, வயிற்று வலி, சீரணக் கோளாறுகள், கண் கோளாறுகள், காதுகளில் வலி முதலிய பல வியாதிகள் அதிகமாகும் அல்லது தோன்றும். "ஈரக் கசிவும் குளிர்ச்சியும் உள்ள இடங்களில் குடியிருப்பதால் கருச்சிதைவு நேரும் போல் தோன்றுதல்." சுரப்பிகளில் வீக்கமுள்ள க்ஷயரோகிகள்; சூடான பருவநிலை குளிர்ச்சியாக மாறும் போதும் குளிர்ச்சியினாலும் கோளாறுகள் தோன்றும். குளிரினால் அல்லது குளிர்ந்த பானங்களைக் குடித்ததினால் வலியுடன் சொட்டுச் சொட்டாக மூத்திரம் வெளியாகுதல். ஈரக்கசிவுள்ள



இடங்களில் குடியிருப்பதால் அல்லது வேலை செய்வதால் அல்லது ஏர் - கண்டிஷன் (Air - conditioned) என்று அழைக்கப்படும் குளிர் அறைகளில் தங்கி இருந்ததாலும் உண்டாகும் கோளாறுகள் (நேட்ரம் ஸல்ப்). குளிர்ந்த தண்ணீரில் நடந்ததால் உண்டாகும் கோளாறுகள் (நீர்க் கோர்வை, மூத்திரம் அடக்கப்படுதல் போன்றவை).

உபாதி குறைதல் :—சூட்டினால் பல குறிகள் சௌகரியமாகும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

ஏராளமான சளி உற்பத்தியாகுதல் :—குளிரும், ஈரக் கசிவும் மழையும் உள்ள பருவக்காலங்களில் தும்மலுடன் நீர்க்கோர்வை தோன்றி அதன் பிறகு கெட்டியான, மஞ்சள் நிறமுள்ள சளி ஏராளமாய் வெளியேறும். மூத்திரத்தில் (நீர்க்கோர்வையினால்) சளிபோன்ற வண்டல் தங்கும் அல்லது சளி ஏராளமாய் இருக்கும். எல்லாவித நீர்க் கோர்வைகளிலும் அவை ஈரக்கசிவும் குளிரும் உள்ள பருவக்காலங்களால் தோன்றி ஏராளமான சளி உற்பத்தியுடன் இருந்தால் டல்கமாரா ஏற்றதாகும். மூக்கிலிருந்தும் கண்களிலிருந்தும் நீர் ஏராளமாய் வெளிப்படும். திறந்த இடங்களில் இருக்கும் போது அதிகமாகும் (திறந்த இடங்களில் இருந்தால் சௌகரியம் தோன்றினால் நக்ஸ் வாமிகா). மூடிய அறைகளில் இருக்கும்போது சௌகரியமாய் இருக்கும். பெரிய காற்றுக் குழாய் முழுவதும் சளி அடைத்துக்கொண்டு குரல் கம்முதல். குரல் வளையிலும் பெரிய காற்றுக்குழாயிலும் ஏராளமான சளி உற்பத்தியாகிக் கக்குவாய் இருமலில் காணப்படுவதைப் போன்ற இருமல். மூத்திரக்

குழாய் வழியாய்ச் சளி வெளிப் படுதல். உமிழ்நீர் அதிக மாக உற்பத்தியாகும் (வயிற்றுக் கடுப்பில் இக்குறி தென்படலாம்); உமிழ் நீர் குழகுழப்பாகவும் சோப்புப் போலவும் இருக்கும். உமிழ்நீர் அதிகமாய் உற்பத்தியா னாலும் நாக்கு காய்ந்து அதிகத் தாகம் இருக்கும்.

**நீர்க்கோர்வையின் விளைவுகள்:—** "நீர்க் கோர்வை தோன்றும் போது ஒவ்வொரு தடவையும் அது கண் களில் தங்கும்." நீர்க் கோர்வை கண்களில் தங்கும் போது அவை சிவந்து இமைகள் வீங்கும். தொண்டையில் தங்கினால் அங்கு புண்ணும் வலியும் உண்டாகும். மூத் திரப்பையில் தங்கினால் (பல்ஸடில்லா) மூத்திரம் நாற்ற மாகவும் ஏராளமான சளியுடனும் இருக்கும். குடல் களில் தங்கினால் வயிற்றுப்போக்கு தோன்றும். மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்படும். மலம் அல்லது மூத்திரம் கழிக்கத் தூண்டுதலுடன் சில்லிப்பு.

**சருமம் அதிகமாகத் தாக்கப்படுதல்:—**மிருதுவான சரு மம், குளிர் ஒத்துக் கொள்ளாது; சருமக் கோளாறுகள், விசேஷமாக அரிப்புள்ள அழுகுணிச் சிரங்குகளும் சொறிந்தால் வில்லை வில்லையாகத் தடிக்கும் குணமுள்ள சருமக் கோளாறும் உண்டாகும். உடல் முழுவதும் பூச்சி கடித்தது போல் சிவந்த தடிப்புகள்; சுரம் இருப்ப தில்லை; ஆனால் அரிப்பும் சொறிந்தால் எரிச்சலும் உண்டாகும்; சூட்டினால் அதிகமாகிக் குளிர்ச்சியினால் குறையும். கெட்டியான, பழுப்பு அல்லது மஞ்சள் நிறமுள்ள பொறுக்குகள். அரிப்புடன் உள்ள சிவப் பான சருமக் கோளாறுகள், ஈரக்கசிவுள்ள பருவக் காலங்களில் கூடுதலாகும். மாதவிடாய்க்கு முன் சருமக் கோளாறு தோன்றும் (கோனியம்.) (ஏராளமான போக்



குள்ள மாதவிடாய் ஏற்படும் சமயத்தில், பெல்ல- டொன்னு, கிராபைடிஸ்). ஏராளமான, சிறிய இரத்தக் கட்டிகள் போன்ற சிரங்குகள். சருமத்தில் காய்ந்த பொறுக்குகள். பழுப்பான பொறுக்குகள், அரைக்கடி, முகம், மூக்கு, நெற்றி, பொட்டுகள், முகவாய்க்கட்டை, ஆகியவைகளிலும் விசேஷமாகக் கன்னங்கள் முழுவதும் கெட்டியான, பழுப்பு அல்லது மஞ்சள் நிறமுள்ள பொறுக்குகள். நீர்க்கசிவுடன் அல்லது வறண்ட கரப் பான் படை, விசேஷமாக முகத்தில், மண்டைத் தோலில் கெட்டியான பொறுக்குகள் ஏற்பட்டு அதனால் தலைமயிர் கொட்டுதல். பிறப்பு உறுப்புகள், யோனித் துவாரத்தை மூடியுள்ள தோல் மடிப்பு, பால்கொடுக்கும் பெண்களின் ஸ்தனங்கள் ஆகியவைகளில் கரப்பான் படை போன்ற சருமக் கோளாறு. படைகளைச் சுற்றிலும் சிவந்து தொட்டாலும் குளிர்ந்த தண்ணீர் பட்டாலும் வலியுண் டாகும். மண்டைத் தோலில் கடி. சதைப் பற்றுள்ள, பெரிய, மிருதுவான, தட்டையான பாலுண்ணிகள் முகத்திலும் அல்லது புறங்கைகளிலும் விரல்களிலும் (தூஜா) காணப்படும். வலி இல்லாத புண்கள்.

**சுரப்பிகள் அதிகம் தாக்கப் படுதல்:—**சுரப்பிகள் வீங் கி கல் போல் கடினமாகுதல். "ஸ்தனங்களிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் பருத்துக் கடினமாகவும் புண்ணாகவும் வலியுடனும் இருக்கும்." திடீரென்று ஏற் படும் அல்லது நீடித்து இருந்து வரும் குரல்வளை வேக் காடு குளிர்ந்த ஈரக்கசிவுள்ள பருவக் காலங்களில் அதிக மாகும். இறுக்கிப் பிடிப்பது போன்ற வலிகளுடன் விரைகள் வீங்குதல்.

**சில்லிப்பு உணர்ச்சி:—**பின்தலையில் சில்லிப்பு; கீழ்

முதுகிலும் குடல்களிலும் சில்லிப்பு உணர்ச்சி. இடுப்பு சில்லென்றிருத்தல். பாரிசவாதத்தினால் தாக்கப்பட்ட பாகங்கள் பனிக்கட்டி போல் சில்லென்றிருக்கும். குளிர்ந்த உணர்ச்சி முதுகிலிருந்து ஆரம்பிக்கும். சூட்டினால் சௌகரியம் ஏற்படுவதில்லை. மாலையில் கூடுதலாகும்.

**பாரிச வாதம்** :—கைகால்களிலும் சிற்சில இடங்களிலும் பாரிச வாதம், நாக்கு, சுவாச கோசம், இருதயம், ஆகியவைகளில் பாரிச வாதம். ஈரக் கசிவுள்ள இடங்களில் படுத்துத் தூங்கியதால் குரல்வளைத் தசைகளில் பாரிச வாதம் தோன்றிப் பேச முடியாமல் போகும். மூத்திரப்பையின் பாரிசவாதத்தினால் மூத்திரம் தானாகவே வெளியாகும்.

**அடக்கப்படுதல் (வியர்வை, கழிவுகள், சருமக்கோளாறுகள்)**:—வியர்வையை அடக்கியதால் தோன்றும் வாத ரோகம். வியர்த்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று குளிர்ச்சி ஏற்பட்டதால் உண்டாகும் பலவகைப் பட்ட கோளாறுகள். "வியர்வையை அடக்கியதால் தொண்டைப்புண்," நீர்ச்சுரப்புள்ள வீக்கம். கழிவுகளை அடக்கியதால் தோன்றும் வியாதிகள். நீர்க்கோர்வையை அடக்கியதால் (மூக்கு காய்ந்து போகும்) பயங்கரமான தலைவலி தோன்றும். சருமக் கோளாறுகளை அடக்கியதால் பாரிசவாதம், காசம் முதலிய பல கோளாறுகள் தோன்றுதல். "அறிப்புள்ள சரும வியாதியை அடக்கியதால் கைகளிலும் கால்களிலும் உள்ள எலும்புகளிலும் கட்டி போல் வீக்கங்கள் தோன்றும்."

## மற்ற குறிகள்

மலேரியா, வாத ரோகம் ஆகியவைகளுக்குப் பிறகு உடம்பு முழுவதும் லேசான நீர்ச்சுரப்பு.—மூத்திரம்



குழம்பு போலவும் வெண்மையாகவும் இருக்கும். உடலில் பல இடங்களில் ஊரும், குருகுருக்கும், அறிக்கும் உணர்ச்சி—உடம்பு முழுவதும் மிக வேகமாக வீங்குதல்.

உறவு :—பிரயோனியா, கல். கார்ப்; லைகபோடியம், ரஸ் டாக்ஸ், ஸேபியா, வெராட்ரம் ஆகியவைகளுக்குப் பிறகு நன்றாக வேலை செய்யும். பாரிடா கார்புக்கு முன்பும் பிறகும் நன்றாக வேலை செய்யும். பெல்லடோனாவையும் லாச்சஸிஸையும் டல்கமாராவுக்குப் பிறகு கொடுக்கக் கூடாது.

ஒரு டைபாய்டு சுரக்கேசில் வியாதியஸ்தருக்கு **டல்கமாரா 200** கொடுத்து ஆறு மணிநேரம் கழித்துக் கவனக் குறைவினால் **லாச்சஸிஸ் 200**ஐ ஒரு வேளை கொடுத்தேன். நான் விரும்பியபடி **லாச்சஸிஸ்** நல்ல முறையில் வேலை செய்ததைப் பார்க்க நான் ஆச்சரியப் பட்டேன். கடைசியில் வியாதி மிகச் சீக்கிரத்தில் குணம் ஆகியது. **டல்கமாராவுக்குப்** பிறகு **லாச்சஸிஸ்** கொடுப்பது கூடாது என்றிருந்த போதிலும் குணம் ஏற்படுவது நிற்கவில்லை. இதிலிருந்து நீங்கள் முறிவு ஔஷதம் பார்க்கத் தேவை இல்லை யென்று முடிவு செய்யவேண்டாம். பார்த்துக் கொடுப்பதுதான் நல்லது.

**ஒப்பிடுதல்** :—குளிர்ந்த, ஈரக்கசிவுள்ள காற்றினால் ஏற்படும் கோளாறுகளில் **ஆர்ஸனிகம், கல். கார்ப், நக்ஸ் மாஸ்சாடா** ஆகியவைகளுடன். குளிர்ந்த, வறண்ட காற்றினால் ஏற்படும் கோளாறுகளுக்கு **அகோனைட், பிரயோனியா, ஹிப்பார் ஸல்பர்** ஆகியவை தேவைப்படும். ஈரத்தில் அடிபட்டு உண்டாகும் கோளாறுகளில் அசைந்தால் சௌகரியம் தோன்றினால் **ரஸ் டாக்ஸ்**. கோடைக் காலத்தில் குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் தோன்றும் வயிற்றுப்போக்கில் **பிரயோனியாவுடன்**.

# யூபடோரியம் பர்போலியேட்டம்

## (EUPATORIUM PERFOLIATUM)

**முன்னுரை** :—அமெரிக்காவில் உள்ள ஐக்கிய மாகாணங்களில் இவ்வௌஷதம் ஏரி, குளம், ஆறுகள் ஆகிய நீர் நிலைகளின் கரைகளிலே வளர்கிறது. சதுப்பு நிலங்கள், ஏரிகள், ஆறுகள் ஆகியவைகளுக்கு அருகில் உள்ள இடங்களில் கெட்ட காற்றினால் ஏற்படும்மலேரியாச் சுரங்களை வேரறுக்க இது விலை மதிப்பிட முடியாத ஒரு ஹோமியோபதி ஔஷதமாகும். இதன் குறிகள், குறிப்பாக முறைச் சுரத்துக்குத் தக்க ஔஷதம் என்று கவனிக்கும்போது, மிகத் தெளிவாக இருக்கின்றன. மலேரியா, இன்புளுயன்ஸா ஆகிய இரு வகைச் சுரங்களுக்கும் யூபடோரியமும் பாப்டீஷியாவும் மிகமிகச் சிறந்தவைகளாம். யூபடோரியம் மிக விரைவாகவும் நிச்சயமாகவும் வேலை செய்கிறது.

தாய்த்திரவத்திலிருந்து ஸி.எம் (C. M.) வரை உள்ள எல்லா வீரியங்களிலும் இது வேலை செய்கிறது. நான் அனேகமாக 3X, 30, 200 ஆகிய வீரியங்களிலேயே உபயோகிக்கிறேன்.

மேலே குறிப்பிடப்பட்ட இரு வியாதிகளிலும் எலும்புகள் முறிந்து போய்விடும் என்று தோன்றும் அளவுக்குக் கடுமையான வலிகள் எலும்புகளில் காணப்படும். யூபடோரியம் வேதனை தரும் வலிகளைப் போக்குகிறது. டெங்கு (Dengue) என்று அழைக்கப்படும் எலும்புகளில் கடுமையான வலியுள்ள சுரத்துக்கு யூபடோரியம் மிகச்சிறந்தது.

முறைச்சுரங்களில் குளிர் நிலைமை முடிந்த பிறகு கசப்பான தண்ணீரும் பித்தமும் வாந்தி எடுக்கப்பட்டால் யூபடோரியம் ஏற்றது என்று நிச்சயமாய் முடிவு செய்யலாம். எலும்பு வலிகள் கூட அவ்வளவு முக்கியமானவை அல்ல



என்று சொல்லப்படுகிறது. முறைச் சுரங்களில் வியாதி மிக ஒழுங்காக முறை வைத்துத் தோன்றும்.

## பொதுவான குறிகள்

**தகுதி** :—கிழவர்களின் வியாதிகள், நாட்பட்ட, பித்தம் அதிகரித்துள்ள, முறைச்சுரத்தினால் ஏற்படும் இரத்த சோகை போன்ற பலவீனமான நிலைமை, கள் குடிப்பழக்கத்தினால் தளர்ந்து போனவர்கள்.

**மனம்** :—யூபடோரியத்தைப் போலவே நக்ஸ் வாமிகாவிலும் கை கால்களில் வலி இருந்தாலும் நக்ஸ் வாமிகா வியாதியஸ்தருக்கு அதிகக் கோபக்குணம் இருக்கும். யூபடோரியம் வியாதியஸ்தர் வருத்தமாகவும் மனம் தளர்ந்தும் இருப்பார். பிரயோனியாவில் வியர்வை தாராளமாய் உற்பத்தியாகும். யூபடோரியத்தில் வியர்வை மிகவும் குறைவாய் இருக்கும். யூபடோரியத்தில் வியாதியஸ்தர் வலியினால் நிலைகொள்ளாமல் இருப்பார். அசையாமல் இருக்கவேண்டுமென்று விரும்பினாலும் அவ்வாறு இருக்க முடியாது. பிரயோனியாவில் வியாதியஸ்தர் அசையாமல் இருப்பார். முனகுதல் (எலும்புகளில் முறிக்கும் வலியுடன் சேர்ந்து காணப்படும்).

**உடல்** :—வாயின் மூலைகளில் வெடிப்புகளும் புண் உள்ள வலியும். மஞ்சட்காமாலை. உணவின் வாசனையும் சமைக்கும் பொருள்களின் வாசனையும் குமட்டலை உண்டாக்கும். ஆடைகளை இறுக்கிக் கட்டினால் வேதனையாய் இருக்கும். கல்லீரல் பகுதியில் நடக்கும்போது அல்லது இருமும்போது புண்ணுள்ள வலி; அடி வயிறு பருத்துப் பானைபோல் இருக்கும். வாயில் மண்போல் அல்லது கசப்பான சுவை; உணவின் சுவை தெரியாது. குளிர்ந்த தண்ணீரையும் புளிப்பான பானங்களையும்

குடிக்கத் தாகம். நாக்கு மஞ்சளாய் இருக்கும். பாதங்கள், குதிகால்கள் இரண்டிலும் நீர்ச்சுரப்புள்ள வீக்கம்.

**உபாதிகூடுதல்:**–(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):– மல்லார்ந்து படுத்தால் இருமல் அதிகமாகும் (முகத்தைத் தலையணைக்குள் புதைத்துக்கொண்டு மண்டியிட்டுப் படுத்தால் சௌகரியமாய் இருக்கும்). சுவாசகோச வியாதிகளில் இடது பக்கமாய்ப் படுக்கமுடியாது. உணவு உட்கொண்டால் வயிற்றில் கடுமையான, பொறுக்க முடியாத வலி தோன்றி வாந்தி செய்தால்தான் சௌகரியப்படும். கடுமையான தாகம்; ஆனால் குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் விரைவிலே குளிர்தோன்றி உடல் நடுக்கமும் பித்தம் வாந்தி செய்வதும் உண்டாகும். முறைச்சுரத்தில் ஏராளமான வியர்வை இருந்தால் அது எல்லா வலிகளையும் போக்கும்; ஆனால் தலைவலியை அதிகரிக்கும்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

புண்ணுள்ள வலி: **அடிபட்ட வலி: இசிவு தரும் வலி :—** தசைகளில் அதிகமான புண்ணுள்ள வலி, மிக ஆழமாகச் சென்று எலும்புகளையும் தாக்கும். இவ்வலி அதன் உச்சநிலைக்குப் போகும்போது எலும்புகளில் இசிவு உண்டாகும். சில சமயங்களில் இசிவு வலிகள் மிக அதிகமாகி எலும்புகள் முறிந்துவிடும் போல் தோன்றும். யூபடோரியத்தில் காணப்படும் புண்ணுள்ள வலிகளால் "அடிபட்ட உணர்ச்சியும்" "இசிவு வலிகளும்" உண்டாகும். **உடல் முழுவதும் எலும்பு முறிந்து விட்டது போல் அடிபட்ட உணர்ச்சி இவ்வௌஷதத்தில் காணப்படுகிறது (ஆர்னிகா, பைரோஜனியம்). யூபடோரியத்தின் அடிபட்ட வலிகளில் எலும்புகளில் உள்ளூரக் கடுமையான இசிவு வலி காணப்படும்"** என்று நாஷ் குறிப்பிடுகிறார். முதுகு, தலை மார்பு, கைகால்கள் முக்கியமாக **மணிக்கட்டுகள், இவ்விடங்களில் எலும்பு நழுவி விட்டது**



போல் இசிவு தரும் வலிகள். தசைகளில் புண்ணுள்ள உணர்ச்சியுடன் எலும்புகளில் கடுமையான வலிகள். கை கால்களிலும் முதுகிலும் எலும்புகள் முறிந்து விட்டதுபோல் கடுமையான இசிவு வலிகள்.

ஹோமியோபதியின் தத்துவங்களுக்கு இணங்க யூபடோரியம் உபயோகமாகும் எலும்பு வலிகள் அனேகமாக இன்புளூயன்ஸா, மலேரியா, டெங்கு ஆகிய சுரங்களில் காணப்படுகின்றன. வலி உடம்பு முழுவதும் பொதுவாகப் பரவி உள்ள போதும் மிகக் கடுமையாக இருக்கும் போதும் அதற்கு ஏற்ற ஔஷதம் யூபடோரியமே என்பது உறுதியாகும்.

உள்ளூரப் புண்ணுள்ள உணர்ச்சியுடன் தலைவலி. **கண் விழிகளில் புண்ணுள்ள வலி** (சுரத்திலும் நீர்க்கோர்வையிலும்). இப்புண்ணுள்ள வலி ஒருவிதமான அடிபட்ட வலியைப்போல் இருக்கும். காற்றுக்குழாயிலும் மார்பிலும் அதிகமான புண்ணுள்ள உணர்ச்சியுடன் இருமல். **இருமும் போது மார்பில் வலி ஏற்படுவதால் அதைக் கைகளால் பிடித்துத் தாங்கிக் கொள்வார். (பிரயோனியா, டிரோஸிரா, நேட்ரம் ஸல்ப்).** அசைந்தால் அல்லது இருமினால் கல்லீரல் பக்கங்களில் வலி. இன்புளூயன்ஸாவில் **"முனகலுடன் கடுமையான இசிவு வலிகள் எலும்புகளில் இருப்பது போல் தோன்றும்."** கீல்வாயுவினால் புண்ணுள்ள உணர்ச்சி, எலும்பு மூட்டுகளில் வேக்காட்டுடன் முண்டுகள் ஆகியவைகளும் தலைவலியும் இருக்கும்.

**வாந்தி : பித்த ஆதிக்கம் :—தீராத தாகம், தண்ணீர் குடித்தால் குமட்டலையும் வாந்தியையும் உண்டாக்கி முறைச் சுரத்தில் விரைவில் குளிர் நிலைமையைத் தோன்றச் செய்யும். குளிர் நிலைமை நீங்கியவுடன் குமட்டலும் கசப்பான தண்**

ணீரும் பித்தமும் வாந்தி செய்யப்படுவதும் இவை தண்ணீர் குடித்தால் அதிகமாவதும். சூடு உள்ள நிலைமையில் குமட்டல் இருக்காது என்றே சொல்லலாம். ஆனால் குளிர் நிலைமை நீங்கும் சமயத்தில் வாந்தி ஏற்படாவிட்டால் சூடுள்ள நிலைமையின் முடிவில் கசப்பான வாந்தி உண்டாகும். சருமமும் இமைகளின் உட்புறத்தோலும் மஞ்சளாய் இருத்தல்.

**வினோதமான குறிகள் :**—முறைச் சுரத்தில் அனேகமாக வியர்வை கொஞ்சமாய் இருக்கும் அல்லது கொஞ்சங்கூட இருக்காது; சில சமயங்களில் இரவில் ஏராளமான வியர்வை (பலவீனம் ஏற்படுவதில்லை). வியர்வை உண்டானால் எல்லாக் குறிகளும் சௌகரியமாகும். ஆனால் தலை வலி மட்டும் அதிகமாகும். குளிர் கடுமையாய் இருக்கும் போது வியர்வை குறைவாய் இருக்கும் அல்லது கொஞ்சம் கூட இருக்காது. குளிர் கடுமையாக இல்லாத போது ஏராளமான வியர்வை இருக்கலாம். "உடம்பில் உள்ள சூட்டுக்கு இருக்கவேண்டியதை விட அதிகமான அளவு எரிச்சல் காணப்படும்". சில கேசுகளில் குளிர் ஒரு முறை காலை வேளையிலும் மறு முறை மாலையிலும் தோன்றும். ஒரு முறை காலை 9 மணிக்கும் மறு முறை பகல் 12 மணிக்கும் ஆரம்பித்தல். "கொட்டாவி விடுவதும் சோம்பல் முறிப்பதும்; உடம்பில் உள்ள குளிருக்கு இருக்கவேண்டியதை விட அதிகமான அளவு நடுக்கம் தோன்றும்". சூடுள்ள நிலைமையிலும் அதிக குளிர் நடுக்கம். "ஒரு வாய்த் தண்ணீர் குடித்தால் உடம்பில் நடுக்கம் ஏற்படும்". கடுமையான தாகம் ஆனால் குளிர்ந்த தண்ணீர் குடித்தால் நடுக்கமும் (வெட வெடவென்று நடுக்கும் குளிர்) பித்தம் வாந்தி செய்யப்படு



வதும். மூத்திரம் ஒரு சமயம் ஏராளமாகவும் மறு சமயம் குறைவாகவும் இருக்கும்.

### மற்ற குறிகள்

முறைச் சுரத்தில் குளிர் காலை 7 மணிக்கோ அல்லது 7 மணியிலிருந்து 9 மணிக்குள்ளாகவோ தோன்றும் பெருவாரியாகத் தோன்றும் இன்புளூயன்ஸாச் சுரத்தில் அதிக உடல் சோர்வு. நாட்பட்ட தளர்ந்த இருமல்; மார்பில் வலியுடன் இரவில் அதிகமாய் இருக்கும். சின்னம்மை அல்லது முறைச் சுரம் உள்ளே அடக்கப்படுதல் ஆகிய காரணங்களால் இவ்வித இருமல் உண்டாகும். இடது பக்கமாகக் கீழே தள்ளிவிடும் உணர்ச்சியுடன் தலைச் சுற்றல். வலிகள் மிக வேகமாகத் தோன்றுதல் அதேபோல் மிக வேகமாய் மறைதல் (பெல்லடொன்னா, மெக்னீஷியா பாஸ், யூபடோரியம் பர்பூரியம்). மலேரியா அடிக்கடி ஏற்பட்டதனால் கால்களில் நீர்ச் சுரப்புள்ள வீக்கம் (ஆர்ஸனிகம், சைனா, நேட்ரம் மூர்).

**உறவு :—நேட்ரம் மூர், ஸேபியா** இவ்விரண்டும் இவ்வௌஷதத்துக்குப் பிறகு நன்றாக வேலை செய்கின்றன.

---

## யூப்ரேஷியா
## (EUPHRASIA)

**முன்னுரை :—க்ராவோகில்** (Grauvogl) என்பவர் குறிப்பிட்டிருப்பதுபோல இவ்வௌஷதம் தயாரிக்க உதவும் செடியின் இலைகளில் நடுவில் கண்ணின் கருவிழி போன்ற கறுப்பான புள்ளி இருப்பதைக்கண்டு கண்களைப் பற்றிய வியாதிகளுக்கு இவ்வௌஷதம் பயன் படுமென்று "குத்துமதிப்பாக" மதிப்பிட்டுப் பழய காலத்தில் உபயோகித்தும் வந்தனர். ஹோமியோபதி முறைப்படிப் பரிக்ஷை செய்து

உபயோகிக்கப் பட்டபோது மேலே கூறிய குத்து மதிப்பில் ஒரு பிசகும் இல்லையென்பது தெரிய வந்தது.

ஆனால் இதற்காகக் கண்களைப் பற்றிய எல்லா வியாதிகளுக்குமே இது சஞ்சீவி என்று சொல்ல முடியாது. ஔஷதப் பரீட்சையில் கண்களைப் பற்றியவரை யூப்ரேஷியா கார குணமுள்ள கண்ணீர்ப் பெருக்கை உண்டாக்கியது. ஆகவே கண்பற்றிய வியாதிகளில் அங்கிருந்து வெளிப்படும் கழிவு தண்ணீராய் இருந்தாலும் அல்லது வேறு எப்படியிருந்தாலும் அது கார குணமுள்ளதாய் இருந்தால் அதற்கு யூப்ரேஷியா தேவைப்படும். யூப்ரேஷியா அதன் சக்தியைச் சளிச் சவ்வுகளில்தான், விசேஷமாகக் கண்கள் (இமைகளின் உட்புறம்) மூக்கு ஆகியவைகளில், காண்பிக்கிறது. யூப்ரேஷியாவில் மூக்கிலிருந்து வெளிப்படும் நீர் காரம் இல்லாமல் இருக்கும். இக்குறி அல்லியம் ஸிபாவுக்கு நேர் எதிராக இருக்கிறது.

## பொதுவான குறிகள்

**தகுதி:**—கீழே விழுதல், அடிபடுதல், உடம்பின் வெளிப்புறத்தில் அடிபடுதல் (ஆர்னிகா மொண்டானு) ஆகியவைகளால் உண்டாகும் கெடுதலான விளைவுகள். அடிபட்டதினால் தோன்றும் கண் கோளாறுகளில் (கண் வேக்காடு) கண்களிலிருந்து காரமான நீர் வெளிப்படுவதுடன் கருவிழியிலோ அல்லது அதன் அருகிலோ சிறிய நீர்க் கொப்புளங்களும் தோன்றும் நிலைமை. இச்சமயங்களில் ஆர்னிகா பயன்படாது. யூப்ரேஷியா தான் தேவையாகும்.

**மனம்:**—அதிகமாய்ப் பேசமாட்டார். பிறருடன் பேச வெறுப்பு.

**உடல்:**—பகல் வேளையில் அதிக மந்த குணம். உடலில் சில்லிப்பு உணர்ச்சி; படுக்கையில் படுத்திருந்தாலும் சில்லிப்பு உணர்ச்சி குறையாமை. திறந்த இடங்களில் நடக்கும் போது அடிக்கடி கொட்டாவி விடுதல். மேக வெட்டை சம்பந்தமான கெட்ட சதை வளர்ச்சி.



**உபாதி கூடுதல்:**—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—குளிர்காற்றில் நின்றாலும் குளிர்காற்று வீசினாலும் கண்களிலிருந்து நீர் வடிதல். கீழே படுத்தால் நீர்க்கோர்வை கூடுதலாகும். திறந்த இடங்களில் நடக்கும் போது அடிக்கடி கொட்டாவி ஏற்படும். சூடுள்ள தென்றல் காற்றுப் பட்டால் நீர்க்கோர்வை அதிகமாகும். பகல் வேளைகளில் மட்டும் இருமல் (பெர்ரம், நேட்ரம் மூர்).

**உபாதி குறைதல்:**—இருமல் இரவில் குறையும். (அனேகமாக எல்லா வகையான இருமல்களும் இரவில் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது).

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**ஒரு குறிப்பு:**—இவ் ஔஷதத்தின் இயல்புகளைக் கவனிக்கும்போது ஒன்றுக் கொன்று நேர் விரோதமான சில குறிகள் இதில் இருப்பது தெளிவாய்த் தெரியவரும். அவை யாவன. கழிவுகள் ஏராளமாய் இருக்கும் அல்லது குறைவாகவும் இருக்கும். கழிவுகள் கார குணமுள்ளவையாகவோ அல்லது சிறிதுகூட காரம் இல்லாமலோ இருக்கும். பகலில் திறந்த இடங்களில் கொட்டாவி உண்டாகுதல். பகலில் மட்டும் இருமல். மாதவிடாய் உரிய காலத்தில் தோன்றும். ஆனால் போக்கு மிகவும் குறைந்த நேரமே இருக்கும். சூரிய வெளிச்சத்தைக் கண்களால் பார்க்கமுடியாது. விளக்குப் போன்ற செயற்கை வெளிச்சத்தைக் கண்டால் இன்னும் மோசமாகும். தூங்கமுடியாமல் தூக்கக்கலக்கம்,

**ஏராளமான கழிவுகள்:**—கண்களிலிருந்து காரமான நீர் ஏராளமாய் வருதல் (கண் வேக்காட்டில் அல்லது தக்குவாய் இருமலில் இருமும் போது). மூக்கிலிருந்து

காரம் இல்லாத நீர் ஏராளமாய் வெளிப்படுதல். கடுமையான இருமலுடன் ஏராளமான கோழை வெளியேற்றத்துடனும் காலையில் ஏராளமாகவும் தாராளமாகவும் நீர் வெளிப்படும் நீர்க் கோர்வை. சாதாரணமாகக் காறினாலும் ஏராளமான கோழை வெளிப்படும், காலை வேளைகளில் அதிகமாய் இருக்கும். இரவு பகல் எந்த நேரமும் கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டே இருப்பதுடன் காலையில் இமைகள் ஒட்டிக் கொண்டிருக்கும். கண்களிலிருந்தும் கண் இமைகளிலிருந்தும் ஏராளமான சீழ்ப் பொருள், சில சமயங்களில் இரத்தம் கலந்து வெளியாகும்.

குறைவான கழிவுகள் :—மாதவிடாய் உரிய காலத்தில் தோன்றும். வலி இருக்கும்: போக்கு ஒரு மணி நேரமே நீடிக்கும். போக்கு தாமதமாகத் தோன்றி குறைவான அளவும் சிறிது நேரமே நீடித்திருப்பதும் (ஒரே ஒரு நாள் மட்டும் இருக்கலாம்).

கார குணம் :—அதற்கு நேர் விரோதமாக காரமே இல்லாத குணம். ஏராளமான, காரமே இல்லாத நீர்க் கோர்வையுடன் ஏராளமான, கார குணமுள்ள (அல்லது புண்ணை உண்டாக்கும் தன்மையுள்ள) கண்ணீர்ப் பெருக்கு. கண்களில் குழிப் புண்கள் தோன்றி கெட்டியான, பட்ட இடங்களைப் புண் செய்யும் குணமுள்ள கழிவுகள் வெளியாகும். கார குணமுள்ள கண்ணீர் கன்னங்களில் படுவதால் பட்ட இடங்களில் தோல் உறிந்து பருக்கள் தோன்றும். கெட்டியான, சீழைப் போன்ற கழிவும் இருக்கலாம். அதுவும் பட்ட இடங்களைப் புண் செய்யும். மூக்குத் துவாரங்களில் தோல் உறிந்து தொட்டால் வலி உண்டாகும்.

மாறித் தோன்றுதல் :—மூலம் மறைந்தவுடன் இருமல் தோன்றும். வயிற்று வலியும் கண்கள் பற்றிய கோளாறுகளும் மாறி மாறித் தோன்றுதல்.



## மற்ற குறிகள்

கண் கருவிழிகளைச் சீழ் மூடியிருப்பது போல் உணர்ச்சி அல்லது நிறையச் சீழும் இருக்கலாம். அதனால் பார்வை தடைப்பட்டு சீழை வெளியேற்ற அடிக்கடி கண்களைச் சிமுட்டுதல் அல்லது இமைகளை அமுக்குதல். தொண்டையிலுள்ள கோழையைக் காறித் துப்பினால் வாந்தி எடுத்தல். காலையில் தொண்டையிலுள்ள நாற்றமுள்ள கோழையை வெளியேற்ற முயற்சி செய்தால் உடனே காலையில் சாப்பிட்ட உணவு வாந்தியாகும் வரை குமட்டல் இருந்து கொண்டே இருக்கும். கருவிழிகளில் ஒளி பாய்ந்து செல்ல முடியாமல் மங்கிவிடும் போது இவ் வௌஷதத்தைத் தண்ணீரில் கலந்து லோஷன் (Lotion) செய்து, விடாமல் உபயோகித்து வந்தால் முன் போல் பிரகாசம் உண்டாகும். கண்களில் மணல் இருப்பது போல் உறுத்தல். கடுமையான எரிச்சலுடன் ஆசனவாயில் நீடித்த காலமாக இருந்து வரும் தட்டையான கெட்ட சதை வளர்ச்சி; எரிச்சல் இரவில் அதிகமாகும். ஆணின் பிறப்பு உறுப்புகளில் மேக வெட்டை சம்பந்தப்பட்ட கெட்ட சதை வளர்ச்சி; அறிப்பும் கொட்டும் வலிகளும் தொட்டால் வலியும் எரிச்சலும் இருக்கும். ஆசனவாயில் வளரும் கெட்ட சதையில் நடந்தால் அறிப்பும் தொட்டால் எரிச்சலும் உண்டாகும். சுக்கிலச் சுரப்பிகளின் வேக்காட்டில் இரவு நேரங்களில் மூத்திரப் பையில் வேதனை (மூத்திரம் கழிக்க அடிக்கடி எழுந்திருக்க நேரும்). இக்குறி அனுபவத்தில் கண்டு பிடிக்கப்பட்டது; நம்பிக்கையானது.

# பெர்ரம் மெட்டாலிகம்

## (FERRUM METALLICUM)

**முன்னுரை :**—நம் உடலில் இரும்புச் சத்து குறைந்தால் நாம் உண்ணும் உணவில் இரும்புச் சத்து இல்லையென்று எண்ணுவது தவறு. ஆகவே இரும்பை எந்த உருவத்தில் உட்கொண்டாலும் அது உடம்பில் ஒட்டுவதில்லை. இரும்புச்சத்தை எடுத்துக்கொள்ள முடியாதபடி உடலில் ஏதோ ஒரு கோளாறான நிலைமை இருப்பதே இதற்குக் காரணம். ஒருவருக்கு இரத்த சோகை ஏற்பட்டிருந்தால் அவருடைய மொத்தக்குறிகளை அடிப்படையாய்க் கொண்டே சிகிச்சை செய்யவேண்டும். அதுதான் இயற்கையான வழி. **அதிக இரத்தம் இருப்பதுபோலப் பொய்த் தோற்றம் அளிக்கும்** குறிகளைப் பிரதானமாகவுள்ள கேசுகளுக்கே **பெர்ரம்** தேவைப்படுகிறது.

க்ஷய சம்பந்தமான வியாதிகளில் உபயோகமாகும் முக்கியமான ஔஷதங்களில் **பெர்ரமும்** ஒன்று.

## பொதுவான குறிகள்

**தகுதி :**—இளவயது, பலவீனம், இரத்த சோகை, சூதக பாண்டு, ஆகியவைகளுடன் அல்ப காரணங்களாலும் முகம் சிவந்து, ஊக்கத்துடன் எந்த வேலை செய்தாலும் களைப்பு உண்டாகும் உடல் உள்ளவர்கள். தைரியமும் சந்தோஷமும் உள்ளவர்கள். **"உடல் மெலிந்து பலவீனமும் சூதக பாண்டுவும் இருந்தாலும் நெருப்புப் போல் சிவந்த முகம் உள்ள பெண்கள்". "சிவந்த முகமுடைய கிழவர்கள்".** வியாதியஸ்தருக்குச் சில்லிப்பு உணர்ச்சி இருக்கும்; சூட்டை விரும்புவார், நல்ல காற்றையும் காற்று வீசுவதையும் கண்டு நடுங்குவார். க்ஷய ரோக முள்ளவர்கள்.



**மனம் :**—முன்கோபம். மெல்லிய ஓசைகளையும் (காகிதத்தைக் கசக்குவது போன்ற) பொறுக்க முடியாது. சிறிது எதிர்த்துப் பேசினாலும் கோபம் உண்டாகும்.

**உடல் :**— கை கால்களில் இழுத்தல். கை கால்களில் (பகல் வேளையில்) சுருட்டி இழுத்தல். அதிகச் சோர்வும் பொதுவான பலவீனமும் (அனேகமாகப் பாரிசவாயு வந்துவிட்டது போல்), அதிகப் பலவீனத்தினால் கீழே படுத்துக் கொள்ள விரும்புவார். உடல் மெலிவு, எலும்பு மூட்டுகளில் உடையும் ஓசை. சருமம் அழுக்குப்படிந்து மங்கி இருக்கும். கைகளிலும் கால்களிலும் நீர்ச்சுரப்புடன் வீக்கம். கண்களைச் சுற்றிலும் வீங்கியதுபோல் உப்பி இருத்தல். தூங்கும்போது கண்கள் பாதி திறந்து இருக்கும். புளிப்பான பொருள்கள், முட்டை, மாமிசம் ஆகியவைகளில் வெறுப்பும் தின்றால் உடலுக்கு ஒத்துக் கொள்ளாமல் இருப்பதும்; விசேஷமாக மாமிசம் ஒத்துக்கொள்வதில்லை. வாயு இல்லாமல் அடிவயிறு பருத்துக் கல் போல் கடினமாய் இருத்தல். அடிவயிற்றைத் தொட்டாலும் நடந்தாலும் அங்குள்ள தசைகளில் வலியும் அடிபட்ட உணர்ச்சியும் உண்டாகும். மார்பில் அமுக்கும் உணர்ச்சி, அதனால் மூச்சுவிடுவது சிரமமாய் இருக்கும். கைகால்கள் சில்லென்றிருக்கும். சிரமப்பட்டு மூச்சு விடும்போது மூக்குத் துவாரங்கள் விரியும். அசுத்த இரத்தக் குழாய்கள் புடைத்திருத்தல்.

**உபாதி கூடுதல் :**—எல்லாக் கோளாறுகளும் இரவில் அதிகமாகும். குளிர், நல்ல காற்று, காற்று வீசுதல் ஆகியவை ஒத்துக்கொள்ளாது, நடுக்கம் ஏற்படும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):- பெரும்பாலான குறிகள் அசைவினால், குறிப்பாகத் திடீர்

என்றும் வேகமாகவும் ஏற்படும் அசைவினுல் அதிகரிக்கும். திடீரென்று எழுந்திருந்தால் தலைச்சுற்றல் உண்டாகி அதனுல் கீழே உட்கார நேருதல். வேகமான அசைவினுல் அல்லது அளவு மிஞ்சிய உடல் உழைப்பினுல் பலவீனம், மூச்சுத் திணறல், மயக்கம், ஆகியவை தோன்றும். ஓடும் தண்ணீரைக் கண்டால் மயக்கம். ஆற்றுப் பாலத்தின் மேல் நடக்கும்போதுகூட மயக்கம் உண்டாகக்கூடும். வலிகளும் மற்ற கோளாறுகளும் ஓய்வாக இருக்கும்போது தோன்று கின்றன (அதாவது உட்கார்ந்திருந்தால் அல்லது படுத் திருந்தால்). ஓய்வாய் இருக்கும்போது மூச்சுத்திணறல், இருதயப் படபடப்பு, பலவீனம், நிலை கொள்ளாமை (அடிக்கடி கை கால்களை ஆட்டிக்கொண்டே இருக்க வேண்டும்), தசைகளில் இழுப்பு முதலிய கோளாறுகள் தோன்றுகின்றன.

குறிகள் பொதுவாகக் குளிரினுலும் குளிர்ந்த பருவக் காலங்களினுலும் கூடுதலாகின்றன.

உணவு உட்கொள்ளும்போது அல்லது தண்ணீர் குடிக் கும்போது வயிற்றுப் போக்கு (க்ரோடன் டிக்லியம்). உணவு உட்கொண்டிருக்கும்போதே தண்ணீர் குடித்துக் கொண் டிருக்கும்போதே வயிற்றுப்போக்கு என்பதை மறக்கக் கூடாது. அந்தக் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயத்திலேயே வயிற்றுப்போக்கு தோன்றுவதையும் காரியம் நடைபெற்ற மறுகணமே வயிற்றுப்போக்கு என்பதுஇல்லை யென்பதையும் நீங்கள் கவனிக்கவேண்டும். காலராவில் வியாதியஸ்தர் உணவு அல்லது தண்ணீர் உட்கொள்ள முயற்சி செய்தவுடன் அல்லது அசைய ஆரம்பித்த உடன் வயிற்றுப்போக்கு உண்டாகுமானுல் பெர்ரம் உபயோகப் படும். சாப்பிட்ட அல்லது குடித்த மறுகணமே வாந்திசெய்தல் (குமட்டலே இருப்பதில்லை).

எல்லாக்குறிகளும் வியர்வை உண்டாகும்போது அதிக



மாகும். உடலின் உயிர்த்தண்ணீர் (இரத்தம், இந்திரியம்) நஷ்டமாகி விட்டால் குறிகள் அதிகமாகும். இயற்கைக்கு மாறுன வழிகளில் சிற்றின்பத்தை நாடியதால் பலவீன மடைந்து அதனுல் க்ஷயரோகம் தோன்றக் கூடிய அளவுக்கு நிலைமை முற்றிவிட்டபோது மற்ற குறிகளும் ஒத்திருந்தால் பெர்ரம் பெரிதும் பயன்படும். இரத்தப் பெருக்கு ஏற்பட்ட பிறகு ஏற்படும் பாரிசவாத நிலைமை கள்.

அளவு மிஞ்சிக் கொயினுவை உட்கொண்டதினுல் மலேரியாச்சுரம் உள்ளே அமுங்கி நீர்ச்சுரப்பும் மற்ற குறி களும் தோன்றினுல் அந்நிலைமைக்குப் பல சமயங்களிலும் பெர்ரம் ஏற்றதாகிறது.

“கொயினுவை அளவு மிஞ்சி உட் கொண்டதினுல் ஒழுங்கு இல்லாமல் தோன்றுதல், பல காலமாய் நீடித் தல், கல்லீரலிலும் மண்ணீரலிலும் வீக்கம் தோன்று தல் முதலிய குறிகளுடன் கூடிய முறைச் சுரம்”.

மாலையில் நாடித் துடிப்பின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**உபாதி குறைதல்:**—மெதுவாக நடந்து கொண்டிருக்கும் சமயங்களில் உபாதிகள் குறைவாய் இருத்தல். வாத ரோக வலிகள் மெதுவாக அசைந்து கொண்டிருந்தால் தணியும். இடுப்பு வலியும் மெதுவாக அசைந்து கொண்டிருந்தால் குறை வாய் இருக்கும் (பல்ஸடில்லா). மெதுவாக நடந்து கொண் டிருந்தால் இருதயப் படபடப்பு மட்டுப்படும். படுத்துக் கொண்டிருக்கும் போது அல்லது ஒரு வேலையும் செய் யாமல் உட்கார்ந்திருக்கும் போது காச நோய் கடுமையா கும்; மெதுவாக நடந்து கொண்டிருந்தாலும் பேசினுலும் குறையும். இரத்தம் வாந்தி செய்யப்படும் போது மெது வாக அசைந்து கொண்டிருந்தால் மட்டுப்படும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**விரோத குணமுள்ள குறிகள் :—பெர்ரத்தின் குறிகளில்** பல ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் குறைவதுடன் கூடுதலாகவும் மாறும் விரோத குணத்தைக் கொண்டிருக்கின்றன. அசைவினாலும் அதிகமாகும். ஓய்வாய் இருந்தாலும் அதிகமாகும். குறிப்பாக பெர்ரம் வியாதியஸ்தருக்குத் திடீரென்று அல்லது மிக வேகமாக ஏற்படும் அசைவைத் தாங்க முடியாது. ஓய்வும் அசையாமல் உட்கார்ந்திருப்பதும் வலிகளையும் மற்ற கோளாறுகளையும் தோன்றச் செய்யும். குழந்தைகளுக்குப் பகல் முழுவதும் மூத்திரம் ஒழுகிக் கொண்டே இருக்கும்; ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கும் போது மூத்திர ஒழுக்கு நின்றுவிடும். மெதுவாக அசைந்து கொண்டிருப்பது தான் உபாதிகளை மட்டுப்படுத்துகிறது. ஆனால் சில கேசுகளில் லேசான அசைவினால் கூட பொறுக்க முடியாத அளவுக்கு உபாதிகள் கூடுதலாகும். சிறிதளவு அசைவினாலும் வயிற்றுப் போக்கு தோன்றுதல். மெதுவான அசைவினால் உபாதிகள் மட்டுப்படும்; ஆனால் கைகளைத் தூக்க முடியாது (மத மதப்பை உண்டாக்கும். வலியினால் தாக்கப்படும்).

வியாதியஸ்தருக்குச் சில்லிப்பு உணர்ச்சியும் திறந்த இடங்களைக் கண்டால் நடுக்கமும் இருந்தாலும் பெர்ரத்தின் தலைவலி திறந்த இடங்களில் மட்டுப்படும். எல்லா வலிகளும் சூட்டினால் குறைந்தாலும் பல்வலி, கழுத்து வலி, முகவலி ஆகியவை குளிரினால் தணியும். பெர்ரத்தின் பல்வலி பனிக்கட்டி போல் குளிர்ச்சியான தண்ணீரினால் குறையும். உடலில் அதிகச் சூடு ஏற்பட்டாலும் குளிர்ந்த தண்ணீரில் குளித்தாலும் நரம்பு சம்பந்தமான வலி உண்டாகும். புளிப்பான பொருள்களில் விருப்பும் இருக்கும். வெறுப்பும் இருக்கும்.



அடிக்கடி அல்பமான பசி உண்டாவதும் கொஞ்சம் கூடப் பசியே இல்லாமல் போவதும் மாறி மாறி ஏற்படும். ஒன்று விட்டொரு நாள் மகிழ்ச்சியும் வருத்தமும் மாறி மாறி வரும். நிறைந்து இருத்தல், தளர்ந்து இருத்தல் ஆகிய இரு குறிகளும் ஒன்றுக் கொன்று எதிரான குறிகளே ஆயினும் தெளிவாய்த் தென்படுகின்றன. முகம் வெளுப்பதும் சிவப்பதுமாக இருக்கும். மாதவிடாய்ப் போக்கு ஏராளமாய் இருக்கும் அல்லது கொஞ்சம் கூட இருக்காது (அடக்கப்படுதல்). யோனியில் அதிக உணர்ச்சி, புணர்ச்சியின் போது வலி அல்லது புணர்ச்சியின் போது உணர்ச்சியே இல்லாமை

**நிறைந்து இருத்தல்: கோளாறான இரத்த ஓட்டம் :—** இரத்தக் குழாய்களில் அதிக இரத்தம் சேருதல். அசுத்த இரத்தக் குழாய் (முறைச் சுரத்தில்) சூடு உள்ள நிலைமையில் பருத்தல். கன்னங்களில் சிவந்த நிறம் தோன்றுவதுடன் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு. கடுமையான, சம்மட்டியால் அடிப்பது போன்ற தலை வலி, அனேகமாக விட்டு விட்டுத்தான் தோன்றும், நள்ளிரவுக்குப் பிறகு அதிகமாகும். இவ்விதமான தலை வலிகள், இரண்டு, மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு நீடித்திருப்பதுடன் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குப் பின் திரும்பவும் தோன்றும். தலை வலி உள்ள போது உணவு உட்கொள்ளவும் தண்ணீர் குடிக்கவும் வெறுப்பு காணப்படும். முகம், மார்பு, தலை, சுவாச கோசங்கள் முதலிய இடங்களில் அதிக இரத்தம் சேருதல். காச நோயில் மார்பில் அதிக இரத்தம் சேர்ந்து அதனால் வியாதியஸ்தர் மார்பைத் திறந்து கொள்வார். முகமும் எல்லா சளிச் சவ்வுகளும் மிகவும் வெளுப்பாய் மாறுதல்; சிறிதளவு வலி, மன உணர்ச்சியில் அதிகரிப்பு,

உடல் உழைப்பு ஆகிய காரணங்களால் முகம் திடீரென்று நெருப்புப் போல் சிவப்பாக மாறிவிடும். "தலையில் மிக வேகமாய் இரத்தம் சேரும்; அங்குள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கும்; முகத்தில் சூடான காற்று வீசும் உணர்ச்சி". மாதவிடாய் வழக்கத்தை விட மிகச் சீக்கிரமாகத் தோன்றும்; போக்கு ஏராளமாய் இருக்கும்; நெருப்பு போல் சிவந்த முகத்துடன் நீண்ட நாள் நீடித்திருக்கும்; காதுகளில் மணி அடிக்கும் ஓசை; இரண்டு அல்லது மூன்று நாட்கள் நின்றுவிட்டு மீண்டும் தோன்றும்; போக்கு வெளுப்பாகவும், தண்ணீர் போலவும் களைப்பை உண்டாக்குவதாகவும் இருக்கும்.

கோளாறான இரத்த ஓட்டத்துக்கு மற்றொரு உதாரணம் சிவப்பாய் உள்ள இடங்கள் வெளுப்பாய் மாறுவது. முகம், உதடுகள், நாக்கு, வாயின் சளிச் சவ்வுகள் ஆகியவைகளும் மானிக் கொண்டையும் கூட வெளுப்பாய் மாறும். மானிக் கொண்டையின் தோலில் சுருக்கம் ஏற்பட்டு வெளுத்திருக்கும். சிவந்த இடங்கள் இப்படி வெண்மையாக மாறுவது அல்பமான விஷயமல்ல.

இரத்தப் பெருக்கு உண்டாகும் நிலைமைகள் :—"நிறைந்து இருத்தல்" என்னும் தலைப்பின் கீழேயும் இக்குறி வரலாம். இரத்தக் குழாய்கள் பருத்திருத்தல், தளர்ந்திருத்தல். மூக்கு, சுவாச கோசங்கள், மூத்திரக்காய்கள், கருப்பை ஆகிய இடங்களிலிருந்து இரத்தப் பெருக்கு. இரத்தம் துப்புதல் (கோழையில் இரத்தம் கலந்து இருக்கும்). இரத்தப் பெருக்கில் இரத்தம் நல்ல சிவப்பாகவும் சீக்கிரத்தில் உறைந்து போகவும் செய்யும்.

**தளர்ச்சி** :—மலப்பை, யோனி, கருப்பை ஆகியவைகளில்: அந்த அவயவங்கள் வெளியே வந்துவிடுமென்று நினைக்கும்படியாகக் கீழ் இழுக்கும் உணர்ச்சி; சில சமயங்களில் அவை வெளியே நழுவி வரவும் கூடும். ஆசன



வாயில் அசுத்த இரத்தக் குழாய்களின் தளர்ச்சியினால் முண்டு முண்டாகத் தென்படலாம். மூத்திரப் பையின் தளர்ச்சியினால் மூத்திரம் தானாகவே வெளியேறும் அல்லது நடக்கும் போதும் இருமும் போதும் திடீரென்ற அசைவுகளினாலும் மூத்திரம் சொட்டுச் சொட்டாக ஒழுக ஆரம்பிக்கும். பிறப்பு உறுப்புகளில் பலவீனமும், தளர்ச்சியும்; ஆண் தன்மை குறைதல்.

## மற்ற குறிகள்

உண்ட உணவு கவளம் கவளமாக வாந்தி செய்யப்படுதல். நள்ளிரவுக்குப் பிறகு வாந்தி. "உட்கொண்ட உடனேயே உணவு வாந்தி செய்யப்படுதல்; பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென்று இலையை விட்டு எழுந்து போவார். ஒரே தடவையில் உண்ட உணவு முழுவதும் வாந்தியாகி மறுபடியும் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பிப்பார்; வாந்தி புளிப்பாய் இருக்கும் (லைகபோடியம், ஸல்ப்யுரிக் ஆஸிட்). பெர்ரத்தின் வயிற்றை ஒரு தோல் பையுடன் டாக்டர் கெண்ட் ஒப்பிடுகிறார். சீரண சக்தி குறைவாய் இருக்கிறது. எவ்வளவு எளிதாக உணவு வயிற்றினுள் சென்றதோ அதே போல் எளிதாக வாந்தியாகி வயிறு காலியாகும். சீரணமாகாத உணவுப் பொருள்கள் கலந்த வயிற்றுப் போக்கு; க்ஷய ரோகமுள்ளவர்களுக்கு நல்ல பசியுடன் வலி இல்லாமல் வயிற்றுப் போக்கு. உடலின் உயிர்த் தண்ணீர் வெளியேறியதாலும் கொயினாவினால் உள்ளே அமுக்கப்பட்ட அல்லது பாழாக்கப்பட்ட முறைச் சுரங்களாலும் ஏற்படும் நீர்ச் சுரப்பு. இரவில் (குழந்தைகளுக்கு) புழுக்களால் ஆசனவாயில் அறிப்பு. பால் போல் வெண்மையான, பட்ட இடங்களைப் புண்படுத்தும் வெள்ளை ஒழுக்கு. இடது தோள்பட்டையிலும் தோள்பட்டைத்

தசைகளிலும் வாத ரோகம். பகலில் மட்டும் இருமல் (யூப்ரேஷியா;) கீழே படுத்தாலும் சாப்பிட்டாலும் குறையும்.

**உறவு** :—சூதக பாண்டுவில் **அலூமினவுக்குப்** பிறகும் உடலின் உயிர்த் தண்ணீர் நஷ்டமானதால் உண்டாகும் இரத்த சோகையில் **சைனவுக்குப்** பிறகும் **பெர்ரம்** நல்ல குணம் தரும். "தாவர வர்க்கத்தில் **சைன பெர்ரத்தைப்** போன்றது. ஆதலால் அனேகமாய் எல்லா வியாதிகளிலும், **பெர்ரத்துக்குப்** பிறகு **சைன** நல்ல குணம் தரும் என்று H. C. **அல்லென்** கூறுகிறார். "மேகக் கிரந்தியில் ஒரு சமயத்திலும் கொடுக்கக் கூடாது. அவ்வாறு கொடுத்தால் வியாதியை அதிகரிக்கும்" என்றும் அவரே கூறுகிறார்.

**ஒரு குறிப்பு** :—"புற்று நோய், மேகக் கிரந்தி ஆகியவைகளால் உண்டாகும் இரத்த சோகைக்கு ஒரு துணை ஔஷதமாகப் பல சமயங்களிலும் **பெர்ரம்** பயன்படுகிறது. அவ்வியாதிகளுக்குத் தகுந்த மற்ற முக்கிய ஔஷதங்களுடனும் உபயோகிக்கலாம். இரத்த சோகை, சூதக பாண்டு ஆகியவை உள்ள எல்லாக் கேசுகளுக்கும் **பெர்ரம்** உபயோகப்படு மென்று கூற முடியாது. பெரும்பாலான கேசுகளுக்கு உபயோகமாகும் என்று கூடச் சொல்ல முடியாது. நன்றாக நிதானித்து மிகவும் கவனத்துடனேயே **பெர்ரம்** உபயோகிக்கப்பட வேண்டும்". இரத்த சோகையில் பெர்ரம் உபயோகமாகு மென்று தோன்றினால் உயர்ந்த வீரியங்களில் தான் குணம் ஏற்படும்.

---

## பெர்ரம் பாஸ்பாரிகம்
## (FERRUM PHOSPHORICUM)

**முன்னுரை** :—ஷ்யெஸ்லரின் புத்தகங்களிலிருந்தும் அவரைப் பின் பற்றி அவருடைய சிகிச்சை முறைப்படி ஔஷதங்களை உபயோகித்து வந்தவர்களின் அனுபவங்களிலிருந்தும் இவ்வௌஷதத்தின் விவரங்களில் சில நமக்குக் கிடைத்து உள்ளன. டாக்டர் மோப்பாட் (Dr. Moffat) என்பவரின் மேற் பார்வையில் இவ்வௌஷதம் ஔஷதப் பரிக்ஷை செய்யப்பட்டது என்றாலும் மேலும் விரிவான பரீக்ஷை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது.

நாட்பட்ட வியாதிகளில் இவ்வௌஷதத்தை உயர்ந்த வீரியங்களில் உபயோகிக்க வேண்டு மென்றும் ஆழ்ந்து வேலை செய்யும், ஸோரா விஷத்தை அடக்கும் சிறந்த ஔஷதமென்றும் கெண்ட் எழுதி யிருக்கிறார்.

### பொதுவான குறிகள்

**தகுதி** :—பெர்ரம் மெட்டாலிகத்தைப் போலவே உடலில் இயற்கையாய் இருக்க வேண்டிய சூட்டின் அளவு குறைந்து (சில்லிப்பு உணர்ச்சி) திறந்த இடங்கள் ஒத்துக் கொள்ளாமல் இரத்த சோகையும் பயந்த சுபாவமும் அல்ப காரணங்களாலும் முகம் சிவக்கும் தன்மையும் உள்ளவர்களுக்கு இவ்வௌஷதம் தகுந்ததாகும். அடிக்கடி மார்பில் வியாதி ஏற்படும் உடல்வாகு உள்ளவர்கள். பந்த குணம். அசுத்த இரத்தக் குழாய்களில் வீக்கமுள்ள இளைஞர்கள்.

**மனம்** :—ஒரே இடத்தில் சிந்தனையைச் செலுத்த முடியாமை. பெயர்களையும் மற்ற முக்கிய விஷயங்களையும் மறந்து விடுதல். பிறருடன் சேர்ந்திருக்க வெறுப்பு. தனியாய் இருந்தால் சௌகரியமாய் இருக்கும். வாய் ஓயாமல் பேசும் குணம்.

**உடல்** :—நாடி முழு அளவுடனும் மெதுவாகவும் செல்லும்: நாடித் துடிப்பு அகோனைட்டில் இருப்பதை விடச் சிறிது குறைவாய் இருக்கும். முகம் ஒரு சமயம் சிவந்தும்

மறு சமயம் வெளுத்தும் மாறி மாறி வரும். உடல் மிக வம் இளைத்தல். கைகளும் கால்களும் சில்லென்றாகும். இரவில் அதிக நேரம் கழித்துத் தூக்கம் வரும் மன தில் பலவிதமான எண்ணங்கள் தோன்றுவதுடன் தூக் கக் கலக்கம். தலையின் உச்சிப் பாகத்தில் குளிர், ஓசை, அதிர்ச்சி ஆகியவை தாக்கினால் உபாதிகள் கூடுதலாகும். தூங்கும் போது பாதிக் கண்கள் திறந்திருக்கும். பயந்த சுபாவம். உடல் சோர்வு. மாமிசத்திலும் பாலிலும் வெறுப்பு. வலது பக்கமே அதிகம் தாக்கப் படுகிறது.

உபாதி கூடுதல்:—திறந்த இடங்களும் குளிர் காற் றும் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. அப்ப காரணங்களால் நீர்க் கோர்வை உண்டாகும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):– சூடான தண்ணீர் குடித்தால் பல்வலி அதிகமாகும்(குளிர்ந்த தண்ணீரினால் குறையும்). உணவு உட் கொள்வது, மாமி சம் சாப்பிடுவது, டீ குடித்தல், ஆகியவைகளால் உபாதி கள் கூடுதலாகும். அசைவினாலும் அதிகமாகும். அதனால் வியாதியஸ்தர் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பார். வலிகள் அசைவினாலும் குளிர்ச்சியினாலும் அதிகமாகும். "உடலுக்கு அதிக வேலை தரும் அசைவினால் உபாதிகள் அதிகரித்து மெதுவான அசைவினால் குறையும்" என்று கெண்ட் எழுதுகிறார். உணவு உட் கொண்ட பிறகு தவ றாமல் பல்வலி தோன்றும். வயிற்று வலி சாப்பிட்ட பிறகு அதிகமாகும். புழுக்கம் மிகுந்த கோடைக் காலத்தில் ஏற்படும் வியர்வையை அடக்கியதால் வயிற்றுப் போக்கு தோன்றுதல். குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத் தில் சுரத்துடன் தோன்றும் கோளாறுகள். வியாதிக் குறிகள் பல சமயங்களிலும் காலையில் கடுமையாய் இருக் கும்; விடியற் காலை 4 மணிக்கும் 6 மணிக்கும்.



## விசேஷக் குறிகளின் விளக்கம்

நிறைந்திருத்தல் (இரத்தக் குழாய்களில் இரத்தம் அதிக மாய் இருத்தல்): கோளாறுன இரத்த ஓட்டம்:—இரத்தக் குழாய்களில் தளர்ச்சி ஏற்படும் குறியே பிரதானமாகக் காணப்படும் வேக்காடுள்ள வியாதிகள் எல்லாவற்றி லும் ஆரம்ப நிலைமையில் இவ்வௌஷதம் தேவையா கும். வேக்காடு முற்றி ஊநீர்க் கசிவு உண்டாகும் நிலை மையில் பயன்படாது. சுரத்துடன் உடல் உறுப்புகள், எலும்பு மூட்டுகள், அல்லது சளிச் சவ்வுகள் ஆகியவை களில் வேக்காடு. சுவாச கோசங்களில் அதிக இரத்தம் சேர்ந்த சமயங்களில் பெர்ரம் பாசைக் கொடுத்தால் சுவாச கோச வேக்காடு வராமல் தடுக்கப்படும். அல்லது அவ் வியாதியை உடனே அழித்து விடுமென்று சொல்வதே பொருத்தமாய் இருக்குமென்று நான் எண்ணுகிறேன்; இச்சமயத்தில் மார்பு புண்ணாகவும் அடி பட்டது போல வும் உணர்ச்சியுடன் இருக்கும். கோழை கொஞ்சமாக வும் இரத்தம் தோய்ந்தும் இருக்கும்; சுரம், நாடி முழு அளவுடன் துடிக்கும். சுவாச கோச உறை வேக்காட் டில் ஆரம்ப நிலைமை (விசேஷமாக வலது பக்கம் தாக் கப் பட்டிருந்தால்). குழந்தைகளுக்குக் கோடைக் காலத் தில் உண்டாகும் வயிற்றுப் போக்கில் மலம் அடிக்கடியும் இரத்தம் கலந்த தண்ணீர் போலவும் வெளியாகும். சளிப் பொருள்களும் கலந்திருக்கலாம் (இந் நிலைமையில் குடல் பகுதிகளில் அதிகத் தளர்ச்சி காணப்படும்). அடிக்கடி மலம் கழிக்கத் தூண்டுதல் உண்டாகலாம், ஆனால் கடு கடுப்பு காணப்படுவதில்லை. கடுகடுப்பு இருந்தால் மெர். சொலுபுலிஸை நினைக்க வேண்டும். கடுமையான காது வலி. இரத்தக் குழாய்களில் நிறைந்த உணர்ச்சியும் அசுத்த

இரத்தக் குழாய்களின் தளர்ச்சியும். உடலின் பல இடங்களிலும் தலையிலும் கடுமையான நாடித் துடிப்பு. முகம் வெளுத்திருக்கும். ஆனால் அல்ப காரணங்களால் கூடச் சிவந்து விடும்.

**தளர்ச்சி:**—மானி சிறிதளவே விரைக்கும் அல்லது கொஞ்சம் கூட விரைப்பதில்லை. கருப்பை கீழே இறங்குதல். உறுப்புகள் கீழே நழுவும் தன்மை. மூத்திரம் கழிக்கத் திடீரென்று தூண்டுதல் ஏற்படும்; உடனே கக்கூசுக்கு ஓடவேண்டும்; இல்லாவிட்டால் தானாகவே வெளிப்பட்டு விடும். பகல் வேளையில் மூத்திரம் தானாகவே வெளிப்படும். படுத்துக் கொண்டிருந்தால் சௌகரியமாய் இருக்கும். இரவில் தூங்கும் போது மூத்திரம் தானாகவே வெளியாவதும் இருக்கலாம். இருமும் போது ஒவ்வொரு தடவையும் மூத்திரம் ஒழுகுதல்.

**இரத்தப் பெருக்கு ஏற்படும் நிலைமைகள்:**—இரத்தம் கலந்த கழிவுகள் (இரத்தம் தோய்ந்து அல்லது மாமிசம் கழுவப்பட்ட தண்ணீர் போல் இருக்கும்). மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு; இரத்தம் நல்ல சிவப்பாய் இருக்கும். நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் வாந்தி செய்யப்படுதல். வயிற்றுக் கடுப்பின் ஆரம்ப நிலைமையில் அதிக இரத்தம் வெளிப்படும் போது (ஆனால் கடுகடுப்பு இருக்காது). சுவாச கோச வேக்காட்டில் கலப்படம் இல்லாத சுத்த இரத்தமே வெளிப்படும் போது. இரத்தம் துப்புதல் இரத்தம் கொட்டும் மூலங்கள். மூத்திரப்பை அல்லது மூத்திரக் குழாயிலிருந்து இரத்தப் பெருக்கு.

**அடிபடுதல்:**—புதிதாக உண்டாகும் காயங்கள், அடிபடுதல், சுளுக்கு, கனமான பொருள்களைத் தூக்கியதால் ஏற்படும் வலி ஆகியவைகளை அந்த இடங்களில்



சேரும் அதிக இரத்தத்தைப் போக்கிக் குணம் செய்கிறது. அடிபட்டதால் அல்லது கீழே விழுந்தால் இரத்தம் துப்புதல்.

**வலது பக்கமே அதிகம் தாக்கப்படுதல்:**—வலது சுவாச கோச உறை வேக்காடு. வலது தோள்பட்டை, வலது கை ஆகியவைகளில் வாத சம்பந்தமான வலி. வலது தோள்பட்டைத் தசையில் வாத ரோகம்.

### மற்ற குறிகள்

சிறு குழந்தைகளுக்கு உண்டாகும் கடுமையான மார்ச்சளி. புணர்ச்சியில் அடியோடு ஆசை குறைதல். யோனி காய்ந்து அதிக உணர்ச்சியுடன் புணர்ச்சி செய்யும் போது வலி ஏற்படும். முகப்பரு. வலிகள் கீழிருந்து மேலே பரவும். கழுத்திலும் முதுகிலும் சொடக்கு உண்டாகுதல்.

---

## ப்ளூவாரிகம் ஆஸிடம்
## (FLUORICUM ACIDUM)

**முன்னுரை:**—மிகக் கடினமான பொருள்களில் ஒன்றாகிய கண்ணாடியையே அரிக்கும் அல்லது தின்றுவிடும் வல்லமையுள்ள காடிச் சத்து இது ஒன்றேயாகும். மனித உடலில் உள்ள மிகக் கடினமான பொருளை அதாவது எலும்பை இவ்வௌஷதம் விசேஷமாகத் தாக்குகிறது. இதிலுள்ள அழிவுச் சக்தியினால் எலும்புகள் அரிக்கப்பட்டு நொறுங்கித் தூள் ஆகிவிடுகின்றன. எலும்புகளைப்பீடித்து அவைகளை உருக் குலைக்கும் ஔஷதங்கள் சுமார் நாற்பது இருக்கின்றன. அவை எல்லாவற்றிலும் **ப்ளூவாரிக் ஆஸிட்டும்** அதன் உப்புச் சத்தாகிய **கல்கேரியா ப்ளூவாரும்** தான் முதன்மை ஸ்தானத்தை வகிக்கின்றன.

## பொதுவான குறிகள்

தகுதி:—கிழப் பருவத்தில் அல்லது இளவயதிலேயே கிழட்டுத் தன்மை உண்டாகும் நிலைமைகளில் ஏற்படும் கோளாறுகளுக்கு ஏற்றது. கிழவர்கள் போல் தோற்றம் அளிக்கும் இளவயதினர். உடல் வெளுத்து மெலிந்து பலவீனத்துடன் இருக்கும். "நோய்வாய்ப்பட்ட தோற்றம், சதை தொய்ந்து இருக்கும், சோர்வுடன் இருத்தல்". அளவு மீறிக் கள் குடிப்பவர்கள், மேகக் கிரந்தி, பாதரஸம் சேர்ந்த ஔஷதங்களை உபயோகித்தது முதலிய காரணங்களால் தோன்றி நாட்பட இருக்கும் வியாதிகள்.

மிகவும் ஆழ்ந்து வேலை செய்யும் ஔஷதங்களில் இது ஒன்று. ஸோரா, மேகக் கிரந்தி (ஸிபிலிஸ்) மேக வெட்டை (ஸைக்கோஸிஸ்) ஆகிய மூவகை விஷங்களையும் அடக்க வல்லமை உள்ளது. மூன்றும் நிலைமையில் உள்ள மேகக் கிரந்தி. (இந்நிலைமையை ஆங்கிலத்தில் டெர்டியரி ஸிபிலிஸ் (Tertiary Syphilis) என்பார்கள்).

மனம்:—1. அதிகத் தைரியம்: மனதில் அசாதாரணமான தைரியம்; எதைக் கண்டாலும் பயப்படமாட்டார். தனக்குத் தானே திருப்தி செய்து கொள்ளுதல். 2. ஏக்கம்: அளவுக்கு மீறிக் கவலைப்படும் தன்மையும் அதனால் வியர்வை உண்டாவதும். 3. அலட்சியம்: தன் குடும்பத்தையே வெறுத்தல் அலட்சியமாய் இருத்தல். தான் மிக அதிகமாக நேசிக்கும் நபர்களைக் கூட அலட்சியம் செய்தல். 4. ஞாபக மறதி: தேதிகளையும் தான் செய்யும் வேலையையும் மறந்து விடுதல். 5. நிலையற்ற காமம்: ஒரு பெண்ணுடன் அவன் ஆசை அடங்கு



வதில்லை. வித விதமான பூக்களை நாடிச் செல்லும் தேனீ போல, அடிக்கடி மாறும் இழிகுணம் படைத்த அம் மனிதன் அடிக்கடி புதிய புதிய பெண்களை நாடிச் செல்வான். இதையும் ஒரு வியாதி யென்று தான் மதிக்க வேண்டும். மொத்தக் குறிகளும் ஒத்திருந்தால் ப்ளுவாரிக் ஆஸிட் இவ் வியாதியை நீக்கும்.

உடல்:—தூக்கமில்லாமை; தூங்க வேண்டுமென்ற ஆவலும் இருக்காது. சிறிது நேரம் தூங்கினாலே அவர் களைப்பு நீங்கிவிடும். உடல் சோர்வு. இரவில் கண் விழித்தவுடன் வாயில் குழ குழப்பான உமிழ் நீர். கால்களில் சுரணை இல்லாமல் தூங்கிப் போகுதல். மயிர் கொட்டுதல். மயிரின் மினுமினுப்புக் குறையும். தலை வழுக்கை யாகும். சுவாசிக்கக் கஷ்டம். சூடுள்ள இடங்களில் மூச்சு விடத் திணறுதல். இரவில் பாதங்களில் எரிச்சல், அதனால் உடனே பாதங்களைப் படுக்கைக்கு வெளியே வைத்தல். கைகளிலும் பாதங்களிலும் சில்லிப்பு. சருமத்தில் பொறுக்குகள். அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கிச் சுருட்டிக் கொள்ளுதல். உடலில் அதிகமான சூடு இருக்கும் உணர்ச்சி; அதனால் குளிர்ந்த தண்ணீரில் குளிக்க விரும்புவார்.

உபாதி கூடுதல்:—சூட்டினால் உபாதிகள் பயங்கரமான அளவுக்கு அதிகரிக்கும். உடலில் அதிகச் சூடு இருப்பது போல் அவருக்குத் தோன்றும்; சூடு தரும் ஆடைகளை அணிய முடியாது; மிகவும் மெல்லிய ஆடைகளையே உடுத்துவார். சூடுள்ள அறைகளில் அவரால் தங்கி இருக்க முடியாது. இரவிலும் உபாதிகள் கூடுதலாகும்.

உபாதி குறைதல்:—(உடம்பில் எப்பொழுதும் அதிகச் சூடு இருக்கும் உணர்ச்சி) குளிர்ந்த தண்ணீரில் குளிக்க அதிக விருப்பம். அதனால் அவருடைய உபாதிகள் தணியும்.

சிறிது நேரம் தூங்கினாலே போதும். அவருடைய களைப்பு நீங்கிவிடும். குளிர்ந்த தண்ணீர் குடிக்க அதிக ஆவல்; தீராத பசி; உணவு உட்கொண்டால் சௌகரியமாய்த் தோன்றும். சாப்பிட்ட பிறகு சௌகரியம் ஏற்படுவதில் சந்தேகம் இல்லையென்றாலும் சிறிது நேரம் சென்றவுடன் பசி மீண்டும் ஏற்பட்டு எதையாவது சாப்பிட வேண்டி வரும். சீரண விஷயமாக அடிப்படையான ஏதோ ஒரு கோளாறே இந் நிலைமைக்குக் காரணம் என்பது விளங்கும். ப்ளூவாரிக் ஆஸிட் இக் கோளாறைப் போக்குகிறது.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—குளிர்ச்சியான பானங்களால் பல் வலி அதிகமாகும். சூடான பானங்களால் வயிற்றுப் போக்கு கூடுதலாகும். உணவு விஷயமாக அல்பமான தவறு ஏற்பட்டாலும் வயிற்றுப் போக்கைத் தூண்டி விடும். உபாதிகள் ஒன்று விட்டொரு நாள் தோன்றுவதுடன் ஒவ்வொரு தடவையும் அதற்கு முன் தடவையை விட ஒரு மணி தாமதமாகத் தோன்றும். சூட்டினால் குழிப் புண்கள் அதிகமாகும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—மூத்திரம் ஏராளமாய் வெளியானால் தலை வலி குறையும். சருமத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிவந்த நிறமுள்ள சிறு புள்ளிகள்; இவை சூட்டினால் அதிகரித்துக் குளிர்ந்த இடங்களில் இருக்கும் போதும், குளிர் காற்றுப் படும் போதும் குளிர்ந்த தண்ணீர் பட்டாலும் குறையும். காது கேளாமை; தலையைப்பின் பக்கமாய் வளைத்தால் காது கேட்கும். சப்பைகளில் அடிபட்டது போல் வலி பின்பக்கமாய் வளைத்தாலும் அமுங்கினாலும் சௌகரியமாய் இருக்கும். குளிர்ச்சியினால் குழிப் புண்களில் உபாதி குறையும்.



## விசேஷக் குறிகளின் விளக்கம்

**அரித்தல்: தோல் உறிதல்: புண்ணாகுதல்:**—இம் மூன்றும் வெவ்வேறான குறிகள் அல்ல. ஒரே குறிதான் இடத்துக்குத் தக்கபடி பெயர் மாறி இருக்கிறது. அரிப்பு என்ற ஒரு வார்த்தையே கூடப் போதுமானதாய் இருக்கும்.

இவ் வௌஷதம் எலும்புகளை, விசேஷமாகத் தொடைகள், கைகள் முதலிய இடங்களிலுள்ள நீளமான எலும்புகளைத் தாக்கி அரித்து விடுகிறது. அழுகிப் போன பாகங்களை வெளியேற்றிப் பிறகு வியாதியுள்ள எலும்புகளைக் குணம் செய்கிறது இவ் வௌஷதம். பற்கள் மிக வேகமாகச் சொத்தையாகுதல். மிகச் சீக்கிரத்தில் பற்கள் கெட்டு விடுதல். பொட்டெலும்புகள் அழுகுதல். இவ்விதமான வியாதி, ஸோரா, மேகக் கிரந்தி அல்லது மேகக் கிரந்தியும் பாதரஸ சிகிச்சையும் ஒன்று கலந்தால் ஏற்படக் கூடும். அனேகமாக வியாதி மிகவும் மெதுவாக விருத்தியாகும்; ஆனால் அதனால் ஏற்படும் கெடுதல்கள் கடுமையாய் இருக்கும்.

அரித்தல், தோல் உறிதல் அல்லது பட்ட இடங்களைப் புண் செய்யும் குணம் இவ்வௌஷதத்தின் மிக முக்கிய குறியாகும். உள்ளங் கைகள், உள்ளங் கால்கள், கால் விரல்களின் இடை வெளி ஆகிய இடங்களில் கார குணமுள்ள வியர்வை. இதனால் அந்த இடங்களில் தோல் உறிந்து புண்ணாகுதல், நாற்றமும் இருக்கும், அழுகிய எலும்புகளிலிருந்து தண்ணீர் போல் மெல்லிய, கார குணமும் நாற்றமும் உள்ள நீர் வெளிப்படும். சீழ் கூடத் தோல் உறியச் செய்யும். வியர்வையினால் உட

வில் தோல் உறிந்து புண்ணாய் இருக்கும் உணர்ச்சி உண்டாகும். இருதயம் புண்ணாய் இருக்கும் உணர்ச்சி.

சீழ் உள்ள புண்கள்; விசேஷமாக ஸைலீஷியாவை அளவு மீறி உபயோகித்த பிறகு. ஸ்தனக் காம்புகள் வலியுடன் வெடிப்புகளுடன் அரிப்பைத் தரும். சீழ்ப் புண்களில் அதிக வலி, அவைகளின் விளிம்புகள் சிவந்து நீர் உள்ள கொப்பளங்கள் ஏராளமாய்க் காணப்படும். சூட்டினால் இவை கூடுதலாகிக் குளிரினால் குறையும். ஏராளமாய்ச் சீழ் வடியும். யோனிக்கு வெளிப் புறத்தில் குழிப் புண்கள். தொண்டைச் சுரப்பிகளில் மேகக் கிரந்தி சம்பந்தமான குழிப் புண்கள். தேன்கூடு போல் தோன்றும்; குளிர் காற்றினால் அதிகரிக்கும். எல்லாக் குழிப் புண்களும் தூங்கி வழியும் குணம் உள்ளவையாய் இருக்கும். தலை மயிர் நுனி பிளந்து பளபளப்புக் குறைந்து உதிர ஆரம்பிக்கும். "பூதக் கண்ணாடியினால் கூர்ந்து கவனித்தால் தலை மயிரில் சிறிய புண்கள் இருப்பது தெரியவரும்" என்று கெண்ட் எழுதுகிறார்.

**கோளாறான வளர்ச்சி:**—நகங்கள் கோளாறாகக் கோணல் மாணலாய், மேடு பள்ளங்களுடன் வளருகின்றன. கண்ணாடி போல் பலம் இல்லாமல் மிகச் சீக்கிரமாய் உடைகின்றன.

**பவுத்திரச் சிரங்குகள்:**—மலப்பை; பற்கள், கண்ணீர்க் குழாய் ஆகிய இடங்களில் பவுத்திரச் சிரங்குகள். கண்ணீர்க் குழாயில் ஏற்படும் பவுத்திரச் சிரங்குக்குப் பெட்ரோலியம் மிக நன்றாக வேலை செய்வதை என் சொந்த அனுபவத்திலேயே கண்டிருக்கிறேன்.

**பொறுக்குகள் உற்பத்தியாகுதல்: கடினமாகுதல்:**—சருமத்தில் பல இடங்களில் சிறிய சிறிய பொறுக்குகள்



உண்டாகும்; இவ்விதமான காய்ந்த பொறுக்குகள் மேகக் கிரந்தி சம்பந்தமுள்ள புண் போல் தோன்றும். தழும்பிட்டு ஆறும் அறி குறியே இருக்காது. நாற்றம் விசும். மேக வேட்டை அல்லது மேகக் கிரந்தியினால் உண்டாகும் கடினமான பாலுண்ணிகள். ப்ளுவாரிக் ஆஸிட் இவைகளை நீக்கிக் குணம் செய்வதுடன் மீண்டும் தோன்றாமல் தடை செய்து விடும். சருமமும் கடினமாய் மாறுதல். புண்களின் ஓரங்கள் கடினமாய் இருக்கும். வலி யுள்ள காய்ப்புகள்.

**உடல் சக்தி அதிகரித்தல்:**—வழக்கத்தை விட அதிகமாக உடலை உழைத்து வேலை செய்ய முடிதல். திடீர் திடீர் என்று தூண்டுதல்கள். புணர்ச்சியில் ஆசை அதிகரித்தல். வழக்கத்தை விட அதிகமான நேரம் புணர்ச்சியில் ஈடுபட முடிதல்; இன்பமும் அதிகமாய் இருப்பது போல் தோன்றும்; கழிவுகள், உமிழ் நீர் போன்ற நீர்களின் உற்பத்தி, பசி ஆகிய எல்லாம் அதிகமாகும்.

இன்னும் விரிவாய்ச் சொல்கிறேன். களைப்பு ஏற்படாமல் முன்னை விட அதிகமாக உடல் வேலை செய்ய முடிதல். இது தசைகளின் சக்தி அதிகரிப்பதனால் சாத்தியமாகிறது. எப்பொழுதும் நடந்து கொண்டோ அல்லது ஏதோ ஒரு உடல் வேலை செய்து கொண்டோ இருக்கத் தூண்டுதல் ஏற்படும். "திறந்த இடங்களில் நடந்து கொண்டிருக்க இடை விடாத, அடக்க முடியாத ஆவல்; அவ்விதம் நடப்பதினால் களைப்பு ஏற்படுவதில்லை". வழக்கத்தை விட அதிகமான அளவு சூட்டையும் குளிரையும் தாங்கும் சக்தி உண்டாகும். கோடைக் காலத்தின் சூடும் குளிர்காலத்தின் குளிரும் அவரை அவ்வளவாகப் பாதிப்பது கிடையாது. புணர்ச்

சியில் அதிக ஆசை (கிழவர்களுக்கு); இரவு முழுவதும் மானி கடுமையாக விரைத்தல். புணர்ச்சி செய்யும் போது அளவுக்கு மிகவும் அதிகமான ஆசையும் இன்ப உணர்ச்சியும்.

உமிழ் நீர் அதிகமாக உற்பத்தியாகுதல். புண்களிலிருந்து மெல்லிய, கார குணமுள்ள, நாற்றம் வீசும் கழிவு ஏராளமாய் வெளியாகும். நகங்கள் மிக வேகமாய் வளரும். பசி குறிப்பிடத் தக்கதோர் குறி; அடிக்கடி சாப்பிட்டால் தான் பசி அடங்கும்.

**அசுத்த இரத்தக் குழாய் வியாதிகள் :—** அசுத்த இரத்தக் குழாய்கள், குறிப்பாகக் காலில், அதுவும் இடது காலில் இருப்பவை பருத்துச் சுருட்டிக் கொள்ளுதல். பெண்களுக்குக் கருப்பமாய் இருக்கும் போது இவ்விதக் கோளாறுகள் தோன்றும். பருத்துச் சுருட்டிக் கொண்ட அசுத்த இரத்தக் குழாய்களில் புண் உண்டாகுதல்.

**அறிப்பு :—** சருமத்தில் தாங்க முடியாத அறிப்பு; குளிர்ந்த தண்ணீர் பட்டால் குறையும். அறிப்பு உடல் முழுவதுமே பொதுவாக இருந்தாலும் மூக்கு, காதுகள், ஆசனவாய்போன்ற உடல் துவாரங்களில் குறிப்பாகக் காணப்படும். காதுகளில் பொறுக்க முடியாத அறிப்பு. குரல்வளையில் அறிப்பு. அதனால் அடிக்கடி கனைக்கவும் விழுங்கவும் நேரும், ஸ்தனக்காம்புகள் சிவந்து, வீங்கி அறிக்கும். நாற்றம் அடிக்கும், தோலை அரிக்கும் குணமுள்ள வியர்வையும் அதனால் அறிப்பு உண்டாவதும். பழைய சிரங்குகளின் தழும்புகளின் ஓரங்கள் சிவந்து சுற்றிலும் சிறு சிறு நீருள்ள கொப்புளங்களுடனும் இடைவிடாமல் அறிப்புடனும் இருக்கும். "சிறு குழந்தைகளுக்கு மண்டைத் தோலில் சட்டிப்பற்று என்று



அழைக்கப்படும் பொருக்குகள் அடை அடையாகக் காணப்படும் வியாதி. காய்ந்த செதில்கள் உதிரும். அதிக அறிப்பும் சில இடங்களில் மயிர் உதிர்ந்து வழுக்கை விழுவதும்."

**மத மதப்பு :—** பாதங்களிலும் முன்கைகளிலும் மதமதப்பு, மேலேயும் பரவும். காதுகள், மண்டைத் தோல் முதலிய இடங்களிலும் மதமதப்பு. தலையின் பின்பக்கத்தில் மதமதப்பு ஏற்படுவதால் அந்த இடம் மரக்கட்டையினால் செய்யப்பட்டிருப்பதுபோல் தோன்றும். கைகளை அழுக்காமல் படுத்திருந்தாலும் அவை மதமதப்பாகும்.

**நீர்ச் சுரப்புள்ள நிலைமைகள் :—** வயதான, மெலிந்த உடலுள்ளவர்களுக்குக் கை கால்களில் நீர்ச்சுரப்பு. உடல் அணுக்கள் எல்லாவற்றிலும் நீர்ச்சுரப்பு. நெற்றியின் நடுப்பாகத்திலே நீர்ச்சுரப்பு. விரைப்பையிலும் மானிக்கொண்டைத் தோலிலும் நீர்ச்சுரப்புள்ள வீக்கம். அடிவயிற்றில் இறுகக் கட்டியிருக்கும் உணர்ச்சியும் நீர்ச்சுரப்புள்ள வீக்கமும், மேகவெட்டையுள்ளவர்களுக்கு மானிக்கொண்டைத் தோலில் நீர்ச்சுரப்பு. வீக்கத்துடன் அடக்கமுடியாத சிற்றின்ப வேட்கையும் இடைவிடாமல் (இரவில்) மானி விரைத்தலும் காணப்படும்.

**நாற்றமுள்ள கழிவுகள் :—** வியாதியினால் தாக்கப்பட்ட எலும்புகள், சீழ்ப்புண் ஆகியவைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகளும், வியர்வை, உமிழ்நீர் ஆகியவும் நாற்றமடிக்கும், பிறப்பு உறுப்புகளில் எண்ணெய் போன்ற, நாற்றமுள்ள, நெடியடிக்கும் வியர்வை.

**உணர்ச்சி அதிகரித்தல் :—** மலம் கழிப்பதில் சிறிது ஒழுங்கு தவறினாலும், மாதவிடாயில் போக்கு வெளி

யாகச் சிறிது தாமதப்பட்டாலும், மூத்திரம் கழிக்கத் தூண்டுதல் ஏற்பட்டுச் சிறிதுநேரம் சென்று கழித்தாலும் வியாதியஸ்தரின் உபாதிகள் மிக அதிகமாகும்.

**பக்கங்கள் :—** வலது காது ; கழுத்தின் பின்பக்கத்தில் வலதுபக்கம்; முதுகின் வலதுபக்கம்; இடதுபக்கப் பற்கள் ; அடிவயிற்றின் இடதுபக்கம். இவ்விஷயமாக முழுவதும் எழுத இங்கே இடம் இல்லை. இவ்வௌஷதத்தின் வியாதிகள் வலமோ அல்லது இடமோ ஏதோ ஒரு பக்கத்தைமட்டும் தாக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டோமானால் அதுவே போதும். குறிகள் கீழே ஆரம்பித்துமேலே பரவுவதாகத் தெரிகிறது.

## மற்ற குறிகள்

உடலின் துவாரங்களிலிருந்து எரியும்புகை வெளியாவதுபோல் உணர்ச்சி. கைவிரல்களில் கடுமையான துடிக்கும் வலிகளுடன் வேக்காடு. கண்களின் வழியாகக் காற்றை ஊதுவது போன்ற உணர்ச்சி. மூச்சு விடும்போது இழுப்பு ஓசை. வலது கை சிறிது முடமாய் இருக்கும் உணர்ச்சி (இதனால் எழுதும்போது கொஞ்சம் கஷ்டம் தோன்றும்.)

**உறவு :—**(ஜயின் எனப்படும் பானத்தைக் குடிப்பவர்களுக்கு ஏற்படும் அடிவயிற்று நீர்ச்சுரப்பு வியாதியில்) ஆர்ஸனிகத்துக்குப் பிறகும் (மதுமேக வியாதியில்) பாஸ்பாரிக் ஆஸிட்டுக்குப் பிறகும் உபயோகப்படும். (உடல் களைப்பில்) கோக்கா, (பல் வலியில்) காபியா, (தன் குடும்பத்தைக் கண்டால் கூட வெறுப்பில்) ஸேபியா (பவுத்திரச் சிரங்குகளில்) ஸைலீஷியா, (கண்ணீர்க் குழாயில் ஏற்படும் வியாதியில்) பெட்ரோலியம் ஆகியவை ப்ளுவாரிக் ஆஸிட்டை ஒத்திருக்கின்றன. ப்ளுவாரிக் ஆஸிட்டுக்குப் பிறகு ஸல்பரும் நைட்ரிக் ஆஸிட்டும் நன்றாக வேலைசெய்யும்.

---



# ஜெல்ஸிமியம்
## (GELSEMIUM)

**முன்னுரை:—**வியாதிகளுக்குச் சிகிச்சை செய்ய "குத்து மதிப்பாக" தேர்ந்தெடுக்கப்பட்ட ஔஷதங்களில் ஜெல்ஸிமியமும் ஒன்று. ஜெல்ஸிமியம் தேவைப்படும் வியாதியஸ்தருக்கு மலம் கெட்டியாக இருந்தாலும் சரி தண்ணீர் போல் இருந்தாலும் சரி, ஜெல்ஸிமியத்தின் பூக்களைப்போல் மஞ்சளாய் இருக்கும். நாக்கு வெளுத்த மஞ்சள் நிறமாய் இருக்கும். சில சமயங்களில் முகம் கூட மஞ்சளாய் இருக்கலாம். நல்ல மஞ்சள்நிறமுள்ள வெள்ளை ஒழுக்கு, "சருமம் மஞ்சளாய், ஈரக்கசிவுடன் இருக்கும்." உமிழ்நீர் மஞ்சளாய் இருக்கும். செலிடோனியத்தைப் போல் இதுவும் ஒரு பித்த ஔஷதம்.

## பொதுவான குறிகள்

**தகுதி :—**குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஏற்றது. பயந்த சுபாவமும் சங்கா குணமும் உள்ள பெண்களுக்கு மிகவும் ஏற்றது. மந்தமான நாடித்துடிப்பு உள்ள கிழவர்கள்.

**மனம்:—**ஓரளவு மந்ததணத்துடன் அறிவுத்திறமை குறைதல்; ஒழுங்காக யோசிக்கவோ அல்லது புத்தியைச் செலுத்தவோ முடியாது. கேட்ட கேள்விகளுக்கு மெதுவாகவும் கோளாறாகவும் பதில் அளிப்பார். பேசாமல் சும்மா இருக்கவும் தனியாய் இருக்கவும் விரும்புவார். மந்தகுணம். மனக் குழப்பம். மயக்கம். தன் வியாதியைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அலட்சியமாய் இருத்தல். உற்சாகம் மிகவும் குறைதல். உயரமான இடங்களிலிருந்து கீழே குதிக்க நினைப்பார். தற்கொலை செய்து கொள்ளவேண்டுமென்ற பலமான ஆவல். தூங்க

ஆரம்பித்தவுடன் புத்திக்கடுமாற்றம் உண்டாகும். பயம், பயப்படும் குணம் என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

**உடல்:**-தலைச்சுற்றல், பார்வை மங்குதல்; **மந்த குணம்,** ஏராளமான, தெளிந்த மூத்திரம் வெளிப்படுதல், **தாகம் இல்லாமை,** மங்கிய சிவந்த நிறமுள்ள முகம், உடலில் விசேஷமாகக் கால்களில் சில்லிப்பு, புண்ணாய், அடிபட்டது போல் வலி, நாடி நிறைந்தும் மிருதுவாகவும் துடித்தல், உடல் சோர்வு, களைப்பு, கொட்டாவி விடுதல் ஆகியவை எல்லா வியாதிகளிலும் அனேகமாய்க் காணப்படும். **ஜெல்ஸிமியம்** வியாதிகளில் அனேகமாய்த் **தாகம் இருப்பது கிடையாது. மதமதப்பு, கனத்த உணர்ச்சி, நடுக்கம்** ஆகியவைகளையும் மேற்கண்ட குறிகளுடன் சேர்த்துவிட்டால் முக்கிய குறிகள் இனி பாக்கி இல்லை.

**உபாதி கூடுதல்**;—சூரிய வெப்பமும் கோடைக்காலமும் வியாதியஸ்தருக்கு ஒத்துக்கொள்ளாமல் ஏதோ ஒரு விதத்தில் கெடுதலைச் செய்கின்றன. "புயல்காற்று அடிப்பதற்கு முன்னதாக வியாதியஸ்தருக்கு அதிக வேதனையும் கவலையும் உண்டாகும்." ஈரக்கசிவுள்ள சமயங்களில் அது கோடைக்காலமானாலும் குளிர் காலமானாலும் வியாதி அதிகரிக்கும். ஆகவே புழுக்கமாய் இருந்தாலும் ஒடுக்கும் குளிர் இருந்தாலும் **ஜெல்ஸிமியம்** வியாதியஸ்தருக்கு ஒத்துக்கொள்வதில்லை.

**உபாதி கூடுதல்**:—(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—அசைவினால் பல குறிகள் அதிகமாகும். குழந்தைக்குப் பல் முளைக்கும்போது (வயிற்றுப் போக்கு). **தன் வியாதியைப் பற்றி நினைக்கும்போது** அது அதிகமாகுதல். சும்மா உட்கார்ந்திருக்கும்போது நாடி மெதுவாகவும் அசையும்போது மிக அதிகமாகவும் துடிக்கும். குளிர்ச்சியான பானங்களைக்குடித்த மறுகணமே வாந்தி செய்தல்.



**உபாதி குறைதல்**:—உற்சாகத்தை ஊட்டும் பானங்களை உட்கொண்டால் உபாதிகள் தணியும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—ஏராளமாய் மூத்திரம் வெளியானவுடன் தலை வலி நீங்கும். இவ்விதமான தலை வலியில் கழுத்துப் பிடிப்பு, வலி தோன்று முன் கண்பார்வை மங்குதல் அல்லது முழுவதும் மறைந்து போகுதல் (**காலி பைக்ரமிகம்**) ஆகியவை காணப்படும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**மந்த குணம் : மயக்கம் : மங்குதல்** :—அறிவுத்திறமை
குறைந்து மந்தகுணம் உண்டாகுதல். முதுகு எலும்
பில் மேலும் கீழும் ஏறி இறங்கும் மந்தமான வலிகள்
நடந்தால் சௌகரியமாய் இருக்கும். தலையின் பின்
பக்கத்தில் கனமான உணர்ச்சியுடன் மந்தமான வலி,
அசைந்தாலும் குனிந்தாலும் அதிகமாகும். முதுகிலும்
சப்பைகளிலும் மந்தமான வலி. பார்வை மந்தம் (மங்க
லான பார்வை). இயற்கைக்கு மாறான வழிகளில் காம
இச்சையைப் பூர்த்திசெய்யும் வழக்கமுள்ள ஆண்பெண்
களுக்கு அதிக உடல் சோர்வுடன் உற்சாகம் மிகவும்
குறைந்துபோகும். **கள் குடித்தது போன்ற மயக்கம்;கண்
பார்வை மங்குதல் ; பார்க்கும் பொருள்கள் ஒவ்வொன்றும்
இரண்டாய் இருப்பதுபோல் தோன்றுதல்.** சுரத்தில் சூடு
உள்ளபோது **மந்தமாய்க்** களைப்புடன் **பேசாமல் படுத்
திருக்கவும் தனியாய்** இருக்கவும் விரும்புவார், பிறருடன்
பேச விரும்பமாட்டார். பேசாமல் பக்கத்தில் உட்கார்ந்
திருப்பது கூடப் பிடிக்காது. (இரத்தினம் போன்ற
இக்குறியை என் சொந்த அனுபவத்திலேயே கண்டிருக்
கிறேன்; ஆதலால் இங்கு எதையும் மறுமுறை திருப்பிச்

சொல்லவில்லை என்று கூறுவேன்). மனம் மந்தமாய் இருத்தல்.

பயம் : பயப்படும் குணம்:—சாவை நினைத்துப் பயப்படுதல் ; தைரியம் கடுகளவு கூட இருப்பதில்லை. கீழே விழுந்துவிடுவோம் என்ற பயம். குழந்தை தான் கீழே விழுந்து விடுவோமென்று பயந்துகொண்டு தாயை அல்லது தொட்டிலின் கைப்பிடிச் சட்டத்தை இறுகப் பிடித்துக் கொண்டு கதறும் (போரக்ஸ்). பயம், திகில், வருத்தம், பரபரப்பான செய்திகள், திடீரென்று மன உணர்ச்சிகள் அதிகரித்தல் (இக்னேஷியா) ஆகியவைகளால் (வயிற்றுப்போக்கு போன்ற) கோளாறுகள் உண்டாகும். சபைக்கோழை, பொதுக்கூட்டங்களில் பேச நடுக்கம் (அர்ஜண்டம் நைட்ரிகம்), புதிதாக ஏற்படும் சோதனை நிறைந்த வேலைகளைச் செய்யமுற்படுமுன் வயிற்றுப் போக்கு தோன்றுதல். பிரசங்கம் செய்யப் புறப்படும் போதும், கச்சேரியில் பாடச்செல்லும் போதும் வயிற்றுப்போக்கு தோன்றுதல். அசைந்து கொண்டிருந்தால்தான் தன் இருதயம் வேலைசெய்யுமென்றும் அசைவதை நிறுத்தினால் இருதயமும் துடிக்காமல் நின்று விடுமென்றும் பயப்படுதல், பிரயோனியா வியாதியஸ்தர் அசைவினால் வலி கூடுதலாகும் காரணத்தினால் அசைவைக்கண்டு பயப்படுவார்.

சோர்வு :—உடலின் வலிமை குறைந்து போவதையே இது குறிக்கிறது. பலவீனமும் களைப்பும். நரம்புத் தளர்ச்சி. கீழே படுத்துக்கொண்டு ஓய்வாய் இருக்க விரும்புதல், நடுக்கமும் பலவீனமும், மிகவிரைவில் களைத்துப்போவதும். அல்பமான உடல் பயிற்சியினால் (ஏராளமாய் இந்திரியம் நழுவிவிட்ட சமயத்தில் ஏற்படுவதைப்போல்) கால்களில் சோர்வு. வயதானவர்களுக்கு நாடி பலவீனமாகவும் மெதுவாகவும் துடித்தல், குரலில் பலவீனம். இருதயப் பாகத்தில் பலவீனமும் ஒன்றுமே இல்லாத உணர்ச்சியும், பார்வை மங்குதல் (பார்வை நரம்பின் பல வீனம்) மூச்சு விடுவது களைப்பைத்தரும், உடலின் சக்திகள் யாவுமே அதிகச் சோர்வுடன் இருத்தல்.



தளர்ச்சி: உடல் உறுப்புகள் ஒற்றுமையாய் இயங்காமை ; இவைகளால் பாரிச வாத நிலைமை உண்டாகுதல்:—இம் மூன்று குறிகளும் ஒன்றோடொன்று கலந்து கொள்ளும் தன்மை யுள்ளவைகளாய் இருப்பது எளிதிலே விளங்கும். உடலிலுள்ள எல்லாத் தசைகளிலும் பூரணமான தளர்ச்சியும் சோர்வும் தோன்றி இயக்குத் தசைகளில் முழுவதுமோ அல்லது ஓரளவு மட்டுமோ பாரிச வாதத்துடன் இருக்கும். தசைகள் ஒற்றுமையாய் இயங்குவதில்லை. (காலி ப்ரொமேட்டம்); மயக்கமாகவும் மனம் குழம்பியும் இருத்தல்; தசைகள் வியாதியஸ்தரின் விருப்பப்படி வேலை செய்யாமை ; தள்ளாடி நடத்தல். இந்திரியம் தானாகவே நழுவுதல். புணர்ச்சி செய்யும் சக்தி மிகவும் குறைந்து பெண்ணை ஆசையுடன் தொட்டாலும் முத்தமிட்டாலும் இந்திரியம் நழுவுதல்.

பாரிச வாதத்தினால் தோன்றும் கோளாறுகளின் விவரம் : மூத்திரப்பையைத் தாக்கினால் (மூத்திரப்பையின் வளையத்தசை தாக்கப்படும் போது மூத்திரப் பையில் தங்காமல் ஒழுகிக்கொண்டே இருக்கும்; ஓரளவு மட்டும் பாரிச வாதம் இருந்தால் மூத்திரம் விட்டு விட்டு வெளிப்படும் அல்லது வியாதியஸ்தருக்குத் தெரியாமல் தானாகவே வெளிப்படும்); கண் இமைகள் தாக்கப்பட்

டால் (அவை கீழே தளர்ந்து தொங்கும், மேல் இமைகளைத் தூக்க முடியாமை; இமைகள் முழுவதையும் மூடிய பிறகு தூக்க வரும்). தொண்டை தாக்கப்பட்டால் (விழுங்க உதவும் தசைகள் பாரிச வாதத்துக்குள்ளாகி உண்ணும் உணவும் குடிக்கும் தண்ணீரும் மூக்கு வழியாய் வெளியே வந்து விடும்); மலப்பை, ஆசன வாய் ஆகியவை தாக்கப்பட்டால் (பாரிசவாதம் ஓரளவு மட்டும் இருந்தால் இளகிய மலமும் கஷ்டப்பட்டு வெளிப்படும், ஆசன வாய் அடிக்கடி வெளியே நழுவி வர ஆரம்பிக்கும், அல்லது வியாதியஸ்தருக்குத் தெரியாமல் மலம் வெளிப் படும்.) நாக்கு தாக்கப்பட்டால் (நாக்கில் நடுக்கம், தெளிவு இல்லாமல் தடித்த பேச்சு) குரல் வளைத் தசைகள் தாக்கப்பட்டால் குரலே இருக்காது; இரகசியம் பேசுவது போலவே பேச முடியும். மாதவிடாய்க் காலத்தில் மட்டும் குரல் இருப்பதில்லை.

**கனத்த உணர்ச்சி:**—கண் இமைகளில் அதிகக் கனம்; கண்களைத் திறந்துகொண்டிருக்க முடியாமை. உடம்பு முழுவதும் கனமாகவும் களைப்புடனும் இருக்கும் உணர்ச்சி. தலையில் அதிகக் கனம், மூத்திரம் தாராளமாய்க் கழிந்தால் கனம் குறையும். கருப்பையில் புண்ணுள்ள உணர்ச்சியும் கனமும். வயிற்றினுள்ளே பளுவான பொருளினால் அமுக்கும் உணர்ச்சி. ஒரு சில உறுப்புகளில் மட்டும் அதாவது இருதயம், கருப்பை, கல்லீரல் முதலியவைகளில் கனமாய் இருக்கும் உணர்ச்சி.

**அதிக இரத்தம் சேருதல்:**—அசுத்த இரத்தமோ அல்லது சுத்த இரத்தமோ மெதுவான ஓட்டத்துடன் அதிகமாகச் சேருதல். தலையில் அதிக இரத்தம் சேருவதால் உண்டாகும் தலைவலி. தலையில் அதிக இரத்தம் சேரும்



போது கால்கள் சில்லென்று மாறும். தலை அல்லது உடலின் ஏதோ ஒரு உறுப்பு பெரியதாகி விட்ட உணர்ச்சி.

**புண்ணுள்ள: அடிபட்ட உணர்ச்சி; வலி:**—உடல் முழுவதும் புண்ணாய் அடிபட்டது போன்ற உணர்ச்சி (டைபாய்டு சுரத்தின் ஆரம்ப நிலைமைகளில் காணப்படுவது போல்). மூளையில் அடிபட்டது போன்ற உணர்ச்சி. கை கால்களின் தசைகளிலும் மூட்டுகளிலும் உள்ளூர மந்தமான வலி. "உடம்பில் தாங்க முடியாத வலி."

**நடுக்கம்:**—பாரிசவாத நிலைமைகளுடன் பல சமயங்களில் நடுக்கம் சேர்ந்து காணப்படும். நாக்கின் பாரிச வாதத்தில் வெளியே நீட்டும் போது நாக்கு நடுங்கும், பேச்சு தடிப்பாய் இருக்கும். பலவீனத்தினால் உடல் நடுக்கம். ஜெல்ஸிமியத்தில் ஒரு விநோதமான, கடுமையான உடல் நடுக்கம் இருக்கிறது. இந் நடுக்கம் குளிரினால் ஏற்படுவது இல்லை. "நரம்பு சம்பந்தமான குளிர்" என்று இதற்குப் பெயர். வியாதியஸ்தருக்குக் குளிரும் உணர்ச்சி இருக்காது; அவர் உடம்பைத் தொட்டாலும் சில்லிப்பு இருக்காது; ஆனால் உடம்பு முழுவதும் வெடவெடவென்று நடுங்கிக்கொண்டு பற்களும் சட சடவென்று கிட்டிக் கொள்ளும். உடம்பு மிகக் கடுமையாய் நடுங்குவதால் தன்னைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று வியாதியஸ்தர் வேண்டுவார்.

**மதமதப்பு:**—நாக்கு, காதுகள் ஆகியவைகளின் நுனி. நாக்கு, விரல்கள், கைகள், பாதங்கள், சருமத்தில் சிற்சில இடங்கள் ஆகியவைகளில் மதமதத்த உணர்ச்சி.

**பிடிப்பு: விரைப்பு:**—மணிக்கட்டுக்கு மேலுள்ள

தசைகளில் சுருங்கும் உணர்ச்சி. எழுத்து வேலை செய்வோருக்கு ஏற்படும் கைப்பிடிப்பு. மாதவிடாய்க் காலத்தில் இழுக்கும் வலிகள். தாடைகளில் பிடிப்பு; அதனால் அவைகளை அசைக்க முடியாமை. கழுத்தில் பிடிப்புடன் தலைவலி. கருப்பையின் வாயில் பிடிப்பும் விரைப்பும் உள்ளபோது ஜெல்ஸிமியம் அதைத் தளர்ந்து கொள்ளும்படிச் செய்கிறது. வாய் கல் போல் கடினமாகவும் தடித்தும் இருத்தல், (கருப்பையின் வாய் பிடிப்புடன் மெல்லியதாய் இருந்தால் பெல்லடொன்னா). தேவைப்படும் போது இவ் வெளஷதம் கொடுக்கப்பட்டால் ஒருவிதக் கஷ்டமும் இல்லாமல் பிரசவம் சுலபமாக நடைபெறுகிறது.

### மற்ற குறிகள்

கீழ் முதுகிலிருந்து பின் தலைவரை கடல் அலைகள் போல் ஒன்றன் பின்னொன்றாகக் குளிர்ந்த உணர்ச்சி மேலும் கீழும் ஏறி இறங்கும், நரம்பு சம்பந்தமான வலிகள். மாத விடாயில் பிரசவ வலியை ஒத்த கடுமையான வலிகள் முதுகு, சப்பைகள், கால்கள் ஆகிய இடங்களுக்குப் பாய்ந்து செல்லும். தலைவலி பின் தலையில் ஆரம்பித்துத் தலை முழுவதும் பரவி முடிவில் கண்களுக்கு மேற்பக்கத்தில் தங்கும். விடியற் காலையில் தும்மல்; மூக்கிலிருந்து அருவிபோல் தண்ணீர்ப் பெருக்கெடுத்தல். முதுகெலும்புப் பலவீனத்தினால் உடல் நெட்டிபோல் கனம் இல்லாததுபோல் தோன்றுதல் (இக்குறி இயற்கைக்கு மாறான வழிகளில் சிற்றின்பத்தை அடையும் வழக்கமுள்ளவர்களிடம் காணப்படும்). மேக வெட்டையின் ஆரம்ப காலத்தில் (அகோனைட்) மூத்திரக் குழாய் சிவந்து அதிக வலி, குறைவான போக்கு ஆகிய குறிகள் காணப்படும் போது ஜெல்ஸிமியம் உபயோகமாகும்.



அதிகச் சூடான உணர்ச்சியுடன் சிறிதளவு வலியும் இருக்கலாம். மேகவெட்டை உள்ளே அமுக்கப்பட்டதால் விரைகளில் வேக்காடு தோன்றுதல்.

**குறிப்புகள்** :—கெடுதலை விளைவிக்கும் சக்தி வாய்ந்த திடீர் வியாதிகளின் ஆரம்ப காலத்திலேயே கொடுக்கப்பட்டால் ஜெல்ஸிமியம் அவ்வியாதிகளை உடனே போக்கி விடும் அல்லது அவைகளின் கொடுமையையாவது குறைத்து விடும். ஆகவே ஜெல்ஸிமியம் கொடுத்த பிறகு அவ்வியாதிகளைச் சிகிச்சை செய்வதில் சிரமம் எதுவும் இருக்காது. அப்படி ஜெல்ஸிமியத்தை ஆரம்பத்தில் கொடுக்காமல்போய் விட்டால் டைபாய்டு சுரம், மூளை, முள்ளந்தண்டு வேக்காடு முதலிய கொடிய திடீர் வியாதிகளில் நெருக்கடியான நிலைமைகள் நிச்சயமாய் உண்டாகின்றன.

**உறவு** :—டைபாய்டு, இன்புளூயன்ஸா ஆகிய வியாதிகளில் (பாப்டீஷியாவுடனும்) மலேரியாவில் (இபிகாக்குடனும்) ஒற்றுமையாக வேலை செய்யும்.

**ஒப்பிடுதல்** :—மூடுபனியினால் உபாதிகள் கூடுதலில் ஹைபரிகும்; புயல் காற்றினால் உபாதிகள் அதிகரித்தலில் பாஸ்பரஸ்; குளிர் உள்ளபோது கடுமையான உடல் நடுக்கத்தைத் தடுக்க இறுகப் பிடித்துக் கொள்வதை விரும்பும் குறியில் லாச்சஸிஸ் ஆகியவைகளுடன். ஜெல்ஸிமியம் வியாதியஸ்தர் விடாமல் அசைந்துகொண்டே இருப்பார். அசைவதை நிறுத்தினால் இருதயம் வேலை செய்யாமல் நின்றுவிடு மென்று நினைப்பார். டிஜிடாலிஸ் வியாதியஸ்தர் இதற்கு நேர் எதிரிடையாக இருப்பார்.

---

## கிராபைடிஸ்
## (GRAPHITES)

**முன்னுரை** :—ஸோரா விஷத்தை அடக்குவதில் இது தலைசிறந்தது. சரும வியாதிகள் உள்ளே அமுக்கப்பட்ட

தால் உண்டாகும் கெடுதல்களைப் போக்கத் தேவையாகும் ஒரு சில ஔஷதங்களில் இதுவும் ஒன்று.

"அல்லோபதி முறையில் மேல்பூச்சு ஔஷதங்களை உபயோகித்ததனால் கரப்பான் படை உள்ளே அமுக்கப்பட்டுச் சிறு குடலிலும் பெருங்குடலிலும் மிகக் கடுமையான வேக்காடு தோன்றியது. அல்லோபதி வைத்தியர்களால் இவ்வேக்காட்டை நீக்க ஒன்றுமே செய்யமுடியவில்லை. கிராபைடிஸினால் மிக விரைவில் இவ்வியாதி முழுவதும் குணமாகியது. வியாதியஸ்தரின் மலம் கிராபைடிஸில் இருப்பதை ஒத்து இருந்தது என்பதே இக்கேஸில் சிந்தனையைத் தூண்டியது" என்பதாக டாக்டர் நாஷ் கூறியுள்ளார்.

## பொதுவான குறிகள்

**தகுதி :—** வழக்கமாக மலச்சிக்கலினால் அவதிப்படும் கொழுப்புச்சதை உள்ள பெண்களுக்கு ஏற்றது. இவர்களுக்கு மாதவிடாயும் தாமதித்தே தோன்றும். உடம்பில் இடைவிடாமல் குளிரும் உணர்ச்சி, வெடிப்புகளுடன் பிசின் போன்ற நீரைக் கக்கும் கரப்பான் படைகள் ஆகிய கோளாறுகளுடன் உடல் கொழுத்துக் கொளகொளவென்று தசைகள் உள்ளவர்களுக்கு விசேஷமாகத் தகுந்தது." கிராபைடிஸ் கொடுக்கப்படவேண்டியவர்கள் உடல் கொழுத்து ஊளைச்சதைப் பிடித்துக் குளிரும் உணர்ச்சியுடனும் மலச்சிக்கலுடனும் இருப்பார்கள். சிவந்த உடல், "பெண்களுக்கு மாதவிடாய் ஆரம்பமாகும் காலத்தில் தோன்றும் கோளாறுகளுக்குப் பல்ஸடில்லா உபயோகமாவதைப் போலவே மாதவிடாய் மறையும் காலத்தில் காணப்படும் கோளாறுகளுக்குக் கிராபைடிஸ் பயன்படும்."

**மனம் :—** அளவுக்கு மிஞ்சி எச்சரிக்கையாய் இருக்கும் குணம்; பயங்கொள்ளித்தனம்; மிகவும் தயங்குதல்: எந்த விஷயத்திலும் சட்டென்று ஒரு முடிவுக்கு வரமாட்டார். பயப்படும் சுபாவம் (அடிக்கடி திடுக்கிடுதல்). அதிக வருத்தமும் தைரியக் குறைவும் இருப்பதனால் சாவைப்பற்றியும் தனக்கு மோட்சம் கிடைக்குமா என்பதைப் பற்றியும் எந்நேரமும் சிந்தித்துக் கொண்டே இருப்பார். குழந்தை எதிர்த்துப் பேசும்; கண்டித்தால் சிரிக்கும்.



**உடல் :—** மூளையை உபயோகித்து வேலைசெய்ததால் ஏற்படும் உடற்சோர்வு. பல இடங்களில் தசைகளில் இழுத்தலும் சுருக்கமும். முதுகில் அடிக்கடி சுளுக்கு ஏற்படுதல். சுரப்பிகள் வீங்கிக் கடினமாகும். அடிக்கடி நீர்க்கோர்வை பிடித்தல், உடம்பு முழுவதும் அசதி. சோம்பல் முறிக்க ஆவல், திருப்தி உண்டாகும் அளவுக்குச் சோம்பல் முறிக்க முடியாது. சிற்றின்பத்தில் கடுமையான வெறுப்பு. அடிக்கடி மூக்கும் குணம். தூங்கும் போது இடைவிடாமல் பேசுதல். இரவில் மூச்சுத்திணறல் தோன்றி விழித்துக் கொள்ளுதல். நகங்கள் கோணல் மாணலாகவும் தடித்தும் வளருதல். வியாதி பிடித்த சருமம்; சிறு காயமும் புண்ணாகிச் சீழ்ப் பிடிக்கும் (ஹிப்பார் ஸல்பர்). உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருக்கும் போது உடம்பில் பரபரப்பு (லிங்க்கம் மெட்). முழங்காலில் பிடிப்பு. உள்ளங்கைகளில் எரிச்சல். மாதவிடாய் வழக்கமாகத் தாமதித்துத் தோன்றுதல். வியாதியுள்ள இடங்கள் மட்டும் மெலிந்து போகும். காதுகளில் அனேகமாய் எல்லாவித இரைச்சல்களும் கேட்கும். தலைமயிர் நரைத்தல்.

**உபாதி கூடுதல் :—** திறந்த இடங்களில் சென்றாலும்

குளிர் காற்று வீசினாலும் ஒத்துக்கொள்ளாமல் அடிக்கடி நீர்க்கோர்வை உண்டாகும். வீட்டிற்குள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் எப்பொழுதும் உடலில் குளிரும் உணர்ச்சி. வண்டியில் பயணம் செய்தால் மேலும் அதிகமாகும். பனிக்காலத்தின் குளிர், கோடைக்காலத்தின் சூடு ஆகிய இரண்டுமே வியாதியஸ்தருக்கு ஒத்துக்கொள்ளாது. சூடான அறையில் இருக்க முடியாமல் திறந்த இடங்களில் இருக்க விரும்புவார். இக்கடைசிக் குறி (குளிர், கோடை இரண்டுமே ஒத்துக்கொள்ளாமல் இருப்பது) வினோதமாய்த்தான் இருக்கிறது. இந்த ஒரு குறியில் மட்டும் இல்லாமல் வேறு பல குறிகளிலும் இவ்வினோதம் காணப்படும். மிகச் சீக்கிரத்தில் உடம்பு சில்லிடுவதும் அதே போல் மிகச் சீக்கிரத்தில் சூடு உண்டாவதும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—வண்டிகளில் சவாரிசெய்தால் பல உபாதிகள் கூடுதலாகின்றன. குளிர்ந்த பானங்கள், குளிர்காற்று, ஈரவாடையுள்ள மழைக்காலம், தண்ணீரில் குளித்தல் ஆகியவைகளால் உபாதிகள் அதிகமாகும், படுக்கையின் சூட்டினால் அறிப்பு அதிகமாகும். சின்னம்மை வந்த பிறகு குளித்தால் முகத்தில் பாரிசவாதம் தோன்றுதல். பாதங்களைத் தண்ணீரில் நனைத்தால் மாதவிடாய் வெளிவரத் தாமதமாகுதல். பௌர்ணமி நாட்களில் காதுகளினுள்ளே அடைத்துக் கொண்டிருக்கும் உணர்ச்சி, நீர்க்கோர்வை ஏற்படும்போதும் அல்லது கால்களைத் தண்ணீரில் நனைக்கும்போதும் ஒவ்வொரு தடவையும் தவறாமல் சினைப்பைகளில் வீக்கம் உண்டாகும்.

**உபாதி குறைதல்**:—காது கேளாமல் இருப்பவர்களுக்கு அதிக இரைச்சலுள்ள இடங்களில் இருக்கும்



போது காது கேட்கும்; அதிகச் சப்தம் போட்டுக் கொண்டு ஓடும் வண்டிகளில் உட்கார்ந்திருக்கும் போதும் காது கேட்கும் (நைட்ரிக் ஆஸிட்).

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**வெடிப்புகள்: வறட்சி: இரத்தம் கொட்டுதல்**:—"கை விரல்களின் நுனிகள், ஸ்தனக் காம்புகள், யோனியின் உதடுகள், ஆசனவாய், கால் விரல்களின் சந்துகள் ஆகிய இடங்களில் வெடிப்புகள்." சருமம் காய்ந்து வெடிக்கும் குணம் உள்ளதாய் இருக்கும். கண் இமைகளில் கரப்பான் படை உண்டாகி அவை கச கசவென்று நீர்க்கசிவுடனும் வெடித்தும் இருக்கும். இமைகளின் வெளி மூலைகளில் புண்ணாகி அல்லது வெடிப்புகள் இருக்கும், அடிக்கடி இரத்தப் பெருக்கு உண்டாகும். இமைகளிலும் புருவங்களிலும் காய்ந்த பொறுக்குகள். சருமக் கோளாறுகள் யாவும் வெடிப்புகளுடனும் ஈரக்கசிவுடனும் அடிக்கடி அல்ப காரணங்களால் கூட இரத்தம் கொட்டுவதாகவும் இருக்கும். காதுகளின் உட்புறத்திலே காய்ந்து இருத்தல். காதுகளின் பின் பக்கத்தில் வெடிப்பு. மூக்குத் துவாரங்களில் பொறுக்குகளும் வெடிப்புகளும். ஆசன வாயில் வெடிப்புத் தோன்றி அதனால் புண் உண்டாகி இரத்தப் பெருக்கெடுக்கும். சருமத்தில் வியர்வையே இல்லாமல் காய்ந்திருத்தல், மிகவும் பிடிவாத குணமுள்ள வறட்சி. யோனி காய்ந்து இருக்கும்; "எப்பொழுதாவது ஒரு தடவை மாதவிடாய் மிகக் குறைவான வெளுத்த நிறமுள்ள போக்குடன் தோன்றும்." இதுவும் விசேஷக் குறியாகிய "வறட்சி"யை எடுத்துக் காட்டுகிறது; அதாவது மாதவிடாய்ப் போக்கை உற்பத்தி செய்யும் இடம் காய்ந்து போய்விட்டது போல் தோன்றுதல்.

கட்டை பாய்தல் : கடினமாய் இருத்தல் : கல் போல் கடினமாகுதல் : ஒழுங்கில்லாத வளர்ச்சி:—நகங்கள் கட்டை பாய்ந்து, ஒழுங்கில்லாமல் வளருவதும் மிகச் சீக்கிரத்தில் ஒடிந்து போவதாகவும் இருக்கும். (ஆண்ட்டிம். க்ருடம்); வலியும் இருக்கும். கால் விரல் நகங்கள் தாறுமாருய் வளருதல். சினைப்பைகள், கருப்பை, ஸ்தனங்கள் ஆகியவை கல் போல் கடினமாகுதல். ஸ்தனங்கள் வீங்கிக் கடினமாகும். கல்லீரல் கடினமாகி வீங்கி வலிக்கும், கனமாய் இருப்பது போல் தோன்றும். கருப்பையின் கழுத்தில் அதிக இரத்தம் சேர்ந்து கல் போல் கடினமாகும் (கருப்பை பற்றிய புற்று). பெரிய, கடினமான, உருண்டைகளாக உள்ள மலம்; அவ்வுருண்டைகளை சளிச்சவ்விஞலான நாரிஞல் கட்டியிருப்பது போல் நடுவில் சளிச்சவ்வு காணப்படும். கழுத்திலுள்ள சுரப்பிகள் பருத்துக் கடினமாகி வலியுடன் இருக்கும். சீழ்ப் புண்களில், விசேஷமாக ஸ்தனங்களில் உண்டாகும் சீழ்ப் புண்களில் கிராபைடிஸ் சீழை மிக வேகமாக உறிஞ்சிக் குணம் அளிக்கிறது. தழும்புகள் கடினமாகி வலி தோன்றும் போதும் பழய தழும்புகளில் சீழ் வைத்து மீண்டும் புண்கள் தோன்றிஞலும் கிராபைடிஸ் உபயோகமாகும்.

பொறுக்குகள் உண்டாகும் தன்மை :—கண் இமைகள் சிவந்து விழிகளின் ஓரங்களில் பொறுக்குகள் உண்டாகும். பொறுக்குகள் உள்ள குழிப்புண்கள். ஈரக் கசிவும் பொறுக்குகளும் உள்ள சரும வியாதி.

ஈரக்கசிவு : ஒட்டும் தன்மை :—காய்ந்து கறடு முறடாய் இருக்கும் சருமம் மிக எளிதிலே வெடித்துப் பிசின்போன்ற ஈரக்கசிவு உண்டாகும். சருமத்தில் மடிப்புகள் ஏற்படும் இடங்களில் இக்குறி விசேஷமாய்க் காணப்படும். சீக்கிரத்தில் புண் ஆறுவதில்லை. காதுகளின் பின்பக்கங்களில் ஈரக் கசிவுள்ள கரப்பான் படை அல்லது வேறு சரும வியாதிகள். வாயையும் முகவாய்க்கட்டையையும் சுற்றி ஈரக்கசிவுள்ள கரப்பான் படை, கரப்பான் படையிலும் கடிபோன்ற சரும வியாதிகளிலும் பிசின் போன்ற நீர் வெளிப்படும். இந்த நீர் தண்ணீர் போலவும் ஊடுருவிப் பார்க்கக் கூடியதாகவும் இருக்கும். கெட்டியாகவும் தேன் போலவும் இருக்கலாம். வெளிப்படும் நீர் கெட்டியாய் இருந்தாலும் அல்லது தண்ணீர்போல் இருந்தாலும் தெளிவாகவும் ஒட்டும் குண முள்ளதாகவும் இருந்தால் அக்கேசுக்குக் கிராபைடிஸ் தான் ஏற்றதென்று முடிவு கூறலாம். மண்டைத் தோலிலிருந்து பிசின் போன்ற நீர் வடிந்து அதஞல் ஈரக்கசிவுள்ள பொறுக்குகளும் தலைமயிர் ஒட்டிக்கொண்டு சடையாய் மாறுவதும் ஏற்படும், நாட்பட்ட மேகவெட்டையில் மூத்திரத்துவாரத்தின் வாயில் ஒட்டிக்கொள்ளும் குணமுள்ள பிசின் போன்ற போக்கு உண்டாகித் துவாரத்தை அடைத்துக் கொள்ளும்.



தோல் உறிதல் :—கைகள், கால்கள், கழுத்து, அரையிடுக்கு, காதுகளின் பின்பக்கம் ஆகிய இடங்களில் சருமம் சுருங்கி மடிப்பு விழும் இடங்களில் தோல் உறிதல், விசேஷமாகக் குழந்தைகளுக்கு. "ஆசனவாயைச் சுற்றி ஈரக்கசிவுடன் அரிப்பும் தோல் உறிவதும் வெடிப்புகளும் காணப்படும்." கார குணமுள்ள வெள்ளை ஒழுக்கு, பட்ட இடங்களைப் புண்ணக்கும்; வெள்ளை நிறமாய் இருக்கும்; ஏராளமாகவும் இரவு பகல் என்ற வித்தியாசம் இல்லாமல் குபீர் குபீர் என்றும் வெளிப்படும்.

மாதவிடாய் தோன்றுவதற்கு முன்னும் மறைந்த பிறகும் வெள்ளை ஒழுக்கு. மெல்லிய, குறைவான, நாற்றம் வீசும், தோல் உறியச் செய்யும் நீர் உற்பத்தியாகுதல்.

**வாயு உப்பிசம் : நிறைந்த உணர்ச்சி** :—வாயு உப்பிசம். அடிவயிறு நிறைந்து வாயு ஏராளமாய் அடைபட்டு விட்டதுபோல் உப்பி இருத்தல், உண்ணும் உணவுப் பொருள்கள் யாவும் வயிற்றினுள்ளே கெட்டுப்போய் வாயுவாக மாறி அடிவயிற்றில் இரைச்சல், எரிச்சல், இழுத்துப் பிடிக்கும் வலிகள் முதலியவை தோன்றும், நீர்ச்சுரப்புடன் அடிவயிறு வீங்கி இருத்தல்.

**தசைகளில் விரைப்புடன் அவைகளை அசைக்கமுடியாமை:** -தன் நினைவுடன் வியாதியஸ்தர் இருப்பார். ஆனால் அசையவோ பேசவோ முடியாமல் போகும்.

**உணர்ச்சிகள் அதிகரித்தல்** :—புலன் உணர்ச்சிகள் அளவு கடந்து அதிகமாய் இருத்தல், மலர்களின் வாசனையைத் தாங்கமுடியாது. சங்கீதம் கேட்டால் அழுகை உண்டாகும்.

**உருண்டைக் குணம்** :—மலம் உருண்டைகளாக சளியினால் மூடப்பட்டிருக்கும் அல்லது உருண்டைகள் சளியினால் ஆக்கப்பட்ட நார்களால் ஒன்று சேர்க்கப் பட்டது போலவும் இருக்கலாம். வயிற்றினுள்ளே உருண்டையான ஏதோ ஒரு பொருள் இருக்கும் உணர்ச்சியும் விழுங்குவது போல் செய்யும்போது இவ்வுணர்ச்சி அதிகமாவதும். கருப்பையில் புற்றுஏற்பட்டபோது கறுப்பான, கட்டி கட்டிகளாக உள்ள, நாற்றம் வீசும் இரத்தம் வெளிப்படும்.

**நாற்றம் வீசும் குணம்** —சரும வியாதிகள், கழிவுகள், மாதவிடாய்ப் போக்கு. மூச்சுக் காற்று, வியர்வை,



குழிப்புண்கள் ஆகிய யாவும் கெட்ட நாற்றம் அடிக்கும். பல சமயங்களில் தாங்கமுடியாத அளவுக்கு அதிகமான நாற்றம் இருக்கும். நாற்றமுள்ள ஏப்பம். பாதங்களில் நாற்றம் வீசும், காரகுணமுள்ள வியர்வை. இரவு பகல் எந்நேரமும் ஓயாமல் நாற்றமுள்ள அபான வாயு வெளியாகிக் கொண்டே இருக்கும். மலம் பழுப்பாகவும், தண்ணீராகவும், சீரணமாகாத உணவுப் பொருள்கள் கலந்தும் பொறுக்கமுடியாத நாற்றத்துடனும் இருக்கும்.

**வெறுப்பு:** மாமிசம், மீன், உப்பு, தித்திப்பு, சமைத்த உணவு ஆகியவைகளில் வெறுப்பு.

**மாறித் தோன்றுதல்** :—சருமக் கோளாறுகளும் சீரணக் கோளாறுகளும் மாறி மாறித் தோன்றும். வழக்கமாக உள்ள அக்கிப்படுவன் கடியுடன் மாறி மாறித் தோன்றுதல். ஒருசமயம் சிரிப்பதும் மறுசமயம் அழுவதும் (பல்ஸடில்லா, லைகபோடியம், ஸ்ட்ரமோனியம்).

**திரும்பித் தோன்றும் குணம்** :—சீழ்ப் பிடிக்கும் குணமுள்ள நாட்பட்ட அக்கிப்படுபவன் அடிக்கடி தோன்றும் குணமுள்ளதாக மாறினால் கிராபைடிஸ் அவ்விதம் தோன்றுவதை நிறுத்தி விடும்.

## மற்ற குறிகள்

கருப்பை யோனித்துவாரம் வழியாகப் பிதுங்கி வெளியே வந்து விடும் என்று தோன்றுதல், இழுப்புடன் மூச்சு விடுதல். மானியின் நுனித் தோலில் கடி, விரைப்பையிலும் மானியிலும் நீர்ச்சுரப்புள்ள வீக்கம், விரைகள் வீங்குதல். இரத்த சோகை உள்ள பெண்களுக்கு மாத விடாய் அடக்கப்பட்டிருத்தல் அல்லது மிகவும் தாமதமாய்த் தோன்றுதல். அக்கிப்படுவன் மூக்கில் ஆரம்பமாகும். அக்கிப்படுவன் வலது பக்கத்

தில் தோன்றிப் பிறகு இடது பக்கம் பரவும். அக்கியுள்ள இடத்தில் எரிச்சலும் மெதுவாகத் துடிக்கும் உணர்ச்சியுடன் வலிகளும். சிழ்ப்பிடிக்கும் குணமுள்ள அக்கிப்படுவன். நெற்றியில் சிலந்தி வலைகள் ஒட்டிக் கொண்டிருக்கும் உணர்ச்சி. அவ்வலைகளை எடுத்துவிடவேண்டுமென்று தீவிரமாய் முயற்சிசெய்வார். உச்சந்தலையில் எரிச்சலைத் தரும் சிவந்த புள்ளிகள். (கல் கார்ப், ஸல்பர்; சில்லிப்பைத்தரும் புள்ளிகள் இருந்தால் ஸேபியா, வெராட்ரம் ஆல்பம்). ஏராளமாய் நீர்வடியும் நீர்க்கோர்வை முறை வைத்துத் தோன்றும். அச்சமயத்தில் இடைவிடாத மூக்கடைப்பும் அதனால் வாயினால் மூச்சுவிடவேண்டிய அவசியமும் உண்டாகும். ஈறுகள் வீங்கி அவைகளைத் தேய்த்தால் இரத்தப் பெருக்கு தோன்றும். உணவு உட்கொண்ட வுடனே வயிற்று வலி. இருதயத்தைச் சுற்றிக் குளிர்ந்த உணர்ச்சி. சூரிய வெளிச்சத்தில் மிகக் கடுமையான கண்கூச்சமும் ஏராளமாய்க் கண்ணீர் வெளிப்படுவதும். அரையிடுக்கில் கடி. இயற்கைக்கு முரண்பட்ட வழிகளில் அல்லது அளவுகடந்து சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் புணர்ச்சி உறுப்புகள் பலவீனமடைதல். காசநோயிலும் இருதயக் கோளாறுகளிலும் இரவில் மூச்சுத் திணறல் தோன்றித் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வார். உடனே ஏதாவது சாப்பிடவேண்டும்.

**உறவு** :—லைகபோடியம், பல்ஸடில்லா இவைகளுக்குப் பின் கிராபைடிஸ் நன்றாக வேலைசெய்யும். இளவயதுள்ள, உடல் பருத்த பெண்களில் கல். கார்புக்குப் பிறகும் சருமக் கோளாறுகளில் ஸல்பருக்குப் பிறகும் குபீர் குபீர் என்று பெருக்கெடுக்கும் வெள்ளை ஒழுக்கில் ஸேபியாவுக்குப் பிறகும் கிராபைடிஸ் நன்கு வேலைசெய்யும். காஸ்டிகம், ஹிப்பார் ஸல்பர், லைகபோடியம் ஆகியவை நட்பு ஔஷதங்கள்.



**ஒப்பிடுதல்** :—அக்கிப்படுவன் மூக்கில் ஆரம்பித்தால் (கந்தாரிஸ்). அக்கிப்படுவன் வலது பக்கம் தோன்றி இடது பக்கம் பரவினால் கிராபைடிசும் இடது பக்கம் தோன்றி வலது பக்கம் பரவினால் ரஸ் டாக்சும் உபயோகப்படும். பாலினால் கிராபைடிஸ் வியாதிகள் சௌகரியமாகும்; பல்ஸடில்லாவின் வியாதிகள் பாலினால் கூடுதலாகும்.

---

## ஹமாமெலிஸ் வர்ஜினிகா
## (HAMAMELIS VIRGINICA)

**முன்னுரை** :—அசுத்த இரத்தக் குழாய்களைப் பற்றிய வியாதிகளுக்கு இது ஓர் ஏற்ற ஔஷதம். சுத்த இரத்தக் குழாய்களைப் பற்றிய வியாதிகளில் அகோனைட்டும் தசைகளைப்பற்றிய கோளாறுகளில் ஆர்னிகாவும் நரம்புகளைப் பற்றிய உபாதிகளில் ஹைபரிகுமும் உபயோக மாவதைப் போல் அசுத்த இரத்தக் குழாய் பற்றிய வியாதிகளில் ஹமாமெலிஸ் உபயோகப்படுகிறது. இவ் வௌஷதத்தைத் தேர்ந்தெடுக்க உதவும் விசேஷக் குறிகளாவன: 1. கடுமையான புண்ணுள்ள உணர்ச்சி. 2. கறுப்பு நிறமுள்ள இரத்தம் வெளிப்படும் இரத்தப்பெருக்கு. 3. வெளியேறும் இரத்தத்தின் அளவுக்குத் தக்கபடி இல்லாமல் அளவு கடந்த உடற்சோர்வு. 4. மனதை அலட்டிக்கொள்ளாமல் நிம்மதியாய் இருத்தல். 5. அடிபட்ட நிலைமைகள்.

### பொதுவான குறிகள்

**மனம்** :—படிக்கவோ, வேலை செய்யவோ விருப்பம் இல்லாமை, "எனக்குரிய மரியாதையைப் பிறர் கொடுக்க வேண்டும்" என்று விரும்புவார்,

**உடல்** :—நாக்கு சுடப்பட்டதுபோல் தோன்றுதல். கைகளிலும் கால்களிலும் களைத்துப்போன உணர்ச்சி.

நாக்கில் உலோகச் சுவை. காலையில் பசியே இருப்பதில்லை. பிற்பகலில், முழங்கால்களில் பலவீனம். அதிகத் தாகம்.

உபாதி கூடுதல் :—குளிர் ஒத்துக்கொள்வதில்லை; குளிரில் சென்றால் ஒவ்வொரு தடவையும் தவறாமல் நீர்க்கோர்வை உண்டாகுதல் : விசேஷமாகச் சூடும் ஈரக்கசிவும் உள்ள காற்றுப்பட்டால். அசைவினாலும் அதிக உழைப்பினாலும் உபாதிகள் கூடுதலாகும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) ;—வலிகள் பகலிலும் ஓய்வாய் இருக்கும்போதும் அதிகமாகும். இரவில் கொஞ்சம் கூட இருப்பதில்லை. சூடான இடங்களில் உள்ளபோது பல்வலி கூடுதலாகும் ; பல்வலியினால் தூக்கமே வருவதில்லை, ஆனால் பல்லில் பழுது ஒன்றும் இருக்காது. அதிர்ச்சி, அமுக்குவது, தொடுவது ஆகிய காரணங்களால் வலிகள் அதிகமாகும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமையான புண் உள்ள உணர்ச்சி :—வியாதியுள்ள இடங்களில் அடிபட்ட, புண்ணாய் இருக்கும் உணர்ச்சி (ஆர்னிகா). விரைகளின் வேக்காடு, சினைப்பைகளின் வேக்காடு, அசுத்த இரத்தக் குழாய்களில் வேக்காடு, வீங்கிச் சுருட்டிக்கொண்டுள்ள அசுத்த இரத்தக்குழாய்கள், வாதரோகம், கண்களின் வேக்காடு, யோனியில் விட்டு விட்டு வரும் வலி முதலிய பல வியாதிகளில் கடுமையான புண்ணுள்ள உணர்ச்சி விசேஷக் குறியாகக் காணப்படலாம். மேகவெட்டை சம்பந்தமுள்ள விரைவேக்காட்டிலும் விரைகளிலிருந்து சுக்கிலச் சுரப்பிகளுக்கு இந்திரியத்தைக் கொண்டு செல்லும் இந்திரியக் குழாயை



ஒட்டியுள்ள அசுத்தஇரத்தக்குழாய்களின் வேக்காட்டிலும் புண்ணுள்ள உணர்ச்சி மிகக் கடுமையாய் இருக்கும். விரைவேக்காட்டில் விரைகளைத்தொட்டால் மிகக்கடுமையான வலி உண்டாகும் ; வலிகள் இந்திரியக் குழாய்களுக்குக் கீழே தாவி விரைகளினுள்ளே நுழையும். இரத்தம் எந்த இடத்திலிருந்து வெளியே பெருக்கெடுத்து வருகிறதோ அந்த இடத்தில் புண் இருப்பதுபோலவும் அடிபட்டது போலவும் தோன்றும். ஈறுகளில் புண் உள்ள உணர்ச்சி; வலி, வீக்கம், அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக்கெடுத்தல், இரத்தம் கறுப்பாய் இருக்கும். மாதவிடாயில் போக்கு கறுப்பாகவும் ஏராளமாகவும் அடிவயிற்றில் புண் உள்ள உணர்ச்சியுடனும் வெளிப்படும். கருச்சிதைவுக்குப் பிறகு அல்லது மேகவெட்டை ஏற்பட்ட பிறகு சினைப்பைகளில் வேக்காடு உண்டாகும்; அடிவயிறு முழுவதும் மிகுந்த வேதனையை அளிக்கும் புண்ணுள்ள உணர்ச்சி. சுவாச கோசங்களில் புண்ணுள்ள, அடிபட்டதுபோன்ற உணர்ச்சி.

அசுத்த இரத்தக் குழாய்களின் வியாதிகள்: நீலநிறம்:— அசுத்த இரத்தக் குழாய்களின் வேக்காடு. மூலம், அசுத்த இரத்தம் அதிகமாய்ச் சேருதல் முதலிய வியாதிகளில் பல சமயங்களிலும் ஹமாமெலிஸ் உபயோகமாகிறது. மூலத்துக்கு ஹமாமெலிஸ் மிகச் சிறந்ததோர் ஔஷதமாகும். மூலங்களில் அதிக இரத்தம் சேர்ந்து. வேக்காடும் இரத்தப்பெருக்கும் தோன்றும், அசுத்த இரத்தக் குழாய்களில் இரத்தம் அதிகமாய்ச் சேரும் உடல்வாகு உள்ளவர்களுக்குத் தொண்டையில் புண் உண்டாகும்; சூடும் ஈரக்கசிவும் உள்ள காற்றினால் இவ்வுபாதி கூடுதலாகும். அசுத்த இரத்தக்குழாய்களின்

வேக்காட்டில் ஊசியினால் குத்துவது போன்ற வலி. பிள்ளைப் பெற்ற பிறகு கால்கள் வீங்குதல். பனியினால் ஏற்படும் சரும வியாதிகளில் சருமம் நீல நிறமாய் இருக்கும். அடிபட்டதால் இரத்தம் குழம்பிக் கறுப்பாகுதல்.

**இரத்தப் பெருக்கு:**—எந்தத் துவாரத்திலிருந்து இரத்தப் பெருக்கு தோன்றினாலும் இரத்தம் கறுப்பாகவும் கட்டிகளுடனும் அசுத்த இரத்தக் குழாய்களில் இருக்கும் இரத்தத்தைப் போலவும் மெதுவாகவும் வெளியாகுமானால் அதற்கு ஹமாமெலிஸ் உபயோகப்படும். மூக்கிலிருந்து வரும் இரத்தப்பெருக்கில் இரத்தம் மெதுவாகவும் அசுத்த இரத்தமாகவும் நீண்ட நேரம் நீடித்தும் உறையும் குணம் இல்லாமலும் வெளிப்படும். மூக்கின் மேல்தண்டிலே இறுக்கியிருக்கும் உணர்ச்சி. தலை பளுவாய்த் தோன்றுதல்; இரத்தப் பெருக்கு ஏற்பட்ட பிறகு உபாதிகள் மிகவும் குறைவாகும். சுவாச கோசங்களிலிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்கில் தொண்டையில் வேதனையுடன் அடிக்கடி இருமலும் இரத்தம்போன்ற அல்லது கந்தகம் போன்ற சுவையும். மூலங்களில் புண்ணுள்ள உணர்ச்சியும் ஏராளமாய் இரத்தம் பெருக்கெடுப்பதும். இருமும் போது அல்லது அதிகச் சிரமம் எதுவும் இல்லாமல் மிகச் சுலபமாக ஏராளமான அசுத்த இரத்தம் பெருக்கெடுத்தல்; சுவாச கோசங்களில் புண்ணுள்ள, அடிபட்ட உணர்ச்சி. டைபாய்டு சுரத்தில் குடல்களிலிருந்து கறுப்பு நிறமுள்ள அசுத்த இரத்தம் வெளிப்படும்; வியாதியஸ்தருக்கு அதனால் கவலை எதுவும் ஏற்படாது. கண்களினுள்ளே ஏற்படும் இரத்தப் பெருக்கில் ஆர்னிகாவையும் காலண்டுலாவையும் உபயோகிப்பது பொதுவான வழக்கம். ஆனால் " உள்ளே கசிந்துள்ள இரத்தத்தைச்



சீக்கிரத்தில் உறிஞ்சிக் குணம் அளிப்பதில் அவ்விரண்டு ஔஷதங்களையும் விட ஹமாமெலிஸ் சிறந்தது" (ஹெரிங்.)

**அடிபட்ட நிலைமைகள் :**—அடி தடிகளால் ஏற்படும் காயங்கள் முதலியவைகளுக்கு இது மிகவும் உபயோகமுள்ள ஔஷதம் என்பதைப் பல சமயங்களிலும் மறந்து விடுகிறோம் அல்லது கவனிக்காமல் விட்டு விடுகிறோம். வெட்டுக்காயம், கீறல் காயம், ஊமைக்காயம், கீழே விழுந்து உண்டாகும் காயம், அடிபட்டதனால் இரத்தப்பெருக்கு ஆகிய சமயங்களில் உபயோகப்படும். இச்சமயங்களில் ஹமாமெலிஸ் தசைகளிலுள்ள புண்ணுள்ள உணர்ச்சியைப் போக்கி வலியை நீக்கி, புண்களை ஆறச்செய்து இரத்தப்பெருக்கை அடக்கிச் சில சமயங்களில் ஆர்னிகாவையும் மற்றவைகளையும் விடச்சிறப்பாய் வேலை செய்கிறது. அடிபட்டதால் கண்களின் சளிச்சவ்வுகளில் அதிகப் புண்ணுள்ள உணர்ச்சியுடன் வேக்காடு. கடுமையான இருமலினாலும் இந்நிலைமை ஏற்படலாம். அடிபட்ட காரணமாகத் தோன்றி நாட்பட இருக்கும் கோளாறுகள். (கோனியம்).

**விநோதமான உணர்ச்சிகள் :**—வாயில் இரத்தம் இருப்பது போல் சுவை. நாக்கில் சூடுபட்ட உணர்ச்சி. தண்ணீரில் வெறுப்பு, அதைப்பற்றி நினைத்தாலும் அவர் உடம்பை என்னவோ செய்யும் என்ற குறியையும் இத்துடன் சேர்த்துக்கொள்ளலாம்.

**அசாதாரணமான களைப்பு: அசாதாரணமான மன அமைதி :**—ஹமாமெலிஸ் தேவைப்படும் இரத்தப்பெருக்கில் சில சமயங்களில் அதிகமான களைப்பு இருக்கலாம். ஆனால் இவைகளில் காணப்படும் விநோதமான ஒரு

குறி என்னவென்றால் சேதமாகும் இரத்தத்தின் அளவைப் பொறுத்ததாய் இல்லாமல் குறைவான அளவு இரத்தமே சேதமான சமயங்களில் கூட மிகக் கடுமையான களைப்புத் தோன்றுவது தான். இதைத்தவிர, மிகக் கடுமையான களைப்பு இருந்தாலும், அக்களைப்புடன் சில சமயங்களில் சம்மட்டிகொண்டு அடிப்பது போன்ற தலைவலி இருக்கும்போதும் கூட, இரத்தப் பெருக்கைக்கண்டு வியாதியஸ்தர் கவலைப்படவோ கலவரமடையவோ மாட்டார், "மன அமைதி" என்று ஹோமியோபதி நூல்களில் வர்ணிக்கப்பட்டிருக்கும் இக்குறியை நாம் "அசாதாரண மன அமைதி" என்று கூறுவதே மிகப் பொருத்தமாகும்.

**வியாதியின் உருமாறும் குணம்** :—மூக்கிலிருந்து ஏராளமான அசுத்த இரத்தம் பெருக்கெடுத்தல். (மாதவிடாய் தடைப்பட்டதால் வயிற்றிலிருந்து இரத்தம் வாந்தி செய்யப்படுதல்). வாயிலிருந்து இரத்தம் துப்பும்போது மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு.

**உறவு** :—இரத்தப் பெருக்கில் பொர்ரத்துக்கு முன்னும் பிறகும் வேலை செய்யும்.

**ஒப்பிடுதல்** :—மாதவிடாய்க்குப் பதிலாக வேறு இடங்களிலிருந்து இரத்தப் பெருக்கு தோன்றும் குறியில் பிரயோனியாவுடன்.

**குறிப்பு** :—இவ்வௌஷதத்தை உள்ளுக்குச் சாப்பிடும் போது தண்ணீரில் கலந்து உடம்பின் மேலேயும் தடவி வரலாம்.

---



# ஹெல்லபோரஸ் நைகெர்
## (HELLEBORUS NIGER)

**முன்னுரை** :—மூளைச்சவ்வு வேக்காடு, டைபாய்டு சுரம், மூளையினுள்ளே நீர்ச்சுரப்பு முதலிய ஆபத்தான வியாதிகளில் வியாதியஸ்தரின் உயிர்ச்சக்தி மிகவும் ஒடுங்கி உணர்ச்சி குறைந்துவிடும் கடைசி நிலைமைகளில் பல சமயங்களிலும் இவ்வௌஷதம் தேவைப்படுகிறது. இரண்டே இரண்டு வார்த்தைகளில் இவ்வௌஷதத்தின் வேலையைக் குறிப்பிடவேண்டுமானால் நான் சொல்லக்கூடியது 1. மூளை மழுங்கிவிடுதல்; 2. தானாகவே ஏற்படும் அசைவுகள்.

### பொதுவான குறிகள்

**தகுதி** :—பலவீனமும் உடல் மெலிவும் ஸோரா விஷமும் உள்ள சிறுவர்கள்; ஆபத்தான நீர்ச்சுரப்புடன் மூளைபற்றிய கோளாறுகள் அடிக்கடி தோன்றும் உடல்வாகு (பெல்லடொன்னா, கல். கார்ப், ட்யுபர்குலினம்) க்ஷயம் தோன்றக்கூடிய உடல்வாகு உள்ளவர்கள். பருவமடையும் சமயத்தில் வருத்தமாகவும் கவலையுடனும் இருக்கும் பெண்கள்.

**மனம்** :—மூளை மழுங்கி விடுதல், புலன் உணர்ச்சிகள் ஒடுங்கி விடுதல் அல்லது மழுங்குதல் என்னும் இவ்வொரு குறி இவ்வௌஷதத்திலுள்ள எல்லா மனக் குறிகளையும் குறிப்பிடுகிறது. வியாதியஸ்தர் மயக்கமாய்ப் பாதி முட்டாள் போல் இருப்பார். பார்த்தல், கேட்டல், சுவை அறிதல், வாசனை அறிதல், குடித்தல், பேசுதல் ஆகிய எல்லாக் காரியங்களையும் அரை குறையாகச் செய்வார். உணர்ச்சி ஒடுங்குவது மிகவும் அதிகமாகி விட்ட நிலைமையில் வியாதியஸ்தரின் நினைவு முழுவதும் அழிந்து போய்விடும்.

கேள்வி கேட்டால் மெதுவாகப் பதில் சொல்வார். யோசனை செய்யும் சக்தி அற்றவர் போலத் தோன்றுவார். பேசுகிறவரை வெறித்துப் பார்ப்பார். பதில் சொல்வதற்கு முன் நீண்ட நேரம் தாமதித்தல் அல்லது பதில் சொல்லும் திறமையே இருக்காது. தான் பார்ப்பதையோ கேட்பதையோ புரிந்து கொள்ளும் சக்தி இல்லாதவர் போல் இருத்தல். முகத்தில் முட்டாள் களை சொட்டும். தன்னை அறியாமலேயே பெருமூச்சு விடுதல். கண்கள் பாதி திறந்திருக்கும்.

வியாதி மேலும் முற்றிவிட்ட நிலைமைகளில் வெறிச்சோடிய பார்வை. பேசமாட்டார், சாப்பிடமாட்டார்; அடுத்தடுத்துக் கேள்விகள் கேட்டாலும் பதில் அளிக்கமாட்டார். இதைத்தான் புத்தகங்களில் "பிடிவாத குணமுள்ள மௌனம்" என்று குறிப்பிட்டிருக்கிறது (ஆனால் இது வேண்டுமென்றே செய்யும் பிடிவாதம் அல்ல என்பதைக் கவனிக்கவேண்டும்).

உடலின் மீது மனதுக்கு உள்ள அதிகாரம் அழிந்து போய்விடும்; கவனத்தை வேறு இடத்தில் திருப்பியவுடனே தசைகள் தத்தம் வேலைகளைச் செய்ய மறுத்தல்; வியாதியஸ்தர் பேசத் தொடங்கியவுடன் அவர் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் பொருளைக் கீழே நழுவ விட்டுவிடுவார். தசைகள் வேலை செய்வதில்லை; வியாதியஸ்தரின் விருப்பம் போல் வேலை செய்ய மறுக்கின்றன. இந்நிலைமையைப் பாரிச வாதம் என்று எடுத்துக் கொள்ளலாமாயினும் மூளை மழுங்குதல் என்ற குறியின் ஒரு பகுதியாக மதிப்பதே சரி.

**உடல்:**—வெளுத்த முகம்; நெற்றியில் பல சுருக்கங்கள். முகத்தில் குளிர்ச்சியான வியர்வை, மூக்குத்



துவாரங்களில் அழுக்கும் அவை பல சமயங்களில் விரிந்திருப்பதும். மெல்லுவது போல் வாயை அசைத்தல். உதடுகள், கைவிரல்கள், படுக்கை விரிப்புகள் ஆகியவைகளைத் தோண்டுதல். மூத்திரம் குறைவாகும் அல்லது முழுவதும் அடக்கப்படும். சில சமயங்களில் காப்பித்தூள் போன்ற வண்டல் படியும் அல்லது காப்பித்தூள் போன்ற கறுப்பான தூசிகள் மிதக்கும் கறுப்பு நிறமுள்ள மூத்திரம் கொஞ்சமாக வெளியாகும். மூத்திரம் சிவப்பாகவோ கறுப்பாகவோ இருக்கும். சில சமயங்களில் வியாதியஸ்தருக்குத் தெரியாமல் மூத்திரம் வெளிப்படும். மூத்திரத்தில் வெள்ளைச் சத்து கலந்திருத்தல். மூளைக் கோளாறுகளில் மூத்திரம் அநேகமாக தடைப்பட்டிருக்கும். கைகளில் தசை இழுப்பு. தசைகளில் வலிப்புடன் கூடிய இழுப்பு (தூங்கும் போது). நீர்ச் சுரப்பு உள்ள வீக்கங்கள். தலையை உருட்டுதல். தலையைத் தலையணையினுள்ளே அழுத்திக் குடைதல். குழந்தை அநேகமாக மல்லார்ந்து படுத்துத் தலையணையில் தலையின் பின் பக்கத்தை வைத்து அழுத்திக் குடையும். இப்படிக் குடைவதைப் பின்வருமாறு கெண்ட் விவரிக்கிறார். "இக்காரியம் வியாதியஸ்தரின் முயற்சியோ நினைவோ இல்லாமல் நடைபெறுகிறது. ஆயினும் பின் கழுத்துத் தசைகளில் உண்டாகும் சுருக்கத்தை நீக்க உதவுகிறது. வியாதி முன்னேற முன்னேற அதற்குத் தக்கபடி இத்தசைகளும் சுருங்கிக் கொண்டே வந்து கடைசியில் மூளை, முள்ளந்தண்டு வேக்காட்டு வியாதியில் காணப்படுவதைப்போல தலை பின்பக்கமாக எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரத்துக்கு வளைக்கப்படும்". உணர்ச்சி அழிதல் (விசேஷக் குறிகளின் விளக்கத்

தின் கீழே பார்க்கவும்). வாயின் மூலைகளில் புண்ணுடன் உமிழ்நீர் ஏராளமாய் உற்பத்தியாகுதல். நீர்ச்சுரப்பு உள்ள வீக்கங்கள். ஆழ்ந்த தூக்கமும் திடீர் திடீரென்று வீரிட்டுக் கதறுவதும், நாடி மெதுவாகவும் பலமில்லாமலும் துடிக்கும். மெதுவாக ஆழ்ந்து சுவாசித்தல். உடல் சூடு குறைவாகும். மூளை மழுங்கும் குறியுடனும் நாளுக்கு நாள் அதிகமாகும் உடல் மெலிவுடனும் பல நாட்களுக்கு நீடிக்கும் கோளாறுகள். (வாரக்கணக்கிலும் சில சமயங்களில் மாதக்கணக்கிலும் நீடித்திருக்கலாம்).

**உபாதி கூடுதல் :**—குழந்தைகளின் வியாதிகள். பல் முளைக்கும் காலத்தில் தோன்றும் மூளைக் கோளாறுகள். மாலை 4 மணியிலிருந்து இரவு 8 மணிவரை சுரம் அதிகமாகும் (லைகபோடியம்). ஆறுதல் வார்த்தைகளால் உபாதிகள் கூடுதலாகும். (நேட்ரம் மூர்).

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**தானாகவே ஏற்படும் அசைவுகள் :**—தானாகவே ஏற்படும் அசைவுகளை அர்த்தம் இல்லாத அசைவுகள் என்றும் சொல்லலாம். ஏனென்றால் அவ்வசைவுகள் வியாதியஸ்தரின் விருப்பத்தின் பேரில் நடைபெறவில்லை. இவ்விசேஷக்குறியை ஆதாரமாய் வைத்து அதிலிருந்து கீழே உள்ள பல குறிகளையும் தெளிவாய் அறியலாம். நினைவு தவறிய நிலைமையில் அல்லது மூளை மழுங்கி எல்லா உணர்ச்சிகளும் அடங்கி ஒடுங்கி விட்ட நிலைமையில்தான் இக் குறிகள் யாவும் சேர்ந்து காணப்படுகின்றன என்பதை மட்டும் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.



ஒரு கையும் அதே பக்கத்திலுள்ள காலும் தாமாகவே ஆடுதல். தசைகளில் வலிப்புடன இழுப்புகள். மெல்லுவது போல் வாய் அசைதல். உதடுகளையும் விரல் நுனிகளையும் அல்லது படுக்கை விரிப்புகளையும் அர்த்தம் இல்லாமலும் இடை விடாமலும் தோண்டிக்கொண்டே இருத்தல், அல்லது மூக்கினுள்ளே விரல்களை நுழைத்துக் குடைதல். ஆரம் மெட்டாலிகத்தில் வியாதியஸ்தர் நல்ல நினைவு உள்ளபோது உதடுகளைத் தோண்டுவார். தலையை இருபக்கங்களிலும் மாறி மாறி உருட்டுதல் தலையைப் பின் பக்கமாகத் (மல்லார்ந்து படுத்துக் கொண்டிருக்கும்போது) தலையணையினுள்ளே இடைவிடாமல் அழுத்திக் கொண்டே இருத்தல் தலையைக் கைகளால் அடித்தல். தானாகவே ஏற்படும் அசைவுகளுடன் கீழ் உள்ள விஷயங்களையும் சேர்க்கலாமென்று நினைக்கிறேன். வியாதியஸ்தர் மிகுந்த ஆவலுடன் குளிர்ந்த தண்ணீரைக் குடித்தல்; ஸ்பூன்களைக் கடித்து விடுவாரென்றாலும் மயக்கமாய்த்தான் இருப்பார். தண்ணீர் குடித்தால்கூட வயிற்றினுள்ளே வெளியில் தெளிவாய்க் கேட்கும்படியான அளவு ஓசை உண்டாகும், (ஹைட்ரோஸயானிக் ஆஸிட்) (திரவ உருவிலுள்ள பொருள்கள் தாமாகவே வயிற்றினுள் ஓடும்). சிறு குழந்தைகளின் உதடுகள் தாமாகவே அசையும். குழந்தை பேச முயற்சிப்பது போல் தோன்றும்.

**தானே இயங்கும் தன்மை :**—மலம், மூத்திரம் ஆகியவை வியாதியஸ்தரின் முயற்சி எதுவும் இல்லாமல் தாமாகவே வெளிப்படும். மலம் வெள்ளையாகவும் பாகுபோன்ற சளிப்பொருள் போலவும் காணப்படும்

வியாதியஸ்தர் தன்னையும் அறியாமல் ஒரே இடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார்.

உணர்ச்சிக் குறைவு:—தொட்டாலும், கிள்ளினாலும் ஊசியால் குத்தினாலும், சூடு, குளிர் ஆகியவைகளும் வியாதியஸ்தருக்குத் தெரியாது. அவ்வளவு தூரம் உணர்ச்சி குறைந்துபோகும்.

கறுப்பாக மாறுதல்:—முகம், உதடுகள், கைகள், ஆகியவை கறுப்பாக மாறும். மூக்குத் துவாரங்களில் கறுப்பான அழுக்கு அடைந்திருக்கும்.

நீர்ச்சுரப்பு உள்ள நிலைமைகள் :—மூளை, மார்பு, முகம், அடிவயிறு ஆகிய இடங்களில் நீர்ச்சுரப்பு. முகம் வெளுத்து நீர்ச்சுரப்புடன் வீங்கும். இவ்வித மான நீர்ச்சுரப்பு. மலேரியா சுரத்துக்குப் பிறகு தோன் றும். சுரத்துடன் நீர்ச்சுரப்பு, அதிகப் பலவீனம், மூத்திரம் அடக்கப்படுதல், அல்லது ஏராளமான அல்பு மென் சத்துக் கலந்திருத்தல், கீழே படுத்துக் கொண்டிருக் கும்போது சௌகரியமாக சுவாசிக்க முடியும்.

திடீர்க் கூச்சல்:—மூளை, முள்ளந்தண்டு வேக்காட் டில் (க்ஷயத்துடன் சம்பந்தப்பட்டதாய் இருக்கலாம்) தூங்கும் போது திடீர் என்று கூச்சல் போடுதல். இத் துடன் கூடுதலாகவோ குறைவாகவோ பாரிச வாதமும் சேர்ந்திருக்கும்.

உறவு :—லிங்க்கம் மெட்டாலிகத்துக்கு முன்னும் பிற கும் வேலை செய்யக்கூடியது.

குறிப்பு:—மூத்திரம் அடக்கப்படுதல் அல்லது அளவு குறைதல் என்னும் குறியைப் பிரதானமாகக் கொண் டுள்ள பலவகைப்பட்ட வியாதிகளிலும் இவ்வௌஷதம் உபயோகமாகும். கொடுத்த உடனே ஹெல்லபோரஸ்



மூத்திரத்தின் அளவைப் பெருக்கும். அபிஸ் மெல்லிபிகாவி லும் ஆரம் ட்ரிபில்லத்திலும் கூட இதே விஷயம் காணப் படுகிறது.

---

## ஹிப்பார் ஸல்பர்
## (HEPAR SULPHUR)

முன்னுரை :—ஹிப்பார் ஸல்பர் ஹோமியோபதி வைத் திய முறையிலுள்ள முக்கியமான ஔஷதங்களில் ஒன்று. மோரா விஷத்தை நீக்குவதில் "மிகவும் வலிமைபொருந்தி யது." மேகக்கிரந்தி விஷத்தைக்கூட நீக்கும். நாட்பட்ட மேகக்கிரந்தி வியாதிகளில் குறிகள் ஒத்திருந்து கொடுக்கப் பட்டால் ஹிப்பார் ஸல்பர் மிக ஆழ்ந்து வேலை செய்து நல்ல பலனை அளிக்கிறது.

கல்கேரியா கார்ப், ஸல்பர் ஆகிய இரு ஔஷதங்களும் ரசாயன முறைப்படி ஒன்றாகக் கலந்ததே ஹிப்பார் ஸல்பர். ஆதலால் நாம் எதிர்பார்ப்பதுபோல் அவ்விரு ஔஷதங்க ளில்காணப்படும் பல குறிகள் ஹிப்பார் ஸல்பரிலும் தென்படு கின்றன. ரசாயன முறைப்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள ஔஷதங்களைக் கலந்து தயாரிக்கப்படும் கூட்டு ஔஷதத்துக்குப் பிரத்தியேக மான சில குறிகள் (தனித்தனியாய் உள்ளபோது காணப் படாத குறிகள்) ஏற்படுகின்றன. அதேபோல் கல்கேரியா கார்பிலும் ஸல்பரிலும் காணப்படாத சில குறிகள் அவை ஒன்றாய்க் கலந்து ஹிப்பார் ஸல்பராக மாறும்போது தென் படுகின்றன. ஆகவே ஹிப்பார் ஸல்பரையும் ஒரு தனி ஔஷ தமாகவே மதித்து ஆராயவேண்டும்.

மிக முக்கியமான குறிகள் பின் வருமாறு :—எல்லா வகை உணர்ச்சிகளும் மிகவும் அதிகமாகுதல். 2. துரும்பு அல்லது மீன் எலும்பு இருக்கும் உணர்ச்சி. 3. மிக எளிதில்

வியர்வை உண்டாகுதல். [4. உடலிலிருந்து வெளிவரும் வாயுக்களும் கழிவுகளும் நாற்றமாய் இருத்தல். கழிவுகள் வெளியான சிறிது நேரத்திற்கெல்லாம் அழுகிய தயிர்க்கட்டி போல் நாறும். 5. அடிக்கடி சீழ்ப்பிடிக்கும் குணம்.

## பொதுவான குறிகள்

தகுதி :—சுரப்பிகளின் வீக்கம், சரும வியாதிகள் ஆகியவை அடிக்கடி தோன்றும் உடல்வாகு உள்ளவர்கள். தளர்ந்த தசை நார்களும் லேசான மயிர் வளர்ச்சியும் மந்த குணமும் உள்ளவர்களுக்குத் தகுந்தது. "பலவீனமான தசைகளும் மந்த குணமும் சிவந்த மேனியும் உள்ள பெண்கள்". பாதரஸம் அல்லது மற்ற உலோக சம்பந்தமுள்ள ஔஷதங்கள், அயோதினம் (Iodine), பொடாஷியம் அயோடைட் (Potassium Iodide), காட் லிவர் ஆயில் (Cod-liver Oil) எனப்படும் மீன் எண்ணெய், கொயினா ஆகியவைகளை அளவு மீறி உபயோகித்த பிறகு ஹிப்பார் ஸல்பர் தேவைப்படுவதுடன் அவைகளால் ஏற்பட்ட கெடுதல்களையும் நீக்கும். கொயினாவையும் பாதரஸம் கலந்த ஔஷதங்களையும் உபயோகித்துக் கோளாறான முறையில் சிகிச்சை செய்யப்பட்ட நாட்பட்ட மலேரியாச் சுரம். மேகக் கிரந்திக்கு ஏற்ற மருந்து என்று விளம்பரம் செய்யப்படும் அல்லோபதி ஔஷதங்களை அபரிமிதமாய் உபயோகித்துப் பாழ் படுத்தப்பட்ட மேகக் கிரந்திக் கேசுகள். அழுகுணிச் சிறங்கையும் மற்றும் சருமம் பற்றிய வேறு சில வியாதிகளையும் உள்ளே அமுக்கியதால் ஏற்படும் கோளாறுகளுக்கும் இவ்வௌஷதம் தகுந்தது.

மனம் :—வருத்தம், மனச்சோர்வு, சிற்சில சமயங்களில் தற்கொலை செய்துகொள்ள நினைத்தல், காரணம் இல்லாமல் ஏக்கம். அல்ப காரணங்களால் கூட ஆத்திரமும் மிகக்கடுமையான கோபமும் தோன்றும். தனக்கு விரோதமாய் இருப்போரை . சவிரக்கம் இல்லாமல் கொலை செய்து விடலாமென்ற ஒரு வகையான தீவிர ஆத்திரம் உண்டாகும். கவலையுடன் இருத்தல், குறிப்பாக மாலையில்.



உடல் :—சுரப்பிகளில் வீக்கமும் வேக்காடும், சாப்பிட்ட பிறகு உடம்பு பலமாகவும் சௌகரியமாகவும் இருப்பது போல் தோன்றும். குழந்தையின் உடல் முழுவதும் புளிப்பு நாற்றம் வீசும். இரவும் பகலும் விடாமல் வியர்வை பொழிந்தாலும் வியாதியின் வேகம் குறைவதில்லை (மெர்கூறியஸ்). தொட்டால் உபாதிகள் மிகக் கடுமையாகும். அழுகிய தயிர்க் கட்டி போல் நாற்றம் வீசும் கழிவுகள். புளிப்பான பொருள்களைத் தின்ன ஆவல், ஒயினிலும் ஊக்கம் அளிக்கக் கூடிய பானங்களிலும் ஆவல். மூத்திரப் பையிலும் மலப்பையிலும் ஓரளவு பாரிச வாதம் உண்டாகுதல். மலம் புளிப்பு நாற்றம் அடிக்கும். பதட்டமாகப் பேசுதல், காரியங்களைச் செய்தல். உடம்பே கெட்ட நாற்றம் வீசும். கீழ் உதட்டின் நடுவில் வெடிப்பு. சருமத்தில் வெடிப்புகள். கைகளில் குளிர்ந்த வியர்வை. கைகளிலும் கால்களிலும் பலவீனம்.

உபாதி கூடுதல் :—ஹிப்பார் ஸல்பர் வியாதியஸ்தருக்கு உடம்பில் எப்பொழுதும் நீங்காத குளிர் இருக்கும். குளிர்ந்த காற்றிலும், குளிர்ந்த காற்று, விசேஷமாக வறட்சியுள்ள குளிர்காற்று வீசினாலும், மெதுவாக வீசும் காற்றினாலும் கூட உபாதிகள் கூடுதலாகும். சுத்தமான காற்றுள்ள இடங்களில் சிறிது நேரம் நின்றால் கூட நீர்க்கோர்வை தோன்றும். குளிர் கொஞ்சங்கூட ஒத்துக் கொள்ளாது. (ட்யுபர்

குலினம்). உணர்ச்சிகள் அதிகரித்தல் என்னும் தலைப்பைக் கவனிக்கவும்.

**உபாதி குறைதல்:**—சூட்டினால் பொதுவாகச் சௌகரியம் ஏற்படும் (ஆர்ஸனிகம் ஆல்பம்). சூடு உண்டாகும்படி உடலைப் போர்த்திக் கொண்டால் உபாதி குறையும் (ஸோரினம், ஸைலீஷியா). ஈரக்கசிவு உள்ள மழைக்காலங்களில் சௌகரியமாய் இருக்கும் (காஸ்டிகம், நக்ஸ் வாமிகா).

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) பல குறிகள் இரவிலும், தூங்கி எழுந்தவுடன், வலியுள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்திருந்தாலும், தூங்கும் போதும் கூடுதலாகும். காலை வேளையில் இருமல் அதிகமாகும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—உணவு உட்கொண்டவுடன் சௌகரியம் (சாப்பிட்டவுடன் உடல், மன வியாதிகள் யாவும் போய்ச் சுகமாய் இருப்பது போல் தோன்றும்). இக்குறி நாட்பட்ட வயிற்றுப் போக்கிலும் அசீரணத்திலும் காணப்படும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**உணர்ச்சிகள் அதிகரித்தல்:**—உடல், மனம் இரண்டைப் பற்றியும் உள்ள உணர்ச்சிகள் அதிகமாகுதல். தொடுவது; வலி, குளிர் காற்று, விசேஷமாக வறண்ட குளிர் காற்று ஆகியவைகளால் தான் உணர்ச்சிகள் அதிகரிப்பது குறிப்பாகக் காணப்படும்.

குளிர் காற்றைக் கொஞ்சங்கூடத் தாங்க முடியாது என்ற உணர்ச்சி அதிகரிப்புக் குறி கடுமையாய் இருக்கும் போது கீழ் உள்ள குறிகள் காணப்படும். 1. அடுத்த அறையில் கதவு திறக்கும் போது ஏற்படும் காற்றின் அசைவைக்கூட உணர முடியும் என்று வியாதியஸ்தர் நினைப்பார். 2. சூடுள்ள கோடைக் காலத்திலும் வியாதியஸ்தர் தன் உடம்பை முகம் வரை போர்த்திக் கொண்டிருக்க விரும்புவார்; போர்வையைத் திறந்தால் தாங்க முடியாது. 3. "தப்பித் தவறி ஒரு கை போர்வையை விட்டு வெளியே வந்து விட்டால் அதனால் உபாதி கூடுதலாகும்." குளிர் காற்றுக் கொஞ்சம் உடம்பின் மேல் பட்டால் அல்லது போர்வையைச் சிறிது விலக்கினால் கூட இருமல் உண்டாகும். குளிர் காற்று வீசும் போது ஒவ்வொரு தடவையும் தும்மல் உண்டாகி மூக்கிலிருந்து தண்ணீர் வடிய ஆரம்பித்துப் பிறகு கெட்டியான நாற்றமுள்ள சளி வெளியாகும்.

வலியைக் கொஞ்சங் கூடத் தாங்க முடியாது; வலியினால் அது கொஞ்சமாய் இருந்தாலும் மயக்கமாய் விழுந்து விடுவார்; வேக்காடு உள்ள இடத்தை மெதுவாகத் தொட்டாலும் பொறுக்க முடியாது. புண்களின் ஓரங்களில் அதிக வலியுள்ள உணர்ச்சி. சரும வியாதிகளில் தொட்டால் வலி உணர்ச்சி மிக அதிகமாகும்; அவைகளின் மேல் குளிர் காற்றுப் பட்டாலும் தாங்க முடியாது. கண் விழிகளில் தொட்டால் புண் உள்ள வலி. வேக்காடு உள்ள பாகங்களில் புண்ணுள்ள, அடிபட்ட உணர்ச்சியும் தொட்டால் வலி அதிகரிப்பதும், கடைசியாக ஓசைகளையும் தாங்கமுடியாது.

**மனம் பற்றிய உணர்ச்சிகள் அதிகரித்தல்:**—மனம் என்ற தலைப்பைக் கவனிக்கவும். மன உணர்ச்சிகள் அதி

கரிப்பதால் பட படவென்று அவசரமாய்ப் பேசுவார் (லாச்சஸிஸ், டல்கமாரா, ஸல்பர்).

நாற்றமுள்ள குணம்.—புண்களும் எல்லாவிதக் கழிவுகளும் (வெள்ளை ஒழுக்கு, பிரசவத்துக்குப் பின் வெளியாகும் போக்கு, சீழ், மலம் ஆகிய எல்லாம்) அருவருப்பை ஏற்படுத்துவதாகவும் நாற்ற முள்ளதாகவும் இருக்கும். உடம்பே நாற்றம் வீசும். ஹிப்பார் ஸல்பரில் காணப்படும் விசேஷமான நாற்றத்தை அழுகிப்போன தயிர்க்கட்டியின் நாற்றத்துடன் ஒப்பிடலாம். சரும வியாதிகள் பல சுருக்கங்களும் ஈரக்கசிவும் நாற்றமும் கொண்டவையாய் இருக்கும்,

புளிப்புக் குணம் :—எவ்வளவு தடவை குளித்துவிட்டாலும் குழந்தையின் உடம்பு புளிப்பு நாற்றம் வீசும். மலம் வெண்மையாகவும் புளிப்பு நாற்றம் வீசிக்கொண்டும் இருக்கும். வியர்வை புளிப்பாகவும் நாற்றத்துடனும் இருக்கும். பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள, புளிப்பான வியர்வை.

துரும்பு உள்ள உணர்ச்சி :—தொண்டையில் துரும்பு அல்லது மீன் எலும்பு இருக்கும் உணர்ச்சி (அர்ஜண்டம் நைட்ரிகம், நைட்ரிக் ஆஸிட்). இக்குறி தொண்டைப் புண் உள்ள போது தான் காணப்படுமென்று நினைக்கவேண்டாம். இவ்விதமான துரும்பு இருந்து கொண்டு குத்தும் குடையும் உணர்ச்சி சீழ்ப்புண்கள், வேக்காடு, இரத்தக் கட்டிகள், சரும வியாதிகள், சீழ்க் கொப்புளங்கள் முதலிய பல வியாதிகளிலும் காணப்படலாம். இவ்விதமான விசேஷத் தன்மை வாய்ந்த வலி அல்லது வேதனையை அளித்த உணர்ச்சி (லேசாகக் குத்துதல்) நீர் இல்லாத



சரப்பான் படையில் இருந்ததை நான் கவனித்தேன்.
அவ்வியாதி ஹிப்பார் ஸல்பரினல் குணம் செய்யப்பட்டது.
மானிக்கொண்டையில் ஏற்படும் பறங்கிப் புண்ணில் குத்
தும் வலிகள் இருந்தால் ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட்
இரண்டும் உபயோகப்படும். இக்கேசுகளில் பெரும்பா
லானவைகளுக்கு நைட்ரிக் ஆஸிட் தான் தேவைப்படும்.
மற்ற குறிகளும் ஒத்திருந்தால் தான் ஹிப்பார் ஸல்பரைத்
தேர்ந்தெடுக்கலாம். நகங்களின் அடியில் சீழ் ஏற்படா
விட்டாலும் துரும்புகள் இருக்கும் உணர்ச்சி. நகச்சுற்றி
களில் குத்தும் வலிகள். மூத்திரம் கழிக்கும் போது
மூத்திரக் குழாயில் துரும்பு இருந்து கொண்டு குத்தும்
உணர்ச்சி. (மேக வெட்டையில் காணப்படுவதைப்
போல).

சுரப்பிகள், விசேஷமாகத் தாக்கப்படுதல் :—கழுத்து.
அரையிடுக்கு, அக்குள், ஸ்தனங்கள் ஆகிய இடங்களி
லுள்ள சுரப்பிகள் வீங்கிக் கடினமாகி அடிக்கடி சீழ்ப்
பிடிக்கும்.

சீழ்ப்பிடிக்கும் குணம் :—வியாதி பிடித்த சருமம்; சிறிய
காயங்களும் சிராய்ப்புகளும் சீழ்க்கொள்ளும். சீழ்ப்பிடிக்
கும் என்று தோன்றும் நிலைமையிலுள்ள எல்லா
வேக்காடுகளிலும் அகோனைட், பெல்லடோன்னு ஆகிய
வைகளைக் கொடுத்ததினல் பலன் ஏற்படாவிட்டாலும்
அல்லது அதுவரை வேறு ஒரு ஔஷதமும் கொடுக்கப்
படாமல் இருந்தாலும் ஹிப்பார் ஸல்பரை உயர்ந்த வீரியத்
தில் கொடுத்தால் சீழ்ப் பிடிப்பதைத் தடை செய்யும்
சீழ்ப்பிடிப்பதை இனித் தடை செய்ய முடியாது என்_
தோன்றும் நிலைமையில் ஹிப்பார் ஸல்பரைக் குறைந்த

வீரியத்தில் கொடுக்கவேண்டும். அதனால் மிக வேகமாகச் சீழ்க்கண்டு விரைவிலே புண் குணமாகும். இதுவே பல காலமாகக் கையாளப்பட்டு வரும் சிறந்த சிகிச்சை முறை. வேகமாகச் சீழ்ப்பிடிக்க வைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஹிப்பார் ஸல்பரை 200 வீரியத்தில் கொடுத்தபோதும் என் நோக்கம் சரிவர நிறைவேறியது என்றால் 30 வீரியத்தில் கொடுத்தால் என்ன ஆகுமென்று சொல்ல வேண்டியது இல்லையல்லவா! 3 x போன்ற மிகக் குறைவான வீரியங்களில் எனக்கு யோகம் இல்லை. 6-க்குக் குறைவான வீரியங்களில் ஒரு பொழுதும் உபயோகித்ததில்லை. இது வரை நான் ஏமாற்றம் அடையவில்லை.

சீழ்ப்புண்கள் தோன்றுவதற்கு முன்னதாகக் காணப்படும் வேக்காடுள்ள நிலைமையில் ஹிப்பார் ஸல்பரின் விசேஷக் குறியாகிய தொடுவது, குளிர் காற்று, குளிர்ச்சியான ஒற்றிடங்கள் ஆகியவைகளால் வலி கூடுதலாகும் என்பதுடன் கூர்மையான, குத்தும் அல்லது தெரிக்கும் வலிகளும் குளிரும் உணர்ச்சியும் காணப்பட்டால் ஹிப்பார் ஸல்பர் உபயோகப்படும்.

சீழ்ப்பிடிக்கும் இயல்புள்ள வியாதிகளில் ஹிப்பார் ஸல்பரை ஓரளவு ஒத்திருக்கும் கல்கேரியா ஸல்ப் என்னும் ஔஷதம் சீழ்ப்புண்கள் உடைந்த பிறகே விசேஷமாகப் பயன்படுகிறது. சீழ்ப்புண்கள் உடைவதற்கு முன் ஹிப்பார் ஸல்பர் உபயோகமாகும்.

**அரைப் பாரிச வாதமுள்ள நிலைமைகள்:**—மூத்திரம் தடைப்படும்; உட்கார்ந்து சிறிதுநேரம் கழிந்த பிறகே மூத்திரம் வெளிப்படும்; விட்டு விட்டு வெளியாகும்



(கோனியம், க்ளமேடிஸ் எரெக்டா); மூத்திரப் பையில் சேர்ந்திருக்கும் மூத்திரம் முழுவதையும் வெளியேற்ற முடியாமை; எப்பொழுதும் சிறிதளவு மூத்திரம் தங்கி இருப்பது போல் தோன்றும் (அலுமினா, ஸைலீஷியா); வேகம் இல்லாமல் மெதுவாக வெளிப்படும். மூத்திரத்துவாரத் திலிருந்து செங்குத்தாக மூத்திரம் கீழே வழியும். உட் கார்ந்து சிறிதுநேரம் சென்ற பிறகு மூத்திரம் வெளியா வதும் இரவிலே படுக்கையில் மூத்திரம் கழிப்பதும் உள்ள ஒரு வியாதியஸ்தருக்கு ஹிப்பார் ஸல்பர் மிகவும் பயன் படும். இது மூத்திரப்பையைப் பற்றிய பாரிச வாதம். இருமல் தளர்ச்சியாய் இருக்கும் ஆனால் கோழை யை வெளியேற்ற முடியாது அல்லது வெளியேற்றுவது மிகக் கஷ்டமாய் இருக்கும். இளகிய மலத்தையும் வெளியேற்றச் சிரமப்படுதல். விழுங்கும் போது தடை அல்லது மிகவும் சிரமப்பட்டாலொழிய விழுங்க முடி யாமலும் போகலாம். சுக்கில நீர் எந்த நேரத்திலும். விசேஷமாகச் சிரமப்பட்டு மலம் கழித்தவுடன், ஒழுகும்.

**வியர்வை:**—வியாதியில் குறைவு எதுவும் ஏற்படா மல் இரவு, பகல் எந்நேரமும் வியர்வை உண்டாகும் (மெர்கூரியஸ்). இக்குறியைப் பிரதானமாகக் கொண்ட வாதரோக சுரத்தில் மெர்கூரியஸ் கொடுத்துப் பலன் ஏற்படாவிட்டால் அதற்குப் பிறகு ஹிப்பார் ஸல்பர் தேவைப் படுமென்று நாஷ் சொல்கிறார். அற்பமான மன உழைப்பினாலும் உடல் வேலை செய்தாலும் ஒவ் வொரு தடவையும் வியர்வை தோன்றும் (ஸோரினம், ஸேபியா). இரவில் வியர்வை.

**விருப்பும் வெறுப்பும்:**—காடிகள், ஒயின், புளிப்பும்

கடுமையான வாசனையும் உள்ள பொருள்கள், அதிக உப்பும் உறைப்பும் புளிப்பும் உள்ள பொருள்கள் ஆகியவைகளில் விருப்பம். கொழுப்புப் பொருள்களில் வெறுப்பு.

**முறை வைத்துத் தோன்றுதல் :**—ஹிப்பார் ஸல்பர் வியாதிகளில் அவை முறை வைத்துத் தோன்றுவது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, பாரிசவாதம் ஒவ்வொரு நாளும் அல்லது நான்குவாரங்களுக்கு ஒரு முறை, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை, ஒவ்வொரு குளிர்காலம், கோடைக்காலம் அல்லது மழைக்காலத்திலும் தவறுமல் தோன்றும், நாட்பட்ட, அடிக்கடி தோன்றும் குணமுள்ள, சருமத்தில் அறிப்பும் சொறிந்தால் வில்லைகளாகத் தடிப்பது முள்ள சரும வியாதி.

**வியாதி உள்ளே அமுக்கப்படுதல் :**—அழுகுணிச் சிறங்கையும் மற்ற சரும வியாதிகளையும் உள்ளே அமுக்கியதால் காசம், வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு போன்ற வியாதிகள் உண்டாகும்.

**சிறு கொப்பளங்களால் சூழப்படும் தன்மை :**—சீழ்ப்புண்கள், கடி, ஆகியவைகளைச் சுற்றிச் சிறு சிறு கொப்பளங்கள் உண்டாகும். இக் கொப்பளங்களுடன் சேர்ந்து புண்களும் கடியும் பரவும், இக்குறி தடித்த எழுத்தில் எழுதப்படவேண்டும். நான் சிகிச்சைசெய்து வந்த படர்தாமரை எனப்பெயர் உள்ள கடி வியாதி இருந்த ஒருவருக்கு இவ்விரு குறிகளுடன் கடுமையான அறிப்பும் தென்பட்டது. ஹிப்பார் ஸல்பர் 200 வீரியம் ஒரு வேளை கொடுக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்குள்ளேயே மந்திரம் போட்டதுபோல் வியாதி மறைந்து



விட்டது. கண்களைப்பற்றிய வியாதிகளில் அவைகளைச் சுற்றிலும் சிறுசிறு கொப்பளங்கள். கல்போல் கடினமான புள்ளிகளால் சூழப்பட்ட இராஜ பிளவை என்பதையும் இவைகளுடன் சேர்க்கலாம்.

**இழுப்பு ஓசை : பூனை சீறுவது போன்ற ஓசை : களகள** வென்ற ஓசை: காச நோயில், கவலை, இழுப்புடன் களகளத்த ஓசையுடன் சுவாசித்தல். வறண்ட குளிர் காற்றில் இவை கூடுதலாகி மழைக் காலங்களில் குறையும். மார்பில் இழுப்பும் பூனை சீறுவது போன்ற ஓசையும் இருந்தால் ஹிப்பார் ஸல்பர் தேவைப்படும். ஆண்டிம் டார்ட் உபயோகமாகும் கேசுகளில் தளர்ச்சியான களகள வென்ற ஓசை காணப்படும், ஆனால் ஆண்டிம் டார்டினுல் குணம் தோன்ரு விட்டால் ஹிப்பார் ஸல்பரை நாடவேண்டும். மார்பில் பலவீனமும் களகளவென்ற ஓசை அதிகமாய் இருப்பதும். களகளத்த ஓசையுடன் மூச்சு விடுதல் (தூங்கும்போது) குழந்தைகளின் தொண்டை வேக்காட்டு வியாதியில் ஊதுவதுபோல், நாய்குலைப்பது போல்கரகரப்புள்ள ஓசையுடன் இருமல். இருமல் தளர்ந்திருக்கும். களகளவென்று இளகிய கோழை வெளியே வந்து விடும்போல் தோன்றினாலும் குழந்தையினுல் அதை வெளியே கொண்டுவர முடியாது. அடுத்தடுத்து இருமல் இடைவிடாமல் தோன்றுவதால் மூச்சு விடத் திணறல் உண்டாகும் ; காலையில் அதிகமாய் இருக்கும்.

## மற்ற குறிகள்.

குமட்டலுடன் மூச்சை அடைக்கும் கடுமையான இருமல். கைகளிலும் பாதங்களிலும் ஆழமான வெடிப்புகளுடன்சருமம் உறிய ஆரம்பித்தல். நுனிநாக்கில் வலியும்

புண் உள்ள உணர்ச்சியும். கல்லீரலில் புண்ணுள்ள உணர்ச்சியும் குத்தும் வலிகளும்; மலம் களிமண்ணைப் போல் அல்லது வெண்மையாய் இருக்கும். கல்லீரலில் சீழ்க்கட்டிகள். பிறப்பு உறுப்புகளிலும் விரைப்பையும் தொடையும் சேரும் இடத்திலும் ஈரக்கசிவுடன் புண்ணாய் இருத்தல். நாட்பட்ட மேகவெட்டையைச் சீராக்குகிறது. பிடிவாத குணமுள்ள, குணமாகாத மேக வெட்டை. இளமைப் பருவத்தில் தோன்றும் முகப்பரு. அறிப்பு, விசேஷமாக எலும்பு மூட்டுகளின் வளைவிலே. மஞ்சட்காமாலை. முறைச்சுரத்தில் குளிர் உள்ள நிலைமையில் சருமத்தில் கடுமையான அறிப்பும் கொட்டும் வலிகளும் சருமத் தடிப்பும் ஏற்பட்டு சூடு ஆரம்பித்தவுடன் அவை மறைந்துபோகும்.

உறவு:—அகோனைட், ஆர்னிகா, பெல்லடோன்னா, லாச்சஸிஸ், மெர்கூறியஸ், நைட்ரிக் ஆஸிட், ஸைலீஷியா ஸ்பாஞ்சியா, ஸிங்க்கம் ஆகியவைகளுடன் இதை உபயோகிக்கலாம். அடிதடிக் காயங்களில் காலண்டுலாவுக்கு முன்னும் பிறகும் வேலை செய்யக் கூடியது.

ஒப்பிடுதல்:—சூட்டினால் உபாதிகள் சௌகரியம் (ஆர்ஸனிகம், கல். கார்ப், நக்ஸ் வாமிகா, ஸோரினம் ஸைலீஷியா), தண்ணீரில் குளிக்க வெறுப்பு (ஆண்டிம் க்ரூடம், க்ளமேடிஸ், ரஸ் டாக்ஸ், ஸேபியா, ஸல்பர்) மிகச் சிறிய காயங்கள் கூட சீழ்ப்பிடித்தல் (மெர்கூறியஸ், ஸைலீஷியா, லைகபோடியம்). ஹீப்பார் ஸல்பர் வியாதியஸ்தர் இருமும் போது கத்துவார். ஆர்னிகா வியாதியஸ்தர் இருமும்போதும் இருமிய பிறகும் கத்துவார். பெல்லடோன்னா வியாதியஸ்தர் இருமியபிறகு கத்துவார். கூர்மையான துருப்பு (ஒட்டிக் கொண்டிருத்தல், குத்துதல்) அல்லது மீன் எலும்பு உள்ள உணர்ச்சி (அர்ஜண்டம் நைட்ரிகம், நைட்ரிக் ஆஸிட், ஸைலீஷியா, ப்ளூவாரிக் ஆஸிட் மெர்கூறியஸ், அலுமினா). வலியினால் மயக்கம் (சாமோமில்லா, வெராட்ரம் ஆல்பம்).

---

## ஹைட்ராஸ்டிஸ்
## (HYDRASTIS)

முன்னுரை:—இவ் வௌஷதம் தயாரிக்க உதவும் செடியின் வேர் கட்டையாகவும் முண்டுகளுடனும் மஞ்சளாகவும் இருக்கிறது. செலிடோனியத்தையும் வேறு சில ஔஷதங்களையும் பற்றி எழுதிய போது "குத்து மதிப்பாக" வியாதிகளுக்கு ஔஷதங்களை நிர்ணயிக்கும் விதத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறோம். இவ் வௌஷதத்தின் வியாதிக் குறிகளிலும் "குத்து மதிப்பு" இடம் பெற்றிருக்கிறது. கட்டையாய், மஞ்சள் நிறமாய், முண்டுகளுடன் இருத்தல் ஆகியவை இவ் வௌஷதத்தின் முக்கிய குறிகளாகின்றன.

ஹைட்ராஸ்டிஸ், சளி உள்ள கோளாறுகளிலேயே பெரும்பாலும் உபயோகமாகிறது. மெதுவாகவும் ஆனால் ஆழ்ந்தும் வேலை செய்கிறது.

### பொதுவான குறிகள்

தகுதி:—உடல் பலவீனத்துடன் உள்ள கிழவர்களுக்கு ஏற்றது. உண்ணும் உணவின் சத்து உடம்பில் ஒட்டாமை, கல்லீரல் ஒழுங்காக வேலை செய்யாமை ஆகிய கோளாறுகளுடன் வியாதியில் அடிபட்டு உடல் இளைத்தவர்கள். சுரப்பிகளில் வீக்கம், புற்றுநோய் இவைகளால் உருக் குலைந்தவர்கள்.

மனம்:—மறதி; தான் படித்துக் கொண்டிருக்கும்
விஷயங்களை மறந்து விடுதல். மனச்சோர்வு; தான்
சாவது நிச்சயம் என்று தீர்மானிப்பதுடன் அதை
விருப்பமுடன் வரவேற்கவும் செய்வார்.

உடல்:—கெட்டியான, மஞ்சள் நிறமுள்ள கழிவுகள்.
நாக்கு பற்களின் சுவடுகள் படிந்து காணப்படும். நாக்கில்
நெருப்புச்சுட்டு விட்ட உணர்ச்சி. முகம் வியாதித்
தோற்றத்துடன் சுருங்கி, வாடி, மஞ்சள் நிறமாகும்.
ஜீரண சக்திக் குறைவு. நாக்கில் கசப்பு. பொதுவாக
ஏராளமான வியர்வை தோன்றுவதும் சிறுகாயங்களும்
தவறாமல் சீழ்க் கொள்வதுமான உடல்வாகு. (ஹீப்பார்
ஸல்பர்) மூத்திரம் அளவு குறையும் அல்லது முழுவதும்
அடக்கப்படும். சளிச்சவ்வு உள்ள உடல் துவாரங்
களைச் சுற்றிச் சருமத்தில் வெடிப்புகள், மயக்கம், ஒன்
றும் இல்லாமல் காலியாய் இருக்கும் உணர்ச்சி. தசை
களில் அளவு கடந்த பலவீனம். அரையிடுக்குகளில்
உடுத்தும் ஆடைபட்டால் வேதனை உணர்ச்சியும் பிறப்பு
உறுப்புகளைச் சுற்றி நாற்றம் வீசும் வியர்வை உண்டா
வதும். பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல். மஞ்சட்
காமாலை. அதிக முதுகு வலி. காய்கறிகளும் ரொட்டியும்
உடலுக்கு ஒத்துக் கொள்ளாமல் அஜீரணத்தையும்
புளிப்பையும் தோன்றச் செய்யும். பசி இல்லாமை;
உணவில் வெறுப்பு. வயிற்றில் ஒன்றுமே இல்லாத
உணர்ச்சி கூடுதலாகவோ குறைவாகவோ இடை விடா
மல் காணப்படும். இடது பக்கமாய்ப் படுக்கும்போது
மூச்சுத் திணறும். உடல் மெலிந்து சோர்வு உண்டாகும்.
அல்ப காரணங்களாலும் சருமம் உறியும்.

உபாதி கூடுதல்:—(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே)



சருமத்தைப் பற்றிய கோளாறுகள் சூட்டினாலும்
தண்ணீரில் குளித்தாலும் கூடுதலாகும். நீர்க்கோர்வைக்
குறிகள் குளிர்ந்த காற்றை உள்ளே இழுத்தால் அதிக
மாகும்; வறண்ட காற்றினாலும் அதிகரிக்கும். உணவு
உட்கொண்ட பிறகு வயிறு நிறைந்து விட்ட உணர்ச்சி
அதிக நேரம் விடாமல் காணப்படும். சருமத்தில் அரிப்
பும் சொறிந்தால் தடிப்பதும் உள்ள சருமவியாதி, இர
வில் அதிகமாய் இருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

கெட்டியாய், மஞ்சளாய்க் கயிறுபோல் இழுபடும் கழிவு
கள்:—அனேகமாக எல்லா விதச் சளிச் சவ்வுகளிலும்
ஹைட்ராஸ்டிஸ் நீர்க் கோர்வையை உண்டு பண்ணும்.
மூக்கு, தொண்டை, மார்பு, வயிறு, குடல்கள், மூத்திரத்
துவாரம், கருப்பை, யோனி ஆகிய இடங்களில் நீர்க்
கோர்வை உண்டாகலாம். இச்சமயங்களில் வெளியாகும்
கழிவு மஞ்சள் நிறமாய் (சில சமயங்களில் வெள்ளை
யாகவும் இருக்கலாம்) கெட்டியாய்க் கயிறுபோல இழு
படும் குணம் உள்ளதாய் இருக்கும். இவ்வித நீர்க்
கோர்வைகள் புண்ணுடனும் இருக்கலாம். ஹைட்ராஸ்
டிஸில் உள்ள கெட்டியான, ஒட்டும் குணமும் மஞ்சள்
நிறமும் உள்ள சளி, காலி பைக்ரமிகத்தில் காணப்படுவ
தைப்போல கயிறு மாதிரி இழுக்கப் படலாம் அல்லது
கயிறுபோல் தொங்கும். சளிச்சவ்வுகளில் அல்லது சரு
மத்தில் உள்ள புண்களிலிருந்து வரும் சீழ் மஞ்சள் நிற
மாய்க் கயிறுபோல் நீளும் தன்மையுள்ளதாய்க் காணப்
படும். மூக்குத் துவாரங்களின் அடிப்புறத்தில்
மஞ்சளான பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள சளியைத்
தொண்டைக்கு இழுத்துத் துப்புதல். உடல் தளர்ந்து

போன கிழவர்களுக்குக் கெட்டியான மஞ்சள் நிறமும் பிசுக்கென்று ஒட்டும் குணமும் உள்ள சளியுடன் மார்ச்சளி ஒட்டும் தன்மையும், கெட்டியாகவும். கயிறுபோல் இழுபடும் குணமும் மஞ்சள் நிறமும் உள்ள வெள்ளை ஒழுக்கு. (சில சமயங்களில் வெண்மையாகவும் இருக்கலாம்). சில சமயங்களில் நாற்றம் இருக்கும் மேக வெட்டையில் கெட்டியான, மஞ்சள் நிறக் கழிவு தோன்றும் இரண்டாம் நிலைமை. "கண்களும் முகமும் மஞ்சளாய் இருத்தல்". மெல்லிய, சில சமயங்களில் தண்ணீர்போல். மஞ்சள் நிறமுள்ள மலம் வெளிப்படும் நாட்பட்ட வயிற்றுப்போக்கு.

**உருக்குலைவு : விஷத்தன்மை :**—ஹைட்ராஸ்டிஸில் புற்று வியாதி சம்பந்தமான கெட்ட சதை வளர்ச்சிகளும், புண்களும் சரும வெடிப்புகளும் உடல் அணுக்களின் உருக்குலைவுக்குச் சாட்சிகளாய் இருக்கின்றன. இவ்வௌஷதத்தில் விஷத்தன்மை பல சமயங்களிலும் எரிச்சலுடன் சேர்ந்திருக்கும்.

புற்று நோய் தோன்றுவதற்கு முன் உள்ள நிலைமையில் புற்றுச்சதை எதுவும் காணப் படாதபோது ஹைட்ராஸ்டிஸ் அனேகமாகத் தேவைப்படுகிறது. இந்நிலைமையில் வியாதியஸ்தரின் முகம் சோர்வுற்று வியாதியில் அடிபட்டதுபோல் தோற்றம் தரும். முகம் வெளுத்து அல்லது மஞ்சள் கலந்து வெள்ளை நிறமாகும்; நாக்கு பெரியதாகி, மஞ்சள் நிறமாகவும் பற்களின் சுவடுகள் படிந்தும் இருக்கும். பசி என்பதே இல்லாமலும் காய் கறிகளையும் ரொட்டியையும் ஜீரணிக்கச் சக்தி அழிந்தும் போகும். புளிப்பான ஏப்பங்கள் சில சமயங்



103891

களில் அழுகிய நாற்றமாகவும் இருக்கும். வயிறு காலியாய் "ஒன்றுமே இல்லாத" உணர்ச்சி உண்டாகும்.

புற்றுச்சதை கடினமாய், அடித்தசையுடன் ஒட்டிக்கொண்டு, பலவித நிறங்களுடனும் சுருக்கங்களுடனும் காணப்படும். நாக்கு, வயிறு, கல்லீரல் ஆகியவைகளில் புற்று. ஸ்தனங்களில் உண்டாகும் புற்றுகளில் அவ்விடங்களிலே கத்தியினால் பாய்ச்சுவது போன்ற குத்து வலிகள்.

புண்கள் அனேகமாய் விஷத்தன்மை வாய்ந்தவையாய் இருக்கின்றன. எரிச்சலும் உடலை அழிக்கும் குணமும் இருக்கின்றன. எரிச்சலுடன் வயிற்றில் புண். நாற்றமுள்ள புண்கள். கருப்பையின் வாய், கழுத்து யோனி ஆகியவைகளில் புண்கள்.

காய்ந்து பொருக்குகளும் எரிச்சலும் உள்ள காப்பான் படை.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனக் காம்புகள் தோல் உறிந்து, வெடித்துப் புண்களுடன் இருத்தல்.

**தளர்ச்சி :**—சளிச்சவ்வுகள் தளர்ந்து கெட்டியான மஞ்சள் நிறமுள்ள, பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள கழிவு வெளிப்படும். ஆசனவாய் தளர்ந்து நழுவி வெளியே பிதுங்கும். விரைப்பையும் விரைகளும் தளர்ந்து இருத்தல். உள் நாக்கு புண்ணாகித் தளர்ந்து விடும்.

**நிறைந்த உணர்ச்சி : ஒன்றுமே இல்லாத உணர்ச்சி :**—வயிற்றில் கூடுதலாகவோ, குறைவாகவோ ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி இடைவிடாமல் காணப்படும், காலி

யான உணர்ச்சி இருந்தபோதிலும் எதையும் உட்கொள்ள விருப்பம் இருக்காது. உணவில் வெறுப்பும் இருக்கும். ஏதாவது சாப்பிட்டால் அது காலி உணர்ச்சியை நீக்காமல் வயிற்றில் கனமான, நிறைந்த உணர்ச்சியை உண்டாக்கும். இத்தகைய, விநோதமான, காலியான "ஒன்றுமே இல்லாத உணர்ச்சி" வேறு எந்த ஒளஷதத்திலும் கிடையாது.

**முதுகு வலி:**— ஹைட்ராஸ்டிஸின் பல குறிகள் முதுகு வலியுடன் சேர்ந்து காணப்படுகின்றன. இம்முதுகு வலியும் விசித்திரமாய் இருக்கிறது. முதுகில் அதிகப்பல வீனமும் பிடிப்பும் ஏற்பட்டுச் சிறிது தூரம் நடந்த பிறகே முதுகை நேராய் நிமிர்த்தி வைத்துக் கொள்ள முடியும். உட்கார்ந்து விட்டு எழுந்திருக்கும்போது கைகளை உபயோகித்தால் தான் முடியும்.

**பிடிவாதமான மலச்சிக்கல்:**— நெற்றியில் மந்தமான தலைவலியுடன் பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல். பல நாட்களுக்கு மலம் கழிக்கவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படாது. மலப்பையின் பாரிசவாதம். தளர்ச்சியான மலம் அடிக்கடி வெளியாவதும் இருக்கலாம். மலம் மிருதுவாகவும் வெளுத்தும் இருக்கும்.

**இரத்தப் பெருக்கு ஏற்படும் உடல்வாகு:**— நார்போன்ற தசைக் கட்டிகளுடன் கருப்பையிலிருந்து மாதவிடாயுள்ளபோதும் இடைக் காலங்களிலும் அதிக இரத்தப் பெருக்கு ஏற்படுதல். புண்களில் கெட்ட சதை வளர்ந்து மெதுவாகத் தொட்டாலும் அமிதமாக இரத்தம் பெருக்கெடுத்து ஓடும். புணர்ச்சி செய்யும்போது யோனியில் புண்ணுள்ள உணர்ச்சி; பிறகு இரத்தம் கொட்டுதல்.



மூக்குத் துவாரங்களின் இடையில் இருக்கும் குருத்தெலும்பில் புண்ணுள்ள உணர்ச்சியும் தொட்டால் இரத்தம் பெருக்கெடுப்பதும். இரத்தமும் சீழும் கலந்த சளி வெளிப்படும் நாட்பட்ட சளி.

**வியர்வை உண்டாகும் தன்மை:**—அளவு கடந்த வியர்வை உற்பத்தியாகும், விசேஷமாக அக்குள்களிலும் பிறப்பு உறுப்புகளிலும். பிறப்பு உறுப்புகளில் நாற்றம் வீசும் வியர்வை.

**முண்டுகள், கட்டிகள்:**—கல்லீரல் பருத்துக் கடினமாகி முண்டுகளுடன் இருக்கும். ஏராளமான அறிப்பைத் தரும் இரத்தம்போல் சிவந்த நிறமுள்ள முண்டுகளுடன் கூடிய சரும வியாதிகள். "சுரப்பிகளும் புண்களின் விளிம்புகளும் கல் போல்க் கடினமாகுதல்." இருதயத்தை ஒட்டிய வயிற்றுப் பாகத்தில் ஆபத்தான வியாதியோ எனச் சந்தேகத்தை உண்டுபண்ணும் கட்டிகள். கடினமான, கட்டிகளாய் உள்ள மலம். இடது ஸ்தனத்தில் கடினமான. ஒழுங்கு இல்லாத சதைக் கட்டிகள், முலைக்காம்பு பின்பக்கம் இழுக்கப் பட்டு இருக்கும்.

**பெண்களின் பிறப்பு உறுப்புகள் விசேஷமாகத் தாக்கப்படுதல்:**— இவ்வுறுப்புகளுக்கும் ஹைட்ராஸ்டிசுக்கும் விசேஷ உறவு இருப்பதாகத் தோன்றுகிறது. கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு, வெள்ளை ஒழுக்கு, கருப்பையில் புற்று, ஸ்தனங்களில் புற்று, முலைக்காம்புகளில் புண் ஆகியவைகளைப் பற்றி மேலே எழுதி விட்டோம். யோனியின் வெளியே கடுமையான அறிப்பு; ஏராளமான வெள்ளை ஒழுக்குடன் இவ்வறிப்பு அனேக

மாகச் சேர்ந்திருக்கும். சில சமயங்களில் சிற்றின்ப ஆசை அதிகரிக்கும்.

## மற்ற குறிகள்

பெரியம்மைக்கு எல்லா நிலைமைகளிலும் உபயோகமுள்ளது. (உள்ளுக்கும் கொடுக்கலாம், உடம்பின் மேலேயும் தடவலாம்). சரும வியாதிகளில் அரிப்பும் ஊசி குத்தும் உணர்ச்சியும்; மயக்கம் வருவது போன்ற உணர்ச்சியும் அதிகச் சோர்வும். உடல்மெலிவு, மூத்திரக் குழாயிலிருந்து மெல்லிய சளிப் பொருள் வெளியாகுதல் படுக்கைப் புண்கள். மேகக் கிரந்தியினால் தொண்டைச் சுரப்பிகளில் வெக்காடு. சீரணக் கோளாறு, பித்த அதிகரிப்பு ஆகியவைகளால் தோன்றும் சுரங்களிலும் டைபாய்டு சுரத்திலும் சீரணக் கோளாறுடன் மஞ்சட் காமாலையும் பிறகு அதிக உடல் பலவீனமும்.

ஒப்பிடுதல் :—நாக்கில் மயிர் சிக்கிய உணர்ச்சியில் காலி பைக்ரமிகத்துடன், நாக்கில் சுட்ட உணர்ச்சியில் ஸாங்வினேரியாவுடன். ஸ்தனங்களின் புற்று வியாதியில் ஆர்ஸனிகம், பாய்டூலியா, கோனியம், க்ரீஸோட், பைடோலக்கா ஆகியவைகளுடன்.

---

## ஹயஸ்யாமஸ் நைகர்
## HYOSCYAMUS NIGER

முன்னுரை :—ஆபாசம் உள்ள பைத்தியக் குறிகளை ஹயஸ்யாமஸ் தோற்றுவிக்கிறது. அதன் மிக முக்கியமான குறிகளாவன : 1. வலிப்புகள். இழுப்புகள். 2. சந்தேக குண முள்ள பயம். 3. நினைவை இழந்த புத்தித் தடுமாற்றம் 4. ஆடைகளை அவிழ்த்து விடும் குணம்.



5. படுக்கை விரிப்புகளைக் குடைவதும் பூச்சிகளைப் பிடிப்பதுபோல் பாவனை செய்வதும். 6. உதடுகள், நாக்கு ஆகியவை காய்ந்து போகுதல். 7. மூத்திரப்பையின் பாரிச வாதம்.

## பொதுவான குறிகள்

தகுதி :—அதிக இரத்தம் உள்ளவர்களுக்கு ஏற்றது. பயந்த சுபாவம், முன்கோபம், எளிதிலே உணர்ச்சி வசப்படுதல், விசேஷமாகச் சங்காதோஷம் உள்ளவர்கள். லேசான மயிர் வளர்ச்சி உள்ளவர்கள்.

மனம் :—மிகவும் சந்தேகம். தனக்கு எதிராக ஏதோ சூழ்ச்சி நடப்பதாகச் சந்தேகித்தல். தனக்கு விஷம் கொடுத்து விடுவார்களென்று பயப்படுதல். விஷம்கொடுத்து விடுவார்களென்று பயந்து கொண்டு மருந்து சாப்பிட மறுப்பார். கொடுத்ததை வாங்கிக் கொள்ளப் பயப்படுவார். தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவார்களென்று பயப்படுதல். ஆபாசம், புத்தித் தடுமாற்றம் ஆகிய தலைப்புகளையும் பார்க்கவும். தன்னுடன் பிறர் பேசுவதைப் பொறுக்க முடியாது. தண்ணீரைக் கண்டால் பயம். (ஹைட்ரோபோபினம்). தப்பித்து ஓட முயற்சித்தல். எல்லாப் பொருள்களும் பெரியதாய் இருப்பதுபோல் பார்வைக்குத் தோன்றுதல்.

உடல் :—கண்களின் கருமணிகள் விரிந்திருத்தல் : கண்கள் பளபளவென்று ஒளியுடன் வெறித்துப் பார்த்தல். பற்களின்மேல் பழுப்பு நிறமுள்ள சளிப் பொருள் படிந்திருத்தல். முகம் சிவந்து பரபரப்பு காணப்படும். உப்பியும் கறுஞ்சிவப்பு நிறமாகவும் இருக்கலாம். நாக்குச் சுத்தமாய், காய்ந்து, உலர்ந்து காணப்படும். நெருப்

பின் தேய்ந்துபோன தோல்போல் உதடுகள் மாறும். தொண்டையில் இறுக்கும் உணர்ச்சி; அதனால் விழுங்க முடியாமல் போகும். விசேஷமாக, திரவ உருவில் உள்ளவைகளை உட்கொள்ளும் போது அவை மூக்கின் வழியே வெளியாகலாம். அடிவயிற்றில் புண் உள்ள வலியினால் அவ்விடத்தைத் தொடமுடியாது. கைகளிலும் கால்களிலும் இழுத்தல். அதிகப் பலவீனம். கால்கள் சில்லென்றாகி நடுக்கமும் மத மதப்பான உணர்ச்சியும் தோன்றும். வாயில் கெட்ட, அழுகிய நாற்றமும் சுவையும். தாகமாய் இருக்கும். ஆனால் ஒவ்வொரு சமயமும் கொஞ்சமாகவே தண்ணீர் குடித்தல். இரவில், சிற்றிருமல், கோழை இல்லாமலும் அதிகக் கஷ்டத்துடனும் இருக்கும். மூத்திரம் அடக்கப்படுதல். மலமும் மூத்திரமும் தாமாகவே வெளிப்படும். அடிவயிறு வெடித்துப் போய் விடுமென்று தோன்று மளவுக்கு உப்பி இருக்கும். ஓரைக் கண்பார்வை.

**உபாதி கூடுதல் :**—காதல் நிறைவேறாததால் உண்டாகும் கோளாறுகள். பொறாமையினால் தோன்றும் கோளாறுகள், மாதவிடாய் தோன்றும் காலங்களுக்குச் சற்று முன்னதாகவும் தோன்றும் போதும் அல்லது போக்கு வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் கோளாறுகள் கூடுதலாகும். இச் சமயத்தில் தோன்றும் கோளாறுகளின் விவரம்: உடல்நடுக்கம், வலிப்புகள், கடுமையான தலைவலி, ஏராளமாக வியர்வை, முதலியவை.

**உபாதி கூடுதல் :**—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—குறிகள் தொட்டால் அதிகமாகும்; அடிவயிற்றைத் தொட்டால் அவ்விடத்தில் புண் இருப்பதுபோல்



தோன்றும்; உபாதிகள் மாலையிலும் இரவிலும் உக்கிரமாகும்; இருமல் கீழே படுத்தவுடன் அதிகமாகும்.

**உபாதி குறைதல் :**—உட்கார்ந்து கொண்டால் இருமல் அனேகமாகக் கொஞ்சங்கூட இருப்பதில்லை (டிரோஸிரா).

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**விட்டு விட்டுவருதல்: வலிப்புகள்: இழுப்புகள் :**—பயந்து கொண்டதினால் அல்லது குடலில் புழுக்கள் தோன்றி ஏற்படும் வேதனையினால் குழந்தைகளுக்கு வலிப்புகள் (ஸீனா). சாப்பிட்ட பிறகு குழந்தை வாந்தி செய்து திடீரென்று கூச்சலிட்டு உடனே நினைவு தவறிப் போய்விடும். கருப்பமாய் இருக்கும் போதும் பிரசவ சமயத்திலும் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் அடிக்கடி விட்டு விட்டுத் தோன்றும் கோளாறுகளில் மிகவும் உபயோகமுள்ளது (பிள்ளைப் பெற்றபிறகு வலிப்புகள்). நினைவு இழந்து உடம்பிலுள்ள எல்லாத் தசைகளிலும், கண்கள், இமைகள், முகம் ஆகியவைகளிலும் அடிக்கடி இழுப்புகள். காக்கை வலிப்பில் வலிப்பு வந்து போன பிறகு ஆழ்ந்த தூக்கம். தசைகளில் வலிப்புடன் லேசான இழுப்புகள், ஒரு சமயம் கைகளிலும் மறு சமயம் கால்களிலுமாக வலிப்புகள் மாறி மாறித் தோன்றுதல்.

**ஆபாசம்: பரிகசிக்கத் தக்க செய்கை:**—ஆடைகளை அவிழ்த்தெறிந்து நிர்வாணமாய்க் காட்சி அளிக்கும் குறி ஹயஸ்யாமஸில் மிக விசேஷமாகக் காணப்படுகிறது காமம் மேலிட்ட பைத்தியம்' வெட்கத்தை விட்டு விடுதல், ஆடைகளை அணிந்து கொண்டிருக்க மாட்டார். துணிகளை உதைத்துத் தள்ளுவார். பிறப்பு உறுப்புகள் வெளி

யில் தெரியும்படி ஆடைகளை விலக்கிக் கொள்ளுவார். ஆபாச மான பாடல்களைப் பாடுவார். ஆடைகளை அவிழ்த்து விட்டு நிர்வாணமாய் இருக்க விரும்புவார். தனக்குத் தானே ஆபாசமான விஷயங்களைப் பற்றி முணு முணுத் தல். அசட்டுத் தனமான, பிறர் பரிகசிக்கக் கூடிய காரியம் எதையாவது செய்வார். ஹயஸ்யாமஸ் தாய்த் திரவத்தை உட்கொண்டு அதனால் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை டாக்டர் W. S. மில்ஸ் (Mills) சொன்னதை அப்படியே குறித்து வைத்திருக்கிறார் டாக்டர் க்ளார்க். அந்தக் குறிப்பின் கடைசி வாக்கியம் பின் வருமாறு :— "நர்ஸ்களுக்கும் என் குடும்பத்தினருக்கும் எதிரே மதிப் புக் குறைவாய் நடந்து கொள்ளக் கூடாது என்று ஓர் அறையினுள்ளே போய்க் கதவை மூடிப் பூட்டிக் கொண்டு சில நிமிஷங்கள் இருந்தேன். முகக் கண்ணாடி யில் என் முகத்தைக் காட்டி எனக்கு நானே நங்கு வழித் துக் கொண்டேன்". பரிகசிக்கத் தக்கதாகவும் கோமாளி போலவும் உள்ள அங்க சேஷ்டைகளைச் செய்யும் பைத் தியம்.

புத்தித் தடுமாற்றம் :—புத்தித் தடுமாற்றத்தில் மெது வாக முணு முணுத்தல். பெல்லடொன்னாவின் புத்தித் தடுமாற்றம் கடுமையாகவும் அதிக நேரம் அப்படியே நீடித்தும் இருக்கும். ஹயஸ்யாமஸின் புத்தித் தடுமாற் றமோ மெதுவான முணு முணுப்புடன் ஏதோ சில சம யங்களில் மட்டும் கடுமையாய் இருக்கும், உடல் பல வீனத்தினால் கடுமை அதிக நேரம் நீடித்திருக்க முடி யாது. ஹயஸ்யாமஸ் வியாதியஸ்தரின் முகம் வெளுத் தும் பலவீனமாகவும் இருக்கும். பெல்லடொன்னாவில் முகம் சிவந்து கழுத்துப் பக்கமுள்ள சுத்த இரத்தக் குழாய் களில் புடைப்பும் துடிப்பும் காணப்படும்.



டைபாய்டு சுரம். டைபாய்டு சேர்ந்த சுவாச கோச வேக்காடு, இவ்வியாதிகளின் ஆரம்ப நிலைமைகளில் வியா தியஸ்தர் கேட்ட கேள்விகளுக்குச் சரியான விடைகள் அளிப்பார். ஆனால் மறு கணமே மயக்கமும் புத்தித் தடுமாற்றமும் தோன்றும். இந்தப் புத்தித் தடுமாற்றம் மேன்மேலும் அதிகமாகி முடிவில் மிகக் கடுமையாகி வியாதியஸ்தரை எழுப்பவே முடியாமல் போய்விடும்.

பாரிசவாத நிலைமைகள் :—பிள்ளைப் பெற்ற பிறகு மூத்திரம் வெளியாகாமல் உள்ளே தேங்கிவிடும் (ஓபியம், காஸ்டிகம், ஆர்ஸனிகம் ஆல்பம்). பிள்ளைப் பெற்று அறை யில் இருக்கும் காலங்களில் மூத்திரம் கழிக்க உணர்ச்சி ஏற்படுவதில்லை (ஆர்னிகா, ஓபியம்). அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல். ஆனால் ஒவ்வொரு தடவையும் சிறிதளவே வெளிப்படும். மூத்திரப் பையைப் பாரிச வாதம் தாக்கி விட்டது போல் மூத்திரம் தானாகவே வெளிப்படுதல். மலமும் தானாகவே கழிதல். ஆண் தன்மைக் குறைவு. தெளிவில்லாமல் பேசுதல். பேசவே முடியாமலும் போகலாம். பேசும் போதும் நாக்குக் கடிபடுதல்.

பொய்த் தோற்றங்களால் விநோதமான காரியங்களைச் செய்தல் :—டைபாய்டு சுரத்தில் "பொய்த் தோற்றங்களில் ஈடுபட்டு விடுதல்". எட்டி யிருக்கும் பொருள்கள் அரு கிலே இருப்பது போன்ற பிரமையினால் அவைகளைப் பிடித்துக் கொள்ள முயற்சித்தல்; பூச்சிகளைப் பிடித்தல் (பெல்லடொன்னா, பிரயோனியா, பாஸ்பாரிக் ஆஸிட்). படுக் கைத் துணிகளைக் குடைதல் (பெல்லடொன்னா, ஸ்ட்ரமோ னியம்.) தலையணையிலிருந்து தலையைத் தூக்கிச் சுற்றி லும் உற்றுப் பார்ப்பார். கைகள் மிகவும் பெரியதாகி

விட்ட தோற்றத்தினால் அடிக்கடி தன் கைகளைப் பார்த்துக் கொள்வார். தூங்கிக் கொண்டிருக்கும் போதும் படுக்கைத் துணிகளைக் குடைந்து கொண்டிருத்தல். தூங்கும்போது சிரித்த முகம். பிறப்பு உறுப்புகளைக் குடைதல் என்பதையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம் (ஆனால் இது பொய்த் தோற்றத்தின் விளைவு அல்ல என்பதைக் கவனிக்க வேண்டும்).

**உடல் சோர்வு**:—சூடு ஏறி இறங்கும் குணமுள்ள சுரம், டைபாய்டு சுரம் ஆகியவைகளில் உடல் பலவீனம் படிப்படியாக அதிகமாகும். உடல் வலிமை மிகவும் குறைந்து முடிவில் உடற் சோர்வு மிகவும் அதிகமாகி வியாதியஸ்தர் படுக்கையின் கீழ்ப்பக்கம் நழுவுவார். கடைசியில் கீழ்த் தாடை தொங்கும்.

## மற்ற குறிகள்

இருமல், வறட்சியுடன், விட்டு விட்டும் கீழே படுத்துக் கொண்ட உடனும் தோன்றும். உட்கார்ந்து கொண்டால் இருமல் அனேகமாக இருப்பதில்லை; இரவிலும், சாப்பிட்டவுடனும், தண்ணீர் குடித்த வுடனும், பேசினாலும், பாடினாலும் இருமல் கூடுதலாகும். உள் நாக்கு நீண்டாலும் இருமல் உண்டாகும். அடி வயிற்றில் புண்ணுள்ள உணர்ச்சி அதிகமாய்க் காணப்படும், தொடவே முடியாது. "வியாதியஸ்தரைப் பிடிக்க முடியாது, மிகவும் கஷ்டப்பட்டுத்தான் உடலைத் திருப்ப முடியும். மிக மெதுவாக மிகுந்த கவனத்துடன் தான் திருப்பலாம்". கழுத்தின் ஒரு பக்கத்திலுள்ள தசைகள் சுருங்கி விடும். கள் குடிப்பவர்களுக்கு ஏற்படும் இரத்தம் துப்பும் வியாதி, (நக்ஸ் வாமிகா, ஓபியம்). பல நாட்களுக்குச் சேர்ந்தாற் போல் தூக்கம் வருவதில்லை.



**உறவு** :—பெல்லடொன்னா. நக்ஸ் வாமிகா, ஓபியம், ரஸ்டாக்ஸ் ஆகியவைகளுக்குப் பின் நன்றாக வேலை செய்கிறது. மூளை இரத்தக்குறாய் வெடிப்பு ஏற்பட்டுக் குணமான பிறகு காது செவிடாவதற்கு பெல்லடொன்னாவுக்குப் பின் சிறப்பாய் வேலைசெய்யும். பெல்லடொன்னா, பல்ஸடில்லா, ஸ்ட்ரமோனியம், பாஸ்பரஸ் ஆகியவை ஹயஸ்யாமசுக்குப் பிறகு நன்றாய் வேலை செய்யும்.

**ஒப்பிடுதல்** :—உடலின் எல்லாத் தசைகளிலும் வலிப்புகள் ஏற்படும் குறி நக்ஸ் வாமிகாவிலும் காணப்படுகிறது. ஆனால் நக்ஸ் வாமிகாவில் வலிப்புகள் தோன்றும் போது வியாதியஸ்தர் தன் நினைவுடன் இருப்பார். ஹயஸ்யாமஸில் வலிப்புகள் உண்டாகும் போது நினைவு தவறிப் போகும். ஸ்ட்ரமோனியம் வியாதியஸ்தர் வெளிச்சத்தையும் பிறருடன் சேர்ந்திருப்பதையும் விரும்புவார். ஹயஸ்யாமஸ் வியாதியஸ்தருக்கு அவ்விரண்டிலும் வெறுப்பு இருக்கும். ஸ்ட்ரமோனியம் வியாதியஸ்தர் ஆடைகள் எல்லாவற்றையும் களைந்து உடல் முழுவதையும் காண்பிக்க விரும்புவார். ஹயஸ்யாமஸில் தன் பிறப்பு உறுப்புகளை மட்டும் வெளியிலே தெரியும்படிச் செய்வார்.

**குறிப்புகள்** :—"காமம் மேலிட்ட குறி ஹயஸ்யாமஸினால் குணமாகாதபோது பாஸ்பரஸ் பல சமயங்களிலும் குணம் செய்யும்." "பயந்த சுபாவமும் சங்கா குணமும் உள்ள பெண்களுக்கு நல்ல அறிவைக் கொடுத்துக் குணம் செய்ய ஹயஸ்யாமஸ், வெராட்ரம் ஆகிய இவ்விரண்டும் ஏற்றவையாகும்.

---

# ஹைபரிகும்

## (HYPERICUM)

**முன்னுரை** —நரம்புகளில் அடிபட்டால், விசேஷமாக நரம்புகள் கிழிந்து போய்விட்டால் இது மிகவும் உபயோக முள்ளது. ஆயுத சிகிச்சைக்கு மிகச் சிறந்த ஔஷதமாக இது இருப்பதைக் கொண்டு ஹோமியோதி வைத்தியர்கள் பெருமை பேசிக்கொள்ளலாம். இவ்வௌஷதச் செடியின் இலைகள் கத்திபோல் இருப்பதுடன் கண்ணாடிபோல் ஊடுருவிப் பார்க்கக் கூடிய புள்ளிகளுடனும் இருக்கின்றன. இது குறிப்பிடத்தக்க விஷயமே.

### பொதுவான குறிகள்

**தகுதி** :—உடலில் புண்ணுள்ள உணர்ச்சியுடன் அதிக இரத்தம் உள்ளவர்கள் போல் தோற்றம் அளிப்போர்.

**மனம்** :—எழுதும் போது தவறுகள் செய்தல்; எழுத்துக்களை விட்டு விடுவார்; தான் சொல்ல வந்ததை மறந்து விடுவார். உயர ஆகாயத்தில் இருப்பது போல் உணர்ச்சி அல்லது உயரமான இடங்களிலிருந்து தான் கீழே விழுந்து விடுவோ மென்ற கவலை.

**உடல்** :—தலை மயிர் கொட்டுதல். ஒயின் எனப்படும் சாராய வகையிலும் ஊறுகாய்களிலும் அதிக் விருப்பம். இடைவிடாத தூக்கக் கலக்கம். கால் ஆடு தசைகளில் இழுப்பு. கைகளிலும் கால்களிலும் எறும்பு ஊரும் உணர்ச்சி.

**உபாதி கூடுதல்** :—வியாதியஸ்தருக்குக் குளிர் ஒத்துக்கொள்வதில்லை; குளிர் காற்றினால் கோளாறுகள் கூடுதலாகும். மழைக் காலங்களிலும் அப்படியே. மூடுபனி உள்ள குளிர் காலங்களில் தவறாமல் அதிகரிக்கும்.



**உபாதி கூடுதல்** :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—மூடுபனி உள்ள காலங்களில் காசம் கூடுதலாகும் (ஏராளமான வியர்வை ஏற்பட்டாலும். ஏராளமான கோழை வெளியே வந்தாலும் சௌகரியம் ஏற்படும்) எல்லாக்குறிகளும் குளிர்காற்றில் சிறிது நேரமே நின்றாலும் அதிகமாகும். உணர்ச்சி மிகுந்த நரம்புகளில் அடிபட்டதினால் வாய் திறக்க முடியாமல் போகுதல்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

**அடிதடிபட்ட நிலைமைகள்** :—உணர்ச்சி மிக்க நரம்புகள் ஏராளமாக உள்ள இடங்களில் அதாவது விரல்கள் (விசேஷமாக விரல் நுனிகள்), நகங்களின் வேர்ப்பாகம், முதுகு எலும்பின் கீழ் நுனி, உள்ளங்கைகள், உள்ளங் கால்கள், ஆகியவைகளில் ஏற்படும் காயங்களுக்கு ஹைபரிகும் மிகவும் உபயோகமுள்ளது. மூளையிலும் முள்ளந்தண்டிலும் அடிபடுதல் (அதிர்ச்சி); துளை உள்ள காயங்கள், விசேஷமாக ஆணிகள். ஊசிகள் போன்ற பொருள்கள் குத்தி ஏற்படும் காயங்கள் (லேடம்).

துளையுள்ள, வெட்டப் பட்ட அல்லது தோல் கிழிந்து போன காயங்களில் புண்ணுள்ள உணர்ச்சியும் வலியும். உணர்ச்சி மிக்க நரம்புகள் ஏராளமாய் உள்ள இடங்களில் ஏற்படும் தோல் கிழிந்துள்ள காயங்கள்.

கிழிந்து போய் அல்லது நசுக்கப்பட்டு உடலிலிருந்து அனேகமாய்த் துண்டுகளாய்ப் போன பாகங்களையும் ஒட்ட வைக்கிறது (காலண்டுலா).

எலிக்கடியினால் ஏற்படும் காயங்கள்.

**வியாதியைத் தடுக்கும் குணம்** ;—ஹைபரிகும் தேவைப் படும் காயங்களில் தக்க சமயத்தில் அவ்வௌஷதத்தை உபயோகித்தால் (உடனேயே கொடுப்பது நலம்) வாய்

திறக்க முடியாமல் போகுதல், தனுர் வாயு முதலிய கோளாறுகள் ஏற்படாமல் பாதுகாக்கும். அப்படி இல்லாமல் கால்களின் மேல் பக்கம் பாயும் கடுமையான வலிகள் தோன்றி தனுர்வாயு கூடிய சீக்கிரம் ஏற்படும் என்று தோன்றும் நிலைமையிலே ஹைபரிகும்மைக் கொடுத்தாலும் அது சிறப்பாகவே வேலை செய்யும். துளை விழுந்த காயங்களுக்கு உடனே லேடம் கொடுக்கப்பட வேண்டும். அதனால் கெடுதலான குறிகள் ஏற்படாமல் தடுக்கப்படும். காயம் உள்ள இடத்தில் லேசான வலி உள்ள போதும் லேடம் உபயோகமாகும். ஆனால் கையிலோ காலிலோ மேல் பக்கமாகப் பாயும் கடுமையான வலிகள் (உதாரணமாக விரல்களில் அல்லது விரல் நுனிகளில் காயம் பட்ட போது மேற்கைகளில் வலி பாய்தல்) இருந்தால் ஹைபரிகும் தேவை. தோல் கிழிந்த அல்லது துளை விழுந்த காயங்களின் விளைவாய்க் கழுத்தில் பிடிப்பு, வாய் திறக்க முடியாமை, முடிவாகத் தனுர் வாயு ஆகிய குறிகள் தோன்றும் சமயத்திலும் ஹைபரிகும் வெற்றிகரமாய் வேலை செய்யும்.

**கொடூரமான வலி: கடுமை: தொட்டால் வலி:—** உணர்ச்சி மிக்க நரம்புகள் அதிகமாய் உள்ள இடங்களில் காயம் ஏற்பட்டால் கொடூரமான வலி தோன்றுகிறது. காயம் உள்ள இடங்களைத் தொட்டால் வலி மிகவும் அதிகமாகும் (வலி இல்லாமல் இருந்தால் லேடம்). முதுகெலும்பில் காயம் ஏற்பட்ட போது அவ்விடத்தைத் தொட்டால் மிகவும் வலி உண்டாகும். வெளிப் பார்வைக்கு அல்பமாகத் தோற்றம் அளித்தாலும் காயமுள்ள இடங்களில் அளவு கடந்த வலியும் புண்ணுள்ள உணர்ச்சியும் உண்டாகும். இக்கொடூரமான வலி இவ்



வௌஷதத்தின் விசேஷக் குறிகளில் ஒன்று. காயங்களில் காணப்படும் இவ்விதவலி காய்ப்புகளிலும் காணப்பட்டால் அப்பொழுதும் ஹைபரிகும் தேவைப்படும். பொறுக்க முடியாத இவ்வலிகள் நரம்புகள் தாக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. கீழே விழுந்து அடிபட்ட பிறகு கைகளையோ கழுத்தையோ மெதுவாய் அசைத்தாலும் உறக்கக் கதறும்படி நேரும். முதுகெலும்பின் கீழ்ப்பாகத்தில் அடிபட்ட பிறகு கடுமையான வலிகளும் நடக்கவோ குனியவோ முடியாமல் போவதும் ஏற்படலாம். பிரசவ சமயத்திலும் பிறகும் கடுமையான வலிகள். ஆயுதங்களை உபயோகித்துப் பிரசவம் ஆன பிறகு கடுமையான, பொறுக்க முடியாத வலிகள். பிறப்பு உறுப்புகளில் கடுமையான, கிழிப்பது போன்ற வலிகளுடன் மூத்திரம் கழிக்க ஆவல்.

**அடிபட்ட பிறகோ, பல காலம் கழித்த பிறகோ தோன்றும் கோளாறுகள்: மற்ற விளைவுகள்:—**காயங்களாலும் ஆப்பரேஷன் செய்து கொண்டதாலும் நரம்பு சம்பந்தப்பட்ட உடல் மனச்சோர்வு. அடிபட்டதன் விளைவாக "தான் உயரே ஆகாயத்தில் தூக்கப்பட்டிருப்பது போன்ற உணர்ச்சியும் உயரமான இடத்திலிருந்து தான் கீழே விழுந்து விடுவோம் என்ற கவலையும்" ஏற்படுவதையும் மற்ற கெடுதலான குறிகளையும் ஹைபரிகும் நீக்கும்.

அடிபட்டதாலும் அதிர்ச்சியினாலும் ஏற்படும் வலிப்புகள். கீழே விழுந்து பின் தலையில் அடிபட்டதினால் ஆகாயத்தில் தன்னைத் தூக்கும் உணர்ச்சியுடனும் உயரமான இடங்களிலிருந்து கீழே விழுந்து விடுவோமென்ற பயத்துடன் தலைவலி.

அடிதடிகளின் காரணமாக ஏற்படும் நரம்பு வேக்காடு, நரம்பு வலி.

காயங்கள் சிழ்ப்பிடித்துச் சதை அழுகி வெளியேறுவதும் தழும்பிட்டு வரும் காயங்களில் கடினமான, காய்ந்த, மஞ்சள் நிறமுள்ள பொறுக்குகள் தோன்றும் போதும் தேவைப்படும்.

அதிர்ச்சி, பீதி, வசிய மந்திரம் ஆகியவைகளால் தோன்றும் கெடுதல்களையும் ஹைபரிகும் நீக்கும்.

அடி வயிற்றைக் கிழித்துத் தைத்ததினால் ஏற்படும் வலிகளை ஹைபரிகும் நீக்க வல்லமை உள்ளது.

விநோதமான உணர்ச்சிகள் :—மேலே எழுதப்பட்டுள்ள விநோதமான குறிகளைக் கவனிக்கவும். ஆகாயத்தில் தன்னைத் தூக்கும் உணர்ச்சியுடன் விடியற்காலை 4 மணிக்குத் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளுதல். தொண்டையில் புழு நகரும் உணர்ச்சி. தலை திடீரென்று நீளமாகிவிட்ட உணர்ச்சியுடன் தலைச் சுற்றல். கைகளிலும் கால்களிலும் எறும்பு ஊரும் உணர்ச்சி.

## மற்ற குறிகள்

வலியுடனும் தொட்டால் வேதனையுடனும் இரத்தப் பெருக்கு எடுக்கும் மூலங்களுக்குப் பல சமயங்களிலும் உபயோகமுள்ளது. (உள்ளுக்குச் சாப்பிடவும் வெளியிலே தடவவும் உபயோகிக்கலாம்). மண்டை எலும்பு முறிந்து விடுதல். எலும்பு மூட்டுகளில் அடிபட்டது போல் வலி. மெதுவாக இழுக்கும் உணர்ச்சியுடனும் எரிச்சலுடனும் அல்லது மத மதப்புடனும் நரம்பு வேக்காடு. அடிபட்டதினால் தோன்றியிருக்கலாம். அடிபடாமலும் தோன்றக்கூடும்.



# இக்னேஷியா
## (IGNATIA)

முன்னுரை :—வியாதியஸ்தர் சங்கா குணமும் மிக எளிதிலே உணர்ச்சிவசப்படும் தன்மையும் அதிக உணர்ச்சியும் உள்ளவராக இருப்பார். எதிர் பார்ப்பதற்கு நேர் விரோதமாக இருக்கும் பல குறிகள் இவ்வெளஷதத்தில் நிறைந்து காணப்படுகின்றன.

மிக முக்கியமான குறிகளாவன : 1. எதிர்க் குணம். 2. விட்டுவிட்டுத் தோன்றும் குணம் 3. மிக வேகமாக வியாதிகள் மாறுதல். 4. நீண்ட பெருமூச்சு. 5. ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சியும் கட்டிகள் இருக்கும் உணர்ச்சியும். 6. அடக்கப்பட்ட துக்கம்.

## பொதுவான குறிகள்

தகுதி :—"அதிக உணர்ச்சியும், மிக எளிதிலே உணர்ச்சி வசப்படும் தன்மையும் பயந்த சுபாவமும் உடையவர்களுக்கு ஏற்றது; இக் குணங்களுள்ள பெண்கள்; கறுத்த உடலும் கறுத்த தலை மயிரும் பணிவான குணமும் உள்ளவர்கள்: சொல்வதைச் சீக்கிரம் புரிந்து கொண்டு மறுகணமே வேலை செய்ய முனையும் சுபாவம் உள்ளவர்கள்". சுருங்கக் கூறினால் "சுறு சுறுப்பும் அதிக உணர்ச்சியும் பயந்த குணமும் உள்ளவர்கள்". பல காலமாகத் துக்கப்பட்டுக் கொண்டிருப்போருக்கு ஏற்படும் உடல் சோர்வும் உள்ளச் சோர்வும்.

மனம் :—வருத்தம், யோசனையில் ஆழ்ந்திருத்தல், மௌனமாய் இருத்தல், வெளியில் தெரியாமல் அழுதல், அடக்கப்பட்ட அல்லது ஆழ்ந்த வருத்தத்தினால் நீண்ட பெருமூச்சு விடுவதும் தேம்பித் தேம்பி அழுவதும். "பிறருக்குத் தெரியாமல் வருத்தத்தைத் தனக்குள்ளேயே வைத்துக்

கொண்டு வளர்த்தல். "சமீப காலத்தில் நேர்ந்த துக்கத்தின் விளைவுகள். தன் வியாதி குணமாகாதென்று நினைத்துத் தைரியத்தை இழத்தல். அல்ப காரணங்களாலும் கோபம் வந்துவிடும். மிக எளிதிலே உணர்ச்சி வசப்படும் தன்மை. சிறிதளவு எதிர்த்துப் பேசினாலும் கோபம் மூளும்; தன் மேலேயே கோபப்படுதல்.

உடல்:—வலியைத் தாங்கமுடியாத உடல்வாகு (காபியா, சாமோமில்லா, ஹிப்பார் ஸல்பர்). தூக்கத்தைக் கெடுக்கும் வலிகள் இரவு நேரங்களில் தோன்றும். ஒரு கன்னம் மட்டும் சிவந்திருக்கும். பேசும்போது அல்லது வாயை மெல்லும்போது கன்னங்களின் உட்புறம், நாக்கு முதலியவைகளைக் கடித்துக் கொள்ளுதல். சாப்பிடும்போது வியர்வை தோன்றும். உமிழ் நீர் அதிகமாய் உற்பத்தியாகும். இரவில் மார்பை அமுக்கும் உணர்ச்சி. குழந்தை உறத்த கூச்சலுடனும் உடல் முழுவதும் நடுக்கத்துடனும் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளுதல். கைகால்கள் தாமாகவே அசைதல்.

உபாதி கூடுதல்:—வியாதியஸ்தருக்குச் சில்லிப்பு உணர்ச்சி இருக்கும். திறந்த இடங்களில் அவரால் இருக்க முடியாது. புகையிலைப் புகை தலைவலி போன்ற பல கோளாறுகளை அதிகரிக்கும்.

உபாதி குறைதல்:—சில குறிகள் (தலைவலி போன்றவை) ஏராளமாக மூத்திரம் கழிந்தவுடன் சௌகரியமாகும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

ஏராளமான எதிர்க் குணமுள்ள அல்லது விநோதமான குறிகள்:—ஏராளமான எதிர்க் குணம் உள்ள அல்லது



விநோதமான குறிகள் இக்னேஷியாவில் நிறைய இருக்கின்றன. கெண்ட் சொல்வது போல் "ஆச்சர்யம் நிறைந்தது" என்றும் கூறலாம். வேக்காடு உள்ள இடங்களில் வலி இருப்பதில்லை; சில சமயங்களில் பலமாய் அமுக்கினால் சௌகரியமாகவும் இருக்கும். தொண்டையில் புண் உள்ளபோது ஏற்படும்வலி கெட்டியான உணவுப் பொருள்களை விழுங்கும் போது சௌகரிய மடைந்து மற்ற சமயங்களில் மட்டும் காணப்படும். பல்வலி சாப்பிடும் போது இருப்பதைவிட மற்றச் சமயங்களில்தான் அதிகமாய் இருக்கும். வலி உள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தால் வியாதியஸ்தருக்குச் சௌகரியமாய்த் தோன்றும். வயிற்றில் ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி இருக்கும். சாப்பிட்டாலும் இந்த உணர்ச்சி நீங்காது. விழுங்காமல் இருக்கும்போது தொண்டையில் கட்டிகள் இருக்கும் உணர்ச்சி. தொண்டையில் உள்ள வேதனையினால் இருமலும் எவ்வளவுக் கெவ்வளவு இருமுகிறாரோ அவ்வளவுக் கவ்வளவு வேதனை மேலும் அதிகரித்து இருமலைத் தூண்டும் (அபிஸ்). காதுகளில் இரைச்சல், சங்கீதம் கேட்கும்போது மறைந்து இருக்கும். மூலங்களில் நடக்கும்போது சௌகரியமாய் இருக்கும்; மலம் இளகி இருக்கும் சமயங்களில் வலியும் இரத்தப் பெருக்கும் அதிகமாய்க் காணப்படும். வருத்தத்தினால் அடிக்கடி கடகட வென்று வாய்விட்டுச் சிரித்தல். கடுமையாக இருக்கவேண்டிய சமயங்களில் சிரிப்பார். சுரத்தில் குளிர் உள்ள நிலைமையில் தாகம், மற்ற எந்த நிலைமையிலும் இருக்காது; குளிர் உள்ளபோது முகம் சிவந்திருக்கும் (பொர்ரம்). தன்னையே கோபித்துக் கொள்வார். "தான் வருத்தமாய் இருப்பதைப் பற்றி ஆனந்தப் படுவார்." கன்னங்களின் உட்புறத்தை அடிக்கடி கடித்

துக் கொள்ளுதல், சீரணிக்க முடியாத பலவகைப் பொருள்களைத் தின்ன ஆவல் படுதல். நடக்கும்போது அசையாமல் நின்றுகொண்டால் ஒவ்வொரு தடவையும் தவறாமல் இருமல் தோன்றும். மலச்சிக்கலில் மலம் கழிக்க அளவு மீறிய தூண்டுதல் உண்டாகும்; தூண்டுதல் அடிவயிற்றின் மேல்பக்கத்தில் அதிகமாய்க் காணப்படும் (வெராட்ரம்). மலம் கழித்த பிறகு ஒன்று அல்லது இரண்டு மணிநேரத்துக்கு மலப்பையில் சுருங்குவது போலவும் புண் இருப்பது போலவும் வலி. சுரத்தில் உடலின் வெளிப்புறத்தில் உள்ள சில்லிப்பு சூடான ஒற்றிடங்களால் நீங்கும். தொண்டைச் சுரப்பிகள் வீங்கிக் கல்போல் கடினமாகி விழுங்காமல் இருக்கும்போது வலி (கொட்டுவது போல்; இருக்கும்). பசியும் குமட்டலும் சேர்ந்து காணப்படுதல், மலம் இளகி இருக்கும் போது மலப்பை நழுவி வெளியே பிதுங்குவது அதிகமாய் இருக்கும். ஆண் தன்மைக் குறைவுடன் சிற்றின்ப ஆசை.

**உணர்ச்சி வசப்படுதல் முதலானவைகளின் கெடுதலான விளைவுகள் :**—கெட்ட செய்திகள் கேட்டது, வருத்தத்தை உள்ளே அடக்குதல், பயம், கவலைகள், பொறாமை, அவமானம் முதலிய காரணங்களால் தோன்றும் கோளாறுகள். முதுகெலும்பில் எப்போதோ ஒரு சமயம் அடிபட்டதினால் உண்டாகும் கோளாறுகள்,

**தசைகளில் இழுப்புகள் : வலிப்புகள் ; துடித்தல் :**—வருத்தம், பயம் அல்லது ஏதோ ஒருவகை மன உணர்ச்சி மிக அதிகமாகியதால் தசைகளில் இழுப்புகளும் வலிப்புகளும் தோன்றுதல். கண்டித்துத் தண்டித்த பிறகு குழந்தைக்கு வலிப்பு ஏற்படுதல்: ஏதோ ஒரு உறுப்பில் மட்டும் அல்லது அங்கொன்றும் இங்கொன்றுமாக



தனித்தனித் தசைகளில் மட்டும் வலிப்பு உண்டாகும். "குழந்தைகளைக் கண்டித்ததினால் அல்லது கடிந்து கொண்டதினால் அவை படுத்துக் கொண்டவுடன் உடல் சிலை கோளாறாகும் அல்லது தூங்கும்போது வலிப்புகள் உண்டாகும்." "வியாதியஸ்தர் பேச ஆரம்பிக்கும் போதெல்லாம் முகத் தசைகள் கோணிக் கொள்ளும்." குழந்தை உடலை விறைத்துக் கொண்டு பின்பக்கமாய் வளையும்.

**திடீரென்று தோன்றும் குணம் : சுறுசுறுப்பு :**—ஏதோ ஒரு உறுப்பில் திடீரென்று கோளாறு தோன்றி அவ்வுறுப்பு செய்யவேண்டிய காரியத்தைச் செய்ய முடியாமல் போகும். சுறுசுறுப்பு—வியாதியஸ்தர் எல்லா விஷயங்களையும் விரைவில் புரிந்து கொள்வார். மறுகணமே காரியத்திலும் முனைந்து விடுவார்.

"மனக்குறிகளும் உடல் குறிகளும் திடீர் திடீரென்று மாறுதல் ; ஒன்றுக் கொன்று எதிர்க் குணமுள்ளவையாய் இருத்தல். ஒருசமயம் குதூகலமாகவும் மறுசமயம் அழுது கொண்டும் இருப்பதும் இவை திடீரென்று மாறி மாறித் தோன்றுவதும். சங்கா தோஷத்தில் மன உணர்ச்சிகளில் திடீர் திடீரென்று மாறுதல்கள் உண்டாகும். வலியின் தன்மை அடிக்கடி மாறும் ; வலியும் கடுமையாக இருக்கும்.

**பெரு மூச்சு விடுதல்: தேம்பித் தேம்பி அழுதல் : ஆழ்ந்து சுவாசித்தல் : கொட்டாவி விடுதல்: கதறுதல் :**—அடிக்கடி பெருமூச்சு விடுதல் ; நீண்ட பெருமூச்சுகள். தசைகளில் இழுப்பு, வலிப்பு ஆகியவை முடிவடையும் சமயத்தில் நீண்ட பெருமூச்சுகள்; ஆழ்ந்து சுவாசிப்பார் ; அதனால் சௌகரியமாகத் தோன்றும். "குழந்தை தேம்பித் தேம்பிப் பெரு

மூச்சுகள் விட்டுக் கொண்டு கதறியழும்." அழுகை நின்று அதிக நேரமான பிறகும் தேம்புவதும் பெரு மூச்சு விடுவதும் நீடித்திருக்கும். "உரத்த கூச்சல் போட்டுக் கொண்டு உடல் முழுவதும் நடுக்கத்துடன் குழந்தை தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளும்.

**ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி :—**வயிற்றில் ஒன்றுமே இல்லாமல் காலியாய் இருக்கும் உணர்ச்சி ஒரு விசேஷக் குறி. இதனால் வியாதியஸ்தர் இரவு முழுவதும் தூங்காமல் விழித்துக் கொண்டிருப்பார். வயிற்றின் உட்புறத்தே காலியாய் இருக்கும் உணர்ச்சி சாப்பிட்ட பிறகும் நீங்காமல் இருக்கும் (ஹைட்ராஸ்டிஸ், ஸேபியா).

**கட்டிகள் இருக்கும் உணர்ச்சி :—**தொண்டையில் ஒரு கட்டி இருக்கும் உணர்ச்சி, எவ்வளவு தடவை விழுங்கினாலும் இந்த உணர்ச்சி நீங்காது. சங்கா குண முள்ள பெண்களுக்கு வயிற்றிலிருந்து தொண்டைக்குப் பந்து போன்ற கட்டி ஏறிவரும் உணர்ச்சி ஏற்பட்டு அதனால் மூச்சு அடைத்தல்; அவள் அந்தப் பந்தை விழுங்கிக் கீழே இறக்க இறக்க அதுமேலே வந்து கொண்டே இருக்கும். தண்ணீர் குடித்தால் மேலும் அதிகமாகும்

**தளர்ச்சி :—**மூலங்களில் உள்ள தசைக் கட்டிகள் மலம் கழிக்கும் போதெல்லாம் தவறாமல் வெளியே பிதுங்கி அவைகளை உள்ளே தள்ளி விடும்படி நேரும். வயிறு தளர்ந்து விட்ட உணர்ச்சி. மலம் கழிக்கும் போது சாதாரணமாய் முக்கினாலும் சாமான்களைத் தூக்கினாலும் அல்லது குனிந்தாலும் மலப்பை கீழே நழுவி வெளியே பிதுங்கிவிடும். (நைட்ரிக் ஆஸிட், போடோபில்லம், ரூடா).



**முறை வைத்துத் தோன்றும் குணம் :—**கோளாறுகள் (தசைகளில் இழுப்புப் போன்றவை) ஒவ்வொரு முறையும் ஒரே நேரத்தில் தோன்றும். அடிவயிற்றில் சுருட்டிப் பிடிக்கும் வலிகள்.

**விருப்பும் வெறுப்பும் :—**குளிர்ச்சியான உணவுப் பொருள்களை விரும்புவதும் அவை சீரணமாகிவிடுவதும். புளிப்பான பொருள்களில் ஆவல். சீரணமாகாத பல வகைப் பொருள்களைச் சாப்பிட அடக்க முடியாத ஆவல். சூடுள்ள உணவு, மாமிசம், சாராயம் கலந்த பானங்கள் ஆகியவைகளில் வெறுப்பு. புகையிலைப் புகையில் வெறுப்பு; அதைத் தாங்க முடியாது.

**சிறு சிறு இடங்களில் வியாதி காணப்படுதல் :—**தலை வலியில் வலி அனேகமாகத் தலையில் ஒரு சிறிய இடத்திலேயே காணப்படும். ஒரு ஆணியைச் செலுத்துவது போல் தோன்றும். சிறிய வட்டமான இடங்களில் வலி காணப்படும். சாப்பிடும் போது முகத்தில் ஏதோ ஒரு சிறிய இடத்தில் மட்டும் வியர்வை உண்டாகும்.

**வலிகள் ஒரு குறிப்பிட்ட திசைக்கே பரவுதல் :—**ஆசன வாயிலிருந்து கடுமையான குத்து வலிகள் ஆரம்பித்து மலப் பையின் உட்புறத்துக்குச் செல்லும் (மூலத்தில் உள்ளது போல்). ஒரு பக்கத்தில் ஆணியைச் செலுத்துவது போன்ற வலியுடன் தலை வலி, வலியுள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்துக் கொண்டால் சௌகரியமாகும். (காபியா, நக்ஸ் வாமிகா, தூஜா). மூலத்தில் உள்ளது போல் மேலே மலப் பையினுள் தாவும் வலிகள் (நைட்ரிக் ஆஸிட்). மலப்பையினுள்ளே கூர்மையான ஆயுதம் இருப்பது போல் கனம். "ஆசனவாய், யோனி ஆகிய இடங்

களில் கடுமையான கிழிக்கும் வலி தோன்றி மேலே தொப்பூழ்ப் பக்கமாகத் தாவுதல்".

**வலிகள் ஒரு ஒழுங்குக்கு உட்பட்டுத் தோன்றுவதும் மறைவதும்** :—வலிகள் அடிக்கடி இடம் மாறுகின்றன; படிப்படியாக அதிகமாகித் திடீரென்று மறையும்; அல்லது திடீரென்று மறைவது போலத் திடீரென்று தோன்றவும் கூடும்.

### மற்ற குறிகள்

தொண்டைச் சுரப்பிகளில் சிறு குழிப் புண்களுடன் வேக்காடும் வீக்கமும்;—பல முளைகளுள்ள தொண்டைச் சுரப்பி வேக்காடு. வருத்தத்தினாலும் கவலைகளாலும் தூக்கம் வராமை. அடிக்கடி பெரியதாகக் கொட்டாவி விடுதல். மாத விடாயில் போக்கு கொஞ்சமாகவும், கறுப்பாக அல்லது அழுகிய நாற்றமாயும் இருக்கும். இருதயத்தில் படபடப்பும் குத்து வலிகளும் (ஸ்பைஜீலியா). மலம் கழிந்து நீண்ட நேரமான பிறகும் மலப் பையில் வெட்டும், கிழிக்கும் வலிகள் விடாமல் இருத்தல் (ரடான்னியா, ஸல்பர்).

**உறவு** :—ஆரம் மெட், நேட்ரம் மூர், பாஸ்பாரிக் ஆஸிட், ஸல்பர் ஆகியவை இக்னேஷியாவுக்குப் பிறகு நன்றாக வேலை செய்யும். காபியா, நக்ஸ் வாமிகா, டபாகம் ஆகியவைகளை இக்னேஷியாவுக்குப் பின் கொடுப்பது கூடாது.

**ஒப்பிடுதல்** :—வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சியினால் இரவில் தூக்கம் வருவதில்லை என்னும் குறியில் லைகபோடியம். உட்கார்ந்தால் மூலங்களில் சௌகரியம் இக்னேஷியாவில் காணப்படுகிறது. லைகபோடியம், தூஜா, பாஸ்பாரிக் ஆஸிட் ஆகியவைகளில் உட்கார்ந்தால் அதிகமாகும்.



காதலில் ஏமாற்றம் என்னும் குறியில் பாஸ்பாரிக் ஆஸிடுடன் ஒப்பிடலாம்.

**குறிப்புகள்** :—இக்னேஷியா மிக விரைவாய் வேலை செய்கிறது. ஆனால் நீண்ட நேரம் வேலை செய்வது இடையாது. அதைச் சாப்பிடக் காலை வேளையே ஏற்ற காலம். படுப்பதற்குச் சற்று முன்னதாக இக்னேஷியாவைச் சாப்பிட்டால் தூக்கம் அடிக்கடி தடைப்படும். ஸல்பரை இரவில் சாப்பிட்டால் தூக்கத்தைக் கெடுத்து விடும்.

---

## ஐயோடியம்
## (IODIUM)

**முன்னுரை** :—அனேகமாக உடலில் உள்ள எல்லா உறுப்புகளையும் அணுக்களையும் ஐயோடியம் தாக்குகிறது. உறுப்புகளையும் அணுக்களையும் ஐயோடியம் பாழாக்கி விடுகிறது. சுரப்பிகள்பல சமயங்களில் கொழுத்து விடுகின்றன. அவை வீங்கிக் கல்போல் கடினமாகிப் பெரிதாகி விடுவதுடன் உடல் மெலிந்து போய்விடுகிறது. உடல் மெலிவு எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அக்கேசுக்கு ஐயோடியமே ஏற்றது என்பது உறுதிப்படும்.

இவ் வௌஷதத்தின் மிக முக்கியமான குறிகளாவன: **1. சுரப்பிகள் கல்போலக் கடினமாகிப் பருத்தல். 2. உடல் மெலிவு. 3. சூட்டினால் பொதுவாக எல்லாக் குறிகளும் அதிகமாகும். 4. கவலையுடன் நிலைகொள்ளாத தன்மை, அதனால் எப்பொழுதும் ஏதோ ஒரு காரியத்தில் ஈடுபட்டே இருத்தல். அல்லது ஒரு இடத்திலும் நில்லாமல் அலைந்து கொண்டே இருத்தல். 5. ஆனால் தன் இடத்தை மாற்றுவதோ அல்லது சுறு சுறுப்பாய் இருப்பதோ அவரால் முடியாது என்றே சொல்ல**

லாம். எவ்விதமான அசைவினாலும் வேலையினாலும் எளி திலே வியர்வை உற்பத்தியாகிக் களைப்பு ஏற்படுவதே இதற்குக் காரணம். 6. இரண்டு மணிக்கு ஒரு முறை பசி தோன்றும்; மிக வேகமாகச் சீரணம் ஆகிவிடும்; ஆயினும் உடல் மெலிவு அப்படியேதான் இருக்கும். 7. வேலை செய்வதினால் உண்டாகும் அளவு மீறிய களைப்பைத் தவிர மூச்சுத் திணறலும் அதிகமாகவே இருக்கும். 8. உடம்பின் உள்ளே அறிப்பு அல்லது குறு குறுப்பு. 9. துடிப்புகள்.

## பொதுவான குறிகள்

**தகுதி** :—க்ஷயம் தோன்றும் உடல் வாகுள்ளவர்கள்; அதிகக் களைப்பு, அதிக உடல் மெலிவு ஆகிய குறிகளுடன் வியாதியில் அடிபட்டது போல் உடல் வலிமை குன்றிய நிலைமை. கறுத்த தலை மயிரும் கண்களும்; உடல் கறுப்பாய் அல்லது பழுப்புக் கலந்த மஞ்சளாய் இருக்கும்.

**மனம்** :—வருத்தம்; கண்ணீர் விடுதல். கவலையுடன் ஏதோ ஆபத்து நேரப் போகிறதென்று நினைத்துப் பயப்படுதல். அங்கு மிங்கும் போக வேண்டுமென்ற தூண்டுதலுடன் நிலை கொள்ளாமல் தவித்தல். ஓய்வாய் உட்கார்ந்திருக்கும் போது கவலை தோன்றும். ஏதோ ஒரு காரியத்தைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். தற்கொலை செய்து கொள்ள விரும்புதல். பட படத்தல் என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

**உடல்** :—உமிழ் நீர் அதிகமாக உற்பத்தியாகுதல். வாயில் உலோகச் சுவை, மஞ்சட் காமாலை. அடிவயிற்றிலுள்ள சுரப்பிகள் பருத்தல். உடல் மெலிவு, கொழுத்தல் என்னும் தலைப்புகளின் கீழேயும் பார்க்கவும். இருதயத்தில் பட படப்பு, அல்ப வேலை செய்தாலும் அதிகமாகும். நீர்ச் சுரப்புடன் வீக்கம், உடல் முழுவதுங் கூட



இருக்கலாம். பல்வேறு உறுப்புகளிலிருந்து இரத்தப் பெருக்கு. பிறப்பு உறுப்புகளில் நாற்றம் வீசும் வியர்வை. எப்பொழுதும் சூடாக இருக்கும் உணர்ச்சி. கைகளும் பாதங்களும் சில்லென்றிருக்கும்.

**உபாதி கூடுதல்** .—வியாதியஸ்தரின் கோளாறுகள் சூடுள்ள இடங்களில் அதிகமாகும்; சூடுள்ள இடங்களில் இருக்க அவரால் முடியாது. சூட்டினாலும் உடலைப் போர்த்திக் கொண்டாலும் உபாதிகள் அதிகரிக்கும். பசியாய் இருக்கும் போது உபாதிகள் அதிகமாகும். பசியினால் கவலை, வேதனை ஆகியவை கூடுதலாகும். ஓய்வாய் உட்கார்ந் திருக்கும் போது கவலையும் நிலைகொள்ளாமல் தவிப்பதும் அதிகரிக்கும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— எல்லாவித அசைவுகளும் வேலையும் மூச்சுத் திணறல், இருதயக் கோளாறுகள், பலவீனம், வியர்க்கும் தன்மை முதலிய பல குறிகளை அதிகரிக்கும். கீழே படுத்துக் கொண்டால் மூச்சுத் திணறலும் இருதயக் கோளாறுகளும் கூடுதலாகும். தொடுவதினாலும் அமுக்குவதினாலும் பல குறிகள் அதிகமாகும்.

**உபாதி குறைதல்** :—வியாதியஸ்தர் உடம்பில் கொதிப்பு அதிகமாய் இருக்கும். வேலை செய்ய, சிந்தனை செய்ய, படிக்க, முதலிய பல காரியங்களைச் செய்யவும் குளிர்ச்சியான இடத்தைத் தேடுவோர். அசைவினாலும் எதையாவது சாப்பிட்டாலும் உபாதிகள் சௌகரியமாய் இருக்கும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :—உட்கார்ந்து கொண்டிருக்கும் போது மூச்சுத் திணறலும் இருதயக் கோளாறுகளும் சௌகரியமாய்

இருக்கும். எப்பொழுதும் பசி, சாப்பிடும்போது சௌகரியமாய் இருக்கும். சில குறிகள் சாப்பிட்ட பிறகு சௌகரியமாக இருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**உடல் மெலிவு :—உறுப்புகள் சிறுத்துப் போகுதல் :—** சிற்சில உறுப்புகள் மட்டும் மெலிந்து சிறுத்துப் போகும். பலவீனமும் மெலிவும். **அளவு மீறிய உணவு உட்கொள்வார் என்றாலும் உடம்பு மெலியும்.** ஒல்லியாகவும் மெலிந்தும் கறுத்தும் மிக வேகமாக வளரும் இள வயதினர்களுக்குத் தோன்றும் சுவாசகோச க்ஷயம். உடல் மெலிவு படிப்படியாக அதிகமாகி முடிவிலே வியாதியஸ்தர் எலும்பும் தோலுமாக மாறி விடுவார். பசி மட்டும் ஆரம்பம் முதல் முடிவுவரை எப்பொழுதும் நன்றாகவே இருக்கும்.

சுரப்பிகள், கொழுப்பு, உடல் அணுக்கள், தசைகள் ஆகிய யாவும் உருக்குலைந்து அளவு கடந்த உடல் மெலிவில் முடியும். **விரைகள் சிறுத்துப்போய்** ஆண் தன்மை முழுவதும் அழிந்து போகும். சினைப்பைகளும் ஸ்தனங்களும் சிறுத்துப் போய் தொங்க ஆரம்பிக்கும்.

**கொழுத்தல் :**—நிணநீர்ச் சுரப்பிகள், சினைப்பைகள், கல்லீரல், மண்ணீரல் முதலிய எல்லாச் சுரப்பிகளும் பருத்தல்; விரைப்பை வீக்கம். ஸ்தனங்கள் மட்டுமே சிறுக்கும். **தைராய்டு சுரப்பி** பருத்துக் கல் போல் கடினமாவது மிகவும் குறிப்பிடத் தக்க குறி.

**ஐயோடியத்துக்கு** நீரை உறிஞ்சும் சக்தி அதிகமாய் இருக்கிறதென்பது இதிலிருந்து தெளிவாகும். சுவாச



கோச க்ஷயம், மேகக்கிரந்தி ஆகியவைகளால் தோன்றும் கடினமான வீக்கங்களுக்கும், ஊனீர்ச் சுரப்புகளுக்கும் ஐயோடியம் பல சமயங்களிலும் பயன் படுகிறது. இரு ஸ்தனங்களிலும் நீலம் கலந்த சிவந்த உருண்டைகள். ஸ்தனச் சுரப்பிகளைத் தவிர மற்ற சுரப்பிகள் யாவும் கடினமாகவும் உருண்டைகளுடனும் பருத்தும் இருக்கலாம். **அடிவயிற்றுச் சுரப்பிகள் உருண்டைகள் போல் கைக்குத் தென்படும்.** கருப்பை பருத்து மாதவிடாய்ச் சமயங்களில் அதிகமான இரத்தப் பெருக்கு தோன்றும். சுரப்பிகள் பருத்துக் கடினமாய்த் தூங்கி வழிந்து கொண்டும் **வலி** இல்லாமலும் இருக்கும்.

தசைக் கட்டிகளைப் பற்றி ஆராயும் போது ஐயோடியம் தைராய்டு சுரப்பிகளைத் தாக்கி அவைகளை வீங்கிக் கடினமாகும்படிச் செய்கிறது. சுவாசகோச வேக்காட்டிலும் சுவாசகோச க்ஷயத்திலுங்கூட அத்தசைகள் கெட்டிப் படும் போது ஐயோடியம் தேவைப்படும்.

**கோளாறான வளர்ச்சி :**—எலும்புகள் வளைதல். எலும்புகள் கோணல் மாணலாய் இருத்தல்.

**அளவு கடந்த பசி; சீக்கிரத்தில் சீரணம் : பசியே இல்லாமலும் போகுதல் :**—அளவு கடந்த பசி, நன்றாய்ச் சாப்பிடுவார்; அடிக்கடியும் சாப்பிடுவார்; இருந்தாலும் **உடல் மெலிந்து கொண்டே** வரும் (**அப்ரொடேனம், நேட்ரம் மூர், ஸானிகுலா, ட்யுபர்குலீனம்**) பசி வேதனையினால் கஷ்டப் படுதல்; ஏறக்குறைய இரண்டு மணிக்கு ஒருதடவை சாப்பிடவேண்டும்; பசியைத் திருப்தி செய்யாவிட்டால் கவலையும் களைப்பும் வேதனையும் தோன்றும் (**ஸீஞ' ஸல்பர்;**) சாப்பிடும்போதும் சாப்பிட்ட பிறகும் வயிறு நிறைந் திருக்கும் வரையிலும் சௌகரியமாய்த் தோன்றும்.

படபடத்தல் : தூண்டுதல் :—படபடப்பு அதிகமாகி வியாதியஸ்தர் நிலை கொள்ளாமல், பயத்துடன் உணர்ச்சிகள் அதிகரித்த நிலைமையில் இருப்பார். இடத்துக்கு இடம் மாறிக் கொண்டே இருக்க வேண்டுமென்ற தூண்டுதலுடன் நிலை கொள்ளாமல் தவித்தல். இந்த நிலை கொள்ளாத, கவலையுடன் கூடிய நிலைமை உடல் மனம் இரண்டையுமே தாக்கும். ஏதோ ஒரு வித வேதனையினால் தான் வியாதியஸ்தர் எப்பொழுதும் வேலைசெய்து கொண்டே இருக்கிறார். "அடிக்கடி இடத்தை மாற்றிக் கொண்டே இருக்கத் தூண்டுதல் ஏற்படுவதினால் உட்காரவோ, தூங்கவோ, முடியாமல் போகும்."

பயந்த சுபாவம் ; நிலை கொள்ளாமை ; தசைகளில் இழுப்பு; நடுக்கம் ; உள்ளூர நடுக்கம் (உள் உறுப்புகளில் நடுக்கம் இருப்பதை வியாதியஸ்தர் உணருவார்).

திடீரென்று ஏற்படும் தூண்டுதல்கள் ; காரணம் இல்லாமல் கொலை செய்ய பைத்தியம் கலந்த திடீர்த் தூண்டுதல்கள்; எங்கேயாவது ஓடிப்போய்விடவேண்டுமென்று அடக்க முடியாத தூண்டுதல்.

துடிப்புகள் :—உடல் முழுவதும் துடிப்புகள். தலை, கைகள், முதுகு, நெற்றிப் பொட்டுகள், வயிற்றின் உட்புறம் முதலிய இடங்களில் துடிப்புகள். அடி வயிற்றிலுள்ள அயோர்டா இரத்தக் குழாயில் துடிப்புகள்.

உடலின் உட்புறத்தில் அறிப்பு அல்லது குறு குறுப்பு :—மார்பினுள்ளே குறு குறுக்கும் அல்லது அறிக்கும் உணர்ச்சி (சுவாச கோச வேக்காட்டிலோ அல்லது சுவாச கோச க்ஷயத்திலோ சுவாச கோசத்தசை கெட்டிப்படும் போது) உண்டாகும். மார்பின் உள்ளே ஏற்



படும் தாங்க முடியாத அறிப்பினால் கக்குவாய் இருமலில் காணப்படுவதைப் போன்ற இருமல். சுவாச கோசங்களில் அறிப்பு, அதனால் இருமல் தோன்றும்; சில சமயங்களில் அறிப்பு மூக்கின் உட்புறம் வரையும் பரவிக் காணப்படலாம்.

எளிதிலே வியர்வை தோன்றுதல்; களைப்பு; மூச்சுத் திணறல் :—அல்ப காரணங்களாலும் வியர்வை உண்டாவதும் களைத்துப் போவதும். பலவீனம் அளவு கடந்து இருக்கும். அதிக பலவீனத்தினால் பேசுவது கூட வியர்வையை உண்டாக்கும். மாடிப் படி ஏறும் போது அதிக பலவீனமும் மூச்சுத் திணறலும் (கல் கார்ப்).; மேலே ஏறும் போது மயக்கமும் ஏற்படக் கூடும். உடல் களைப்பை ஏற்படுத்தும் குணமுள்ள நாட்பட்ட வயிற்றுப் போக்கு. இருதயக் கோளாறுகளில் களைத்த உணர்ச்சியுடன் வியாதியஸ்தருக்கு நடக்கவும் மூச்சு விடவும் கூடச் சிரமம் ஏற்படும்.

சூடான உணர்ச்சி:—எப்பொழுதும் உடம்பு கொதித்துக் கொண்டிருக்கும் உணர்ச்சி. இது சுரத்தினால் ஏற்படும் சூடு அல்ல. குளிர்ந்த தண்ணீரில் குளிக்க விரும்புவார்.

தோல் உறிதல்: புண்ணாகுதல் :—மூக்கு, கண்கள், யோனி ஆகிய இடங்களிலிருந்து வெளியாகும் கழிவுகள் பட்ட இடங்களில் தோலை உறித்துப் புண்ணாக்கும். வெள்ளை ஒழுக்கினால் தொடைகளில் புண்ணாகி ஆடையும் அரிக்கப்பட்டு விடும்; போக்கு கார குணமுள்ளதாகவும் ஏராளமாகவும் மாதவிடாய்க் காலத்தில் கூடுதலாகவும் இருக்கும். மூக்கினுள் புண் உண்டாகி மூக்கைச் சிந்தும் போது இரத்தம் வெளியாகும். நாக்கி

னும் வாய் முழுவதும் அடை அடையாய்க் குழிப் புண்கள்.

நீர்ச் சுரப்புள்ள வீக்கம்:—கைகள், கால்கள், கண் இமைகள், முகம், கண்களின் கீழ் ஆகிய இடங்களில். உடல் முழுவதும் கூட நீர்ச் சுரப்புள்ள வீக்கம் தோன்றலாம்.

நசுக்குவது போன்ற வலிகள்:—சினைப்பைகளிலிருந்து கருப்பை வரை மந்தமான, அமுக்குவது போலவும் நசுக்குவது போலவும் வலி. வலது சினைப்பைப் பகுதியில் நசுக்குவது போல் வலி.

நீடித்த கோளாறுகள் உள்ளவர்களுக்குத் திடீர் திடீரென்று புதிய கோளாறுகள் ஏற்படுதல்:—சூடும் சூடான இடங்களில் இருப்பதும் ஒத்துக் கொள்ளாத உடல்வாகு உள்ளவர்கள்; வியாதியஸ்தர் தன் உடம்பு எப்பொழுதும் கொதித்துக் கொண்டிருப்பதாக நினைப்பார். குளிர்ந்த தண்ணீரில் குளிக்க விரும்புவார்; சூடுள்ள இடங்களில் இருக்கும் போது மூச்சு விட முடியாமல் திணறலும் இருமலும் உண்டாகும்; மிகச் சீக்கிரத்தில் வியர்வையும் உடல் களைப்பும் தோன்றும்.

இவ்விதமான நாட்பட்ட உடல் கோளாறு உள்ளவர்களுக்கு வயிற்றுப் போக்கு, வயிற்றில் வேக்காடு, தொண்டையில் புண், மூக்கில் நீர்க் கோர்வை, தொண்டை வேக்காடு, கல்லீரலில் வேக்காடு முதலிய பல கோளாறுகள் புதிது புதிதாகத் தோன்றும். ஐயோடியம் இவ் வகையான நாட்பட்ட உடல் கோளாறுகளைக் குணம் செய்வதுடன் புதிதாகத் தோன்றும் கோளாறுகளையும் நீக்கும்.



## மற்ற குறிகள்

பால் போன்ற, பால் முறித்துத் தயாரிக்கப்படும் "வே" (Whey) தண்ணீர் போன்ற போக்குள்ள வயிற்றுப் போக்கு. இருதயம் கசக்கிப் பிழியப்படும் உணர்ச்சி. நாட்பட்ட கருப்பை வேக்காடும் கருப்பைப் புற்றும். மூச்சுத் திணறல்; இரத்தம் தோய்ந்த கோழையுடன் இருமல். மாதவிடாய் வழக்கத்து முன்னதாகத் தோன்றிக் கடுமையாகவும் ஏராளமான போக்குடனும் இருக்கும். மாதவிடாய் இடைக் காலங்களில் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு. சுவாச கோச க்ஷயத்துடன் சுரம். மூக்கிலிருந்து சூடான நீர் வடிதல். தும்மலுடன் ஏராளமான, தண்ணீர் போன்ற போக்கு மூக்கிலிருந்து வெளியாகும்; மூக்கு புண்ணாய் இருத்தல். தொண்டைச் சுரப்பிகள் பருத்து பல முனைகளுடன் காணப்படுதல் (ஐயோடியம் உடல்வாகு உள்ளவர்களுக்கு), சுரப்பிகளின் கோளாறுகளுடன் உடல் மெலிந்தும் உள்ள சிறுவர்களிடம் காணப்படும் நாட்பட்ட வயிற்றுப் போக்கு. காலை வேளைகளில் மட்டும் இருக்கும். மலச்சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறித் தோன்றுதல் (ஆண்ட்டிம் க்ரூடம்). குழந்தைகளுக்கு இழுப்புடனும் வாள் கொண்டு அறுப்பது போன்ற ஓசையுள்ள மூச்சுடனும் தோன்றும் தொண்டை வேக்காடு (ஸ்பாஞ்சியா); வறண்ட, குலைப்பது போன்ற இருமல்; இருமும் போது குழந்தை தொண்டையை இறுகப் பிடித்துக் கொள்ளும் (ஸீபா). சருமத்தில் கட்டிகள். சாப்பிட்ட பிறகு ஒவ்வொரு தடவையும் அடி வயிற்றில் வலி தோன்றுதல். மேக வெட்டை சம்பந்த முள்ள வாத ரோகம்.

**உறவு :—லைகபோடியம், பாடியாகா** ஆகியவை **ஐயோடி யத்துக்குப்** பிறகு நன்ருக வேலை செய்யும். **ஹிப்பார் ஸல்பர், மெர். சொலு ஆகியவைகளுக்குப்** பிறகு **ஐயோடியம்** நன்கு வேலை செய்யும்.

**ஒப்பிடுதல் :—ஐயோடியம்** வியாதியஸ்தரின் உடலும் தலைமயிரும் கறுப்பாய் இருக்கும். **ப்ரோமியம்** வியாதியஸ்தரின் உடலும் தலைமயிரும் அவ்வளவு கறுப்பாக இருக்காது. ஏராளமான பசி, உடல் மெலிவு என்னும் குறி **நேட்ரம் மூரிலும்** இருந்தாலும் அதில் மெலிவு கழுத்துப் பக்கமே காணப்படும். **ஐயோடியத்தைப் போலவே பாரிடா கார்பிலும்** அளவு கடந்த பசி, உடல். மெலிவு ஆகிய குறிகள் இருந்த போதிலும் **பாரிடா கார்ப்** வியாதியஸ்தருக்குப் புதிய நபர்களைக் கண்டால் வெறுப்பு ஏற்படுவதும் கோழைத்தனமும் தெளிவாய்க் காணப்படும். சூடுள்ள உணர்ச்சி **ப்ளுவாரிக் ஆஸிட்டிலும்** இருக்கிறது.

**குறிப்புகள் :—**பிள்ளைப் பெற்று அறையில் உள்ள பெண்களுக்கு **ஐயோடியத்தைக்** குறைந்த வீரியங்களில் கொடுக்கக் கூடாதென்று **ஹெரிங்** கூறுகிறார்.

கண்டமாலை என்று அழைக்கப் படும் தைராய்டு சுரப்பியின் வீக்கத்தில் ஐயோடியத்தைப் பௌர்ணமி கழிந்தவுடன் அல்லது தேய்பிறை நாட்களில் கொடுத்தால் மிக நன்ருக வேலை செய்கிறது. இவ்வியாதியில் **ஸி. எம்** (C. M.) வீரியத்தில் பௌர்ணமி கழிந்த பிறகு நான்கு நாட்கள் இரவில் மட்டும் ஒரு வேளை கொடுத்து வந்தாராம் **டாக்டர் நாஷ்** என்பவர்.

---



# இபிகாக்குஹ

## (IPECACUANHA)

**முன்னுரை :—**திடீரென்று ஏற்படும் இரத்தப் பெருக்குகளை எதிர்த்துப் போராடத் தேவைப்படும் மிக முக்கியமான ஔஷதங்களில் இது ஒன்று. மூக்கிலிருந்து இரத்தம் பெருக்கெடுக்கும் போது இபிகாக்கை 30 வீரியத்தில் ஒரே வேளை கொடுத்தால் போதும். ஔஷதம் நாக்கில் பட்டவுடன் இரத்தம் கொட்டுவது நின்று போகும். ஆனல் அந்தக் கேசுக்கு இபிகாக் ஏற்றதாய் இருக்க வேண்டும்.

சிறிது நேரமே உடலில் தங்கி வேலை செய்கிறது. நாட்பட்ட கோளாறுகளுக்குத் தேவைப் படுவது அனேகமாக இல்லை யென்று கூறலாம். அப்படித் தேவைப் பட்டாலும் வியாதி முழுவதும் குணமாக மற்ற ஔஷதங்களும் தேவைப் படும்.

இவ்வௌஷதத்தின் மிக முக்கியமான குறிகள் பின்வருமாறு :—**குமட்டல் ; சிரமப்பட்டு மூச்சுவிடுதல் : சுத்தமான நாக்கு : தாகம் இல்லாமை : இழுப்பு ஓசையுடன் மூச்சு விடுதல் : வலிப்பு ; இரத்தம் ஒரே சீராய் வெளியாவதுடன் நல்ல சிவப்பு நிறமாய் இருத்தல்.**

### பொதுவான குறிகள்

**தகுதி :—**தளர்ச்சி யடைந்த உடலுள்ளவர்களுக்கு ***மிகவும் ஏற்றது; சிவந்த உடலுள்ளவர்கள்; குழந்தைகளுக்கு, விசேஷமாகப் பல் முளைக்கும் போது; உடல் பருத்து வெளுத்து உள்ள குழந்தைகளுக்கு, முக்கியமாகத் தாய்ப் பாலை மறக்கச் செய்யும் போது; பெண்களுக்கு; மூக்கிலிருந்தோ அல்லது மற்ற இடங்களிலிருந்தோ ஏற்கனவே இரத்தப் பெருக்கு ஏற்பட்டவர்***

களுக்கு; தலை தூக்கி நிற்கும் அசீரணக் குறிகளுடன் கூடிய வியாதிகள்.

மனம் :—தனக்கு வேண்டியது என்ன என்பது தெரியாமல் பல பொருள்களை விரும்புதல். முன் கோபம். சிறிய ஓசையும் பொறுக்க முடியாது. குழந்தைகள் கதறுவதும் ஊளையிடுவதும்; அடிக்கடி குழந்தை வீறிட்டுக் கதறும்.

உடல் :—வாந்தி செய்தாலும் தணியாத குமட்டல்; ஏராளமான உமிழ்நீர்ப் பெருக்குடன் இடைவிடாத குமட்டல்; நாக்குச் சுத்தமாய் இருக்கும் அல்லது சிறிதளவே அழுக்கு இருக்கும். தாகம் இல்லாமை (ஆனால் தாகமும் இருக்கலாம்). கஷ்டப்பட்டு சுவாசித்தல். தசை இழுப்புகளும் வலிப்புகளும். எல்லா எலும்புகளிலும் அடிபட்டது போல் வலி. பாதிக் கண்கள் திறந்து கொண்டு தூக்கம். தூங்கும் போது தசைகளில் இழுப்புடன் தூக்கக் கலக்கம். நெற்றியில் குளிர்ச்சியான வியர்வை. முகம் வெளுத்துக் கண்களைச் சுற்றி நீல நிறமுள்ள வரம்புகள் காணப்படும். கை கால்கள் சில்லென்றிருக்கும், குளிர்ந்த வியர்வை.

உபாதி கூடுதல் :—வியாதியஸ்தருக்குக் குளிர், சூடு இரண்டும் ஒத்துக் கொள்ளாது. குளிர் காலத்திலும் கோடைக் காலத்திலும் கோளாறுகள் கூடுதலாகும். சூடும் ஈரக் கசிவும் சேர்ந்துள்ள பருவ நிலை அவருக்குக் கொஞ்சங் கூட ஒத்துக் கொள்ளாது.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—நீர்க்கோர்வை, காசம் முதலியவை சூடும் ஈரக் சிவும் உள்ள காற்று வீசும் போது அதிகமாகும். சூடான



இடங்களில் குளிர் கூடுதலாகும் ;வெளிச் சூட்டினாலும் அதிகமாகும். குளிர்ந்த பானங்களும் ஐஸ் க்ரீமும் வயிற்று வலியை உண்டாக்கும். சூடும் ஈரக்கசிவும் உள்ள பருவ நிலைகளால் குழந்தைகளுக்குத் தோன்றும் கடுமையான மார்ச்சளி.

உபாதி குறைதல் :—திறந்த இடங்களில் வியாதியஸ்தர் சௌகரியமாய் இருப்பார்.

### விசேஷக் குறிகளின் விளக்கம்

குமட்டல் : உமிழ் நீர் அதிகமாய் உற்பத்தியாகுதல் : வாந்தி : தொண்டையை அடைத்தல் :—இடைவிடாத குமட்டலுடன் சேர்ந்து காணப்படும் எல்லா வியாதிகளிலும் இபிகாக்குவை நினைக்கவேண்டும். இவ்வித வியாதிகள் அனேகமாகத் திடீர் வியாதிகளாகவே இருக்கும். சீரணக் கோளாறுகள், குடல் கோளாறுகள், வலிகள், சுரம், இரத்தப் பெருக்கு முதலிய வியாதிகள் குமட்டலுடன் சேர்ந்து காணப்படும். வாந்தி செய்த பிறகும் தணியாத குமட்டல். ஏராளமான உமிழ் நீர்ப் பெருக்குடன் குமட்டல். குமட்டல் வயிற்றிலிருந்து ஆரம்பிக்கும். வயிற்றில் என்னவென்று சொல்ல முடியாத வேதனை உணர்ச்சி அளவுகடந்து உண்டாகும். (என்னுடைய குழந்தைப் பருவத்தில் இவ்விதமான குமட்டல் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பயங்கரமான குமட்டல் என்பதன் பொருளை நான் நன்கு அறிந்திருக்கிறேன்).

குமட்டலுடன் முறைச் சுரம். காலராவின் ஆரம்ப நிலையில் குமட்டலும் வாந்தியும் மும்முரமாக இருக்கும் போது. காலராவின் ஆரம்ப நிலைமையில் இடைவிடாத குமட்டலும் அடிக்கடி வாந்தியும் தோன்றும் போது.

வெண்மை நிறமும் குழகுழப்பும் கொண்ட ஏராளமான சளிப் பொருள் வாந்தி செய்யப்படும். அதனுல் குமட்டல் கொஞ்சங் கூடக் குறையாது.

உமிழ் நீர் ஏராளமாய்ச் சுரக்கும். அடிக்கடி உமிழ் நீரை விழுங்க வேண்டி வரும். கருவுற்ற பெண்களுக்கு ஏராளமான உமிழ் நீர் சுரக்கும் போது பல சமயங்களில் பயன்படும்.

**கக்குவாய் இருமல்:**—"குழந்தைக்கு மூச்சுப் போய் விடும்" உடல் வெளுத்து அல்லது முகம் நீலமாகி உடல் விரைத்துப் போய்விடும்; தொண்டையில் அடைப்புத் தோன்றித் திக்கு முக்காடி சளிப் பொருளை வாந்தி செய்யும்; மூக்கிலிருந்தோ வாயிலிருந்தோ இரத்தப் பெருக்கெடுக்கும்.

**சிரமப்பட்டு மூச்சு விடுதல்:**—இரத்தப் பெருக்கு ஏற்படும் போது வேகமாக மூச்சு விடுதல் அல்லது மூச்சு விடத் திணறுதல். மூச்சுவிடச் சிரமத்துடன் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு; சிற்சில சமயங்களில் குமட்டலுடனும் ஏற்படும். சிரமப்பட்டு மூச்சுவிடுதல் அல்லது மூச்சு விடத் திணறலுடன் மாதவிடாய் இடைக் காலங்களில் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு. பெண்களுக்குப் பிரசவமாகும் போதும் கருச் சிதைவு நேருமோ வென்று தோன்றும் சமயங்களிலும் மூச்சுவிடச் சிரமம் உண்டாகுதல். மார்பிலும் தொண்டையிலும் இறுக்கும் உணர்ச்சியினுல் (காச வியாதியில்) மூச்சு நின்று விடும் போல் தோன்றும்; சிறிது அசைந்தாலும் அதிகமாகும். "சளிப் பொருள் ஏராளமாகச் சேர்ந்து விட்டதால் மூச்சு நின்று போகுமென்று தோன்றுதல்." சிறிய வேலை செய்தாலும் மூச்சுவிடச் சிரமம் உண்டாகும்; இழுப்பு ஓசையும்



ஏற்படும். வீட்டினுள்ளே இருக்கும் போது அடிக்கடி மூச்சுத் திணறல் ஏற்படும். மூச்சுவிட முடியாமல் செய்து விடும் இருமல் அடிக்கடி உண்டாகும்.

**சுத்தமான நாக்கு: தாகம் இல்லாமை:**—சிற்சில சமயங்களில் தாகம் இருந்தாலும் தாகம் இல்லாமை இபிகாக்குவின் முக்கிய குறிகளில் ஒன்ருகும். சுத்தமான நாக்கு என்னும் குறியும் அதற் கடுத்தபடியாக வுள்ள ஒரு முக்கிய குறி. இயற்கைக்கு விரோதமாக நாக்குச் சுத்தமாய் இருப்பது உண்மையான விஷயம்தான். ஆயினும் நாக்கில் மெல்லிய அழுக்குச் சேர்ந்தும் இருக்கலாம்.

**விட்டு விட்டுத் தோன்றுதல்: வலிப்புகள்: விரைப்பு:**—இக்குறிகள் யாவும் இபிகாக்கின் விசேஷக் குறிகளே யாகும். இருமல் கோழை இல்லாமல் விட்டு விட்டு ஏற்படும். மார்பில் இறுக்கும் உணர்ச்சியுடனும் காச நோய் போலவும் இருக்கும். சிசுக்களின் சுவாச கோச வேக்காட்டில் சுவாச கோசங்களில் வலிப்பு ஏற்பட்டு விட்டது போல் இழுப்பு ஓசையுடன் மூச்சு விடுதல்.

தனுர்வாயு, பலவிதமான இழுப்புகளும் வலிப்புகளும்; வியாதியஸ்தருக்குத் தன் நினைவு அழிந்து போகும்; முகம் வெளுத்து உப்பி, பாதிக் கண்கள் திறந்திருக்கும்.

கக்குவாய் இருமலில் இருமல் தோன்றும் போது உடல் விரைத்துப் போய் விடுதல். (குமட்டல் என்னும் தலைப்பின் கீழ்ப் பார்க்கவும்).

**இழுப்பு ஓசை: களகள வென்ற ஓசை: (கோழை எதுவும் வெளியாகாமல்):**—சிறு குழந்தைகளுக்கு மார்பில் களகள வென்ற ஓசையுடன் மார்ச் சளி (ஆண்ட்டிம் டார்ட்); அவ்வியாதி மிக வேகமாகத் தோன்றி யிருந்

தால். "மார்பில் ஏராளமான சளி அடைதல், வேகமாகவும் இழுப்பு ஓசையுடனும் மூச்சுவிடுதல், உடல் நீலமாகி முகம் வெளுத்தல் முதலிய குறிகளுடன் கூடிய சிறு குழந்தைகளின் சுவாசகோச வேக்காட்டுக்கு இபிகாக் மிகவும் உபயோகமான ஔஷதமாகும் என்று டாக்டர் நாஷ் கூறுகிறார். மார்பில் ஏராளமான கோழை அடைந்திருப்பது போலத் தோன்றினாலும் இழுப்பு ஓசையுள்ள சுவாசம் இருந்த போதிலும் எவ்வளவு இருமினாலும் கோழை வெளியே வராது, சிறு குழந்தைகளின் சுவாசகோச வேக்காட்டில் களளத்த ஓசை லேசாகவும் இருக்கலாம், கடூரமாகவும் இருக்கலாம். இந்த ஓசை மார்பில் கோழை ஏராளமாய்ச் சேர்ந்து விடுவதால் உண்டாகிறது. இக்கோழையைக் கொஞ்சங்கூட வெளியேற்ற முடியாமல், மூச்சு விடுவதும் நின்று போகக் கூடும். தொண்டையிலும் மார்பிலும் கடுமையான சுருக்கத்துடன் விட்டு விட்டுத் தோன்றும் குணமுள்ள காசம். இறுக்கும் உணர்ச்சியினால் மூச்சுவிட முடியாமல் போகுமோ என்று தோன்றும்; சிறிதளவு அசைவினாலும் அதிகமாகும். இழுப்பு ஓசை இருந்த போதிலும் எதுவும் வெளியாவதில்லை.

இரத்தப் பெருக்கு (நல்ல சிவந்த நிறத்துடன் ஒரே அளவாய் வெளிப்படுதல்):—இபிகாக் இரத்தப்பெருக்குக்கு இன்றியமையாத ஓர் சிறந்த ஔஷதம். கருப்பை, குடல்கள், மூத்திரக் காய்கள், மூக்கு, சுவாசகோசங்கள் ஆகியவைகளிலிருந்தும் உடலிலுள்ள எல்லாத்துவாரங்களிலிருந்தும் இரத்தப் பெருக்கு ஏற்படுதல்; நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் ஏராளமாகவும் ஒரே அளவாகவும் வெளிப்படும். அத்துடன் குமட்டலும் சிரமத்துடன் மூச்சு



விடுவதும் சேர்ந்திருக்கும். கருப்பையிலிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்கில் இரத்தம் ஏராளமாகவும், நல்ல சிவப்பு நிறத்துடனும் கடகட வென்றும் வெளிப்படும்; குமட்டலும் ஏற்படும். பிள்ளைப் பெற்ற பிறகும், நஞ்சுப்பையை எடுத்த பிறகும் கருச்சிதைவுக்குப் பிறகும் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு. மூக்கிலிருந்து நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் கொட்டுதல். சுவாசகோசங்களிலிருந்து வெளிப்படும் இரத்தப் பெருக்கில், பெருக்கு வெளியாவதற்கு முன் மார்பில் கொப்பளம் விடும் உணர்ச்சியும் வெளிப்படும் போது குமட்டலும் காணப்படும். கருப்பை தாறுமாறாகச் சுருங்குவதினால் ஏற்படும் இரத்தப் பெருக்கில் இபிகாக் குணா பயன்படாது. ஆயுதங்களின் உதவி தேவையாகும்.

பச்சை நிறம்:—இபிகாக்குணாவில் மலம் பச்சை நிறமாகவும் சளிப் பொருள்கள் கலந்தும் வெளியாகும். புல்போல் நல்ல பசுமை நிறமாகவும் இருக்கலாம். ஆனால் மலம் கறுப்பாகவும் வெல்லப் பாகுபோல் நுங்கு நுரைகளுடனும் இருக்கும் போதும் இபிகாக் தேவைப்படும். பச்சையான, பாகுபோல் குழகுழப்பான சளிப் பொருள் வாந்தி செய்யப்படுதல்; சளிப் பொருள் புல் பச்சை போலவும் காணப்படலாம்.

உள்ளே அமுக்கப்படுதல்: பிற்போக்கான வியாதிகள்:— சின்னம்மை போன்ற சருமக் கோளாறுடன் கூடிய வியாதிகளில் சருமக் கோளாறு ஒழுங்காக வெளியே வராமல் இருக்கும் போதும், குளிரில் அடிபடுதல் முதலான காரணங்களால் வெளியே வர ஆரம்பித்த சருமக் கோளாறு உள்ளே அமுங்கிவிடும்போதும் மார்பு. வயிறு அல்லது குடல்கள் தாக்கப்பட்டு முறையே மார்பில் சளிக் கட்டுடனும் இழுப்புடனும் சுவாசித்தல், வெட்டுவது போன்ற வயிற்று வலி, குமட்டல் முதலிய கோ

ளாறுகள் தோன்றும். இச் சமயங்களில் இபிகாக் அமுங்கிய சருமக் கோளாறுகளை வெளியே கொண்டுவந்து வியாதி ஒழுங்காகவும் கடுமை யில்லாமலும் குணமாகச் செய்கிறது. சின்னம்மையின் சருமக் கோளாறுகள் உள்ளே அமுங்கி மார்புக் கோளாறுகள் தோன்றும் போது குறிகளுக்குத் தக்கபடி பிரயோனியா அல்லது இபிகாக் தேவைப்படும்.

**வெட்டும் வலிகள் : எலும்பு வலிகள் :**—வாயு உப்பிசத்துடன் தொப்புழ்ப் பாகத்தில் வெட்டும் வலி, அடிவயிற்றின் குறுக்கே இடது பக்கமிருந்து வலதுபக்கம் போகும் வெட்டும் வலிகள். (லாச்சஸிஸ்—வலதுபக்கம் மிருந்து இடது பக்கம் போனால் லைகபோடியம்). தொப்பூழைச் சுற்றி இறுக்கிப் பிடிக்கும் வலிகள் ; குடல்கள் கைகளால் இறுகப் பிடிக்கப் பட்டிருப்பது போல் தோன்றும் (காலராவின் ஆரம்ப நிலையில் குமட்டலுடன் இக்குறி காணப்படும்). பித்தக் கற்களினால் தோன்றும் வயிற்று வலி (பல சமயங்களில் வியாதியைக் குணம் செய்திருக்கிறது). மண்டை யெலும்புகளில் அடிபட்ட உணர்ச்சி : மூளையிலேயே அடிபட்டதுபோல் தோன்றுதல். இவ்வலிகள் பற்களிலும் நாக்கின் அடிப் பாகத்திலும் கூடப் பரவி இருக்கும். எல்லா எலும்புகளிலும் அடிபட்டது போல் வலி, எலும்புகள் தூள் தூளாக நொறுக்கப் பட்டிருக்கும் உணர்ச்சியுடன் வலிகள். (லாக்கானினம், ட்யுபர்குலீனம்—உடைக்கப் பட்டிருக்கும் உணர்ச்சி இருந்தால் யூபடோரியம் பர்ப்).

**விருப்பும் வெறுப்பும் :**—சுவையான பொருள்களையும், தித்திப்புள்ள பண்டங்களையுமே விரும்புவார்.

**முறை வைத்துத் தோன்றும் குணம் :—இபிகாக்கின்** கோளாறுகள் முறை வைத்துத் தோன்றும் குணம் உள்ளவையாக இருக்கின்றன. நாட்பட்ட அசீரணம் விட்டு விட்டு ஏற்படும். ஒவ்வொரு நாளும் அல்லது ஒன்று விட்டொரு நாள் ஒரே நேரத்தில் தவறாமல் தோன்றும். மலேரியாச் சுரத்தில் சுரம் முறை வைத்துத் தோன்றும் ; ஆனால் முறை ஒழுங்காக இருப்பது கிடையாது, அதாவது ஒவ்வொரு தடவையும் அதற்கு முன் ஏற்பட்டதை விடச் சில நாட்கள் தாமதமாகவே சுரம் தோன்றும்.



**வலிகளின் போக்கு :**—சில வகை வலிகள் (அடி வயிற்று வலியைப் போல்) இடமிருந்து வலம் போகும் ; சில வலிகள் மேலிருந்து கீழ் இறங்கும். பிரசவ சமயத்திலும் கருச்சிதைவு நேரும் போல் தோன்றும் போதும் குமட்டலுடன் வலி இடமிருந்து வலம் போகும். தலையில் உள்ள வலி (மண்டையெலும்புகளில்) மேலிருந்து கீழ் இறங்கி பற்களுக்குப் பரவும். பெண்களின் பிறப்பு உறுப்புகளிலும் ஆசனவாயிலும் கனமான, கீழே இழுக்கும், வேதனை தரும் உணர்ச்சி.

**மலேரியா :—கொயினா, ஆர்ஸனிகம்** ஆகியவைகளை அளவுமீறிக் கொடுக்கப் பட்ட எல்லா மலேரியாச் சுரங்களுக்கும் இபிகாக் அனேகமாக உபயோகமாகிறது. **உணவு விஷயங்களில் ஏற்பட்ட தவறினாலும் அளவு மீறிச் சாப்பிட்டதினாலும் மலேரியா சுரம் மீண்டும் திரும்பி வரும் போது** அச்சுரம் இபிகாக்குக்கு அடங்கிவிடும். குளிர் ஏற்படுவதற்கு முன் : கொட்டாவி விடுதல் ; சோம்பல் முறித்தல், வாயில் தண்ணீர் ஊறுதல். குளிர் நீண்ட நேரம் இருப்பதில்லை. **சூடான அறையில் இருந்தாலும் வெளிச் சூட்டினாலும் குளிர் கூடுதலாகும்.** கைகளும் கால்களும்

சில்விட்டு ஒரு கன்னம் சிவந்தும் மறு கன்னம் வெளுத்தும் இருக்கும். **குளிர் உள்ள போது களைப்பும் தளர்ச்சியும் சோர்வும் ஏராளமாய் இருக்கும்.** சூடு நீண்ட நேரம் இருக்கும். **சிரமப்பட்டு மூச்சு விடுவதுடன் குமட்டலும் வாந்தியும்.** வியர்வை உடலின் மேற் பாகங்களில் மட்டும் இருக்கும். வியர்த்துக் கொண்டிருக்கும் போது கோளாறுகள் கூடுதலாகவும் வியர்வை அடங்கிய பிறகு குறைவாகவும் இருக்கும். வியர்வை புளிப்பு நாற்றம் வீசலாம். மிதமீறிக் கொயினா உபயோகிக்கப்பட்டிருந்தால் வியர்வை ஏராளமாய் இருக்கும். குறிகள் தெளிவாய் இல்லாத சமயங்களில் இபிகாக் தெளிவான குறிகள் தோன்றும்படிச் செய்து வேறு ஔஷதங்கள் கொடுக்கப்பட வேண்டியதாய் இருந்தால் அவைகளுக் கேற்ற குறிகளை வெளியே கொண்டுவரும்.

## மற்ற குறிகள்

இரத்தம் கலந்த மூத்திரம்.—உள் உறுப்புகளில் நீர்ச் சுரப்பு.—விட்டு விட்டுப் பல் வலி தோன்றுதல், ஒரு பல்லைப் பிடுங்குவது போல் தோன்றும். விஷத் தன்மை வாய்ந்த கொப்பளங்கள், ஆடு மாடுகளுடன் புழங்குவோருக்கு ஏற்படும் **அந்த்ராக்ஸ்** (Anthrax) என்று வழங்கப்படும் ஒரு வகை இராஜபிளவைச் சிரங்கு (அவ் வியாதிக்கு இபிகாக் ஒரு சஞ்சீவி என்றே மதிக்கப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும் மேலே தடவவும் உபயோகிக்கலாம்). கக்குவாய் இருமலில் இருமல் தோன்றும் ஒவ்வொரு தடவையும் உள் மூச்சு இழுக்கும் போது ஊளையிடுவதும் கஷ்டமும் நீண்ட நேரம் நீடிப்பதுமாய் இருத்தல்.



**உறவு:**—குப்ரம் மெட், இபிகாக்குக்கு முன்பும் பிறகும் நன்றாக வேலை செய்யும்.

**ஒப்பிடுதல்:**—இபிகாக்கில் குமட்டல் அதிகமாய் இருக்கும். ஆண்டிம் டார்ட்டில் வாந்தியும் வாந்தியெடுக்க வரும் போல் தோன்றுவதும் அதிகமாய் இருக்கும். இபிகாக்கில் ஒன்று நாக்கு ஆச்சரியத்தைத் தரும் முறையில் மிகச் சுத்தமாய் இருக்கும். அல்லது சிறிதளவு அழுக்குடன் இருக்கும். ஆண்ட்டிம் டார்ட்டில் நாக்கில் கனமான வெள்ளை அழுக்குச் சேர்ந்திருக்கும்.

---

# ஐரிஸ் வர்ஸிகலர்

## (IRIS VERSICOLOR)

**முன்னுரை:**—வாயிலிருந்து ஆசனவாய் வரை உள்ள சீரணப் பாதையை ஐரிஸ் விசேஷமாகத் தாக்குகிறது.

## பொதுவான குறிகள்

**தகுதி:**—புளிப்பு அதிகமுள்ள உடல்வாகு உள்ளவர்களுக்கு விசேஷமாக ஏற்றது. சீரணக் கோளாறுகளே தலை தூக்கிய குறியாக உள்ள வியாதிகள் (பல சமயங்களில் தலை வலியுடன் தோன்றும்).

**மனம்:**—உற்சாகக் குறைவு. தனக்குச் சமீபத்தில் வியாதி ஏற்படப் போகிறதென்று நினைத்துப் பயப்படுதல்.

**உடல்:**—பசியே இல்லாமை. கை கால்களும் உடலும் சில்லென்றிருக்கும். மலச் சிக்கலும் இருக்கலாம்; வயிற்றுப் போக்கும் இருக்கலாம் (எது இருந்தாலும் முக்கிய குறி தான்). வியாதியின் ஆரம்ப காலத்திலிருந்தே களைப்பும் பலவீனமும் காணப்படுதல் (உதாரணம் வயிற்றுப் போக்கு).

**உபாதி கூடுதல்** :—கோடைக் காலங்களிலும் அதிகச் சூடுள்ள பருவங்களிலும் உபாதி அதிகரிக்கும். மன வேலை செய்து களைப்பு ஏற்பட்டாலும் அவ்விதமே கூடுதலாகும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— வயிற்று வலியும் வயிற்றுப் போக்கும் இரவு 2 அல்லது 3 மணிக்கு அதிகமாகும். தலைவலி ஓய்வினாலும் அதிகமான அசைவுகளாலும் அதிகமாகி நிதானமான அசைவினால் சௌகரியமாய் இருக்கும். நிதானமான அசைவினால் கோளாறுகள் மிகவும் அதிகமாகி அதிகமான அசைவினால் ஒன்றும் ஏற்படாமல் இருப்பதும் சில சமயங்களில் காணப்படலாம்.

**உபாதி குறைதல்** :—இடை விடாத அசைவினால் கோளாறுகள் மட்டுப்பட்டிருக்கும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

எரிச்சல் :—தொண்டையில் எரிச்சல். உணவு செல்லும் பாதை முழுவதிலும் எரிச்சல். குளிர்ந்த பானங்களால் எரிச்சல் தணியாது. மலம் கழிக்கும் போது ஆசன வாயில் எரிச்சல். மலம் கழித்த பிறகு ஆசன வாயில் தீப் பிடித்து எரிவது போன்ற எரிச்சல். வாயிலிருந்து ஆசன வாய் வரை எரிச்சல். குமட்டல்; வாயிலும் தொண்டையிலும் உணவுக் குழாயிலும் எரிச்சலுடன் வாந்தி. வயிற்றில் அதிக எரிச்சலுடன் வேதனை (வயிற்று வேக்காடு). மூத்திரம் கழித்த பிறகு மூத்திரத் துவாரத்தில் எரிச்சல். புளிப்பான, காரமான, எரிச்சலை உண்டாக்கும் கழிவுகளும் போக்குகளும். எரிச்சலும் வலியுமுள்ள தொடை நரம்பு வாதம். இடது பக்கத்திலும் அசைவினாலும் அதிகமாய் இருக்கும்.



**புளிப்புக் குணம் : தோல் உறிதல் : வாந்தி** :—பித்தம் கலந்த, தண்ணீர் போல, காரமான பொருள் எரிச்சலுடன் வாந்தி செய்யப்படும். தண்ணீர் போன்ற, அளவு மீறிய புளிப்பு வாசனை யுள்ள நீர் வாந்தியாவதும் அதனால் தொண்டையில் புண் உண்டாவதும். சில சமயங்களில் உடம்பு முழுவதுமே புளிப்பு நாற்றம் வீசும். வாந்தி எடுக்கப்படும் பொருள் எப்பொழுதும் புளிப்பாக இருக்கு மென்று சொல்ல முடியாது; கசப்பாகவும் இருக்கலாம், தித்திப்பாகவும் இருக்கலாம். புளிப்புக் குணம் மிக அதிகமாகி வியாதியஸ்தரின் உடல் முழுவதும் புளிப்பு நாற்றம் வீசும். புளித்த காடியைப் போலவும் நாற்றம் அடிக்கும். புளிப்பான தண்ணீர் வாந்தியுடன் மண்டை இடி, வலி ஆரம்பிப்பதற்கு முன் கண்பார்வை மங்கும். புளித்த ஏப்பத்துடனும் அதிகச் சோர்வுடனும் உணவுப் பையின் மேல் பகுதியில் புற்று. புளித்த அல்லது கசப்பான வாந்தியுடன் கருத்தரித்த பெண்களுக்குத் தோன்றும் மயற்கை எனப்படும் காலை வேளைக் குமட்டல்.

**வேதனை : வேக்காடு** :—தொண்டையில் ஒரு வித விநோதமான வேதனை; சில சமயங்களில் இருமலுடன் சேர்ந்திருக்கும். வாயிலும் நாக்கிலும் வெந்து போய்த் தோல் உறிந்து விட்ட உணர்ச்சி. கரப்பான் படைகளில் இரவு நேரங்களில் அறிப்புடன் வேதனை. கல்லீரலில் புண்ணுள்ள உணர்ச்சி. வயிற்றில் அதிக வேதனை ஏற்படுவதால் பல வகைப்பட்ட வாந்திகள் உண்டாகும். எல்லா வகையான வாந்திகளுக்கும் ஐரிஸ் ஓர் சஞ்சீவி என்பது கிச்சன் (Kitchen) என்பவரின் அனுபவம். ஆனால் வாந்தி மாத மொரு முறை அல்லது

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இவ்விதம் முறை வைத்துத் தோன்றும் குணம் உள்ளதாக இருக்கும்போது தான் ஐரிஸ் விசேஷமாக உபயோகப்படுகிறது. ஐரிஸ் சருமத்தைப் பல விதங்களில் தாக்கி வேதனையை உண்டாக்குகிறது. 1. கொப்புளங்கள் உள்ள சருமக் கோளாறு, குறிப்பாக மண்டைத் தோலிலும் முகத்திலும். 2. மண்டைக் கரப்பான்; தலை முழுவதும் ஓரே பொறுக்கினால் மூடப்பட்டு பொறுக்கின் அடியிலிருந்து மஞ்சளான நீர்க் கசிவு தோன்றும். இக் கசிவினால் தலை மயிர் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு சடை போல் மாறும். 3. முகத்தில் மூக்கு, உதடுகள், கன்னங்கள் ஆகிய இடங்களில் கொப்பளங்கள் உள்ள சருமக் கோளாறுகளும் அவைகளிலிருந்து நாற்ற முள்ள அறிப்பை உண்டாக்கும் போக்கு வெளியாவதும்.

**திடீர்க் குணம்:**—எல்லாக் குறிகளும் திடீரென்று தோன்றும். இடது தொடை நரம்பில் திடீரென்று கடுமையான வலி தோன்றி நடக்க முடியாமல் காலை முடக்கிவிடும். அசைவினால் வலி கூடுதலாகும்.

**கயிறு போல் ஆகும் குணம்:**—கயிறு போன்ற உமிழ் நீர் ஏராளமாய்ச் சுரக்கும். கயிறு போன்ற உமிழ் நீர் இடை விடாமல் வழிந்து கொண்டு வாயிலிருந்து தரை வரை கயிறு கட்டித் தொங்க விட்டிருப்பது போலக் காணப்படும் (நாட்பட்ட சீரணக் கோளாறுகள்). கயிறு போன்ற, குழகுழப்பான சளிப் பொருள் வாந்தியாகுதல்.

**வலது பக்கமே விசேஷமாகத் தாக்கப்படுதல்:**—ஐரிஸ் வியாதிகள் அனேகமாக வலது பக்கத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றன. வலது நெற்றிப் பொட்டு; வலது மூத்திரக் காய், அவ்விடத்தில் வலி இருக்கும்.



தொடை நரம்பு வாதம். இடது பக்கத் தொடை நரம்பு வாதம், அசைவினால் அதிகரிக்கும். இடது பக்க இடுப் பெலும்பு மூட்டில் முறுக்கும் உணர்ச்சியுடன் கூடிய தொடை நரம்பு வாதம்.

**குழ குழப்புக் குணம்:**—மூக்கு எண்ணெய் தடவியது போல் காணப்படும்; நாக்கில் குழ குழப்பு; குழ குழப்பான மலம். வாயில் குழ குழ வென்று இருப்பது போல் தோன்றுதல். உமிழ் நீரும் அவ்விதமே இருக்கும்.

**நிலை யற்ற தன்மை:**—வலிகள் ஒரு இடத்தில் நிலைத்து நிற்காமல் வலமிருந்து இடப்பக்கம் பாயும்.

**முறை வைத்துத் தோன்றும் குணம்:**—கண் வேக்காடு, மண்டை இடி (வலது பக்கம்) ஆகியவைகளுடன் அடிக்கடி பார்வைக் கோளாறுகள், பார்வை மறைதல், பார்க்கும் பொருள்களின் ஒரு பாதி மட்டும் தெரிதல் முதலிய கோளாறுகள் உண்டாகும். வாரா வாரம். இரவு 2 மணி முதல் 3 மணி வரை. நள்ளிரவுக்குப் பிறகு. தலை வலி, வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு ஆகியவை சிற்சில பருவ நிலைகளில் தவறாமல் தோன்றுதல். மாதமொரு முறை, ஆறு வாரங்களுக்கு ஒரு முறை அல்லது சில மாதங்களுக் கொரு முறையாக முறை வைத்துத் தோன்றும் வாந்தி, இரண்டு அல்லது மூன்று நாட்கள் விடாமல் இருக்கும்.

## மற்ற குறிகள்

மண்டை இடி தோன்றுவதற்கு முன் பார்வை மங்கும்.—**கண்ட மாலை.** இடுப் பெலும்பு மூட்டு முறுக்கப் பட்டது போல் தோன்றுதல். தசைகளில் கவ்வும் வலிகள், குமட்டல், அரிசிக் கஞ்சி போன்ற மலம் ஆகிய

குறிகளுள்ள காலரா. மூத்திரத்தில் தித்திப்புப் பொருளுடன் (மதுமேகம்) அதன் அடர்த்தி அதிகமாய் இருத்தல். வலது தோள் பட்டையில் வலியுடன் திடீரென்று தோன்றும் வாத ரோகம்; அசைவினாலும் குறிப்பாகக் கையைத் தூக்கினாலும் வலி கூடுதலாகும். சிரணக் கோளாறுகளுடன் கூடிய கரப்பான் படை. நகச் சுற்றியை ஓங்க விடாமல் அப்படியே அதைக் கரைத்து விடும் சக்தி ஐரிஸுக்கு உண்டு எனப் பெயர் பெற்றது.

ஒப்பிடுதல் :—மண்டை யிடியின் ஆரம்பத்தில் கண் பார்வை மங்கலாகும் குறி காலி பைக்ரமிகத்தில் காணப் படுகிறது. வலி தோன்றிய வுடன் பார்வை தெளிந்து விடும். ஐரிஸ் வர்ஸிகலரில் வலி உள்ள போது பார்வை மங்கி இருக்கும். குழ குழப்பான மலம் தூஜாவிலும் காணப்படுகிறது.

---

# காலி பைக்ரமிகம்

## (KALI BICHROMICUM)

முன்னுரை —சளியை உற்பத்தி செய்யும் சளிச்சவ்வு கள் உடலின் எந்தப்பகுதியில் இருந்தாலும் அவைகளின் வியாதிகளிலே இவ்வௌஷதம் தேவைப் படுகிறது. அதிலும் விசேஷமாக வயிறு, மூக்கு, காற்றுக்குழாய் ஆகிய உறுப்புகளில் உண்டாகும் வியாதிகளில் இவ்வௌஷதம் நிச்சயமாய்த் தேவைப்படும்.

இதன் மிக விசேஷமான குறிகள் பின்வருமாறு :— 1. கயிறு போல் இழுபடும், ஒட்டும் குணமுள்ள சளி அல்லது கோழை; 2. சிறு சிறு துணுக்குகளாகச் சளி மூக்கை அடைத்



துக் கொள்வதும் வெளியேறுவதும்: 3. சிறிய இடங்களில் வலி 4. அச்சில் வார்த்ததுபோல் ஒழுங்கான விளிம்புகளுள்ள, ஆழமான குழிப்புண்கள்.

மற்ற விசேஷக் குறிகள் :—1. வலிகள் அடிக்கடி இடம் மாறுதல்: 2. வியாதிகள் மாறி மாறித் தோன்றுதல்: 3. நாக்கின் அடியிலே அதிக வலி: 4. வெல்லப்பாகு போன்ற சளி முதலிய கழிவுகள்; 5. மயிர் சிக்கி இருக்கும் உணர்ச்சி 6. நாக்கு காய்ந்து சிவந்து வழு வழுப்பாகி வெடித்தும் இருத்தல். 8, எல்லாவிதக் கழிவுகளும் போக்கும் மஞ்சளாய் இருக்கும். மஞ்சள் கறையை ஏற்படுத்தும்.

## பொதுக் குறிகள்

தகுதி :—அதிகச் சதை பிடித்த உடலும் சாதாரண மயிர் வளர்ச்சியும் மந்த குணமும் உள்ளவர்கள். அதிகச் சதைப் பிடிப்பும் உப்பிய கன்னங்களும், இருக்கிறதோ இல்லையோ என்று நினைக்கு மளவு குட்டையான கழுத்தும் மாந்தம் என்று அழைக்கப்படும் தொண்டை இழுப்பு சம்பந்தப்பட்ட நோய்களும் உள்ள குழந்தைகள், சிறுவர்கள். சுரப்பிகளில் வீக்கமும் ஸிபிலிஸ் என்னும் மேகக் கிரந்தி சம்பந்த முள்ள நோய்களும் உள்ள சிறுவர்கள்.

மனம் :—உற்சாகம் குறைதல், அலட்சியமாய் இருத்தல். வேலை செய்ய வெறுப்பு. ஞாபக சக்தி குறைதல்.

உடல் :—உடல் வெளுத்து மஞ்சள் பூசியது போல் ஆகும். வாசனை அறியும் சக்தி மறைந்து இருக்கும். நாக்கின்மேல் திட்டு திட்டாகத் தடிப்புகள். நாக்கு காய்ந்து சிவந்து வழு வழுப்பாகி வெடிப்புகளுடன் இருக்கும் புளிப்புச் சுவையுள்ள பானங்களைக் குடிக்க விருப்பம் (ஆண்டிமனியம் க்ருடம்). மாமிசத்தில் வெறுப்பு

(ஆர்னிகா மொண்டானு). நாக்கின் அடிப் பகுதியிலும் வாயின் மேற்கூரையின் பின் பகுதியிலும் மயிர் சிக்கி யிருக்கும் உணர்ச்சி. கசப்பான. அல்லது தித்திப்பான அல்லது புளிப்பான ருசி. புணர்ச்சியில் ஆசை இல்லாமை, விசேஷமாக உடல் பருத்துள்ளவர்களுக்கு. நடக்கும்போது எலும்பு மூட்டுகளில் கறக் என்னும் ஒலி. கீழே படுக்கவேண்டும் என்று விரும்பு மளவுக்கு அதிகப் பலவீனம், அதிகச் சோர்வு. நடக்கும் போது குதிகால்களில் வலி. நாக்கின் அடிப்பாகத்தில் வலி, மூக்கினுல் பேசுதல்.

**உபாதி கூடுதல்** :—கோடைக்காலம். திறந்த இடங்க ளில் நின்ருல் தவருமல் சளிப் பிடித்தல், இவ் விரு குறி களும் ஒன்றுக் கொன்று நேர் விரோதமாய்க் காணப் பட்டாலும் இவ் வெளஷதத்தின் உண்மையான குறிகளே.

**உபாதி கூடுதல்** :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே.) சரும வியாதிகள் முதலிய கோளாறுகள் கோடைக் காலத்தில் கூடுதலாகும். பெரும்பாலான குறி கள் வேலை இல்லாமல் சும்மா இருக்கும்போது கூடுதல், விடி யற்காலையில் தோன்றுதல் அல்லது கூடுதலாக இருத்தல், ஆஸ்துமா அல்லது குழந்தைகளின் தொண்டை இழுப்பு நோய் விடியற் காலை 2 அல்லது 3 மணிக்குத் தோன்றும். விடியற் காலையில் இருமல் உண்டாகும். காலையில் வயிற் றுப் போக்கு, அவசரமாக மலம் கழிக்கத் தூண்டுதல். தொடை நரம்பு வாதம் கோடைக்காலத்தில் கூடுதலாகும். வயிற்றுவலி, உப்பிசம், வேதனை ஆகியவை சாப்பிட்ட உடனே கூடுதலாகும் (சாப்பிட்டு ஒரு மணி கழிந்து கூடுத லானுல் நக்ஸ் மாஸ்சாடா, நக்ஸ் வாமிகா).

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே:—



தோலைப் பற்றிய நோய்கள் குளிர். மழைக் காலங் களில் குறைதல் (அலுமினு, பெட்ரோலியம் ஆகியவை களுக்கு எதிரிடை). தோல் வியாதிகளில் உண்டாகும் அரிப்பு குளிர்காலத்தில் குறைதல், பெரும்பாலான குறி கள் அசைவினுல் குறையும். காச வியாதியில் படுக்கையி லிருந்து எழுந்து உட்கார நேருதல், இல்லாவிட்டால் மூச்சு விட முடியாது, கயிறுபோன்ற கோழை வெளியானவுடன் உபாதி குறைதல். பல குறிகள் படுக்கைச் சூட்டினுல் குறைதல்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**கயிறு போல் இழுபடும் ஒட்டும் குணம்** :—சளிச் சவ்வு களைப் பற்றிய எல்லா வியாதிகளிலும் கழிவுப் பொருள் கள் பிசுக் கென்று ஒட்டிக்கொள்ளும், நீண்ட கயிறுக ளாக இழுபடும். இவ்விதக் கழிவுகள் மூக்கு, தொண்டை சுவாசக் குழாய், வயிறு, யோனி, கருப்பை ஆகியவை களிலிருந்து வெளியாகலாம். உமிழ் நீரும் சளியும் இவ்விதமே இருக்குமென்று சொல்லத் தேவை இல்லை. ஸ்திரீகளின் வெள்ளைப் போக்கு மஞ்சள் நிறமும் கயிறு போல் நீளும் குணமும் உள்ளதாய் இருக்கும். முலைப் பால் வெளியாகும் போதே கயிறு போல் இழுபடும், ஒட்டும். மேக வெட்டையில் முற்றிய நிலைமையில் வெளிப்படும் கழிவுப்பொருள் கம்பி போல் இழுபடும், ஒட்டும்.

**வெல்லப்பாகு போன்ற கழிவுகள்** :—வயிற்றுக் கடுப் பில் இரத்தம் கலந்த வெல்லப் பாகை ஒத்த மலம் (காலையில் கூடுதலாக இருக்கும்). முதலில் குடலைத் துரு வியதுபோல இருக்கும் மலம். கந்தாரிஸ் கொடுத்த பிறகு அனேகமாக இவ்விதம் மாறுவது உண்டு. அப்பொழுது

காலி பைக்ரமிகம் தேவைப்படும். மேக வெட்டையின் முற்றிய நிலையில் வெளிப்படும் கழிவும் வெல்லப் பாகு போல இருக்கலாம்.

**சிறிய இடங்களில் வலி:**—விரல் நுனியைக் கொண்டு மூடிவிடக் கூடிய அளவுள்ள சிறு இடங்களில் வலி. முதுகெலும்பின் கீழ் நுனியில் வலி.

**புண் உண்டாகுதல்: ஆழமான குழிப் புண்கள் :**—நோய் கொண்ட ஒவ்வொரு இடத்திலும் தவருமல் புண் உண்டாவது இவ் வௌஷதத்தின் விசேஷக் குறிகளில் ஒன்று. அனேகமாக சளிச்சவ்வுகளே இவ்விதம் புண்ணுகும். நாக்கில் வலியுடன் புண். உள் நாக்கிலும் வலியுடன் புண். உள் நாக்கிலும் தொண்டைச் சுரப்பிகளிலும் புண். மூக்கினுட் புறத்தில் நடுவே அமைந்துள்ள குருத் தெலும்பில் புண். வாயின் மேற்கூரையில் புண் கண்டு சதை அழுகி விழுதல் (ஸிபிலிஸ் நோயில்). முற்றிய குடல் புண் (மெர்கூரியஸ்) தடிமனை பொறுக்குகள். மூக்கினுட் புறத்தில் நடுவே அமைந்துள்ள குருத் தெலும்பில் பொறுக்குகள். இவை யாவும் உண்மையில் புண்களேயாகும். பொறுக்குகளால் மூடப்பட்டுள்ளன. ஆறும் அறி குறியே இருப்பதில்லை.

காலி பைக்ரமிகம் தேவைப்படும் புண்களில் காணப்படும் மிக முக்கியமான குறி ஒன்று இருக்கிறது. புண் சதையைத் தின்று கொண்டே போய் குழிப்புண் ஏற்பட்டு ஒவ்வொரு நாளும் குழி ஆழமாய்க் கொண்டே இருக்கும். தொண்டையில் அரிக்கும் ஆழமான குழிப் புண்கள். இவ்விதப் புண்கள் அனேகமாக ஸிபிலிஸ் வியாதியினுல் தான் தோன்றும். எல்லாவற்றையும் விட மிக முக்கிய குறி என்ன வென்றுல்" தோல், சளிச்சவ்வு,



எலும்புகளிலும்கூட அச்சில் வார்த்தது போல் ஒழுங்கான வரம்புகள் உள்ள குழிப்புண்கள் காணப்படுவதே. மூக்கின் உட்புறத்தில் நடுவிலே உள்ள குருத் தெலும்பில் இது போன்ற குழிப்புண், வயிற்றிலும் இது போன்ற குழிப்புண். ஆழமான, கடினமான பறங்கிப்புண். வாத ரோகத்தில் உள்ளூர வலி. சுவாச கோசங்களைப்பற்றிய க்ஷயரோகத்திலும் அவ்வவயவங்களிலிருந்து வரும் இரத்தப் பெருக்குக்கும் சுவாச கோசங்களில் குழிகள் ஏற்படும் போதும் இது தேவைப்படு மென்று டாக்டர் கெண்ட் எழுதியுள்ளார்.

**இடம் மாறும் குணம் :**—வாத ரோகத்தில் நோய் மூட்டுக்கு மூட்டு தாவிக் கொண்டே இருக்கும். வலி திடீரென்று ஒரு இடத்திலிருந்து மற்ருேர் இடத்துக்குத் தாவும் அல்லது ஒவ்வொரு இடமாக மாறிக் கொண்டே இருக்கும். சில நாட்களுக்கொரு முறையாகத் தோன்றி உடலின் பல பாகங்களுக்கும் செல்லும் வலிகள்.

**மாறி வரும் குறிகள் :**—வாதரோக வலிகள் மறைந்தவுடன் சீரணக் கோளாறுகள் அல்லது வயிற்றுக் கடுப்பு தோன்றுதல். இதே போல சீரணக் கோளாருே அல்லது வயிற்றுக் கடுப்போ மறைந்தவுடன் வாத ரோக வலி தோன்றும். இவ்விதம் நோய்கள் மாறி மாறி வரும் சமயங்களில் ஒன்று மழைக்காலத்திலும் மற்றென்று குளிர் காலத்திலும் உண்டாகும். சிறு மூட்டுகளில் சீரணக் கோளாறுகளுடன் மாறி வரும். உடலில் ஒரு சமயம் கொதிப்பது போன்ற உணர்ச்சியும் மறு சமயம் வியர்வை பொழிவதும் மாறி வரும்.

**சிறு துணுக்குகள் :**—தக்கை உணர்ச்சி. சளிச் சவ்வுகளில் முக்கியமாக மூக்கினுள்ளே பொறுக்குகள் உற்

பத்தியாகும். மூக்கினுள்ளே பின் பகுதியில் கடினமான இழுபடும் குண மூள்ள சிறு சிறு துணுக்களாகச் சளி. துணுக்குகளைச் சிந்தி எறியச் சிரமம். பொறுக்கு மூடியுள்ள இரணங்கள். துணுக்குகள் மூக்கின் வழியாகவோ அல்லது தொண்டைக்குக் கொண்டு வரப்பட்டு காறி உமிழ்வதின் மூலமோ வெளியேறும். இக்குறிகளுடன் மூக்கிலிருந்து அழுகிய நாற்றம் வீசும்.

**தூங்கி வழியும் இரணங்கள் :—**இரணங்களோ வேக்காடோ சுறுசுறுப்பாய் இருக்கமாட்டா. மெதுவாக விருத்தியாகும். அதிக உபத்திரவத்தை உண்டாக்காது. ஆனால் அவைகளின் வேலை மட்டும் அபாரமாய்த் தான் இருக்கும். வெள்ளை விழியிலே இரணங்கள், சிவசிவப்போ, கண் கூச்சமோ இருக்காது. உள்நாக்கு நீர்க் கொண்டு அதிகமாக வீங்கி இருக்கும்; ஆனால் சிவசிவப்பே இருக்காது.

**திடீரென்று தோன்றுதல் :—**வலிகள் திடீரென்று தோன்றும். திடீரென்று தோன்றுவதுடன் மறைவதும் அவ்விதமே.

**எதிர்க் கோணங்களில் ஏற்படும் வலிகள் :—**வலது பக்க முழங்காலிலும் இடுப்பிலும் வலி ஏற்படும் போது இடதுபக்க மார்பிலும் தோள்பட்டையிலும் வலி இருக்கும். வலது பக்க மார்பில் வலியுடன் இடது முழங்கையில் வலி. இடது கையின் கீழ்ப்பகுதியில் வலியுள்ள போது பின் தலையின் வலது பக்கத்திலும் வலி. ஒரு கை மணிக்கட்டில் வலி இருக்கும்போது மறு கை அக்குளில் வலி, வலது கால் பெருவிரலிலும் இடது கைச் சிறு விரலிலும் சேர்ந்தாற் போல் வலித்தல். இவ்விதம் வலிகள் எதிர்க் கோணங்களில் ஒரே சமயத்தில் தோன்றும்.



**அடிப்புறத்தில் வலிகள் :—**ஆண் குறியின் அடிப்பகுதியில் இறுகப் பிடிப்பது போன்ற வலிகள் (காலையில் தூங்கி யெழுந்தவுடன்). வெளியே நீட்டும் போது (டிப்தீரியா என்னும் தொண்டையில் கெட்ட சதை வளரும் வியாதியில்) நாக்கின் அடியில் கடுமையான வலி. மூக்கின் அடிப்பாகத்தில் வலி அல்லது கனத்த உணர்ச்சி. மூக்கின் இடது துவாரத்தின் மேற்புறத்தில் மயிர் இருப்பது போல் அருவருப்பு. மூத்திரம் கழிந்தவுடன் மூத்திரக்குழாயின் அடிப்பகுதியில் எரிச்சலும் ஒரு சொட்டு மூத்திரம் அடியில் தங்கி இருப்பது போலவும் அதைக் கழிக்க முடியாமலுமான உணர்ச்சி.

**சிறு மூட்டுகளே அதிகம் தாக்கப்படுதல் :—**மேக வெட்டை காரணமாய்த் தோன்றும் வாதரோகம், சிறிய மூட்டுகள் தாக்கப்படும், வலி இடம் மாறிக் கொண்டு இருத்தல், கதகதப்பான அறையில் வலி குறைதல்.

**விரல் எலும்பு மூட்டுகளே விசேஷமாகத் தாக்கப்படும் கீல் வாதம்.**

**வெடிப்புகளும் வெடிப்பு ஓசைகளும் :—**தொண்டையில் வெடிப்புகள், சிவந்தும் காய்ந்தும் வழுவழுப்பாகவும் வெடித்தும் உள்ள நாக்கு. சிறிய அசைவினாலும் மணிக்கட்டுகளிலும் குதிகால்களிலும் வெடிப்பு ஓசை, எல்லா எலும்பு மூட்டுகளிலும் இவ்விதம் வெடிப்பு ஓசை ஏற்படும்.

**நீர்ச்சுரப்பு :—**கண் இமைகள் நீர்ச் சுரந்து வீங்கும். உள்நாக்கில் நீர்ச் சுரப்புக் கண்டு பைபோல் தொங்குதல்.

**மஞ்சள் நிறமுள்ள கழிவுகள், கறைகள்** :—மஞ்சள் நிறமுள்ள தண்ணீர் போன்ற மலம் (இதை விசேஷக் குறி என்று சொல்ல முடியாது) நாக்கின் அடிப்பகுதியில் மஞ்சள் நிறமான, கனமான அழுக்கு. நேட்ரம் பாஸ் என்னும் ஔஷதத்துக்கும் நாக்கின் அடியில் மஞ்சள் நிறம் இருக்குமாயினும் அது அடைபோல் கனமாய் இருந்தால் காலி பைக்ரமிகம் தான் உபயோகிக்கப்படவேண்டும் என்பதில் அணு அளவும் ஐயம் இல்லை. கெட்டியான, மஞ்சள் நிறங்கொண்ட கழிவுகள், மஞ்சள் நிறமும் கயிறுபோல நீளும் தன்மையுமுள்ள ஸ்திரீகளின் வெள்ளை ஒழுக்கு, நல்ல மஞ்சள் நிறமுள்ள நீர் (கசப்புச் சுவை உள்ளது) வாயாலெடுக்கப்படும். முகம் மஞ்சளாய் இருக்கும். மஞ்சள் நிறமும் ஒட்டும் தன்மையும் கயிறுபோல் இழுபடும் குணமுமுள்ள கோழை ஏராளமாகவும் வருதல். தலையில் கனமான பொறுக்குகள். அவைகளிலிருந்து கெட்டியான மஞ்சள் நிறமுள்ள நீர் கசிதல். காதுகளிலிருந்து மஞ்சள் நிறமும் ஒட்டும் தன்மையுமுள்ள சீழ்.

**விட்டு விட்டுத் தோன்றுதல்** :—ஒரு திட்டமான ஒழுங்குக்கு உட்பட்டு விட்டுவிட்டு வலிகள் தோன்றி மறைதல், கோடைக் காலத்திலே தோன்றும் சரும வியாதிகள், ஒவ்வொரு நாளும் காலையில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் தலைவலி (நக்ஸ் வாமிகா, ஸல்பர்) ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நரம்பு சம்பந்தமான வலிகள் (சின்னினம் ஸல்ப்யூரிகம்) குளிர் காலத்திலும் கோடைக் காலமாயிருந்தாலும் மழை பெய்து குளிர் உண்டாகும் போதும் தவறாமல் தோன்றும் காசம் (மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாக). விட்டு விட்டுவரும் மலச்சிக்கல்.



**உறவு** :—ஒற்றுமையுள்ள ஔஷதங்கள் :—வயிற்றுக் கடுப்பில் **கந்தாரிஸ்** கொடுத்தபின், க்ஷய சம்மந்த முள்ள கண் நோய்களில் **அபிஸ்** கொடுத்தபின்; குழந்தைகளின் தொண்டை இழுப்பு சம்பந்தமுள்ள வியாதிகளில் **ஐயோடியத்துக்குப்** பிறகு இவ்வௌஷதம் கொடுக்கப் படலாம். சுவாசகோச வியாதிகளிலும் சரும வியாதிகளிலும் **காலி பைக்ரமிகத்துக்குப்** பிறகு **ஆண்ட்டிமனியம் டார்ட்** நன்றாக வேலை செய்யும்,

**ஒப்பிடுதல்** :—மூக்கை அடைக்கும் சளித்துணுக்குகள் (**ஸேபியா, டூக்ரியம்**). மேகவெட்டை சம்பந்தமுள்ள வாத ரோகமும் வாத ரோகத்தில் உபாதி மூட்டுக்கு மூட்டு தாவுவதும் **பல்ஸடில்லாவிலும்** காணப்படும். பிசுக்கென்று ஒட்டும் இழுபடும் கழிவுகள் **ஹைட்ராஸ்டிஸ், ஐரிஸ் வர்ஸிகலர்** ஆகிய இரு ஔஷதங்களிலும் உண்டு. **அனகார்டியம், லாச்சஸிஸ்** ஆகியவைகளில் ஆசனவாயில் தக்கை அடைத்திருக்கும். உணர்ச்சி இருக்கும். **ஸேபியாவில்** ஆசன வாயில் கனமான உணர்ச்சிதான் இருக்கும்.

## மற்ற குறிகள்

தொண்டையிலிருந்து காதுகளுக்குப் பாயும் வலிகள், சீரண வேலை தடைப்பட்டு விட்டது போல் வயிற்றில் உணவு கல் போல் கனத்தல். எல்லா எலும்புகளிலும் அடிபட்டது போல் வலி, இருதயத் தளர்ச்சி. ஆசன வாயில் தக்கை அடைத்திருப்பது போன்ற உணர்ச்சி—தொண்டை இழுப்பு நோயில் கம்மிய இருமலும் பிசுக்கென்ற கோழை வெளியாவதும், தொண்டை, தொண்டைச் சுரப்பிகள், வாய் மேற் கூறையின் பின் பகுதி ஆகிய இடங்களில் பவழம் போன்ற சிவந்த நிறமும் நார் போல் நீளும் தன்மையும் கொண்ட போலிச் சதை படருதல். சுரங்களில் சும்மா உட்கார்ந்திருக்கும் போது ஏராளமான வியர்வை,

(பிரயோனியா, ஸேபியா, ஸைலீஷியா, ஸல்பர் ஆகிய ஔஷதங்களில் சிறிது அசைந்தாலும் ஏராளமாய் வியர்வை ஏற்படும்.) தொண்டை காய்ந்தும் எரிச்சலுடனும் இருக்கும். பெரியம்மை போன்ற சீழ்க் கொப்பளங்கள், விட்டு விட்டு வரும் மூச்சுத் திணறலை உண்டாக்கும் இருமல். (இருபது வருஷங்களாய் நீடித்திருந்த இவ்வகையான ஓர் இருமலை காலி பைக்ரமிகம், நேட்ரம் மூர், தூஜா ஆகிய ஔஷதங்களைக் கொடுத்து வர ஆறு வாரங்களில் முற்றிலும் குணம் கண்டது.)

---

## காலி கார்பானிகம்

## (KALI CARBONICUM)

**முன்னுரை :—** இவ்வௌஷதம் அதற்குரிய உடல்வாகு உள்ளவர்களின் உடலிலே ஆழ்ந்தும் பல நாட்களுக்குத் தங்கியும் வேலை செய்கிறது. இது ஸோரா விஷத்தை நீக்க வல்லமை உள்ளது. ஸோரா விஷத்தின் மிகக் கடுமையான குறியாகிய க்ஷயத்தை எதிர்த்துப் போராடும் சக்தியும் கொண்டது. "சுவாச கோசங்களில் புண் ஏற்பட்டு விட்ட சமயங்களில் இவ்வௌஷதத்தை உபயோகியாமல் குணமான கேசுகளே கிடையாது" என்று ஹானிமன் எழுதியிருக்கிறார்.

இதன் விசேஷக் குறிகளில் முக்கியமானவைகளின் விவரம் : 1. குத்தும் வலிகள். 2. விடியற்காலையில் உபாதிகள் கூடுதலாகுதல். 3. புருவங்களுக்கும் கண்களின் மேல் இமைகளுக்கும் இடையே பைபோல் உள்ள வீக்கங்கள். 4. முதுகு வலி, வியர்வை, பலவீனம், இம் மூன்று குறிகளும் ஒன்று சேர்ந்திருத்தல்.



### பொதுவான குறிகள்

**தகுதி :—** தளர்ந்த தசைகளும் பருமனான உடலும் உள்ள கிழவர்களுக்கு ஏற்றது (அம்மோனியம் கார்ப், பிரசைபைடிஸ்). நீர்ச் சுரப்பு வீக்கமும் பாரிச வாதக் கோளாறுகளும் உள்ள கிழவர்கள். கிழட்டுப் பருவம், அதிகச் சதை, தளர்ந்து தொங்கும் தசைகள், நீர்ச் சுரப்பு வீக்கம். பாரிச வாத நிலைமை என்று சுருக்கமாகச் சொல்லலாம். பிள்ளைப் பெற்ற பிறகும், உயிர்த் தண்ணீர் உடலை விட்டு வெளியேறி விட்ட பிறகும் தோன்றும் வியாதிகளிலும் உபயோகமாகும். அதுவும் வியாதியஸ்தர் இரத்த சோகை உள்ளவராய் இருந்தால் விசேஷமாகப் பயன்படும். "பெண்கள் பருவமடையும் காலத்தில் மிகவும் நன்மை செய்யக் கூடியது" என்று லிலியந்தால் கூறுகிறார். க்ஷயம் தோன்றக் கூடிய உடல் வாகு.

**மனம் :—** முன் கோபம், மிகவும் அதிகமாக இருக்கும். எல்லா விஷயங்களிலும் பயம். அபாரமான கற்பனைச் சக்தி. தனியாய் இருக்கப் பயம். தனியாய் இருப்பதை அதிகமாய் வெறுப்பார்.

**உடல் :—** தலை மயிர் மிகவும் காய்ந்திருத்தல்; மயிர் மிக வேகமாகக் கொட்டுதல்; தலைப் பொடுகும் அதிகமாய் இருக்கும். குழி விழுந்த கண்களுடன் முகம் மஞ்சள் நிறமாய் அல்லது வெளுத்து வியாதித் தோற்றம் அளிக்கும். முகம் உப்பி இருக்கலாம். வாடி வதங்கிக் களைத்த தோற்றம் அளிக்கும் முகம். பிணக் களை. உதடுகள் வெடித்துத் தோல் உறிந்து காணப்படும். கண்களின் மேல் இமைகளுக்கு மேற் புறத்தில் பை போன்ற வீக்கம். ஒரு கன்னம் சூடாகவும் மறு கன்னம் குளிர்ந்தும் இருக்கும். மிக எளிதிலே மூச்சு அடைத்தல். சிரமப்

பட்டு மூச்சு விடுதல். முதுகு வலி, வியர்வை, பலவீனம். உணவு உட் கொள்ளும் போது தூக்கக் கலக்கம். பொதுவாக உணவில் வெறுப்பு. சர்க்கரையிலும் புளிப்புப் பொருள்களிலும் அதிக ஆவல். பழுப்பு ரொட்டியில் வெறுப்பு. புணர்ச்சியில் அருவருப்பு. கைகளில் பலக் குறைவு, குறிப்பாகக் காலையில் படுத்திருக்கும் போது. மாடிப் படி ஏறும்போதோ அல்லது இறங்கும் போதோ முழங் கால்களில் கஷ்டம் தோன்றும். இரத்த சோகை, பலவீனம், கீழே படுத்துக் கொள்ள விரும்புதல்; பகல் வேளையிலும் மாலை நேரங்களிலும் தூக்கக் கலக்கம்.

**உபாதி கூடுதல்:**—பருவ நிலைமையில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலும் வியாதியஸ்தருக்கு வியாதியை ஏற்படுத்தும். குளிர் தாங்காது. எப்பொழுதும் உடலில் குளிர் உணர்ச்சியுள்ளவர்கள். வெளியே போய் வீடு திரும்பியவுடன் ஒவ்வொரு தடவையும் வியாதியஸ்தருக்குக் குளிர் உணர்ச்சி உண்டாகும். சிறிதளவு குளிர்ந்த காற்று மேலே பட்டாலும் குளிர் உண்டாகும்.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—**விடியற்காலையில் உபாதிகள் அதிகமாகும்.** விடியற் காலை 2, 3, 4 அல்லது 5 மணிக்குக் குறிகள் அதிகமாகும் அல்லது தோன்றும். விடியற்காலை 2 மணியிலிருந்து 4 மணிவரை உபாதிகள் அதிகமாவதே விசேஷக் குறியாகும். 2 மணியிலிருந்து 3 மணிவரையும் இருக்கலாம். சரியாக 3 மணிக்கு அதிகமாவது மிக விசேஷமானது. விடியற்காலையில் மிகச் சீக்கிரமாக விழித்துக் கொள்ளுதல், குறிப்பாக 3 அல்லது 4 மணிக்கு.

கணுக்காலில் வீக்கத்துடன் வலது காலில் குழிப்புண் இருந்த ஒரு கேசில் வியாதியஸ்தர் தான் **விடியற்காலை 3**



**மணிக்கு விழித்துக் கொள்வதாகப் புகார் செய்தார். காலி கார்ப்** கொடுக்க வியாதி குணமாகியது என்று **க்ளார்க்** குறிப்பிடுகிறார். மார்பில் நீர்ச்சுரப்பும் பொதுவாக உடல் முழுவதுமே நீர்ச் சுரப்பும் இருந்த ஒரு கேசில் புகழ்பெற்ற ஹோமியோபதி வைத்தியர் ஒருவரால் குணம் செய்ய முடியாமல் போய்விட்டது. பிறகு குறிகள் விடியற்காலை 3 மணிக்குக் கூடுதலாகின்றன என்ற குறி கண்டு பிடிக்கப் பட்டது. **காலி கார்ப்** 200 வீரியத்தில் அவ் வியாதியைக் குணம் செய்தது என்று **டாக்டர் நாஷ்** சொல்கிறார்.

குத்தும் வலிகள் ஓய்வாய் இருக்கும் போதும் **வியாதியுள்ள பக்கமாகப் படுத்தாலும்** அதிகமாகும். அழுக்குவதினால் பல குறிகள் கூடுதலாகின்றன. **வலி சாப்பிடும்போது மட்டும் இருக்கும்;** பல்லின்மீது சூடான பொருள் பட்டாலும் குளிர்ச்சியான பொருள் பட்டாலும் வலி தோன்றும். பாதங்களில் காய்த்துப் போன முண்டுகளைத் தொட்டால் வலி உண்டாகும். சாப்பிடும்போது முதுகெலும்பில் வலி. சாப்பிடும்போது தூக்கக் கலக்கம். புணர்ச்சி செய்த பிறகு அல்லது தன்னை அறியாமல் இந்திரியம் வெளியான பிறகு உடம்பிலும் குறிப்பாகக் கண்களிலும் பலவீனம் ஏற்படுதல். கருச்சிதைவுக்குப் பிறகும், சின்னம்மை வந்து குணமான பிறகும் கண்களில் பலவீனம். **காலையில் முகம் கழுவும்போது மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல் (அம்மோனியம் கார்ப், ஆர்னிகா மொண்டானு).** நடுப்பகலில் பிடிவாத குணமுள்ள குளிர் உணர்ச்சி. வலப் பக்கமாய்ப் படுத்தால் மார்பில் வலிகள் அதிகமாகுதல்.

தொட்டால் உபாதி கூடுதலாகும் விவரங்களுக்கு **உணர்ச்சி அதிகரித்தல் என்னும் தலைப்பின் கீழே காணவும்.**

**உபாதி குறைதல்:**—பல குறிகள் சூட்டினால் குறைகின்றன.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**உணர்ச்சி அதிகரித்தல்:**—அளவு மீறிய முன் கோபம் ஏற்படும் குணம். பருவ நிலையில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலாலும் உபாதிகள் அதிகமாகுதல். காற்றில் சிறி தளவு குளிர்ச்சி இருந்தால் குளிர் உண்டாகும். உணர்ச் சிகள் மிக அதிகமாக இருப்பதினால் தலையில் குளிர் காற்றுப் படும் போது எரிச்சல் உண்டாகும்; குளிர் காற்று மூக்குத் துவாரங்களின் வழியே உள்ளே செல் லும் போது எரிச்சலைத் தரும். குளிர்ந்த காற்று சூடாய் இருப்பது போல் தோன்றும் உணர்ச்சி குளிருடன் சேர்ந்ததே ஆயினும் அது மிக அதிகமாய் இருப்பதினால் சூடாய் இருப்பது போல் தோன்றுகிறது. சருமமும் குறிப்பாக உள்ளங் கால்களும் நம்ப முடியாத அளவுக்கு அதிக உணர்ச்சியுடன் காணப்படும். உள்ளங் கால்களை மெதுவாகத் தொட்டாலும் மிகப் பலமாகச் சுரண்டும் உணர்ச்சி ஏற்பட்டு அதனால் வியாதியஸ்தர் திடுக்கிடு வார், காலை உதறுவார், உறக்கக் கதறுவார், உடம்பில் நடுக்கமும் உண்டாகலாம். சருமத்தை எவ்வளவு மெது வாகத் தொட்டாலும் வியாதியஸ்தர் திடுக்கிடுவார். பாதங்களில் தொட்டால் திடுக்கிடுதல் இதை விடச் சற்று கூடுதலாகவும் உள்ளங் கால்களில் தொட்டால் மிக அதிகமாகவும் இருக்கும். தொடுவதைக் கொஞ்சங் கூட விரும்பமாட்டார். எல்லாவித ஓசைகளாலும், குறிப்பாக எதிர் பாராமல் ஏற்படும் ஓசைகளால் மிக எளிதாகத் திடுக்கிடுதல். இவ்வாறு திடுக்கிடும் போது வியாதியஸ் தருக்குப் பயம் அல்லது வயிற்றில் ஒரு வித வேதனை தோன் றும்.

**குத்து வலிகள்:**—குத்தும் வலிகள், ஒப்வாய் இருக்கும்



போதும் வியாதி யுள்ள பக்கமாய்ப் படுத்தாலும் அதிகமா கும். குத்துவது போன்ற வலிகள் பிரயோனியாவிலும் ஒரு விசேஷக் குறியாகக் காணப்படுகிறது. ஆயினும் பிரயோனியாவின் குத்து வலிகள் ஊனீர்ச் சவ்வு களில் தான் காணப்படுகின்றன. காலி கார்பானிகத்தின் குத்து வலிகள் வியாதியஸ்தர் அசைந்தாலும் அசையா விட்டாலும் தோன்றும், அல்லது அதிகமாகும். பிரயோ னியாவின் குத்து வலிகள் அழுக்கினால் குறைகின்றன. காலி கார்பானிகத்திலோ அழுக்கினால் வலிகள் அதிகமா கின்றன. மூத்திரக்காய்கள், காதுகள், கண்கள், கல்லீ ரல், மார்பு, முதுகு முதலிய இடங்களில் குத்து வலிகள் காணப்படும். கல்லீரல் பாகத்தில் குத்து வலிகள்; எரிச் சலுடன் கூடிய வலிகளும் இருக்கலாம். விடியற் காலை 3 மணிக்கு முதுகில் குத்து வலி, அதனால் வியாதியஸ்தர் படுக்கையிலிருந்து எழுந்து நடக்க வேண்டி நேருதல். சுவாச கோச க்ஷயத்தில் மார்பில் குத்து வலி. வலி வலது மார்பின் கீழ்ப் பகுதியின் வழியாக முதுகுக்குப் போவது குறிப்பிடத் தக்கது.

சுவாச கோச வேக்காட்டில் மார்பில் குத்து வலி, குறிப்பாக வலது மார்பின் கீழ்ப் பகுதி வழியே முதுகுக்குப் போகும்; இழுப்புடனும் கள கள வென்ற ஓசையுடனும் சுவாசித்தல். மார்பில் சளி ஏராளமாய்ச் சேர்ந்திருந் தாலும் வெளியே வரச் சிரமப்படுதல்; கடுமையான மூச்சுத் திணறல்.

**வியர்வை: பலவீனம்: முதுகு வலி: விட்டுப் போகும் உணர்ச்சி:**—வியர்வை, பலவீனம், முதுகு வலி ஆகிய இம் மூன்று குறிகளும் ஒன்று சேர்ந்திருப்பது இவ் வௌஷ தத்தின் மிக முக்கிய குறிகளில் ஒன்றாகும். பிள்ளைப்

பெற்ற பிறகும் கருச் சிதைவினாலும், உடலின் உயிர்த் தண்ணீர் எவ்விதமோ நஷ்டமாகி விட்டதாலும் தோன்றும் வியாதிகளிலே இக் குறி காணப்படலாம்.

நடக்கும் போது முதுகு வலி; இனி தன்னால் நடக்க முடியாது, கீழே படுத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றுதல்; இவ்வித முதுகு வலி, பிரசவம், கருச் சிதைவு, கருப் பையிலிருந்து இரத்தப் பெருக்கு ஆகிய காரணங்களால் தோன்றிய இரத்த சோகையினால் ஏற்படும். ஓய்வாய் இருக்கும் போது முதுகில் அடிபட்டது போல் அல்லது உடைந்து போய் விட்டது போல் தோன்றும் முதுகு வலி. காலி கார்பானிகத்தின் முதுகு வலியிலுள்ள ஓர் விநோதம் என்னவென்றால் வலி சில சமயங்களில் ஆசனத் தட்டுகளுக்கும் முழங் கால்களுக்கும் கூடப்பரவி விடுவதே. "வலது தொடையில் அதிக பலவீனம்; நடக்கும் போது அது விட்டுப் போய் விடுமோ என்று தோன்றும்." முதுகும் கை கால்களும் விட்டுப் போகும் உணர்ச்சியுடன் இடை விடாத முதுகு வலி. இந்த "விட்டுப் போகும்" உணர்ச்சி மிகவும் விசேஷமான ஒரு குறியாகும்.

மன வேலை செய்தாலும் உடல் வேலை செய்தாலும் அதிகமாக வியர்வை ஏற்படும் குணம். இரவு முழுவதும் வியர்த்த பிறகும் சௌகரியம் ஏற்படுவதில்லை.

இரத்த சோகையுடன் உடல் பலவீனம்.

**நீர்ச் சுரப்புள்ள நிலைமைகள் :—**நீர்ச் சுரப்பு உண்டாகும் தன்மையை அநேகமாக ஒரு விசேஷக் குறியென்றே மதிக்கலாம். உடல் முழுவதும் நீர்ச் சுரப்பு. குறிப்பாக வயதானவர்களுக்கு உண்டாகும் நீர்ச் சுரப்பு. இந் நீர்ச் சுரப்பு கல்லீரல், இருதயம் ஆகிய உறுப்பு



களின் வியாதிகளால் தோன்றி யிருக்கலாம். முகம், கை விரல்கள், கால்கள், அடி வயிறு முதலியவை உப்பி இருக்கும். கண்களின் மேல் இமைகளுக்கும் புருவங்களுக்கும் நடுவிலே பை போன்ற வீக்கம்). (அபிஸ் என்னும் ஔஷதத்தைப் பார்க்கவும்). உள் உறுப்புகளில் நீர்ச் சுரப்புடன் கூடிய வியாதிகள்.

**மிக எளிதிலே மூச்சு அடைத்துப் போகுதல்: சிரமத்துடன் மூச்சு விடுதல் :—**இவை உண்மையிலேயே சிறப்பான விசேஷக் குறிகளாகும். முதலாவதைவிட இரண்டாவது இன்னும் சிறந்தது. மிக எளிதில் மூச்சுஅடைத்துப் போகும். உணவுக் குழாய்த் தசைகள் தம் வேலையைச் சரிவரச் செய்யாததினால் விழுங்குவது சிரமமாகி உணவு மிக மெதுவாக உணவு குழாய்க்குச் செல்லும். இதனால் உணவின் சிறு துணுக்குகள் சுலபமாகக் காற்றுக் குழாயினுள்ளே புகுந்து விடுகின்றன. தொண்டையில் ஏராளமான கோழை சேர்ந்து காறித்துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் போகும். இதனால் மூச்சு அடைத்துப் போவது சகஜம் தானே. தொண்டையில் அடைக்கும் உணர்ச்சி. உணவுக் குழாயிலும் அடைக்கும் உணர்ச்சி.

இவ்வௌஷதத்தின் பல கோளாறுகள் மூச்சுத் திணறலுடன் சேர்ந்து காணப்படும்.

தொண்டையில் உருண்டையான உணர்ச்சி என்பதையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

**பாரிசவாத நிலைமைகள் :—**இவ்வௌஷதத்தைப் பற்றிய கடைசிப் பாராவில் எட்டு விதமான "கஷ்டத்துடன் தோன்றும் குறிகள்" கொடுக்கப் பட்டுள்ளன. அவைகளில் எட்டாவது நிலைமையைத் தவிர மற்ற

எல்லா நிலைமைகளும் பல வகைப்பட்ட உறுப்புகளின் பாரிசவாத நிலைமையினால் தோன்றுகின்றன. இப்பொழுது மிகுதியாய் இருப்பது; கஷ்டத்துடன் மலம் கழிப்பதும், கஷ்டத்துடன் மூத்திரம் கழிப்பதுமே.

மலப்பையின் வேலைக் கோளாறினால் மலம் வெளியாவது தடைப்படும். மலம் கட்டையாக இருக்கும்; கழிக்கும்போது சிரமம் தோன்றும்; வேதனையும் வலியும் உண்டாகும். மலம் வெளிவருவதற்கு ஒன்று அல்லது இரண்டு மணிக்கு முன்பிருந்தே குத்து வலிகள் உண்டாகும். மூத்திரம் வெளியாவதற்கு வெகு நேரம் முன்னதாக மூத்திரப்பையில் கனம். மூத்திரம் மெதுவாக வெளிப்படும்.

**துடிப்புகள்** :—துடிப்புகள். துடிப்பது போன்ற வலிகளும் இருக்கலாம். எல்லா சுத்த இரத்தக் குழாய்களிலும் துடிப்புடன் இரத்தம் மிக அதிகமாகச் சேருதல். கருவுற்றிருக்கும் பெண்களுக்கு சுத்த இரத்தக் குழாய்களில் துடிப்பு கீழே கால்கட்டை விரல்களின் நுனியில் கூட காணப்படும்.

**எரிச்சல்** :—உடலின் பல இடங்களில் எரிச்சல் உள்ள வலிகளும் எரிச்சல் உணர்ச்சியும் காணப்படுகின்றன. பல இடங்களில் சருமத்தின் கீழே எரிச்சல். வயிற்றிலிருந்து எரிச்சலைத் தரும் புளியேப்பம் வரும். கல்லீரலில் எரிச்சலுடன் வலி. மலம் கழித்த பிறகு ஆசனவாயில் எரிச்சல். சாப்பிட்ட பிறகு வயிற்றில் எரிச்சல். "மெதுவாகவும் வலியுடனும் எரிச்சலுடனும் மூத்திரம் வெளியாகும்."

**புளிப்புக் குணம் : வாயு உப்பிசம் : காலி உணர்ச்சி: நிறைந்த உணர்ச்சி** :—இக்குறிகள் யாவும் வயிற்றையும்,



நாட்பட்ட சீரணக் கோளாறுகளையும் அனுசரித்து இருக்கின்றன. ஏப்பம் விட்டவுடன் புளித்த நீர் மேலே வந்து பற்களில் கூச்சத்தை உண்டுபண்ணும். புளித்துப்போன உணவு வாந்தியாகுதல். வாயு உப்பிசத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் "உண்ணும் பொருள்கள் யாவும் வாயுவாக மாறுகின்றன" (அர்ஜண்டம் நைட். ஐயோடியம்). சாப்பிடுவதற்குமுன் வயிற்றில் வலியுடன் காலியாக இருக்கும் உணர்ச்சி. வயிறு முழுவதும் தண்ணீர் நிரம்பி இருக்கும் உணர்ச்சி எப்பொழுதும் இருக்கும். சிறிதளவு உணவு உட்கொண்டாலும் அல்லது தண்ணீர் குடித்தாலும் வயிறு நிறைந்து விட்ட உணர்ச்சி உண்டாகும்.

**சீழ்ப் பிடித்தல்** :—சுவாச கோசங்களில் சீழ்ப் பிடித்தல்; சுவாச கோசங்களில் குழிப் புண்கள், பற்கள் ஈறுகளிலிருந்து விலகி சீழ்க் கசியும். பல்லிடுக்கில் சீழ். சுவாசகோசக்ஷயத்தில் கோழை இரத்தம் தோய்ந்தும் சீழ்ப் போலவும் அல்லது "சிறு சிறு சீழ் உருண்டைகளுடன் கலந்தும்" காணப்படும்.

**வலது பக்கமே அதிகம் தாக்கப்படுதல்** :—**காலி கார்பானிகத்தின்** வியாதிகள் அனேகமாக உடலின் வலப் பக்கத்தையே தாக்குகின்றன. சுவாச கோச க்ஷயத்தில் **வலது சுவாச கோசமும் அதிலும் குறிப்பாக வலது சுவாச கோசத்தின் கீழ்ப் பாகமும் தாக்கப்படும்.** மார்பு முழுவதுமே **குத்தும் வலிகள்** காணப்பட்டாலும் அனேகமாக **வலது மார்பின் கீழ்ப் பகுதியில் தான்** இருக்கும்; சில சமயங்களில் மார்பின் வழியே முதுகுக்கும் பரவும். சுவாசகோச வேக்காட்டில் குத்தும் வலிகள் **வலது மார்பின் கீழ்ப் பகுதி வழியாக** முதுகுக்கு ஓடும். **"வலது காது சூடாகவும் இடது காது**

வெளுத்தும் சில்லென்றும் இருத்தல்." தன் இருதயம் ஒரு நூலால் கட்டித் தொங்க விடப்பட்டிருப்பது போன்ற உணர்ச்சி (லாச்சஸிஸ்). இடது தோள்பட்டை யெலும்பின் அருகிலே வலிகள்.

## மற்ற குறிகள்

உள் நாக்கு தளர்ந்து இருமல். வியர்வை குறைவாய் இருப்பதும் தோன்றாமலேயே இருப்பதும். இரவில் தோன்றும் காக்கை வலிப்புகள். பேசும் போது மார்பில் வலி. வேகமாக நடக்கும் போது மார்பில் பலவீனமும் மயக்கம் தோன்றுவதும். பலவீனமாகவும் வேகமாகவும் நாடி துடித்தல்; விட்டு விட்டும் துடிக்கும். மெதுவாகச் செல்லும் நாடி. இருதயத் துடிப்புகள் அடிக்கடி நின்று நின்று ஏற்படுதல். இருதயம் வேலை செய்யாமல் நின்று விடுமோ என்று தோன்றுதல். மூக்குத் துவாரங்கள் புண்ணாய் இருத்தல்.

உறவு:—கார்போ வெஜி, பாஸ்பரஸ், ஸேபியா, நைட்ரிக் ஆஸிட், நேட்ரம் மூர் ஆகியவை காலி கார்புக்குப் பின் நன்றாக வேலைசெய்யும். " உடல் வலிமை குறைந்து விட்ட போது இழந்த வலிமையை மீட்க ஆரம்பத்தில் கார்போ வெஜிடபிலிஸைக் கொடுத்துப் பிறகு காலி கார்பைக் கொடுப்பது நன்மை தரும்."

ஒப்பிடுதல் :—அளவுமீறி வேலை செய்ததினால் ஏற்படும் நரம்புச்சோர்வில் மெக்னீஷியா கார்புடன். காலி கார்பிலும் மெக். கார்பிலும் வியாதியஸ்தருக்குச் சிறிது தூரம் நடந்தாலும் களைப்பு உண்டாகும். காலி கார்பில் பலவீனம் கைகளில், குறிப்பாகக் காலையில் படுத்திருக்கும் போது தோன்றும். மெக் கார்பில் பலவீனம் அனேகமாகக் கால்களிலும் உட்கார்ந்திருக்கும் போதும் காணப்படும். உடலின் உயிர்த் தண்ணீர் வெளியே போய்விட்டதால் ஏற்படும் கோளாறுகளில் கல். கார்ப், கார்போ வெஜி, பாஸ்பாரிக் ஆஸிட், சைனா, ஸீகேல், ஆகியவைகளுடன். உடல் பருத்த மனிதர்கள் என்ற குறியில் அம்மோனியம் கார்ப், கிராபைடிஸ் ஆகியவைகளுடன்.



குறிப்பு :—நாட் பட்ட கீல்வாதம், நாட்பட்ட மூத்திரக்காய் வேக்காடு, முற்றிய சுவாச கோச க்ஷயம் ஆகியவியாதிகளில்மிகுந்த எச்சரிக்கையுடன் காலி கார்பை உபயோகிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 6 அல்லது 30 வீரியத்தில் ஒரே ஒரு வேளை மட்டும் கொடுத்துப் பார்த்தால் வியாதியஸ்தருக்கு அனேகமாக ஆபத்து உண்டாவதில்லை.

" காலி கார்ப் ஒரு பயங்கரமான ஔஷதமாகத் தோன்றுகிறது. அது இருபக்கமும் அதிகக் கூர்மையுள்ள கத்தியைப் போன்றது " என்று கெண்ட் கூறுகிறார். மிக ஆழ்ந்தும், பல நாட்கள் நீடித்தும் வேலை செய்து உடல் வாகை ஒழுங்கு செய்யும் ஔஷதம். உயர்ந்த வீரியத்தில் (200 அல்லது அதற்குமேற்பட்ட வீரியங்கள்)ஒரே ஒருவேளையே கொடுக்கப் பட்டபோது எந்த வியாதியை எதிர்த்துப் போராடுவதற்காகக் கொடுக்கப் பட்டதோ அவ்வியாதியின் சக்தியைக் கடுமையாகத் தாக்குகிறது. இக் கடுமையான தாக்குதலினால் பல கெடுதலான விளைவுகளும் ஏற்படுகின்றன. அது அழிவுக்கு அடிகோலும். " வியாதியஸ்தரைக் குணம் செய்வது அவரைக் கொல்வதேயாகும் என்று நான் சொன்னால் அது வேடிக்கையாகத் தோன்றும். ஆனால் குணம் செய்யமுடியாத வியாதிகளில் ஹோமியோபதி ஔஷதங்கள் பயங்கரமான வகையில் வேலைசெய்கின்றன என்பது நீங்கள் அறிந்த விஷயமே. அவை பயங்கரமானவையே'' என்று கெண்ட் குறிப்பிடுகிறார்.

ஆர்ஸனிகம் ஆல்பம் என்னும் ஔஷதத்தில் என்னுடைய குறிப்பைப் பார்க்கவும், குணம் செய்ய முடியாத

வியாதிகளைக் குணம் செய்ய நாம் முயற்சி செய்யும்போது கடைசி நிலைமையிலுள்ள வியாதியஸ்தர்களுக்கு "உடல் வாகை ஒழுங்கு படுத்தும்" ஒளஷதங்களை 30 வீரியத்தில் ஒரே ஒருவேளை மட்டும் கொடுத்தாலும் மரணம் ஏற்பட்டு விடலாம். நாட்பட்ட வியாதிகளின் முற்றிய நிலைமைகளில் நான்கு ஒளஷதங்களைக் கொடுப்பது கூடாதுஎன்று என் அனுபவத்திலேயே அறிந்திருக்கிறேன். அவையாவன **ஆர்ஸனிகம் ஆல்பம், அபிஸ், காலி கார்ப், ஸல்பர்.** இவ்வித நிலைமைகளில் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை என்று நான் கருதும் வேறு சில ஒளஷதங்களையும் சேர்க்கலாம். அவையாவன: **பாஸில்லினம், கல், கார்ப்; மெதாரினம், பாஸ்பரஸ், ஸைலீஷியா, ஸல்பர், ட்யுபர்குலினம்.**

"குறிகளைக் கவனிக்கும் போது தகுந்த ஒளஷதம் **நேட்ரம் மூர்** தான் என்றாலும் அதனாலும் மாதவிடாய் வெளிப்படாவிட்டால் **காலி கார்ப்** மாதவிடாயை வெளிப்படுத்தும்" என்று ஹானிமன் எழுதியுள்ளார்.

**முடிவான குறிப்புகள்:**—காலி கார்பில் எளிதாகத் தோன்றும் எட்டு விதக் குறிகள் காணப் படுகின்றன. அவையாவன: **1. எளிதிலே முன்கோபம் தோன்றும். 2. எளிதிலே திடுக்கிடுதல் 3. எளிதிலே கூச்சம் உண்டாகும். 4. எளிதிலே நீர்க் கோர்வை ஏற்படும். 5. எளிதிலே வியர்வை உண்டாகும். 6. எளிதிலே மூச்சு அடைக்கும். 7. எளிதிலே பிதுக்கம் ஏற்படும் (மலப்பை). 8. எளிதிலே மூத்திரம் வெளிப்படும்** (இருமும் போதும் தும்மும் போதும் தானாகவே மூத்திரம் வெளியாகும்.)

**கஷ்டத்துடன் தோன்றும் குறிகளும்** காலி கார்பில் காணப்படுகின்றன. அவைகளையும் எட்டு விதமாய்ப் பிரிக்கலாம். அவையாவன: **1. விழுங்கும் போது கஷ்டம்** (உணவு, கோழை ஆகியவைகளை) **2. மூச்சு**



**விடக் கஷ்டம். 3. மலம் கழிக்கக் கஷ்டம். 4. முத்திரம் கழிக்கக் கஷ்டம். 5. கஷ்டத்துடன் இருமுதல். 6. முழங்கால்களை அசைப்பது கஷ்டமாய் இருத்தல்** (மேலே ஏறும் போது அல்லது இறங்கும் போது). **7. கஷ்டப்பட்டுக் கோழையைத் தொண்டையிலிருந்து பிரித்து எடுத்துத் துப்புதல். 8. முதல் மாதவிடாய் தோன்றும் போது கஷ்டமாய் இருத்தல்.**

மேலே கூறப்பட்ட கஷ்டங்களில் **காலி கார்பானிகத்தில்** மிக விசேஷமாய்க் காணப்படுவது **விழுங்கும் போது கஷ்டம்** என்பதேயாகும். இக்குறி மிகவும் உயர்ந்தது என்று **போகர்** அபிப்பிராயப் படுகிறார். வேறு ஒருவரும் இக்குறியை இரண்டாம் தரக் குறியாகக்கூட மதிக்கவில்லை. இது ஏன் என்று தெரிந்து கொள்வதும் ஒரு விதத்தில் "கஷ்டமாகவே" இருக்கிறது.

---

# காலி அயோடேட்டம்

## (KALI IODATUM)

**முன்னுரை:**-இவ்வௌஷதம் **காலி அயோடேட்டம்** என்ற பெயருடன் அழைக்கப்படுவது வழக்கத்தில் இருந்தாலும், **காலி ஹைட்ராயோடிகம்** என்ற பெயரே சரியானதாகும்.

இது ஸோரா விஷத்தையும் ஸிபிலிஸ் விஷத்தையும் கூட அடக்குகிறது. எலும்புகளின் மேல் தோலிலும் எலும்புகளைச் சேர்க்க உதவும் தசைகளிலும் காணப்படுவதைப் போன்ற நார் உள்ள அமைப்புகளை இது விசேஷமாகத் தாக்குகிறது. சுரப்பிகளையும் எலும்பின் மேல் தோலையும் தாக்கும் போதும் நீர்க்கோர்வையுள்ள வேக்காட்டைத் தோன்றச் செய்யும் போதும் **காலி அயோட்** மேகக் கிரந்தியில் காணப்படுவது போன்ற குறிகளை ஏற்

படுத்துகிறது. மேகக் கிரந்திக்கு காலி அயோட்டை மித மிஞ்சிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## பொதுவான குறிகள்

**தகுதி :**—மந்தமான குணத்துடன் க்ஷய ரோகம் தோன்றும் உடல்வாகு உள்ளவர்களுக்கு ஏற்றது. மேகக் கிரந்தி உள்ளவர்கள். பாத ரஸம், காரீயம் முதலிய விஷங்களால் உடல் நலம் அழிந்து போனவர்கள்.

**மனம் :**—வருத்தம். முன் கோபம். விசேஷமாகத் தன் குழந்தைகளிடம் கோபப்படுதல். கடுமையாகவும் கொடுமையாகவும் இருத்தல். ஏக்கம். எப்பொழுதும் கஷ்டப்படுதல். ஞாபக சக்தி குறைதல்: சமயத்துக்குத் தக்க வார்த்தைகள் தெரியாமை; தான் செய்த வேலையின் குறிப்பை எழுத முடியாது.

**உடல் :**—உடல் மெலிவு. வியாதி இருப்பது போல் வேதனை. பலவீனம். கள் குடித்தது போன்ற உணர்ச்சி. தட்டாமாலை சுற்றுவது போன்ற உணர்ச்சி. கண்களைச் சுற்றிலும் கறுப்பான வளையங்கள். பார்வை மங்கியும் கோளாறுகவும் இருக்கும். காதுகளில் மணி அடிப்பது போல் அல்லது ஹூம் என்ற ஓசை. காது அனேகமாகச் செவிடாகி இருக்கும். உதடுகள் காய்ந்து, வெடித்து, அழுக்குப் படிந்து இருக்கும். பேச்சு தடித்தும் தெளிவில்லாமலும் இருக்கும்: வாயிலிருந்து சளிப் பொருளும் உமிழ் நீரும் வெளியே வழியும். வாயில் கெட்ட நாற்றம், பசி இல்லாமை, நுரையுள்ள கோழை வெளியாகுதல். ஊதுவது போலவும் காச நோயில் இருப்பதைப் போலவும் ஓசையுடன் மூச்சு விடுதல்.



முது கெலும்பின் கீழ்ப் பாகத்தில் அடிபட்டது போல் வலி. தூக்கக் கலக்கம் இல்லாமல் அடிக்கடி கொட்டாவி விடுதல். இரவில் பயங்கரமான கனவுகள். எலும்புகளில் குளிரும் உணர்ச்சி. வலியுள்ள இடங்களில் சில்லிப்பு உணர்ச்சி. இரவில் ஏராளமான வியர்வை, அதனால் உபாதிகள் குறையும். கால்கள் துவண்டு போகும். தலை மயிர் நிறம் மாறிக் கொட்டுவது குறிப்பிடத் தக்கதாய் இருக்கும்.

**உபாதி கூடுதல் :**—வியாதியஸ்தருக்குச் சூடு ஒத்துக் கொள்ளாது. சூட்டில் பொதுவான வெறுப்பும் இருக்கும். குளிர்ச்சியான பாலைக் குடித்தால் எல்லாக் கோளாறுகளும் கூடுதலாகும். மேகக் கிரந்தியை அடக்கும் ஔஷதங்களில் தலை சிறந்தவைகளாகிய **ஆரம் மெட்டாலிகம், மெர்கூரியஸ் ஸொலுபுலிஸ், ஸிபிலினம்** ஆகியவைகளில் காணப்படுவதைப் போல் **காலி அயோடேட்டத்திலும்** உபாதிகள் இரவில் அதாவது மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணிவரை கூடுதலாயிருப்பது குறிப்பிடத்தக்க குறியாய் இருக்கிறது. மூன்றும் நிலைமையிலுள்ள மேகக் கிரந்தியிலும் உபாதிகள் இரவில் கூடுதலாவது குறிப்பிடத் தக்கதாய் இருக்கிறது. பருவ நிலையில் ஏற்படும் மாறுதலாலும் உபாதிகள் அதிகரிக்கும். வேறு விதமாய்ச் சொல்ல வேண்டுமென்றால் பருவ நிலையில் ஏற்படும் மாறுதல்கள் அவருக்கு ஒத்துக் கொள்வதில்லை. ஈரக் கசிவுள்ள பருவக் காலங்களிலும் உபாதிகள் அதிகமாகும். கடலோரங்களில் இருக்கும் போதும் உபாதிகள் அதிகமாகும்.

**உபாதிகள் கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :**—எலும்புகளில் தாங்க முடியாத வலி, விசே

ஷமாக இரவில். தொடை நரம்பு வாதம், வாதரோகம் முதலிய கோளாறுகள் இரவில் அதிகமாகும். தொடை நரம்பு வாதத்தில் வலியுள்ள இடத்தைக் கீழே வைத்துப் படுத்தால் வலி அதிகமாகும். (திறந்த இடங்களில் சௌகரியமாகும்). பல குறிகள் ஓய்வாய் இருக்கும் போது தோன்றுகின்றன. தொட்டால் வலிகள் அதிகரிக்கும். நடந்தால் இருதயக் கோளாறுகள் யாவும் மிகக் கணிசமான அளவுக்கு அதிகமாகும்.

உபாதி குறைதல்:—திறந்த இடங்களில் சௌகரியமாகத் தோன்றுதல். திறந்த இடங்களில் இருக்க வேண்டுமென்று அடக்க முடியாத ஆவலும் இருக்கலாம். காலி அயோட் வியாதியஸ்தர் திறந்த இடங்களில் நடக்கும் போது களைத்துப் போவது கிடையாது என்பதை இச்சமயத்தில் நினைவுக்குக் கொண்டு வருவது நலம்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—பல குறிகள் அசைவினால் குறைகின்றன. கால்களைப் பிடித்து வளைத்து விட்டால் சில வலிகள் குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

புண்ணுள்ள உணர்ச்சி பரவி இருத்தல்:—பரவி இருக்கும் புண் உள்ள உணர்ச்சி அல்லது தாக்கப்பட்ட இடங்களில் உணர்ச்சி அதிகரித்தல் என்பது இவ்வௌஷதத்தின் முக்கிய குறி. மண்டைத் தோல், சுரப்பிகள் முதலியவைகளிலே இக்குறி காணப்படும். மண்டைத் தோலைச் சொறிந்தால் புண்ணாய் இருப்பது போல் வலி. மண்ணீரலைச் சுற்றிலும் பரவி இருக்கும் வலியுடன்



கூடிய மண்ணீரல் கோளாறுகள். வேக்காடுள்ள எல்லா நிலைமைகளிலும் வியாதியுள்ள பாகத்தில் உணர்ச்சி அதிகரிப்பு பரவலாகக் காணப்பட்டால் பல சமயங்களிலும் காலி அயோடே ஏற்ற ஔஷதமாய் இருக்கும்.

மாறும் குறிகள்: ஏராளமான குறிகள்: பிடிவாத குணமுள்ள நாட்பட்ட வியாதிகள்:—ஏராளமான குறிகள் காணப்படும். உபாதிகளைக் கூடுதலாகும் குறைவாகவும் செய்யும் நிலைமைகள் ஏராளமாகவும் மாறுபட்டதாகவும் இருக்கும். ஆனால் அவைகளில் ஒன்று கூட விசேஷத்தன்மை வாய்ந்ததாக இருக்காது. ஆதலால் ஏராளமான குறிகளும் உபாதிகளைக் கூடுதலாகவும் குறைவாகவும் ஆக்கும் நிலைமைகளில் மாறுபாடுகளும் காணப்படும் கேசுகளுக்குக் காலி அயோட் ஏற்றதாகும். வியாதி பிடிவாத குணத்துடன் நாட்பட நீடித்திருக்குமானால் காலி அயோட் தகுந்ததென்று தெளிவாய் விளங்கும்.

கொள கொளப்பு: முண்டுகள்: தளர்ச்சி: நீர்ச் சுரப்புள்ள வீக்கம்: சுரப்பிகளைப் பற்றியது:—எலும்புகளிலும் எலும்பு மூட்டுகளிலும், விசேஷமாக முழங்கால்களில் வாத சம்பந்தமான வலிகள். அவை வீங்கித் தொட்டால் கொள கொளப்பாய்க் காணப்படும். மண்டையில் வீக்கத்துடன் கடினமான முண்டுகள். மேகக் கிரந்தி சம்பந்தமுள்ள, அதிக உணர்ச்சியுடன் கூடிய முண்டுகள். "அணுக்களின் சந்துகளில் நீர்ச் சுரந்து எல்லா அணுக்களும் தளர்ந்து போகுதல். நீர்ச் சுரப்பு, சுரப்பிகள் பருத்தல், எலும்புகளில் வீக்கம்". சுவாசகோசங்களில் நீர்ச் சுரப்பு. எலும்புகளின் மேல் தோல், குறிப்பாக முழங்கால்களுக்குக் கீழே உள்ள குதிரை முக எலும்பு என்று அழைக்கப்படும் (டிபியா—Tibia) எலும்பின் மேல்

தோல் கடினமாகித் தொட்டால் வலி ஏற்படும். சுவாச கோச வேக்காட்டில் தசைகள் கெட்டியாக மாற ஆரம்பிக்கும் நிலைமையில் காலி கார்ப், லாச்சஸிஸ், பாஸ்பரஸ், புரோமியம், ஸாங்வினேரியா, ஸல்பர் ஆகிய ஔஷதங்களை உபயோகிக்க வேண்டிய அறிகுறிகள் காணப்படா விட்டால் காலி அயோட் தேவைப்படும். கண் இமைகள், குரல் வளை, வாய், உள் நாக்கு ஆகிய இடங்களில் நீர்ச் சுரப்பு அடிக்கடி தோன்றுதல். அடிவயிற்றில் தசைக் கட்டி (3 x வீரியத்தில் உபயோகிக்கலாம்). கருப்பையில் நார் போன்ற கெட்ட சதை வளர்ச்சி ஏராளமாய்க் காணப்படும். ஸ்தனங்கள், கருப்பை, அடி வயிறு முதலிய இடங்களில் தோன்றும் தசைக் கட்டிகளைக் காலி அயோட் குணம் செய்திருக்கிறது. கெட்ட சதை வளர்ச்சி. கண்டமாலை.

தாங்க முடியாத வலி:—எலும்புகளில் கடுமையான வலி, விசேஷமாக இரவில்; மூன்றாம் நிலையிலுள்ள மேகக் கிரந்தியினால் ஏற்படலாம். கடுமையான வலி அல்லது தலைவலியுடன் மண்டையில் கடினமான முண்டுகள். நாக்கின் அடிப் பாகத்தில் பயங்கரமான வலி. காதுகளில் தாங்க முடியாத வலி. வலது காதில் குடைவது போல் வலி. கன்னங்கள், பற்கள், கண்கள், மூக்கு போன்ற பல இடங்களில் கடுமையான வலிகள். மார்பின் நடு எலும்பில் வலி. தோள் பட்டைகளுக்குப் பரவும்.

காரமாய்: உப்புக் கரிப்புடன்: பச்சை நிறமாய்: நுரையுடன்: ஏராளமாய் இருக்கும் தன்மை:—மூக்கிலிருந்து வெளியாகும் கழிவு கார குணமுள்ளதாய்த் தண்ணீர் போல் நீர்த்தும் சூடாகவும், ஏராளமாகவும் இருக்கும். கண்ணீர்ப்



பெருக்கு (ஏராளமாக இருக்கலாம்). கெட்டியான, பச்சை நிறமும் நாற்றமுமுள்ள கழிவு மூக்கிலிருந்து அடிக்கடி வெளிப்படும்; மூக்குச் சிவந்து வீங்கி விடும். தொண்டையில் வேதனை. கண் இமைகள் கண்ணீர்ப் பெருக்குடன் உப்பி இருக்கும், மூக்கிலிருந்து ஏராளமான, பச்சை நிறமுள்ள, சில்லிப்பு உணர்ச்சியுள்ள, புண்ணை ஏற்படுத்தாத கழிவு வெளியேறும். ஏராளமான, பச்சை நிறமும் உப்புக் கரிப்பும் உள்ள கெட்டியான கோழையுடன் இருமல்; கோழை மார்பின் நடுப் பாகத்திலிருந்து வருவது போல் தோன்றுவதும் வலி மார்பின் நடு எலும்பு வழியாக முதுகுக்கோ அல்லது மார்பின் உட்புறத்துக்கோ பரவும். கோழை நுரைகளுடன் சோப்பு நுரைகள் போல் காணப்படும். சுவாச கோச க்ஷயரோகத்தில் நுரையுள்ள கோழை வெளிப்படுதல் (பல சமயங்களிலும் இரவில் வியர்வையும் இளகிய மலம் வெளிப்படுவதும் காணப்படும்). காலி அயோட்டில் கோழை நுரையுடன் அல்லது சோப்பு நுரை போல் சில சமயங்களில் தான் காணப்படும். கெட்டியான, பச்சை நிறமுள்ள, உப்புக் கரிப்புள்ள கோழையே முக்கிய குறியாக எனக்குத் தோன்றுகிறது" என்று டாக்டர் நாஷ் அபிப்பிராயப் படுகிறார். இந்த இடத்தில் என் அபிப்பிராயம் மாறுபட்டதாய் இருக்கிறது. ஆர்ஸனிகம் ஆல்பம், பெர்ரம் மெட், நேட்ரம் மூர்: பாஸ்பரஸ் ஹிப்பார் ஸல்பர், ஆர்னிகா மொண்டானா ஆகியவைகளிலும் இன்னும் சில ஔஷதங்களிலும் நுரையுள்ள கோழை காணப்பட்டாலும் அவைகளை விடக் காலி அயோட்டிலேயே அதிகமாகக் காணப்படுகிறது. காலி அயோட்டின் பல்வேறு குறிகளிலும் இதுவே முக்கியமானதென்று நான் கருதுகிறேன். ஏராளமான கழிவுகள் அதாவது

தண்ணீர் போல் நீர்த்துள்ள, கார குணம், உப்புக் கரிப்பு, பச்சை நிறம், நாற்றம் ஆகிய விசேஷத் தன்மை வாய்ந்த கழிவுகள் ஏராளமாய் இருத்தல் என்னும் குறியை அதற்கு ஈடாகச் சொல்லலாம்.

வாயு உப்பிசம் :—வாயு உப்பிசத்துடன் அசிரணம்; வயிறு உப்பி இருத்தல். இரைச்சல்.

எலும்பு முனை வீக்கம் : உடல் மெலிவு: சிறுத்துப் போகுதல்:—உடல் மெலிவு. க்ஷயரோகத்தின் முற்றிய நிலைமையில் காணப்படுவதைப் போன்ற உடல் இளைப்பு. எலும்பு முனைகளில் வீக்கமுள்ள நிலைமைகள்; குழந்தைக்குப் பிறர் தன்னைத் தொடுவது பிடிக்காது; அசைவும் அதிர்ச்சியும் அது எவ்விதமாய் இருந்தாலும் அதற்குத் தாங்காது. அடிக்கடி மலமும் மூத்திரமும் கழிதல். விரைகள் சிறுத்துப் போகுதல்; வலது விரை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் இடது விரை புளியங்கொட்டை போல் சிறியதாகும். ஸ்தனங்களின் பருமன் குறைதல்.

மூச்சு அடைத்தல் :—"இருதயப் பாகத்தில் மூச்சை அடைப்பது போன்ற பயங்கரமான உணர்ச்சி. அதனால் வியாதியஸ்தர் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்திருக்க நேரும் (கிராபைடிஸ், காலி பைக், லாச்சஸிஸ்)". "விழித்துக் கொண்டவுடன் இருதயம் படபடவென்று துடித்தல், அதனால் படுக்கையிலிருந்து எழுந்திருக்க நேருதல், இல்லாவிட்டால் மூச்சு நின்று விடுமென்று பயப்படுவார்".

குத்து வலிகள் :—"சுவாச கோசங்களின் வழியாகக் குத்தும் வலிகள்; மார்பின் நடு எலும்பில் குத்து வலிகள்; நடக்கும் போது மார்பின் நடு எலும்பு வழியாய் முதுகுக்கோ அல்லது மார்பின் உட்புறமோ போகும் குத்து வலிகள். இருதயத்தில் குத்தும் வலிகள்.



இரத்தப் பெருக்கு :—கருப்பையில் நார்களுள்ள தசைக் கட்டிகள் ஏற்பட்டு அதனால் இரத்தப் பெருக்கெடுத்தல், சுவாச கோசங்கள், மூக்கு, மலப்பை ஆகியவைகளிலிருந்து இரத்தப் பெருக்கு.

## மற்ற குறிகள்

"கழுத்து, முகம், தலை, முதுகு, மார்பு முதலிய இடங்களில் சிறு சீழ்க் கட்டிகள்".—. பிறப்புறுப்புகளுக்கு மேற்பக்கத்தில் மயிருள்ள இடத்தில் கடுமையான அறிப்பு. "அடிபட்டுப் பல காலம் கழித்து வலிகள் தோன்றுதல்". காதுகளில் இரைச்சல் (30 வீரியத்தில் ஒரே ஒரு வேளை கொடுத்து விட்டுப் பொறுத்துப் பார்க்க வேண்டும்). "தைராய்டு சுரப்பி முழுவதும் வீங்கும்; வீக்கம் மிக வேகமாய் அதிகரிக்கும்; தொட்டாலும் அமுக்கினாலும் சிறிது வலி உண்டாகும்." சோப்பு நுரைகள் போன்ற கோழையும் ஊதுவது போல் மூச்சு விடுவதும் உள்ள காச நோய்.

உறவு :—ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட் இவ்விரண்டும் காலி அயோட்டை முறிக்கும். அல்லோபதி முறைப்படி மித மிஞ்சிக் காலி அயோட் கொடுத்துப் பாழ்படுத்தப்பட்ட மேகக் கிரந்தி வியாதியில் ஹிப்பார் ஸல்பரையும் நைட்ரிக் ஆஸிட்டையும் உயர்ந்த வீரியங்களில் கொடுத்தால் பச்சை மருந்தாகிய காலி அயோட்டின் கெடுதலான விளைவுகளை அடக்கி வியாதியஸ்தரைக் காப்பாற்றலாம். மெர்கூறியஸ் ஸொலுபுலிசுக்குப் பின் காலி அயோடும் காலி அயோட்டுக்குப் பின் நைட்ரிக் ஆஸிட்டும் நன்றாக வேலை செய்கின்றன.

ஒப்பிடுதல் :—தூங்கி எழுந்தவுடன் மூச்சு அடைத்தல், உணர்ச்சி மிகவும் அதிகமாகுதல் ஆகிய குறிகளில் லாச்சஸிஸ் என்பதுடன். மெர். சொலுபுலிசில் மார்பில் குத்தும் வலிகள் காணப்படுகின்றன; அவை பல பக்கங்களிலும் பரவும். காலி அயோட்டில் அவ்வித வலிகள் மார்பின் நடு எலும்பு வழியாய் முதுகுக்குப் பரவும். செலிடோனியத்தில் வலது சுவாச கோசத்தின் மேற்பாதி கெட்டிப்படும். சுவாச கோசங்கள், சுவாசகோச உறை ஆகிய இரண்டிலும் வேக்காடு ஏற்பட்ட சமயங்களில் காலி அயோட் உபயோகமாகும் கேசுகளில் வலது சுவாச கோசத்தின் கீழ்ப்பாகத்தில் (மூன்றில் இரண்டு பாகம்) கெட்டிப்படும். லாச்சஸிஸ் தேவைப்படும் சுவாசகோச வேக்காட்டில் இடது சுவாச கோசம் கெட்டிப்படும். காலி அயோட், காலி கார்ப் ஆகியவைகளின் சுவாசகோச வேக்காட்டில் வலது சுவாசகோசம் கெட்டிப்படும்.

---

## காலி பாஸ்பாரிகம்

## (KALI PHOSPHORICUM)

முன்னுரை :—ஸோரா விஷத்தை நீக்கும், பல நாட்கள் உடலில் தங்கி வேலை செய்யும் ஒளஷதம் இது. நரம்புகளின் வலிமை குறைந்து அதன் முக்கிய விளைவுகளாக உடலும் மனமும் சோர்வுற்றுக் காணப்படும் நிலைமையில் தான் இது மிகவும் உபயோகமுள்ளதாகிறது. அழுகுதல் என்பது இவ்வௌஷதத்தின் மிக முக்கியமான குறிகளில் ஒன்று.

### பொதுவான குறிகள்

தகுதி :—உடல் வெளுத்தல், இரத்த சோகை, உணர்ச்சி அதிகரித்தல், மிகவும் முன்கோபம் முதலிய குணங்கள் உள்ளவர்களுக்கு, குறிப்பாக இள வயதினருக்கு.



மனம் :—கேள்விகளுக்குப் பதில் சொல்ல வெறுப்பு. பிறருடன் சேர்ந்திருக்க வெறுப்பு; வெட்கப் படுதல். ஞாபக சக்தி குறைதல். அதிக மறதி. பெயர்களை மறந்து விடுதல். உணர்ச்சிகள் குறைதல். பயம். மாலையில் பயம். கூட்டத்தைக் கண்டாலும், வியாதி, சாவு, தனிமை ஆகியவைகளிலும் பயம். எளிதிலே பயப்படுதல்.

உடல் :—அதிகச் சோர்வு. உடல் மெலிவு. இரத்த சோகை. க்ஷயரோகம் தோன்றும் அறிகுறிகள். கை கால்களில் மதமதப்பு. தலை சில்லிப்பாகவும் குளிர் காற்றுப்பட்டால் அதிகச் சில்லிப்பாகவும் இருக்கும். காதுகளில் பலவிதமான ஓசைகள். முகத்தில் வியர்வை உண்டாகுதல். அடிவயிறு நீர்ச் சுரப்புடன் வீங்குதல். அக்குள்களில் வெங்காய நாற்றமுள்ள வியர்வை. அடிக்கடி மூத்திரம் கழிதல், மலமும் அடிக்கடி வெளியாகும். கால்களில் பரபரப்பு. சில சமயங்களில் கைகளிலும் பரபரப்பு. தூங்கி வழியும் சருமம். "தலைமயிரை அவிழ்த்துத் தொங்க விட வேண்டும் என்று நினைத்தல்." அடிவயிறு பருத்து வலி உண்டாகும். சாப்பிட்டுச் சிறிது நேரம் ஆனவுடன் பசியும் மறுபடியும் சாப்பிட ஆவலும் உண்டாகும்.

உபாதி கூடுதல் :—குளிர் காற்றில் உபாதிகள் கூடுதலாகும். அல்ப காரணங்களாலும் நீர்க் கோர்வை தோன்றும். தலையைத் திறந்து கொண்டிருக்கும் போது உபாதிகள் தோன்றும். புணர்ச்சி செய்த பிறகு அதிகமாகும். தொடுவது பிடிக்காது, வேதனையைத் தரும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :—

ஓய்வாய் இருக்கும்போது பல குறிகள் அதிகமாகி மெதுவான அசைவினால் சௌகரியமடைகின்றன. கீழ் முதுகு வலி மல்லார்ந்து படுத்தால் அதிகமாகும். எவ்வளவு மெதுவாகத் தொட்டாலும் திடுக்கிடுதல்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—பொதுவாக எல்லா உபாதிகளும் ஓய்வு, சூடு, உணவு உட்கொள்ளுதல் ஆகியவைகளால் சௌகரியமாகின்றன. மெதுவான அசைவினால் தொடை நரம்பு வாத வலிகள் குறைவாக இருக்கும். மாதவிடாய் தோன்றுவதற்கு முன் உபாதிகள் கூடுதலாகவும் தோன்றிய பிறகு குறைவாகவும் ஆகும். மெதுவான அசைவினால் தலைவலி மட்டுப்படும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்.

**சோர்வு: பலவீனம்**:—உடலும் மனமும் சோர்வுற்று உள்ள நிலைமை. அதிகமான மனச் சோர்வு. சிறிய வேலையும் மலையாகத் தோன்றுதல். மனதில் அல்லது உடலில் ஏற்பட்ட அதிர்ச்சி, அளவுக்கு மீறி வேலை செய்தல், உடலின் சக்தி அளவு மீறிச் செலவழிந்து போகுதல் ஆகியவைகளால் உண்டாகும் சோர்வும் பலவீனமும். மன உணர்ச்சிகள் பல நாட்களுக்கு அதிகரித்து இருத்தல், கவலைகள், அதிக வேலை ஆகிய காரணங்களால் தோன்றும் பலவீனம். "வியாபாரத்திலும் உத்தியோகங்களிலும் ஈடுபட்டு உடல் தளர்ந்து போனவர்கள்." "பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் களைப்பினால் வாடிப்போனவர்களுக்கும் ஏற்படும் தலைவலி. பார்வைப் பலவீனம். படித்தால் கண்களில் சோர்வு தோன்றும். மூளைச் சோர்வு. நரம்புச் சக்தி குறைவாய் இருத்தல். முதுகில் பலவீனம். இருதயப் பலவீனம். மார்பில் பலவீனம்.' நடக்கும்போது தடுக்கி விழும் குணத்துடன் பலவீனம்."



புணர்ச்சியில் ஆசை அளவு கடந்து ஏற்பட்டதன் விளைவாக (ஆசையை நிறைவேற்றியிருந்தாலும் அடக்கியிருந்தாலும் ஒன்றுதான்) பயந்த சுபாவம். புணர்ச்சி செய்த பிறகு அளவுகடந்த சோர்வு (காலி கார்ப்) நரம்புச் சோர்வினால் தூக்கம் வராமை.

கடைசியில் பலவீனம் பாரிசவாதத்தில் முடிகிறது. கை கால்களில் பாரிசவாதம். "பேச்சு மெதுவாகும், தெளிவு குறைந்துகொண்டே வரும், கொஞ்சங் கொஞ்சமாகப் பாரிசவாயு விருத்தியாகும். முதுகிலும் கைகால்களிலும் பாரிசவாதத்தினால் முடமாகி விட்ட உணர்ச்சி. இடது கண் இமை மேலே தூக்க முடியாமல் போகும்.

**அழுகுதல்**:—கெட்ட நாற்றம், அழுகுதல், உடல் அணுக்கள் செத்து விடுதல், சீழ்க் கொள்ளல் ஆகிய குணங்கள் இவ் வௌஷதத்தில் காணப் படுகின்றன. கழிவுகளும் போக்குகளும் அழுகிய நாற்றம் வீசும். அழுகிய நாற்றம் வீசும் கழிவுகள் உள்ள குழிப் புண்கள். மூக்கிலிருந்து வெளிப்படும் கழிவுகள் நாற்றமாய் இருக்கும். காதுகளிலிருந்து இரத்தம் கலந்த, நாற்றமுள்ள, அழுகிய, சீழ்ப் போன்ற கழிவு வெளிப்படும். நரம்புகள் பலவீனமாய் இருக்கும் நிலைமைகளில் காலை வேளையில் வாயிலிருந்து அழுகிய நாற்றம் வெளிப்படும். காலையில் வெளிப்படும் கோழை நாற்றமாய் இருத்தல். அழுகிய நாற்றமுள்ள, தோலில் சாக்காடு ஏற்படும் குணமுள்ள அக்கிப் படுவன். சாக்காடு உள்ள நிலைமைகள். தொண்டைப் புண்ணில் சாக்காடு தோன்றுதல். பயங்கரமான நாற்றம் அடிக்கும் வெள்ளை ஒழுக்கு. அழுகிப்போன பிணத்தின் நாற்றத்தை உடைய நீர்கள் சுரத்தல். நீர்க்

கோர்வையுள்ள சுவாசகோச க்ஷயத்துக்கு விலை மதிப்பிட முடியாத ஓர் ஔஷதம்.

**ஏராளமாய் இருத்தல்** :—ஏராளமான, நாற்றமுள்ள மூத்திரம். மாதவிடாயில் போக்கு கறுப்பாகவும், ஏராளமாகவும், நாற்றத்துடனும் இருக்கும். ஏராளமான, நாற்றமுள்ள போக்குகள். ஏராளமான உமிழ்நீர் சுரத்தல்; வாயில் கெட்ட சுவை.

**சில்லிப்பு** :—கைகளும் கால்களும் சில்லென்றிருத்தல். கால்கள் சில்லென்றும் ஈரக்கசிவுடனும் இருக்கும் அல்லது வியர்வை உண்டாகும். தலை சில்லென்றும் குளிர் காற்றைத் தாங்க முடியாமலும் இருக்கும். அடிவயிற்றில் சில்லிப்பு; மூடியுள்ள ஆடைகளை விலக்க முடியாது.

**மத மதப்பு: நடுக்கம்** :—விரல் நுனிகளில் மதமதப்பு. பயத்தினால் கைகளில் நடுக்கம். மத மதத்த உணர்ச்சி.

**மாறித் தோன்றுதல்** :—பல் வலியும் தலை வலியும் மாறி மாறித் தோன்றும்.

**மஞ்சள் நிறம்** :—தங்கம் போல் மஞ்சள் நிறமுள்ள கழிவுகள் (மலம், மூத்திரம்). மலம் தங்கம் போல் மஞ்சளாய் அழுகிய நாற்றத்துடனும் சூடுள்ள உணர்ச்சியுடனும் வெளிப்படும். மூக்கிலிருந்து கெட்டியான மஞ்சள் நிறமுள்ள கழிவு. மூத்திரம் நல்ல மஞ்சள் நிறமாக இருக்கும். சுவாச கோச க்ஷயத்தில் மஞ்சள் நிறமுள்ள கோழை. உள் உறுப்புகளில் நாட்பட்ட சீழ்க் கட்டிகள் இருப்பதால் யோனி வழியாகவோ அல்லது ஆசன வாய் வழியாகவோ ஏராளமான, ஆரஞ்சு நிறமுள்ள நீர் குறிப்பிட்ட சில சமயங்களில் வெளிப்படுதல்.

**விருப்பு** :—பனிக் கட்டி போல் குளிர்ச்சியாகவுள்ள பானங்கள், ஒயின்கார், தித்திப்புப் பொருள்கள் ஆகியவைகளில் விருப்பம்.



### மற்ற குறிகள்

காலராவில் அரிசிக் கஞ்சி போல் மலம். காச நோயில் ஆகாரம் சிறிதளவே உட்கொண்டாலும் உபாதிகள் கூடுதலாகுதல். குழந்தைகளுக்கு இரவில் பயங்கரமான கனவுகள் உண்டாகி அவை பயத்தினால் அலறிக் கொண்டு நல்ல தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளும். மூலங்களை ஆப்ரேஷன் செய்து எடுத்த பிறகு மலப் பையிலும் பெருங் குடலிலும் பாரிச வாத நிலைமைகள் ஏற்படுதல். ஆண் குறியில் விரைப்பு ஏற்படாமல் இந்திரியம் வெளிப்படுதல். பெரிய குழந்தைகள் இரவில் தூங்கும் போது மூத்திரம் கழித்தல்.

**ஒப்பிடுதல்** :—தூக்கத்தினால் உபாதிகள் அதிகரித்தல், அழுகிய கழிவுகள், மாதவிடாயில் போக்கு ஆரம்பித்தவுடன் உபாதிகள் குறைதல், ஆகிய குறிகளில் லாச்சஸிஸை ஒத்திருக்கிறது. புணர்ச்சி ஆசையை அடக்கியதால் ஏற்படும் மன உணர்ச்சி அதிகரிப்பில் கோனியத்துடன்.

---

## கால்மியா

## (KALMIA)

**முன்னுரை** :—நரம்பு சம்பந்தமுள்ள கோளாறுகளுக்கும் வாதரோகத்துக்கும் உபயோகமாகும் ஔஷதம் இது. திடீர் வியாதிகளில் இது மிக விரைவாய் வேலை செய்வதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் ஆழ்ந்தும் பல நாட்களுக்கு உடலில் தங்கியும் வேலை செய்யும் ஆற்றலும் இதற்கு உண்டு. ஸோரா, ஸிபிலிஸ், ஸைக்கோஸிஸ் ஆகிய

மூன்று விஷங்களையும் நீக்குகிறது. எதையும் விட்டு விடுவதில்லை. இருதயத்துக்கும் இதற்கும் நெருங்கிய உறவு உண்டு. இதன் நாடி மிக மெதுவாகத் துடிக்கும்.

இவ்வௌஷதத்தின் முக்கியமான குறிகளான: 1. கீழே தாவும் குணமுள்ள நரம்பு சம்பந்தமுள்ள வலிகள். 2. மேலிருந்து கீழே இறங்கும் குணமுள்ள வாதரோக வலிகள். 3. எலும்பு மூட்டுகளிலிருந்து வாதரோகம் இருதயத்துக்கு மாறுதல். 4. காலையில் தோன்றி நடுப்பகல் வரை கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகிப் பிறகு மாலை வரை படிப்படியாகக் குறைந்து வரும் குணமுள்ள தலைவலி. அசைவினால் உபாதிகள் கூடுதல்.

கவனிக்கப்பட வேண்டிய, முக்கிய குறிகளுடன் சேர்ந்து காணப்படும் குறிகளாவன: 1. குமட்டல். 2. மெதுவாகச் செல்லும் நாடித் துடிப்பு. 3. இருதயம் படபடவென்று அடித்துக் கொள்ளுதல். 4. சருமம் காய்ந்திருத்தல். 5. விரைப்பு உணர்ச்சி. 6. பலவீனம். 7. பாரிச வாதப் பலவீனம். 8. வியாதியுள்ள இடங்களில் மதமதப்பு.

## பொதுவான குறிகள்

தகுதி:—திடீரென்று தோன்றும் நரம்பு வலி, வாத ரோகம், மேகக் கிரந்தியினால் உண்டாகும் வாத ரோகம், கீல்வாயு ஆகியவைகளுக்கு ஏற்றது. வாத ரோகம் அல்லது கீல் வாதத்தினால் இருதயம் தாக்கப்படும் போது விசேஷமாகப் பயன்படும். வாத ரோகம் உள்ளே அமுக்கப்பட்டதால் தோன்றும் இருதயக் கோளாறுகள்.

மனம்:—கீழே படுத்துக் கொண்டிருக்கும் போது அறிவுத் திறனும் ஞாபக சக்தியும் ஒழுங்காக இருக்கும். ஆனால் அசைய ஆரம்பித்தவுடன் தலைச் சுற்றல் ஆரம்பித்து விடும். சிறிதளவு அசைவினாலும் உபாதிகள் அதிகமாகுதல் என்னும் குறிக்கு இதுவும் ஓர் உதாரணமே.



உடல்:—குமட்டல். மெதுவாகவும் மிகுந்த பலவீனத்துடனும் நாடித் துடிப்பு. நிமிஷத்துக்கு 40 க்கு மேல் 48 வரை துடிக்கும். கைக்கு இலகுவில் தென்படாது. எல்லாத் தசைகளிலும் சோர்வு; எவ்விதமான வேலையும் செய்யப் பிரியப்படமாட்டார். மாடிப் படி கூட ஏற முடியாது. இருதயம் படபடவென்று அடித்துக் கொள்ளுதல். பலவீனம். இருதயப் படபடப்புடன் உடலில் நடுக்கம். கால்களில் சுளுக்கிக் கொண்டது போல் தோன்றுதல். இருதயப் படபடப்புடன் மூச்சு விடச் சிரமம்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— அசைவினால் கோளாறுகள் கூடுதலாகின்றன. சிறிய அசைவினாலும் உபாதிகள் அதிகமாகும். நகர ஆரம்பிக்கும் போது அல்லது கையைத் தூக்கும் போது ஏற்படும் மிகச் சிறிய அசைவினாலும் தலைச் சுற்றலும் மனக் குழப்பமும் உண்டாகும். வாத ரோகத்தில் நகருவதற்கு முயற்சி செய்தால் கூடக் கொடுமையான வலி உண்டாகும். மனம் என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கவும். கண்களில் வலி, விழிகளை அசைத்தால் அதிகமாகும். வெய்யல் ஏற ஏற அதற்குத் தக்கபடி உபாதிகள் அதிகரித்தல். இக்குறி தலைவலியைக் குறிக்கிறது. தலைவலி காலையில் சூரியன் உதிக்கும் போது ஆரம்பித்து நடுப்பகல் வரை படிப்படியாக அதிகரித்துப் பிறகு படிப்படியாகக் குறைந்து மாலையில் சூரியன் அஸ்தமித்தவுடன் மறைந்து விடுதல். இத்தலைவலி பின் தலையில் தோன்றி நெற்றிக்குப் பாயும் குணம் உள்ளதாய் இருக்கும். ஆகவே கால்மியாவில் சூரியனின் ஒளிக் கதிர்களும் சூடும் தான் தலையில் தம் கை வரிசையைக் காட்டுகின்றன.

வெய்யலில் சென்ருல் தலை வலியை உண்டாக்கும். இடது பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தால் இருதயப் படபடப்பு அதிகமாகும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—நரம்பு சம்பந்தமான வலிகள் சாப்பிட்டால் குறையும். முகத்தின் வலது பக்கத்தில் உண்டாகும் வலி சாப்பிட்டால் சௌகரியமாகும். மல்லார்ந்து படுத்தால் சௌகரியமாக மூச்சுவிட முடியும்; இருதயப் படபடப்புக் குறையும். ஏராளமான மூத்திரம் வெளியானல் தலைவலி குறையும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**வாத ரோகம்; கீல்வாயு: இடம் மாறும் வலிகள்:**—வாத ரோகம் பல சமயங்களிலும் இருதயத்தைத் தாக்குகிறது. தோள்பட்டைகளில் வலி. தோள்பட்டைத் தசையில், குறிப்பாக வலப் பக்கத்தில் இருக்கும் தசையில், வாத ரோகம். வாத ரோகமும் கீல் வாதமும் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கும் ஒரு எலும்பு மூட்டிலிருந்து மற்ரேர் எலும்பு மூட்டுக்கும் மாறிக் கொண்டிருக்கும்.

**வியாதி உள்ளே அமுக்கப்படுதல்: இருதயத்துக்குத் தாவுதல்:**—எலும்பு மூட்டுகளில் உள்ள வாத ரோகம் மேல் பூச்சு ஔஷதங்களால் உள்ளே அமுங்கிப் போய் விட்டதால் இருதயத்துக்கு வியாதி தாவி விடுதல். வாத ரோக வலிகள் இருதயத்துக்குத் தாவுதல் (அப்ரொடேனம்). கடி என்னும் சரும வியாதியை அமுக்கியதால் நரம்பு வலி உண்டாகுதல். மாதவிடாய் தடைப்பட்டதால் உடல் முழுவதும் நரம்புகளில் கடுமையான வலி.

**வியாதி செல்லும் திசைகள்:**—வாத ரோகத்தில் முதலில் கைகளில் வியாதி தோன்றும். பிறகு கால்களைப்



பீடிக்கும். (வாத ரோகம் உடம்பின் மேற்பக்கம் சென்ருல் லேடம்). நரம்பு வலிகள் அழுக்குவது போல் இருக்கும் அல்லது கீழ்ப் பக்கமாய்ப் பாய்வது போல் தோன்றும். வலியுடன் சேர்ந்தோ வலி ஏற்பட்ட பிறகோ தாக்கப்பட்ட இடங்களில் மத மதப்பு ஏற்படும். (அகோனைட், சாமோமில்லா, ப்ளாண்டாகோ), மேல் வயிற்றிலிருந்து இருதயம் வரை கல்லால் அமுக்கும் உணர்ச்சி.

**குமட்டல்: மெதுவாய்த் துடிக்கும் நாடி:**—கால்மியா தேவைப்படும் வலிகளிலும் நிலைமைகளிலும் குமட்டலும் விட்டு விட்டுத் துடிக்கும் நாடியும் அனேகமாய்ச் சேர்ந்து காணப்படுவது குறிப்பிடத் தக்கதாய் இருக்கிறது. இருதயம் பட பட வென்று அடித்துக் கொள்வதையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

**பாரிச வாதப் பலவீனம்: மத மதப்பு: நடுக்கம்: மூச்சு அடைத்தல்:**—கால்மியாவின் நரம்பு வலிகள் சிற்சில சமயங்களில் பாரிச வாதப் பலவீனம், உடல் நடுக்கம் ஆகிய குறிகளுடன் சேர்ந்து விசேஷத் தன்மையைப் பெறும். கூர்மையான இருதய வலிகளால் மூச்சு விட முடியாமல் போகும். மத மதப்புடன் நரம்பு வலி. இடது கை முழுவதும் மத மதப்பாய் இருத்தல் (நரம்பு வலியில்).

**எரிச்சல்:**—கால்மியாவின் நரம்பு வலிகளுடன் சிற்சில சமயங்களில் எரிச்சலும் சேர்ந்திருக்கும். ஆயினும் அதை முக்கிய குறியாகச் சொல்ல முடியாது.

**வறட்சி: விரைப்பு:**—உதடுகள், கண் இமைகள், சருமம் முதலிய இடங்களில் விரைப்பாய் அல்லது அசைக்க முடியாமல் பிகுவாய் இருக்கும் உணர்ச்சி. **"கண்களை அசைக்கும் போது விரைப்புடன் இழுக்கும் உணர்ச்சி."** கண்களையும் இமைகளையும் சுற்றி இருக்

கும் தசைகளில் விரைப்பு. சருமம் காய்ந்து இருத்தல் அத்துடன் உதடுகளில் வெடிப்பும் சேர்ந்திருக்கலாம். உதடுகள் காய்ந்து விரைப்புடன் இருக்கும். கோடைக் காலத்தில் கன்னங்கள் கறடு முறடாய் இருத்தல். தொண்டை காய்ந்து விடும்.

**சுரம் இல்லாமை : வேக்காடு, வீக்கம் ஆகியவைகளில் :—** கால்களின் கீழ்ப் பாகத்தில் சுரமோ, வேக்காடோ, வீக்கமோ இல்லாமல் அதிக பலவீனத்துடன் மட்டும் சேர்ந்துள்ள கிழிக்கும் வலிகள். இச் சமயத்தில் இது **கோல்சிகத்தை ஒத்திருக்கிறது. சுரம், வீக்கம், வேக்காடு முதலிய எதுவும் இல்லாமல் கடுமையான வாத ரோக வலிகள்** அடிக்கடி இடம் மாறிக் கொண்டே இருத்தல். ஆனால் **கால்மியாவில்** எலும்பு மூட்டுகளில் சிவ சிவப்பு, வீக்கம் ஆகிய குறிகளுடன் வலியும் சிறிதளவு அசைவினாலும் வலிகள் அதிகமாவதும் இருப்பது உண்டு.

## மற்ற குறிகள்

கால்களில் வலி, நீர்ச் சுரப்பு, சருமத்தில் வறட்சி ஆகிய குறிகளுடன் மூத்திரத்தில் வெள்ளைச் சத்து வெளியாகும் வியாதி. உணவுப் பொருள்களை மெல்ல கீழ்த் தாடையை அசைக்க உதவும் தசைகளில் களைத்த உணர்ச்சி. தலைச் சுற்றலுடன் முகம் சிவத்தல்.

**ஒப்பிடுதல் :—பல்ஸடில்லாவிலும்** வாதரோக வலிகள் இடம் மாறிக் கொண்டே இருக்கும். ஆனால் **பல்ஸடில்லாவில்** அசைவினால் சௌகரியம் தோன்றும். இது தவிர **பல்ஸடில்லாவில்** வலிகள் மிக வேகமாக இடம் மாறுவதுடன் வியாதியுள்ள மூட்டுகளில் சிவ சிவப்பும் வீக்கமும் காணப்படும். இந்த இரு குறிகளும் **கால்மியாவில்** இல்லை. **லேடம் பாலில்** வாதரோகம் முதலில் கால்களில் ஆரம்பித்துப் பிறகு மேலே பரவும். **லேடம்** வலிகள் மேலே தாவும் **கால்மியா** வலிகள் கீழ்ப் பக்கமாகத் தாவும்.



மேகக் கிரந்தி சம்பந்த முள்ள வாத ரோகத்துக்கு **கால்மியாவைத்** தவிர **பைடோலக்கா, காலி அயோட்., நைட்ரிக் ஆஸிட், பென்ஸாயிக் ஆஸிட், ப்ளூவாரிக் ஆஸிட்** ஆகிய ஔஷதங்களும் ஹோமியோபதி முறையில் உபயோகப் படும்.

---

# க்ரீஸோட்டம்

## (KREOSOTUM)

முன்னுரை :—இவ்வௌஷதத்தின் முக்கியமான குறிகளாவன : **சொத்தை யாகுதல், உடல் மெலிவு; அழுகுதல்; கார குணம்; எரிச்சல், அறிப்பு.** கடைசியாகக் காம வெறி பிடித்தல்; கடுமையாய் இருத்தல்; ஏராளமாய் இருத்தல்; காரணம் இல்லாத இரத்தப் பெருக்கு, ஆகியவைகளையும் சேர்க்கலாம்,

## பொதுவான குறிகள்

**தகுதி :—**தொட்டிலிலே கிடக்கும் பருவத்திலுள்ள சிறு குழந்தைகளுக்கு விசேஷமாக ஏற்றது. "அளவு மீறிய வளர்ச்சி இருந்தாலும் தகுந்த பருமன் இல்லாத குழந்தைகள்." வயதுக்கு மீறி உயரமாய் இருப்பாள் (பாஸ்பரஸ்). வயதானவர்களைப் போன்ற தோற்றமும் உடலில் சுருக்கங்களும் உள்ள குழந்தைகள் (அப்ரொடேனம்). பல் முளைக்கும் பருவத்திலுள்ள குழந்தைகள். பெண்களின் கோளாறுகள். விசேஷமாக மந்த குணமுள்ள பெண்கள். மர்தவிடாய் மறையும் காலத்தில் காணப்படும் கோளாறுகளுக்கு ஏற்றது (லாச்சஸிஸ்). வயதானவர்களுக்கும் கருவுற்ற பெண்களுக்குப் பற்கள் மிக வேக

மாகச் சொத்தை யாகும் போதும் மிகவும் உபயோக மாகும். **பிறவியிலிருந்தே தோன்றிய மேகக் கிரந்தி.**

**மனம்:**—சங்கீதமும் மனதை உருகச் செய்யும் மற்ற காரணங்களும் அவரை அழும்படிச் செய்யும். குழந்தை கோபமாகவும் பிடிவாத குணமுள்ளதாகவும் இருக்கும். குழந்தை எல்லாப் பண்டங்களையும் தனக்கு வேண்டுமென்று கேட்கும்; ஆனால் எதைக் கொடுத்தாலும் திருப்தி ஏற்படாமல் அதைத் தூர எறியும். இரவில் அலறும்.

**உடல்:**—மிக வேகமாய் உடல் மெலிதல். தூக்கத்திலிருந்து பயத்தினால் திடுக்கிட்டு எழுந்திருத்தல். கழுத்திலுள்ள சுரப்பிகள் வீங்கும். உடல் முழுவதும் பலமான நாடித் துடிப்புகள். மத மதப்பு: உணர்ச்சி குறைதல். மண்டைத் தோலைத் தொட்டால் புண் இருப்பது போல் வலி. காயம் பட்டது போல் அல்லது நசுக்குண்டது போல் வலிகள். தோல் உறிந்து விட்டது போலவும் குழிப் புண் இருப்பது போலவும் வலிகள். நடக்கும் போது கால்களில் பாரிச வாதம் ஏற்பட்டுள்ள உணர்ச்சி. பற்கள் மிக வேகமாகச் சொத்தை யாகுதல். சிறிய காயங்களிலிருந்தும் ஏராளமாய் இரத்தம் வெளிப்படுதல். உடல் முழுவதும் ஒரே பரபரப்பு, ஓய்வாய் இருக்கும் போது அதிகமாகும். கொட்டாவி விடுதல். கொட்டாவி விடுவதுடன் தூங்க வேண்டுமென்று அதிகமான உணர்ச்சி உண்டாகும்.

**உபாதி கூடுதல்:**—புணர்ச்சியினாலும் புணர்ச்சி செய்த பிறகும் கோளாறுகள் கூடுதலாகும். ஓய்வாய் இருக்கும் போதும் அதை விட கீழே படுத்திருக்கும் போதும் உபாதிகள் அதிகரிக்கும். படுத்திருக்கும்



போது தான் வியாதியஸ்தருக்கு பரபரப்பு மிக அதிகமாய் இருக்கும். திறந்த இடங்களிலும் குளிர்ந்த பருவங்கள், பச்சைத் தண்ணீரில் குளித்தல் ஆகியவைகளாலும் உபாதிகள் அதிகமாகும்.

மாதவிடாய்க்குப் பிறகு குறிகள் அதிகமாகும். மாதவிடாய் தோன்றுததால் ஏற்படும் கோளாறுகள். இருமும் போது மூத்திரம் தானாகவே வெளிப்படும். கெட்ட நாற்றத்தைச் சுவாசித்ததினால் உண்டாகும் கெடுதலான விளைவுகள் (பாப்டீஷியா, ஆர்ஸனிகம் ஆல்பம்). வியாதிகள் முறை வைத்துத் தோன்றுவது குறிப்பிடத் தக்கதாய் இருக்கிறது.

**உபாதி குறைதல்:**—சூட்டினால் வியாதியஸ்தருக்குச் சௌகரியம் தோன்றும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—அசைவினால் குறையும். கருப்பையிலிருந்து மாத விடாயின் இடைக் காலங்களில் வெளிப்படும் இரத்தப் பெருக்கு, நடந்து கொண்டிருந்தால் குறைவாகும். கீழ் முதுகு வலி அசைவினால் மட்டுப் படும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**சொத்தை யாகுதல்: உடல் மெலிவு:**—முளைத்தவுடனேயே பற்கள் சொத்தையாகும். பற்களில் கறுப்பான புள்ளிகளும், தோன்றியவுடனேயே அவை சொத்தையாவதும். சொத்தை ஏற்படும் குணமுள்ள பற்களுடன் பல சமயங்களிலும் ஈறுகள் பஞ்சு போல் தளர்ந்து இரத்தப் பெருக் கெடுப்பதும் வாயில் கெட்ட நாற்றமும் காணப்படும். மலச்சிக்கல், உடல் வேதனை ஆகிய இவ்விரு குறிகளும் அனேகமாக இக் கோளாறுடன் சேர்ந்து காணப்படும். பற்களிலும் எலும்புகளிலும் சொத்தை

உண்டாகி அழுகுதல். உடல் மெலிவு. பல் முளைக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் மெலிவும் மலச் சிக்கலும், சிறிய, கடினமான, வலியுள்ள உருண்டைகளுடன் ஸ்தனங்கள் சிறுத்து ஒட்டிப் போகுதல்.

வேகம்:—மேலே விவரிக்கப்பட்ட இரு விசேஷக் குறிகளும் தவருமல் காணப்படும் முக்கிய குறிகளாகும். பற்கள் மிக வேகமாகச் சொத்தை யாகுதல். மிக வேகமாய் உடல் மெலிதல்.

அழுகுதல்:—அழுகிய நாற்ற முள்ள கழிவுகள். மூக்கிலிருந்து அழுகிய நாற்ற முள்ள சீழ் வருதல். வெள்ளை ஒழுக்கு மிகுந்த நாற்றத்துடன் வெளியாகி வியாதியஸ்தருக்குக் களைப்பை உண்டாக்கும். சொத்தை விழுந்த பற்களிலிருந்து கெட்ட நாற்றம் வீசும். மூத்திரம் நாற்றமாகவும் நிறமே இல்லாமலும் வெளிப்படும். அழுகிய நாற்றம் அடிக்கும் எல்லா வகைப் புண்களிலும் க்ரீஸோட்டம் தேவைப்படும். அழுகிய நாற்ற முள்ள வயிற்றுப்போக்கு.

நாற்றம்: சூடு: எரிச்சல்: கார குணம்: அரித்தல்:—க்ரீஸோட்டில் இக்குறிகள் யாவும் சேர்ந்து காணப்படுவது ஒரு முக்கிய விஷயமாகும். நாற்றம் என்று இப்பொழுது சொல்லப்படும் குறியும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள அழுகுதல் என்னும் குறியும் ஒன்று தான். கழிவுகள், போக்குகள், கோழை, ஏப்பம் ஆகிய யாவும் நாற்றமாகவும் சூடாகவும் எரிச்சலுடனும் புண்ணை உண்டாக்குவதாகவும் இருக்கும். எரிச்சலும் பட்ட இடங்களைப் புண்ணுக்கும் குணமுமுள்ள கண்ணீர்ப் பெருக்கு. மூத்திரம் எரிச்சலுடன் வெளிப்படும். மூத்திரக் குழாயில் புண்ணை உண்டு பண்ணும்.



யோனியிலும் யோனியின் வெளித் தோலிலும் புண்ணுள்ள உணர்ச்சி, தோல் உரியும், அறிப்பு, எரிச்சல் ஆகியவை காணப்படும். அழுகிய நாற்றமுள்ள வெள்ளை ஒழுக்கு, அதனுல் வீக்கம் உண்டாகிறது. அந்த இடங்களில் தோல் உரிகிறது. வெளிப்பக்கத்தில் அறிப்பும் எரிச்சலும் புண்ணும் உண்டாகலாம்; வெள்ளை ஒழுக்கினுல் வியாதியஸ்தர் களைத்துப் போவார்; போக்கு பால் போலவும், வே தண்ணீர் போலவும் அல்லது மஞ்சளாகவும் இருக்கும். பல் முளைக்கும் காலத்தில் அதிக தாகத்துடன் குழந்தையின் ஈறுகள் சூடாய் இருக்கும்.

வேதனை: அறிப்பு: கடுமை:—இரவில் சுக்கிலச் சுரப்பிகளிலும் மூத்திரப்பையிலும் வேதனை; அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல்; ஆனுல் ஒவ்வொரு தடவையும் சிறிதளவே வெளியாகும். சாப்பிட்டுச் சில மணி நேரங் கழித்துச் சீரணமாகாத உணவு வாந்தியாகுதல். சாப்பிட்ட உடனேயும் உணவு வாந்தி செய்யப் படலாம். கருவுற்ற பெண்களுக்கு அதிக உமிழ்நீர்ச் சுரப்புடன் வாந்தி ஏற்படுதல். பல் முளைக்கும் போது குழந்தை நிலை கொள்ளாமல் எப்பொழுதும் தன்னைத் தூக்கிக் கொண்டு இடைவிடாமல் நடந்து கொண்டே இருப்பதை விரும்பும். இரவு முழுவதும் அலறும்.

கடுமை:—கிழிக்கும் வலிகளுடன் கூடிய மிகக் கடுமையான நாட்பட்ட நரம்பு வலி. மார்பில் நெருப்புத் துண்டுகள் இருப்பது போல் பயங்கரமான எரிச்சல். மலம் கழிக்கும் போது குழந்தைகள் மிகவும் கஷ்டப்படும், கதறும். கதறுவதினுல் வலிப்புகள் உண்டாகுமோ என்று நினைக்கத் தோன்றும். மிகச் சிரமப்பட்டுப் பல் முளைத்தல்; குழந்தை நிலை கொள்ளாமலும் தூக்கம்

இல்லாமலும் தவிக்கும். ஏராளமான மூத்திரம், பல சமயங்களிலும் அழுகிய நாற்றம் அடிக்கும். மிக அவசரமான தூண்டுதல் உண்டாகும். அடிக்கடி, பலமான ஏப்பங்கள். பெண்களின் பிறப்பு உறுப்புகளின் வெளிப் பக்கத்திலும் யோனியிலும் தொடை இடுக்குகளிலும் காமத்தைக் கிளப்பும் அறிப்பு; தோல் உறிந்து புண்ணாகும். மாலை நேரம் நெருங்க நெருங்க அறிப்பும் மிகக் கடுமையாகி வியாதியஸ்தரை வெறி பிடித்தவர் போல் செய்யும். மாதவிடாய்க்கு முன்பும் பிறகும் கடுமையான தலைவலி (ஸேபியா). மார்பில் பயங்கரமான எரிச்சலுடன் வாந்தி.

மிக எளிதாக இரத்தப் பெருக்கு ஏற்படுதல் :—கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு புணர்ச்சி செய்த பிறகு தவறாமல் உண்டாகும். "புணர்ச்சிக்கு உட்பட்ட பெண்களுக்கு மறு நாள் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக் கெடுத்தல்." மிக எளிதாக ஈறுகளிலிருந்து இரத்தம் வெளிப் படுதல்; ஈறுகள் பஞ்சு போல், நீலம் கலந்த சிவப்பு நிறத்துடன், வேக்காட்டுடனும் புண்ணாகியும் இருக்கும். எல்லா வகைப் புண்களிலிருந்தும் ஏராளமான இரத்தப் பெருக்கு. சிறிய காயங்களிலிருந்து அதிக இரத்தப் பெருக்கு. பற்களைப் பிடுங்கிய பிறகு கறுப்பு நிறமுள்ள இரத்தம் கசிதல்.

பாரிச வாத நிலைமைகள் :—குழந்தை முதல் தூக்கம் தூங்க ஆரம்பித்தவுடன் மூத்திரம் கழித்தல் (ஸேபியா). மூத்திரம் கழிக்க வேண்டிய இடத்திலேயே கழிப்பதாகக் கனவு கண்டு படுக்கையிலேயே கழித்தல். கழிக்கும் போது அவனுக்கு விழிப்பு ஏற்பட்டு விடும் ஆனால் மூத்திரத்தை அவனால் அடக்க முடியாது. யோனி, கருப்பை ஆகியவை நழுவி வெளியே பிதுங்குதல்.



தளர்ச்சி: விரிவு :—உட்கொண்ட உணவு சிறிது நேரம் வயிற்றில் தங்கி இருந்த பிறகே வாந்தியாகும். புணர்ச்சிக்குப் பிறகு மறு நாளே கறுப்பு நிற முள்ள இரத்தம் கருப்பையிலிருந்து வெளிப்படும்.

நேர் விரோதமான குறிகள் :—அளவு கடந்த பசி அல்லது துளிக்கூடப் பசி இல்லாமை. புணர்ச்சியின் போது வலியே இருப்பதில்லை அல்லது அச்சமயத்திலும் பிறகும் எரிச்சலுடன் வலி.

ஆச்சரியத்தை அளிக்கும் நிலைமைகள் :—மாதவிடாயின் போது வலி இருக்குமாயினும் போக்கு வெளியான பிறகு அதிகமாகும். படுத்துக் கொண்டிருக்கும் போது போக்கு வெளிப்படும்; உட்கார்ந்து கொண்டால் அல்லது நடக்கும்போது போக்கு நின்றுவிடும். மூத்திரம் ஒழுகிக் கொண்டே இருக்கும்; படுத்துக் கொண்டிருக்கும் போது தான் மூத்திரம் கழிக்கமுடியும்; மூத்திரம் வெளுத்தும் ஏராளமாகவும் இருக்கும்.

திரும்பித் தோன்றும் குணம் :—மாதவிடாய்ப் போக்கு விட்டுவிட்டுத் தோன்றும், சில சமயங்களில் சிறிதளவுகூட இருப்பதில்லை; பிறகு மறுபடி தோன்றும் (ஸல்புர்). பிள்ளைப் பெற்ற பிறகு உண்டாகும் போக்கு (நாற்றமும் காரகுணமும் கொண்டு) அனேகமாக நின்று விட்டது போல் ஆகிப் பிறகு மீண்டும் தோன்றும் (கோனியம், ஸல்புர்). குழிப் புண்கள் திரும்பத் திரும்ப ஆறுவதும் கிளைப்பதுமாய் இருக்கும்.

விஷத்தன்மை :—விஷத்தன்மை வாய்ந்த வயிற்றுக் கோளாறுகளில் வாந்தி. இருமிய பிறகு ஒவ்வொரு தடவையும் ஏராளமான, சீழ்ப் போன்ற கோழை வெளியாகும். சுவாச கோசங்களில் சாக்காடு. வயதானவர்

களுக்கு ஏற்படும் மார்ச்சளி. வயதானவர்களுக்கு உண்டாகும் சாக்காடு. சரிவரக் கவனியாமல் விடப்பட்ட சுவாசகோசக்ஷயம். "பருத்து, நீல நிறமாகி இரத்தக்கசிவும் வலியுமுள்ள ஈறுகள்." கருப்பையின் கழுத்தில் விஷத்தன்மை வாய்ந்த புற்றும் மற்ற புண்ணுள்ள வியாதிகளும் உண்டாகி எரிச்சலும் வலியும் வீக்கமும் இரத்தம் கலந்த, அழுகிய நாற்றமுள்ள கழிவுகளும் தொட்டாலும் புணர்ச்சி செய்யும் போதும் அதிக வலிகளும் காணப்பட்டால் க்ரீஸோட் உபயோகப்படும். வயிற்றுப் புற்று.

### மற்ற குறிகள்

குழந்தைகள் நிலை கொள்ளாமல் இரவு முழுவதும் அல்லல் படும். கொஞ்சிக் குலாவினால் தான் தூங்கும்; முனகிக் கொண்டும் பாதிக் கண்களைத் திறந்து கொண்டு தூக்கக் கலக்கமாகவும் இருக்கும். இக்கோளாறுகள் யாவும் பல் முளைக்கும் காலத்தில் தோன்றும். கரப்பான் படை; "பொறுக்குகள் அடை அடையாகச் சேர்ந்து பெரிய அடைகளாகும்." இருமும் போது ஒவ்வொரு தடவையும் மூத்திரம் ஒழுகும். பிறவியிலிருந்தே மேகக் கிரந்தியுடன் காது கேளாமை.

உறவு :—கார்போ விஜியை க்ரீஸோட்டுக்குப் பிறகு கொடுக்கக் கூடாது. சைனாவுக்குப் பிறகு க்ரீஸோட் கொடுப்பது கூடாது. (விஷத்தன்மையுள்ள வியாதிகளில்) ஸல்பர், ஆர்ஸனிகம் ஆகியவை க்ரீஸோட்டுக்குப் பிறகு நன்றாகவே வேலைசெய்யும். பெல்லடொன்னா, கல் கார்ப், காலி கார்ப், லைகபோடியம், நைட்ரிக் ஆஸிட், ரஸ் டாக்ஸ், ஸேபியா ஆகியவைகளும் க்ரீஸோட்டுப் பின் வேலை செய்யக் கூடியவை.

ஒப்பிடுதல் :—(உடல் மிக வேகமாக மெலிதல், ஸ்தனங்கள் ஒட்டிப் போகுதல் ஆகிய கோளாறுகளில்) ஐயோடியம். (விட்டு விட்டு மாதவிடாய்ப் போக்கு வெளிப்படுதல் புணர்ச்சியின்போது வலி ஆகியவைகளில்) ஸேபியா. ஆனால் ஸேபியாவில் தோலை உறிக்கும் குணமும் விஷத்தன்மையும் இல்லை.



---

## லாக் கானினம்

## (LAC CANINUM)

முன்னுரை :—லாக் கானினம் (நாயின் பால்) ஹோமியோபதி முறையிலுள்ள இன்றியமையாத ஔஷதங்களில் ஒன்று. டிப்தீரியா, தொண்டைச் சுரப்பி வேக்காடு, வாத ரோகம் முதலிய வியாதிகளில் சிற்சில சமயங்களில் ஒரு விநோதமான குறி காணப்படுகிறது. வியாதி ஒரு நாளைக்கு ஒரு பக்கமாக மாறித் தோன்றுவதுதான் அது. அக்குறி இவ் வௌஷதத்தின் முக்கிய குறியாகும். ஆதலால் அதை அடையாளமாய்க் கொண்டு மேலே குறிப்பிட்ட வியாதிகளில் லாக் கானினம் உபயோகப்படுத்தப்படுகிறது.

ஆழ்ந்தும் பல நாட்களுக்கு உடலில் தங்கியும் வேலை செய்கிறது இவ்வௌஷதம். பல வியாதிகளில் தேவைப்படும் இவ்வௌஷதத்தின் வியாதி நீக்கும் சக்தி அபாரமானது தான்.

### பொதுவான குறிகள்

தகுதி :—மிகவும் பயந்த குணம், அதிகப் பரபரப்பு, மிக எளிதிலே உணர்ச்சி வசப்படுதல் ஆகிய குணங்கள் உள்ளவர்களுக்கு ஏற்றது. கற்பனை செய்யும் சக்தி. ஒவ்வொரு குறியும் ஒரு வியாதி போல் தோன்றும் கேசுகள்.

மனம் :—ஞாபக மறதி : மிக அதிகமான ஞாபக மறதி

"கவனக் குறைவாய் இருத்தல்". கடையில் சாமான்களை விலை கொடுத்து வாங்கி அவைகளை அங்கேயே மறந்து வைத்து விட்டுத் திரும்பிப் போய் விடுவார்" பயந்த சுபாவம்: எழுதும்போது தேவைக்கு அதிகமான வார்த்தைகளை உபயோகிப்பார் அல்லது சரியான வார்த்தைகளை உபயோகிக்க மாட்டார். பயம். வியாதிகளைப் பற்றிய பயம். சுவாச கோச க்ஷயம். இருதய வியாதிகள் ஆகியவைகளைப் பற்றிய பயம். மாடிப் படிகள் வழியாகக் கீழே விழுந்து விடுவோமென்று பயப்படுதல் (போரக்ஸ்). தனியாய் இருக்கப் பயம் (காலி கார்ப்). தான் இறந்து விடுவோம் என்ற பயம் (அகோனைட்). தனக்குப் பைத்தியம் பிடித்து விடுமென்ற பயம் (அக்டியா ரஸிமோஸா). நம்பிக்கை இழத்தல். தன் வியாதி தீர்க்க முடியாதது என்று எண்ணி நம்பிக்கை இழத்தல். பொய்த் தோற்றங்கள் (விசேஷக் குறிகளின் விளக்கம் என்னும் தலைப்பின் கீழே பார்க்கவும்). முன்கோப குணம்: கோபமாகவும் சிடு சிடுப்பாகவும் இருத்தல். குழந்தை எந்நேரமும் அழுது கொண்டும் கதறிக் கொண்டும் இருக்கும்; விசேஷமாக இரவில் (நக்ஸ் வாமிகா, ஸோரினம்). அடிக்கடி ஆத்திரம் தோன்றும், அல்ப காரணங்களாலும் கோபமடைந்து சாபம் இடுவதும் சபதம் செய்வதும் (லிலியம் டிக்ரினம், நைட்ரிக் ஆஸிட்); மிகவும் கேவலமாய் நடந்து கொள்வார். வருத்தம்: நீண்ட காலமாக இருந்து வரும் மனவருத்தம். எல்லா விஷயங்களும் கேடு உள்ளவையாகவே தோன்றும்.

உடல்:—வாயின் மூலைகளிலும் மூக்கின் நுனித் தோலிலும் வெடிப்புகள். உதடுகள் காய்ந்து தோல் உரிதல். உடல் வெட்டி போல் கனம் இல்லாமல் தோன்றும். அடிக்கடி மலம் கழிக்கும் உணர்ச்சி. வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி. நிறையச் சாப்பிட வேண்டுமென்ற அதிகப் பசி அடிக்கடி உண்டாகும். தித்திப்புப் பொருள்களில் வெறுப்பு. காதுகளில் இரைச்சல்கள். தன் குரல் காதுகளில் எதிரொலித்தல். சாப்பிடும் போது தாடையில் வெடிக்கும் ஓசை (நைட்ரிக் ஆஸிட், ரஸ் டாக்ஸ்). வாயின் மேற் கூரையில் அறிப்பு (பல்ஸடில்லா). உள்ளங் கைகளிலும் உள்ளங் கால்களிலும் எரிச்சல். வாயில் அழுகிய நாற்றம். யோனியிலிருந்து காற்று வெளியாகுதல். ஒவ்வொரு கீறலும் தவறாமல் புண்ணாகும். கைகளில் உள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் வழக்கத்தை விட அதிக நீல நிறமாய் இருத்தல், வீங்கியும் இருக்கும்,



உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—ஸ்தனங்களை மெதுவாகத் தொட்டாலும் பெண்களுக்குப் புணர்ச்சியில் ஆசை தோன்றும். தொடுவதினால் உபாதிகள் கூடுதலாகும் விஷயமாக வழக்கத்துக்கு மாறான நிலைமைகள் என்ற தலைப்பின் கீழே பார்க்கவும். குறிகள் ([illegible] சினைப்பைகளில் நரம்பு சம்பந்தமான வலி ஆகியவை) தூங்கிய பிறகு அதிகமாகும்,

உபாதி குறைதல் ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—உபாதிகள் மடக்கினால் குறைவாகவும் நீட்டும்போது கூடுதலாகவும் ஆகும். வாதரோகம் குளிர்ச்சியினாலும் குளிர்ந்த ஒற்றிடங்களாலும் குறைவாகும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**இடம் மாறுதல்: பக்கங்களில் மாறுதல்:**—பக்கங்களில் மாறி மாறித் தோன்றுதல், பல சமயங்களிலும் மிக வேகமாய் நடைபெறும், தொண்டையில் புண்,

தொண்டைச் சுரப்பி வேக்காடு, டிப்தீரியா, சினைப்பை வேக்காடு, வாத ரோகம் முதலிய வியாதிகள் பக்கங்களில் மாறி மாறித் தோன்றும். அதாவது சில நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது சில மணி நேரங்களுக்கு ஒரு முறையோ ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்கு மாறிக் கொண்டே இருக்கும். டிப்தீரியாவில் போலிச் சதை அடிக்கடி ஒரு பக்கத்தை விட்டு மறு பக்கம் செல்லும். மூக்கின் ஒரு துவாரம் அடைபட்டும் மற்றொரு துவாரம் அடைபடாமல் சில சமயங்களில் மெல்லிய சளி ஒழுகிக் கொண்டும் இருக்கும். இந்நிலையும் மாறி மாறி ஏற்படும் (டிப்தீரியாவில் உள்ளது போல்). தொண்டையின் ஒரு பக்கத்தில் கட்டியான பொருள் இருப்பது போல் தோன்றி அடிக்கடி விழுங்க வேண்டி வரும்; இத்தோற்றம் மறைந்து போய் உடனே மறு பக்கத்தில் மறுபடி தோன்றும்; பல சமயங்களிலும் இக்குறி பக்கங்களில் மாறி மாறித் தோன்றும்.

இவ் ஔஷதத்தில் காணப்படும் வியாதிகள் இடம் மாறும் விஷயமாக வாதரோக வலிகள் இடம் மாறிக் கொண்டே இருக்கும். டிப்தீரியா வியாதியில் உண்டாகும் கழிவுப் பொருள்கள் ஒரு சமயம் ஒரு இடத்திலும் மறு சமயம் வேறொரு இடத்திலுமாக மாறிக் காணப்படும். வலிகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குத் தாவுதல் (காலி பைக்ரமிகம், பல்ஸடில்லா, ட்யுபர்குலினம்).

இடம் மாறும் நேரம் :—ஒரு நாள் காலை நேரத்திலும் அடுத்த நாள் பிற்பகலில் அல்லது மாலையிலும் வியாதி அதிகமாகும். மாதவிடாயில் ஒரு தடவை உபாதிகள் குறைவாகவும் மறு தடவை கூடுதலாகவும் இருக்கும்.



இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை அடிக்கடி அழுவார் (கருப்பை வேக்காடு).

**வழக்கத்துக்கு மாறான நிலைமைகள் : உணர்ச்சிகள் அதிகரித்தல்:**— அளவு மீறிய பசி, காமவெறி, மூச்சுத் திணறல், கேவல நடத்தை. அவளுடைய பசியைத் தணிக்க முடியாது. இடது பக்கமாகப் படுத்தால் இருதயப் படபடப்பு கடுமையாகி வலதுபக்கமாய்த் திரும்பிப் படுத்தால் குறைவாய் இருக்கும் (டபாகம்). ஏராளமான அளவிலும் அடிக்கடியும் சாப்பிட வேண்டுமென்ற அதிகப் பசி. சாப்பிட்ட பிறகும் சாப்பிடுவதற்கு முன் இருந்தது போலவே பசி. அதிகப் பலவீனமும் உடல் சோர்வும். மிளகு, கடுகு, உப்பு ஆகிய பொருள்களில் அதிக விருப்பமும் தாராளமாய்ச் சேர்த்துக் கொள்வதும். அதிகச் சோர்வு, மிகவும் நாற்றமுள்ள மூச்சுக் காற்று (டிப்தீரியாவில்). கடுமையான முன்கோபம், கேவலமாக நடந்து கொள்ளுதல், வெறுப்பு. இக்கடைசிக் குறியை மனம் என்ற தலைப்பிலும் பார்க்கவும். உணர்ச்சிகள் அல்லது பொய்யான உணர்ச்சிகள் மிக அதிகமாக இருப்பதால் வியாதியஸ்தர் இல்லாத குறிகளை இருப்பதாக நினைத்துக் கொள்வார். இருமும் போது உடம்பு முழுவதும் அதிர்ச்சி ஏற்படுகிறதென்று சொல்வார். கீழே படுத்துக் கொண்டவுடன் மூச்சு நின்று விடும் என்ற உணர்ச்சி தோன்றும்; அதனால் படுக்கையை விட்டெழுந்து அங்குமிங்கும் உலாவுவார் (அம்மோனியம் கார்ப். லாச்சஸிஸ்). இக்குறி அனேகமாக இரவில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்களுக்குக் காணப்படும். முதுகெலும்பு முழுவதும் மூளையின் அடிப்பாகத்திலிருந்து இடுப்பின் கீழ்ப்பாகம்வரை வலி, தொட்டால் அல்லது

அமுக்கினால் அதிகமான வலி உண்டாகும் (சின்னினம் ஸல்ப், பாஸ்பரஸ், ஸிங்க்கம் மெட்). ஸ்தனங்களில் வேக்காட்டுடன் வலியும் வீக்கமும்; சிறிதளவு அதிர்ச்சியினாலும் உபாதிகள் கூடுதலாகும்; மாடிப்படி ஏறும் போதும் இறங்கும் போதும் அதிர்ச்சியைத் தடுக்க ஸ்தனங்களை இறுகத் தாங்கிப் பிடித்துக் கொள்ள நேரும் (பிரயோனியா). மிகவும் பயந்த குணம்; மிகவும் அதிகமான கோபகுணம்; அல்ப காரணங்களாலும் திடுக்கிடுதல்.

உணர்ச்சிகள் மிக அதிகரித்தல். தன் உடலின் ஒரு பாகம் மற்றொரு பாகத்தில் படுவதை அவளால் தாங்கமுடியாது; தன் விரல்களைக்கூட ஒன்றின்மீது மற்றொன்று படாமல் பிரித்து வைத்திருக்க வேண்டும். வெளிச்சம், ஓசை ஆகியவைகளைத் தாங்க முடியாது (இக்குறியையும் ஒரு வகையில் தொடுவதினால் உபாதி அதிகரிக்கும் குறியுடன் சேர்ந்ததென்று கூறலாம். அதாவது வெளிச்சம் உடம்பில் படுவது, ஓசை உடலில் அதிர்ச்சியை உண்டாக்குவது). ஸ்தனங்களிலே கை பட்டாலும் உட்காரும் போது அல்லது நடக்கும்போது முறையே தோன்றும் அமுக்கம், உராய்வு ஆகியவைகளாலும் பெண்ணின் பிறப்பு உறுப்புகளில் உணர்ச்சி அதிகரித்து விடும்.

பளபளப்பு :—தொண்டை, புண்கள் ஆகியவை பளபளவென்று ஒளியுடன் இருக்கும். வேக்காடு உள்ள இடங்கள் (தொண்டையில்) பள பளப்பாய் இருக்கும். டிப்தீரியாவில் தோன்றும் போலிச்சதை வார்னீஷ் தடவப் பட்டதுபோல் பள பளப்பாய்க் காணப்படும். பறங்கிப் புண் கெட்ட சதை வளர்ச்சியுடன் சிவந்து வழுவழுப்பாகவும் பள பளப்புடனும் காணப்படும். தொண்டைப் புண்ணில் பளபளப்புள்ள வெண்மையான பல திட்டுகள் காணப்படும். வெள்ளியைப் போல் ஒளி வீசும், அல்லது பளபளப்புடன் கூடிய சிவந்த திட்டுகள்.



கனவுகள் : பொய்த் தோற்றங்கள் : கற்பனைகள் :—இரவில் மூத்திரம் கழிப்பதுபோல் கனவுகள் உண்டாகிப் படுக்கையில் மூத்திரம் கழித்தல். வேறொருவருக்குச் சொந்தமான மூக்கு தன் முகத்தில் இருப்பதாக நினைத்தல். தன் உடல் கனம் இல்லாமல் லேசாய் இருக்கும் உணர்ச்சி. ஆகாயத்தில் நடப்பதுபோல் தோன்றும்; படுத்துக் கொண்டிருக்கும் போது தன் உடம்பு படுக்கையில் பட்டுக் கொண்டிருக்கவில்லை என்று நினைத்தல். மாதவிடாய்க்குப் பிறகு பாம்புகளைப் பற்றிப் பல கற்பனைகள் உண்டாகும். தன்னைச் சுற்றிலும் பாம்புகள் இருப்பதாகத் தோன்றும். தன்னைப் பாம்புகள் கடித்துவிடுமென்ற பயத்தினால் இரவில் கண்களை மூட மாட்டார். தன் முதுகின்மேல் பாம்புகள் இருக்கும் உணர்ச்சி.

நாற்ற குணம் :—டிப்தீரியா, நாட்பட்ட மூக்குச் சளி ஆகியவை நாற்றம் வீசுதல். அக்குள்களில் மிகவும் நாற்றமான வியர்வை, சட்டையில் பழுப்பு நிறக் கறையை உண்டாக்கும்.

பாரிசவாத நிலைமைகள் :—டிப்தீரியாவுக்குப் பிறகு தோன்றும் பாரிசவாதம். கருச் சிதைவுக்குப் பிறகு வலது காலில் மட்டும் பாரிசவாதம் தோன்றுதல். டிப்தீரியாவில் சூடான பானங்களைக் குடிக்க விருப்பம். அவை மூக்கு வழியாய் வெளியே வரக்கூடும்.

கெட்ட நீர்க்கசிவு உண்டாகும் குணம் :—இரு தொண்டைச் சுரப்பிகளின் மீதும் அங்கிருந்து தொண்டையின் பின்புறம் வரையிலும் ஈக்களின் முட்டைகளைப்போல் வெண்மையான அடைகள் தோன்றுதல். டிப்தீரியா

வில் உண்டாகும் கெட்டநீர்க் கசிவு வார்னீஷ்போல் பளபளப்பாய் இருக்கும்; கசிவு அடிக்கடி இடம் மாறும். தொண்டையில் மஞ்சளான, சிவப்பான அல்லது வெண்மையான திட்டுகள் பளபளப்புடன் காணப்படுதல்; விழுங்கும்போது தொண்டையில் ஏற்படும் வலி காதுகள்வரை பரவி இருக்கும் (ஹிப்பார் ஸல்பர், காலி பைக்ரமிகம்). நாக்கு ஒட்டுப் போட்டதுபோல் (இரவு 9 மணிக்கு) இருக்கும். உள்நாக்கு அழுக்கடைந்து காணப்படும்.

## மற்ற குறிகள்.

வலது பக்கத் தொடை நரம்பு வாதம்—ஸ்தனங்களில் வீக்கம். மாதவிடாய் தோன்றுவதற்கு முன் வலி தோன்றி (கல். கார்ப், கோனியம், பல்ஸடில்லா) போக்கு வெளிவர ஆரம்பித்தவுடன் குறையும். தூங்கும்போது பலமாகக் குறட்டை விடுதல். தாய்ப் பால் கொடுக்கும் பெண்களுக்குக் காரணம் எதுவும் இல்லாமல் ஸ்தனங்களில் பால் வற்றிப்போய் விடுதல் (அஸபோடிடா). மாதவிடாய் தோன்றும் சமயத்தில் தொண்டையில் புண் தோன்றி மாதவிடாய் மறைந்தவுடன் புண்ணும் மறையும் (மெக். கார்ப்). இதை மாதவிடாய் சம்பந்தமான தொண்டைப் புண் என்று அழைப்பார்கள். மாதவிடாய்ப் போக்குடன் தோன்றும் அல்லது மறையும் குணமுள்ள இருமல். பெண்களுக்கு ஸ்தனங்களில் உள்ள பாலை வற்றச் செய்ய அனேகமாக எல்லாக் கேசுகளிலும் இது உபயோகப்படும்.

**ஒப்பிடுதல்:**—லாக் கானினம் தாய்ப்பாலை வற்றச் செய்ய உதவுகிறது. லாக் டிப். வற்றிய பாலை மீண்டும் கொண்டு வருகிறது அல்லது பாலின் அளவை அதிகரிக்க உதவுகிறது.



தூங்கி எழுந்தவுடன் உபாதிகள் அதிகமாகுதல், கவனக் குறைவு, வெளிப் பக்கத்தில் தொட்டால் தொண்டை பற்றிய கோளாறுகள் அதிகமாகுதல் ஆகிய குறிகளில் லாச்சஸிஸ் என்பதை ஒத்திருக்கிறது. ஸ்தனங்களில் பலமாக அமுக்கினுல் வலி அதிகமாகும் குறி லாக் கானினம் மெர்கூறியஸ் ஸல்ப் இரண்டிலும் காணப்படுகிறது. கல் கார்ப், மூரெக்ஸ் இவ்விரண்டிலும் ஸ்தனங்களை அமுக்கினுல் வலி உண்டாகும். வலது சினைப்பைப் பகுதியில் வலி அபிஸ் என்னும் ஔஷதத்திலும் இருக்கிறது. யோனியிலிருந்து காற்று வெளிப்படும் குறி ப்ரோமியம், லைகபோடியம், நக்ஸ் வாமிகா, நக்ஸ் மாஸ்சாடா, ஸாங்வினேரியா ஆகியவைகளிலும் காணப்படும்.

**குறிப்புகள்:**—"ஒரு தடவைக்கு மேல் கொடுப்பது கூடாது; அப்படிக் கொடுப்பது என்று ஏற்பட்டால் முதல் தடவைக்கும் இரண்டாம் தடவைக்கும் இடையே எவ்வளவு நாட்கள் இருந்தனவோ அந்தக்கால அளவுப்படியே மற்ற தடவைகளிலும் கொடுக்கப்பட வேண்டும்" என்று நிகோல்ஸ் (Nichols) குறிப்பிட்டுள்ளார். இதன் உண்மை பல சமயங்களில் நிரூபிக்கப் பட்டுள்ளது.

பிறவியிலிருந்தே ஏற்படும் மேகக் கிரந்தியின் காரணமாகக் காது செவிடாகும் நிலைமையை மற்ற ஔஷதங்களை விட லாக் கானினம் சிறப்பாக நீக்கியிருக்கிறது.

---

## லாக் வாக்ஸினம் டிப்ளோரேட்டம்
## (LAC VACCINUM DEFLORATUM)

**முன்னுரை:**—இவ்வௌஷதம் மிகவும் அபூர்வமாகவே தேவைப்படுகிறது. ஆயினும் இதிலுள்ள சில மிகத் தெளிவான குறிகளின் உண்மை பல சமயங்களில் நிரூபணம்

செய்யப்பட்டிருக்கிறது. பிடிவாத குணமுள்ள, நாட்பட்ட வியாதிகள் பலவற்றில் இவ்வௌஷதம் உபயோகமாகிறது. இவ்வியாதிகள் அனேகமாக ஊட்டமுள்ள உணவு இல்லாத நிலையிலேயே ஏற்பட்டிருக்கும்.

## பொதுவான குறிகள்

தகுதி:—தளர்ந்த தசைகள்; உடல் பருமனாகும் குணம். அதிக மூச்சுத் திணறலுடன் மிகவும் பருத்துப் போன உடலுள்ளவர்கள். க்ஷயம், கீல்வாதம் ஆகிய வியாதிகள் உண்டாகும் அறிகுறிகள் உள்ளவர்கள். பாலில் வெறுப்புள்ள சிறு குழந்தைகள், பெரிய குழந்தைகள், பெரியவர்களையும் சேர்க்கலாம். இவர்களுக்கு இரத்த சோகையும் உடலில் குளிரும் உணர்ச்சியும் இருக்கும். மிகவும் பயந்த சுபாவம். கோளாறான உணவை உட்கொண்டு வருவோர்க்குத் தோன்றும் கோளாறுகளுக்கு மிகவும் ஏற்றது.

மனம்:—ஞாபக சக்தி அழிதல்; கவனக் குறைவு அல்லது அலட்சியம். உடல், மனம் ஆகிய இருவகையான வேலைகளிலும் செய்ய மனம் இல்லாமை. மனச் சோர்வு; தன் உயிரைப் பற்றிய கவலை இல்லை; சாவைக் கண்டு பயப்பட மாட்டார் ஆனால் (24 மணி நேரத்துக்குள்) தான் இறப்பது நிச்சயம் என்று முடிவு கட்டுவார்.

உடல்:—கண நேரங்கூடத் தூக்கம் வருவதில்லை. உடல் சில்லென்றும் வெளுத்தும் இருக்கும்; அசுத்த இரத்தக் குழாய்கள் நீலமாகவும் நன்றாக வெளியில் புலப்படும்படிப் புடைத்தும் இருக்கும். கை கால்களில் சில்லிப்பும் மத மதப்பும். அடிக்கடி ஏராளமாய்த் தண்ணீர் குடிக்கத் தாகம். வாய் குழ குழப்பாகவும் நுரைகளுடனும், முக்கியமாகப் பிறருடன் பேசும் போது.



இருக்கும். அதிக உடல் சோர்வும் வேலை செய்ய விருப்பம் இல்லாமையும். நடந்தால் அதிகக் களைப்பு. வலது பக்கமாகச் சாய்ந்து கொள்ள எப்போதும் விரும்புவார். மாலை 5 மணிக்குத் திடீரென்று உடல் வலிமை குறைந்து போகும். உடல் முழுவதும் இசிவு வலிகள். கோளாறான அல்லது அளவு குறைந்த உணவைச் சாப்பிட்டதால் கோளாறுகள். ஸ்தனங்கள் ஒட்டிப் போகுதல். சில சமயங்களில் மிகவும் பயப்படுதல்.

உபாதி கூடுதல்:—மழைக் காலங்களில் வியாதியஸ்தரின் கோளாறுகள் கூடுதலாகும். பால் குடித்தால் உடம்பில் கோளாறான குறிகள், அதாவது குமட்டல், வாந்தி, வயிற்றுப் போக்கு, தலைவலி, வயிற்றுக் கோளாறுகள், முதலியவை தோன்றும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—குளிர்ந்த தண்ணீரில் கைகளை நனைத்தால் மாதவிடாய்ப் போக்கு மறைந்து போகும். பல குறிகள் காலை வேளையில் தோன்றும். தலைச்சுற்றல் கீழே படுத்தால் அதிகமாகும். அசைவினால் எல்லாக் குறிகளும் கூடுதலாகும். அடிதடி பட்ட பிறகு தலையில் வேதனை தோன்றும். நடந்தால் அதிகக் களைப்பு. தூங்கிய பிறகு உபாதிகள் அதிகரிக்கும். பெண்களுக்கு அடிக்கடி மண்டை இடி உண்டாகும். எட்டு நாட்களுக்கு ஒரு முறை உபாதிகள் அதிகமாகும். மாலையில் உடற்சோர்வு தோன்றும். அடி வயிற்றைத் தொட்டால் வலி.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமையாய் இருத்தல்: பிடிவாத குணம்: நாட்பட்ட நீடிக்கும் தன்மை: விஷத் தன்மை:—வருஷக் கணக்காக நீடித்திருக்கும் கடுமையான தலைவலி, கண்களின் மேல்

கடுமையான வலிகள், பொட்டுகளில் கடுமையான துடிப்பு (குணம் செய்திருக்கிறது). கடுமையான, முறை வைத்துத் தோன்றும் குணமுள்ள மண்டை இடி. கண நேரம் கூடத் தூக்கம் வராமை, பிடிவாத குணம் உள்ளதாய் இருக்கும்; வியாதியஸ்தர் நிலை கொள்ளாமல் தவிப்பார்; இரவில் தூக்கம் இல்லாததினால் அவர் கஷ்டம் நீண்டு கொண்டே இருக்கும். நாட்பட்ட தலைவலியுடன் மலச் சிக்கல். சக்தி வாய்ந்த பேதி மருந்துகளாலும் மலச் சிக்கல் நீங்காமை. மலச் சிக்கலுடன் கடுமையான வலி இருக்கும்; மலம் காய்ந்து கடினமாகிப் பலமாக முக்கினால்தான் வெளிப்படும். அதனால் ஆசனவாயில் கீறல் காயங்கள் உண்டாவதும் வியாதியஸ்தர் கதறுவதும். கருப்பைப் பாகத்தில் கடுமையான வலி; கடுமையான தலைவலி. குமட்டலுடனும் மலச் சிக்கலுடனும் நெற்றிப் பாகத்தில் கடுமையான தலைவலி. மலப்பையில் பாரிச வாதம் ஏற்பட்டது போல் தோன்றி பேதி மருந்துகளாலும் நீக்க முடியாத நாட்பட்ட மலச்சிக்கல். வயிற்றில் பயங்கரமான வேதனை, வாந்தியுடனோ அல்லது வாந்தி யில்லாமலோ ஏற்படுதல். முகம் பிணம் போல் வெளுத்து விடுதல். குமட்டலுடன் மயக்கம் வருவது போல் தோன்றுதல். குமட்டலோ அல்லது வாந்தியோ இல்லாமல் தாங்க முடியாத, பயங்கரமான வேதனை. நாட்பட்ட வயிற்றுப் போக்கு, வாந்தி ஆகிய குறிகளுடன் வயிற்றிலும் குடல்களிலும் நாட்பட்ட வேக்காடு. விஷத்தன்மை வாய்ந்த டைபாய்டு சுரம், விடாமல் அடிக்கும் சுரம்.

**கோளாறான உடல் ஊட்டம்:**—உண்ணும் உணவின் சத்து உடம்பில் ஒட்டாமை அல்லது ஊட்டக் குறைவுள்ள உணவுகளை உட்கொள்வது ஆகிய காரணங்களால் உடல் மெலிவும் பருமனாவதும் தோன்றக் கூடும். உடல் மெலிவு அதிகமாகி முடிவில் அளவு கடந்த மெலிவு ஏற்படும். மிகப் பருமனாய் மாறிவிட்ட ஒரு பெண்ணைக் குணம் செய்திருக்கிறது. மதுமேகம் எனப்படும் நீரிழிவு வியாதியில் கடுமையான தாகம், உடல் மெலிவு, சருமம் காய்ந்து சருகு போல் மாறுதல் ஆகிய குறிகள் தென்பட்டால்.



**சிறுத்தல்:**—ஸ்தனங்களின் பருமன் குறைதல். ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு குறைந்து, கொள கொள வென்று தளர்ந்து விடும். பாலின் அளவும் குறையும். தாய்ப் பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனங்களின் பருமனும் பாலின் அளவும் குறைந்து விட்டால் பழய படி ஸ்தனங்களைப் பருக்கச் செய்து பாலின் அளவை அதிகரிக்க இவ்வௌஷதம் ஒரு பொழுதும் தவறியதில்லை. ஔஷதம் கொடுத்த 12 அல்லது 24 மணி நேரத்துக்குள் பலன் உண்டாகும். பிறப்பு உறுப்புகள் சிறுத்துப் புணர்ச்சி செய்யப் போதுமான சக்தியும் கருத்தரிக்கத் தகுதியும் இல்லாமல் போகுதல்.

**நீர்ச் சுரப்புள்ள நிலைமைகள்:**—நீர்ச் சுரப்பு உள்ள எல்லா நிலைமைகளிலும் நிச்சயமாகவும் தவறாமலும் வேலை செய்யக் கூடியது என்று இவ்வௌஷதம் மதிக்கப்படுகிறது. இருதய பலவீனம், கல்லீரல் கோளாறுகள், அடக்கப்பட்ட மலேரியாச் சுரம் அல்லது முறைச் சுரங்களுக்குப் பிறகு ஆகிய காரணங்களால் உண்டாகும் நீர்ச் சுரப்புக்கு விசேஷமாக ஏற்றது. இருதயத்தில் உறுப்பு சம்பந்தமாக உள்ள கோளாறுகளால் தோன்றும் நீர்ச்சுரப்பு. கால்களில் நீர்ச்சுரப்புள்ள வீக்கங்கள் (குணம் செய்திருக்கிறது).

சில்லிப்பு உணர்ச்சி:—முதுகில் சில்லிப்பு. உடல் முழுவதும் சில்லிப்பு. கண நேரங் கூடத் தூக்கம் வராமை; கை கால்கள் இரவில் சில்லென்றுருகுதல். பொதுவாக மலச் சிக்கலே இருக்கும். மலச் சிக்கல் நீங்காமல் நீடித்திருக்கும் போது அதிகச் சில்லிப்புத் தோன்றும்.

மூத்திரத்தில் கோளாறுகள்:—மூத்திரத்தில் சர்க்கரை இருத்தல்: கன அடர்த்தி 1035 முதல் 1040 வரை இருக்கும். ஒவ்வொரு நாளும் 8 முதல் 10 பைண்டுகள் வரை மூத்திரம் வெளி யேறுதல் ஆகிய குறிகளுள்ள மதுமேகம். மூத்திரத்தில் வெள்ளைச் சத்துக் கலந்து வெளிப்படும் வியாதியுள்ள பல கேசுகளைக் குணம் செய்திருக்கிறது. மூத்திரம் அதிக வெளுப்பு நிறத்துடன் அடிக்கடியும் ஏராளமாகவும் வெளியாகும். மூத்திரம் விட்டு விட்டு வெளிப்படும்; வெளிப்படும் போது வியாதியஸ்தர் பலமாக முக்க வேண்டி வரும் என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

காற்றில் மிதக்கும் உணர்ச்சி :—நடக்கும் போது காற்றில் நடந்து போவது போலத் தோன்றும். படுத்துக் கொண்டிருக்கும் போது தன் உடல் படுக்கையின் மீது இருப்பதாகவே தெரியாது.

## மற்ற குறிகள்

இரு சுவாச கோசங்களிலும் மேல் நுனியில் க்ஷய சம்பந்தமான கழிவுப் பொருள்கள் சேர்ந்திருத்தல். மூச்சுக் காற்று ஒரு விதமான தித்திப்பு வாசனையுடன் இருக்கும். பகல் முழுவதும் வாயில் தித்திப்புச் சுவை. சங்கா குணத்தில் மார்பின் நடு எலும்பின் கீழ்ப் பகுதியில் பந்து போன்ற உருண்டைப் பொருள் ஆரம்பித்து மேலே ஏறி தொண்டைக்கு வரும் உணர்ச்சி. இதனால் மூச்சு அடைக்கும் உணர்ச்சி உண்டாகி மிகுந்த வேதனையை அளிக்கும்.



ஒப்பிடுதல் :—நக்ஸ் மாஸ்சாடா, லாக் டிப். இவ்விரண்டிலும் தலையில் அதிகக் கனம் என்ற குறி இருக்கிறது. முதல் ஔஷதத்தில் தலைக்கனத்தினால் வியாதியஸ்தர் இடது பக்கமாக விழுவார். இரண்டாவதில் வலது பக்கமாக விழுவார்.

---

# லாச்சஸிஸ்

## (LACHESIS)

முன்னுரை :—இவ்வௌஷதம் மிகக் கொடுமையான விஷமுள்ள ஒரு வகைப் பாம்பின் விஷத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. அப்பாம்பு சாதாரணமாக 7 அடி நீளம் இருக்கும். இவ்வௌஷதத்தில் காணப்படும் உடல் குறிகளில் முக்கியமானவை ஏழு வகைப்படும். அவை யாவன: 1. கறுப்பு நிறமுள்ள இரத்தம். 2. நீல நிறம். 3. கெட்ட நாற்றம். 4. சூடான உணர்ச்சி. 5. இறுக்கும் உணர்ச்சி. 6. செம்மட்டியால் அடிக்கும் வலிகள். 7. உடல் நடுக்கம்.

மனக் குறிகளில் முக்கியமான ஒரு குறி வாய் ஓயாத பேச்சு.

லாச்சஸிஸ் வியாதியஸ்தர் கீழ் உள்ள விஷயங்களைத் தாங்கமாட்டார். அதாவது அவ் விஷயங்களால் அவருடைய உபாதிகள் அதிகமாகும். 1. தொடுவது. 2. தூக்கம். 3. சூடான பானங்கள் (அல்லது உணவு). 4. கழிவுகள் அடக்கப்படுதல்.

இப் பாம்பு விஷத்தின் முக்கியமாக நான்கு குறிகளாவன : 1. தூங்கிய பிறகு உபாதிகள் அதிகரித்தல். 2. இடது பக்கமே வியாதிகள் காணப்படுதல் அல்லது இடமிருந்து வலம் செல்லுதல். 3. உடம்பில் மேல் எவ்வளவு மெதுவாகத் தொட்டாலும் தாங்க முடியாத உணர்ச்சி. 4. கழிவுகள் வெளியே சென்றால் சௌகரியம் ஏற்படுதல்.

ஆழ்ந்தும் உடலில் நீண்ட நாள் தங்கியும் வேலை செய்யும் ஔஷதங்களில் ஒன்று.

## பொதுவான குறிகள்

**தகுதி:**—அடிக்கடி ஏக்கம் பிடிக்கும் குணம் உள்ளவர்களுக்குப் பெரிதும் ஏற்றது; அடுத்தபடியாகக் கோப குண முள்ளவர்களுக்கு; கறுத்த கண்களுடன் அடிக்கடி சோம்பேறித் தனமும் வருந்தும் தன்மையும் உடையவர்கள். உடலில் பல இடங்களில் பழுப்பு நிறப் புள்ளிகளும் செம்பட்டை மயிரும் (பாஸ்பரஸ்) முன் கோபமும் உள்ள பெண்களின் கோளாறுகளிலும் இது தகுந்ததே யாகும். "மாதவிடாய் மறைய ஆரம்பித்த காலத்திலிருந்து உடல் நிலை ஒழுங்காய் இல்லை யென்று கூறும் பெண்கள்." கள் குடிக்கு அடிமையானவர்கள். பிறப்பு உறுப்புகளைக் கைகளால் கசக்கிச் சிற்றின்பத்தை அடையும் பழக்கத்தினால் ஏற்படும் கெடுதலான விளைவுகள். அறிவுத் திறமை பாதிக்கப்படுதல். பருத்த உடலை விட ஒல்லியான உடலுள்ளவர்களுக்கே மிகவும் ஏற்றது. லாச்சஸிசுக்கு உரிய விசேஷக் காரணங்களால் உடல், மனம் ஆகிய இரு விஷயங்களிலும் ஏற்படும் மாறுதல்கள், பாதரஸம், கொயினா ஆகியவைகளை அளவு மிஞ்சி உபயோகித்தவர்கள். மேகக் கிரந்தியினாலும் அவ் வியாதிக்குப் பாதரஸம் கலந்த



ஔஷதங்களை உபயோகித்ததினாலும் ஏற்படும் கோளாறுகளுக்கு ஏற்றது. வெய்யலில் நிற்க முடியாதவர்களுக்கும் கோடைக் காலத்தில் உடல் நலம் குறையும் குண முள்ளவர்களுக்கும் தகுந்தது.

**மனம் :**—வாய் ஓயாமல் பேசும் குணம்; நாள் முழுவதும் பேசிக் கொண்டே இருக்க விரும்புவார். ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்துக்குத் தாவுவார். ஒரு வார்த்தையை வைத்து ஒரு கதையையே உற்பத்தி செய்வார், அல்லது ஒரு கதைக்குள் மற்றொரு கதையை நுழைப்பார். வெறி பிடித்த வாயாடித் தனம் என்றும் சொல்லலாம்.

லாச்சஸிஸ் அறிவைக் கடுமையாகத் தாக்கி கீழ்க் காணும் குறிகளை உண்டாக்குகிறது.

அடிக்கடி வருத்தப் படும் குணம் (நைட்ரிக் ஆஸிட், பல்ஸடில்லா, ஸேபியா). இடைவிடாமல் பேசுவார், பாடுவார் அல்லது சீழ்க்கை அடிப்பார். ஆவேசம் வந்தது போல் நடக்கப் போகும் விஷயங்களைப் பற்றி ஜோஸ்யம் கூறுவார். அதிக அலட்சியம், அதிக ஞாபக மறதி. கேட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் மறந்து விடுதல். பேசிக் கொண்டிருக்கும் விஷயங்களைக் கூட மறந்து விடுவார். அறிவு மழுங்கி முட்டாள் போல் மாறுதல். வெறியுள்ள பொறாமைக் குணம். காரணம் இல்லாமல் பொறாமைப் படுதல். காரண மில்லாமல் சந்தேகித்தல். தன்னை ஒரு தேவதை பிடித்து ஆட்டி வைப்பதாக நினைப்பாள். தற்கொலை செய்துக் கொள்ள தீவிரமாய்ச் சிந்தனை செய்வாள். பொழுதைப் பற்றிய தடுமாற்றம்.

**உடல் :**—வியாதிகள் மிக வேகமாகத் தோன்றுதல், கடுமையாய் இருத்தல், உடல் வலிமை மிக விரைவில்

குறைந்து விடுதல். வியாதியுள்ள பாகங்கள் நீல நிற மாகுதல். முகம் ஊதா நிறத்துடனும் பல நிறங் கொண்ட திட்டுகளுடனும் காணப்படும். கீழ்த்தாடை தொங்கும். நாக்கு பற்களுக்கு நடுவில் சிக்கிக் கொள் ளும். நாக்கில் நடுக்கம். கைகால்களில் நடுக்கம். வாய், மூக்கு ஆகியவைகளுக்கு எதிரே எது வந்தாலும் தாங்க முடியாது. கழுத்தைத் தொட்டால் வேதனை; கழுத்தை இறுக்கும் பட்டையைத் தளர்த்தி விட நேரும். தூங்க ஆரம் பித்தவுடன் மூச்சு அடைத்துப் போகும். உடம்பு வெளுத்து அல்லது பல நிறமுள்ள திட்டுகளுடன் காணப்படும். சரு மத்தில் மஞ்சள், சிவப்பு அல்லது செப்புப்போல் நிற முள்ள திட்டுகள் உண்டாகும். தசைகளின் நீளம் மிக வும் குறைந்து விட்டதுபோல் அவைகளில் பிடிப்பும் விரைப்பும், விட்டு விட்டும் முறைவைத்தும் தோன்றும் வலிகள். மூச்சு நின்று போகும் ஆபத்தான குறியுடன் காணப்படும் கோளாறுகள். தூங்க ஆரம்பித்த மறு கணமே மூச்சு அனேகமாக நின்று விடும். பற்கள் கிட் டிப் போய்ப் பேச்சு மூச்சு எதுவும் இல்லாமல் பிணம் போலாகும் குறிகளுடன் மூச்சு அடைத்துப் போவதும் மூர்ச்சையும் அடிக்கடி உண்டாகுதல். கால் விரல் களுக்கு இடையில் வெடிப்புகள். கரு இரத்தம் குழம்பு தல், கருநீல நிறமுள்ள வீக்கங்கள். அசுத்த இரத் தக் குழாய்களில் வீக்கம். சாராயத்தில் அதிக விருப்பம். கோளாறுகளுடன் மயக்கம் தோன்றும்.

**உபாதி கூடுதல்** :—வெய்யலில் நிற்க முடியாது; அறை யின் சூட்டையும் தாங்க முடியாது. கோடைக் காலத்தையும் தாங்க முடியாது. கோடைக் காலத்திலும், குளிர் காலத் தில் மப்புப் போடுதல், மழை பெய்தல் முதலிய



காரணங்களால் குளிர் சற்றுக் குறைந்து விடும் போதும் குளிர்ச்சியான ஊர்களிலிருந்து சூடான ஊர்களுக்கு வரும் போதும் கோளாறுகள் தோன்றும் அல்லது அதிகமாகும். அதிகக் குளிர். அதிகச் சூடு இரண்டுமே அவருக்கு ஒத்துக் கொள்ளாது.

**உபாதி கூடுதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— பல குறிகள் இரவில் அதிகரிக்கின்றன. இடது பக்கமாகப் படுத்தால் இருதய வலி அதிகமாகும். தொடுவது, தூக்கம். கழிவுகள் அடக்கப் படுதல், சூடான பானங்கள் ஆகிய காரணங்களால் உபாதிகள் அதிகமாகும் விஷயத்தைப் பற்றி விசேஷக் குறிகளின் விளக்கத்தின் கீழே உள்ள முதல் நான்கு பாராக்களைப் பார்க்கவும்.

**உபாதி குறைதல்** :—குளிர்ந்த காற்றை விரும்புவார். அதனால் அவருடைய உபாதிகள் குறையும். கழிவுகள் வெளியே சென்றால் உபாதிகள் தணியும். கழிவுகள் அடக் கப் பட்டதால் தோன்றும் கோளாறுகள் என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**தொடுவதும், இறுக்குவதும் தாங்க முடியாது** :—தொடு வது அல்லது மேலே படுவது ஆகியவைகளால் லாச்சஸிஸில் வேதனை உணர்ச்சி உண்டாவது விநோத மாய் இருக்கிறது. இவ் வேதனை உணர்ச்சியைப் பின் வருமாறு க்ளார்க் விளக்கியுள்ளார். "லாச்சஸிஸில் காணப்படும் மேலே பட்டால் வேதனை உணர்ச்சி உண் டாகும் குறி, வலி ஏற்படுவதாலோ அல்லது வலி அதிக மாவதாலோ தோன்றவில்லை. மேலே படுவது அவரை என்னவோ செய்கிறது." இதை மேலும் விளக்கமாகச் சொல்ல முடியாது. சட்டையின் கழுத்துப் பட்டை

கழுத்தின்மேல் மெதுவாகப் படுவது, இடுப்பு, அடிவயிறு, அரையிடுக்குகள் ஆகிய இடங்களின் மேல் ஆடை படுவது முதலியவைகளை அவரால் தாங்க முடியாது. அபிஸ் மெல்லிபிகாவிலும் இவ்வித வேதனை காணப்படும். ஆனால் அது புண்ணுள்ள அல்லது வலியுள்ள உணர்ச்சியால் தோன்றும். லாச்சஸிஸிலோ மேலே படுவதும் மெதுவாகத் தொடுவதும் அவரை என்னவோ செய்து வேதனையைத் தோன்றச் செய்கிறது. "கழுத்தை அல்லது தொண்டையை எவ்வளவு மெதுவாகத் தொட்டாலும் அல்லது வெளிப் பக்கத்தில் அமுக்கினாலும் (ஸேபியா) தாங்க முடியாது; தொண்டையின் அருகில் எது வந்தாலும், போர்வை பட்டால் கூட வேதனையை உண்டாக்கும்."

தொடுவது அதிக வேதனையை உண்டாக்கும் எனப்படும் லாச்சஸிஸின் குறி அதிகப் புண் உள்ள உணர்ச்சியாகவும் மாறலாம். மானிக் கொண்டையில் ஏற்பட்ட பரங்கிப் புண்ணில் இக்குறியை நான் பார்த்திருக்கிறேன். மெல்லிய துணி மெதுவாகப் பட்டாலும் புண்ணில் அதிக வலி உண்டாகியது. மிக மெதுவாகத் தொட்ட போது வலி மேலும் அதிகமாகியது. துணியினால் இறுகக் கட்டியவுடன் வலியே இல்லை. லாச்சஸிஸை 200 வீரியத்தில் ஒரே ஒரு வேளை தான் கொடுத்தேன். சில நாட்களுக்குள் வியாதி அடி பணிந்தது. அடி வயிற்றின் இடது பாகத்தில் தொடும் போது வலியும் அவ்வலி எவ்வளவு மெதுவாய்த் தொட்டாலும் அதிகரிப்பதும்.

மெதுவாகத் தொட்டால் வலி அதிகமானாலும் இறுக அமுக்கினால் குறைகிறது. சௌகரியமாகவும் தோன்றுகிறது. மண்டைத் தோலில் மெதுவாகத்



தொடும் போது புண்ணுள்ள உணர்ச்சியும் வலியும் அதிகமாய்க் காணப்படுகிறது. ஆனால் துணியினால் தலையை இறுக்கிக் கட்டி விட்டால் எந்த விதமான அசௌகரியமும் ஏற்படுவதில்லை. குரல் வளையைத் தொட்டால் வலி தோன்றும். "தொண்டைப் புண், டிப்தீரியா ஆகிய வியாதிகளில் ஒன்றும் இல்லாமல் விழுங்குவது போல் பாவனை செய்தாலும் தண்ணீர் போன்ற திரவப் பொருள்களைக் குடித்தாலும், வலியும் புண்ணுள்ள உணர்ச்சியும் உண்டாகும். கெட்டியான உணவை விழுங்கும்போது அவ்வளவு அதிகமான வலி ஏற்படுவதில்லை. "ஒன்றும் இல்லாமல் விழுங்குவதுபோல் பாவனை செய்யும்போது சித்திரவதை செய்வது போல் வலி தோன்றும். தண்ணீர் முதலிய பானங்களைக் குடிக்கும்போது வலி அதைவிடச் சிறிது குறைவாகவும் கெட்டியான உணவை விழுங்கும்போது மேலும் சிறிது குறைவாயும் இருக்கும்.

கழுத்தைச் சுற்றியோ அல்லது இடுப்பைச் சுற்றியோ, இறுகக் கட்டுவது அவருக்குப் பொறுக்க முடியாது. "சட்டையின் கழுத்துப் பட்டையைத் தளர்த்த வேண்டும். தொண்டையை மெதுவாக அமுக்கினாலும் கடுமையான இருமல் உண்டாகும்," குரல்வளை சம்பந்தமுள்ள வியாதிகளில் தொண்டையைத் தொட்டால் மூச்சை அடைத்து விடக்கூடிய இருமல் தோன்றும்.

**தூக்கம், ஒத்துக் கொள்ளாமை:**—தூங்கிய பிறகு உபாதிகள் தோன்றுகின்றன அல்லது அதிகமாகின்றன என்பதைக் கொண்டு இவ்வாறு சொல்லப்படுகிறது. நீண்ட நேரம் தூங்கி விழித்துக் கொண்டவுடன் கோளாறுகள் தோன்றும் அல்லது கூடுதலாகும். வியாதியஸ்தரைத் தூக்கத்திலிருந்து எழுப்பிய உடனே அவ

ருடைய வியாதிக் குறிகள் வெளியே வருகின்றன அல்லது அதிகரிக்கின்றன. தூங்க ஆரம்பித்த வுடனேயே உபாதிகள் தோன்றுவதும் உண்டு. தூங்க ஆரம்பித்த வுடன் மூச்சு நின்றுவிடும். காசநோயில் வியாதியஸ்தர் தூங்க ஆரம்பித்தவுடன் இருமல் உண்டாகும். **தூங்கும் போது காக்கை வலிப்பு தோன்றும்.** இக்குறியைத் தடித்த எழுத்தில் நான்தான் போட்டிருக்கிறேன். இத்தகைய உபாதிகூடுதல் குறியுடன் காணப்பட்ட மூன்று காக்கை வலிப்புக் கேசுகளை இவ்வௌஷதத்தை 200 வீரியத்தில் கொடுத்துக் குணம் செய்திருக்கிறேன். "சந்தோஷம் துளிக்கூட இல்லாமை, வேதனை, **வருத்தம்** ஆகிய குறிகள் **காலை வேளையில் தூங்கி யெழுந்தவுடன் மிக அதிகமாகும்.**

**உபாதிகள் அதிகமாவதால் அல்லது மீண்டும் தோன்றுவதால் வியாதியஸ்தர் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வார். தூக்கத்தினால் உபாதிகள் அதிகரித்தல்.**

**தடைப்பட்ட கழிவுகள், ஒத்துக் கொள்ளாமை** :—கழிவுகள் உடலிலிருந்து வெளியேறினால் உபாதிகள் சௌகரியமாய் இருக்கும் என்றும் சொல்லலாம். கழிவு வெளியே வர ஆரம்பித்தவுடன் வியாதியஸ்தர் தனக்குச் சௌகரியமாய் இருப்பதாக உணருவார். மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் போக்கு வெளியாக ஆரம்பித்தவுடன் குறைய ஆரம்பிக்கும். **மாதவிடாய்ப் போக்கு வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் போது எப்பொழுதும் சௌகரியமாய்த் தோன்றும்.** "போக்கு வெளியாவதற்கு முன்பும் வெளியான பிறகும் காணப்படும் உபாதிகள் **போக்கு உள்ள போது மறைந்திருக்கும்.**" "போக்கு ஒன்று விட்டு ஒரு நாள் இருக்கும். போக்கு நின்று விட்ட சமயத்தில் வலியோ அல்லது தலைவலியோ உண்டா



கும்." கருப் பையிலும் சினைப் பையிலும் ஏற்படும் வலிகள் அவ்விடங்களிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்பட்டால் குறையும். நீர்க் கோர்வை தோன்றுவதற்கு முன் தலை வலி உண்டாகி மூக்கிலிருந்து தண்ணீர் ஒழுக ஆரம்பித்த வுடனே அது மறைந்து போகும். புணர்ச்சி செய்யும் போது இந்திரியம் சரிவர வெளியாவதில்லை அல்லது சிறிதளவு கூட வெளியாகாமலும் இருக்கலாம். காச நோயில் இடைவிடாத இருமல் ஏற்பட்டுத் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வார். இருமிய பிறகு தண்ணீர் போன்ற கோழை ஓரளவு வெளியாகும். **இதனால் வியாதியஸ்தருக்கு மிகவும் அனுகூலம் உண்டாகும்.** (காச நோயில் **லாச்சஸிஸ்** தேவைப்படும் கேசுகளில் இது முக்கியமான குறி என்றும் ஆனால் அதை ஒருவரும் கவனித்ததில்லை யென்றும் **பாரிங்டன்** கூறுகிறார்.

**சூடான பானங்கள், ஒத்துக் கொள்ளாமை** :—டிப்தீரியா, தொண்டைச் சுரப்பிகளின் வேக்காடு, தொண்டைப் புண், முதலிய வியாதிகளில் **சூடான பானங்களால் வியாதி குறிப்பிடத் தக்க அளவுக்குக் கூடுதலாகின்றன.** சூடான பொருள்கள் எதையாவது விழுங்கினால் தொண்டையை அடைப்பது போலவும் வேதனையும் உண்டாகும். சூடான பானங்கள் தொண்டையில் அடைத்துக் கொள்ளும்; இதுமட்டுமல்ல; சூடான பானங்களை வியாதியஸ்தரால் விழுங்கவே முடியாமலும் போகும்.

**கறுப்பு நிறம்** :—இரத்தப் பெருக்குகளில் கருகிய வைக்கோல் போல் **சிறு சிறு துணுக்குகள் கலந்து கெட்டுப் போன இரத்தம் வெளிப்படும்.** மூக்கு, வயிறு, சுவாச கோசங்கள், கருப்பை, குடல்கள் முதலிய உறுப்புகளிலிருந்தும் குழிப் புண்களின் அடிப் பாகத்திலிருந்தும்

உண்டாகும் இரத்தப் பெருக்கில் இரத்தத்தில் இவ்வித விநோதமான துணுக்குகள் காணப்படும். மலத்திலும் கெட்டுப் போன இரத்தம் வெளியாகி இவ்விதம் காணப்படும், மாதவிடாய்ப் போக்கு கறுப்பு நிறமுள்ள இரத்தமாய் இருக்கும். மூக்கு அல்லது மற்ற உடல் துவாரங்களிலிருந்து வெளிப்படும் இரத்தம் காய ஆரம்பித்தவுடன் கறுப்பாகவோ அல்லது கருகிய வைக்கோல் போலவோ தோற்றமளிக்கும். கறுப்பு நிறமுள்ள மூத்திரம். "மூத்திரம் அநேகமாய்க் கறுப்பாக இருக்கும். அடிக்கடி, நுரையுடன் நிறம் கறுத்து வெளிப்படும்." "மூத்திரத்தில் கறுப்பு நிறமுள்ள புள்ளிகள் காணப்படும் அல்லது கரித்தூள்கள் மிதப்பது போல் தோன்றும்." கறுப்பு நிறமுள்ள கொப்பளங்கள். நாக்கு காய்ந்து, கறுப்பாகி நடுக்கத்துடன் இருக்கும். "தட்டையான புண்கள், விளிம்புகள் கடினமாகவும் தொட்டால் அதிக வலியுடனும், அடிப்பாகத்தில் கறுப்பாகவும் இருக்கும்."

விஷக் கிருமிகளால் உற்பத்தி செய்யப்படும் வியாதிகளில் பற்களின் மேல் ஊதத்தைப் பொருள் அல்லது காய்ந்த, கறுப்பான பொறுக்குகள் உண்டாகும்.

மாணிக் கொண்டையில் கறுப்புப் புள்ளிகளும் சிவந்த சிறு சிரங்குகளும்.

**சிவப்பு**:—சரும வியாதிகளில் சிரங்குகள் கறுஞ் சிவப்பு நிறமாய் இருக்கும். குடியில் அதிகமாக ஈடுபட்டவர்களுக்கு மூக்கு சிவத்தல். சிவந்த மூக்குடன் சேர்ந்துள்ள இருதயக் கோளாறுகள்.

**கரு நீல நிறம் : நீல நிறம்**:—கறுப்பும் நீலமும் கலந்த புள்ளிகள். கரு இரத்தம் குழம்புதல். முகத்தில்



தோன்றும் அக்கி ஆரம்பத்தில் நல்ல சிவப்பாக இருக்கும். மிக விரைவில் கரு நீலமாக மாறும். ஈறுகள் நீலமாய், வீங்கி, பஞ்சு போல் ஆகும். ஸ்தனங்களில் புற்று நீலமாய் இருக்கும். "ஸ்தனக் காம்புகளைத் தொட்டால் பொறுக்க முடியாத வலி உண்டாகும். தாய்ப்பால் தண்ணீர் போல் நீர்த்தும் நீலமாகவும் இருக்கும்." கண்களைச் சுற்றி நீல வளையங்கள். அசுத்த இரத்தக் குழாய்கள் சுருட்டிக் கொண்டு நீலமாய் இருக்கும்.

**ஊதா நிறம்**:—ஊதா நிறமுள்ள வீக்கங்கள். டிப்திரியாவில் தொண்டை கறுத்த ஊதா நிறமாய் இருக்கும். சிரங்குக் கட்டிகள், இராஜ பிளவை, சீழ்ப் புண்கள் ஆகியவை கரு நீல நிறமாகவும் ஊதா நிறமாகவும் காணப்படும். குழிப் புண்களைச் சுற்றி ஊதா நிறமும் பல நிறங்கள் ஒன்று கலந்தது போலவும் தென்படும். சுருட்டிக் கொண்ட அசுத்த இரத்தக் குழாய்கள் ஊதா நிறமாய் இருத்தல். மூக்கு வீங்கி ஊதா நிறமாய் இருக்கும். குழிப் புண்களைச் சுற்றிலும் (ஊதா நிறத் தோலின் மேல்) சிறு சிறு கொப்புளங்களும் புண்களும் உண்டாகும்.

**மஞ்சள் நிறம்**:—லாச்சஸிஸ் கல்லீரலைத் தாக்கி மஞ்சட் காமாலையை உண்டாக்குகிறது. உடம்பின் நிறமும் கண்களின் வெள்ளை விழிகளும் மஞ்சள் நிறமாகுதல். வியர்வை சில்லிப்பாகவும் ஆடைகளில் மஞ்சள் கறையை ஏற்படுத்துவதாகவும் இரத்தமாகவும் இருக்கும் (லைகபோடியம்).

**பலவித நிறங்கள்**:—லாச்சஸிஸ் பாம்பின் தோல் சிவப்புக் கலந்த பழுப்பு நிறமாகவும் அத்தோலில் கரும் பழுப்

புக் கோடுகளும் இருக்கும். ஔஷதப் பரீக்ஷையின் போது லாச்சஸிஸ் பலவகை நிறங்களைத் தோன்றச் செய்தது. "சருமம் மஞ்சளாய், பச்சையாய், மங்கலாய் அல்லது நீலம் கலந்த சிவப்பாய் அல்லது கறுப்பாய் இருத்தல், விசேஷமாகக் காயங்களையும் குழிப் புண்களையும் சுற்றிக் காணப்படும்." "மஞ்சளான, சிவந்த, செப்புப் போல் நிறமுள்ள புள்ளிகள்."

**விஷத் தன்மை, எரிச்சல், நாற்றம்: மிக வேகமாய்த் தோன்றுதல்:**—மேலே விவரிக்கப்பட்டுள்ள பலவித நிறங்கள் தோன்றுவது பெரும்பாலும் வியாதியின் விஷத் தன்மையையே குறிக்கிறது. விஷத் தன்மை வாய்ந்த பொறுக்குகள் (காயம் அல்லது சிரங்கின் மேல் காணப்படுவது). விஷத்தன்மை உள்ள குழிப் புண்கள். அழுகிய காயங்கள், கொப்பளங்கள், ஆகியவை சுரத்தை உண்டாக்குதல். பஞ்சு போல் மிருதுவாக உள்ள கெட்ட சதை வளர்ச்சி. சுவாச கோசங்கள் அழுகுதல். இரத்தத்தில் விஷப் பொருள் சேர்ந்து விட்டதால் உண்டாகும் இராஜ பிளவை. இவ்வௌஷதம் தேவைப்படும் வியாதிகள் எல்லாவற்றிலும் எரிச்சல் உணர்ச்சியும் எரிச்சலுடன் கூடிய வலிகளும் காணப்படும். வியாதிகள் மிக வேகமாகத் தோன்றும்; உடல் வலிமை மிக வேகமாய்க் குறையும்; தசைகளின் வலிமையும் குறைவாகும். கழிவுகளும் போக்குகளும் நாற்றம் வீசும். மூச்சுக் காற்று நாற்றமாய் இருக்கும். குழிப் புண்கள் நீல நிறமாகவும் பள பள வென்றும் இருப்பதுடன் சகிக்க முடியாத நாற்றத்துடனும் இருக்கும். வயிற்றுப் போக்கிலும் மலச் சிக்கலிலுங் கூட மலம் பிண நாற்றம் வீசும். பார்வைக்கு எப்போதும் போலவே இருப்பதாகத் தோன்றும் மலமும் மிகுந்த நாற்றமாய் இருத்தல். புற்று நோய்த் தோற்றமுள்ள புண்கள் (காயங்களால் ஏற்படுவது) அல்லது தசை அழுகிப் போய் எலும்புகளை விட்டு நழுவித் துண்டு துண்டாகக் கீழே விழுதல். சுற்றிலும் செப்புப் போல் சிவந்து பல சிறிய கொப்புளங்களால் சூழப்பட்டுள்ள இராஜ பிளவை. பித்தப் பையில் விஷம் சேருதல்.



**சூடான அலைகள்:**—மாதவிடாய் மறையும் காலத்தில் உண்டாகும் கோளாறுகள்: உடலில் சூடான உணர்ச்சி அலை அலையாகவும் சூடான வியர்வையும் தோன்றும்; இரத்தப் பெருக்கு; மூலங்கள். மாதவிடாய் மறையும் காலத்தில் தலையில் அதிக இரத்தம் சேருதல்.

**இறுக்கும் உணர்ச்சி:**—தொண்டை, மலப்பையின் வளையத் தசை (காஸ்டிகம், நைட்ரிக் ஆஸிட்) ஆகியவை களிலும் பொதுவாக வளையத் தசைகள் எல்லாவற்றிலும் இறுக்கும் உணர்ச்சி. கழுத்தில் கயிற்றினால் இறுக்கும். உணர்ச்சி. மலச்சிக்கலில் ஆசனவாயை இறுகக் கட்டியிருப்பது போலவும் அதனால் மலத்தைக் கழிக்க முடியாதது போலவும் தோன்றும். மலம் கழித்த பிறகு மூல மூளைகள் வெளியே பிதுங்கி ஆசனவாயை இறுகக் கட்டியிருப்பது போல் தோன்றும்.

**செம்மட்டியால் அடிக்கும் வலிகள்:**—கடுமையான துடிப்புடன் கூடிய அல்லது செம்மட்டியால் அடிப்பது போன்ற வலிகள். மூல வியாதியில் ஆசனவாய்ப் பக்கத்தில் சிறு செம்மட்டிகளால் அடிப்பது போன்ற வலி; இருமும் போதும் தும்மும்போதும் குத்துவலிகள் ஆசனவாய்க்குமேல் பக்கமாகப் பாயும். "கல்லீரலில் உள்ளூரப் புண் இருப்பதுபோல் மிகுந்த வேதனை

யைத் தரும் துடிப்பு.'' ஆசன வாய்ப் பக்கம் ஏற்படும் பவுத்திரச் சிரங்கில் செம்மட்டி கொண்டு அடிப்பது போன்ற வலி.

நடுக்கம் :—நாக்கை வெளியே நீட்டுவது மிகவும் கஷ்டமாய் இருக்கும்; வெளியே நீட்டும்போது நாக்கு நடுங்கும் அல்லது கீழ்வாய்ப் பற்களில் சிக்கிக் கொள்ளும் அல்லது கீழ் உதட்டின் உட்புறத்தில் சென்றுவிடும்; நாக்கு மிகவும் காய்ந்திருக்கும்; நிறம் கறுப்பாய் இருக்கலாம் அல்லது நுனியில் சிவந்திருக்கும். கைகளில் நடுக்கம். உடல் முழுவதுமே நடுங்குதல். வயிற்றின் மேல் பக்கத்தில் கண்களால் காணக்கூடிய அளவுக்கு நடுக்கலுள்ள அசைவு உண்டாகும்.

**இடது பக்கமே வியாதிகள் இருத்தல் : இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்தில் பரவுதல் :**—வியாதி எதுவாக இருந்தாலும் அது இடது பக்கத்தில் காணப்பட்டால் அல்லது இடது பக்கத்தில் தோன்றி வலது பக்கத்துக்குப் பரவி இருந்தால் முதன் முதலில் நினைக்கப்பட வேண்டியது லாச்சஸிஸ் தான். சினைப்பைகளின் வியாதிகள், தொண்டைப் புண், டிப்தீரியா, தொண்டைச் சுரப்பிகளின் வேக்காடு, சுவாசகோச வியாதிகள், தலைவலி, பாரிசவாதம் முதலிய பல வியாதிகளில் அபூர்வமான இக்குறி காணப்படும். லைகபோடியம் இவ்வௌஷதத்துக்குப் பிறகு நன்கு வேலை செய்யக் கூடியதே ஆயினும் அதில் இதற்கு நேர் எதிராகக் காணப்படும் (அதாவது வியாதி வலப் பக்கம் இருக்கும் அல்லது முதலில் வலப்பக்கம் தோன்றிப் பிறகு இடப் பக்கத்துக்குப் பரவும்). சினைப்பைகள் இரண்டும் ஒரே சமயத்தில் தாக்கப்பட்டிருந்தாலும் வியாதி இடது பக்கமே அதிகமாய் இருக்கும். ஆனால்



லாச்சஸிஸ் வலது பக்கத்தையும் தாக்கும் குணமுள்ளதே. வலது மார்பில் உண்டாகும் கோளாறுகள். அடி வயிற்றின் வலது பக்கம், வலது கால். அப்பெண்டிஸைடிஸ் (Appendicitis) என்று அழைக்கப் படும் குடல்வால் வேக்காட்டுக்கு இவ்வௌஷதத்தின் பொதுக் குறிகளும் காணப்பட்டால் லாச்சஸிஸ் முக்கியமான ஔஷதமாகும், கல்லீரலில் வேக்காடும் தளர்ச்சியும். கல்லீரலில் சீழ்க் கட்டி.

**மேல் பக்கம் ஏறும் உணர்ச்சி : மேற்பக்கம் வியாதி பரவுதல் : உருளும் உணர்ச்சி :**—தொண்டையில் மேலே ஏறும் உணர்ச்சி; கண்களிலிருந்து தலைக்கு ஏறுதல்; சினைப்பைகளிலிருந்து இருதயத்துக்கு ஏறுதல். சங்கா குணத்தில் அடி வயிற்றிலிருந்து மார்புக்குப் பந்து போன்ற உருண்டைப் பொருள் மேலே ஏறிவரும் உணர்ச்சி. அடி வயிற்றிலிருந்து தொண்டைக்கு ஒரு பந்து வருவது போல் தோன்றுதல். திரும்பிப் படுத்தால் மூத்திரப் பையில் அல்லது அடிவயிற்றில் ஒரு பந்து உருளும் உணர்ச்சி. ஆசன வாயிலிருந்து தொப்பூழுக்கு ஏறும் வலிகள். இருமும்போது அல்லது தும்மும்போது மலப் பையில் குத்தும் வலிகள் (மேலே பரவும்). மூலவியாதியில் வலிகள் மேலே பரவுதல் (நைட்ரிக் ஆஸிட்) விழுங்கும்போது தொண்டையில் வலி தோன்றி. காதுகளுக்குப் (இடது காதுக்கு) பரவும். பல் வலியில் வலி காதுகள்வரை பரவி இருக்கும். அடிவயிற்றில் ஏற்படும் வலிகள் மார்புக்குத் தாவுதல்; பிரசவ வலிகள் மேலே தாவி தொண்டையை இறுகப் பிடிப்பது போல் தோன்றும்.

**உருண்டை உணர்ச்சி: தக்கை உணர்ச்சி:**—கல்லீரல், அடிவயிறு, மலப்பை ஆகிய இடங்களில் உருண்டைப்

பொருள் இருக்கும் உணர்ச்சி. மூத்திரப் பை முதலிய இடங்களில் உருண்டையான ஒரு பொருள் அல்லது உருளும் உணர்ச்சி. அடி வயிற்றிலிருந்து தொண்டைக்குப் பந்து ஏறிவரும் உணர்ச்சி. ஆசன வாயில் தக்கை போன்ற பொருள் நகரும் உணர்ச்சி.

**மூச்சு அடைத்தல்:**—வாய்க்கு அல்லது மூக்குக்குச் சமீபமாக எவ்வளவு சிறிய பொருள் வந்தாலும் மூச்சு விட முடியாது போலத் தோன்றும்; விசிறுவதை விரும்புவார் என்றாலும் விசிறியை எட்ட வைத்து மெதுவாக விசிறுவதையே விரும்புவார். (மிக வேகமாக விசிறுவதை விரும்பினால் கார்போ வெஜி). மூக்கு அடைத்துப் போகும் ஆபத்துக் குறியுடன் தொண்டைப் புண், ஏராளமான உமிழ் நீர் உற்பத்தியாகுதல். மூச்சு அடைத்துப் போகும் ஆபத்தான குறியுள்ள வியாதிகள். அடிதடிபட்டு உண்டாகும் அதிர்ச்சியினால் கடுமையான மூச்சுத் திணறலும் இடை விடாமல் பெரு மூச்சு விடுவதும். ஆழ்ந்து சுவாசிக்க வேண்டிவரும். காற்றுப் பசி, தாராளமாகக் காற்று வந்து போகும் இடங்களில் இருக்க விரும்புவார்.

**அளவு மீறிய வலி உணர்ச்சி:**—அளவு கடந்த வலி உணர்ச்சி லாச்சஸிஸின் மிக முக்கியமான குறிகளில் ஒன்று. ஆனால் பல சமயங்களிலும் கவனிக்கப்படாமல் போய் விடுகிறது. தொண்டையில் கடுமையான வலி. சிரங்குக் கட்டிகள், இராஜ பிளவைகள், குழிப் புண்கள் ஆகிய யாவும் கடுமையான வலியுள்ளவையாக இருக்கும். மூத்திரம் அளவு குறைந்து வெளியாவதுடன் கடுமையான கடு கடுப்பு. மூத்திரப் பை, மலப் பை, தொண்டை ஆகியவைகளில் கடுமையான வலி உணர்ச்சி.



**அளவு கடந்த உடற் சோர்வு:**—டிப்தீரியா, மேகக்
கிரந்தியினால் ஏற்படும் தொண்டைப் புண் ஆகியவை
களில் தொண்டையில் உள்ள கோளாறுக்கு ஏற்றபடி
இல்லாமல் உடற் சோர்வு மித மிஞ்சிக் காணப்படும்.

**சினைப் பைகள், விசேஷமாகத் தாக்கப்படுதல்:**—லாச்
சஸிசுக்கும் தொண்டைக்கும் உறவு இருப்பதைப் போல
சினைப் பைக்கும் லாச்சஸிசுக்கும் நெருங்கிய உறவு இருப்
பதாகத் தெரிகிறது. இரண்டு சினைப் பைகளும் தாக்
கப்படுமென்றாலும் அனேகமாக இடது சினைப் பையே
தாக்குதலுக்கு உள்ளாகும் அல்லது முதலில் இடது சினைப்
பை தாக்கப்பட்டுப் பிறகு வலது சினைப் பையும் தாக்கப்படும்;
சினைப் பைகள் வீங்கி வலியுடன், கடினமாகித் தசைக்
கட்டிகளுடனும் இருக்கும். இடது சினைப் பையில் அதிக
வலியும் வீக்கமும் கல்போல் கடினமாய் இருப்பதும்.
சினைப் பைகளில் சீழ்ப் பிடிப்பதைக் கூட லாச்சஸிஸ்
குணம் செய்திருக்கிறது.

**எரிச்சல்:**—இவ்வௌஷதம் தேவைப்படும் எல்லா
வியாதிகளிலும் எரிச்சலும் எரிச்சலுள்ள வலிகளும்
காணப்படும்.

**கடுமையான புளிப்புக் குணம்:**—உண்ணும் உணவு
வயிற்றினுள் போய்ச் சேர்ந்த வுடனேயே மிகவும் புளிப்பாய்
மாறிவிடும்.

**இரத்தப் பெருக்கு:**—மற்றப் பாம்புகளின் விஷங்
களுக்கு இருப்பதைப் போலவே லாச்சஸிஸிலும் இரத்தப்
பெருக்கை உண்டாக்கும் சக்தி இருக்கிறது. பாஸ்பரஸ்,
க்ரீஸோட் ஆகியவைகளைப் போல் லாச்சஸிஸிலும் சிறு காயங்
களிலிருந்தும் ஏராளமான இரத்தம் வெளிப்படும்.
அல்ப காரணங்களாலும் குழிப் புண்களிலிருந்தும் சிரங்

குத் தழும்புகளிலிருந்தும் இரத்தம் பெருக் கெடுக்கும். காயங்கள் இலகுவில் ஆறுவதில்லை. மயிர்க் கால் துவாரங்கள் மூலம் ஏராளமான இரத்தம் வெளியேறும். மாதவிடாய்ப் போக்குக்குப் பதிலாக வயிற்றிலிருந்து இரத்தம் வெளியாகி வாந்தி செய்யப்படும். கருப்பையிலிருந்து ஏராளமாகவும் பல நாட்களுக்கு நீடித்துப் இரத்தப் பெருக்கு ஏற்படுதல். மாதவிடாயில் போக்கு ஏராளமாகவும் பல நாட்கள் நீடித்தும் இருக்கும். டைபாய்டு சுரத்தில் குடல்களிலிருந்து இரத்தப் பெருக்கு.

**பாரிச வாத நிலைமைகள்:**—கை கால்களில் கனத்த உணர்ச்சியுடனும் பிடிப்புடனும் பாரிச வாதம். ஒரு பக்கத்தில் மட்டும் கீழேயோ அல்லது மேல் புறம் மட்டுமோ தோன்றும் பாரிச வாதம். தசைகளின் வலிமை குறைந்து உடல், மனம் இரண்டிலும் சோர்வு. ஆசன வாயின் அருகிலே மலம் சேர்ந்து வெளியாகாமல் அப்படியே இருக்கும். மலம் கழிக்கத் தூண்டுதலும் உண்டாவது கிடையாது.

**முறை வைத்துத் தொன்றுதல்:**—வியாதிகள் முறை வைத்துத் தோன்றுவது குறிப்பிடத் தக்கதாய் இருக்கிறது. முறைச் சுரம் ஒவ்வொரு நாளும் தோன்றும் வகை; மூன்று நாட்களுக்கு ஒரு முறை தோன்றும் வகை; நான்கு நாட்களுக்கு ஒரு முறையாகத் தோன்றும் வகை. பதினைன்கு நாட்களுக்கு ஒரு முறை யாகவும் தோன்றும்.

## மற்ற குறிகள்

காதுகளினுள்ளே உறுமுவது போலவும் பாடுவது போலவும் ஓசைகள். அவை காதினுள்ளே விரல்களை



விட்டுக் குடைந்தால் சௌகரியமாகும்.—மலம் மிகக் கட்டையாக வலியுடன் வெளிப்படும்; ஆசன வாய் வெளியே நழுவி பாரிச வாதத்துடன் மிக மெதுவாக வாய் மூடும். மலப் பையின் பலவீனம். நாஜா. இக்னேஷியா ஆகியவைகளைப் போலவே லாக்சஸிசும் பிளேக் என்னும் வியாதிக்கு ஏற்ற ஔஷதமாகும். முதுகெலும்பின் கீழ் நுனியில் நரம்பு சம்பந்தமான வலி: உட்கார்ந்து விட்டு எழுந்திருக்கும் போது வலி அதிகமாகும்; அசையாமல் உட்கார்ந்திருக்க நேரும். டிப்தீரியாவுக்குப் பிறகு பார்வைக் கோளாறுகள் உண்டாகுதல். "கீழ்க் காலிலுள்ள குதிரை முகத் தெலும்பில் அதிக வலி; வலி இசிவு வலியாகத் தான் இருக்கும்." மிக நாட்பட்ட இருமல். குதிகால்களில் சீழ் உள்ள கட்டிகள்.

**உறவு:**—அகோனைட், ஆர்ஸனிகம், பெல்லடொன்னா, கார்போ வெஜி, சைனா, ஹிப்பார் ஸல்பர், ஹையஸ்யாமஸ், காலி பைக்ரமிகம், லாக் கானினம், லைகபோடியம், மெர்கூறியஸ் சொலு; நைட்ரிக் ஆஸிட், நக்ஸ் வாமிகா, பாஸ்பரஸ், பல்ஸடில்லா, ஸைலீஷியா, ஸல்பர், டாரண்டுலா ஆகியவை நட்பு ஔஷதங்கள். அஸடிக் ஆஸிட், கார்பாலிக் ஆஸிட் இவ்விரண்டும் பகை. ஹிப்பார், லைகபோடியம், நைட்ரிக் ஆஸிட் ஆகியவை லாச்சஸிசுக்குப் பின் நன்றாக வேலை செய்யும். லைகபோடியம் சில விஷயங்களில் (வியாதிகள் தோன்றும் அல்லது அதிகமாய் இருக்கும் பக்கம், சூடான பானங்கள்) லாச்சஸிசுக்கு எதிராக இருந்தாலும் அதை அனுசரித்து வேலை செய்கிறது.

**ஒப்பிடுதல்:**—சூரிய உஷ்ணத்தினால் உபாதிகள் அதிகமாகும் குறியில் பெல்லடொன்னா, நேட்ரம் கார்ப், தெரிடியன் ஆகியவைகளுடன். இடது சினைப்பை வலியில் காலோபில்லம், ஸைலீஷியா, ஸல்பர், வைபுர்னம் ஒபுலஸ் ஆகிய

வைகளுடன். நாற்றமுள்ள கழிவுகள், டைபாய்டு சுரம் ஆகியவைகளில் பாப்டிஷியா வுடன். காதலில் ஏமாற்றத்தில் பாஸ்பாரிக் ஆஸிடுடன். தொண்டையின் இடது பக்கம் முதலில் தாக்கப்பட்டுப் பிறகு வலது பக்கமும் தாக்கப்படும் குறியில் ஸ்படில்லாவுடன். (ஆனால் ஸ்படில்லாவில் வியாதி அதிக நாள்பட்டதாய் இருக்கும்). தேன் குளவி கொட்டியதால் உண்டாகும் கெடுதலான விளைவுகளில் நேட்ரம் மூர், லேடம் ஆகியவைகளுடன்.

குறிப்புகள் :—மாத விடாயின் ஆரம்பத்தில் அல்லது முடிவடையும் சமயத்தில் கொடுத்தால் இவ் வௌஷதம் சிறப்பாய் வேலை செய்கிறது.

திடீர் வியாதிகளிலும் சரி, நாட்பட்ட வியாதிகளிலும் சரி, இவ்வௌஷதம் தேவைப்படும் குறிகள் தென்பட்டால் ஒரு வேளை ஔஷதத்துக்கு மேல் தேவைப்படுவதே இல்லை யென்று கூறலாம். ஒரு பொழுதும் நான் இவ்வௌஷதத்தை 200 க்குக் குறைந்த வீரியத்தில் உபயோகிப்பது கிடையாது.

---

## லேடம் பாலஸ்டிரி
## (LEDUM PALUSTRE)

முன்னுரை :—ஆயுத சிகிச்சை செய்யும் ஹோமியோபதி வைத்தியருக்குத் தேவை யாகும் முக்கியமான ஔஷதங்களில் லேடமும் ஒன்று.

### பொதுவான குறிகள்

தகுதி :—உடல் வெளுத்து மெலிந்து உள்ளவர்களுக்கு ஏற்றது. போதிய அளவு இரத்தமும் உறுதியான உடல் கட்டும் உள்ளவர்களுக்கும் தகுந்ததே. அடிக்கடி இரத்தப் பெருக்கு உண்டாகும் உடல் வாகு



உடம்பில் எப்பொழுதும் சில்லிப்பும் குளிரும் உணர்ச்சியும் உள்ளவர்கள். வாத ரோகம், கீல்வாயு ஆகிய வியாதிகள் தோன்றும் உடல் வாகு; மித மிஞ்சிய கள் குடியினால் உடல் நலம் குறைந்தவர்கள் (கோல்சிகம்). தைரியம் மிகுந்தவர்கள்.

மனம் :—பயங்கொள்ளித் தனம். அடிக்கடி கோபமும் ஆத்திரமும் உண்டாகும். எவ்விஷயத்திலும் திருப்தி இல்லாமை; தன்னுடன் கூட இருப்பவர்களை வெறுத்தல்.

உடல் :—சில்லிப்பு; உடலில் தேவையான அளவு சூடு இல்லாமை. நீர்ச் சுரப்புள்ள வீக்கங்கள். முகம் வெளுத்தல். முகம் உப்பி இருக்கும். முகம் உப்பிப் பல நிறங்கள் கொண்டதாய் இருக்கும். வலிகள் திடீரென்று இடம் மாறுதல். வியாதியுற்ற பாகங்கள் மெலிந்து போகும். இரவில் ஏராளமான வியர்வை. மிக மெதுவாக நடந்தாலும் வியர்வை. விசேஷமாக நெற்றியில், சில சமயங்களில் புளிப்பு நாற்றத்துடன், உண்டாகும்.

உபாதி கூடுதல் :—படுக்கையின் சூட்டைப் பொறுக்க முடியாமல் வியாதியஸ்தர் படுக்கையை விட்டெழுந்து அங்கு மிங்கும் நடமாடுவார்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :—வாத ரோக வலிகளும் மற்ற வலிகளும் சூட்டினால் அதிகமாகின்றன. கால்களில் சூட்டையும் எரிச்சலையும் உண்டு பண்ணுவதால் படுக்கையின் சூட்டைத் தாங்க முடியாமல் போகும். வலிகள் அசைவினால் அதிகமாகும், அமுக்கும் உணர்ச்சி அசைவினால் அதிகமாகும், உபாதிகள் மாலையிலும் இரவிலும் நள்ளிரவுக்கு முன்பும் கூடுதலாகும்.

போர்த்திக் கொண்டால் உபாதிகள் அதிகரிக்கும். ஒயின்
சாப்பிட்டால் அதிகமாகும்.

**உபாதி குறைதல்** (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—
லேடம் வியாதிகள் சூட்டினுல் மிகவும் அதிகமாகின்றன.
அதனுல் அதன் வலிகளை (வாத ரோக வலிகள்) பனிக்
கட்டி போல் குளிர்ச்சியான தண்ணீரினுல் தான் அடக்கமுடி
யும். போர்வையை நீக்கினுல் உபாதிகள் குறையும்.
(படுக்கையில் படுத்துச் சூடு உண்டானவுடன் உபாதிகள்
தோன்றும் அல்லது அதிகமாகும்) அதனுல் வியாதியஸ்தர்
சௌகரியம் ஏற்படுவதற்காகப் படுக்கையை விட்டு
எழுந்து விடுவார்.

## விசேஷக் குறிகளின் விளக்கம்

**அடி தடி படுதல்: கரு இரத்தம் குழம்புதல்:**—துளை
விழும் குத்துக் காயங்களுக்கு லேடம் மிகவும் தகுந்தது.
குத்துக்காயங்கள் ஏற்பட்டவுடனேயே இவ்வௌஷதத்
தைக் கொடுத்தால் வாய்ப் பூட்டு, தனுர் வாதம் முத
லிய கெடுதலான விளைவுகளைத் தடுத்து விடலாம். குத்
துக் காயங்களின் விளைவாகத் தனுர் வாயு தோன்றும்
போது பல சமயங்களிலும் ஹைபரிகும் உபயோகப்படும்.
காயங்களால் ஏற்படும் கெடுதலான விளைவுகளை ஆர்னிகா
விஞல் முழுவதும் நீக்கமுடியாமல் போகும்போது லேடம்
அனேகமாக முழு குணம் அளிக்க வல்லது. பூச்சிகளின்
கொட்டுகள் (தேனீ, குளவி முதலியவை) விசேஷமாக
கொசுக்கடி, எலிக்கடி ஆகியவைகளுக்கு மிகவும் உப
யோகமுள்ளது. தையல் வேலை செய்வோருக்கு ஊசி
குத்தி விடுவதால் விரல்களில் உண்டாகும் நகச் சுற்றி
யும் மற்ற சிரங்குகளும். பூச்சிகள் கடித்தால் முகத்
திலும் கண்களிலும் அக்கி தோன்றுதல். கண்களிலும்



விழிகளிலும் அடிபடுதல்; அவ்விடங்களில் அதிக இரத்
தம் குழம்பிக் காணப்பட்டால் விசேஷமாகத் தேவைப்
படும்; இமைகளிலும் கண்களின் சளிச் சவ்விலும்
கறுப்பு இரத்தம் குழம்பி இருத்தல். குதிகால்களில்
சுளுக்கு விழுதல். அடிக்கடி குதிகால்களில் சுளுக்கு
ஏற்படும். அடிபட்ட இடங்களில் வலியும் வேக்காடும்
மறைந்து போன பிறகும் பல நட்களுக்குக் கரு இரத்
தம் குழம்பிக் காணப்படுதல். "அடி தடிகளால் உடம்
பில் கறுப்பாகவும் நீலமாகவும் பல திட்டுகள் தோன்று
வதைக் குணம் செய்ய லேடத்தை விடச் சிறந்த ஔஷ
தம் எதுவுமே இல்லை" என்று நாஷ் கூறுகிறார். மெது
வாக அடி பட்டாலும் கரு இரத்தம் குழம்புதல்.

**பலவிதமான குளிர் உணர்ச்சி: எதிர்க் குண முள்ள
குறிகள்:**—லேடம் வியாதியஸ்தரின் உடல் எப்பொழுதும்
சில்லென்றும் குளிரும் உணர்ச்சியுடனும் இருக்கும். வியாதி
யஸ்தருக்கு எந்நேரமும் குளிர் இருந்து கொண்டே இருக்கும்.
படுத்துக் கொண்டிருந்தாலும் சரி, வீட்டுக்குள் அடை
பட்டுக் கிடந்தாலும் சரி, அவருக்கு உடம்பில் சில்லிப்பும்
குளிரும் உணர்ச்சியும் இருக்கும்; உடம்பில் இயற்கை
யான அளவு சூடு இல்லை; இதனுல் குளிருக்கு அடக்க
மாக உடலை வைத்துக் கொள்ள முடியாது. ஒரு கால்
சில்லிப்பாய் இருக்கும்; சூடு உண்டாகும்படிச் செய்ய
முடியாது. இதில் விநோதமான அல்லது எதிர்க் குண
முள்ள குறி என்னவென்ருல் அது சில்லென்று இருக்
கும் காலில் படுக்கையில் இருக்கும் போது சூடு
பிடிக்க வாரம்பித்தால் உபாதி அதிகமாவது தான்.
சுரமுள்ள போது கடுமையான சில்லிப்பு. சில்லிப்புக்குப்
பிறகு சூடு (சுரம்) தோன்ருமை.

உடலின் சில உறுப்புகள், விசேஷமாகக் காயங்கள், தொட்டால் சில்லென்றிருக்கும்; ஆனால் வியாதியஸ்தருக்குக் குளிர்ந்த உணர்ச்சி இருப்பதில்லை. எலும்பு மூட்டுகளில் நீர்ச் சுரப்புள்ள வீக்கங்கள். அவைகளைத் தொட்டால் சில்லென்றிருக்கும்.

ஆர்ஸனிகம் வியாதியஸ்தர் நெருப்பின் அருகே இருக்கவும் சூடு உண்டாகும்படிப் போர்த்திக் கொள்ளவும் விரும்புவார்; லேடம் வியாதியஸ்தர் கடுமையான குளிரை விரும்புவார்; உடம்பைப் போர்த்திக் கொண்டால் அவரால் தாங்க முடியாது; படுக்கையின் சூடு கூடத் தாங்காது. மிகக் கடுமையான குளிரினால் உபாதிகள் சௌகரியமாவது உபாதிகள் உள்ள உடல் பகுதிகளில் மட்டுமே.

மிகவும் குளிர்ச்சியான தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டால் சௌகரியமாகும் தலை வலி.

வாத ரோக வலிகளில் குளிர்ச்சியான ஒற்றிடங்களால் அல்லது காலை அல்லது உபாதியுள்ள காலைப் பனிக் கட்டி போல் குளிர்ந்த தண்ணீரில் வைத்துக் கொண்டால் (லீகேல்) வலி குறைவுபடும். உபாதியுள்ள இடத்தில் விசிறியால் விசிறினாலும் சௌகரியம் தோன்றும்.

உப்பி இருத்தல்: வீக்கம்: நீர்ச் சுரப்பு வீக்கம்: நிறம் மாறுதல்:—நாட்பட்ட கீல் வாயு உள்ளவர்களுக்கு முகம் உப்பிப் பல நிறங்களுடன் இருத்தல். உப்பி இருக்கும் பாகத்தில் நீர்ச் சுரப்பு இருக்காது. "கால்களிலும் பாதங்களிலும் வீக்கமும், கரு இரத்தம் குழம்பியும் பலவித நிறங்களும் காணப்படும்." உடலில் நீல நிறமான திட்டுகள். அக்கியில், வியாதியுள்ள பாகங்களில், விசேஷமாக முகத்தில் ஊதா நிறமும், உப்பியும் சிற் சில சமயங்களில் நீர்ச் சுரப்பும் காணப்படும். அடிபட்ட



இடங்களிலும் இவ்விதமே காணப்படலாம். சூடு.
விரைப்பு, பிடிப்பு, கல் போல் கடினம் முதலிய குணங்
கள் உள்ள வீக்கங்கள். கால்களிலும் பாதங்களிலும்
வேக்காடுள்ள அல்லது நீர்ச் சுரப்பு உள்ள வீக்கம்.
மானியில், வேக்காடுடன் வீக்கம், அதனால் மூத்திரக்
குழாய் அனேகமாக அடைபட்டுப் போகும். நடக்கும்
போது குதி கால்களில் பொறுக்க முடியாத வலியுடன்
பாதங்களில் பிடிவாத குணமுள்ள வீக்கம். சில இடங்
களில் மட்டும் அல்லது உடல் முழுவதுமே நீர்ச் சுரப்
புள்ள வீக்கம். எலும்பு மூட்டுகளில் சில்லிப்பு, வலி,
நீர்ச் சுரப்பு ஆகியவை காணப்படும்.

அடிதடி படுதல்: கரு இரத்தம் குழம்புதல் என்னும் தலைப்பின் கீழ் கவனிக்கவும்.

இரத்தப் பெருக் கெடுக்கும் குணம்:—லேடத்தின் இரத்
தப் பெருக்குகளில் இரத்தம் நல்ல சிவந்த நிறமாய்
இருப்பதும் வேகமாய் வெளியேறுவதும் குறிப்பிடத்
தக்கதாய் இருக்கிறது. "கடுமையான இருமலுடன்
நல்ல சிவப்பு நிறமுள்ள இரத்தம் துப்புதல்." மாத
விடாய்ப் போக்கு வழக்கத்தை விட மிக முன்னதாக
ஆரம்பித்து ஏராளமாகவும் நல்ல சிவப்பு இரத்தமாக
வும் இருக்கும். இரத்தப் பெருக் கெடுக்கும் நார் உள்ள
தசைக் கட்டிகள். இரத்தம் போல் சிவந்த கண்கள் என்
பதையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

மேல் பக்கம் ஏறும் குணம்:—வாத ரோகம், இல்
வாதம், நரம்புகள் ஆகியவைகளாலும் மற்ற காரணங்
களாலும் உண்டாகும் வலிகள் மேற்பக்கம் தாவும்.
குத்துக் காயங்களில் காயம் உள்ள காலிலிருந்து வலிகள்
மேலே பாயும் (இது மேல் ஏறும் நரம்பு வேக்காடு).

வீக்கங்கள் மேற் பக்கமாகப் பரவுதல். விரல்களின் மூட்டுகள், மணிக்கட்டு முதலிய இடங்களில் கீல்வாதம் காரணமாகத் தோன்றும் பொறுக்குகள் மேலே பரவும் குணம் கொண்டவையாய் இருக்கும். பாதங்களிலிருந்து உடலின் மேல் பக்கம் ஏறும் பாரிச வாதம்.

தொட்டால் வலி: அமுக்கும் உணர்ச்சி: இறுக்கும் உணர்ச்சி:—நடக்கும் போது உள்ளங் கால்களில் தோல் உறிந்து விட்டது போல் வலி; அவ்விடங்களில் இரத்தம் ஏராளமாய்ச் சேர்ந்திருப்பதைப் போல் வலி. கால் கட்டை விரல்களின் நுனி மிருதுவாகவும் வீங்கியும் நடக்கும் போது வலியுடனும் இருக்கும்.

லேடத்தில் காணப்படும் அபூர்வமான இவ்வலியை அனேகமாக அமுக்குவது போன்ற ஒரு வகை உணர்ச்சி என்றும் கூறலாம். இத்தகைய அமுக்குவது போன்ற வலியுள்ள உணர்ச்சி வேறு சில ஔஷதங்களில் காணப்பட்டாலும் லேடத்தில் இருப்பது போன்ற விசேஷத் தன்மை வாய்ந்த குறிகள் வேறு எந்த ஔஷதத்திலும் இல்லை.

நடக்கும் போது மார்பில் அமுக்கும் உணர்ச்சி. படுத்துக் கொண்டிருக்கும் போது மார்பின் நடு எலும்பில் அமுக்குவது போல் இருத்தல், அசைவினால் அதிகமாகும். இடது தோள்பட்டையில் அமுக்கும் உணர்ச்சி, அசைவினால் கூடுதலாகும். இரு தோள்பட்டைகளிலும் அமுக்கும் உணர்ச்சி, அசைவினால் அதிகரிக்கும். வலது சப்பை மூட்டில் அமுக்கும் உணர்ச்சி, அசைவினால் அதிகமாகும். இடது குதிகாலின் மேலாக உட்புறத்தில் அமுக்கும் உணர்ச்சி, அசைவினால் கூடுதலாகும். இடது பாதத்தின் உட்பாகத்தில் அமுக்கும் உணர்ச்சி; முழங்கால் மூட்டுக



ளில் பலவீனம், நடக்கும் போது அங்கே கிழிப்பது போன்ற அமுக்க உணர்ச்சி தோன்றும். மார்பில் இறுகக் கட்டிய உணர்ச்சியுடனும் வலியுடனும் மூச்சு விடுதல். உட்கார்ந்தவுடன் முதுகிலும் இடுப்பிலும் வலியுடன் விரைப்பு.

சிறு சிறங்குகள்: சிறங்குக் கட்டிகள்:—நெற்றியில் சிறு சிறங்குகளும் சிறங்குக் கட்டிகளும் (குடிகாரர்களுக்கு உண்டாவதைப் போல). முகத்திலும் நெற்றியிலும் குடிகாரர்களுக்குத் தோன்றுவதைப் போல சிவப்பும் முளையுமுள்ள சிறங்குகளும் அவைகளைத் தொட்டால் கடுமையான வலி தோன்றுவதும்.

பொறுக்குகள்:—கீல்வாதத்தால் தாக்கப்பட்ட மூட்டுகளில் வலியுடன் முண்டுகளும் சுண்ணாம்புக்கட்டி போன்ற பொறுக்குகளும் தோன்றுதல்.

மாறி மாறித் தோன்றுதல்: வாத ரோகமும் சுவாச கோசங்களிலிருந்து இரத்தப் பெருக்கும் மாறிமாறித் தோன்றுதல். "க்ஷயரோகம் தோன்றுவதற்கு முன் தலையிலும் கால்களிலும் வேக்காட்டுடன் நரம்பு சம்பந்தமான வலிகளும் வாதரோகமும் ஏற்பட்டிருக்கும்" (வான் டென் பர்க் (Van den Berghe)"

விசேஷமாகத் தாக்கப்படும் பக்கங்கள்:—விசேஷமாக இடது தோள்பட்டை, மூட்டு வலது சப்பை எலும்பு மூட்டு, எலும்பு மூட்டுகள், விசேஷமாக சிறிய எலும்பு மூட்டுகள். முழங்கால், மணிக்கட்டுகள். குதிகால்கள். கால் கட்டை விரல்கள்; உள்ளங்கால்கள்.

## மற்ற குறிகள்

கைகளிலும் பாதங்களிலும் பல நாட்களாக நீடித்துக் காணப்படும் சூடான வியர்வை. மூத்திரத்தில்

L2
N56·1



யூரிக் ஆஸிட் (Uric Acid) என்னும் பொருள் ஏராளமாய் இருத்தல். அடிக்கடி தடைப்பட்டு மூத்திரம் வெளிப்படுதல். "ஈல்வாதமுள்ள பெண்களுக்கு வலியுடன் மாதவிடாய் ஏற்படுதல்". மூத்திரம் கழித்த பிறகு மூத்திரக் குழாயில் எரிச்சல். காற்று வீசும் போது ஏற்படும் ஓசை போல் காதுகளில் உறுமும் ஓசை மணியடிப்பது போல் காதுகளில் ஓசை. வயிற்றுக் கடுப்பில் காணப்படுவதைப் போல் வயிற்றில் வலி. குதிகாலில் சுளுக்கு விழுந்து விட்டது போல் வலி. விஷத்தன்மை வாய்ந்த வாத ரோக வலிகளுடன் தோன்றும் முறைச் சுரம்.

ஒப்பிடுதல் :—கால்களிலிருந்து மேலே பரவி இருக்கும் நாட்பட்ட வாதரோகம் ஸைலீஷியாவிலும் இருக்கிறது. ஆனால் ஸைலீஷியா வியாதியஸ்தருக்கு உடம்பைப் போர்த்திக் கொண்டால் சௌகரியம் ஏற்படும். லேடம் வியாதியஸ்தருக்குப் போர்வையை எடுத்தெறிய வேண்டும். போர்த்திக் கொண்டிருப்பதோ அல்லது சூடோ அவருக்கு ஒத்துக்கொள்ளாது.

முதல் பாகம் முற்றும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103891
MADRAS